# தமிழக வரலாறு

அ. மு. பரமசிவானந்தம்

**உலகளாவிய பொதுக் கள உரிமம் ( CC0 1.0 )**

இது சட்ட ஏற்புடைய உரிமத்தின் சுருக்கம் மட்டுமே. முழு உரையை https://creativecommons.org/publicdomain/zero/1.0/legalcode என்ற முகவரியில் காணலாம்.

**பதிப்புரிமை அற்றது**

இந்த ஆக்கத்துடன் தொடர்புடையவர்கள், உலகளாவிய பொதுப் பயன்பாட்டுக்கு என பதிப்புரிமைச் சட்டத்துக்கு உட்பட்டு, தங்கள் அனைத்துப் பதிப்புரிமைகளையும் விடுவித்துள்ளனர்.

நீங்கள் இவ்வாக்கத்தைப் படியெடுக்கலாம்; மேம்படுத்தலாம்; பகிரலாம்; வேறு கலை வடிவமாக மாற்றலாம்; வணிகப் பயன்களும் அடையலாம். இவற்றுக்கு நீங்கள் ஒப்புதல் ஏதும் கோரத் தேவையில்லை.

***

இது, உலகத் தமிழ் விக்கியூடகச் சமூகமும் ( https://ta.wikisource.org ), தமிழ் இணையக் கல்விக் கழகமும் ( http://tamilvu.org ) இணைந்த கூட்டுமுயற்சியில், பதிவேற்றிய நூல்களில் ஒன்று. இக்கூட்டுமுயற்சியைப் பற்றி, https://ta.wikisource.org/s/4kx என்ற முகவரியில் விரிவாகக் காணலாம்.

**Universal (CC0 1.0) Public Domain Dedication**

This is a human-readable summary of the legal code found at https://creativecommons.org/publicdomain/zero/1.0/legalcode

**No Copyright**

The person who associated a work with this deed has **dedicated** the work to the public domain by waiving all of his or her rights to the work worldwide under copyright law, including all related and neighboring rights, to the extent allowed by law.

You can copy, modify, distribute and perform the work, even for commercial purposes, all without asking permission.

***

This book is uploaded as part of the collaboration between Global Tamil Wikimedia Community ( https://ta.wikisource.org ) and Tamil Virtual Academy ( http://tamilvu.org ). More details about this collaboration can be found at https://ta.wikisource.org/s/4kx.

# தமிழக வரலாறு

வள்ளியம்மாள் கல்வி அறம்

அ. மு. பரமசிவானந்தம்.

தமிழ்க்கலைப் பதிப்பகம்
சென்னை-30

உரிமைப் பதிப்பு 1995 விலை—00-00

முதற் பதிப்பு, நவம்பர், 1958
இரண்டாம் பதிப்பு, நவம்பர், 1962
மூன்றாம் பதிப்பு, அக்டோபர், 1971
நான்காம் பதிப்பு, அக்டோபர், 1979
ஐந்தாம் பதிப்பு. அக்டோபர் 1995

விலை ஐம்பது ரூபாய்

விற்பனை உரிமை:
பாரி நிலையம்
பிரகாசம் சாலை, சென்னை-1.

அச்சிட்டோர் : திருமலை தெய்வம்
ஆர்ட் பிரிண்டர்ஸ், சென்னை 29

# பொருள் அடக்கம்


பொருள் பக்கம்

முன்னுரை 9

உலகமும் உயிரும்; வரலாறு இல்லை; வரலாற்றுக்கு வழி; தொடர்ந்த முயற்சி தேவை; இந்நூலில்.

I. எது வரலாறு? 17

வரலாற்று எல்லை; எது வரலாறு? வரலாறு அனைத்தையும் உள்ளடக்கிய ஒன்று; வரலாறு வளர்ந்த வகை; வரலாற்று ஆசிரியர் நிலை; தென்னிந்திய வரலாறு எங்கே? தமிழக வரலாற்றின் தொன்மை.

II. வரலாற்று மூலங்கள் 30

வரலாற்றுக்கு முன்; கர்ண பரம்பரைக் கதைகள்; எழுத்தின் அமைப்பும் மொழியின் வளர்ச்சியும்; இலக்கியங்கள்; கல்வெட்டுக்கள்; நாணயங்களும் புதை பொருள்களும்; கட்டடங்களும் கலைகளும்; வெளி நாட்டார் எழுதிவைத்த குறிப்புக்கள்; நில அமைப்பு முதலியன.

III. நிலநூலும் வரலாறும் 44

நிலத்தோடு தொடர்பு, வரலாற்று இடம்; மனிதன் தோற்றம்; நிலப் பிரிவுகள்; தமிழக நிலப் பிரிவுகள்; ஐவகை நிலம்; மாறுபாடுகள்; தமிழகம்.

IV. தமிழ்நாட்டு வரலாறு 55

தமிழக வரலாறு போற்றப்படாமை; தமிழக வரலாற்றின் தொன்மை; வரலாற்றுப் பகுதிகள்; சமய வரலாறு; பண்பாடு; பண்

டைத் தமிழகம்; மனித உணர்வு பெற்றபின்; தமிழ்க் குடிகள்; சங்க காலம்; இருண்ட காலம்; பல்லவர் காலம்; சோழர் காலம்; பிற் காலம்; பாண்டியர்; பிறநாட்டார் ஆட்சி; மேலை நாட்டார் ஆட்சி; உரிமை வேட்கை.

V. வரலாற்றுக்கு முற்பட்ட தமிழகம் 71

பரந்த நிலப்பரப்பு; உயிர்த் தோற்ற வளர்ச்சி; ஆதி மனிதன்; மொழியும் கலையும்; நாகரிக வளர்ச்சி; கற்காலமும் இரும்புக்கால மும்; பயிர்த் தொழில்; கூட்டு வாழ்க்கை; சமு தாயம்; பிரிவுகளும் பிளவுகளும்; நாகரிகங்கள்; கோயில் வாழ்வு; அறிந்த பிற; புதை பொருள்கள்.

VI. வரலாற்றுக்கு முன் வடக்கும் தெற்கும் 94

வரலாற்று ஆராய்ச்சி; இதிகாச வரலாறுகள்; வடநாட்டு உறவு; நந்தரும் மோரியரும்; மோரியர் தென்னாட்டுப் படையெடுப்பு; சமயத் தொடர்பு; வடக் கெல்லை; எப்படி வந்தனர்? அகத்தியர் யார்? இதிகாசங்களிலே தமிழகம்.

VII. சங்க காலத் தமிழகம் 115

சங்க காலம்; மூன்று சங்கங்கள்; தொல் காப்பியம்; தொல்காப்பியர் காலத்து மக்கள்; தொல்காப்பியர் காலம்; கடைச் சங்க காலம்; கடைச் சங்க காலத் தமிழ் நூல்கள்; சோழர்; பாண்டியர்; சேரர்; ஏனைய சிற்றரசர்.

VIII. சங்க காலத்துச் சமூக வாழ்வு 134

அறிய உதவுவன; நானிலம்; குறிஞ்சி; முல்லை; மருதம்; நெய்தல்; பாலை; மன்னரும்

மக்களும்; கல்வியும் கலையும்; வாணிபமும் உழவும்; வடக்கும் தெற்கும்; இலக்கியத்தில் இடம்பெற்றன; தெய்வங்கள்; பிற இயல்புகள்.

IX. காப்பிய காலத்தில் தமிழகம் 152

சமய, சமூக மாறுதல்கள்; மன்னர்கள்; புகார் நகரம்; வாழ்க்கை முறை—அரசியல்; மக்கள் சமயநெறி; சமயக் காழ்ப்பு; கதைகள்

X. தமிழக வரலாற்றில் இருண்ட காலம் 166

எது இருண்ட காலம்? காரணம் என்ன? வடவிந்தியர்; விளங்காத மாற்றங்கள்; பல்லவர் யார்? களப்பிரர் யார்? வடக்கிலும் மேற்கிலும்; மேலைநாட்டு வாணிபம்; நகரங்கள்—காஞ்சி; புகாரும் வஞ்சியும்; மக்கள் வாழ்க்கை; சமய மாறுபாடுகள்; செங்கணான்; நீறுபூத்த நெருப்பு.

XI. காஞ்சியில் பல்லவர் 186

பல்லவர் காலம்; மூன்று மரபுகள்; மாற்றங்கள்; மகேந்திரன்; நரசிம்மன்; பாண்டியர்; பரமேச்சுரன் II; இராசசிம்மன்; புதிய மரபு; நந்தி வர்மப் பல்லவ மன்னன்; நந்தியும் தந்தியும்; இறுதிப் பல்லவர்.

XII. பல்லவர் காலத்துத் தமிழகம் 204

சமுதாயம்; அரசர்; கலை மலிந்த காலம்; பல்லவர் காலத்துத் தமிழகம்; ஊராட்சி; மக்கள் பணி; இலக்கிய வளர்ச்சி; சமய நிலை.

XIII. பிற்காலச் சோழர் எழுச்சி

1. இராசராசனுக்கு முன் 212

அறிய உதவுவன; எது மெய்க்கீர்த்தி? கல்வெட்டுக்கள் வெளிவர வேண்டும்; தஞ்சை வேந்

தர்; விசயாலயன்; ஆதித்தன்; பராந்தகன்; கண்டராதித்தன்; சுந்தர சோழன்; உத்தம சோழன்.

2. தந்தையும் தனயனும் 227

இராசராசன் இளமை; போர்ச் செயல்கள்; ஈழப் படையெடுப்பு; வடநாட்டுப் போர்கள்; கடல் கடந்தும் போர்; போர்க்கிடையில் அமைதி; தஞ்சைப் பெரிய கோயில்; நில அளவை; நாட்டுப் பிரிவுகள்; இராசேந்திரன்; போர்கள்; சோழபாண்டியனானான்; கங்கைக் கரை நோக்கி; கங்கைகொண்ட சோழ புரம்; பிற நாடுகளின்மேல் படையெடுப்பு; அமைதி.

3. இராசேந்திரனுக்குப் பின் 243

இராசாதிராசன்; சாளுக்கியப் போர்; இரண்டாம் இராசேந்திரன்; வீரராசேந்திரன்; அதிரா சேந்திரன்; குலோத்துங்கன்; போர்கள்; கலிங்கத்துப் பரணி; வெளிநாட்டுத் தொடர்புகள்; நல்ல செயல்கள்; விக்கிரமன்; குலோத்துங்கன் II; இராசராசன் II; இராசாதிராசன் II; குலோத்துங்கன் III; ஆட்சியில் உள்ள அதிகாரிகளும் சிற்றரசர்களும்; இராசராசன் III; இராசேந்திரன் III; சோழர் வீழ்ச்சி.

XIV. சோழர் காலத்துத் தமிழகம் 268

பரந்த நாடு; அரசர் தனி வாழ்க்கை; கோயில்கள்; படைகள்; ஆட்சிப் பகுதிகள்; வழக்கு முறை; கிராம ஆட்சி; நில அளவுகள்; சமுதாய மாறுதல்கள்; விவசாயம்; கைத் தொழிலும் வாணிகமும்; நாணயம்; எடை;

அளவு; கல்வி; சமயம்; இலக்கிய இலக்கணங்கள்.

XV. பிற்காலப் பாண்டியர் 280

நாட்டு நிலை: மேலைப் பகுதி பிரிந்தது; சுந்தர பாண்டியன்; சடையவர்மன் வீர பாண்டியன்; மாறவர்மன் குலசேகரன்; அரசியல் திரிபும் அயலார் நுழைவும்; மற்றோர் இருண்ட காலம்; இசுலாமியர் நுழைவு; புதிய பரம்பரைகள்; திரும்பவும் சிறிது அமைதி; இறுதிப் பாண்டியர்.

XVI. விசயநகர வேந்தரும் மராட்டியரும் 299

ஆண்டவர் யாவர்? விசயநகர வேந்தரும் மராட்டியரும்; விசயநகர வேந்தர்; வரிகள்; நீதிப் பாதுகாப்பு; நாட்டு ஆட்சி; கோயில்கள்; சாதி வேறுபாட்டு உணர்ச்சி; பழக்க வழக்கங்கள்: உணவு; உடை; சமயம்; கல்வியும் இலக்கியமும்; கலைகள்; கட்டடங்கள்; மாற்று ஆட்சி.

XVII. விசயநகர ஆட்சிக்குப் பின் 322

இணைந்த இந்தியா; கடலாதிக்கம்; பதினெட்டாம் நூற்றாண்டின் தொடக்கம்; மராட்டியரும் நாயக்கரும்; மராட்டியர் ஆட்சிமுறை; தஞ்சை நாடு; வெளிநாட்டார் ஆட்சி; போர்த்துகீசியர்; டச்சுக்காரர்; கடலாதிக்கம் கைமாறியது; ஆங்கிலேயர் ஆதிக்கம்.

XVIII. ஆங்கிலேயர் ஆட்சி 338

ஓரினக் கொள்கை; தமிழ்நாட்டின் நிலை; நேரடி ஆட்சி; ஆங்கிலேயர் செயல்கள்; நற்செயல்கள்; நாட்டு ஆட்சி; கல்வி வளர்ச்சி; சமூக சீர்திருத்தம்; கலை வளர்ச்சி; இலக்கிய

சமய வளர்ச்சி; தமிழ் வளர்ச்சி; உரிமை வேட்கையும் விடுதலையும்.

XIX. விடுதலைக்கு முன்னும் பின்னும் 358

தன் வரலாறு அற்ற தமிழகம்; எதிர்ப்புச் சக்தி; விடுதலை வேட்கைக்குப் பின் சூழ்நிலை; வெளிநாடுகளில் தமிழர்கள்; காங்கிரஸ்; தமிழர் பங்கு; வளர்ந்த காங்கிரஸ்; புதிய ஆட்சி முறைகள்: உரிமை பெற்ற இந்தியா; இன்றைய தமிழ் நாடு: சமூகமும் கலை இலக்கியமும்; கிராம வளர்ச்சி; மொழி வழி நாடு; இன்றைய இலக்கிய வளர்ச்சி; இசையும் நாடகமும்; இன்றைய நிலை; எனது வேண்டுகோள்.

XX. எறும்புச் சாலம் பற்றிய வரலாற்று ஆராய் 382

# முன்னுரை*

**உலகமும் உயிரும்:**

நாம் வாழும் உலகத்தின் வரலாறு வரையறுக்கப் பட்ட ஒன்று அன்று. உலகம் தோன்றி எத்தனையோ ஆண்டுகள் கழிந்தன. இன்னும் எத்தனை ஆண்டுகள் இது வாழும் என்பதை ஓரளவு அறிஞர் ஆராய்ந்து கண்டா லும் திட்டமாக வரையறுக்க முடியவில்லை. இந்த நெடுங் கால வாழ்வில் நிற்கும் உலகில் நிலம் தோன்றிய பின் அதில் மனிதன் பிறந்தபின் நெடுங்காலம் கழிந்திருக்க வேண்டும். தோன்றிய மனிதன், தோன்றிய அந்த நாளிலேயே எல்லா அறிவையும் பெற்றிருந்தான் என்று கூற இயலாது. நாளாக ஆக அவன் அறிவும் வளர்ச்சி அடைந்தது. மனிதனுக்கு மற்றவற்றைக் காட்டிலும் நல்ல தன் நலனும் தீயதன் தீமையும் ஆராய்ந்து அறிகின்ற பகுத்தறிவு உண்டு. ஆயினும், அவன் தோன்றிய நெடு நாளைக்குப் பிறகே அந்த அறிவு கைவரப்பெற்ற மனிதன் தன்னையும் தன்னைச் சுற்றியுள்ள உயிர் வாழ் வனவற்றையும் அல்லாதவற்றையும், பரந்த உலக நிலை யையும் எண்ணலானான். அவன் எண்ண எண்ண அவன் நினைவில் கடந்தகால நிகழ்ச்சிகள் உருப்பெற்றன. ''நம் கடந்தகால வாழ்வில்—இளமையில்—வாலிபத்தில் எவ் வெவ்வாறு வாழ்ந்தோம்?'' என நினைந்தான். அதைப் போன்றே பிற உயிர்களைப் பற்றியும், நாட்டைப் பற்றியும், உலகத்தைப் பற்றியும் எண்ணினான். அந்த

---

* இரண்டாம் பதிப்பு—1962.

எண்ணங்களெல்லாம் ஒருங்கு திரண்டு அவன் உள்ளத்தில் உருப்பெற்றிருந்தன. அவ்வெண்ண அலைகளோடு மனிதன் நெடுங்காலம் வாழ்ந்திருந்தான். எண்ணங்கள் வரவரப் பெருகின. மிகப்பழங்காலத்துக்கு அவன் நினைவு சென்றது. அவன் முன்னைய வாழ்வும் பின்னைய வாழ்வும் கண்முன் நின்றன. 'அன்று முதல் இன்று வரை' என்று திரும்பத் திரும்பச் சொல்லிக்கொண்டே இருந்தான். அந்த நிலையில் எழுத்து வந்தது. எண்ணியவற்றை அப்படியே எழுத்தில் வடித்தான். அந்த எழுத்துருவமே 'வரலாறு' என்று பெயர் பெற்றது.

**வரலாறு இல்லை;**

நிலம்பற்றி ஆராய்கின்ற ஆராய்ச்சியாளர்கள் நிலத்தின் பல்வேறு தன்மைகளை ஆராய்ந்து எந்த மண் காலத்தால் முற்பட்டது எனக் கணக்கிடுகிறார்கள். இன்று நாம் காணும் உலகிலுள்ள ஐந்து கண்டங்களும் நிலம் தோன்றிய அந்தநாள் தொட்டு இப்படியே இருக்கவில்லை. இமயம் கடலுள் ஆழ்ந்த காலமும் இருந்தது; குமரி முனைக்குத் தெற்கே பரந்த நிலப்பரப்பு இருந்த காலமும் உண்டு. எனவே, இந்த உலகின் நிலப் பரப்பு, கால வேகத்தில் அவ்வப்போது மாறிக் கொண்டே வருகின்றது. அவற்றை ஆராய்ந்து நில ஆராய்ச்சியாளர்கள் நிலத்தில் தொன்மை வாய்ந்தவை இவை. பின்னால் தோன்றியவை இவை எனப்பிரிக்கின்றனர் அவ்வாறு பிரித்தறிந்த நிலையில் வேங்கடத்திற்குத் தெற்கில் அமைந்த நம் தமிழக மண்ணே, பல நாட்டு மண்களைக் காட்டிலும்—

ஏன்—வடவிந்தியப் பகுதி, இமயமலை ஆகிய இவற்றைக் காட்டிலும் தொன்மை வாய்ந்தது என வரையறை செய்துள்ளனர். ஆம்! அத்தகைய தொன்மை வாய்ந்த நிலப் பரப்புக்கு வரையறுத்த வரலாறு இல்லை என்பதைத் தமிழ்நாடு இன்று நன்கு உணர்ந்துள்ளது. உலக நாடுகளெல்லாம் தத்தம் வரலாற்றை எழுதி வெளியிட்டு வரும் இந்நாளில் தமிழக வரலாறு முழுதும் ஒழுங்காக வரையறுக்கப் பெறவில்லை தமிழ்நாட்டு அரசாங்கம் இத்துறையில் முயலும் என்ற நம்பிக்கை பிறக்கிறது. தக்கவர் வழி அப்பணி தொடங்கப் பெறின் மிக்க பயன் உண்டாகும் என நம்புகிறேன்.

வரலாறு எழுத வேண்டும் என்ற உணர்வு கடந்த சில நூற்றாண்டுகளாகத் தான் நன்கு வளர்ந்துள்ளது. கடந்த இரண்டு நூற்றாண்டுகளுக்கு மேலாக நம் தமிழகம் தனித்தில்லாது பரந்த பாரதத்தோடு இணைந்துவிட்டது. வரலாறுவளர்ந்த காலமும் இதுவே யாகும். இந்தியாவைக் கண்டு அதுபற்றி எழுதவிரும்பும் மேலைநாட்டினர் பலரும் தில்லியையும் அதைச் சார்ந்துள்ள கங்கை, சிந்து சமவெளியையும் பற்றியே வரலாறு வரைந்துள்ளனர். தமிழ்நாட்டைப் பற்றி அவர்கள் அதிகம் அறிந்தார்கள் இல்லை. தமிழ் நாட்டிலேயே வந்து தங்கியிருந்த சில மேலை நாட்டுப் பாதிரிகள் இத் தமிழ் நலத்தால் கட்டுண்டு, தத்தம் மொழியில் சில தமிழ் இலக்கியங்களை மொழி பெயர்த்தார்கள். இம் மொழி பற்றிய இலக்கணங்களை எழுதி வைத்தார்கள்; எனினும், இந்நாட்டு வரலாற்றை யாரும் எழுதவில்லை.

**வரலாற்று வழி:**

இந்திய அரசாங்கம் இந்த நாட்டுப் பழம் பொருள்களைப் பற்றி ஆராய வேண்டும் எனக் கருதியது. குமரி

முதல் இமயம் வரை உள்ள பல்வேறு பழம்பொருள்களைத் துருவி ஆராய்ந்தது. நிலத்தின் கீழ் அழிந்த பெரு நகரங்களும் அதன் எல்லையில் அகப்பட்டன. சிந்துநதிக் கரையில் ஆரப்பா மோகஞ்சதாரோவும், தமிழ் நாட்டு எல்லையில் தாம்பிரவருணி நதிக்கரையில் ஆதிச்சநல்லூரும் அவ்வராய்ச்சியாளருக்குப் புலனாயின. சிந்துவெளி ஆய்வால் அவர்கள் ஒருபுதிய உணர்வு பெற்றார்கள். அந்த நாகரிகம் தென்னாட்டுத் திராவிட நாகரிகத்தை ஒத்தது என உணர்ந்தனர். அந்த வழியே தென்னாட்டு வரலாற்றை ஆராயத் தொடங்கினர். அதற் கேற்ப, தமிழகத்தில் இடைக்காலத்தில் தோன்றிய பெரும் பெருங் கோயில்கள் தம்முள் கல்வெட்டுக்களை நிறையப் பெற்றிருந்தன. இந்திய நாட்டுப் பிற பகுதிகளில் காணக் கிடையாத இந்த வரலாற்று மூலங்கள் ஆய்வாளர்களுக்கு நன்கு பயன்பட்டன எனலாம். வரலாற்றுக் கண் கொண்டு காண்பவருக்குக் கல்வெட்டுக்களும், செப்புப் பட்டயங்களும் இடைக்காலத் தமிழ் நாட்டைக் காட்டின. எனவே, இந்திய அரசாங்கத்துத் தொல்பொருள் ஆய்வுப் பகுதி தமிழ் நாட்டு வரலாற்றை அறியப் பெருந்துணை புரிந்தது எனலாம். அவற்றுடன் பல செப்புப் பட்டயங்களும், மாமல்லபுரம் போன்ற கலை வாழிடங்களும் இடைக் காலத் தமிழகத்தை உலகுக்குக் காட்டின. எனினும், மிகப் பழையதாகிய பண்டைய தமிழகத்தைக் காணத்தக்க வரலாற்று மூலங்கள் கிடைக்கவில்லை. இலக்கியங்கள் ஓரளவு உதவின. சிறப்பாகச் சங்க காலத்தை அறிய அக்கால இலக்கியங்களாகிய பத்துப் பாட்டும் எட்டுத் தொகையுமே பெரிதும் பயன்படுகின்றன. அவை தவிர்த்துச் சில தனிக் காவியங்களும் கவிதைகளும் சற்றுப் புனைந்துரைத்தும் மிகைப்படுத்தியும் தமிழின் தொன்மையையும் தமிழ்நாட்டுத் தொன்மையையும் உயர்வு படுத்து

கின்றன. பாண்டியன் மாகீர்த்தி என்பான் 40,000 ஆண்டு கள் அரசாண்டான் என்றும், சில அரசர்கள் பல ஆயிரமா யிரம் ஆண்டுகள் வாழ்ந்தார்கள் என்றும் எழுதப் பெற்றுள்ளன இவை பொருந்துவனவல்ல இத்தகைய இயற்கைக்கு மாறுபட்ட எழுத்துக்கள் சங்க இலக்கியங் களில் இல்லை. ஆகவே, அவற்றை வரலாற்றுக்குத் துணையாகக் கொள்ளலாம். அவற்றைத் துணையாகக் கொண்டே இன்றைக்கு ஐம்பது ஆண்டுகளுக்கு முன்பு அஞ்சல் துறையில் பணியாற்றிய யாழ்ப்பாணம் கனக சபைப் பிள்ளை அவர்கள் 1800 ஆண்டுகளுக்கு முற்பட்ட தமிழர்' என்ற ஒரு நூலை எழுதினார். இன்று தமிழக வரலாற்றை எழுதத் தொடங்குவோருக்கெல்லாம் அந்நூல் முன் வழி காட்டியாய் அமைந்துள்ளது.

**தொடர்ந்த முயற்சி தேவை:**

சென்னைப் பல்கலைக் கழகத்து வரலாற்றுப் பகுதி தமிழக வரலாற்று வளர்ச்சியில் கருத்துக் கொண்டது என லாம். அப்பகுதியில் தலைவராய் இருந்த திரு நீலகண்ட சாஸ்திரியார் அவர்கள் கல்வெட்டுக்களை ஆராய்ந்து பிற் காலச் சோழர் வரலாற்றை விளக்கமாக எழுதியுள்ளார் கள். மேலும் அவர்தம் பாண்டியர் வரலாறும் தென் இந்திய வரலாறும் தமிழ்நாட்டு வரலாற்று ஆய்வாள ருக்குப் பயன் தருவன. திரு. மீனாட்சி அவர்களின் 'பல்லவர் காலத்திய ஆட்சியும் சமூக வாழ்வும்' என்னும் நூலும் கோபாலனுடைய 'பல்லவ'ரும் மகாலிங்கத்தின் தமிழ் வெளியீடுகளும், சேஷ ஐயங்காருடைய 'திராவிட இந்தியா'வும், P.T. சீனிவாச ஐயங்கார், M. சீனிவாச

ஐயங்கார் போன்றோர்தம் நூல்களும் பிறவும் இன்று தமிழ் நாட்டு வரலாற்றை நம்முன் கொண்டு வந்து காட்டுகின்றன*. எனினும் ஒன்றும் தொடர்ச்சியாக வரலாற்றுக்காலத்துக்கு முன் தொடங்கி இன்று வரை தமிழக வரலாற்றை வரையறுத்து வெளிக்காட்டவில்லை எனலாம். இரண்டாயிர மாண்டுகளுக்கு மேற்பட்ட தமிழக வரலாற்று நிலையை வரிசையாக வகைப்படுத்தி வெளிக்கொணர்வதும் அவ்வளவு எளிதன்று. எனினும், அத்துறையில் நான் மேற்கொண்ட முயற்சியே இச்சிறு நூலாகும்.

## இந் நூலில்

இந்நூலில் வரலாறு மிகு பழங்காலம் தொட்டு, இன்றுவரை முறைப்படுத்தி எழுதப் பெற்றுள்ளது. இவ் வரலாற்றுக் குறிப்புகள் அனைத்தும் நானே முயன்று புத்தம் புதியனவாகக் கண்டு பிடித்தவை யல்ல. ஒவ்வொரு காலத்தைப் பற்றியும் பல்வேறு அறிஞர்கள் எழுதிய வரலாற்று நூல்களின் துணைகொண்டே இந்நூலை எழுதியுள்ளேன் அவற்றை அவ்வப் பக்கங்களில் குறித்துள்ளேன் சிறப்பாக நீலகண்ட சாஸ்திரியாருடைய சோழர் வரலாறும், ஹீராஸ் பாதிரியர், கோபாலன் ஆகியோர் பல்லவர் வரலாறும், P.T. சீனிவாச ஐயங்கார், கனகசபைப் பிள்ளை ஆகியோரின் தமிழக வரலாறும், சதாசிவ பண்டாரத்தாரின் சோழர் பாண்டியர் வரலாறுகளும். பிறவும் எனக்குப் பெருந்துணை செய்தன எனலாம். அவர்களெல்லாம் ஒவ்வொரு காலத்தைப்பற்றி விரிவாக எழுதிய கருத்துக்களைச் சுருக்கி, ஆய்ந்து கண்ட பல புதிய குறிப்புக்களோடு சேர்த்துக் கோவை செய்யப் பட்டதே இந்நூல்.

---

*இவற்றுள் பல இக்காலத்தில் (1995) கிடைக்க வில்லை. அரசு வெளியிட ஆவன செய்தல் நலம்.

வரலாற்றுத் துறையிலும் இந்நூல் எனது முதல் முயற்சி. இவ்வரலாற்றைப் பெரும்பாலும் கட்டுரை வகையில் தொகுத்துள்ளேன் அகில இந்திய வரலாற்றுப் பெருஞ்சபையில் உறுப்பினனாய் இருந்து ஈர் ஆண்டு விழாக்களில் ஆராய்ச்சிக் கட்டுரைகளை வாசித்திருந்த போதிலும்,வரலாற்று நூலை முறைப்படி நான் இதுவரை வெளியிடவில்லை இதில் குறைபாடும் இருக்கலாம். காணும் அறிஞர்கள் அவற்றைக் குறித்து எழுதுவார்களா யின், அடுத்து வரும் பதிப்புக்களில் அக்குறைபாடுகளை நீக்க வழி உண்டாகும். இதன் முதல் பதிப்பில் அறியாது கலந்திருந்த சில குறைபாடுகளை இப்பதிப்பில் நீக்க முயன்றுள்ளேன். எனினும் இன்னும் குறைகளிருப்பின் அறிஞர் காட்டித் திருத்த வேண்டும் எனக் கேட்டுக் கொள்ளுகிறேன்.

இந்நூயில் பிற்காலச்சோழர் பகுதி சற்று விரிவாகவே எழுதப் பெற்றுள்ளது. அதே நிலையில் பல்லவர் காலம், பிற காலங்களைப் பற்றி விரிவாக எழுதவும் கூடும். எழுதின், மிக விரிவாகும் என அஞ்சியும், பயிலும் மாண வருக்கும் மற்றவருக்கும் இந்த அளவில் இவை பயன்படும் என்று கருதியும். தேவையான அளவில் மற்றவற்றை நிறுத்திக் கொண்டேன். அடுத்து இரண்டு அல்லது மூன்று தொகுதிகளாக வெளியிட வாய்ப்பு நேருமேல் அத் தொகுதிகளில் தமிழ்நாட்டு வரலாற்றை விளக்கமுற எழுதலாம் என நினைக்கிறேன். தமிழ்நாட்டு அறிஞர் களும் வரலாற்று ஆசிரியர்களும் உதவுவார்கள் எனும் துணிவுடையேன். இந்நூல் தமிழ் மக்களுக்கு-சிறப்பாகத் தமிழ் பயிலும் மாணவர்களுக்குப் பெரிதும் பயன்படும் என்ற துணிவுடையேன். வரலாற்றறிஞர் இத்துறைவழி சிறக்க வழி காட்ட வேண்டுமென வேண்டி அமைகின் றேன்.

# ஐந்தாம் பதிப்பின் முன்னுரை

நான் பச்சையப்பன் கல்லூரியில் தமிழ் இளங்கலை முதுகலை வகுப்புகளுக்குப் பாடம் நடத்திய காலம் சென்னை பல்கலைக்கழகப் பாடநூற்குழுவில் இடம் பெற்றிருந்த காலம். 'தமிழக வரலாறு' பாடமாக அமைக்கத் திட்டமிட்டு, பாடதிட்டத்தையும் அமைத்து. அதற்கேற்ப இந்தத் 'தமிழக வரலாற்'றினைச் சுமார் நாற்பது ஆண்டுகளுக்குமுன் எழுதினேன். பின் 1979வரை அடுத்து மூன்று பதிப்புகள் (மொத்தம் நான்கு) வெளி வந்தன. அப்போது இதே அமைப்பில் பலர் நூல்கள் எழுதி வெளியிட்டமையின், இந்த நூல் இல்லையாயினும் மாணவர் வேறு நூல்களைப் பயில வாய்ப்பு உள்ளமை யின் இதன் மறுபதிப்பினை வெளியிடவில்லை எனினும் தற்போது அவை ஒன்றும் கிடைக்காமையின், பல்கலைக் கழக, கல்லூரி ஆசிரியர் இந்நூலை வெளியிட வேண்டும் என்றனர். எனவே இந்தப்பதிப்பு இன்று வெளிவருகிறது.

பல ஆண்டுகள் இடைவெளியில் தமிழ் நாட்டு வரலாற்றில் எத்தனையோ மாற்றங்கள் உண்டாயின? சமுதாயம், கல்வி,கலை இவை வளர வேண்டிய வகையில், அமைப்பில், தெளிவில் வளரவில்லை. அரசியலிலும் புதுப் புது வகையான மாற்றங்கள் மத்தியிலும் தமிழ் நாட்டிலும் நிகழ்ந்துள்ளன. 'நல்லனவும் அல்லனவும்' மக்களாட்சியில் இன்று கலந்து மலிந்துள்ளன. அவற்றை காட்டுயது வரலாற்று ஆசிரியன் கடமையானாலும், இன்றும் எழுத ஒய்வு இல்லா நிலையிலும் வேறுபிற கார ணங்களாலும் அவற்றை நான் தொடர்ந்து பழையபடியே அச்சிட்டுள்ளேன். கடைசியில் இரண்டொரு பக்கத்தில் மாற்றம் பற்றிக் குறிப்பிட்டேன் அடுத்து விரைவில் தொடர்ந்து கடந்த அரை நூற்றாண்டு பற்றி. ,விடு தலைக்குப்பின் தமிழகம்' என்ற தலைப்பில் முடியு மானால் ஓய்வும் வாய்ப்பும் அமையின் வெளியிட எண்ணி யுள்ளேன்.

இந்நூலை அச்சிடுங்கால் பிழைகளை ஒப்பு நோக்கித் திருத்தி உதவிய சென்னை, பச்சையப்பன் கல்லூரித் தமிழ்ப் பேராசிரியர் டாக்டர் வளவன் அவர்களுக்கு வாழ்த்து.

தமிழ்க்கலை இல்லம்,
சென்னை—30.
15-10-95

பணிவுள்ள,
அ. மு. பரமசிவானந்தம்.

# 1. எது வரலாறு ?

## வரலாற்று எல்லை :

உலகம் தோன்றி எத்தனையோ கோடிக்கணக்கான ஆண்டுகள் கழிந்து விட்டன. விஞ்ஞானிகள் எவ்வளவோ முயன்றும் இந்தப் பூமியின் ஆயுளைத் திட்டமாக வரையறுக்க அஞ்சுகின்றார்கள்; இந்தப் பூமி சூரியனிடமிருந்து தோன்றிய ஓர் அணு என்றும், சூரியன் சுழற்சியிலிருந்து சிதறித் தனியாய் நின்று விட்டதென்றும் கூறுவார்கள். எனவே, சூரியன் ஆயுட்காலத்தையும், அதற்கு முன்னமே யாண்டும் பரந்து நின்ற இந்த அண்டகோளத்தின்[1] ஆயுளையும் கணித்தறிதல் எளிதன்று இத்தகைய நீண்ட அண்ட கோளத்தின் ஆயுட்காலத்தில் மனிதனின் ஆயுட்காலம் மிகமிகக் குறுகியது. அதைப் போன்றே பரந்த அண்ட கோளத்து எல்லையில் இப்பூமியின் எல்லை ஒரு சிறு அணுப்போன்றது. எனினும், இந்த உலகில் வாழ்கின்ற மனிதன் எல்லாவற்றையும் ஆராய்ந்து அவற்றின் இயல்புகளைக் காணத்தக்க வகையில் வளர்ந்து கொண்டு வருகின்றான்.

## எது வரலாறு?

மனிதன் காண விரும்பும் நெறிகள் பல. அவன் விஞ்ஞானத்தின் துணைகொண்டு விண்ணையும் மண்ணையும் அளக்க விரும்புகின்றான்; மெய்ஞ்ஞான வழியில் உள்ளுணர்வு பெற்று உயர வழி தேடுகின்றான்; சென்ற காலத்தின் அருமையை எல்லாம் எண்ணிப் பார்க்கின்றான்;

---

1. Universe

வருங்காலத்தின் நன்மை தீமைகளைக் கணக்கிட முயல்கின்றான். இத்துறைகளில் அவன் ஆராய்ச்சி செல்லும் போது பலப்பல உண்மைகள் வெளியாகின்றன. அவ்வாறு வெளியாவதைப் பழங்கால மனிதன் எழுதி வைக்கவில்லை. எழுதி வைக்க அவன் விரும்பி இருந்தாலும் அது முடியாது. ஆனால், இன்றைய மனிதன் தான் கண்ட உண்மைகளை எழுதி வெளியிட்டுப் பலருக்கும் விளங்க வைக்கின்றான். அந்த எழுத்துக்கள் பழங்கால உலக வாழ்வையும், அவ்வுலகில் வாழ்ந்த உயிர்ப் பொருள்களின் வாழ்வையும், மக்களின் வாழ்வையும் விளக்குவனவாயின. அவ்வெழுத்துக்களே வரலாறு எனப்படும்.

வரலாற்று நூல்கள் எழுதிய ஆசிரியர்களுள் சிலர் வரலாறு என்பது அரச பரம்பரையைப் பற்றியும், அவ்வரசர்கள் வாழ்ந்த வாழ்க்கையைப் பற்றியும், அவர்கள் செங்கோல் முறை பற்றியும் எழுதுவதே என்று எண்ணிக் கொண்டார்கள். உலகம் தோன்றிய நாள் தொட்டுத் தோன்றி வாழ்ந்து நாடாண்ட அரசர்தம் பரம்பரையைப் பற்றியும், அவர்களது குடும்பத்தில் வாழ்ந்த சுற்றத்தார் பற்றியும், அந்த அரசர்கள் நடத்திய போர்கள் பற்றியும், அவற்றின் விளைவுகள் பற்றியுமே பலர் எழுதி வந்தனர். இந்திய நாட்டு வரலாற்றை எடுத்து ஆராய்ந்தவர்கள் எல்லோரும் 'வரலாற்றுக்கு முற்பட்ட இந்தியா' என்று பொதுவாகச் சிலவற்றைக் கூறிவிட்டு, பிறகு வரலாற்றுக் காலத்துக்கு வரும்போது மௌரிய பரம்பரை தொடங்கி, ஆங்கிலேயர் ஆட்சி வரையில் முறையாக எழுதி முடித்துத் தம் வேலைமுடிந்துவிட்டதாகக் கூறுவர். அதைப் போன்றே தமிழ்நாட்டு வரலாற்றை எழுத நினைக்கின்றவர்களும் சங்க காலத்துக்கு முன் உள்ள சில அரசர்களைப்

பற்றியும், சங்க காலத்தில் வாழ்ந்த அரசர்களைப் பற்றியும், பிற்கால அரசர்களைப் பற்றியும்—ஆம்—சேர சோழ பாண்டிய பல்லவ அரசர்களைப் பற்றியும்—எழுதி வைத்துப் பின் வந்த வேற்று நாட்டுப் படையெடுப்புக்களை ஒன்றன்பின் ஒன்றாகக் காட்டி அமைதியுறுவர். பழங்கால வரலாறு என்று கல்லூரியில் பயிலும் மாணவர் பழைய கிரேக்க உரோம நாட்டு அரசர் தம் பரம்பரைகளைப் பற்றியே பெரும்பாலும் பயிலுவர். இவ்வாறு வரலாறு என்பது மன்னர் வாழ்வை விளக்குவதுதான் என்ற எண்ணம் இடைக்காலத்தில் வரலாற்று ஆசிரியர் தம் உள்ளத்தில் உருவாகிவிட்டது. ஆனால் உண்மையில் வரலாறு அந்த அளவில் முற்றுப் பெறுவதன்று. அந்நிலை வரலாற்றுக்கு அடிப்படையாக அமையுமேயன்றி, அதுவே வரலாற்றின் முடிந்த எல்லை ஆகாது. இதை இன்றைய வரலாற்று ஆசிரியர்கள் ஓரளவு உணர்ந்துள்ளார்கள். தமிழ்நாட்டு வரலாற்றை எழுத முற்பட்ட P. T. சீனிவாச ஐயங்கார், நீலகண்ட சாஸ்திரியார் போன்ற ஆசிரியர்கள் இவ்வுண்மையை உணர்ந்து உணர்த்தியதோடு தம் வரலாற்று எழுத்துக்களையும் அரசர் பரம்பரையை விளக்கும் அளவோடு நிறுத்திவிடவில்லை.

"வரலாறு என்பது அரச குடும்பத்தின் உயர்வு தாழ்வுகளைக் கூறுவதாயும், மாற்றார் என்று பகைவரைக் கற்பித்துக்கொண்டு அவர்தம் நாட்டின் மேல் படையெடுத்து ஈவு இரக்கமின்றி மக்களைக் கொன்று குவிக்கும் போர் நிலையை விளக்குவதாயும், மாற்றார் நாட்டை எரியூட்டி மக்கள் வாழ்வை நாசமாக்கி அரச மகளிரையும் பிற பெண்களையும் கற்பழிக்கும் சீர்கேடுகளைக் கூறுவதாயும், அமைதி வாழ்வைக் குலைத்து அசுர வாழ்வில் கொலை

முதலிய செய்யும் கொடுமைகளை விளக்குவதாயும், ஒன்றும் அறியாப் பச்சிளங் குழந்தைகளையும் பழி வாங்கும் வன்கண்மையைக் காட்டுவதாயும் இருப்பின், அந்த வரலாற்று முறை தமிழ் நாட்டிற்கு ஒவ்வாது '[1] என்று P. T. சீனிவாச ஐயங்கார் திட்டவட்டமாகத் தமது முன்னுரையில் கூறியே தமது 'தமிழர் வரலாறு' (History of Tamils) என்ற ஆங்கில நூலைத் தொடங்கு கின்றார். மேலும், அவர், வரலாறு என்பது ஆரவார மற்ற நிலைத்த வளர்ச்சியுற்ற மக்கள் சமுதாயத்தின் சமூக சமய வளர்ச்சியைப் பற்றியும், தாம் வாழும் நில அமைப் புக்கும் தட்பவெட்ப நிலைக்கும் ஏற்ப மக்கள் அமைத்துக் கொள்ளும் வாழ்க்கைமுறை பற்றியும், வளர்ச்சியுற்ற பல்வேறு கலாசாரமும் பண்பாடும் கொண்ட மக்களினத் தவர் ஒருவரோடு ஒருவர் கலந்து பழகும் முறைகள் பற்றி யும், அன்றாட வாழ்வில் அவர்கள் மேற்கொள்ளும் உடை உணவு உறையுள் பற்றியும், அவற்றை ஆக்கி அளிக்கும் முறைகள் பற்றியும், அவற்றை மற்றவர்களோடு பகிர்ந்து கொள்ளும் பண்பாட்டைப் பற்றியும், ஓய்வு வேளையில் அவர்கள் மகிழ்வோடு விளையாடிய விளையாட்டுக்கள் வேடிக்கைகள் பற்றியும், அவர்கள் தத்தம் கடவுளரையும் அரசரையும் போற்றிய விதங்கள் பற்றியும், அவர் தம் உள்நாட்டு வெளிநாட்டு வாணிப வளன் பற்றியும், பொருளாதார ஏற்றத் தாழ்வுகள் பற்றியும், அவர்தம் கல்வி வளர்ச்சி பற்றியும் கூறுவதேயாகும் எனக் கொள்ளின், தமிழ்நாடு அத்துறையில் பலப்பல உண்மை களைக் காட்ட வல்லது என்பதை எடுத்து விளக்கு கின்றார்.[2] இக்கருத்தை ஒட்டியே பேராசிரியர் நீலகண்ட

1. History of Tamils, page iii

சாஸ்திரியார் அவர்களும் வரலாறு என்பது பல்வேறு சூழல்களில் பட்டுழன்று, வாழ்வில் பெறும் வெற்றி தோல்விகளையேற்று மேலோங்கும் சாதாரண மனிதனது வாழ்வு, வளன், பிற சிறப்பு இயல்புகள், அவன் மற்றவரோடு கலந்து பழகும் முறை, இன்ன பிறவற்றை விளக்குவதே ஆகும் என்ற அடிப்படையிலேயே தம் தென்னிந்திய வரலாற்றை[1] எழுதுகிறார்.

இவ்விரு பேராசிரியர்களின் கருத்துக்களுக்கும் அரணாக மேலை நாட்டு வரலாற்று ஆசிரியர் பலர் புத்தம் புதிய வரலாற்று நூல்களை வெளியிட்டு வருகின்றனர். எனவே, இன்று வரும் பல வரலாற்று நூல்கள் உண்மையில் மக்கள் வாழ்வோடு பொருந்தியனவாகத் தான் உள்ளன. பள்ளியில் பயிலும் மாணவர்கள் கூட இப்போது வரலாற்று நூல் படிப்பதை விட்டுச் சமூக நூலைத் தான் பயில்கின்றார்கள். எனவே வரலாறு என்பது மக்கள் வாழ்வைச் சித்தரிக்கும் ஒன்று எனக் கூறி விடலாம்.

**வரலாறு அனைத்தையும் உள்ளடக்கிய ஒன்று :**

உலகில் காணும் ஒவ்வொன்றுக்கும் வரலாறு உண்டு[1] ஏன்? காணாதனவற்றுக்குங்கூட வரலாறு உண்டு எனலாம். காற்றினைக் கண்ணால் காண்பதில்லை ஆனால் அதன் தோற்ற வளர்ச்சி பற்றியும், அதன் முன்னைய ஆற்றல்கள் பற்றியும், இன்றைய செயல்களைப் பற்றியும் கூறுவதும் வரலாறு தானே? இதைப் போன்றதே விஞ்ஞானத்தின் வரலாறும். வரலாறு விஞ்ஞானத்தின் வேறு பட்டது எனவும் விஞ்ஞான ஆய்வுக்கு வேண்டிய அறிவு

1. The History of South India

வரலாற்றை அறிய வேண்டுவதில்லை எனவும் பலரும் நினைக்கின்றனர். ஆய்வுக் களத்தில் ஆழ்ந்த சிந்தனை யோடு அல்லும் பகலும் தளராது உழைக்கும் விஞ்ஞானி நுண்ணறிவைப் பற்றி நாம் ஒன்றும் குறை கூற முடியாது. எனினும், அவ்விஞ்ஞானியையும், அவனது ஆய்வின் தோற்ற வளர்ச்சியையும் உலகுக்கு விளக்கிக் காட்டுவதும் வரலாற்று நூல் தானே? பறக்கும் விமானத்தைப் பார்க் கும் போது அதன் தோற்றத்திலிருந்து-அதை உருவாக்கிய அந்த முதல் ஆய்வாளர் செயல் தொடங்கி-இன்று வரை அதன் வளர்ச்சியையும், அதை வளர்த்த பெரியவர்களை யும் வரிசைப்படுத்திப் பார்க்கும் அந்த ஒன்று 'விமானம் வளர்ந்த வரலாறு' தானே? அதைப் போன்றனவே அணுக்குண்டு வரலாறும் பிறவும் எனலாம். எனவே' விஞ்ஞானமாயினும், அன்றி வேறு எதுவாயினும் அதன் வாழ்வை உலகுக்கு உணர்த்துவது வரலாறு அல்லாது வேறு இல்லை என்பது தெளிவு. எனவே, வரலாறே உலக வாழ்வின் அடிப்படையாகின்றது.

**வரலாறு வளர்ந்த வகை :**

இனி, இவ்வரலாறு வளர்ந்த விதத்தினை ஆராய் வோம். தமிழ் நாட்டில்மட்டுமன்றி, உலகிலேயே இந்த வகையான வரலாற்றைப் பண்டைக் காலத்தில் யாரும் எழுதி வைக்கவில்லை. தம்மைப் பற்றிப் பிற்காலத்தவர் அறிந்து கொள்ள வேண்டும் என்று நல்லவர் நினைப்ப தில்லை. எந்தச் செயலைச் செய்தாலும் அது கடமையின் பாற்பட்ட ஒன்று என்று செய்வார்களேயன்றி, அதை விளம்பரப்படுத்த வேண்டும் என்ற எண்ணம் அவர் களுக்கு இல்லை. ஆகவே, பழங்காலத்தில் நல்லவர்கள் செய்த பல செயல்களைப் பற்றிய குறிப்புக்கள் நமக்குக்

கிடைக்காமல் போயின. இக்காலத்தில் சிலர் குறிப்பெழுதும் பழக்கத்தினை மேற்கொள்ளுகின்றனர். ஆனந்தரங்கம் பிள்ளை அவர்களின் அன்றாடக் குறிப்பு நூல் அவர் காலத்து வரலாற்றை நமக்கு நன்கு எடுத்துக் காட்டுகின்றது அன்றோ! ஆயினும், சிலர் தாம் செய்யும் சிறு சிறு செயல்களை எல்லாம் பெரியனவாக்கிக் காட்டிப் பெருமையும் கொள்கின்றனர். ஆகவே, இக்காலத்தில் ஓரளவு உண்மை புலனாவதோடு, வரலாற்றுக்குத் தேவையற்ற வெற்றுரைகளுங்கூடப் பெருக இடமுண்டாகின்றது. இப்படி ஒன்றும் எழுதி வைக்காத ஒரு நிலையும், இல்லதைப் புனைந்துரைக்கும் ஒரு நிலையும் வரலாற்று ஆசிரியர்களைத் திண்டாடத்தான் வைக்கின்றன. எனினும், உண்மை காணும் வரலாற்று ஆசிரியர்கள் ஆராய்ச்சி செய்து, அறிவோடு பொருந்தியவற்றைக் கண்டு, மக்களால் விரும்பப்படும் ஒரு சிறந்த வரலாற்று நூலையே எழுத முற்பட வேண்டும். வரலாறு இன்றேல், சென்ற காலத்தைக் காண முடியாது. அதன் வழி வருங் காலத்தையும் அமைக்க வழி வகை தெரியாது. எனவே, மக்கள் சமுதாயம் ஒழுங்குபட்ட ஒரு வரையறையில் செல்ல வேண்டுமாயின், அதற்குச் செம்மையான வரலாறே துணையாக நிற்கும் என்பது உறுதி.

**வரலாற்று ஆசிரியர் நிலை :**

வரலாறு கற்பது நல்லதுதான். ஆனால் வரலாற்று ஆசிரியர் கற்போர் விரும்பி ஏற்கும் வகையில் தம் நூலை ஆக்க வேண்டும். சிறந்த வரலாற்று ஆசிரியர் எழுதும் நூல்கள் கதைகளே போன்று படிக்கப் படிக்க இனிமையாக, வெறுப்புத் தட்டா வகையில் அமைகின்றன. வரலாறு, தொடர்ந்த கதையாய் இராது என்பது உண்மை

தான். மனித சமுதாயத்தின் வரலாற்றிலே எத்தனையோ இருண்ட பாகங்களும் உள்ளன. ஏன்? தமிழ்நாட்டு வரலாற்றிலேயுங்கூட எத்தனையோ இருண்டகாலப் பிரிவுகள் உள்ளன. வரலாற்றைத் தொகுக்கும் ஆசிரியன் அந்த இடைவெளிகளை அப்படி அப்படியே விட்டுச் செல்வானாயின், கதைப் போக்கின் இடையிடையே துண்டு பட்டுச் சுவை குன்றுவது போன்ற உணர்ச்சி தோன்றுமல்லவா? அதே உணர்ச்சி இங்கும் தோன்றி வரலாற்றை முறைப்படி கற்கத் தடை ஏற்படுத்தும். எனவே, வரலாற்று ஆசிரியன் அந்த இருண்ட இடைக்காலங்களைக் கூடுமான வரையில் ஆராய்ந்து வரலாற்றுத் தொடர்பு கெடாமல் எழுத முயல வேண்டும். ஒருவேளை அக்காலங்களுக்கு உரிய நிகழ்ச்சிகள் பற்றிய குறிப்பு ஒன்றும் கிடைக்கவில்லையாயினும், உள்ளதை வைத்துக் கொண்டு, வரலாற்றுத் தொடர்பு கெடாத வகையில்— பயில்வார்க்குச் சுவை கெடாத வகையில்—எழுத வேண்டும். அப்போது தான் அது உண்மையான வரலாறு ஆகும்.

வரலாறு எழுதும் ஆசிரியர்கள் நடுவு நிலையாளர்களாய் இருக்கவேண்டும். விருப்பு வெறுப்பு அற்று நேரிய நிலையில் இருந்து அவர்கள் வரலாற்றை எழுத வேண்டும். தமக்கு வேண்டிய அல்லது தம் கருத்துக்கு ஏற்ற பொருள்களைப்பற்றிச் சீர்தூக்கியும், அல்லாதவற்றைத் தாழ்த்தியும் எழுதப்பெறும் வரலாற்று நூல்கள் உயர்ந்தனவாகா. வரலாறே சென்ற கால நிகழ்ச்சிகளை என்றென்றும் உலகில் வாழ வைப்பது. ஆதலால், அவ்வரலாற்றை ஒழுங்கு படுத்தி எழுத வேண்டும். காலக் கணிப்பில் பல வரலாற்று ஆசிரியர்கள் மாறுபடுவதைக் காண்கின்றோம். தமக்கு வேண்டிய

வரை உயர்த்த வேண்டின் சிலர் காலத்தால் அவரை முன்னே வாழ்ந்தவராகக் காட்ட முயல்வர். வேறு சிலர் காலத்தால் மிகப் பிற்பட்டவராகக் காட்டுவதும் உண்டு. தமிழ் நாட்டு வரலாற்றிலே இக் காலவேற்று மையை அதிகமாகக் காண முடிகின்றது. எனினும், பலரது முடிந்த முடிவுகள் துணைக்கொண்டு தமிழ் நாட்டு வரலாற்றை நாம் ஆராய்வோமாயின், உண்மை விளங்காமல் போகாது.

சுதந்திரம் பெற்ற பின் இந்திய வரலாற்றைத் திருத்தி எழுத வேண்டும் என்ற உணர்வில் அரசியலார் உள்ளிட்ட பலர் முயல்கின்றனர். காரணம் என்ன ? அயலவர் ஆட்சிக் காலத்து அவர்கள் ஆட்சியை உயர்த்துவதற் காகவே பல உண்மைகளை மறைத்து வரலாற்றை எழுதி வைத்தார்கள். அந்தக் கொடுமைகள் போகவும் உண்மை வரலாறு என்றும் உலவவும் வரலாற்றை மாற்றி எழுத வேண்டும் என இந்திய அரசாங்கத்தாரும் பிறரும் விரும்புகின்றனர். தமிழ் நாட்டுப் பழைய வரலாற்றிலே இத்தகைய சிக்கல்கள் இல்லையாயினும், சிலர் தம் கருத்துக்கு ஏற்ப வரலாற்றை மாற்ற விரும்பு வதால், சிக்கல்கள் உண்டாகின்றன. நெடுங்காலத்துக்கு முன் வாழ்ந்த தொல்காப்பியரைக் கிறித்துவுக்குப் பின் கொண்டு வருவதும், நாம் விரும்பா உண்மைச் சித்திரங் களையும் வாழ்வின் போக்குகளையும் வரலாற்று நிகழ்ச்சி காட்டிக் கொடுக்கிறது என்ற காரணத்தால் அந்த வரலாற்றினையே இல்லை என்பதும் போன்று, பல வரலாற்று மாற்றுக் கருத்துக்களைப் பரப்பச் சிலர் முற்படுகின்றனர். இதுபோன்றே சங்க காலத்தை எட்டு ஒன்பதாம் நூற்றாண்டிற்குத் தள்ளுவதும், வள்ளுவரைப்

பின்னுக்கு இழுப்பதும் சிலர் செய்யும் வரலாற்றுத் தவறு களேயாகும் மேலும், ஒரு சிலர் தமக்கு வேண்டியவரை அனைவருக்கும் முன்னே வாழ்ந்தவர் என்று கொண்டு நிறுத்த முயல்வதும் வரலாற்றில் உண்டு. மணிவாச கரைத் தேவாரம் பாடிய மூவருக்கும் முற்பட்டவர் என்று கூறுபவரும் பிற்பட்டவர் என்பாரும் உள்ளனர். இது போன்ற பல கருத்துக்கள் வேறு சில நாட்டு வரலாறு களிலும் உள்ளன என்பர். வரலாற்றை ஆராயும் நல்லாசிரியர் தத்தம் கொள்கையைப் புகுத்தாமலும், மனம் போன வழி போகாமலும், உள்ள ஆதாரங்களை வைத்துக் கொண்டு, ஓர்ந்து, கண்ணோடாது தம் நூல் களை எழுதின், அப்போதுதான் உண்மை வரலாறு உலகுக்குப் புலனாகும். அதன்வழி உலகம் தன் வருங் காலத்தை உருவாக்கிக் கொள்ளும்.

### தென்னிந்திய வரலாறு எங்கே ?

இனி, தமிழ் நாட்டு வரலாற்றைப் பற்றிச் சிறிது காண்போம்; தமிழ்நாடு பண்டைக் காலத்தில் தனி நாடாய் இருந்த போதிலும், இன்று பரந்த பாரத நாட்டின் ஒரு சிறு உறுப்பு நாடாய் அமைந்துவிட்டது. இன்று பாரத நாட்டு வரலாற்றை எழுதுகின்ற அத்தனைப் பேராசிரியர்களும் தமிழ்நாட்டை அவ்வள வாகக் கவனிப்பதில்லை. எங்கோ ஒரு சிலர்தாம் தமிழ்நாட்டு வரலாறு பரந்த பாரத நாட்டு வரலாற்றில் முதல் இடம் பெறத்தக்க ஒன்று என்பதை உணர்ந் துள்ளனர். இந்திய நாட்டு ஆசிரியர்களில் சிலருங்கூட இந்திய வரலாறு என்றால் கங்கை சிந்து சமவெளியின் வரலாறு என்றே முடிவு கட்டி விடுகின்றனர். 'ஸ்மித்து'

என்ற பேராசிரியர் வடநாட்டிற்கும் தென்னாட்டிற்கும் உள்ள கொள்கைப் போராட்டத்தைச் சுட்டிக்காட்டி, அது மூவாயிரம் ஆண்டுகளாக நடைபெற்றுவரும் ஒன்று என்றும், வடநாடு தென்னாட்டை அடக்கி விட்டதாகக் கருதிய போதிலும், அப்போராட்டம் இன்னும் ஓய வில்லை என்றும் குறிக்கின்றார்.[1] அவரே வடநாட்டைக் காட்டிலும் தென்னாடு காலத்தால் முந்தியதென்றும் அதன் பாறைகளும் நில அமைப்பும் அவ்வுண்மையை நன்கு புலப்படுத்துகின்றனவென்றும் கூறுகின்றார்.[2] மேலும் இந்தியாவில் முதல் முதல் மனிதன் தோன்றி வாழ்ந்த இடம் அந்தத் தென்னாட்டு உயரிடமேயன்றி வடநாட்டுச் சமவெளி அன்று என்பதைத் தெள்ளத் தெளியக் காட்டுகின்றார்.[3]

இவ்வாறெல்லாம் கூறி, இந்திய நாட்டுப் பழங்கால வரலாற்றை அறியத்தக்க சாதனங்கள் பல தமிழ்நாட்டு மண்ணில் புதையுண்டுள்ளமையைக் காட்டுகின்றார் அவர். எனவே, வடநாட்டு வரலாற்றை ஒத்துத் தென் னிந்திய வரலாறும், சிறப்பாகத் தமிழ்நாட்டு வரலாறும் நன்கு எழுதப்படவேண்டும் என்பதை அவர் எடுத்துக் காட்டுகின்றார். ஆனால், இன்று வரை இந்திய வரலாற்று ஆசிரியர்கள் அந்த நெறியை மேற்கொள்ள வில்லை எனலாம்.

கொள்கை அளவில் தென்னிந்திய நாகரிகம் வட இந்திய நாகரிகத்துக்கு முற்பட்டது என்று ஒத்துக்கொள்

1. The conflict between the Dravidian ideas of the South and the Indo-Aryan ideas of the North, which has lasted for three thousand years more or less, still continues, although on the surface the victory of the north seems to be complete. (The Oxford History of India, by VASMITH. page 6)

2, 3, ibid, page 5.

ளும் நல்ல வரலாற்று ஆசிரியர்கள் கூட அத்தென்னிந்திய —தமிழக—வரலாற்றை நன்கு ஆராய்வதில்லை; அதன் பழமையையும் அது வளர்ந்த வரலாற்றையும் காண முனைவதில்லை. ஆயினும், தமிழ்நாட்டு வரலாற்று ஆசிரியர் சிலர் இந்நாட்டு வரலாற்றை ஒரு கால எல்லைக்கு உட்படுத்தி, முறைப்படி நன்கு வரையறை செய்து, தமிழகத்தின் வரலாற்று நூல்களை இப்போது ஆங்கிலத்திலும் தமிழிலும் எழுதி வருகின்றார்கள். சென்னை, அண்ணாமலைப் பல்கலைக் கழகங்கள் அத்துறையில் கருத்திருத்திப் பல நூல்களை வெளியிட்டு வருகின்றன. எனவே, இன்று அவற்றின் துணை கொண்டு தமிழ்நாட்டு நீண்ட வரலாற்றை ஒருவாறு தொகுத்து அறுதியிட முடியும்.

## தமிழக வரலாற்றின் தொன்மை :

தமிழ்நாடு காலத்தால் முந்தியதானமையின் அதன் வாழ்வின் நெடுங்காலம் வரலாற்று எல்லைக்கு அப்பாற் பட்டதாகவே இருக்கும். வரலாற்று எல்லைக்கு உட்பட்ட தமிழகத்தைப் பல இலக்கியங்களும் பிறவும் எடுத்துக் காட்டுகின்றன என்றாலும், அவ்வரலாற்றுக்கு முற்பட்ட தமிழகத்தைக் காணச் சிறந்த சாதனங்கள் இல்லை. ஒரு சில தனிப்பாடல்களும், கதைகளும், பிற குறிப்புக்களும் ஓரளவு துணை செய்கின்றன எனலாம். பிந்திய காலத்திலே கோயில் அமைப்புக்களும், கல்வெட்டுக்களும், செப்புப்பட்டயங்களும் தமிழ்நாட்டு வரலாற்றுக்குப் பெரிதும் துணை செய்கின்றன. இவற்றின் வழியே தமிழ்நாட்டு வரலாறு ஒருவாறு உருவாகி விட்டது உறுதி.

இவ்வரலாற்றுக் கண் கொண்டு பார்த்தால் இன்று தாழ்ந்துள்ளதென்று பேசப்பெறும் தமிழகம் ஒரு

காலத்தில் தலை நிமிர்ந்து நின்று. தனது அகன்ற எல்லையில் ஒரு மொழி வைத்து உலகாண்டது மட்டுமன்றி, பிற நாட்டாரோடு வாணிபத் தொடர்பினைக் கொண்டு வாழ்ந்ததென்பதும் இந்நாட்டில் மன்னரும் மக்களும் ஒன்றிக் கலந்து வேறுபாடற்று வாழ்ந்தார்கள் என்பதும், மக்கட் சமுதாயம் வாழும் நிலப்பிரிவால் வேறுபட்டதாயினும் உளப்பிரிவின்றி ஒன்றியே வாழ்ந்ததென்பதும், மக்கள் நாகரிகம் வாய்ந்த நல்ல நகரங்களிலே நலம் பெற வாழ்ந்து, பிற நாட்டவரெல்லாம் வந்து தங்கி வாழ்ந்து வளம் பெருக்கிச் செல்ல உதவி நின்றார்கள் என்பதும், உழவும் தொழிலும் செய்து சோம்பலின்றி வாழ்ந்து வந்தார்களென்பதும், 'ஒன்றே குலமும்; ஒருவனே தேவனும்,'' என்ற சமய உணர்வில் மாறுபாடற்ற செம்மை வாழ்வில் திளைத்தார்கள் என்பதும், சமுதாயத்தை இணைத்துச் செல்வதாகிய நாட்டு வாழ்க்கையே அவர்கள் வாழ்க்கை என்பதும், 'எல்லாரும் இன்புற்றிருக்க நினைக்கும்' நல்ல நெறியே அவர் தம் வாழ்க்கை நெறி என்பதும் நன்கு விளங்கும். வரலாற்றுக் கெட்டாத நெடுங்காலந்தொட்டு இன்று வரை அவர்கள் வாழ்ந்த வாழ்க்கையை விளக்குவதே தமிழ் நாட்டு உண்மை வரலாற்றை விளங்குவது ஆகும்.

# II. வரலாற்று மூலங்கள்

**வரலாற்றுக்கு முன் :**

ஒரு நாட்டின் வரலாற்றை அறுதியிட்டுக் கூறுவது நினைக்கும் அளவு எளியதன்று. மிகு பழங்காலந் தொட்டு நாட்டில் வாழ்ந்த மக்களினம், பிற உயிரினம் ஆகிய வற்றின் வரலாறு எளிமையில் உணரத்தக்கதன்று. இன்றைய மனிதன் என்னதான் அறிவுடையவன் என்று கூறிக்கொண்டாலும், அவன் அறிவு ஒரு கால எல்லை யிலேதான் அடங்கி விடுகிறது. தாவித் தாவிப் பறந்து என்னதான் ஆராய்ச்சி செய்தாலும், அவ்வாறு செய்யும் அவன் அறிவின் எல்லையே உலகத்தின் தோற்றமென்றோ முடிவு என்றோ கூற இயலாது. இந்த அளவிட்ட அறிவின் எல்லை கொண்டு மனிதன் தனக்கு முன் உலகம் இருந்த வரலாற்றை ஆராய முற்படுகிறான். அவ்வாரய்ச்சிக் கண்களுக்கு என்னதான் முயன்றாலும் நெடுந்தொலைவுப் பொருள்கள் புலப்படுவதில்லை. அந்தப் புலப்படாத பெருங்கால'எல்லையில் அமைந்த வரலாற்றை எல்லாம் தொகுக்க நினைத்தாலும் முடிவதில்லை ஏதோ இங் கொன்றும அங்கொன்றுமாகக் குறிப்புக்கள் மட்டும் கிடைக்கின்றன. எனவே, அறிவுக்கெட்டாத—சான்றுகளால் அறுதியிட முடியாத—அந்த நெடுங் காலத்தை 'வரலாற்றுக்கு முற்பட்ட காலம்'[1] என்றே முடிவு கட்டி விட்டார்கள் அறிஞர்கள். நம் தமிழ் நாட்டில் அந்தக் காலம் மூவாயிரம் ஆண்டுகளுக்கு முன் இருந்த காலமாகும். சிலர் இரண்டாயிரமாண்டு

---

1. Pre-Historic Period

களுக்கு முற்பட்ட காலம் என்பர். எது எப்படியாயினும் தமிழ்நாட்டு வரலாற்றில் நன்கு அறிந்த கால எல்லையினும் அறியாத கால எல்லையே மிக அதிகம் என்பது தேற்றம். தமிழ்நாட்டுக்கு மட்டுமன்றி, வேறு எந்த நாட்டுக்கும் இந்த உண்மை பொருந்துவதாகும். உலக வரலாற்று நிலையும் அப்படியே. எனவே, வரலாற்றுக்கு முற்பட்ட, ஒன்றும் அறிய முடியாத காலமே நீண்ட தொரு பெருங்காலமாகும்.

### கன்ன பரம்பரைக் கதைகள் :

குறுகிய கால எல்லையில் உள்ள வரலாற்றை நமக்கு விளக்குவன யாவை? ஒரு நாட்டு வரலாற்றை நமக்கு விளக்கப் பல பொருள்கள் பயன்படுகின்றன. சிறப்பாகத் தமிழ் நாட்டு வரலாற்றுக்கும் எத்தனையோ வரலாற்று மூலங்கள் உள்ளன. அவற்றை ஒன்றன் பின் ஒன்றாகக் காண்போம். வரலாறு என்பது திட்டமாக வரையறுக்கப்பட்ட எல்லைக் கோட்டிக்குள் அமைந்ததாகி, உண்மைகளை விளக்குவது என்பதைக் கண்டோம். ஆயினும், வரலாற்றுக்கு முற்பட்ட சில உண்மைகளும் விளங்குவனவே கன்ன பரம்பரைக் கதைகளும், இராமாயணம் பாரதம் போன்ற கதைகளும். இராமாயணம் போன்ற காவியங்கள் வரலாற்று மூலங்கள் ஆகமாட்டா என்பதை ஸ்மித்து என்பார் தமது நூலில் நன்கு எடுத்துக் காட்டியுள்ளார்.[1] எனவே, அவற்றை வேண்டுமானால் வரலாற்றுக்கு முற்பட்ட தமிழகத்தைக் காட்ட உதவும் கன்ன பரம்பரைக் கதைகளாகக் கொள்ளலாம். இவற்றைத் தவிர, தமிழ் நாட்டில் மூலை முடுக்குக்களில் வழங்கும் சில கதைகளும், திருவிளை

1. The Oxford History of India, By V. A. SMITH, pp. 30, 31.

யாடற்புராணம் போன்ற புராண இலக்கியங்களில் வரும் சிறுசிறு கதைகளும் அந்தத் துறையில் வைத்து எண்ணப் படுபவையே, நாட்டில் உள்ளடங்கிய பல கிராமங்களில் மிகு பழங்காலத்தனவாக வைத்துப் பேசப்படும் கதை களும் அந்த வரலாற்றுக்கு முற்பட்ட காலத்தைக் காட்டு வனவேயாம். இன்னும் செங்கோன் தரைச் செலவு போன்ற நூல்களும் வேறு சில குறிப்புக்களும் அவற்றோடு சேர்த்து எண்ணத்தக்கனவே.

**எழுத்தின் அமைப்பும் மொழியின் வளர்ச்சியும் :**

அடுத்து எழுத்தின் உருவமும் மொழியின் அமைப்பும் கொண்டு வரலாற்றைக் கணிப்பதும் உண்டு, உலக மக்கள் இனத்தையே பல பிரிவுகளாகப் பிரித்து வைக்க வழி காட்டுவது மொழியேயாம் இந்திய நாட்டில் திராவிட மொழிக் குடும்பமும், ஆரிய மொழிக் குடும் பமும் வாழ்கின்றன. அவை தோன்றிய நாள் கொண் டும், ஒன்றை ஒன்று பற்றிய நாள் கொண்டும், அவற்றின் எழுத்துக்கள் அமைப்பு முறை கொண்டும், மாறி வரும் நிலைகொண்டுங்கூட நாட்டு வரலாற்றைக் காண்பது உண்டன்றோ. பிராகிருதம், தமிழ் வடமொழி இவற்றின் வேறுபாடுகளையும், ஒன்றோடு ஒன்று கலந்த நிலையின் மாறுபாட்டினையும் கொண்டு இந்நாட்டு வரலாற்றை மேனாட்டு வரலாற்று ஆசிரியர் ஆராய்ந்துள்ளனர் என்பதை அவர்தம் நூல்கள் எடுத்துக் காட்டுகின்றன. உலகில் வழங்கும் மொழிகளையே பல்வேறு குடும்ப வகைகளாகப் பிரித்து, ஒவ்வொரு மொழிக் குடும்பமும் வளர்ந்த வரலாற்றையும், அவற்றைப் பேசும் மக்கள் இடம் விட்டு இடம் பெயர்ந்து வாழ்ந்த வரலாற்றையும் விளக்கும் நூல்களும் உள்ளனவன்றோ! தமிழ் நாட்டுக் கல்வெட்டுக்களையும், அவற்றில் பொறிக்கப்

பட்டுள்ள எழுத்துக்களையும் கொண்டு, இன்னின்னார் காலத்து எழுந்த கல்வெட்டுக்கள் இவை இவை என்று காட்டி, காலத்தையும் வரலாற்றையும் வரையறுக்கின்றனர் ஆசிரியர்கள். இந்தோ-ஐரோப்பிய மொழிக் குடும்பமும், இந்தோ-ஆரிய மொழிக் குடும்பமும் தம்முள் கொண்டுள்ள ஒற்றுமை வேற்றுமைகளின் மூலம் இரண்டு பெருங் கண்டங்களின் வரலாறுகளே தீட்டப்படுகின்றன வன்றோ! மொழி ஆராய்ச்சி மிக்கு வளர்ந்துள்ள இந்நாளில், அம்மொழி ஆராய்ச்சியே மக்கள் வரலாற்று ஆராய்ச்சியாக அமைவதை அறியாதார் யார்? எகிப்து எழுத்துக்களும், சீன எழுத்துக்களும் பிறவும் ஆராய்ச்சியாளர்களை எவ்வளவு கைதூக்கி விடுகின்றன!

தமிழ் நாட்டிலேயும் மொழி காட்டும் வரலாறு மறக்க முடியாத ஒன்றல்லவா! குமரியோடு வட இமயத்து ஒரு மொழி வைத்து உலகாண்ட வரலாறும் வேங்கடம் குமரி இடைப்பட்ட வரலாறும், இன்றுள்ள வரலாறும் நம் நாட்டை விளக்கும் சான்றுகளன்றோ! இனி, இத்தமிழ் எழுத்திலேயே 'வட்டெழுத்து'ப் போன்றவை வாழ்ந்த காலமும் மாறிய காலமும் வரலாற்று எல்லைக்கு உட்பட்டனவே. தமிழ்மொழி வழங்கிய மேலைப் பகுதியில் சேய்மொழியென வேற்றுமொழி கால் கொண்டு ஓங்கி நின்ற நிலையும் மொழி வழி வரலாற்றைக் காட்டுவதுதானே? மிகு பழங்காலத்தில் மனித இனம் பிரிந்த அந்த வரலாற்றுக்கு முற்பட்ட நெடுங்காலத்தில்-இந்த மொழிகள் எவ்வெவ்வாறு பிரிந்த மக்களைக் காட்டிக் கொடுத்தும், அவர்கள் வாழ்ந்த வாழ்க்கை முதலியவற்றை எடுத்து விளக்கியும் நின்றன என்பதை அறிய முடியுமானால், நாம் இன்னும் அம்மொழிகளைப் போற்றுவோமல்லவா? இவ்வரலாறே மொழி அடிப்படை

யில் எழுந்ததுதானே? கடைசியாக இந்த மொழியின் அடிப்படையில் பரந்த பாரத நாட்டைப் பிரித்த இன்றை அரசாங்கச் செயலும் இந்திய நாட்டு அரசியல் வரலாற்றில் நிலைத்த இடம் பெற்ற ஒன்றுதானே? அவ்வப்போது மொழிகள் மோதுண்டதால் உண்டாகும் பிணக்கும் போரும் உலகில் காணும் நிகழ்ச்சிகளாயினும், இம்மொழிகள்—மனிதனை மனிதனாக்கிய இம்மொழிகள்—அம்மனிதனது வரலாற்றில் அழியாத நிலைத்த இடம் பெற்று அவனது சென்ற காலச் சிறப்புக்களையெல்லாம் எடுத்து விளக்கிக் கொண்டிருக்கின்றன என்பதை மறுப்பார் யார்?

**இலக்கியங்கள்**

இனி, வரலாற்றுக்கு இலக்கியங்கள் எவ்வாறு துணையாகின்றன என்பதைக் காணலாம். உலக வரலாற்றுக்கு உலகில் உலவும் பல்வேறு மொழிகளில் தோன்றிய இலக்கியங்கள் ஓரளவு துணை புரிகின்றன. எனினும், நம் தமிழக வரலாற்றில் இலக்கியங்களே பேரளவு உதவி புரிகின்றன எனலாம். பழங்கால வரலாறு என்று பள்ளியில் பயிலும் மாணவர் உரோம, கிரேக்க நாட்டு வரலாற்றையும் எகிப்து, மெசபட்டோமியா வரலாற்றையுமே கற்பதோடு அமைகின்றனர். ஆனால், அவற்றோடு பல வகையில் ஒத்துள்ள, காலத்தால் ஓரளவு முந்தித் தோன்றியது எனக் கருதும் பழந்தமிழ் நாட்டு வரலாற்றை அவர்கள் காண்பதில்லை. அந்தப் பழந் தமிழ்நாட்டு வரலாற்றை நமக்கு நன்கு விளக்கிக் காட்டுவன தமிழ் இலக்கியங்களேயாம். தொல்காப்பியர் காலம் தொட்டு, ஏன்—அதற்கு முன்புங்கூட—தமிழில் சிறந்த இலக்கியங்கள் இருந்தன. ஆனால் அவற்றுள் பெரும்பாலன கிடைக்க

வில்லை எனலாம். தொல்காப்பிய உரைமேற்கோளாக வரும் பல பாடல்களின் நூற்பெயர்களும் அறியக்கூட வில்லை. 'இலக்கியங் கண்டு அதற்கு இலக்கணம் விளம்பிய' அகத்தியமும் தொல்காப்பியமும் தோன்று வதன் முன்னமே பல இலக்கிய நூல்கள் வளர்ந்திருக்க வேண்டும் என்பது உறுதி. எனினும், கடலூழிகள் காரணமாகவோ, வேறு வகையிலோ அவையெல்லாம் நமக்குக் கிடைக்கப் பெறவில்லை. இப்போது நாம் பெற்றுள்ள இலக்கியங்களுள் பெரும்பாலன கடைச் சங்க கால இலக்கியங்களே. இவ்விலக்கியங்களைக் கொண்ட ஆயிரத்து எண்ணூறு ஆண்டுகளுக்கு முற்பட்ட தமிழக வரலாற்றை வரைகின்றார்கள் ஆசிரியர்கள். தமிழ் நாட்டில் வாழ்ந்த முடியுடை மூவேந்தரைப் பற்றியும், சிற்றரசர், குறுநில மன்னர், வீரர் ஆகியோரைப் பற்றி யும் நாட்டு மக்களைப் பற்றியும், அவர்தம் வாழ்க்கை முறை, வளம், வாணிபம், தொழில் முதலியன பற்றியும் அந்த இலக்கியங்கள் பலபடப் பாராட்டிப் பேசுகின்றன. கடைச்சங்க இலக்கியம் எனப்படும் பத்துப்பாட்டும், எட்டுத் தொகையும் நமக்குக் கிடைக்கவில்லையாயின், இன்று 'தமிழன் உயர்ந்தவன், பண்பட்டவன்' என்றும், 'பழங்காலத்தவன்' என்றும் பேசும் பேச்செல்லாம் தோன்றி இருக்க மாட்டா.

சங்க கால இலக்கியங்கள் மட்டுமன்றிப் பிற்கால இலக்கியங்கள் பலவும் தமிழ் நாட்டு வரலாற்றைப் பெரிதும் காட்டுகின்றன எனலாம். பிற்கால இலக்கியங் கள் பெரும்பாலும் சமயம் பற்றி எழுந்தனவாயினும் அவற்றிலும் வரலாற்றுக் குறிப்புக்கள் பல உள்ளன சிறப் பாகப் பிற்காலச் சோழர் காலத்தே எழுந்த பலப்பல

இலக்கியங்கள் அவ்வக்காலத்துத் தமிழ் நாட்டையும் அதில் வாழ்ந்த புலவர், புரவலர்களையும், மக்கள் வாழ்க்கை முறைகளையும் காட்டுகின்றன எனலாம். பிற்காலத்தில தோன்றிய சில இலக்கியங்கள் வெறுங்கற்பனைகளிலேயே மிதக்கின்றன என்பது உண்மையாயினும், பெரும்பான்மைத் தமிழ் இலக்கியங்கள் தமிழக வரலாற்றுக்கு உதவி செய்கின்றன என்பதும் உண்மை. அவற்றின் நிலைகளையெல்லாம் மேலே ஆங்காங்கே காணலாம்.

## கல்வெட்டுக்கள்

இலக்கியங்களை அடுத்துத் தமிழக வரலாற்றுக்குப் பெருந்துணை புரிவன கல்வெட்டுக்களேயாகும். பிற்காலப் பல்லவர் காலத்திலும் பிற்காலச் சோழர் பாண்டியர் காலங்களிலும் தமிழ்நாட்டில் எத்தனையோ ஆயிரக் கணக்கான கல்வெட்டுக்கள் செதுக்கப் பெற்றன. கற்கோயில்களைக் கட்டத்தொடங்கிய அந்த ஏழாம் நூற்றாண்டின் இடைக்காலத்திலிருந்து பதினான்கு பதினைந்தாம் நூற்றாண்டுகள் வரை, தமிழ் நாட்டிலும் —ஏன்—தென்னிந்தியா முழுவதிலுமே பலப்பல கல்வெட்டுக்கள் உருவாயின. இந்திய அரசாங்கத்தார் இக்கல்வெட்டுக்களைக் கண்டெடுத்து ஆராய்ந்து, அச்சிட்டு வெளியிடுவதற்காகவே ஒரு பகுதியை ஏற்படுத்தியிருந்தனர். பத்தாண்டுகளுக்கு முன் வரை அவ்வழியில் அதிகம் கருத்திருத்தி அத்துறையினர் பல கல்வெட்டுக்களை வெளிக்கொணர்ந்தனர். அவற்றால் இடைக்காலத் தமிழக வரலாறு எத்தனையோ வகையில் புத்தம் புதிய நல்ல ஒளியோடு உலகுக்குத் தெரியலாயிற்று. ஆயினும் இப்போது அப்பணி தொடர்ந்து செம்மையாக நடைபெறவில்லை எனலாம். அத்துறை சீராக்கப்பட்டு

ஒழுங்காகக் கல்வெட்டுக்களை ஆராய முற்படின், தமிழ் நாட்டு வரலாறு இன்னும் நன்கு விளக்கமுறும். தமிழ் நாட்டு அரசாங்கத்தார் அத்துறையில் ஆவன செய்ய வேண்டும்.

கல்வெட்டு என்பது என்ன? கல்லிலே வெட்டப் படுவதே கல்வெட்டு. இடைக்காலத்தில் வானோங்கிய கோபுரங்களைக் கொண்ட பெருங்கோயில்களைக் கட்டினார்கள் தமிழர்கள்; கோயில்களை நாட்டின் செல்வமாகப் போற்றினார்கள் இந்திய நாட்டிலேயே, தமிழ் நாட்டைப் போன்று பெருங்கோயில்களைக் கொண்ட பகுதிகளைக் காண இயலுமா? ஒரு குன்றும் காணக் கிடைக்காத தஞ்சை நாட்டில் மலையென மருளும் உயர்ந்த கோபுரங்கள் கொண்ட பல பெருங்கோயில்களை இடைக்காலத் தமிழர்கள் கட்டி 'வைத்தார்கள். அக் கோயில்கள் நாட்டு வரலாற்றையும், பண்பாட்டையும் கலையையும், பிற நல்ல செல்வங்களையும் வளர்த்தன எனலாம் அப்பெருங்கோயில்களின் மதிற்சுவர்களிலே தான் பல கல்வெட்டுக்கள் உருவாயின. சில குகைகளிலும் குன்றுகளிலும் உள்ளனவாயினும், பல கோயில் மதிற்சுவர்க் கல்வெட்டுக்களே. இக்காலத்தில் கோயில் களைப் பழுது பார்க்க வரும் 'புண்ணியவான்கள்' இக் கல்வெட்டுக்களின் அருமை தெரியாமல் இவற்றை அப்புறப்படுத்தி உயர்ந்த சலவைக் கற்களைப் புதைத்து விடுகின்றார்கள் இந்திய அரசாங்கத்தார் அத்தகைய அப்புறப்படுத்தும் நிலை நேராதவாறு ஒரு வகையில் பார்த்துக்கொள்ளுகின்றனர் என்றாலும், முழுதும் தடுத்து நிறுத்தப்படவில்லை என்பர் சிலர்.

இக்கல்வெட்டுக்கள் எப்படி உண்டாயின? ஏன் உண்டாயின? இவற்றில் எழுதியிருப்பன யாவை?

அவை எவ்வாறு வரலாற்றுக்கு உதவுகின்றன? கல்வெட்டுக்களையெல்லாம் அரசர்களே எழுதினார்கள் என்று முடிவு சொல்ல முடியாது. சாதாரண மனிதரது கொடையைக் காட்டும் கல்வெட்டுக்களே பல. ஓர் ஊரில் ஒருவன் கோயிலுக்கு விளக்கெரிப்பதற்காக ஒரு நிலத்தை மானியமாக விட நினைத்தால், அதை அக்கோயிலில் கல்வெட்டிலேயே பொறிப்பது வழக்கம். அப்படிப் பொறிக்கும் போது எந்த ஆண்டை அவன் குறிக்க முடியும்? இப்போது நாம் ஆவணங்களைப் பதியும் போது ஆங்கில ஆண்டைக் குறிக்கின்றோம். ஆனால் அன்றைய தமிழன் அவ்வாறு செய்யவில்லை. அக்காலத்தில் நாடாண்ட மன்னவன் ஆட்சி ஏற்றுக் கழிந்த ஆண்டுகளைக் கணக்கிட்டு, இன்ன மன்னனுடைய இத்தனையாவது ஆட்சியாண்டில் இன்னார் செய்த 'தானம்' என்று குறிக்கின்றான். அப்படித் தன் அரசனைக் குறிக்கும் போது, அவ்வரசனது வீரச் செயல்கள், மாற்றார் நாட்டின்மேல் படையெடுப்பு, வெற்றி விழா, வேறு நல்ல சிறப்பியல்புகள், பண்பாடுகள் அனைத்தையும் முன் குறிப்பான். அவ்வாறு குறித்து, இத்துணைச் சிறந்த இம்மன்னனது இத்தனையாவது ஆட்சியாண்டு என்று தன் கல்வெட்டுக்குக் கால எல்லை கட்டுவான். அந்தக் கால எல்லையே தமிழ் நாட்டு வரலாற்றுக்குப் பெரிதும் பயன்பட்டது. ஒவ்வோர் அரசர் தம் திருவும் செயலும், அவற்றின் வழி நாட்டு மாறுதல்களும், மக்கள் வாழ்வும் நன்கு புலப்படுகின்றன. ஆதலால், அக்கல்வெட்டுக்கள் அக்காலத் தமிழக வரலாற்றை நன்கு காட்டுகின்றன எனலாம். ஏறக்குறைய ஏழெட்டு நூற்றாண்டுகளின் தமிழக வரலாறு இச்கல்வெட்டுக்களினிடையிலே தான் அமைந்து கிடக்கின்றது.

சிறப்பாக இடைக்காலத் தமிழகத்தின் வரலாற்றுக்கு இக்கல்வெட்டுக்களே சிறந்த காரணமாக அமைகின்றன எனலாம். அவற்றின் விரிவையெல்லாம் அவ்வக்கால வரலாற்றினிடையே வைத்துக் காணலாம்.

**நாணயங்களும் புதைபொருள்களும் :**

கல்வெட்டுக்களைப் போன்று அத்துணைப் பேரளவில் உதவி செய்யாவிட்டாலும், நாணயங்களும் புதை பொருள்களும் தமிழ் நாட்டு வரலாற்றுக்குப் பெரிதும் உதவுகின்றன எனலாம். சிறப்பாகப் பண்டைத் தமிழ் நாட்டுடன் பிற நாட்டார் கொண்டிருந்த தொடர்புகளைக் காட்ட அவை பெரிதும் பயன்படுகின்றன எனலாம். தமிழ் நாட்டு மண்ணில் புதைந்து கிடந்து, பின் கண்டெடுக்கப்பட்ட நாணயங்களில் சில உரோம, கிரேக்க நாட்டு நாணயங்களாய் இருக்கின்றமையின், அந்தக் காலத்தில் தமிழகம் மேலை நாடுகளோடு எத்துணைத் தொடர்புடையதாய் இருந்ததென்பது நன்கு தெரிகின்றது. நாணயங்களில் பொறிக்கப்பட்ட முத்திரைகள் உருவங்கள், ஆகியவற்றைக் கொண்டும், பிற எழுத்துக்கள் முதலியவற்றைக் கொண்டும், அவற்றின் காலத்தையும் அக்காலத்தின் நாட்டு நிலையையும் அறிந்து கொள்ளலாமன்றோ? சிறப்பாக வெளிநாட்டு வாணிபத் தொடர்பும் அரசியல் தொடர்பும் அறிந்துகொள்ள அவை பெரிதும் பயன்படுகின்றன. மேலும், உலோகங்களை மக்கள் பயன்படுத்திக்கொள்ளக் கற்றுக்கொண்டதோடு, அந்த நாளில் அவற்றைச் செல்வமாக்கவும் நாணயங்களாக்கவும் கற்றிருந்தார்கள் என்பதை அறியும் போது நம்மை அறியாமலே வரலாற்று நிலையில் நாம் நெடுந் தூரம் சென்றுவிடுகின்றோம்.

நாணயங்களேயன்றி, வேறு சில புதை பொருள்களும் வரலாற்றுக்கு உதவுகின்றன. அவற்றுள் சிறந்தன புதையுண்ட பெருநகரங்களாகக் கண்டெடுக்கப்பட்ட சிந்து வெளியிலுள்ள மொகஞ்சதாரோ, ஆரப்பா போன்றவைகளேயாம். இயற்கையன்னையின் கால வேகத்தில் எத்துணையோ நில மாறுதல்கள் நடைபெறுகின்றன; இடம் பெயர்கின்றன; இல்லையாய் அழிகின்றன; புதியனவாகவும் தோன்றுகின்றன. என்றோ அழிந்த பெருங்காடுகளின் மரங்களே இன்று நிலக்கரியாய் உருப்பெற்றுள்ளன என்கின்றனர். வரலாற்று ஆசிரியர் தாம் கண்ட ஆழ்ந்த பொருள்களைத் தோண்டி எடுத்துத் தமக்கெனப் பயன் படுத்த விழையார்; ஆனால் அவற்றை என்றென்றும் அழியாமல் பாதுகாத்து, வரலாற்றை எக்காலத்தும் நிலை நாட்ட முயல்வர். வரலாற்றுக்கு முற்பட்ட தமிழகத்தைக் காட்ட அந்தச் சிந்து வெளி நாகரிகம் எத்துணை உதவி செய்ததென்பதனை உலகம் நன்கு அறியும். அங்குள்ள நாகரிகம் ஆரியருக்கு முற்பட்ட நாகரிகம் எனவும், அது தென்னாட்டுடன் தொடர்பு கொண்ட திராவிட நாகரிகத்தின் கூறுபாடே எனவும் வரலாற்று அறிஞர் தெள்ளத் தெளியக் காட்டுகின்றனர் அந்நகரங்கள் தமிழகத்தின் பெருமையை ஓரளவு உயர்த்திவிட்டன என்பது மிகையாகாது. இது போன்றே கடலால் அழிந்த காவிரிப்பூம் பட்டினமும் பிறவும் ஒரு காலத்தில் அகழ்ந்தெடுக்கப் படின் தமிழ் நாட்டு வரலாறு இன்னும் நன்கு விளக்கமுறும் என்பது உறுதி.

இவ்வாறாகிய பெருநகரங்களேயன்றி, வேறு சில புதையுண்ட பொருள்களும் வரலாற்றுக்குத் துணை செய்கின்றன. இறந்த மக்களைப் புதைத்து வைக்கும்

தாழிகளைக் கொண்டே பழங்காலத் தமிழ்நாட்டு, எகிப்திய நாட்டு வரலாறுகள் கணிக்கப் பெறுகின்றன. தமிழ் நாட்டில் ஆதிச்ச நல்லூரில் கண்டெடுக்கப்பட்ட புதை பொருள் போன்றவைகளே மேலை நாட்டு வரலாற்று ஆசிரியர்களாகிய ஸ்மித்து போன்றார் மனத்தையும் கவர்ந்துள்ளமை உலகறிந்த ஒன்று இத்தாழிகளின் அமைப்பும் இவற்றில் தீட்டப்பட்ட கலை நலம் கனிந்த வண்ண ஓவியங்களி்ன் சிறப்பும் ஆயிரமாயிரம் ஆண்டுகளாக வரலாற்றை உலகுக்கு உணர்த்திக் கொண்டே இருக்கின்றன அன்றோ!

**கட்டடங்களும் கலைகளும் :**

நிலத்தை அகழ்ந்து கண்டெடுக்கப்பட்ட மேற்கண்ட புதைபொருள்களேயன்றி, நிலத்தின் மேல் நிமிர்ந்து நிற்கும் கட்டடங்களும் அவற்றின் கலைகளுங்கூட வரலாற்றுக்குத் துணை புரிகின்றன. மாமல்லபுரக் கோயில்களும் அஜந்தாக் குகைகளும் சிற்றன்ன வாயிற் சித்திரங்களும் வானோங்கிய குதுபுமினார், அசோக ஸ்தூபிகள் போன்றவையும் வரலாற்றுப் பாதையின் மைல்கற்கள் தாமே? அவற்றின் மூலம் எத்தனை எத்தனை உண்மைகளை உணர்ந்து கொள்ளுகின்றோம்! சிற்பங்களையும் கலை அமைப்புக்களையும் கண்டு, அவற்றைத் தோற்றுவிக்கக் காரணராயிருந்த அரசர்களைப் பற்றியும், தோற்றுவித்த கலைஞர்களைப் பற்றியும், அவற்றின் மூலம் அக்கால மக்களது கலை உணர்வு, கலை ஆர்வம் முதலியன பற்றியும் அறிந்து கொள்ளுகிறோம் சித்திரங்களுக்கு இட்டுள்ள ஆடை அணி முதலியவற்றாலே அக்கால மக்கள் வழக்கிலிருந்த ஆடை அணிகளைப்பற்றி அறிந்து கொள்ள முடிகிற தன்றோ! இன்னும் அவற்றின் மூலம் அக்காலச் சமய நெறி, வாழ்ந்த வகை முதலியனவும் நமக்கு நன்கு

புலனாகின்றன. தமிழ்நாட்டுச் சமயம் வளர்ந்த வரலாற்றை ஆங்காங்குள்ள சிலைகளும், ஊர் தொறும் உள்ள கோயில்களும் நமக்கு உணர்த்திக் கொண்டேயிருப்பதை அறியாதார் யார்! ஒவ்வோர் அரச பரம்பரையின் உணர்வையும், ஆழ்ந்த கலை ஆர்வத்தையும், அவர் தம் கலையையும் கட்டடங்களின் நிலையையும் கொண்டு அறிய முடிகின்றதன்றோ! எனவே, இவை வரலாற்றினுக்கு உறுதுணையாக அமைவதில் வியப்பில்லையன்றோ!

## வெளிநாட்டார் எழுதி வைத்த குறிப்புகள்

வரலாற்றுக்கு உள்நாட்டுப் பொருள்களோடு, வெளிநாட்டு நாணயங்களும் பிறவும் உதவுகின்றன என்பதை மேலே கண்டோம். அவற்றிலும் மேலாக, வெளிநாட்டார் நம் நாட்டினைப் பற்றி எழுதி வைத்த குறிப்புக்கள் தமிழக வரலாற்றுக்குப் பெரிதும் துணையாகின்றன. இது போன்ற வரலாற்றுக் குறிப்புக்கள் எல்லா நாடுகளுக்கும் உள்ளன என்று கூற இயலாது. நம் நாடு காலத்தால் மிக்க பழமை எய்திய காரணத்தால், அந்நாள் தொட்டு இந்நாள் வரை வாணியத்துறை, சமயத்துறை, அரசியல் துறை, கலைத்துறை ஆகியவற்றின் வகைகளில் பிற நாடுகளிலிருந்து இந்நாட்டுக்கு வந்து சென்ற பலர் தத்தம் குறிப்புக்களில் இந்நாட்டைப் பற்றியும் நாட்டு மக்களைப் பற்றியும் அவர் தம் வாழ்க்கை வரலாறு பற்றியும் குறித்துச் சென்றுள்ளார்கள். சென்னைப் பல்கலைக் கழக வரலாற்றுப் பகுதித் தலைவராயிருந்த திரு நீலகண்ட சாஸ்திரியார் அவர்கள் தம் குறிப்புக்களையெல்லாம் தொகுத்து, 'தென்னாடு பற்றி வெளிநாட்டவர்'[1] என்னும் நூலைப் பல்கலைக் கழக வெளியீடாக வெளியிட்டுள்ளார்.

---

1. Foreign Notices of South India

மேநாட்டு மெகஸ்தனிஸ் தொடங்கிச் சீன யாத்திரிகன் மாயூன் வரையிலே[1] வந்து சென்ற பழங்கால வெளி நாட்டு மக்களின் குறிப்புக்கள் அனைத்தும் அதில் இடம் பெறுகின்றன. மேலை நாடுகளாகிய கிரேக்க உரோம நாட்டு வணிகர்கள் தொடங்கி, கீழை நாடுகளாகிய சீனம் முதலியவற்றிலிருந்து வந்த சமயத் தலைவர்கள் வரை வரிசைப்படுத்தி அவரவர் தென்னாட்டைப்பற்றிக் கூறிய வற்றைத் தொகுத்துள்ளார் அக்குறிப்புக்கள் அனைத்தும் தமிழ் நாட்டு வரலாற்றை அறியப் பெரிதும் பயன்படுகின் றன. தற்பெருமைக்கு நாணித் தன்னைப் பற்றி உயர்த்திக் கூறிக்கொள்ளாத பண்பட்ட வாழ்வு வாழ்ந்த தமிழன் பெருமைகள் பலவற்றை இவ்வெளி நாட்டார் குறிப்புக் கள் வெளியிடுகின்றன. உயர்ந்த பல கட்டடங்கள், அவற்றை அமைத்த மன்னர்கள், அவர்தம் அறநெறி பற்றிய ஆணைகள், அவர் காலத்தில் இருந்த சமய நெறி கள், பழக்க வழக்கங்கள் ஆகியவற்றையெல்லாம் தெள்ளத்தெளிய விளக்கும் பல குறிப்புக்கள் அவற்றில் காணக் கிடைக்கின்றன. தமிழ் நாட்டைப் பற்றிப் பிறர் கூறும் குறிப்புக்களே வரலாற்றுக்கு உரமுடையன வாகலின் இவை தமிழ் நாட்டு வரலாற்றுக்கு உறு துணையாக அமைகின்றன.

**நில அமைப்பு முதலியன :**

மேலே கண்ட இத்துணை மூலங்களேயன்றி வேறு பலவும் வரலாற்றுக்குத் துணை புரிகின்றன. நில அமைப் பும், தோற்ற வளர்ச்சியும், அப்பரப்பில் உயிர் வாழும மக்களும் வாழ்ந்த வரலாறும் வரலாற்றுக்கு உதவுவனவே. இந்நில நூல் மாத்திரமேயன்றி, அவ்வக்காலத்து வழங்கிய போர்க்கருவிகளும் பிற பொருள்களும் குறிப்பேடுகளும் வரலாற்றுக்கு உதவுகின்றன. தமிழ் நாட்டு வரலாற்றுக்கு உதவும் இத்துணைப் பொருள்களின் உதவியினால் இந்நாட்டு வரலாற்றை ஒருவாறு அறுதியிடக் கூடும் என்ற துணிவில் மேலே செல்லலாம்.

1. From Megasthenes to Mahuan

# III. நிலநூலும் வரலாறும்

**பிற்றோடு தொடர்பு :**

வரலாறு என்பது ஒரு நாட்டைப் பற்றியோ, அன்றித் தனி மனிதனைப் பற்றியோ, அன்றி ஒரு பொருள் பற்றியோ எழுதப்படுவதாகும். அந்த வரலாறு எழுவதற்குக் காரணராக யார் இருந்தபோதிலும், அவரது வாழிடமும் வரலாறு நிகழிடமும் முக்கிய இடம் பெற்றனவேயாகும். பண்டைத் தமிழ்ப் புலவர் ஒருவர் 'எவ்வழி நல்லவர் ஆடவர், அவ்வழி நல்லை வாழிய நிலனே' என வாழ்த்திச் சென்றார். எனவே, வரலாறும் வாழும் நிலப் பரப்பும் பிணைந்தவையே. ஏன்? நிலம் பற்றி எழுதுவதும் வரலாறு தானே ஒரு நிலத்தைப் பற்றியும் அதில் வாழும் மன்னர் மக்கள் நிலை பற்றியும் அவர் தம் சமுதாய வாழ்வு பற்றியும் வகுத்து எழுதுவதெல்லாம் வரலாறு அன்றி வேறு என்ன? எனவே நிலநூலும் வரலாற்று நூலும் ஒன்றை ஒன்று பின்னிப் பிணைந்து செல்வனவேயாம்.

சில ஆண்டுகளுக்கு முன்பு பள்ளியில் கற்கும் மாணவர்களுக்கு நிலநூலும் வரலாறும் தனித்தனியாகப் பயிற்றப்பட்டன. ஆனால் இப்போது நம் தமிழ் நாட்டில் இரண்டையும் இணைத்த பாடத் திட்டமே வழக்கில் உள்ளது.[1] அது சிறந்த ஒன்றேயாகும் வரலாறு வாழ்வதற்கு நிலம் இன்றி அமையாதது. வரலாற்றைத் தோற்றுவித்து வளர்ப்பதே நிலமன்றோ? எனவே, நிலமின்றி வரலாறு இல்லை என்பது தேற்றம். இன்றைய வரலாற்று

---

1. இப்பதிப்பு வரும்போது மறுபடியும் இரு பிரிவுகளும் தனித்தனியே கற்பிக்கப்பெறுகின்றன.

ஆசிரியர்களெல்லாம் இந்தப் பரந்த நிலப்பரப்பின் தொடர்ந்த நிகழ்ச்சிகளைத் தாமே தம் உருட்டுக் கருவி களாக உபயோகிக்கின்றனர். எனவே இந்த நில உலகமே வரலாற்றுக்கு அடிப்படை. வரலாற்றை முறைப்படி ஆயுமுன் இந்நிலவுலகத் தோற்ற வளர்ச்சி வரலாற்றை யும், இந்நிலம் வரலாற்றுக்கு எத்துணை உதவுகின்றதென் பதையும் ஆராய்தல் இன்றியமையாததாகும்.

**வரலாற்று இடம்**

இந்நிலம் என்று தோன்றியதென்பதை யாரும் திட்டமாக வரையறுக்கவில்லை. இதன் எல்லை அண்ட கோள எல்லையின் எத்துணைப் பகுதி என்பதையும் திட்ட மாகக் கணக்கிடக் கூடவில்லை. இவ்வுலகு சூரியனிலிருந்து சிதறிய ஒரு சிறு பொறி என்றும் அந்நெருப்புருண்டை மெள்ள மெள்ள ஆறி இன்றைய நிலை பெற்று உலகமாயிற் றென்றும் கூறுவர் ஆய்வாளர். வான ஓடையில் உலவி வரும் எத்தனையோ உருண்டைகளில் இந்நில உலகமும் ஒன்றாகும். இதன் ஆயுளை 200 கோடி ஆண்டுகள் என்றும் 80 கோடி ஆண்டுகள் என்றும் சிலர் கணக்கிடு கின்றனர். இன்னும் சிலர், அவ்வெல்லை உயிர்த்தோற்றத் தின் எல்லை என்றும் நிலம் அதற்கும் நெடுங்காலத்துக்கு முன்னமே தோன்றியது என்றும் கூறுவர்: எப்படி யாயினும், மனிதனது நினைவு ஆற்றலைக் கடந்த காலக் கணக்கிலே தான் இந்நிலவுலக ஆயுள் அமைகின்றது என்பது தேற்றம். அதைப் போன்றே அகன்ற அண்ட முகட்டில் இதன் எல்லையும் மிக நுண்ணியதாகும். அகன்ற அண்ட கோள எல்லை பரந்த ஐங்கடல்களு மாயின், நிலம் ஒரு சிறு திவலை எனலாம். இந்த மிகச் சிறிய உலகமே மிகப் பெரிதாக-நம் வரலாற்று இடமாக- அமைகின்றது.

### மனிதர் தோற்றம் :

இந்த உலகில் மனிதன் என்று தோன்றினான் என்பதைப் பற்றியும் திட்டமான முடிவு இல்லை. H. G. வெல்ஸ் இவ்வுலகில் பனி படர் காலம் கி. மு. 600,000 முதல் 52.000 வரை இருந்தது என்கின்றார் [1] அதற்கு முன் இவ்வுலக நிலை அறிய வழியில்லை. 30,000 ஆண்டுகளுக்கு முன் வாழ்ந்த மனிதனின் எலும்புகளும் பாறைகளில் கிடைக்கின்றன அவற்றையெல்லாம் ஒட்டியே தான் வரலாற்றில் கற்காலத்தையும் பிற காலங்களையும் குறித்துள்ளனர் என்பது அறியக்கிடக்கின்றது. இன்றைய மனிதன் தன்னைப்பற்றி அறிய விரும்பின், 5000 ஆண்டுகளுக்கு முன் செல்ல வழியில்லை. ஆனால், இந்த ஐயாயிரம் ஆண்டுகளிலேதான் வரலாற்றில் எத்தனை எத்தனை மாறுதல்களும், புதுமைகளும் செயல்களும், பிற நிகழ்ச்சிகளும் நடந்துள்ளன என்பதை எண்ண நெஞ்சம் நெகுந்தொலைவு நீள்கின்றது. அறிவறிந்த மனிதன் வரலாற்று நிகழ்ச்சிகளைப் பெருக்கிக் கொண்டே செல்கிறான்.

### நிலப் பிரிவுகள் :

தமிழ் நாட்டு வரலாற்றில் நிலப் பிரிவுகளும் பிறவும் எத்துணை இடம் பெற்றுள்ளன என்பதை அறியு முன் இந்நில வரலாற்றில் நிகழ்ந்த அதிசயங்களையும் காணல் வேண்டும். இன்றைய உலகில் காணும் சிறந்த நாகரிகங்கள் அனைத்தும் நிலப் பிரிவு வகையில் ஆற்றங்கரை நாகரிகங்களேயாகும். காவிரிக்கரையின் திராவிட நாகரிகமும், கங்கைச் சமவெளியின் இடைக்கால நாகரிகமும் இந்திய வரலாற்றில்

1. A Short History of the World, by H. G. Wells

நிலைத்த இடம் பெற்றன அல்லவோ! மெசபட்டோமிய நாகரிகமும், நைல் நதி நாகரிகமும், சீன நாகரிகமும், பிற பழம்பெருநாகரிகங்களும் ஆற்றங்கரைகளை அடிப் படையாகக் கொண்டவைதாமே! எனவே நிலப்பகுப் பாகிய ஆறு, நாகரிகத்தை வளர்த்தது. இந்த ஆற்றங் கரை நாகரிகத்தை அழித்தனவும் ஆறுகளேதாம். காவிரிப்பூம்பட்டினமும், மொகஞ்சதாரோ, ஆரப்பா முதலியனவும் அவ்வவ்வாற்றுக் கடல்வெள்ளப் பெருக் கால் அழிவுற்றன அல்லவோ! ஆகவே, வரலாற்றை ஆக்கவும் அழிக்கவும் வல்ல திறன் ஆற்று வெள்ளத்திற்கு அமைந்த ஒரு பெருஞ்சிறப்பாகும்.

இப்பரந்த நில உலகில் மனிதன் எங்குத் தோன்றி னான் என்பதில் மக்கள் ஆராய்ச்சி முற்றுப்பெற வில்லை எனலாம். அவர்தம் கொள்கைகளில் ஒன்று—ஏன்?–சிறந் தது—மக்கள் பிறப்பிடம், மறைந்த லெமூரியாக் கண்டம் என்பதாகும். அந்த லெமூரியாக் கண்டமே தமிழ் இலக் கியங்கள் காட்டும் 'இழந்த குமரிக்கண்ட'மாகும். எனவே மக்கள் தோற்றத்தின் முதலிடம் தமிழகம்—மறைந்த தமிழகம்–என்பது பொருத்தமாகும்.

லெமூரியாக் கண்டம் அழிவுற்ற காலை அழிந்தனவும் தோன்றியனவும் அளப்பில. குமரிக்கோடு கொடுங் கடலால் கொள்ளப்பட்டது. அதே வேளையில் ஆழ் கடல் அடியில் இருந்த இமயம் உலகத்தின் உயர்ந்த சிகரமாய் மேலோங்கியது. இப்படி எத்தனை எத் தனையோ மாறுதல்களுக்கு இடையில் நாம் இவ்வுலகில் வாழ்ந்து வருகின்றோம். நம் வரலாறும் வளர்ந்து கொண்டே வருகின்றது. அவ்வரலாற்று வளர்ச்சியை எல்லாம் ஆராய்ந்துகொண்டே செல்லின், நாம் எடுத்த பொருளைக் காண இயலாது. எனவே, இந்த அளவே

பரந்த உலக வரலாற்றை நிறுத்தி, தமிழக வரலாற்றுக்கு நிலப் பிரிவுகள் எந்த அளவு உதவுகின்றன என்பதைக் காணலாம்.

**தமிழக நிலப் பிரிவுகள் :**

தமிழ் நாட்டில் நிலத்தைப் · பாகுபடுத்தியுள்ள முறையே வரலாற்றில் முதல் இடம் பெறுவதாகும். நிலத்தை'நானிலம்' என்றே வழங்கி,இயற்கைச் சூழலுக்கு ஏற்ப அதை நால்வகையாகப் பிரித்துள்ளார்கள் பழந் தமிழ் மக்கள். 'முல்லை, குறிஞ்சி, மருதம், நெய்தல், என்ற நால்வகைப் பகுப்பே நாட்டு மக்கள் வாழ்க்கையை நன்கு விளக்கிக் காட்டுகின்றது. இந்நிலப் பிரிவுகளுக்கு ஏற்பவே இவற்றில் வாழும் மக்களின் வாழ்க்கை முறைகளும், இயல்புகளும், பிறநெறிகளும் அமைகின்றன. இந்நான்கு வகை நிலங்களும் இவற்றின் சிதைவால் தோன்றும் பாலையுமே தமிழ் இலக்கியத்தில் 'ஐந்திணை' யாகக் காட்சியளிக்கின்றன. இவ்விலக்கியங்கள் நாட்டின் வாழ்வை ஒளி பெறக் காட்டும் விளக்கங்களாய் அமைகின்றன. இவற்றைக் கொண்டுதானே இன்றைய வரலாற்று ஆசிரியர்கள் தமிழக வரலாற்றை ஒருவாறு சீர்படுத்தி எழுத முடிகின்றது! எனவே, நில அமைப்பும் நிலப் பிரிவுகளும் தமிழ்நாட்டு வரலாற்றுக்கு இன்றியமையாதவை ஆகின்றன. ஒவ்வொரு நிலத்தையும் — திணையையும்— எடுத்து அதில் வாழும் மக்களைப் பற்றி ஆராய்ந்து எழுதின், அதுவே தமிழக வரலாறு ஆக முடியும்.

**ஐவகை நிலம் :**

இந்த நிலப் பாகுபாடு என்று உண்டானதோ நாமறியோம். ஆனால், இந்தப் பாகுபாட்டு முறைதான் எத்துணைப் பொருத்தமாய் அமைந்துள்ளது என்பதை

மட்டும் வியவாதிருக்க முடியாது. மலையும் மலை சார்ந்த இடமும் குறிஞ்சியாகவும், காடும் காடு சார்ந்த இடமும் முல்லையாகவும், வயலும் வயல் சார்ந்த இடமும் மருத மாகவும், கடலும் கடல் சார்ந்த இடமும் நெய்தலாகவும் காட்சி அளிக்கின்றன. பாலையோ, தனி நிலமற்றதாய் இரண்டின் சிதைவால் உருவாகின்றது.

**'முல்லையும் குறிஞ்சியும் முறைமையில் திரிந்து**
**நல்லியல்பு இழந்து நடுங்கு துயர் உறுத்துப்**
**பாலை என்பதோர் படிவம் கொள்ளும்'**

என அதை இளங்கோவடிகள் அழகுறக் காட்டுகின்றார்[1] இவ்வாறு ஐவகையாகப் பகுக்கப்பட்ட நிலத்திற்குத் தனித்தனி.

**தெய்வம் உணாவே மா மரம் புள் பறை**
**செய்தி யாழின் பகுதியொடு தொகைஇ''[2]**

எல்லாம் பிரித்துக் காட்டப்பெறுகின்றன. இப்படிப் பகுக்கப்பட்ட பொருள்களோடு பொருந்தி மக்கள் வாழும் வாழ்க்கை முறையே சமுதாய வாழ்வின் அடிப்படை வரலாறு ஆகும். எனவே, தமிழக ஐந்திணை வாழ்வே தமிழ்நாட்டுப் பண்டைய வரலாறு என்பது தெளிவாகின்றது

குறிஞ்சி நிலத்தில் வாழும் மக்கள் மலைகளைத் தங்கள் வாழிடமாகக் கொண்டு கல்லிடைக் குறிச்சி அமைத்து, அங்கு விளையும் தேனும் தினையும் உண்டு

1. சிலப்பதிகாரம், காடுகாண் காதை, 14—16
2. தொல்-பொருள், சூ. 18.

விலங்குகளை வேட்டையாடி வாழும் வாழ்க்கையைத் தமிழ்ப் புலவர்கள் நன்கு பாடியுள்ளார்கள். 'உழவர் உழாதன நான்கு பயன் உடைத்தே' என அக்குறிஞ்சிப் பொருள்களைப் பெருமிதம் தோன்றக் காட்டுகிறார் கபிலர். தினைப்புன வாழ்வும், சுனை விளையாட்டும், புள்ளோப்பலும், பிற மலை நிகழ்ச்சிகளும், குன்றக் குரவையும், வேலன் வெறியாடலும் அம் மலைவாழ் மக்களின் சமுதாய வாழ்வில் காணப்பெறும் தனிப்பெருஞ் சிறப்புக்களாய் அமைகின்றன.

இதைப் போன்றே முல்லை நிலத்து வாழும் கோவலர் ஆநிரை ஓம்பலும், காட்டில் பெறும் இயற்கைப் பொருள் களைத் துய்த்தலும், பசுவின் பாலையும் தயிரையும் நல் உணவாகக் கொள்ளுதலும், நாடி வரும விருந்தினருக்கு அவற்றைக் கொடுத்து உபசரித்தலும், கொல்லேறு தழுவித் தம் வல்லமைக் காட்டலும், மாலைப் பொழுதில் பிரிந்தவர் வாடலும், பிரிந்தவர் வாட்டந் தீர்க்கும் வகையில் 'இன்னே வருகுவர் தாயர்' என்று ஆன் கன்றை நோக்கி ஆய்ச்சியர் விரிச்சி கூறலும், முல்லைப் பண்வழி குழல் ஊதிக் கொடுங்கானத்தையும் தம் வசம் ஆக்கலு மாகிய நல்ல சமுதாய நெறியே அம்முல்லை நில வரலாறாக அமைகின்றதன்றோ !

மருதத் தண்பணை மனத்துக்கினியது ஆற்றங்கரை நாகரிகங்களையெல்லாம் மேலே குறிப்பாகக் கண்டோம். வயல் சார்ந்த ஊர் இடந்தொறும் மக்கள் கலந்து; ஒத்து அமைந்து வாழும் வாழ்க்கையும், நல்ல வேளாண் தொழில் புரிந்து, தாளாளராகி, தக்காங்குக் கொடை

யாளராய் நின்று, வையகம் வாழத் தாம் வாழும் தகை யராய்ச் சிறந்து, நல்ல வளமார்ந்த அரிசிச் சோறும் கனிகளும் வந்த விருந்தினருக்கு அளித்து, சமுதாய வாழ்வையே செப்பம் செய்த பெருமை இந்த மருத நில மக்களுக்கு உரிய ஒன்றல்லவா! வற்றா வயல் வளத்தால் சுற்றத்தாரையும் மற்றவரையும் உண்பித்து, கூடி வாழும் செம்மை நெறியை உணர்த்தி, அதன்வழி உலக நாகரிக வாழ்வுகளையே உருவாக்கி வாழ்ந்து வரும் அம்மருத நிலப் பண்பும், வாழ்வும், வளமும் வரலாற்றின் அடிப் படைகளல்லவென்று யாரால் கூற முடியும் ?

கடல் அடுத்த பகுதியே நெய்தல் நிலமாவது. அக் கடல் படு பொருள்களைக் கொண்டு தம் வயிறு ஓம்பி, நாட்டு வாணிப வளனையும் பெருக்கும் பரதவர் தம் வாழ்க்கை தமிழ்நாட்டு வரலாற்றில் ஒன்றிய வாழ் வாகுமே! கடல்மேல் கலம் செலுத்தி வாணிபம் புரியும் செல்வ நிலை ஒரு பக்கம் இருக்க, அக்கடல் விளை உப்புக்கும் மீனுக்கும் நாள் முழுதும் உழைத்து அலுக்கும் ஏழை மக்கள் வாழ்வும் இலக்கியத்தில் இடம் பெற்றுள்ளது. அவர்களுடைய அன்றாட வாழ்வில் உருவாகிய சமுதாய வரலாறுகள்தாம் எத்தனை! நெய்தல் நில மக்கள் வாழ்வது ஒரு புறமிருக்க, அக்கடலை அடுத்து எத்தனை எத்தனை பெரு நகரங்கள் தோன்றி மறைந்துள்ளன! காவிரி கடலொடு கலக்கும் இடத்திருந்த பூம்புகார் இப்போது இல்லையானாலும் அதன் வரலாறு என்றும் தமிழ் நாட்டு வரலாற்றில் ஒளி விளக்காய் விளங்குமன்றோ! அது போன்றே கடற் கரையை அடுத்த முசிறியும், தொண்டியும், மாமல்ல புரமும், பிறநகரங்களும் வரலாற்று முக்கியம் வாய்ந்த வைதாமே! எனவே, இந்த நெய்தல் நிலப்பிரிவு

வரலாற்றை வகுக்கப் பெரிதும் உதவுவது என்பதில் ஐயமில்லையன்றோ !

இந்நால்வகை நிலத்தொடு மேலே கண்ட பாலையும் ஒரு தனி நிலமாகப் பிற்காலத்தில் ஆக்கப் பெற்றது. அதிலே வாழும் மக்களது வாழ்வும் வளமுங்கூட வரலாற்றில் இடம் பெறுகின்றன. கொடுங்கோடையிலும் பாலைநில மக்கள் தம் வழிபடு கடவுளைப் பாட்டிசைத்துப் பரவிப் போற்றும் செயலும், அதன்வழி அவர்தம் சமுதாய வாழ்க்கை வரலாறும் நமக்குப் புலப்படுகின்றன. எனவே, இவ்வாறு பல்வேறு நிலப் பிரிவுகளும், அவற்றின் வழி அமைந்த இயற்கைப் பாகுபாடுகளும் வரலாற்றுத் துறைக்கு இன்றியமை யாதன என்பது தேற்றம்.

மாறுபாடுகள் :

நிலப்பிரிவுகளே மக்கள் வாழ்க்கை முறையை மாற்றி அமைப்பனவாகும். அந்த நில அமைப்புக்கு ஏற்பவும், அதன் தன்மை வெம்மை மாறுபாடுகளுக்கு இயையவும் அதில் கிடைக்கும் உணவுக்கும் உடைக்கும் ஒப்பவுமே மனிதன் தன் வாழ்வை அமைத்துக் கொள்ள முடியும். அந்த அமைப்பிலேதான் உலகம் தோன்றிய நாள் தொட்டு மனிதன் தன் வாழ்க்கை முறைகளை மாற்றி மாற்றி அமைத்துக்கொண்டே வருகிறான். நில நடுக் கோட்டில் வாழும் ஒருவன், திறந்த உடலொடு கரிய மேனியைத் தாங்கி வாழ இயலும். அவனே தென்வட துருவ எல்லையில் அப்படி வாழ முடியுமா? மரக்கறி உணவினையன்றிப் பிறவற்றை மனத்தாலும் எண்ணாத ஒருவன், நிலக் கோடியில் கிடைக்கும் சில மாமிச உணவுப் பொருள்களை உண்டே வாழ வேண்டிய நிலை ஏற்படின் என்னாவன்? எனவே, மனிதனது சமுதாய வாழ்வும்

அமைப்பும் அந்தந்த நில அமைப்புக்கு ஏற்ப மாறுபாடு அடைவது வரலாறு கண்ட உண்மையாகும்.

மேலும்,நில அமைப்பில் எத்தனையோ மாறுபாடுகள் நிகழ்கின்றன. சில புதியனவாகத் தோன்றுகின்றன; சில அழிகின்றன. தமிழ்நாட்டு எல்லை ஒரு காலத்தில் பரந்து இருந்ததெனவும், மேற்கே மடகாஸ்கர் தொடங்கிக் கிழக்கே ஜாவா வரை அகன்ற நிலப்பரப்பு இருந்ததெனவும், அது பல ஊழிகளால் அழிக்கப் பெற்றதெனவும் அறிகின்றோம். உலகில் இன்னும் எத்தனையோ நிலப்பரப்புக்கள் தோன்றி அழிந்தன. இன்று உலகம் போற்ற உயர்ந்து நிற்கும் இமயம் கடலுள் ஆழ்ந்திருந்த காலமும் இருந்தது. இப்படி நில மாறுபாடு வரலாற்றில் நிலைத்த இடம் பெற்றுள்ளது. நம் நாட்டுப் புகார் எங்கே? பல்லவர் போற்றிப் பாராட்டிய கடல் மல்லை எங்கே? ஆம்! அவை அழிந்து விட்டன. நில நூல் வழிப்படி, ஆனால், வரலாற்று வழிப்படி அவை அழியவில்லை. இன்னும் வரலாறு அவற்றின் புகழை வாழ வைக்கின்றதன்றோ !

தமிழகம் :

தமிழர் என்றவுடன் வேங்கடம் குமரி இடைப் பட்ட நாட்டில் வாழ்பவர் என்று முடிவு கூறுவர். இந்தப் பகுதிக்குத் தமிழ் நாடு என்பது பெயர்தான். ஆனால், தமிழர் வாழ்வு இந்த எல்லையில் அமைந்துவிட வில்லை. பரந்த நிலப்பரப்பில் உள்ள நாகரிகம். அண்டை நாடுகளில் பரவுவது இயல்புதானே! இலங்கையிலும் பர்மா, மலேயாவிலும் தமிழர் நாகரிகமும் பண்பாடும் நிலவியுள்ளதை அறியாதார்

யார்? எனவே, வரலாற்றுக்குட்பட்ட நாகரிகம் நிலத்தின் பல பகுதிகளையும் தாண்டிப் பண்டை நாள் தொட்டே பரவிப் பல நிலப்பகுதிகளைப் பண்பால் பிணைத்துள்ளது. அதே நிலையில் இன்று நாம் வாழும் இந்தியப் பெருநிலமும் ஆக்கப் பெறுகின்றது. இந்திய வரலாறு என்பது இணைத்துப் பார்க்க முடியாத ஒன்றுதான்; நாகரிகம், பண்பாடு முதலியவற்றை ஒரே இடத்தில் இணைத்தும் பலவிடங்களில் சென்று அது பல மக்களைப் பின்னிப் பிணைத்து ஒன்றாக உருவாக்கியும், அவர்தம் வரலாற்றை வளர்க்கின்றது. இங்கு இந்தியாவிலே காசுமீர் தொடங்கிக் கன்னியாகுமரி வரை பல்வேறு பண்பாடுகளும் நாகரிகங்களும் இணைந்து ஒரே நாடாகி இன்று அதன் வரலாற்றை வளர்க்க உதவுகின்றன. இப்படி வரலாறும் நிலநூலும் ஒன்றை ஒன்று பின்னிப் பிணைந்தே எழுகின்றன.

நிலமின்றேல், வரலாறு இல்லை. நிலமின்றேல் உயிரில்லை—மனித இனம் இல்லை—மற்றைய நாகரிகமும் பண்பாடும் இல்லை. எனவே, அவற்றைக் காட்டும் வரலாறும் இல்லையன்றோ! இவ்வாறு நிலநூலுக்கும் வரலாற்றுக்கும் இடையே அமைந்த தொடர்பு திண்ணியது; பிரிக்க முடியாதது.

# IV. தமிழ்நாட்டு வரலாறு

**தமிழக வரலாறு போற்றப்படாமை :**

ஒவ்வொரு நாடும் தனது பண்டைப் பெருமையைப் பாராட்டிப் பேச விரும்புகின்றது. தமிழகமும் அவ்வாறு ஆசைப்படுவதில் தவறில்லையன்றோ! நிலைத்த புகழுடைய பழமையில்லாத பல நாடுகள் கூடிப்பேசும் நாகரிக நாளில் உண்மையிலே பழம் பெருமை வாய்ந்த தமிழ்நாடு தன் உற்ற வரலாற்றை உணர்வது முறை தானே? மிகு நெடுங்காலமாக வாழ்ந்த நாகரிக வாழ்க்கை பெற்ற நாடுகள் மிகச் சிலவே. இன்றைய ஆராய்ச்சியின் படி சமுதாய வாழ்க்கை இன்றைக்கு 50,000 ஆண்டு களுக்கு முன்னரே தொடங்கியது. ஆயினும், மனிதன் இவ்வுலகில் எவ்வெவ்விடங்களில் எவ்வெந்நிலையில் வாழ்ந்தான் என்பதை வரையறுக்கக்கூடவில்லை எனினும் சுமார் 5000 ஆண்டுகளுக்கு முன் நாகரிகத்தோடு வாழ்ந்த சில நாடுகளை வரலாற்று ஆசிரியர்கள் கண்டுள் ளார்கள். மேலை நாட்டிலே நைல் நதிக் கரையில் அமைந்த எகிப்திய நாகரிகமும், பாபிலோனியா நாகரிகமும், மெசபட்டோமிய நாகரிகமும் சிந்துவெளி நாகரிகமும், காவிரிக்கரை நாகரிகமும், சீன நாகரிகமும் அவற்றுள் சிறந்தனவாய் உள்ளன. இவற்றைப் பற்றி மேலை நாட்டு வரலாற்று ஆசிரியர்கள் பற்பல வகை களில் ஆராய்ந்து பலப்பல நூல்களை எழுதியுள்ளார்கள். எனினும், காவிரிக்கரை நாகரிகமாகிய தமிழ் நாகரி கத்தைப்பற்றி அவர்கள் அதிகமாகக் குறிக்கக் காணோம், மொகஞ்சதாரோ, ஆரப்பா போன்ற நகரங்கள் அகழ்ந்தெடுக்கப்பட்ட பின் சிந்துவெளி நாகரிகம்

சிறந்தது என்று பேசப்பட்டது. அது திராவிட நாகரிகத்தின் சார்புடையதென்றும், அது தென்னாட்டு நாகரிகம் போன்றதென்றும் வரலாற்று ஆசிரியர் வரைந்துள்ளனர். எனினும், பரந்த பாரத நாட்டு வரலாற்றை எழுதிவரும் பெரியவர்கள் காவிரிக்கரை நாகரிகத்தைப் பற்றிக் கவலைப்பட்டதாகத் தெரியவில்லை. காரணம், இந்திய நாட்டு ஆட்சிப்பீடமாகிய தில்லியிலிருந்து நெடுந் தொலைவில் இது அமைந்துவிட்டமையேயாம். தில்லித் தலைமை நிலையத்திலிருந்து சிந்து வெளியைக் காணும் அத்துணை ஆர்வம் அந்நாளில் தமிழகத்தை அகழ்ந்து காண்பதில் இல்லை எனலாம். இன்றும் அந்நிலை மாற வில்லை. எனினும், ஆதிச்சநல்லூர் போன்ற இடங்களில் அகழ்ந்தெடுத்த பொருள்களும், தமிழர்களது வரலாறு காண வேண்டும் என்ற அவாவும் ஓரளவு காவிரிக்கரை நாகரிகத்தையும் ஆராயத் தூண்டுகின்றன.

## தமிழக வரலாற்றின் தொன்மை :

மேலை நாட்டு வரலாற்று ஆசிரியர்கள் தமிழர் நாகரிகத்துடன் பாபிலோனிய, கிரேக்க, எகிப்திய நாகரிகங்களை இணைத்துப் பேசுகின்றார்கள். கிறித்தவ சகாத்தத்தின் தொடக்க நாளின் முன்னும் பின்னும் மேலை நாடுகளிலிருந்து தமிழ் நாட்டுக்கு வாணிபத்தின் பொருட்டும் பிற வகையிலும் வந்து சென்றவர்கள் எழுதி வைத்த குறிப்புக்கள் இந்நாடு பிற நாடுகளுடன் கொண்ட தொடர்புகளை அறியப் பெரிதும் பயன்படுகின்றன. வெற்று வாணிபத் தொடர்பு மட்டுமின்றி, அரசியல் தொடர்புகளுங்கூட எகிப்து முதலிய நாடுகளுடன் தமிழ் நாட்டுக்கு இருந்தன என்பது தெரிகிறது. சேர சோழ பாண்டியர் தமிழ்நாட்டு வேந்தர்கள்.

இன்றைய மத்தியக் கிழக்கு நாடுகளைக் கட்டி ஆண்ட டோரியரியஸ்,[1] காலத்தில் யவனரும் பிறரும் தென்னிந்தியருடனும் சீனருடனும் பெரு வாணிபத் தொடர்பைக் கொண்டிருந்தார்கள் என்பது தெரிகின்றது. தமிழ் இலக்கியத்தில் வரும் யவனர்கள் பெரும்பாலும் இம்மேலை நாட்டுக் கிரேக்க ரோம நாட்டு மக்களே என்று கூறுவர் கனகசபை பிள்ளை அவர்கள். இவ்வாறு வடவிந்தியா பிற நாடுகளுடன் தொடர்பறியாத நெடுங் காலத்துக்கு முன்பே, தென்னிந்தியா, சிறப்பாகத் தமிழகம் —பிற நாடுகளுடன், மேற்கே எகிப்து நாடு தொடங்கிக் கிழக்கே சீன நாடு வரை, வாணிபத் துறையிலும் அரசியல் துறையிலும் தொடர்பு கொண்டிருந்தது. இத்துணைப் பழம் பெருமை வாய்ந்த தமிழகத்தின் வரலாறு இன்று வரை திட்டமாக வரையறுக்கப் பெற வில்லை இனியாயினும் தொடர்ந்த வகையில் வரலாறு வெளிவரத் தமிழ்நாட்டு அரசியலார் முயல வேண்டும்.

**வரலாற்றுப் பகுதிகள் :**

இந்தத் தமிழ் நாட்டு வரலாற்றைப் பலப்பல பகுதி களாகப் பிரித்து ஆராயலாம். கற்காலத்துக்கு முற்பட்ட அந்தப் பனிபடு பெருங்காலம் தொடங்கி இன்றைய இருபதாம் நூற்றாண்டு வரை உள்ள வரலாற்றினைத் தொடர்பு படுத்தி எழுத வேண்டுவது வரலாற்றுத் துறையில் ஊக்கமுடைய நல்லவர் கடமையாகும். இந்த நெடுங் காலத்தில் தமிழகம் நிலப்பரப்பிலும், பண்பாட் டிலும் வாழ்க்கை முறையிலும், நாகரிக வளர்ச்சியிலும் பிற துறைகளிலும் எத்தனை எத்தனையோ மாறுபாடு களைப் பெற்றுள்ளது. 'தமிழ்நாட்டு மக்களில் பழங்குடி மக்கள் யார் ? குடியேறியவர்கள் யார்?' என்று பகுத்து

1 Darius in 6th Century B. C.

உணர முடியாத வகையில் எத்தனையோ மக்கள் குடியேறி ஒன்றிக் கலந்து தமிழராய் வாழ்ந்துள்ளார்கள். எத்தனையோ வகையான அரசுகள் வந்து வாழ்ந்து அரசோச்சி அழிந்து விட்டன. இன்று தமிழகத்திலே உலக நாகரிகங்கள் அனைத்தையும் காண முடியும்.

**சமய வரலாறு :**

இதைப் போன்றே சமயத் துறையிலும் அன்று முதல் இன்று வரை தமிழகத்தில் பெரும் மாறுதல்கள் நடைபெற்றுள்ளன தமிழ் நாட்டு மக்கள் இன்ன சமயத்தைச் சேர்ந்தவர்கள் என்று அறுதியிடப் பெறா வகையில் ஒரு காலத்தில் வாழ்ந்து வந்தார்கள். கடவுளைப் போற்றும் நெறி தமிழகத்தில் நெடுங் கால மாகப் பழக்கத்தில் இருந்த போதிலும், 'அவர்கள் போற்றிய கடவுள் யார்? எப்பெயர் உடையவர்?' என்பன போன்ற வினாக்களுக்கு விடைகாணல் அரி தாகும். தொல்காப்பியத்தில் கடவுள் குறிக்கப்படு கின்றாரேனும், அவர் பெயர் அறிய இயலாது "இப்படியன், இந்நிறத்தன், இவ்வண்ணத்தன், இவன் இறைவன் என்று எழுதிக் காட்டொணாத" வகையில் அவர்தம் கடவுளர் காண முடியாத நிலையில் இருந்தனர். பின்னர், சைவமும் வைணவமும் தலை தூக்கின. அடுத்துப் பௌத்தமும் சமணமும் நாட்டில் பரவின. பின்னர் இசுலாமியமும் கிறித்தவமும் கலந்தன. இப்படி நாள்தோறும் பிற நாட்டுச் சமயங்கள் இங்குக் கலந்து இந்நாட்டுச் சமயங்கள் என்னுமாறு தலை நிமிர்ந்து வாழ்கின்றன. வரலாற்றுக் கெட்டாத நெடுங்காலந் தொட்டு இன்றுவரை வளர்ந்த சமயக் கோட்பாடுகள் இங்கு நிலை பெறக் காரணம், தமிழர்தம் சகிப்புத்

தன்மையேயாகும் இந்திய நாட்டின் வடபகுதியில் சமயப் போரால் அழியும் நிலை காணும் நம் கண்முன் அமைதியிலே வாழும் தமிழ் நாட்டின் ஏற்றம் விளங்காமல் போகாது. 'சமயப் பொறை' என்ற சமூகப் பண்பாடு தமிழ் நாட்டுத் தனிப் பண்பாடு. எனவேதான் இன்று பல சமயங்கள். தம்முள் எத்தனை வேறுபாடுகள் இருப்பினும், ஒன்றிக் கலந்து மாறுபாடு இல்லாமல் இங்கு வாழ்கின்றன.

**பண்பாடு :**

சமயத்தைப் போன்றே எத்தனையோ நாகரிகங்கள், பண்பாட்டு முறைகள், பழக்க வழக்கங்கள், பிற இயல்புகள் இந்நாட்டில் குடியேறி இங்கேயே ஒன்றி வாழ்கின்றன. அவற்றின் கலந்த வாழ்வே இன்றைய தமிழக வாழ்வு. இப்படி ஒன்றிய ஒரு சமுதாயத்தின் வாழ்க்கை வரலாற்றை ஆராய்வதே ஒரு சிறந்த செயலாகும். எங்கோ பனி படர் பழங்காலந்தொடங்கி இருபதாம் நூற்றாண்டின் இடை வரையில் தொடர்ந்து வளர்ந்து வரும் ஒரு நாட்டு மக்கள் வாழ்வையும் அதை ஒட்டிய பிற அமைப்புகளையும் ஆராய்வதே இன்றைய தமிழ் நாட்டு வரலாறு ஆகும். அக்கால எல்லையுள் நின்று ஒவ்வொரு காலத்திலும் நாடு எந்நிலையில் வாழ்ந்தும் வீழ்ந்தும் சரிந்தும் நிமிர்ந்தும் வந்துள்ளது என்பதைத் தெளிவாகக் காணலாம்.

**பண்டைத் தமிழகம் :**

தமிழ் நாட்டுத் தெளிந்த வரலாற்று எல்லை இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு உட்பட்டதெனினும், அக்காலத்துக்கு முன்னும் வாழ்ந்த தமிழக வரலாற்றின் சிறு சிறு குறிப்புக்கள் கிடைக்கப்பெறுகின்றன. கற்காலம்

தொடங்குமுன், பனி படர் காலம் ஒன்று இருந்தது. என்பர் வரலாற்றாளர். அதன் காலம் இன்றைக்கு 50,000 ஆண்டுகளுக்கு முற்பட்டது என்பதை முன்னர்க் கண்டோம். அக்காலத்திலெல்லாம் தமிழ் நாட்டைப் பற்றி—ஏன்?—உலகத்தைப் பற்றியே ஒன்றும் தெரியாது உலகமே இன்றிருக்கும் நிலையில் அன்று இல்லை. குமரி முனைக்குத் தெற்கே பரந்த நிலப்பரப்பு இருந்ததென்றும் விந்தியத்துக்கு வடக்கே ஆழ்கடல் இருந்ததென்றும் ஆராய்ச்சியாளர்கள் கூறுகிறார்கள். அந்தப் பரந்த நிலப் பரப்பிலேதான் மனிதன் முதலில் தோன்றினான் என்பர் சிலர். அவை அனைத்தும் அப்படியே உண்மை என்று கொள்ள இயலாவிட்டாலும், தமிழ் மண் மிக்க தொன்மை வாய்ந்தது என்பதை மறுப்பார் ஒருவரும் இலர். இம்மண்ணில் பனி படர் காலத்துக்குப் பின் உயிர் தோன்றி வளர்ந்து மனிதன் நிலைபெற நெடுங் காலம் ஆகியிருக்கும். பின்னர்க் கற்காலமும், செம்பு இரும்புக் காலங்களும் பிறவும் தோன்றித் தோன்றிக் கழிந்திருக்க வேண்டும். ஆதி காலத்தில் தோன்றிய மனிதன் அன்றும் இன்றே போல அனைத்து நலன்களும் நிரம்பப் பெற்றவனாகக் கட்டாயம் இருந்திருக்க முடியாது. அவனது தொடர்ந்த வளர்ச்சியைக் காட்டுவதே வரலாற்று நூல்.

**மனித உணர்வு பெற்ற பின் ;**

விலங்கென வாழ்ந்த மனிதன்—தமிழ் மண்ணில்—சிறுகச் சிறுக மனித உணர்வு பெற்று வாழத் தொடங்கி யிருப்பான். தனித்து வாழ்ந்தவன் சேர்ந்து வாழக் கற்றுக் கொண்டான் பின்பு ஊர், நகரம், நாடு போன்றவை தோன்றின. ஆனால், இத்தனை வேறுபாடுகளுக்கிடையில் எத்தனையோ கணக்கில் அடங்காத ஆண்டுகள் கழிந்தி

ருக்கும் என்பது உண்மை. அந்த ஆதி மனிதன், பின் வேற்று மண்ணிலிருந்து வந்து சேர்ந்த மனிதனோடு கலந்து பழக நெடுங்காலம் சென்றிருக்கும். மனிதன் சமுதாயமாக வாழக் கற்றுக் கொள்ளப் பலப்பல ஆயிரம் ஆண்டுகள் கழிந்திருக்க வேண்டும். அந்தக் காலத்தை யெல்லாம் வரலாற்று ஆசிரியர் கற்காலம் என்றும், எலும்புக் காலம் செம்பு இரும்புக் காலங்களென்றும் எழுதி வைத்துள்ளனர். அவற்றைப் பற்றியெல்லாம் வரலாற்றுக்கு முற்பட்ட தமிழகத்தில் சிறக்கக் காணலாம்.

தமிழ்க் குடிமக்கள் :

'இனி, இங்கு இன்று வாழும் மக்களினமாகிய தமிழ்க் குடிகள் இந்த நாட்டிலேயே பிறந்தவர்களா, அன்றி வெளி நாட்டிலிருந்து வந்தவர்களா என்ற ஆராய்ச்சி இன்னும் முடிந்த பாடில்லை. இவர்கள் இந்நாட்டிலேயே தோன்றி வளர்ந்தவர்கள் என்று ஒரு சாராரும், 'ஆரியர் இந்திய மண்ணில் வருமுன் அவர்களைப் போன்றே வட மேற்குக் கணவாய் வழியாக வந்தவர் என மற்றொரு சாராரும் வாதிப்பர். எது பொருந்தும் என்பதை ஆராய்ந்து முடிவு காண வேண்டும். குமரிக்குத் தெற்கே இருந்த நிலப்பரப்பே தொன்மை வாய்ந்தது என்று காண்பதால் மக்கள் அங்குத் தோன்றியே பின்னர்ப் பிற இடங்களுக்குச் சென்றிருப்பார்கள் என்று கொள்ளல் பொருந்தும்.

இந்த மனித இனத்தைப்பற்றிப் பல்வேறு ஆராய்ச்சி களுக்கு இடையே தமிழ் இலக்கியங்களும் தோன்றி வந்துள்ளன. தொல்காப்பியர் காலத்தைத் தமிழ்நாட்டு வரலாற்று ஆய்வாளர் மூவாயிரம் ஆண்டுகளுக்கு முற்பட்டதென்றே கூறுவர். அத் தொல்காப்பியம் இலக்

கணமாக உருவாயிருக்க வேண்டுமானால், அதற்குமுன் எத்தனை எத்தனை இலக்கியங்கள் உருப்பெற்றிருக்க வேண்டும். இறையனார் களவியலுரையில் மூன்று சங்கங்கள் இருந்தன எனவும், அவற்றின் ஆயுட்காலம் பல ஆயிரம் ஆண்டுகள் எனவும் கூறப் பெற்றுள்ளன. களவியல் உரையில் கூறப்படுவன அத்தனையும் உண்மை என எடுத்துக் கொள்ளத் தேவை இல்லை. எனினும், கடைச் சங்ககாலமென அனைவராலும் ஒரு சேர ஒப்புக் கொள்ளப் பெறும் கி. பி. முதல் இரண்டாம் நூற்றாண்டு களுக்கு முன் தமிழ் இலக்கியங்களும் அவற்றின் வழித் தோன்றிய இலக்கணங்களும் உள்ளன என்பதை யாரும் மறுக்க இயலாதே! இலக்கிய வரையறையும் பிறவெளி நாட்டார் குறிப்புகளும் ஒரு சேரக் காட்டும் இக்கடைச் சங்க காலத்திலேயே ஒருவாறு தமிழ் நாட்டு வரலாறு உருப்பெறுகின்றது எனலாம். எனவே, வரலாற்றுக்கு முற்பட்ட தமிழகம் என்ற பகுப்பின் எல்லை தொல் காப்பியர் காலத்தோடு ஒன்றிய முந்திய சங்க காலத் தோடு முடிவு பெறும்.

### சங்க காலம்

சங்க காலமே தமிழ் வரலாற்றின் பெற்காலம் எனலாம். சிலர் சங்க காலத்தைக் கி. பி. ஆறாம் நூற்றாண்டுக்குப் பிறகும் கொண்டுவரக் கருதினாலும், பல வரலாற்று ஆசிரியர் (மேலைநாட்டு வரலாற்றா சிரியர்களாகிய 'ஸ்மித்' போன்றார் உட்பட) சங்க காலத்தைக் கிறித்து சகாத்தத்தின் முதல் இரண்டு நூற்றாண்டுகளுக்கு முன்னரே அடக்குவர். ஏழாம் நூற்றாண்டில் நாட்டின் தெளிந்த வரலாற்றையும், இலக்கியம், கலை முதலியவற்றின் வரலாற்றையும் நோக்குவார்க்கு, சங்க காலம் கி. பி. இரண்டாம் நூற்றாண்டுக்கு முற்பட்ட காலமேயாகும் என்பது நன்கு

புலப்படும். அச்சங்க காலத்திலேதான் பல வெளி நாட்டார் இங்கு வந்து தங்கி, வாணிப வளனையும், பிற துறைகளையும் வளர்த்துச் சிறக்கச் செய்துள்ளனர். இன்று உலகில் போற்றப்படும் உயர்ந்த இலக்கியங்களுள் சிறந்த தமிழ் இலக்கியமெல்லாம் அக்காலத்தனவே அக்காலத்தில் ஆண்ட முடியுடைய மூவேந்தர்தாம் இமயம் வரையில் படை எடுத்துச் சென்று, 'கயல் எழுதிய இமய நெற்றியின்' அயலில் புலியும் வில்லும் பொறித்தனர் தமிழ் நாகரிகம் என்ற தனி நாகரிகச் சிறப்பை உலகுக்குக் காட்டிய காலம் தமிழ் நாட்டு வரலாற்றில் 'பொற்காலம்' என்று கூறுவது பொருந்து மன்றோ !

**இருண்டகாலம் :**

தனி மனிதனது வாழ்விலே இன்பம் தன் உச்சியின் எல்லையில் நிற்பின் உடனே தாழ்வு வந்துறுதல் இயல் பாகும். மனிதரின் வாழ்வு மேடு பள்ளங்கள் நிறைந்ததே. அம்மனித வாழ்வின் மேடு பள்ளங்களைப் போன்றே வரலாற்றிலும் மேடு பள்ளங்கள் உள்ளன. சிறந்த பொற் காலமாகிய சங்க காலத்துக்குப் பின் தமிழ் நாட்டு வரலாற்றில் இருண்ட காலம் என்று ஒன்று வந்து சேர் கின்றது. இந்திய வரலாற்று ஆசிரியர்கள் அக்காலத்தைக் களப்பிரர் இடையீட்டுக் காலம் (Kalabras Interregnum) என்பர். தலை நிமிர்ந்து தனியரசோச்சிய சங்க காலத் தமிழ் மரபு கெட, இடையில் ஒரு சில வெளி நாட்டினர் நாட்டில் நுழைய, நாட்டு வரலாறே நலியுறும் நிலை உண்டாயிற்று. ஏறக்குறைய மூன்று நூற்றாண்டுகள் (கி.பி 3-4-5) தமிழ் நாட்டில் என்ன நடைபெற்றது என்றே சொல்ல முடியாத அளவுக்கு இருள் சூழ்ந்தி

ருந்தது. எனினும், அடுத்து ஏழாம் நூற்றாண்டில் எழுச்சிக் காலத்தின் நாட்டு நிலையையும், சங்க கால நிலையையும், ஒத்து நோக்கும்போது அந்த இடைப்பட்ட மூன்று நூற்றாண்டுகளில் சமயத் துறையிலும், அரசியல் நெறியிலும் வேற்று மக்களது இடையீட்டால் எத்தனையோ மாறுபாடுகள் நிகழ்ந்திருக்க வேண்டுமென்று கொள்ளுதல் பொருத்தமானதாகும்.

**பல்லவர் காலம் :**

பல்லவப் பரம்பரையினர் நான்காம் நூற்றாண்டிலேயே தமிழ் நாட்டில் ஆளத் தொடங்கி விட்டனர் எனலாம். எனினும், அவர் தம் தெளிந்த—திருந்திய—ஆட்சி கி.பி. ஏழாம் நூற்றாண்டுக்குப் பின்புதான் வலுப்பெற்றது. சிவஸ்கந்த வர்மனால் தொடங்கப் பெற்ற பல்லவர் ஆட்சி, சுமார் இரு நூற்றாண்டுகளுக்குப் பின் மகேந்திர வர்மனால் விளக்கம் பெற்றது. சங்க காலத்துக்குப் பிறகு பல்லவர் தம் ஆட்சியே தமிழ் நாட்டில் சிறந்த வரலாற்றுக் குட்பட்ட ஆட்சியாய் விளங்கிற்று எனலாம். பல்லவர் காலத்திலே தமிழ் நாட்டில் கலையும் இலக்கியமும், காவியமும் ஓவியமும், சித்திரமும் பிற செம்மை நலன்களும் வளர்ந்ததோடு சமயங்களும் பல்வேறு போட்டிகளுக்கிடையில் வளர்ந்து வரலாயின. தமிழகத்தின் இருண்ட காலத்தில் தலை தூக்கி இருந்த பௌத்தமும் சமணமும் ஏழாம் நூற்றாண்டுக்குப் பின் சைவ வைணவ சமயங்களுக்கு இடந்தந்து ஒதுங்கி விட்டன. பல்லவர் காலத்திலே அதற்கு முன் தமிழ் நாட்டில் கண்டிராத வகையில் கற்கோயில்களும் கலைக் கோயில்களாகிய பல இலக்கியங்களும் தோன்றி வளர்ந்தன என்பதும் பொருந்தும். பல்லவர் காலம் தமிழ் வரலாற்றில் நிலைத்த இடம் பெற்ற காலமாகும்.

பல்லவர் ஆட்சியும் தமிழ் நாட்டில் நெடுங்காலம் நிலைத்திருக்கவில்லை. தமிழ் நாட்டுப் பழங்குடி மன்னராகிய சேர சோழ பாண்டியர்கள் நிலைகெடப் பல்லவர் தலை நிமிர்ந்திருந்தனர். பாண்டியரும் ஓரளவு உரிமையோடு தென் தமிழ் நாட்டு எல்லையில் ஆட்சி புரிந்தனர். பல்லவர் காலத்திலும் பின் வந்த சோழர் காலத்திலும் மேலைக் கடற்கரை ஓரத்தில் சேரர் பரம்பரையினர் ஆண்டு வந்தாரேனும், அவர்களுள் சிறக்க வாழ்ந்த உலகறி மன்னர்களைக் காணல் அரிது. அம்மேலை நாட்டு பகுதி தமிழ் நாட்டு நிலையினும் மாறுபட்ட ஒரு நிலைக்குச் சென்று கொண்டிருந்தது பல்லவர் ஆட்சி, அடுத்துத் தலையெடுத்த தஞ்சைச் சோழர்களால் வீழ்ச்சியுற்றது எனலாம். மேலும் வடக்கிலிருந்து சாளுக்கியரும் மேற்கிலிருந்து கங்கரும் பிறரும் பல்லவர் ஆட்சிக்கு முடிவு தேடினர். எனினும், தமிழகத்தைப் பொறுத்தவரையில் அடுத்து ஆட்சிக்கு வந்த சோழர் பரம்பரையின் காலமே வரலாற்றில் சிறந்த காலமாகும்.

**சோழர் காலம் :**

பல்லவர்க்கும் பாண்டியருக்குமிடையே ஒடுங்கிய சிற்றரசாய் இருந்த சோழர் பரம்பரையினர் ஒன்பதாம் நூற்றாண்டின் இடையில் தலை தூக்க ஆரம்பித்தனர். அவர் தம் பழைய நகரங்களாய் விளங்கிய புகாரும் உறையூரும், ஆரூரும் அக்காலத்திய தலைநகராக மாறவில்லை. புதிய தஞ்சை உருவாயிற்று தஞ்சையைத் தலைநகராக அமைத்துக்கொண்டே விசயாலயன் பரம்பரையினர் தலையெடுத்தனர். அவர்கள் காலம் தமிழ் வரலாற்றின் மிக முக்கிய காலமாகும் ஒன்பதாம் நூற்றாண்டின் தலை தூக்கிய இவ்வமிசத்தினர் பதின் மூன்றாம் நூற்றாண்டு வரை

சிறக்க வாழ்ந்து, அரசோச்சி, தமிழ் நாட்டை உலகத்தார் அறிந்து கொள்ளுமாறு செய்தார்கள் எனலாம். இன்று தமிழ் நாட்டில் காணும் வானளாவிய கோபுரங்களோடு விளங்கும் பல கோயில்கள் இவர்கள் காலத்தில் தோன்றியவைகளே. தமிழ் நாட்டின் வரலாற்று மூலங்களில் சிறந்த கல்வெட்டுக்கள் பல அக்காலத்தில் தோன்றியவைகளே. அக்காலத்திலிருந்த இராசராசன் கட்டிய தஞ்சைப் பெரியகோவில் இன்றும் கண்முன் காட்சியளித்து நிற்கின்றது. இராசராசன் மகன் இராசேந்திரன் கங்கையும் கடாரமும் கொண்டு ஜாவா வரை சென்று தமிழர்தம் வெற்றியை நிலைநாட்டிக் 'கங்கை கொண்ட சோழன்' ஆனான். இந்தக் காலமே, சங்க காலத்திலும் பலவகையில் ஏற்றமுற்ற காலம் எனலாம். இக்காலம் வரலாற்று எல்லையில் அமைந்து, முறைப்படி மக்கள் வாழ்வை உலகுக்குக் காட்டுகின்றது.

**பிற்காலப் பாண்டியர் :**

சிறந்த சோழப் பேரரசும் சரிந்தது. தாழ்ந்த பாண்டியர் தலை தூக்கினர். மேலைக் கடற்கரையில் வாழ்ந்த சேரர் பரம்பரையினரோ, வேறு வகையிலேயே வாழத் தொடங்கி விட்டனர் எனலாம். அவர்தம் பழக்க வழக்கங்களும் வாழ்க்கை முறைகளும் பெரிதும் மாறி, 'மலையாள இனம், தனி இனம்' என்னும் வகையில் பெருக வழி உண்டாயிற்று. அவர்கள் மொழியும் தனி மொழியாகி நின்று வடமொழித் தொடர்பினை அதிகமாகக் கொண்டு பிரிந்து விட்டது. தென்கோடியில் தலை தூக்கிய பாண்டியர்களாலும் நெடுங்காலம் தங்கள் தமிழகத்தைக் காக்க இயலவில்லை. வடவிந்தியாவில் இத்துணைக் காலங்களிலும் ஏற்பட்ட எத்தனையோ மாறுதல்கள், அவ்வப்போது தமிழகத்திலேயும் சிற்சில மாறுதல்களைச் செய்து விட்டுத்தான் சென்றன. எனினும்

பிற்காலப் பாண்டியர் ஆட்சி எல்லையில் பதினான்காம் நூற்றாண்டின் தொடக்கத்தில் வடநாட்டு இசுலாமிய ராட்சியின் வேகம் தமிழ் நாட்டில் தலைகாட்டலாயிற்று. மற்றோர் இருண்ட காலம் தமிழ் நாட்டின் வரலாற்றில் அமைந்த நிலை ஏற்பட்டு விட்டது. அல்லாவுதீன் கில்ஜி போன்றோர் தம் படைகள் தமிழ் மண்ணில் கால் வைத்தன. தமிழ் நாட்டுக்கு அதுவரை பழக்க மற்ற புதிய சமயமும் பண்பாடும் பிறவும் அக்காலத்தில் குடி புகுந்தன. மேலைக் கடற்கரையில், அதற்கு முன்பே அரபிய நாடுகளின் வியாபாரத் தொடர்பால் இசுலாமிய சமயமும் அவர் தம் கலாசாரமும் பிறவும் பரவி நின்றன என்றாலும், அரசியல் ஆதிக்கத்தின் வழி இக்காலத்திலே தான் அச்சமயம் தமிழ் நாட்டில் அதிகமாக வேரூன்ற லாயிற்று தமிழ் நாட்டுப் பண்டைய கலாசாரம், சமய நெறி, வாழ்க்கைமுறை முதலிய அனைத்தும் நிலை மாறலாயின.

## பிற நாட்டார் ஆட்சி :

வடநாட்டு இசுலாமிய ராட்சியால் தம் இந்துப் பேரரசு குறைவதைக் கண்ட மராட்டிய வமிசச் சிவாஜி யும், விசய நகரப் பெருவேந்தரும் தென்னாட்டை வட நாட்டு ஆதிக்கத்திலிருந்து காப்பாற்ற விழைந்தனர்; தம் விழைவில் ஓரளவு வெற்றியும் பெற்றனர் எனலாம். விசயநகரப் பேரரசர் தமிழகத்தைக் கைப்பற்றிக் கொண்டு மறைய இருந்த பழந்தமிழ்ப் பண்பாட்டை ஓரளவு உயிர்ப்பித்து வாழ வைத்தனர் எனலாம். என்றா லும், விளக்கமுற்றிருந்த தமிழகம் இக்காலத்தில் ஒளி இழந்து இருண்ட கால வாழ்வையே நடத்திற்று என்பது பொருந்தும்.

விசயநகர அரசரும் மராட்டியரும் தமிழகத்தின் பகுதிகளை நன்கு ஆண்டனர். மதுரையில் நாயக்கர்

ஆட்சியும், தஞ்சையிலும் செஞ்சியிலும் மராட்டிய ராட்சியும் தமிழகத்தில் பெருமாறுதலை உண்டாக்கி விட்டன என்று சொல்வதற்கு இல்லை என்றாலும், அவர்கள வருகை தமிழ்நாட்டு வரலாற்றில் முக்கிய இடம் பெற்று விட்டதென்பது மறுக்க முடியாத உண்மையாகும்.

இந்த இருண்ட வேளையிலேதான் மேலை நாட்டுப் போர்த்துக்கீசியரும், டச்சுக்காரரும், ஆங்கிலேயரும் தமிழ் மண்ணிலும் மேலைக் கடற்கரையிலும் கால் வைத்தனர். தமிழ் நாட்டு வரலாற்றுத் தொடக்கத்தில் வாணிபத்தின் பொருட்டு வந்த கிரேக்க யவனரைப் போன்றே இவர்களும் இங்கு வந்தார்களேனும், இங்கு வந்து வாழ்ந்த காலத்தில் ஏற்பட்ட சூழ்நிலை காரணத்தால் இங்கேயே தங்கி நாட்டைக் கைப்பற்றி ஆளவும் தொடங்கி விட்டனர். தமிழ்நாடு அந்த மேலை நாட்டு வாணிப ஆட்சியாளருக்குப் பலமுறை போர்க்களமாகி நின்றது. தென்னாட்டு மைசூரிலும் ஆர்க்காட்டிலும் ஆண்ட இசுலாமிய மன்னரும், கடல்வழி வந்த மேலை நாட்டவரும், அவர்கள் இடையில் நின்ற விசயநகர மராட்டிய நாயக்க மரபினரும் பண்டைத் தமிழர் தம் வாழ்வினைப் பல வகையில் நிலைமாறும்படிச் செய்து விட்டனர். சென்ற இரண்டு நூற்றாண்டுக் காலத்தில் ஆங்கில ஆட்சி நிலை பெற்று ஓரளவு அமைதி கண்டோம் என்றாலும், அதற்கு முன் இரண்டொரு நூற்றாண்டுகளில் தமிழ் நாட்டு வரலாறு கொந்தளிப்பாகவே இருந்தது.

**மேலை நாட்டார் ஆட்சி :**

வாணிபத்தின் பொருட்டு வந்த மேலை நாட்டினருள் தலை தூக்கியவர் ஆங்கிலேயரே. அவர் காலத்தில் இது

வரை இராத வகையில் பரந்த பாரதம் இமய முதல் குமரி வரை ஒரே ஆட்சியின் கீழ்ப்பட்டது. தமிழ் நாடு ஆங்கில ஆட்சியில் பல நன்மைகளையும் தீமைகளையும் விரவிப் பெற்றது. சமயத் துறையில் இசுலாமியமும் அடுத்துக் கிறிஸ்துவமும் நிலை பெற்று வளர இடந் தந்தது. தமிழ்மொழி மேலை நாட்டுப் பாதிரிமார்களைப் பற்றி ஈர்த்து அவர்களைத் தமிழராகவே வாழச் செய்தது. அந்த வகையில் தமிழும் தமிழ் நாடும் வந்தவரைச் சொந்தக் காரராக்கித் தன் வரலாற்று நெறியை மாற்றியும் திருத்தியும் அமைத்துக் கொள்ளத் தயங்கவில்லை.

**உரிமை வேட்கை :**

பரந்த பாரத நாடு விடுதலை பெற வேண்டும் என்ற விருப்பத்தால் இந்த நூற்றாண்டிலும் சென்ற நூற்றாண்டிலும் நாட்டில் பல அமைதிப் போர்களும், ஆர்வாரப் போர்களும் நடைபெற்றன. இணைந்த தமிழகமும் அந்த உரிமைப் போராட்டத்தில் பெரும் பங்கு கொண்டது. ஆங்கிலேயருக்குத் திறைகொடா இயக்கம் தமிழ்நாட்டில் தொடங்கிற்று கட்டபொம்மனும் பிறரும் ஆங்கில ஆட்சித் தொடக்கத்திலேயே வரிகொடா நிலையில் நின்றனர். பின் உரிமை வேட்கை மிகுந்த காலத்தில் நாட்டிலேயே பெருங் கிளர்ச்சி உண்டாயிற்று. ஆங்கில வணிகருக்கும் அரசியலாருக்கும் எதிராகக் கப்பல் கம்பெனி தொடங்கிய வ.உ.சி. அவர்கள் தமிழரல்லவா! இப்படித் தமிழகம் பரந்த பாரதநாட்டு உரிமைப் போரில் பங்கு கொண்ட வரலாறும் அறிய வேண்டுவதாகும்.

இறுதியாக உரிமை பெற்ற பாரதத்தின் ஓர் அங்கமாக, இழந்த குமரி எல்லையைப் பெற்று, வேங்கடத்தை

இழந்து, இன்று மக்கள் சுய ஆட்சி முறையில் சட்ட சபைகளின் வழியே தமிழ் நாடு தன் வாழ்வை நடத்தி வருகின்றது.

இதுவரை கண்ட ஆட்சி முறைகளின் வழி அவ்வலரசர்களைப் பற்றி மட்டும் நாம் எண்ணிப் பார்ப்போமாயின், அது வரலாறே ஆகாது. சங்ககாலம் தொடங்கி இன்று வரை வாழ்ந்த ஒவ்வொரு பேரரசின் காலத்திலும் ஒவ்வொரு நூற்றாண்டிலும் வாழ்ந்தமக்களின் வாழ்க்கை முறை, சமுதாய வளர்ச்சி, வாணிபம், அரசியல், பொருளாதாரம், பிற எல்லாவற்றையும் தொகுத்துக் காண்பதே இந்த வரலாற்று முறையின் முக்கிய நோக்கமாகும். வரலாற்று எல்லையில் நின்று வசதிக்காகவும் முறைப்படுத்தவும் அரச பரம்பரைகளைக் கால எல்லைகளாகக் கொண்ட போதிலும், அந்த அரச பரம்பரைகளை மட்டும் பாராது மக்கள் வாழ்வைக் காண்பதே இனிநாம் செய்யப் போவதாகும். தொடர்ந்து ஒவ்வொரு கால எல்லையிலும் தமிழகம் எவ்வெவ்வாறு இருந்தது என்பதைக் காண்போம்.

# V. வரலாற்றுக்கு முற்பட்ட தமிழகம்

**பரந்த நிலப்பரப்பு :**

வரலாறு என்றும் வாழ்வது. ஒரு நாடு வீழ்ச்சி அடைந்தாலும், அன்றி நிலை குலைந்தாலும், அன்றி அழிந்து விட்டாலும். அந்த நாட்டு வரலாறு மட்டும் எஞ்ச நின்று வாழும், உலகில் எத்தனையோ நிலப்பகுதி கள் இருந்து மறைந்தன. அவை வரலாற்று எல்லையில் நின்று மறைந்து சென்றிருப்பினும், அவற்றின் வரலாறு வாழ்ந்து கொண்டு தானே இருக்கும்! வரலாற்று எல்லைக்கு அப்பாற்பட்டதாயினும், அவை இருந்து அழிந்த நிலை எப்படியும் உலவிக் கொண்டிருக்கிற தன்றோ! அத்தகைய ஒரு நிலை நம் தமிழகத்துக்கு ஏற் பட்டுள்ளது. தமிழகம் இதற்கு விலக்காகுமா? தமிழ்நாடு எல்லையால் இன்றைய எல்லையைக் காட்டிலும் மிகவும் விரிந்து பரவியதாய் இருந்தது என்பதை நிலவரலாற்று ஆசிரியர்களும் உயிர் வரலாற்று ஆசிரியர்களும் ஒருசேர ஆராய்ந்து முடிவு கண்டுள்ளனர். அந்த நாட்டுப் பரப்பு மிக விரிந்து கிடந்தது என்பர். இறையனார் களவியல் உரை போன்றவை காண்பாருக்கு அந்தப் பரந்த பெரு நாட்டின் பிரிவுகளும், அவற்றின் பெயர்களும் பிறவும் நன்கு விளங்கும். சங்கங்கள் மூன்று இருந்தன எனவும், முதற் சங்கம் தென் மதுரையிலும், இடைச் சங்கம் கபாட புரத்திலும் கடைசங்கம் இக்கால மதுரையிலும் இருந்தன எனவும் கூறுகின்றனர். முதற்சங்கம் இருந்த மதுரையும், இடைச்சங்கம் இருந்த கபாடபுரமும், அவற்றைச் சார்ந்த பஃறுளியாறு, குமரிமலை அனைத்தும் கடல் கோள்களால் அழிந்து விட்டன என்பர். பஃறுளி என்பது வெற்று வெள் ளப் பெருக்கைக் குறிப்பதென்றும், ‘குமரிக்கோடு’

இக்கால எல்லையே என்றும் கூறிப் பரந்த நிலப்பரப்பு இருந்ததென்ற உண்மையை மறுப்பாரும் உளர். எனினும் மேலை நாட்டு ஆய்வாளர் கூற்றும் நம் தமிழ் இலக்கியத் தொடர்களும் பரந்த நிலப்பரப்பு இருந்த உண்மையை நிலை நாட்டுகின்றன. 'இழந்த லெமூரியாக் கண்டம்' என்ற நூலில் அதன் ஆசிரியர் பரந்த நிலப்பரப்பு உண்மையை விளக்கி எழுதுகின்றார்[1] சிலப்பதிகாரம் குமரிக்கோடும் பிறவும் கடலால் கொள்ளப்பட்டதை விளக்கிக் காட்டுகின்றது.[2] இறையனார் அகப்பொருள் உரை இவற்றிற்கெல்லாம் விளக்கம் தந்தது போன்று நாற்பத்தொன்பது நாடுகளைப் பற்றிக் குறிக்கின்றது. வடமொழி தமிழ்ப் புராணங்கள் பலவும் தெற்கே பெரும்பகுதிகள் இருந்தாகவும் அவற்றுள் அசுரர்கள் வாழ்ந்ததாகவும், காலப்போக்கில் அவை மறைந்த தாகவும் குறிக்கின்றன. அவை கூறும் அத்தனையும் உண்மை என்று கொள்ள இயலாவிடினும், பரந்த நிலப் பரப்பு இருந்தது என்று கொள்வதில் தவறில்லை எனலாம். உலகத் தோற்றத்தைப் பற்றிக் கூறும் இன்றைய மேலை நாட்டு ஆராய்ச்சியாளர் இந்த நில அமைப்பு எத்தனை முறைகள் மாறி இருக்கின்றது என்பதைப் படங்கள் வாயிலாகவே விளக்கி உள்ளனர்.[3] எனவே, இந்து மகா சமுத்திரம் நிலமாய் இருந்திருப்பதில் வியப்பில்லையன்றோ !

## உயிர்த் தோற்ற வளர்ச்சி

பரந்த நிலப்பரப்பும் சுற்றிச் சூழ்ந்த கடலும் தமிழ் நாட்டுக்கு எல்லைகளாகவும் குறியீடாகவும் அமைந்து

1. The Lost Lemuria குமரிக் கண்டம்-அப்பாத்துரை
2. சிலப்பதிகாரம், 11 ; 19-22 அடிகள்
3. The Biography ot Earth, by George Gomow

விட்டன. இந்நிலத்தில் மனிதன் எப்போது தோன்றினான்? எப்படி வளர்ந்தான்? அவன் தோன்றுமுன் வாழ்ந்த உயிர்கள் யாவை? அம் மனிதன் இங்கேயே தோன்றினானா? அல்லது வேறு பகுதியிலிருந்து வந்தானா? இவை போன்ற கேள்விகளுக்கு விடை இறுத்தல் எளிதன்று. எனினும், உலக உயிர்த் தோற்றத்தையும், மனித வளர்ச்சியையும் துணைக் கொண்டே ஒருவாறு நம் நாட்டு வளர்ச்சியையும் காணலாம். நாம் முன் கண்டபடி இன்றைக்கு 50.000 ஆண்டுகளுக்கு முன் பனிபடு காலமாய் இருந்தது கி. மு. 60,000 முதல் 50,000 வரை பனிபடு காலமென்பர் வெல்ஸ், கார்டன் சைல்டி போன்ற பேராசிரியர்கள்[1] அதற்குமுன் உலக நிலை என்னவென்பது கூற இயலாது. உலகம் தோன்றிக் கோடிக்கணக்கான ஆண்டுகள் கழிந்திருந்த போதிலும் இன்றைய மனித அறிவின் எல்லை அந்தக் குறுகிய பனி படு கால எல்லையிலேதான் முடிகின்றது அந்தப் பனிபடு காலத்துக்குப் பிறகுதான் உயிரினங்கள் உலகில் தோன்றி இருக்கக் கூடும் என்பது ஆய்வாளரின் முடிவு, இன்றும் மிகக் குளிர்ந்த பனிபடு துருவங்களில் உயிரினம் வாழ முடியாத நிலையினைக் காண்கின்றோம். சிலர் பனிபடு காலத்திலேயே உயிரினம் வாழ்ந்ததெனவும் மனிதனைப் போன்ற உருவமும் அக்காலத்தில் இருந்ததெனவும் கூறுவர். இந்த உயிரினத் தோற்ற வளர்ச்சி எல்லையின் இறுதியே மனித உருவம். ஒரு சிலர் நெடுங்காலத்துக்கு முன்பு மனிதன் இல்லையாயினும் மனிதனைப் போன்ற உருவங்கள் உலவின என்பர்.[2] 30,000 ஆண்டுகளுக்கு

1. Man Makes Himself. by Garden Childe
2. The Biography of Earth. by George Gomow

முன் வாழ்ந்த மனிதனது எலும்புக் கூடுகளும் இன்று கிடைக்கின்றனவாம்.[1]

இந்தப் பனிபடு காலத்திற்கு நெடுநாள்களுக்குப் பின்னரே பழைய கற்காலம், செப்புக்காலம், எலும்புக் காலம், இரும்புக்காலம், புதுக் கற்காலம் முதலிய வரலாற்றுக் காலங்கள் ஒன்றன்பின் ஒன்றாகக் கழிந்தன. புதுக் கற்கால எல்லை கி. மு. 12,000 முதல் 5,000 வரையாகும். இந்தக் காலத்துக்கு முன்பே நாகரிகம் என்பது என்ன என்பதை மக்கள் அறிந்திருந்தார்கள் என்பர் வெல்ஸ். எனவே, கி. மு. 50,000க்கும் 12,000க்கும் இடையில் கழிந்த காலங்களைப்பற்றி ஓரளவு கண்டு மேலே செல்லலாம்.

அந்தக் காலத்தில் எத்தனையோ உயிரினங்கள் தோன்றி வளர்ந்த போதிலும், மனிதன் அவற்றினின்று தனிப்பட்டவனாகிச் சிறந்தான். இந்த உயிர்த் தோற்றத்தைப் பற்றி பலர் ஆராய்ந்தனர். உயிர் வகைகள் மனிதனுக்கு நெடுந்தொலைவில் செல்லச் செல்ல அதிகமான முட்டைகள் இட்டுப் பெரும்பாலன அழிவு பெற, வாழ்வன சிலவேயாயின. ஒரு கருவில் பல ஆயிரம் தோன்றி அழியும் மீனினத்துக்கும், ஒரு கருவில் ஒரே உயிர் தோன்றும் மனித இனத்துக்கும் வேறுபாடுகள் உள. மீனினம் ஒரு கருவில் 6000,000, முதல் 28,000.000 வரை முட்டைகள் இடுமாம். ஆனால், அத்தனையும் குஞ்சுகளாகி மீனென நீந்தத் தலைப்பட்டிருந்தால், கடல் என்றோ வற்றி, எங்கும் மீன் எலும்புகளே நிறைந்திருக்கும். அப்பெரிய எண்ணில் பிழைக்கும் கணக்கு 14,000,000க்கு ஒன்று வீதமேயாகும். வேறு சில உயிரினங்கள் நூற்றுக்கு ஒன்று வீதமே பிழைத்து வாழ்

1. A Short History of the World by H. G. Wells

கின்றன. ஆனால், மனிதன் மட்டும் ஒரு கருவில் ஒருவனாய்த் தோன்றிச் சில காலமாவது சாகாதிருக்கும் வழித் துறைகளை ஆராய்கின்றான்.[1]

**ஆதி மனிதன் :**

இன்றைய இருபதாம் நூற்றாண்டின் மனிதனுக்கும் ஆதிமனிதனுக்கும் எத்தனையோ வகையில் வேறுபாடுகள் உள்ளன. முதல் மனிதன் விலங்கினும் வேறாய் நின்று முயன்று முயன்று இயற்கையும் செயற்கையும் கலந்த ஒரு வாழ்விலே வாழ்ந்திருப்பான். நிலப்பிரிவுகள் தோன்றிய பிறகே மனித இனம் தோன்றியிருக்கும் அந்த ஆதி மனிதனும் பிற உயிர்களினும் உடற்கூற்றில் மாறுபட்டவனாகவே இருந்திருப்பான், எனவே, தனித்து வாழ வேண்டும் என்ற உணர்வு தோன்றியிருக்கும். அவன் உடல் அமைப்பும் பிற உயிர்களைப் போன்று புற இயற்கைகளைத் தாங்க வசதி அற்றதாகவே இருந்திருக்கும். அவன் பெற்றிருந்த உள்ள உணர்ச்சியோ, அறிவோ, அன்றி மூளையோ அவனுக்கு அந்தக் காலத்திலேயே உதவியிருக்கும். உள்ளத் தூண்டுகோலும் பிற புற உலக அனுபவங்களும் சேர்ந்தே அவனை வளர்த்து வந்தன எனலாம். பிறகு அவனது பேச்சும் அதன் வழி உருவான மொழியும் அவனைப் பிற விலங்குகளிலிருந்து வேறுபடுத்திக் காட்டிவிட்டன.

**மொழியும் கலையும் :**

மொழி ஏற்பட்ட காலம் எது எனத் திட்டமாகக் கூற முடியாவிட்டாலும், அது மனித வாழ்வில் ஒரு திருப்பு மையமாய் அமைந்துவிட்டது. இன்று நாம் பேசும் இதே வகையில் ஆதி மனிதன் பேசினான் என்று

1. Man Makes Himself, by Gorden Childe.

யாரும் கூறமாட்டார். எனினும், அவன் மொழி வகையால் பிற விலங்கிலிருந்து வேறானான். இன்று உலகில் வாழும் மக்கள் பேசும் மொழிகளைப் பலவகையில் பிரிக்கின்றார்கள். இந்து ஐரோப்பிய மொழிக் குடும்பம் என்றும், செமிட்டிக்குக் குடும்பமென்றும், திராவிட மொழிக் குடும்பம் என்றும் பல வகையில் உலக மொழிகள் பிரிக்கப்படுகின்றன. இங்குத் தமிழகத்தில் மிக்க பழங்காலத்திலிருந்து வழங்கி வந்த மொழி திராவிட இனத்தைச் சேர்ந்ததே என்று கொள்வதில் தவறு இல்லை ஒரு சிலர், மனித இனம் மத்திய ஆசியாவிலே தோன்றி, ஒரு மொழி பேசிப் பிறகு அந்த இனம் நான்கு பக்கங்களிலும் சிதறிச் சென்று பல குடும்பங்களாக மாறிற்று என்பர். சிலர், இழந்த லெமூரியாக் கண்டமாகிய பழந்தமிழகமே உலக மக்களினத்துக்கும். மொழிக்கும். நாகரிகத்துக்கும் தொட்டிலாய் இருந்து, பெற்று வளர்த்துப் பிற நாடுகளுக்கு அனுப்பியது என்பர். இருவர் கூற்றும் மெய்யாகலாம். இன்றைய மொழிக் குடும்பங்களின் இருவேறு வகைப்பட்ட அமைப்பும், தோற்ற வளர்ச்சி முறைகளும், இவ்வுண்மையினைப் பல வரலாற்று ஆசிரியர்கள் ஏற்றுக் கொள்ளுகின்றனர் இரு வேறு வகைப்பட்ட உலக மக்களின் பண்பாடு, நாகரிகம், கலை, மொழி ஆகியவற்றின் நிலைகளும்அவர்தம் கூற்றை மெய்ப்பிக்கலாம். எப்படியாயினும், நம் பழந்தமிழ் நாடு உலகில் மிகத் தொன்மை வாய்ந்ததென்பதும், அதன் மொழியும் கலையும், பண்பாடும், பிறவும் காலத்தால் பழையன என்பதும் ஆராய்ச்சியாளர்கள் கண்ட உண்மைகளாகும்.

**நாகரிக வளர்ச்சி ;**

ஆதி மனிதன் தான் விலங்கினும் வேறானான் என அறிந்ததோடு அமையாது, தனக்கென உணவு, உடை

ஆயுதம், ஆபரணம் முதலியவற்றையும் தேடிக்கொள்ள நினைத்து, சிறுகச்சிறுக வெற்றியும் கண்டிருப்பான். அந்த வெற்றியின் ஒவ்வொரு படியின் எல்லையே காலக் கூறுபாடாய் அமைந்துள்ளது. அவன் கற்களைத் தன் துணைக் கருவிகளாக உபயோகித்ததைக் கற்கால மெனவும், செம்பை உபயோகித்ததைச் செம்புக் கால மெனவும் இரும்பை உபயோகித்ததை இரும்புக் கால மெனவும் வரலாற்று ஆசிரியர்கள் கணக்கிட்டிருக் கிறார்கள். தன் வாழ்வுக்குத் தேவையான பொருள் களைப் பெற அவன் உபயோகித்த உலோகப் பொருள்களே வரலாற்று எல்லைக் கற்களாய் அமைந் துள்ளன. மனிதன் மிகப் பழைய காலந்தொட்டே மட்பாண்டம் செய்வதில் சிறந்திருந்தான். மட்பாண் டங்கள் செய்யக் கற்றுக் கொண்ட காலமும் மனித வாழ்வில் ஒரு முக்கிய மாறுபாட்டுக் காலமாகும். இன்றைய உலகத்தின் தொன்மை வரலாற்றைக் காண விரும்பும் வரலாற்று ஆசிரியர்கள் இந்த மட்பாண்டங் களாகிய தாழிகளையே துணையாக நாடுவார்கள். சிந்து வெளி நாகரிக மட்பாண்டங்களும், அவற்றில் தீட்டப் பெற்ற நிறங்களும், திருநெல்வேலிக்கு அருகில் கிடைத்த தாழிகளும், பிற நாடுகளில் கண்டெடுக்கப்பட்ட தாழிகளும், எத்தனை எத்தனை வரலாறுகளை நமக்கு எடுத்துக் காட்டுகின்றன !

இவை மட்டுமன்றி, இன்னும் எத்தனையோ வகைகளில் நாளுக்கு நாள் தேவை கருதி மனிதன் தன் வாழ்வை மாற்றியும், திருத்தியும், பிற வகையிலும் வேறுபடுத்தியும் அமைத்துக் கொண்டான். கடல்மேல் சிறு படகு கொண்டு அதைக் கடக்க நினைத்த காலம்

எதுவாயினும், அது அவன் வாழ்வில் மறக்க முடியாத ஒரு திருப்பு மையமாகும். இன்று நாடு விட்டு நாடு சென்று நடக்கும் வாணிப வளனுக்கு எல்லாம் அது தானே முதல் இடமாக அமைகின்றது! இப்படி எத்தனையோ மைல் கற்கள் அவன் வாழ்க்கை வரலாற்றுப் பாதையில் வந்து வந்து சென்று கொண்டிருக்கின்றன. அவனுந்தான் தோன்றிய அந்த நெடுங் காலத்துக்கு முன் தொட்டு இன்று வரை இயற்கையை எதிர்த்து, விலங்கு பறவை, ஊர்வன முதலிய பிற உயிர் களை எதிர்த்துப் போராடி, தன் வாழ்வின் தேவை களை அமைத்துக் கொண்டு இன்று ஓரளவு அவை அனைத்தையும் கட்டியாள்வதோடு விண்ணும் மண்ணும் தன் ஆணையின் கீழ் உள்ளன என்ற பெருமிதத்தால் தருக்கி வாழும் வகையில் வந்து விட்டான். ஆம்! இவனது வரலாற்றை அன்று தொட்டுச் சங்ககால எல்லை வரை பொதுப்பட ஆராய்வதே வரலாற்றுக்கு முற்பட்ட தமிழகத்தை நமக்குக் காட்டுவதாகும்.

**கற்காலமும் இரும்புக் காலமும் :**

பனிபடு கால எல்லையில் விலங்கினமென வாழ்ந்த மனிதன் சிறிது சிறிதாகக் காலம் செல்லச் செல்ல முன்னேற்றங் கொள்ள ஆரம்பித்தான். எந்த வகையில் அவன் கி, மு 50,000விருந்து 5000தைத் தாவிப் பிடித்தான் எனத் திட்டமாகக் கூற இயலாவிட்டாலும், அவன் முன்னேற்றம் மிக அமைதியாக— மெதுவாக நடை பெற்றது என்று கொள்ளுதல் வேண்டும். அவன் மரமேறக் கற்றுக் கொண்டான். விலங்கினத்தைப் போன்று கண்டதைக் கண்டபடியே தின்னும் இயல்பி லிருந்து சிறிது சிறிதாக விடுபட்டு, வேறு வகையில் தன் உணவினை அமைத்துக் கொண்டான் மனிதன். அவன் தன்னைத் தாக்க வரும் விலங்குகளிடமிருந்து காப்

பாற்றிக்கொள்ள இயல்பாகக் கிடைத்த கூரிய கற்களையே ஆயுதமாகக் கொண்டான். அந்தக் காலமே கற்கால மாக்கப்பட்டது. பிறகு மனிதன் சற்று முன்னேற்றமடைந்த காலத்திலேதான் இரும்பையும் செம்பையும் உபயோகிக்க கற்றுக் கொண்டான். தனித்து வாழ்ந்த மனிதன் இந்தக் காலத்தில் மற்றவர் துணையோடுதான் வாழ்ந்திருக்க வேண்டும். காணும் கல்லை எடுத்துத் தனியாகத் தீட்டி ஆயுதமாக உபயோகிக்க வேற்றவர் உதவி தேவை இல்லை. எனினும், இரும்பையோ செம்பையோ வடித்துக் கூரிய ஆயுதமாக்க வேண்டுமானால். அவன் மற்றவர் உதவியை நாடாது எப்படிச் செயலாற்ற முடிந்திருக்கும்? எனவே, கற்காலத்தில் வாழ்ந்த மனிதனைக் காட்டிலும் இரும்பு, செம்புக்காலங்களில் வாழ்ந்த மனிதன் மற்றவரோடு கூடி வாழக் கற்றுக் கொண்டவனாகத்தான் இருக்க வேண்டும். விலங்கெனத் தனித்து வாழ்ந்த வாழ்வை விடுத்து, மனிதன் கூடி வாழக் கற்றுக்கொண்ட அந்தச் செம்பு, இரும்புக் காலங்கள் மனித வரலாற்றில் முக்கிய இடம் பெற்றுவிட்டன.

முதல் கற்காலம் மனிதன் தனியாகத் தனக்கு உணவு தேடிய காலமே எனலாம். அதை அடுத்து ஒன்றன் பின் ஒன்றாகப் பல்வேறு காலங்கள் தோன்றி, அவன் வாழ்வைக் காட்டு வாழ்விலிருந்து நாட்டு வாழ்வாக்கும் முயற்சியில் அவனைச் செலுத்தின என்பது பொருந்தும். நாள், ஆண்டு, நூற்றாண்டு, ஆயிரமாயிரமாண்டுகள் என்ற எல்லையில் அவனையும் அவன் பரம்பரையையும் காலமானது பற்றி ஈர்த்துக் கொண்டே வந்துவிட்டது. அதன் இடையில் அவன் புதுப்புது உபயோகப் பொருள்களைக் கண்டான். அவற்றுள் ஒன்று நெருப்பாகும்.

மனிதன் வில்லும் அம்பும் கொண்டு வேட்டையாடக் கற்றுக்கொண்ட காலம் எது என்று திட்டமாகக் கூற முடியாவிட்டாலும், அது செம்புக் காலத்துக்கும் முற்பட்டதாக இருக்கும் என்பதில் ஐயமில்லை. காட்டில் வேட்டையாடி விலங்குகளையும் பறவைகளையும் கொன்று அப்படியே தின்று காலம் கழித்த மனிதன், அவற்றை நெருப்பி லிட்டுப் பக்குவப்படுத்திக் கொண்ட விந்தை இன்னும் யாருக்கும் புரியாத ஒன்றுதான். மேலை நாட்டுக் கலைஞரான **சார்லஸ் லாம்பு** (Charles Lamp)[1] என்பார் இந்நிகழ்ச்சியைச் சீன நாட்டுக் கதைமேல் ஏற்றிக் கூறினும், அது வெற்று வேடிக்கையேயன்றி வரலாற்றுக்கு ஒவ்வாதது. எப்படியோ நெருப்பின் உபயோகத்தை அறிந்தான் மனிதன்; இறைச்சிகளை மட்டுமன்றி, பிற காய், கிழங்கு முதலிய உணவுப் பொருள்களையும் நெருப்பின் வழிச் சீராக்கி உண்டான்

**பயிர்த்தொழில் :**

கனியும் காயும் கிழங்கும் உண்ட மனிதன், நெல்லும் கம்பும் பயிரிடக் கற்றுக்கொண்டான். பறவைகள் எங்கிருந்தோ கொண்டு வந்து எங்கோ இறைத்துச் செல்ல, அதன் வழி விளையும் நெல், கம்பு முதலிய வற்றைக் கண்டான் மனிதன்; அதை உண்டு பார்த்தான்; பின்பு அதைத் தானும் ஏன் பயிரிடலாகாது என நினைத்தான்; உழவும் கலப்பையும் அவனுக்குத் தெரியாதன வாயினும், எப்படியோ பயிரிடக் கற்றுக் கொண்டான்; அதற்குத் தேவையான நீர் வேண்டி ஆற்றங்கரைகளை அடைந்தான் அந்த நீர் கொண்டு உழவுத் தொழிலைத் தொடங்கினான் மனிதன். நைல், சிந்து, காவிரியாறு களின் நாகரிகங்களும், மெசபட்டோமிய சீன நாகரிகங் களும் இவ்வகையில் தோன்றிய ஆற்றங்கரை நாகரிகங்

1. A Dissertation upon Roast Pig, p. 19

களே, இன்று வரலாற்றில் சிறந்த நாகரிகங்களாகப் போற்றப்பெறும் இந்த ஆற்றங்கரை நாகரிகம், மனிதனை மேலும் கூடி வாழும் உணர்விற்கு ஈர்த்துச் சென்றது எனலாம். அந்தக் கூடி வாழும் வாழ்க்கை மனித இனத்தோடு மட்டுமல்லாது, பிற விலங்கினங்களோடும் கூடிவாழ வைத்தது. உழவனுக்கு வேண்டிய ஆடும் மாடும் அவன் அன்று தேடிச் சேர்த்து வைத்துக் கொண்ட உயிரினங்கள் தாமே! அவன் தன் உழவுக்கு எந்த எந்த உயிரினங்கள் நன்கு உதவும் என்று ஆராய்ந்து அவற்றை மெல்லப் பழக்கிக்கொண்டான். இன்று வீட்டு விலங்குகளாகிய ஆடும் மாடும் அன்று இவ்வாறு இருந்திருக்க வழியில்லை பிற விலங்குகளைப் போன்று காடு மேடுகளி லெல்லாம் கண்டபடி சுற்றிக் கட்டுக்கடங்காது மேய்ந்து, போரிட்டு மடியும் கொடிய விலங்குகளோடு விலங்காகவே அவைகளும் அன்று வாழ்ந்திருந்திருக்கும். ஆனால், விவசாயத்தின் பலன் கண்டு, அதைப் பெருக்க நினைத்த மனிதன், தன்னை ஒத்த பிற மக்களது உதவியை நாடியதோடு அன்றி, இந்த விலங்குகளின் உதவியையும் நாடினான்; காட்டு விலங்கை வீட்டு விலங்காக்கினான். உழவு செய்யவும் எருவிடவும், வண்டி இழுக்கவும், இன்ன பிற உழவு வேலைகள செய்யவும் மனிதன் விலங்கினத்தைத் தன்னோடு ஒட்டி வாழப் பழகும் வழிக்குக் கொணர்ந்தான் நாய் போன்ற விலங்குகளையும் தனக்குத் துணையாகச் சேர்த்துக்கொண்டான். ஆம், மனித வரலாற்றில் உழவினைத் தொடங்கிய அந்தக்காலம் ஒரு சிறந்த பொற்காலம் எனலாம்.

முன்னைய மனிதன் நாளாக ஆக எத்தனையோ பொருள்களை உபயோகித்தான். பருவத்தை அளந்

தான்; உழவுக்கும் பிற வாழ்க்கைக்கும் வேண்டிய பல பொருள்களைக் கண்டான். அவனுக்கு அன்று விஞ்ஞானம் தெரியாத ஒன்று. எனினும், இன்று விஞ்ஞானச் சாதனை வழிக் காணும் பல பொருள்களைக் கண்டு, அவற்றின் உதவியால் அன்றைய கற்கால மனித னும் தன் வாழ்க்கைக்கு வேண்டிய பல தேவைகளைச் செய்து முடித்தான் எனலாம்.

உழவுக்கு வேண்டுவது மழை. மழை இன்ன காலத் தில் பெய்யும், இன்ன காலத்தில் பெய்யாது என்ற நிலையை ஓரளவு உணர்ந்துகொள்ள முடிந்தால்தான் பருவத்தே பயிர் செய்ய முடியும். 'பருவத்தே பயிர் செய்,' என்றது நமக்குப் பழமொழியானாலும் அன்றைய மனித னுக்கு அது புதுமொழியு மல்லாத ஒரு புரியாத மொழி. எனினும், பயிர்த்தொழில் பழக்கம் ஏற்பட்ட பின் அந்தக் கால எல்லைக்கு ஆதிமனிதனும் கட்டுப்பட்டே வாழ்ந் திருப்பான். மழை பெய்தால் மண் கிளறி விதைத்து, வெள்ளத்தாலும் வெயிலாலும் சேதம் உண்டாகாதபடி பாதுகாத்து, அறுவடை செய்திருப்பான் அவன். எனவே, அவனுக்குப் பருவங்களும் அவற்றில் விளையும் பொருள் களும் பிறவும் தெரிந்திருக்க வேண்டும். சூரியனை முதலாகக் கொண்டு கணக்கிடும் பல கணக்குகளின் (Solar System) பாகுபாடுகளை அவன் நன்கு அறியானேனும், அவற்றின் அடிப்படைகளைப் புரிந்தே தான் அன்று அவன் உழவுத் தொழில் செய்து வந்தான். அந்தக் காலத்தை வரலாற்று ஆசிரியர்கள் கி. மு. 6000க்கும் 3000க்கும் இடைப்பட்ட காலம் என்பர். அக்காலத்திலேதான் மனிதன் காற்றின் விசையையும், சூரிய கதியையும், இரண்டும் சேர்ந்து கொண்டு வரும் மழையையும், அவற்றின் உதவியால் பயிர்த்தொழில்

செய்வதையும், அத்தொழிலுக்குப் பயன்படுத்தப்படு வனவாய மாடுகள், சக்கரவண்டி ஆகியவற்றின் உப யோகத்தையும் அறிந்தான் என்பர்.

**கூட்டு வாழ்க்கை :**

பயிர்த்தொழில் தனி மனிதனால் நடைபெறுவதன்று. அதற்குக் கூட்டு வாழ்க்கை அவசியம். எனவே, அந்தக் கி மு. 6000க்கு முன்போ பின்போ மனிதன் கூடி வாழக் கற்றுக்கொண்டிருக்க வேண்டும். மேலே செம்பும் இரும்பும் உபயோகித்த காலத்தில் மனிதன் கூடி வாழக் கற்றுக்கொண்டதை அறிந்தோம். அதை அடுத்துக் கூடி வாழும் வாழ்க்கையைக் கற்பித்தது உழவேயாகும். அந்த உழவுக் காலத்தில் மழை வருவதையும், விதைக்க வேண்டிய நாள்களையும், சூரிய சந்திரரையும் அவன் எண்ணிக் கணக்கிட்டிருப்பான்; அவைகளைக் கடவுள ராகவே போற்றியிருப்பான். ஆரியர் பழைய வாழ்வில் அவைகளெல்லாம் கடவுளராகப் போற்றப்பட்டதை வேதம் கூறுகிறதன்றோ! ஆம்! மனிதன் தன் வாழ்வை எண்ணிய பிறகு—அதில் பெறும் வெற்றி தோல்விகளை எண்ணிய பிறகு—கடவுள் உணர்வையும் பெற்றிருக்க வேண்டும். கி. மு. 5000ல் சமய உணர்ச்சி தோன்றி யிருக்க வேண்டும்[1]. தமிழ் நாட்டுச் சமயத் தலைவர்கள் தாங்கள் வணங்கும் கடவுளரைப் பற்றியும், அவர் கோயில் கொண்ட இடங்களையும் கூறும் போதும் கால எல்லைக்கு அப்பாற்படுத்தியே கூறுகின்றார்கள். எனவே, தமிழ் நாட்டில் சமய உணர்ச்சியும், கடவுள் வழிபாடும் வரலாற்று எல்லைக்கு முன்னரே தோன்றின என்பது உறுதி. 'அஞ்சி யாகிலும் அன்பு பட்டாகிலும்' ஆண்

1. Man Makes himself, by Garden Childe

டவனை வணங்கத் தோன்றுகிறது என்பார்கள் சமயத் தலைவர்கள். ஆம்! ஆதிமனிதன் பிற துன்பங் களுக்கு அஞ்சியே—சூரியன் மழை முதலியன, அளவுக்கு மீறி அல்லல் விளைக்கும் என்று அஞ்சியே—அவைகளை வணங்கியிருப்பான். இன்றும் பழங்காலத் தெய்வங்களை வழிபடும் நாட்டு வழிபாடு—மாரி முதலிய தெய்வங் களைப் போற்றும் நெறி—பெரும்பாலும் அச்சத்தால் நிகழ்வதைக் காண்கின்றோம் பின்பு அன்பின் வழிப் பூசனை உருப்பெற்றிருக்கும். எப்படியும் தனக்கு மேம் பட்ட ஒன்று தன் சக்தியைக் கடந்த நிலையில் இருக் கின்றது என்ற உணர்வு மனித உள்ளத்தில் இன்றைக்கு 7000 ஆண்டுகளுக்கு முன்னரே தோன்றி இருக்கும் என்பது வரலாறு கண்ட உண்மையாகும். எகிப்திய, பாபி லோனிய நாகரிகச் சின்னங்களும் தமிழ் நாட்டு இலக்கியங் களும் இவ்வுண்மையை விளக்குகின்றன எனலாம்.

மூறாவம் :

இப்படிச் சமய வாழ்வும் கூட்டு வாழ்வும் ஒன்றிக் கலந்தே அந்த நாளில் மனித சமுதாயத்தை உருவாக்கின எனலாம். பிறவற்றிற்கு அஞ்சிச் சேர்ந்து வாழ்வதும், தம் உணவைத் தேடிக்கொள்ள ஒத்துழைப்பதும் இயற்கை தானே? அந்தக் கூட்டு வாழ்வில் உறவு முறையும், இனப் பாகுபாடும், கலைவழி வேறுபாடும் தோன்றி வளர்ந்து விட்டன எனலாம். கி. மு. 6000-ஆம் ஆண்டில் தோன்றிய அந்த இனப் பிரிவும், பிற பிளவுகளுந்தாம் இன்று உலகில் பல்வேறு வகைப்பட்ட பிரிவுகளுக்குக் காரணம் எனலாம். இனப் பூசல்களும், சமயப் போர்களும், நாட்டுப் போர் களும் இந்த அடிப்படையான இன வழியில் தோன்றியதை அன்றைய மனிதன் வந்து கண்டால், 'அந்தோ! கூடி

வாழத் தேடிய இந்த இன 'உணர்வு இப்படி அந்தக் கூட்டு வாழ்வை வேரறுக்கவே பயன் படுகிறதே!' என்று நைந்து வாடுவான்.

மனிதனது கூட்டு வாழ்வில் நாகரிகம் முளைத்தது. வெற்று உணவை மட்டும் கருதிய மனிதன் மானத்தோடு வாழவும் விரும்பினான். அதனால், உடை தேவைப் பட்டது. விலங்குகளின் தோல்களையும் மரப்பட்டை களையும் கட்டிக் கொண்டு வாழ்ந்த நிலை போய், பட்டி னும் பஞ்சினும் ஆடை நெய்யக் கற்றுக் கொண்டான் அவன். சிந்துவெளி நாகரிகத்தின் மூலம் கி. மு. 3000த் திலேயே பஞ்சு ஆடை வழக்கத்தில் இருந்தது என்பது தெரிகிறது. அதனுடன் அக்காலத்தில் பொன் நகைகளும் பிற ஆடம்பரப் பொருள்களுங்கூட வழக்கத்தில் இருந்தன என அறிகிறோம். ஆடை மட்டுமன்றிச் சித்திரக் கலை முதலியனவும் அந்தக் காலத்திற்கு முன்னரே தோன்றி வளர்ந்திருக்க வேண்டும். சுமேரியரின் கலைச் சித்திரம் கி. மு. 3000க்கு முன் இருந்தது என்பர் வரலாற்றாளர். விலங்கைப் போல வாழ்ந்த மனிதன், இப்படி நாள் செல்லச் செல்ல ஒவ்வொரு துறையிலும் வளர்ச்சி அடைய லானான். பருவ காலங்களையும் அக்காலங்களில் பெய் யும் மழை, அதன் வழிப் பெருகும் பெருவெள்ளம் இவற் றின் கணக்குகளையும் கொண்டு ஆண்டும் திங்களுமாகிய கால எல்லைகளைக் கணக்கிடவும் கற்றுக் கொண்டான் மனிதன். பருவகாலங்களும், பருவ மழையும் தமிழ் நாட்டுக்குத் தனிச்சிறப்பாய் அமைந்துள்ளன. அவற்றைக் கொண்டு அன்றைய மனிதன் கால எல்லையைக் கணக் கிட்டான். கிரேக்க ரோம நாடுகளில் கி.மு. 4236லோ அன்றி 2776லோ இந்த ஆண்டுக் கணக்கினைத் (The actual

Calendar) தொடங்கினார்கள் என்பர் ஆய்வாளர். இந்த அமைப்புக்களையும் கால எல்லைகளையும் ஐம்பது ஆண்டுக் காலத்தின் இயற்கை நிகழ்ச்சிகளைத் தொடர்ந்து ஆராய்ந்து கண்டே அத்தகைய ஆராய்வின் முடிவாகத் திட்டமாக வரையறுத்தார்கள் என்று கொள்ளுதல் மிகப் பொருந்துவதாகும்.

**பிரிவுகளும் பிளவுகளும் :**

இவ்வாறு அமைந்த மனித சமுதாயம் இன்னும் பல வகையில் தன் வாழ்வுக்கேற்றபடி மாறுதல்களை அமைத்துக் கொண்டது. தலைவர்கள் தோன்றினார்கள். கூட்டு வாழ்க்கையும் இன உணர்வும் தோன்றியதும் அவற்றை நடத்திச் செல்லத் தலைவன் தேவையானான். இவ்வாறு தலைவனும், பின் அவனுக்கு வேண்டிய பிறரும் தோன்றலாயினர். உயர்வு தாழ்வு மனப்பான்மை தோன்றலாயிற்று. ஒரு சிலர் ஆளவும் ஒரு சிலர் தாழ்ந்து அடிமையாகவும் வேண்டிய நிலையும் உண்டாயிற்று. கூட்டுச் சமுதாய வாழ்வில், வாழ்க்கை நலத்தின் பொருட்டுப் பணியாற்ற ஏற்படுத்தப்பட்ட வேறுபாடுகள் பிறகு மனித இனத்திலேயே ஏற்றத் தாழ்வைக் கற்பித்துவிட்டன விலங்கினும் வேறுபட்ட மனிதன், அதனோடு பலப்பல ஆயிரமாண்டுகள் போராடி வெற்றி கண்டான். எனினும், அந்த வேற்றுமை மனப்பான்மையும் போர் உணர்ச்சியும் காலப் போக்கில் வேறு வகையில் திரும்பின; ஒரு மனிதன் மற்றவனை வெல்வதிலும், ஓர் இனம் வேறு இனத்தின் மேல் படையெடுத்து வெற்றி காண்பதிலும் திரும்பின. இதனால் போர் முறை தெரிய அதற்கேற்ற படைகளும் தோற்றுவிக்கப்பட்டன.

இப்படி வளர்ந்துகொண்டே வந்த மனித சமுதாயம் தோன்றிய இடத்திலிருந்து பலவிடங்களுக்குப் பிரிந்து சென்றதா, அன்றி ஒரே சமயத்தில் உலகின் பல பாகங்களிலும் தோன்றி வளர்ந்ததா என்பதைப் பற்றி இன்னும் திட்டமான முடிவு காண இயலவில்லை. எனினும், சீனம், தமிழகம், சிந்து வெளி, மெசபட்டோமியா, கிரிஸ், எகிப்து, உரோம் முதலிய நாடுகளில் மிகு பழங்காலந் தொட்டு ஒன்றை ஒன்று ஒத்த நாகரிக வளர்ச்சியும் பண்பாடும் கலை உணர்ச்சியும் பிற இயல்புகளும் இருந்தன என்பர் வரலாற்று ஆய்வாளர்.

நாகரிகங்கள் :

தனிப்பட்ட வாழ்விலே இருந்து கூட்டு வாழ்வினைப் பற்றிய மனிதன் சிறு ஊர்களை அமைத்துக்கொண்டு வாழ்ந்தான் என்றும், அவ்வாழ்வே ஆற்றங்கரை நாகரிகத்தின் அடிப்படை என்றும் கண்டோம். அந்தக் கூட்டு வாழ்வே பின்பு பெருநகர வாழ்வினையும் (The Urban evolution) உண்டாக்கியது எனலாம். வெற்று உழவாளிகள் என்பது போய், பிற தொழில் வளர்க்கும் மற்றவரும், அவற்றின் வழி வாணிப வாழ்க்கை செய்பவரும், மேலே கண்ட அரச வாழ்க்கையில் உள்ளவரும், அவர்க்குத் துணையாய் உள்ளவர்களும் சேர்ந்து வாழ்ந்த ஒன்றே நகர வாழ்வின் அடிப்படையாய் அமைந்தது. மலைமேலும், மலை அடிவாரத்திலும், ஆற்றங்கரையிலும், காடுகளிலும், கடற்கரையிலும் வாழ்ந்த மக்கள் அவ்வவ்வாறு தம் சுற்றுச் சூழலுக்கு ஏற்ப வாழ்க்கை வசதிகளைப் பெருக்கிக் கொண்டு நாடு நகரங்களும் கண்டு வாழ்ந்தார்கள். இது உலகில் காணும் எல்லா நாடுகளுக்கும் ஏற்ற ஒன்றுதான். எனினும், தமிழன் அவற்றின்

சிறப்பறிந்து நிலங்களைத் திணைகளாக்கி, அவற்றின் ஒழுக்கங்களை வரையறுத்து, நால்வகை நிலத்தையும் பிணைத்து, 'நானிலம்' என்றே உலகத்துக்குப் பேரிட்டுப் புகழ் பெற்றான். குறிஞ்சியும், முல்லையும் மருதமும், நெய்தலும் மண்ணுக்கும் கல்லுக்கும் மட்டும் பெயராய் அமையாது, அங்கங்கு மக்கள் மேற்கொள்ளும் ஒழுக்கங்களுக்கே பெயராய் அமைந்ததை எண்ணிப் பார்த்தால் ஆதி தமிழனது பண்பாடு நன்கு விளங்கும். இவ்வாறு அமைந்த நிலப் பிரிவுகளில் நாடும் நகரங்களும் சிறந்து ஓங்கின. (கோல்டன் சைல்டிர்) என்பார் இந்த அமைப்புகளில் கூட்டு இனமாய் அமைந்து, மனிதன், சட்டதிட்டங்களுக்குக் கட்டுப்பட்டு, காலவரையறைகளைத் திட்டமாகக் கணக்கிட்டு, வரையறுக்கப்பட்ட ஓர் அரசியல் அமைப்பின் கீழ் வாழ்ந்த காலம் கி.மு. 1800க்குப் பிறகே என்றும் அது பாபிலோனியாவில் நிகழ்ந்ததென்றும் கூறுவர். தமிழ் நாட்டு வரலாற்றுக்கும் இந்தக் கால எல்லை பொருந்தும் எனலாம். தமிழ் நாட்டு வரலாற்று அறிஞர் அதைத் தொல்காப்பியக் காலம் எனக் கணக்கிடுவர்.

**கோயில் வாழ்வு :**

அந்தக் கூட்டு வாழ்க்கையில் கோயில் வாழ்க்கை முக்கிய இடம் பெற்றது. கோயில்கள் என்பன இப்போது நாம் காணும் அளவிற்குக் கோபுரம் கொண்டு மதிற்சுவர் சூழ்ந்தவை அல்லவெனினும், அவை சமுதாய வாழ்வில் முக்கிய இடம்பெற்றது என்பதில் ஐயமில்லை. சிலப்பதிகாரத்தும் பிற இலக்கியங்களிலும் காணும் எத்தனைக் கோயில்களின் அமைப்புக்கள் அவற்றின் காலத்திற்குப் பல நூற்றாண்டுகளுக்கு முன்பே உருவாயின என்று

1. Man Makes Himself' by Golden Childe

காண்கிறோம். அக்கோயில்கள் வழி அந்தக் காலத்துப் பொருளாதாரத்தை உணர்ந்துகொள்ள இயலும்போலும் பிற்காலச் சோழர் காலத்துக் கோயில்கள் கலை வழியும் கல்வெட்டுக்கள் வழியும் அக்கால வரலாற்றையும் பொருளாதார நிலையையும் உலகுக்கு உணர்த்துவதை நாம் அறிவோம்; அதைப் போன்றே அந்தப் பழங்காலக் கோயில்கள் மக்களது பொருளாதாரத்தை விளக்கின எனலாம். கோயிலுக்கே ஊரில் பெரும்பகுதியான நிலங்கள் சொந்தமாம்; பெரும் பொருளும் உரியதாம். அக்கோயிலிலிருந்து பிறர் தேவையான போது பணம் வாங்கிப் பயன்படுத்துவார்களாம்![1] ஆயினும், அந்தப் பணம் எந்த வகையில் இருந்தது என்பதைச் சொல்ல இயலாது. எனினும், பண்டமாற்று வகையும் நாணயப் புழக்கமும் உலக வரலாற்றிலும் தமிழக வரலாற்றிலும் நெடுங்காலமாகவே இருந்தன என்று கொள்வதில் தவறு ஒன்றும் இல்லை. இந்தக் கோயில்களுக்குப் பூசாரிகளும் அவர்களைச் சார்ந்து கோயிற்பணி புரிவோரும் இருந்தனர் என்பதும் அறியத்தக்கது.

**ஆரிய்ப மிற :**

பாபிலோனியாவிலும் சிரியாவிலும் நகர அமைப்பும் அதன் வழி வாணிப வளனும் கி.மு. 2000க்கு முன்பே பெருகின என்பர். அக்காலத்தை ஒட்டித் தமிழ் நாட்டிலும் வளர்ந்தபிற உலகப் பகுதிகளிலும் வாணிப வளனும் தொழில் வளர்ச்சியும் செழிப்புற்றிருக்க வேண்டும், வாணிபம் பெருகப் பெருக, அதன் வழியே குறியீடுகளும் அவற்றிற்கெனப் பல்வேறு தனித்த பொருள்களும்

1. Man Makes Himself by Golden Childe, P. 154

உருவாகியிருக்கக் கூடும். இந்த வகையிலேதான் மொழியில் காணும் எழுத்துக்களின் வரி வடிவம் உருவாகியிருக்கும். சிந்துவெளி நாகரிக மொழியின் வரி வடிவம் கி. மு. 2500க்கு முற்பட்டதன்றோ! மொழி மனித வாழ்வில் எப்படி ஒரு திருப்பு மையமாய் அமைந்ததோ, அப்படியே எழுத்துக்களின் வரி வடிவம் மற்றொரு திருப்பு மையமாய் அமைந்து நின்றது எனலாம். இயற்கையைக் கண்டு கற்ற மனிதன், எழுத்தின் வழியும் நூல் வழியும் பல கற்கத் தொடங்கினான். எனினும், எழுத்துக்களை வடிப்பதும் கற்பதும் அத்துணை எளியவல்ல. இன்று நாம் பெற்றிருக்கும் அத்துணைப் பெருஞ் சாதனைகளுள் ஒன்றும் அன்று இல்லை. எனினும், எப்படியோ முயன்று எழுத்துக் கூட்டி மொழியாக்கிப் பேசியதோடு, வரி வடிவம் தீட்டி உருவாக்கி உலகில் கலந்து வாழ ஒரு சிறந்த சாதனமாக மொழியினை ஆக்கிக் கொண்ட அன்றைய மனிதனைப் பாராட்டாதிருக்க முடியுங்கொல்!

மனிதன், காலம் செல்லச் செல்லப் பல உண்மைகளை அறிந்தான். தன்னைச் சுற்றிய பொருள்களை அறிந்ததோடு வான வட்டத்தையும் நோக்கி ஆராய்ந்தான். வானசாத்திர நூல்கள் இலவேனும், வானவெளிபற்றி அறிந்த பல குறிப்புக்கள் இருந்தன என்பதை எகிப்திய வரலாறும் தமிழ் இலக்கியங்களும் நமக்குப் புலப்படுத்துகின்றன. இவைகளைத் தவிர மருத்துவத் துறையும் அன்று அவன் அனுபவத்தில் வந்த ஒன்று. வாழ்வதே இன்ப துன்பங்களுக்கு இடையிலேதானே! ஆதி மனிதனும் வரலாற்றுக்கு முற்பட்ட மனிதனுங் கூட நோய் பெற்றுத் துன்புற்றுப் பின் விடுதலை பெற்றிருப்பான். கி.மு. 1800 ஆண்டுகளுக்கு முன்னரே அறுவை வைத்திய

மும் (Surgery) பிற வைத்திய முறைகளும் இருந்தனவாம்[1] நாட்டுக்கு நாடு மருத்துவங்களும், வான சாத்திரங்களும் சோதிடங்களும் மாறி மாறிச் செல்லும் வழக்கமும் இருந்தன. அளவு முறை (Geometry) இந்திய நகரங்களின் கி.மு. 2500ல் இருந்ததாம். பல அறிவியல் வளர்ச்சிகள் கி.மு. 3000க்கும் 1000க்கும் இடையில் வளர்ந்தன என்று கூறுவது பொருந்தும். கலிலியோ போன்ற மேலை நாட்டு வானாராய்ச்சியாளர் ஆராய்ச்சிகளும்'சென்றளந் தறிந்தோர் போல, இனைத்தென் போரும் உளரே' என்ற புறநானூற்று அடிகளும் மிகு பழங்காலத்திலேயே தமிழ் நாட்டிலும் பிற நாகரிகம் வளர்ந்த நிலபகுதிகளிலும் நெடுங்காலமாக வானாராய்ச்சியும் பிறவும் வழக்கத்தில் இருந்தன என்பதைக் காட்டுகின்றன.

**புதை பொருள்கள் :**

இனி இறந்த மக்களைப் புதைத்து வைக்கப்பட்ட தாழிகளே நமக்குப் பழங்கால மனித வாழ்வை ஓரளவு விளக்கிக் காட்டுகின்றன என்பதை முன்பு கண்டோம். அத்தாழிகளின் அமைப்பும், அவற்றின் வழிக் களிமண் பண்டங்கள் செய்யப் பெற்ற திறனும், அவற்றின்மேல் பூசப்பெற்ற நிறங்களும், சித்திரங்களும், அவற்றின் காலத்தையும், அக்காலத்து மக்களின் வாழ்வு, வளம் வாழ்க்கை வகை முதலியவற்றையும் ஒருவாறு விளக்கிக் காட்டுகின்றன எனலாம் இனி, அத்தாழிகளில் புதையுண்ட எலும்புக் கூடுகளின் தன்மை, ஆயுட்காலம் முதலியவற்றைக் கண்டே தமிழ் நாட்டிலும், எகிப்து

1. Man Makes Himself, by Golden Childe, P. 222

முதலிய நாடுகளிலும், மக்கள் நாகரிகத்தையும் வாழ்க்கை வரலாறுகளையும் அறிந்து கொள்ள இயலும்.

தமிழ் நாட்டில் பழங்காலத்தில் கடவுள் வாழ்த்தொடு நாகர் வணக்கமும் இருந்தது என்பது தெரிகிறது.[1] 'நாகர் யார்? அவர் தம் நாடு யாது?' என்பன போன்ற குறிப்புக்கள் நன்கு விளக்கமாக இல்லையேனும் நாகம் எனும் பாம்பு வணக்கம் மிகு பழங்காலத்துத் தமிழ்நாட்டு வழக்கம் என்பது ஒருதலை, பின் நாகர் ஒரு வகைச் சாதியராக, அவர்கள் வாழும் இடம், மலை முதலியன பற்றிப் பின்வந்த மணிமேகலை குறிக்கின்றது.

அந்தப் பழங்காலத்தில் தமிழ் நாட்டுக்கும் சிறிய ஆசியாவுக்கும் உள்ள பல்வேறு தொடர்புகளைத் திரு. நீலகண்ட சாஸ்திரியாரவர்கள் கூறியுள்ளார்கள்.[2] பாலஸ்தீனப் புதை பொருள்களும், ஆதிச்ச நல்லூர்ப் புதை பொருள்களும் இரு நாடுகளுக்கும் கி.மு. 12-ஆம் நூற்றாண்டில் இருந்த தொடர்பினைக் காட்ட வல்லன எனக் குறிக்கின்றார்: ஆதிச்சநல்லூரில் வாழ்ந்த மக்கள் நெற்பயிரிட்டு உணவாக்கி உண்டு நாகரிகத்தில் வாழ்ந்தார்களென்றும் குறிக்கின்றார்.[3] ஆதிச்ச நல்லூரில் மட்டுமன்றி, தமிழ்நாட்டில் வேறு பல இடங்களிலும் (செங்கற்பட்டு முதலியன) இத்தகைய தாழிகள் கிடைக்கின்றன. இந்தியா முழுவதிலும் திராவிட மொழிச் சிதறல்கள் இருந்துள்ளன எனக் குறிக்கின்றார்.[4] அது மட்டுமின்றி. அந்தக் காலத்தில் திராவிட நாகரிகம் உலகில் பல பாகங்களிலும் பரவி இருந்தது என்பதையும் நன்கு காட்டு

1. A History of South India—K. A. Neelakanda Śastri, p. 61.
2. ibid p. 62
3. 4, ibid, p. 28

கின்றார். இப்படி வரலாற்றுக்கு முற்பட்ட தமிழகமும் அதில் தோன்றி வளர்ந்த திராவிட நாகரிகமும் உலகில் சிறந்து வாழ்ந்தன என்பது தேற்றம்.

சிந்துவெளி நாகரிகம் தோண்டிக் கண்ட பிறகே ஆராய்ச்சியாளர் வடக்கையும் தெற்கையும் பிணைத்துப் பார்க்கும் நோக்கினை மேற்கொண்டனர். அதில் ஓரளவு அந்தச் சிந்துவெளி நாகரிகம் தென் தமிழ் நாட்டு நாகரிகத்தை ஒத்ததுதான் என்பதை உணர்ந்தாரேனும் மேலும் தமிழக வரலாற்றையும், அதன் நாகரிகம் பாகுபாடு ஆகியவற்றையும் எண்ணி உணர்ந்து தொடர்ந்து ஆராய்ச்சி செய்யாது விட்டு விட்டார்கள் எனலாம். டாக்டர் சென் என்பவர் உலகிலேயே முதல் முதல் நெல் பயிரிட்ட மக்கள் திராவிட மக்கள்தாம் என அறுதியிட்டு[1] கூறுகின்றார். அது போன்றே பருத்தியைப் பயிரிட்டு ஆடை நெய்வதிலும், மீன் பிடிப்பதிலும், பிற வாணிபங்களிலும் அக்காலத்திலேயே தமிழர் சிறந்திருந்தனர் என்று அவரே காட்டுகின்றார். இவ்வாறு சிற்சில வரலாற்று ஆசிரியர்கள் இன்று தென்னாட்டைப் பற்றி—சிறப்பாகத் தமிழகத்தைப் பற்றி ஆராய்கிறார்கள். தமிழகம் தன் வரலாற்றுக் காலத்துக்கு நெடுநாளுக்கு முன்னரே சிறந்த நாடாகப் பல்வேறு நல்ல பண்புகளும் நாகரிகச் சூழ்நிலையும் பெற்று விளங்கியதென்பதும், அவற்றைத் திட்டமாக வரையறுக்க இயலாதென்பதும் உலக வரலாற்றின் ஒப்புமைக் கண்கொண்டு காணின் அவற்றின் உண்மைகளை ஒருவாறு அறிய வழியும் வாய்ப்பும் உண்டென்பதும் அறியலாகும். இனி, இவ்வரலாற்றிக்கு முற்பட்ட காலத்தில் வடநாடும் தென்னாடும் எவ்வாறு கலந்து வாழ்ந்தன என்பதையும், தமிழகம் வடவிந்தியாவோடு கொண்ட தொடர்பு எத்தகையது என்பதையும் காணலாம்.

1. Thq Pageant of Indian History—Dr. Sen, p. 20.

# VI. வரலாற்றுக்கு முன் வடக்கும் தெற்கும்

**வரலாற்று ஆராய்ச்சி :**

உலக வரலாறு எந்த நாளிலிருந்து தொடங்குகின்றது என்பது திட்டமாக வரையறுக்க முடியாத ஒன்று. சில நாட்டு வரலாறுகள் இன்றைக்கு ஐயாயிரம் ஆண்டுகளுக்கு முன் செல்லும் வகையில் அமைந்தனவாயினும், அவை வரையறுத்துக் கூறும் அளவிற்கு அமையவில்லை என்பது தேற்றம். தமிழ் நாட்டைப் பற்றிய பழம்பெரும் பெருமைகளையெல்லாம் நாம் பேசினாலுங் கூட, பன்னீராயிரம் ஆண்டுகளுக்கு முன்பே பரந்த தமிழ்நாட்டில் நாம் வாழ்ந்தோம் என்று வீறுபெறக் கூறினுங் கூட, திட்டமாக அவற்றையெல்லாம் நம்மால் வரையறுக்கக் கூடவில்லை. எனினும், பிற நாடுகள் நாகரிக வாழ்வறியா நெடுங்காலத்துக்கு முன், தமிழ்நாட்டில் பண்பாடும் நாகரிகமும் நன்கு சிறந்து ஓங்கின என்பதை யாரும் மறுக்க இயலாது. இந்திய நாட்டு வரலாற்று ஆசிரியர்கள் தமிழ்நாட்டைப் பற்றி ஒன்றும் கூறாது விடினுங்கூட, உண்மை வரலாற்றை ஆராயும் மேலை நாட்டு அறிஞர்கள் தமிழர்தம் பண்டைய வரலாற்றைக் கூறாது விடார். இந்திய நாட்டு வரலாறு கங்கைக் கரையிலிருந்து தொடங்குவதைக் காட்டிலும் காவிரிக் கரையிலிருந்து தொடங்கப் பெறுவதே சாலச் சிறப்புடைத்து என்பது தெளிந்த வரலாற்று ஆசிரியர்கள் கூறும் உண்மையாகும். எனவே, வட நாடு தன் வரலாற்று எல்லையை வரையறுக்கு முன், தமிழ் நாட்டு வரலாறு ஒழுங்குபட அமைந்து விட்டது

என்பது ஒருதலை. எனினும், இன்று வரை இந்திய வரலாற்றை எழுத முற்படும் ஆசிரியர்களில் யாரும் தென்னாட்டு வரலாற்றில் அக்கறை கொண்டதாகப் புலப்படவில்லை. அக்கறை கொண்டால் பயன் உண்டு.

வரலாற்று எல்லைக்கு உட்படாத காலத்துக்கு முன் சிறந்திருந்த பூம்புகாரும் முசிறியும் தொண்டியும் பிற பட்டினங்களும், பிற்காலத்தில் மாமல்லபுரம் போன்றவையும் தமிழ்நாட்டு வரலாற்றின் தொன்மையை விளக்கும் மைல் கற்களாய் அமைகின்றன. ஒவ்வொரு கல்லிடமும் சிறிது நேரம் நின்று சென்றால், அவை பேச்சு எத்தனை எத்தனை உண்மைகள் நமக்கு விளங்கும் என்பதை உண்மையில் அவற்றை அறியும் அவாவுடையார்க்கே புரிந்துகொள்ள இயலும். மற்றவர்கள் அக்கற்களையே களைந்து எறிந்து விட்டு, வழியும் அறியாது, தட்டித் தடுமாறி முட்டிக்கொள்வர் ஆம். தமிழ்நாட்டு வரலாற்றை நல்ல முறையில் ஆராய உண்மையில் தமிழ்ப் பண்பும், தமிழ் உள்ளமும், ஊற்றுப் பெருக்கெடுத் தோடி வரும் அவாவும் தேவை. இன்றைய தமிழ் மாணவர் ஒருவாறு அத்தகைய நற்பண்புகள் அமையப் பெற்றிருக்கின்றனர். எனவே, வருங்காலத்தில் தமிழக வரலாறு சிறந்து நிற்கும் என்பது ஒரு தலை.

**இதிகாச வரலாறுகள் :**

வடக்கே மௌரியப் பேரரசுக்குமுன் திட்டமான வரையறுத்த வரலாறு கிடையாது. தமிழகத்துக்கும் அப்படியே என்பர். எனினும், அந்த மௌரியர் காலத்திலிருந்து வடக்கைத் தென்னாடு நன்கு அறிந் திருந்த்தென்பது தேற்றம். இந்த வரலாற்றுக்கு முன் வழங்கும் புராண இதிகாசக் கதைகளும் வடக்கையும்

தெற்கையும் பிணைத்துப் பேசுகின்றன. பாண்டவ கௌரவ யுத்தத்திலே பொது நிலையில் நின்று போர்க் களத்தே உணவற்று வருந்தியவர்களுக்குச் சோறு அளித்து, 'பெருஞ் சோற்று உதியன் சேரலாதன்' என்ற சிறப்புப் பெயர் பெற்ற சேர மன்னன் ஒருவன் இருந்தான் என்பர், இன்னும் வடநாட்டுத் தென்னாட்டு மணவினைகளைப் பற்றி வழங்கும் கதைகளும் உள. அர்ச்சுனன் பாண்டியன் மகள் ஒருத்தியை மணந்தான் என்பர். இவை யாவும் வெறுங் கதைகளாகவே அமை கின்றமையின் இவற்றை நாம் வரலாற்றோடு பின்னிப் பிணைக்க வேண்டா. இவற்றை வரலாற்றோடு பின்னு வதும் பயனற்றதென்று 'ஸ்மித்து' என்பவர் திட்டமாகக் காட்டியிருக்கிறார்.

**வடநாட்டு உறவு :**

தமிழ் நாட்டுப் பொற்காலம் எனப்படுவது கடைச் சங்க காலமாகும். அந்தநாள் தொட்டு, அதாவது கி பி. முதல் இரண்டாம் நூற்றாண்டு தொட்டு ஒருவாறு வரையறுத்த வரலாறு தமிழ் நாட்டுக்கு உள்ளது என்பதை யாவரும் அறிவர். எனினும் அதற்கு முன் தமிழ்நாடு சிறக்க வாழ்ந்திருக்க வேண்டும் என்பதை அக்காலத்துக்கு முன் எழுந்த பாடல்கள் நமக்கு விளக்கிக் காட்டுகின்றன, அவற்றுள் சில கி. மு. நான்கு ஐந்தாம் நூற்றாண்டுகளில் வாழ்ந்த வடநாட்டு அரசர்களைக் குறிக்கின்றன. ஆயினும், தமிழ்ப் புலவர் சிலர் அப்பாடல்களை அவ்வாறு கொள்ளின் தமிழின் தொன்மை அத்துணைப் பழையதாகி விடுமே என்று மயங்கி அவற்றிற்குப் புதுப்பொருள்கள் கற்பிக்கின்றனர். அவ்வாறு தமிழில் வழங்கும் வடநாட்டு அரச பரம்பரைகள் இரண்டு. ஒன்று நந்தர் பரம்பரை;

மற்றொன்று மௌரியர் பரம்பரை. இவர்களைத் தவிர வேங்கடத்துக்கு வடக்கே வாழ்ந்தவேற்று மொழியாளர்களையும் அந்த இலக்கியங்கள் குறிக்கின்றன.

**'பனிபடு சோலை வேங்கடத்து உம்பர்**
**மொழிபெயர் தேஎத்த ராயினும்'** (அகம் 211)

என்ற மாமூலனாரின் அடிகள் வேங்கடத்துக்கு வடக்கே வேற்று மொழியாளர் வாழ்ந்தனர் என்பதை வலியுறுத்துவன. அவ்வாறு வாழ்ந்த வேற்று மொழியாளர்களோடு தொடர்பு கொண்டிருந்தது அன்றைய தமிழ் நாடு. போரும் பிணக்கும் கொண்டு அவரோடு மாறுபட்டுக் கலாம் விளைக்கும் வகையில் வடக்கும் தெற்கும் அன்று இருந்தன என்று சொல்ல முடியாது. வடநாட்டுச் செல்வ வளத்தைப் புகழ்ந்து பாடுகின்றன சங்கப் பாடல்கள். எனவே அன்றைய தமிழ்நாடு வடநாட்டோடு இணையவில்லை. ஆயினும், நட்பு முறையில் அதனோடு உறவாடி இருந்தது என்பது தெரிகிறது.

**நந்தரும் மோரியரும் :**

இந்திய வரலாற்றில் முதன் முதல் பேசப்படுகின்ற அரச பரம்பரை இரண்டு. ஒன்று நந்தர் ஆட்சி இது கி. மு. 413-ல் தொடங்கியது. நந்தர்கள் சில காலம் வடநாட்டைச் சிறக்க ஆண்டார்கள். எனினும் கங்கைப் பெருவெளியில் அடுத்துக் தோன்றியவர்கள் — அல்லது குடியேறியவர்கள்— மௌரிய வமிசத்தவர்கள் அவருள் முதல்வனாகச் சிறந்தவன் சந்திரகுப்தன் இவன் அலெச்சாண்டரைத் தட்சசீலத்தில் கி. மு 316 அல்லது 325-ல் சந்தித்தான். அலெக்சாண்டரே சந்திரகுப்தனை நந்தர் நாடாகிய மகதத்தின்மேல் படை எடுக்கச்

சொன்னான். இவன் வாய்மொழிப்படியே சந்திரகுப்தன் கி. மு. 321-ல் மகதநாட்டுப் பாடலிபுத்திரத்தை நோக்கிப் படை செலுத்தினான். அக்காலத்தில் அங்கு ஆண்ட நந்த அரசர்கள் வலுவற்றவர்கள் போலும்! தங்கள் பெருஞ் செல்வங்களையெல்லாம் கங்கைக்கடியில் மறைத்து வைத்துத் தாங்களும் மறைந்தார்கள் பாடலி புத்திரமே இப்போதைய 'பாட்னா' என்பர் சிலர். பாடலி, சோன்நதி கங்கையோடு சேருமிடத்தில் அமைக்கப்பட்டிருந்தது என்பர் ஸ்மித்து.[1] அப்பாடலியில் சந்திரகுப்தனுக்கு முன் ஆண்ட நந்தர்கள், மாற்றானுக்கு அஞ்சித் தம் அரும்பெருஞ் செல்வங்களைக் கங்கைக் கடியில் மறைத்து வைத்தார்கள்.

இனி, இந்த நந்தரை வென்ற மோரியரைத் தமிழ்ப் புலவர் 'வம்ப மோரியர்' என்பர். 'வம்பே புதுமை' என்பது தொல்காப்பியம். நந்தர்கள் ஒருவேளை தமிழ ரொடு நட்புடையவர்களாய் இருந்திருக்கலாம். எனவே தான் தமிழ்ப் புலவர்கள் அவர்தம் செல்வத்தைப் போற்றிப் புகழ்கின்றார்கள். அவர்களை எதிர்த்துப் புதியவர்களாக வந்தவர்களை 'வம்ப மோரியர்' என்றார்கள். மேலும் இந்த மோரியர் தமிழ்நாடு வரையில் படை எடுத்து வந்தார்கள் என்பதையும் காட்டு கின்றார்கள். மாறுபட்ட ஒருவரை மடக்குவதற்காக மோரியர் துணை நாடப்பட்டது போலும்! இவற்றை யெல்லாம் சங்ககாலப் பாடல்கள் காட்டுகின்றன. கி. மு. மூன்று நான்காம் நூற்றாண்டுகளில் வாழ்ந்த மாமூலர் என்னும் புலவர், இவற்றை நேரில் கண்டு எழுதுகின்றனர். ஆனால், ஒரு சிலர் மோரியரோடு

1. The Easly History of India, By V. Smith

அவரைத் தொடர்பு படுத்தின் தமிழுக்கும் தமிழ் நாட்டுக்கும் தொன்மை தேடித்தந்த பெருமை உண்டாகுமே என்ற காரணத்தால் மறுக்கின்றனர். அது பொருந்தாது.

**'பல்புகழ் நிறைந்த வெல்போர் நந்தர்'**

என்றும்,

**'நந்தர் வெறுக்கை எய்தினும் தங்கலர்'**

என்றும்,

**முரண்மிகு வரசர் முன்னுற மோரியர்**

என்றும்,

மாமூலர் தாம் பாடிய அகப்பாடல்களுக்கு இடையிடையே நந்தரையும் மோரியரையும் அமைத்துப் பாட்டிசைக்கின்றார்.

தலைவன் தலைவியை விட்டுப்பிரிய, அவன் பிரிவினையே எண்ணி ஏங்குகின்றாள் தலைவி. அவள் வாட்டம் அறிந்து அதைப் போக்க விழைகின்றாள் தோழி. 'தோழி! அவர் உன்னை விட்டுப் பிரிந்து தங்கி வாழ்வாரோ? வாழார்; எத்துணைப் பெருஞ்செல்வம் பெறினும் அங்கே தங்கார்; நந்தர் தம் பெருஞ்செல்வம் பெற்றாலும் தங்கார்' என்று நந்தர் செல்வமே நாட்டில் பெருஞ்செல்வமெனக் குறித்து 'அது பெறினும் தங்காது உனக்காக வந்து விடுவார்' எனக் கூறுகின்றாள்.

**'நாம்படர் கூரும் அருந்துயர் கேட்பின்**
**நந்தர் வெறுக்கை எய்தினும், மற்றவண்**
**தங்கலர் வாழி தோழி!'** (அகம். 251)

என்பது மாமூலர் வாக்கு. எனவே, நந்தர் செல்வம் சிறந்ததாகப் போற்றப்படுகின்றது. இதே பாட்டிலே தான் அந்த வம்ப மோரியரது' தென்னாட்டுப்படை எடுப்பும் பேசப்படுகிறது. இவர்கள் நந்தர்களை வென்று

அவர்தம் பாடலி நகரைக் கைப்பற்றிக் கொண்டார்கள் என்றும் அதுகாலை நந்தர் தம் செல்வத்தைக் கங்கைக் கடியில் புதைத்தனர் என்றும் கண்டோம். இதை,

> **‘பல்புகழ் நிறைந்த வெல்போர் நந்தர்**
> **சீர்மிகு பாடலிக் குழீஇக் கங்கை**
> **நீர்முதல் கரந்த நிதியம்’**

(அகம். 265)

என அந்த மாமூலனாரே குறிக்கின்றார். எனவே, நந்தர் செல்வம் மிக்கிருந்தவர் என்பதும், அவர் பாடலியைத் தம் தலைநகராகக்கொண்டு வாழ்ந்தனர் என்பதும், புதியராய் வந்த மோரியர் அவர்களை வென்று தம் நாட்டை விரிவாக்கினர் என்பதும், இவர்தம் வருகைக்கு அஞ்சிய நந்தர் தம் பெருஞ்செல்வத்தை மற்றவர் கொள்ளா வகையில் கங்கையுள் புதைத்தனர் என்பதும் தேற்றம்.

**மோரியர் தென்னாட்டுப் படைபெடுப்பு**

இனி, இம்மோரியர் தென்னாட்டுப் படை எடுப்பைப் பற்றித்தான் அறிஞர் வையாபுரிப் பிள்ளை அவர்கள் ஐயம் கொள்ளுகிறார்கள். ‘அவர்கள் ஏன் தென்னாட்டுக்கு வரவேண்டும்? இவர்களுக்கும் அவர்களுக்கும் தொடர்பு இல்லை. ‘மோரியர்’ என்ற சொல் ‘ஓரியர்’ ஆகவே இருக்க வேண்டும்,’ எனக்காட்டுகின்றார். அது பொருத்தமானதாகுமா? ஓரியர் என்ற வடசொல்லுக்கு ‘ஊலி’ என்ற சொல்லை முதலாகக் கொண்டு அகன்ற நிலப்பரப்பை உடையவர் எனப்பொருள் காண்கிறார். அதற்குப் புறநானூற்றுப் பாடலையும் பொருளையும் கொள்ளுகின்றார். புறம் 175ல் கள்ளில் ஆத்திரையனார்

இந்த மோரியரைக் குறிக்கின்றார். அறத்துறை நின்ற ஆதநுங்கனை மறவாத புலவர் ஆதநுங்கனின் சிறப்பை,

'...வெல்வேல்
விண்பொரு நெடுங்குடைக் கொடித்தேர் மோரியர்
திண்கதிர்த் திகிரி திரிதரக் குறைத்த
உலக இடைகழி அறைவாய் நிலைஇய
மலர்வாய் மண்டிலத் தன்ன நாளும்
பலர்புர வெதிர்ந்த அறத்துறை நின்னே' (புறம். 175)

என்று பாராட்டுகின்றார். இதில் வரும் மோரியர் என்ற சொல்லுக்குப் பொருள் கூறும் பழைய உரையாசிரியர் 'நில முழுவதும் ஆண்ட வேந்தர்' என்று உரை எழுதியுள்ளாராம். அதற்குப் பிள்ளை அவர்கள், 'மோரியர் ஓர் இனமாயின் இன்ன இனத்தவர் எனக் குறித்திருப்பர். பொதுவாக நில முழுவதும் ஆண்டவர் எனக்குறித்ததனால் அவர்கள் வடநாட்டு வேந்தர்கள் அல்லர்' என்கின்றார். இது எப்படிப் பொருந்தும்? சிறு தமிழ் நாட்டை மூன்று துண்டாக்கி ஆண்ட சேர சோழ பாண்டியரையும், அவர் கீழ் வாழ்ந்த பிற சிற்றரசரையும் நோக்க, வடவிந்தியப் பரந்த நிலப் பரப்பையும் தென்னிந்தியப் பகுதியில் சில வற்றையும் ஆண்ட மோரியர் நில முழுவதும் ஆண்ட வேந்தர் அல்லரோ ? இந்திய வரலாற்றிலேயே முதன் முதல் பரந்த நிலப்பரப்பை ஆண்டவர் மோரியர் தாமே? அவர்களைப் பற்றி உரையில் அவ்வாறு புகழ்ந்திருத்தல் தவறாகாதே! மேலும், வடக்கே ஆண்ட அவர்களுடன் தொடர்பு ஏற்படக் காரணம் இல்லை என்கிறார் அவர். கோசர்கள் மோகூர்ப் பழையனுக்கு அமைச்சராகவும், சேனா வீரராகவும் அமைந்தவர்கள் ஆதலின், அவர்கள்

பழையனுக்கு விரோதமானார்கள் என்றோ, அவர்கள் பொருட்டு மோரியர் வந்து பழையனை அடக்கினார்கள் என்றோ கூறுவது பொருந்தாது என்கிறார். மதுரைக் காஞ்சி அடிகளைக் கொண்டு நண்பர் என்று காட்டு கின்றார் அவர்.

"பழையன் மோகூர் அவையகம் விளங்க

நான்மொழிக் கோசர் தோன்றி யன்ன'(மதுரைக்-508-9)

என்ற மாங்குடி மருதனார் பாடிய அடிகள் அவருக்கு அரண் செய்கின்றன. உண்மைதான்; ஆனால், ஒன்றிய இரண்டு மன்னர்கள் என்றும் மாறுபடவில்லை என்றோ மாறுபட்ட இரண்டு வேந்தர்கள் ஒன்றினார் இல்லை என்றோ யார் கூறமுடியும்? ஒரே தலைமுறையில் இரண்டு பரம்பரைகள் எத்தனை முறை கலாம் விளைத்தும், நண்பாகியும் வாழ்வதை வரலாற்றில் காண்கின்றோம்! ஏன்,இன்றைக்குங் கூட அரசியல் உலகில் நேற்று ஒன்றி வாழ்ந்தார் இன்று வேறுபட்டும், நேற்று வேறுபட்டார் இன்று சேர்ந்து வாழ்ந்தும் நிற்பதைக் காணவில்லையா? எனவே, ஒருகால் ஒன்றியிருந்த கோசரும் பழையனும் என்றும் மாறுபடவில்லை என்பதும், அவர்கள் வேற்றுமைக்கிடையில் மோரியர் வரவில்லை என்று கூறுவதும் பொருந்ாது. மற்றும் மாமூலனாருக்கும் மருதனாருக்கும் இடையில் முந்நூறு ஆண்டுகள் உள்ளனவே.

மேலும், தமிழ்ப்புலவர் வாக்கின்படி தமிழர்கள் மோரியர் விரோதிகளாகிய நந்தர்களுக்கு நல்ல நண்பர் களாய் இருந்திருக்கின்றார்கள். அதனாலேதான் அனைத் தினுக்கு மேலாக அந்த நந்தர்தம் செல்வத்தைப் புகழ்ந் துள்ளார்கள். அவர்கள் செல்வம் படை முதலிய சிறப்புகளையும் அவற்றைச் சந்திரகுப்தன்

கவர்ந்ததையும் ஸ்மித்து நன்கு காட்டியுள்ளார்.[1] மாற்றான் செல்வத்தைப் புகழ்ந்தால் ஒரு சிலருக்குக் கோபம் வருவது இயற்கைதானே! அந்த முறையில் இயல்பாகவே மோரியருக்குத் தமிழ் மண்ணின் மேல் கோபம் எழுந்திருக்கும். அதைத் தீர்த்துக் கொள்ளச் சமயம் பார்த்திருப்பர். அவர்கள் கோசர் அழைப்பினை ஏற்றுத் தென் கோடியில் வாழ்ந்த மோகூர் மன்னனை முறியடித்து வெற்றி கண்டு விட்டனர். வெற்றி கண்டுவிட்டனரே தவிர, அவர் நெடுங்காலம் இங்கே தங்கியதாகத் தெரியவில்லை. சந்திரகுப்தனே போருக்கு வந்திருக்க வேண்டுமென்பதில்லை. அவன் கோசருக்காக உதவிக்கு ஆள் அனுப்பியிருப்பான் என்று கொள்வதும் பொருந்தும். எனவே மாமூலனார் குறித்த மோரியர், பாடலியில் ஆண்ட சந்திரகுப்த மன்னன் பரம்பரையினரே என்பது தேற்றம். தம் நூலிலேயே[2] நந்தரைப் பற்றி மாமூலர் குறிப்பிட்டார் என்பதைக் காட்டுகிறார் அறிஞர் வையாபுரிப்பிள்ளை அவர்கள். நந்தரைக் கூறியவர் அவர்தம் பகைவராகிய மோரியரைக் கூறியிருக்கமாட்டார் என்று புதுப்புது வகையில் ஆராய்ச்சி செய்தலும் சொற்களை வேண்டியவாறு மாற்றுதலும் பொருந்துவனவாகா. நந்தர் பரம்பரையில் பலர் தென்னாட்டுக்கு வந்துள்ளனர். சந்திர குப்தன் மகனான பிந்துசாரன் படை எடுத்து வந்து தென்னாட்டை வென்று கொண்டான் என்று வரலாற்று வகையில் தாரநாத்து என்பவர் கூறுகின்றார். ஆனால், பிள்ளை அவர்கள் அக்கூற்றையும் மறுக்கிறார். 'தாரநாத்து முந்நூறு ஆண்டுகளுக்கு முன் வாழ்ந்தவர், எனவே, அவர் கூற்றுப் பொருந்தாது.' என்பது பிள்ளை அவர்களின் வாதம். அப்படியாயின், இன்னும் முந்நூறு

1. The Early History of India, By V. Smith P 124

2. இலக்கிய தீபம் : மோரியர் தென் இந்தியப் படை எடுப்பு, பக். 131-144.

ஆண்டுகளுக்குப் பின் வந்த சிலர் கூற்றுமட்டும் ஏற்கக் கூடியதோ? இன்றைய வரலாற்று ஆசிரியர்கள் கூறும் ஒவ்வொன்றும் எப்படிப் பொருந்துவதாகும்? எனவே, வரலாறே இல்லையாகி விடுமே.

மோரியரோடு பிணைத்தால் மாமுலர் கி. மு. நான்காம் நூற்றாண்டில் வாழ்ந்தார் என்பது உறுதி பெற்று, அதனால் அதற்கு முன்பே தமிழ் இலக்கியம் தழைத்திருந்தது என்ற உண்மை ஏற்றுக் கொள்ளப்பட வேண்டுமே என்ற ஒன்றிற்காக அறிஞர்கள் இவ்வாறு வலிந்து பல கருத்துக்களைப் புகுத்தல் முறையன்று என்று வேண்டி. இந்த அளவோடு இதை விட்டு மேலே செல்லலாம்.

மோரியர் காலம் இந்திய வரலாற்றிலேயே சிறந்த காலம். கிரேக்க நாட்டு மன்னன் அலெக்ஸாண்டர் படை எடுத்து வந்ததும், கிரேக்க நாட்டு மெகஸ்தனிஸ் (கி.மு. 302) இந்நாட்டுக்குத் தூது வந்ததும் வரலாற்றுக்குச் சிறந்த மைல்கற்க ளல்லவா? இப்படி மேற்கும் வடக்கும் இணையத் தொடங்கிய அந்த வரலாற்றுத் தொடக்க நாளில் நம் தமிழகமும் அனைத்திலும் சிறக்க, இன்றைக்கு இரண்டாயிரத்து நானூறு ஆண்டுகளுக்கு முன் பிற நாட்டினருடன் தமிழ் மக்கள் பண்பாடு, நாகரிகம் முதலியவற்றால் தொடர்பு கொண்டிருந்தார்கள் என்று கொள்வதில் இழுக்கு என்னையோ!

**சமயத் தொடர்பு :**

வடக்கே பாடலியில் வாழ்ந்த நத்தரை வென்று அரசோச்சிய சந்திரகுப்தன் மகனே பிந்துசாரன். இவன் மைசூர் நாட்டில் இன்றும் சைனர்தம் பெருங்கோயிலாகப் போற்றப்படும் சிரவண வலகொலாவில் மறைந்

தவன் என்ற உண்மை மறுக்க முடியாததாகும். பிந்து சாரன் மகனே அசோகன். அவன் பரந்த நிலப்பரப்பை அன்பால் ஆண்டவன். வடக்கே காஷ்மீர் நாட்டு ஸ்ரீநகர் அவன் காலத்தில் தோன்றியது. அவனே தோற்றுவித்த வன். அவன் தென்னாட்டு எல்லையிலும் நெடுந்தொலைவு வந்துள்ளான். அவன் மக்கள் தமிழகத்திலும் இலங்கை யிலும் சமயத்தைப் பரப்பிய வரலாறு நாடறிந்த ஒன்று. அசோகனும் பரந்த பாரத நாட்டைத் தமிழ் நாட்டு எல்லை வரையில் தன் ஆணையின் கீழ்க் கொண்டு வந்தானேனும், தமிழ்நாடு தன் உரிமை இழக்கா வகையில் அவனுடன் நட்புக் கொண்டு இருந்தது. அதனாலேயே அவனது பௌத்தம் அவனுடைய மக்களாலும் பிற அடி யாராலும் தமிழகத்தில் பரவலாயிற்று எனலாம்[1]

கலிங்கப்போர் முடிந்த பின் அசோகன் காலத்தில் கி. மு. 206 க்குப் பின் அவன் தூதுவர்கள் தாமிரவருணி நதிக்கரையில் உள்ள கொற்கையிலும் கேரள நாட்டிலும் பிற விடங்களிலும் சமயம் வளர்த்தார்கள். இதைக் கொண்டே ஸ்மித்து, தென்னாட்டு வரலாற்றில் ஒரு தெளிவான மைல் கல்லைக் காண்கிறார். மேலை நாட்டுத் தூதுவரான மெகஸ்தனிஸ் பாண்டியர் ஆட்சியைப் பற்றிக் குறிக்கிறார். அசோகனுடைய கல்வெட்டுக் களிலுந் தமிழ்நாட்டு அரச பரம்பரைகள் குறிக்கப் பெறு கின்றன. சேர சோழ பாண்டியர் பெயர்களுடன் அசோகர் கல்வெட்டுக்கள் 'கேரள புத்திரர் என்ற பெயரையும் குறிக்கின்றன. கேரளம் சேர நாட்டின் ஒரு பகுதியாகவோ, சேர நாடாகவோ இருக்க வேண்டும். அன்றி, ஸ்மித்துக் குறிப்பது போன்று பின் பாண்டி

1. The Early History of India By V. Smith, P. 75

யருடன் இணைந்த ஒரு சிற்றரசாக இருக்க வேண்டும். அக்காலத்திலேயே சோழர்கள் பெருங்கடற்படையுடன் இருந்தார்கள் போலும்.[1]

மேற்கண்ட மாமூலனார் பாடலினால் நான்மொழிக் கோசருக்கு உதவியாகவே மோரியர் வந்து மோகூரைத் தோற்கடித்தனர் என அறிகின்றோம். இந்த நான் மொழிக் கோசர் யார்? அவர்கள் சிறந்த வீரர்கள் எனத் தெரிகின்றது. 'செம்மற் கோசர்', 'புனைதேர்க் கோசர்' என்று இவர்கள் பேசப்படுகின்றனர். இவர்களை வரலாற்று ஆசிரியர்கள் 'சத்திய புத்திரர்' என்பர். இரு வரும் ஒருவரா, அன்றி வெவ்வேறு இனத்தவரா என்பது அறிஞரால் இனி ஆராயப் பெற வேண்டிய ஒன்றாகும்.

சந்திரகுப்தனும் பிந்துசாரனும் சமண சமயத்தைச் சார்ந்து ஒழுகினர். இருவரும் மைசூர் நாட்டுச் சிரவண வலகொலா என்ற சமயப் பேரூருடன் தொடர்புகொண் டவர். சந்திரகுப்தன் கௌடில்யர் என்ற பிராமணரை உடன் வைத்திருந்த போதிலும் அவன் சமண சமயத்தைச் சார்ந்தவனே என்பர் ஸ்மித்து.[2] அவர்களுக்குப் பின் வந்த அசோகனோ பௌத்தன். எனவே, அம்மூவர் வழித் தமிழ் நாட்டில் பௌத்தமும் சமணமும் பரவலாயின. முதன் முதலாகக் கி.மு. மூன்றாம் நூற்றாண்டிலேதான் தமிழ் நாட்டில் இந்த இரண்டு சமயங்களும் மோரியர் வழியே கால் கொள்ள ஆரம்பித்தன. பின்னர் இவையே அரசியலைக் கொண்டு நீட்டில் சிறந்து ஓங்கின என்பதை அக்கால எல்லையில் நின்று காண்போம். எனவே, வரை யறுத்த தமிழ்நாட்டு வரலாற்றுக் காலத்துக்கு முன்

1, 2. The Easly History of India, P 144

பௌத்தமும் சமணமும் இங்குக் கால்கொள்ள ஆரம்பித்தன என்பது தேற்றம்.

இனி, இக்காலத்துக்கு முற்பட்டது தொல்காப்பியம் என்பது நன்கு தெளிவாகின்றது. வடக்கும் தெற்கும் அரசியல் சமயத் துறைகளில் கலந்த இந்தக் கி. மு. மூன்றாம் நூற்றாண்டுக்கு நெடுங்காலம் முந்தியதுதான் தொல்காப்பியம் என்பதற்கு அதன் அமைப்பும் போக்குமே சிறந்த சான்றுகளாகும். தொல்காப்பியத்தில் பௌத்தம் சமணம் போன்ற சமயநெறிகளோ, அவற்றிற்கு மாறுபட்ட வைதிக நெறிகளோ பேசப் பெறவில்லை. 'கொடிநிலை கந்தழி வள்ளி...' என்ற சூத்திரத்தும், பிற இடங்களிலும் கடவுள் வழிபாட்டையும் வணக்கத்தையும் தொல்காப்பியம் சுட்டிக் காட்டுமேனும் ஒன்றுக்கொன்று மாறுபட்ட சமய நெறியை நாம் அதில் காண இயலாது.

**வடஎல்லை :**

வடக்கு என்று சொல்லும்போது வேங்கடத்துக்கு அப்பாற்பட்டதெல்லாம் வடக்காகவே முடிகின்றது. சங்க இலக்கியங்களில் அவை 'மொழி பெயர் தேயம்' எனவே குறிக்கப் பெறுகின்றன. வடக்கே வாழ்ந்தவரை வடுகர் என்றும் வடவர் என்றும் வழங்கினார்கள். இன்றும் தெலுங்கரை 'வடுகர்' என்று வழங்குவதைக் காண்கிறோம். மோரியர் படை எடுப்பில் இவ்வடுகர் முன்னுற்றனரோ என எண்ண வேண்டியுள்ளது.

> **முரண்மிகு வடுகர் முன்னுற மோரியர்**
> **தென்திசை மாதிரம் முன்னிய வரவிற்கு'** (அகம் 21)

என்று திட்டமாக வடுகரைத் தம்மினும் மாறுபட்டவர் என்றும், அவரோடு மோரியர் தெற்கு நோக்கி முன்னி

வந்தார்களென்றும் மாமூலனாரே கூறுகிறார். எனவே, தமிழ் நாட்டுக்கு அண்டையிலிருந்த வடுகர் மோரியருடன் சேர்ந்தனர் எனத் தெளிதல் வேண்டும். அவர் சேர்க்கை பின் அசோகன் காலம்வரை அப்படியே இருந்ததை வரலாறு காட்டுகிறது. இவ்வடுகரைப் பற்றிக் குறுந் தொகை,

**'குல்லைக் கண்ணி வடுகர் முனையது**
**வல்வேற் கட்டி நன்னாட்டு உம்பர்**
**மொழிபெயர் தேஎத்த ராயினும்'** (குறுந். 11)

என்று அவர் தமிழ்நாட்டு வடவெல்லையில் இருந்த வேற்று மொழி பேசிய தேயத்தார் எனக் குறிக்கின்றது.

வேங்கடத்தைக் கடந்து செல்வதையே வேற்று நாட்டுக்குச் செல்வதாகக் கருதினர் அன்றைய தமிழ் மக்கள். அந்த நாட்டு எல்லை மூவேந்தர் நாட்டு எல்லைக்கு அப்பாற்பட்ட ஒன்று என்பதை,

**'தமிழ்கெழு மூவர் காக்கும்**
**மொழிபெயர் தேஎத்த பன்மலை இறந்தே'** (அகம். 31)

என்றும்,

**'பனிபடு சோலை வேங்கடத்து உம்பர்**
**மொழிபெயர் தேஎத்த ராயினும்'** (அகம். 211)

என்றும் மாமூலர் காட்டுகிறார். எனவே, தமிழ்நாட்டு எல்லை அன்றும் வேங்கடவரையைக் கொண்டு அமைந்தது. எனினும், இந்நாட்டு வேந்தர்கள் இமயம் வரை வெற்றி கண்டும், வேறு வகையில் நட்புக் கொண்டும் வாழ்ந்தார்கள் என்பது வரலாற்று உண்மை. செங்குட்டுவன் இமயம் சென்று பத்தினித்தேவிக்குக் கல்கொணர்ந்

ததும், கரிகாலன் இமயம் சென்றதும், புலியும் வில்லும் பொருந்திய இமய நெற்றியில் பாண்டியன் கயல் பொறித்ததும் இலக்கியங்களின் வழிக்காணும் வரலாறுகளாகும். அவைகள் அத்தனையும் உண்மை என்பார் சிலர். அத்தனையும் பொய் என்பார் சிலர். எது எப்படியாயினும், செங்குட்டுவன், கரிகாலன், நெடுஞ்செழியன் ஆகிய வேந்தர் ஆண்ட அந்தக் காலத்திலே வேங்கடத்தின் வடக்கிலே வாழ்ந்தோருடன்-இமயம் வரை-தமிழர் கலந்து நட்புடன் பழகினர் என்பது தேற்றம். இன்றைக்கு 2500 ஆண்டுகளுக்கு முன்பே கங்கையும் இமயமும் தமிழர் நன்கு அறிந்த ஆறும் மலையுமாய் விளங்கின என்பதும், அவற்றோடு தமிழர் தொடர்பு இருந்தது என்பதும் தேற்றம். ஆயினும், அந்த நாட்களிலும் தமிழகம் வட நாட்டாருக்கு அடிமையாக மட்டும் இருந்ததில்லை என்தும், நட்பு முறையில் தூதுவர் இரு நாடுகளுக்கும் செல்லும் வழக்கம் உண்டு என்பதும் அறியக் கிடக்கின்றன. இது வரையில் நாம் கண்ட கால எல்லை வரலாற்றுத் தொடக்கத்தை ஒட்டிய கால எல்லையாகும். அக்கால எல்லைக்கு நெடுங்காலத்துக்கு முன்புதான் மொகஞ்சதாரோ. ஆரப்பா நாகரிகங்களும், ஆரியர் வருகைக்கு முன் அமைந்த இந்தியாவும் அவற்றில் வாழ்ந்த பழந்தமிழ்க் குடிகளின் வாழ்க்கை முறைகளும் பேசப்படுகின்றன; அவற்றை வாய்ப்பு வந்துழி நாடு காண நன்கு எடுத்துக்காட்டல் அறிஞர் கடன் என்று கூறி இந்த அளவில் அமைகின்றேன்.

**எப்படி வந்தனர்?**

வடநாட்டுக்கும் தென்னாட்டுக்கும் நெடுங்காலமாகத் தொடர்பு இருந்தது என்பர் வரலாற்று ஆய்வாளர். முன் பகுதியில் கண்டபடி, சிந்துவெளி நாகரிகத்தைக் கண்ட

பின் குமரிமுதல் இமயம்வரை ஒரே திராவிட நாகரிகமே பரவி இருந்ததென்றும், எனவே ஒருகாலத்தில் இன்று தென்னாட்டில் வாழும் திராவிடரே இந்தியா முழுவதும் பரவி இருந்தனர் என்றும் கூறுவர். அக்காலம் இன்றைக்குச் சுமார் 5000 ஆண்டுகளுக்கு முற்பட்டதாகும். ஆனால், பிற்காலத்தில் மத்திய ஆசியாவிலிருந்து பல பகுதிகளில் பிரிந்து சென்றதாகக் கூறப்படும் ஆரியரில் ஒரு பகுதியார் வடமேற்குக் கணவாய் வழியாக இந்தியாவில் புகுந்து, சிந்து நதியைக் கண்டு, அங்கு வாழ்ந்த பழங்குடிகளைப் பின்னடையச் செய்து நிலைபெற்றனர்; அதன் பின் கங்கை நதிக்கரையிலும் பரவினர். அந்த வடவிந்தியப் பகுதிகளிலெல்லாம் பரவியிருந்த மக்கள் மெள்ள மெள்ளத் தென்னிந்தியாவில் உள்ளவரோடு வந்து கலந்து விட்டனர் என்பர் வரலாற்றாளர். எனவே, இன்றைய தென்னாட்டுக் குடிகள் ஒரு காலத்தில் வடநாட்டிலும் இருந்தார்கள் என்பது உண்மை.

இனி, இவர்கள் தென்னாட்டுக்கு வரும்போது இங்கு இருந்தவர்களும் அதே இனத்தவரா அன்றி வேறு பழங்குடிகளா என்பதும் ஆராய்தற்கு உரியது. சிலர் திராவிடரும் ஆரியரைப் போன்று அவர் வருமுன் வடமேற்குக் கணவாய் வழியாக வந்தவர்களே என்பர்; பின்பு அவர்கள் ஆரியர் வருகை ஒட்டி மெள்ள மெள்ளத் தென்னகம் வந்து குடியேறி நிலைத்து விட்டார்கள் என்பர். சிலர் தெற்கே பரந்திருந்த லெமூரியாக் கண்டத்தில் தோன்றி வளர்ந்த பழங்குடிகளே திராவிடர்கள் என்றும், அவர்தம் வாழ்வு பரந்த இந்தியா நாடு முழுவதும் இருந்ததெனவும் கூறுவர். தென்பகுதி கடலால் கொள்ளப்பட்ட பிறகு—தென்மதுரையும் கபாட புரமும் குமரிக் கோடும் நாற்பத்தொன்பது

நாடுகளும் அழிந்துபட்ட பின், வடக்கு நோக்கி இமயம் வரை சென்றார்கள் என்றும் கொள்வர். சிலப்பதி காரத்தே இவர்கள் கூற்றை மெய்ப்பிப்பது போன்று,

**'பஃறுளி யாற்றுடன் பன்மலை அடுக்கத்துக்**
**குமரிக் கோடும் கொடுங்கடல் கொள்ள**
**வடதிசைக் கங்கை இமயமும் கொண்டு**
**தென்திசை ஆண்ட தென்னவன் வாழி!'**

(11:19-22)

என்ற அடிகள் வருகின்றன. வரலாற்றுக்கு ஒவ்வாத காப்பியம் எனச் சிலர் சிலப்பதிகாரத்தைக் கூறினும், இது போன்ற கூற்றுகளுக்கு ஆதாரமாக, நில நடுக்கங் களும், தோற்ற அழிவுகளும் உள்ளன என்பதை நில நூல், விளக்கமாக ஆராய்ச்சியாளர் எழுதியதோடு, இழந்த லெமூரியாக் கண்டத்தை பற்றிய குறிப்புகளையும் காட்டுகின்றது. எனவே, மிகப் பழைய நிலமாகப் பேசப் பெறும் லெமுரியாக் கண்டத்தே தோன்றிய மக்களினம் மெள்ள மெள்ள ஊழிதோறூழி வடக்கு நோக்கிச் சென்று நிலைபெற்றது என்றும், அவரே திராவிடர் என்றும், அவர் தம் வாழ்வின் உச்ச நிலையிலே இமயம்வரை சிறந் திருந்தார்கள் என்றும் கொள்ளுதல் பொருத்தமாகும். ஆனால், இவையெல்லாம் வரலாற்று எல்லைக்கு அப்பாற்பட்டவையாகும். சிறந்த ஆய்வாளர் சிந்தை செய்து முடிவு காணல் நலம் பயப்பதாகும்.

**அகத்தியர் யார்?**

இந்தியாவிற்கு ஆரியர் வந்த பிறகும் வடக்கும் தெற்கும் தொடர்பு கொண்டிருந்தன எனலாம். அகத்தி யரைத் தமிழுக்குத் தலைவர் என்று கூறும் புராண மரபும் உண்டு. அகத்தியரை ஆரிய முனிவர் என்றும்

சிவபெருமான் திருமணத்தின்போது அவர் தென்னாட்டுக்கு அனுப்பப்பட்டவர் என்றும், அவர் வரும் வழியில் உயர்ந்த விந்தியத்தை அடக்கித் தென்னாட்டில் புகுந்து, வில்வலன் வாதாபியை அழித்து, பொதிகையில் தங்கித் தமிழ் வளர்த்தார் என்றும் புராண மரபுக் கதைகள் கூறுகின்றன. இனி அகத்தியரே தொல்காப்பியர் முதலிய பன்னிரு புலவருக்கும் ஆசிரியர் என்றும், தொல்காப்பியரது தொல்காப்பியத்துக்கும் அகத்தியமே முதல் நூல் என்றும் இலக்கண மரபு கூறுகின்றது. புராண அகத்தியரையும் இலக்கண அகத்தியரையும் ஒன்றுபடுத்துவதால் உண்டாகும் இழுக்கே, வடக்கே இருந்து வந்த அகத்தியரே தமிழ் வளர்த்தார் என்பதற்குக் காரணமாகின்றது. கந்தபுராண வரலாறு நடந்ததாகக் கொண்டாலும் காலத்தால் மிக மிக முற்பட்டதாகும். கந்த புராண வரலாறும் முருகன் பிறப்பும் புராணத்துக்கும் பரிபாடலுக்கும் வேறுபட்டுச் செல்கின்றன. மேலும், அதே அகத்தியர் பொதியமலைக்கு வந்தார் என்பதற்குச் சான்று இல்லை. கம்ப இராமாயணத்தில் அகத்தியப் படலம் என ஒன்று வருகிறது. அதில் அகத்தியர் தட்சிண பீடபூமியினிடையே தண்ட காரணியத்தில் பிற தவசிகளோடு வாழ்ந்த அகத்தியராகவும், அவரே இராமனைக் கண்டதாகவும் கூறப்பட்டுள்ளது. புராண அகத்தியர் ஒரு கால் அங்கேயே தங்கினவராதல் வேண்டும். விந்திய மலைக்குத் தெற்கே இருந்த கலாசாரமும் பண்பாடும் அவரை அந்தக் காலத்தில் மேலே வரவொட்டாமல் தடுத்திருக்க வேண்டும். அதையே புராணக்காரர் மலை தடுத்தது என்று மலைமேல் ஏற்றிக் கூறிப் பின் வென்றதாகவும் காட்டி இருக்கலாம், இந்த இராமாயண அகத்தியர் இருப்பிடம் பஞ்சவடியிலிருந்து இரண்டு

யோசனைத் தூரத்தில் இருந்தது என்கிறார் P.T. சீனிவாச ஐயங்கார் அவர்கள்.[1] அந்தப் பஞ்சவடி இப்போது மத்திய மாகாணத்திலோ அன்றிப் பம்பாய் மாகாணத்திலோ சாத்பூரா மலைகளுக்குப் பக்கத்தில் இருக்கும் பகுதியாகும். எனவே, அவர்தான் பொதியமலையில் இருந்தார் எனல் பொருந்தாது. ஆக புராண அகத்தியரும் கம்பஇராமாயண அகத்தியரும் ஒருவராய் இருக்க, தொல்காப்பியரின் ஆசிரியர் வேறு அகத்தியராய் இருத்தல் முறைதானே! இவரைப் பற்றித் தனியாகத் தமிழ் முனிவர் எனவே நாடவிட்ட படலத்தில் கம்பரே காட்டுகிறார்.

**இதிகாசங்களிலே தமிழகம் :**

இனி, வான்மீகி இராமாயண காலத்திலேயே சேர சோழ பாண்டிய அரசுகள் இருந்தனவென்றும் தென்திசை நோக்கிச் சென்ற வானர வீரர்களை அழைத்துச் சுக்கிரீவன் அம்மூன்று நாடுகளிலுங்கூடத் தேடச் சொன்னான் என்றும் வான்மீகி கூறியுள்ளதாகவும் P.T. சீனிவாச ஐயங்கார் குறித்துள்ளார்.[2] ஆயினும் கோதாவிரிக்குத் தெற்குப்பகுதி பூராவும் இராவணன் ஆட்சிக்கு உட்பட்டமையின் அங்கே மூவேந்தர் ஆட்சி இருந்திராதென்றும், ஒரு வேளை இராவணன் மறைவின் பின்பே அவர் தோன்றியிருக்க வேண்டுமென்றும் கூறுவர் சிலர். அவர் கூற்றுப் பொருந்தாது. 'பாண்டியன் இருந்திருப்பானாயின் இராமன் அவன் நாட்டிலிருந்து அணை கட்டும்போது அவனைப் பற்றி ஒன்றும் குறிப்பிடவில்லையே' என்கின்றனர். அவன் குறிப்பன்றேனும் கோதாவிரித் தெற்கு முழுதும் இராவணன் ஆட்சியில் இருக்குமாயின், இராமன் எவ்வாறு ஒரு தடையும் இன்றித் தென்கோடி வரையில் வந்திருக்க முடியும் என்ப

1. History of the Tamils. p 55
2. Ibid, p. 52

பதையும் எண்ணிப் பார்க்க வேண்டும் சேர சோழ பாண்டியர்கள் இராவணனுக்கு மாறுபடா வகையில் 'வாழ்ந்த அரசர்களாய் அமைந்திருந்தார்கள் என்பதும், பெண் காரணமாக நடைபெற்ற போரில் தாங்கள் கலந்து கொள்ளாது ஒதுங்கி நின்றார்கள் என்புதும், இராமனது மனத்துயர் கண்டு இரங்கி அவன் சேனை செல்ல வழி விட்டார்கள் என்பதும் கொள்ள வேண்டு வனவாம். இராமாயணம் இல்லை எனில், இந்த ஆராய்ச்சிகளுக்கே இடமில்லை

அகத்தியர்தான் தமிழை வளர்த்தார் என்பதும் ஓரளவு புராண மரபே எனினும், அகத்தியச் சூத்திரங் கள் எனச் சில சூத்திரங்கள் கிடைப்பதால் தொல்காப் பியத்திற்கு முன் அகத்தியம் என்ற இலக்கண நூல் இருந் திருக்க வேண்டும் என்று கொள்ளல் தவறன்று. எனவே இந்த அகத்தியம் என்ற இலக்கணம் செய்தவர் பொதிய மலையில் தோன்றி வளர்ந்த தமிழ் அகத்தியரே என்று கொள்ளல் பொருத்தமுடையது.

இனி, பாரதத்திலே பாண்டியரைப் பற்றிய குறிப்பு கள் வருகின்றன. தமிழ் இலக்கியத்தினாலேயும் பாரதப் போர்க்களத்தே சோறிட்டு ஒரு சேர மன்னன் 'பெருஞ் சோற்றுதியன் சேரலாதன்' என்ற புகழ் பெற்றான் என்பது தெரிகின்றது. ஆகவே, இராமாயண பாரத காலங்களில் தமிழ் நாடு வடநாட்டோடு தொடர்பு கொண்டிருந்ததென்றும் அத்தொடர்பால் தமிழர் தம் பண்பாடும் பிறவும் கெடா வகையில் நட்பு முறையில் சிறக்க அமைந்திருந்தது என்றும் கொள்வது பொருத்த மான தென்பது துணிவுடைத்தாம்.

# VII. சங்க காலத் தமிழகம்

**சங்க காலம் :**

சங்க காலம் தமிழ் நாட்டின் சிறந்த காலம் என்பர் வரலாற்றாளர். அந்தக் காலத்தை வரையறுப்பதில் மாறுபட்ட கருத்துக்கள் உள்ளன. மேலும், இன்று காணும் இலக்கியங்களும் சங்கம் மருவிய இலக்கியங் களும் ஒரே காலத்தில் எழுதப்பட்டன அல்ல. எனவே, சங்க காலம் மிகப் பரவிய காலம் என்பது உண்மையில் கொள்ளத்தக்கதாகும். அச்சங்க கால இலக்கியங்களே நம் பழைய வரலாற்றுக்குத் துணையாக அமைகின்றனவே யன்றி வேறு நிலையான சான்று ஒன்றும் இல்லை. இரண்டொரு மேலை நாட்டு வணிகர்கள் விட்டுச் சென்ற சொற்களும் குறிப்புக்களும் ஓரளவு உதவு கின்றன. பரந்து கிடந்த பண்டைத் தமிழ் நாட்டுக்கும் பின்னைய இந்தியாவுக்கும் இடையிலே சங்க காலத் தமிழகமே இணைக்கும் பாலமாய் அமைந்தது எனலாம்.

**மூன்று சங்கங்கள் :**

சங்கம் என்னும் போது மூன்று சங்கங்களும் நினை வுக்கு வரலாம். தமிழ் நாட்டில் மொழியும் கலையும் வளர்ந்த சங்கங்கள் மூன்று என்பர். முதல், இடை, கடை என்ற மூன்று சங்கங்கள் தென் மதுரையிலும், கபாடபுரத்திலும் மதுரையிலும் இருந்தன வென்பது இறையனார் களவியல் உரையில் தெரிகின்றது; அது அச்சங்கங்களைப் பற்றியும், அவற்றில் இருந்து தமிழ் ஆராய்ந்தாரைப் பற்றியும், அவை வாழ்ந்த கால எல்லை யைப் பற்றியும் பலவாறு கூறுகின்றது அத்துணை எல்லையையும் அதன் பிற கூறுகளையும் அப்படியே

எடுத்துக் கொள்ளல் பொருந்தாது. முதற் சங்கத்துக்கு நூல் அகத்தியம் என்றும் இடைச் சங்கத்துக்கும் பின் கடைச் சங்கத்துக்கும் தொல்காப்பியமே நூலாய் இருந்தது என்றும் அறிகிறோம். தொல்காப்பியம் முழுவதும் இப்போது நாம் பெற்றுள்ளோம் அகத்தியத்திலும் சில சூத்திரங்கள் நமக்குக் கிடைக்கின்றன. எனவே, சங்கங்கள் இருந்திரா விட்டாலுங் கூட மிகப் பழங்காலத்திலிருந்தே பண்பட்ட இலக்கணச் சூத்திரங்கள் தோன்றியிருப்பதிலிருந்தே அக்காலத்தில் வாழ்ந்த தமிழர் வாழ்க்கை பண்பட்ட ஒன்றே என்று கொள்ளல் வேண்டும்.

**தொல்காப்பியம் :**

தொல்காப்பியம் இடைச் சங்கத்தும் கடைச் சங்கத்தும் இருந்த நூலாகக் கொள்ளப்படுதலின் தொல்காப்பியத்தின் வழி அன்றைய தமிழ் நாட்டை முன் கண்டு, பின்னர் சங்க இலக்கியத்தின் வழி இந்நாட்டைக் காணல் சிறப்பு உடையதாகும். வரலாற்று ஆசிரியர்கள் தொல்காப்பியர் காலம் இன்றைக்கு 3000 ஆண்டுகளுக்கு முற்பட்டது என்பார்கள். ஆகவே தொல்காப்பியர் காலத் தமிழகத்தின் வரலாறு பழைய வரலாறேயாகும்

தொல்காப்பியத்தே மூவேந்தர் பற்றிய குறிப்புக்கள் வருகின்றன. அவர்கள் ‘போந்தை, வேம்பு, ஆர்’ என்ற மூவகை மலர்களைச் சூடிய மரபு தெரிகின்றது. அவர்கள் ஆண்ட நாடு ‘வட வேங்கடம் தென் குமரி’ இடைப்பட்ட நாடு என அறிகின்றோம். இந்த நாட்டை முடியுடை வேந்தர் மூவரும் மூன்று பிரிவு செய்து கொண்டு ஆண்டார்கள் என்பதும் தெளிவு. அவர்கள்

ஆண்ட நிலம் நான்கு வகையாக இயற்கையை ஒட்டிப் பகுக்கப்பட்டதைத் தொல்காப்பியரே காட்டுகின்றார். ஒவ்வொரு நிலத்தையும் தனித்தனியாகப் பிரித்துக் காட்டி ஒவ்வொன்றிற்கும் உரிய சிறு பொழுது பெரும் பொழுது களைக் கூறி, அவ்வந் நிலத்து வாழும் மக்களைப் பற்றியும் அவர்தம் ஒழுகலாறுகள், வாழ்க்கை முறைகள், உணவு, உடைவகைகள் ஆகியவற்றையும் விளக்கி, அன்று, மக்கட் சமுதாயம் எப்படி அமைந்ததென் பதையே திட்டமாகக் காட்டியிருக்கின்றார் ஆசிரியர் தொல்காப்பியனார். தொல்காப்பியமும் அகத்தியமும் இலக்கண நூல்கள். இலக்கணம் உண்டாவதற்கு நெடு நாட்களுக்கு முன்பே இலக்கியம் தோன்றியிருக்க வேண் டும். 'இலக்கியங் கண்டு அதற்கு இலக்கணம் இயம்புதல்' மரபாகும். 'இலக்கியத்தினின்று எடுபடும் இலக்கணம்' என்பது அகத்தியச் சூத்திரம். எனவே, தொல்காப்பியர் காலத்துக்கு நெடுநாட்களுக்கு முன்பே தெளிந்த இலக் கியங்கள் உருவாகியிருக்கும். இலக்கியங்கள் மக்கள் வாழ் வையே அடிப்படையாகக் கொண்டு நிற்கின்றமையின், அவர்தம் வாழ்வும் சிறந்து விளங்கியிருந்ததாக வேண் டும். தொல்காப்பியத்தின் மரபியல் சூத்திரங்களில் வரும் பல பொருள்களும் அவை பற்றிய விளக்கங்களும் அக்காலத்தில் மக்கள் தெளிந்த அறிவினை உடையவராக இருந்தனர் என்பதைத் தெள்ளத் தெளியக் காட்டு கின்றன. விலங்குகளிலும் ஆண் பெண் இனங்களைப் பிரித்து அவற்றிற்குத் தனித் தனியாகப் பெயரிடும் வழக் கத்தை மரபியல் நமக்கு விளக்குகிறது.[1] விலங்கினங்களை யும் பறவைகளையும் பல்வேறு வகையில் வேறுபடுத்திக் காட்டி, அவற்றின் தன்மைகளையும் விளக்கும் சூத்திரங்

1. தொல், மரபியல் சூ. 64.

களும் அன்றைய வாழ்வைக் காட்டுகின்றன. மரத்தினின்று புல்லைப் பிரித்தறியும்—பகுத்துணரும்-அளவுக்கு[1] அவர்தம் அறிவு சென்றதெனில் அவர்கள் உயர்ந்த அறிவறிந்த வாழ்வில் வாழ்ந்தார்கள் என்பதை விளக்கவும் வேண்டுமோ! இனி, நானிலத்திலும் அமையும் மேற்காட்டிய கருப்பொருள்களேயன்றி, பிற பல்வேறு பொருள்களையும் தொல்காப்பியர் காட்டுகிறார். இப்படி ஓரறிவு உயிர் தொடங்கி, ஆறறிவுடைய மனிதன் வரையில் உள்ள வேறுபாடுகளை நுனித்தறிந்து, அவ்வவற்றிற்கு ஏற்ற பெயரிட்டு, அவற்றுடன் மனிதன் கலந்து வாழப் பழகிய ஒரு சிறந்த நாகரிக வாழ்க்கையே தொல்காப்பியர் காலத்து வாழ்க்கை எனலாம்.

**தொல்காப்பியர் காலத்து மக்கள் :**

இத்தொல்காப்பியர் காலத்து நாடு அரசர்களால் ஆளப்பட்டது என்பது தெளிவு. அரசருக்கு உரிய பொருள்கள் இவை எனவும், அவற்றைக் கொண்டு அவர்கள் எவ்வாறு தரணி ஆண்டு வந்தனர் எனவும் தொல்காப்பியத்தால் நன்கு அறியலாம்.

**'படையும் கொடியும் குடையும் முரசும்**
**நடைநவில் புரவியும் களிறும் தேரும்**
**தாரும் முடியும் நேர்வன பிறவும்**
**தேர்வுகொள் செங்கோல் அரசர்க்குரிய.'** (மரபு. 71)

என்ற சூத்திரம் அரசருக்கு உரியன எவைஎவை என்பதை எடுத்துக் காட்டுகின்றது. இனி, அவ்வேந்தரும் அவருக்கு உற்றுழி உதவும் சுற்றத்தாரும் போர்மேற் பிரிவதையும் பிரிந்தால் விருப்புறு மனைவியை விட்டு நீங்க வேண்டியதையும் அகப்பொருள்மேல் சாற்றிக் காட்டுகின்றார்.

1. தொல். மரபியல் சூ. 85.

இனி நாட்டில் அந்தணரும் அரசரும் வணிகரும் வேளாளருமாகிய நால்வகைப் பிரிவுகள் உண்டாகி இருந்ததும், ஒவ்வொருவருக்கும் உரிய தொழில் இன்ன இன்ன என்பதும் காட்டப் பெறுகின்றன. அரசர் நாடாளவும், அந்தணர் 'நூலே கரகம் முக்கோல் மணையே' இவை பற்றாகத் தவஞ் செய்யவும், வாணிகர் வாணிகம் செய்யவும், வேளாளர் உழவுத் தொழில் செய்யவும் வேண்டும் எனக் குறிப்பிடுகின்றார். எனவே, தொல்காப்பியர் காலத்தில் நாட்டில் தொழிலால் வேறுபாடு காணும் நிலை உண்டாகி விட்டது என அறிகின்றோம். எனவே, யாதொரு வேறுபாடும் அறியாது தோன்றி வளர்ந்த மனிதன், அந்தக் காலத்துக்கு முன்பே தொழிலால் வேறு படுத்தப்பட்டான் என்பது தெளிவு. இதையே திருவள்ளுவனார்.

'பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும்; சிறப்பொவ்வா
செய்தொழில் வேற்றுமை யான்.'

என்று பின்னால் கூறினார் எனக் கொள்ளல் தகும்

இனப் பிரிவு ஒரு காலத்தில் மனித வரலாற்றில் தோன்றியிருக்க வேண்டும் என்பதை முன்பு கண்டோம் அந்த இனப் பிரிவின் வழிதான் இந்த நால்வகை வேறுபாடுகளும் தோன்றினவோ என நினைத்தல் வேண்டுவதில்லை. 'சிறப்பு ஒவ்வா செய்தொழில் வேற்றுமையான்' என்ற குறள் வழி, மக்கள் தொழில்படு முறை கருதி இவ்வாறு பிரிந்து நின்றார்கள் எனக் கொள்ளலாம். ஆரியர் சிந்து கங்கைச் சமவெளிக்கு வந்து வாழ்ந்த காலத்தில் இவ்வாறு நால்வகைப் பிரிவினைத் தொழில் கருதி உண்டாக்கிக் கொண்டார்கள் என்பர் வரலாற்று ஆசிரியர்கள். இங்கும் அந்த முறையிலேதான் தொழில் வேறுபாடு கருதிப் பிரிவுகள் உண்டாகியிருக்க வேண்டும்.

**தொல்காப்பியர் காலம் :**

ஆரியர் கங்கை சிந்து சமவெளியில் தங்கித் தென்னாட்டுக்கு வந்து கலந்த பின்புதான் இந்தப் பிரிவுகளும் இங்கு ஏற்பட்டிருக்க வேண்டுமென்றும், எனவே, ஆரியர் தென்னாட்டுக்கு வந்த பிறகுதான் தொல்காப்பியம் எழுதப்பட்டிருக்க வேண்டும் என்றும் சிலர் கூறுவர். சிந்துவெளி நாகரிக காலத்திற்குச் சுமார் 2000 ஆண்டுகளுக்குப் பிறகுதான் தொல்காப்பியம் எழுதப் பெற்றிருக்க வேண்டும் என்பது அனைவராலும் ஒப்புக் கொள்ளப்பட்ட ஒன்று. ஆகையால், அக்கால எல்லையில் வடநாட்டுக்கு வந்த ஆரியர் உடனே தென்கோடியிலும் தம் வாழ்வும் பிறவும் பொருந்துமாறு அந்நாட்டு மக்களோடு கலந்து விட்டார்கள் என்று கொள்வது பொருந்துமா என ஆராய வேண்டும். சிலர் அகத்தியர் தொல்காப்பியர் கதையையும் அவருக்கு இருந்த 'திரண தூ மாக்கினி' என்ற பெயரையும் கொண்டு, ஆரியர் மரபினரே தொல்காப்பியர் என்று கூறுவர். ஆனால் அது பொருந்தாது. வெறுங் கன்ன பரம்பரைக் கதைகளையும், கற்பனை எழுத்துக்களையும் வைத்துக் கொண்டு வரலாறு எழுதப் புகின், அது மற்றொரு கதையாக முடியுமேயன்றி, வரலாறு ஆகாது. அன்றிக் கதை வழியே கொள்ளின், தொல்காப்பியரும் வள்ளுவரும் 'களவிய'லின்படி இன்றைக்குப் பல ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்னரே வாழ்ந்தவராக வேண்டும். அந்தக் காலத்தில் ஆரியரைப் பற்றி எண்ணக் கூட இடமில்லை. ஆகவே, தமிழ் நாட்டில் ஆரியர் கலாச்சாரம் கலந்த பிறகுதான் தொல்காப்பியர் வாழ்ந்தாராஅன்றி முன்னரே வாழ்ந்தாராஎன்பதைஆராய்ந்து முடிவுகாணல் வேண்டும். தொல்காப்பிய எழுத்து முறையும், சொல்முறையும், பொருளதிகாரத்துச்

சில பொருள்களும் வடமொழிச் சார்பு பெற்றனவாகக் காண்கின்றன என்பர். அவற்றை எல்லாம் ஒருவாறு ஆராயின், தொல்காப்பியர், வடமொழி வாணர் தமிழ் நாட்டில் வரத் தொடங்கிய அந்தக் காலத்தில் வாழ்ந்தார் என்று கொள்ளுதல் பொருத்தமாகும். வடநாட்டுத் தொடர்பு இன்றைக்கு 2500 ஆண்டுகளுக்கு முன்பே, மோரியர் நந்தர் காலத்திலிருந்தே இருப்பதாகக் காண்கின்றமையின், அதற்கு 500 ஆண்டுகளுக்கு முன் வடவர் இங்கு வந்திருப்பர் என்பதிலும் அக்காலத்திலேயே தொல்காப்பியர் வாழ்ந்தார் என்பதிலும் தவறில்லை. ஆயினும், இதுபற்றி அறிஞர் நன்கு ஆய்ந்து முடிவு காணல் வேண்டும். எப்படியாயினும், தொல்காப்பியர் காலத்தில்—இன்றைக்கு மூவாயிரம் ஆண்டுகளுக்கு முன் தமிழ்நாடு நல்ல பண்பட்ட முறையில் சிறக்க வாழ்ந்து வளம் பெற்று நின்ற நாடாய் - பிற கலப்பு இன்றி விளங்கிற்று என்பதில் சிறிதும் ஐயமில்லை.

**கடைச் சங்க காலம் :**

இனி, கடைச்சங்க காலத்தை நோக்குவோம். கடைச் சங்க காலம் பலருடைய முடிவின்படி கி.பி. முதல் இரண்டு நூற்றாண்டுகளுக்கு உட்பட்டதாகும். ஒரு சிலர் அக்காலத்தை மிகவும் பிற்படக் கொண்டுவர விழைந்தார்களாயினும், பிற சரித்திரச் சான்றுகளுடன் பொருத்திக் காணும் போது, அந்தப் 'பிற்காலம்' என்ற கூற்றுப் பொருந்தாது. மேலோங்கிச் சிறந்து நின்ற அந்தச் சங்க காலத்தை ஒட்டியே ஓர் இருண்ட காலமும் பின் பல்லவர் எழுச்சியும் தொடர்ந்து நடைபெறுகின்றன. கடைச்சங்க காலத்தைத் திட்டமாக வரையறுக்கத் தமிழ் இலக்கிய வரலாற்றுச் சான்று ஒன்றும் கிடைக்கவில்லை. சேரன் செங்குட்டுவன் கடைச்சங்க காலத்து இறுதியில் வாழ்ந்த

வன் என்றும் அவன் காலத்தில் இலங்கையில் 'கயவாகு' வாழ்ந்தான் என்றும் கண்டு, அக்கயவாகு இலங்கையில் வாழ்ந்த காலத்தை ஒட்டியே செங்குட்டுவன் காலத்தையும் அதற்கு முற்பட்ட சங்க காலத்தையும் வரையறை செய்வர். கயவாகு கி.பி. 113 முதல் 125 வரை வாழ்ந்தான் என்பர் கனகசபைப் பிள்ளை[1] அவர்கள். மேலும் அக்கயவாகு கி.பி 173 முதல் 195 வரையில் வாழ்ந்தான் என்பர் நீலகண்ட சாஸ்திரியார் அவர்கள்[2]. எனவே, கடைச்சங்க காலம் அதற்கு முற்பட்டதாக வேண்டும். சாஸ்திரியார் அவர்கள் கி.பி. 100 முதல் 250 வரை கடைச்சங்க காலமாகக் கொள்ளலாம் 2 என்பர். செங்குட்டுவன் காலத்திலே கடைச்சங்கம் இல்லை என்று கொள்ளுவதுதான் பொருத்தமாகும். செங்குட்டுவன் காலத்தில் சிலப்பதிகாரமும் மணிமேகலையும் தோன்றின. அந்த இலக்கியங்களுக்கும் சங்க இலக்கியங்களுக்கும் வேறுபாடு உண்டு. மேலும், கோவலனும் கண்ணகியும் மதுரைக்குச் சென்ற காலத்தில் சங்கம் இருந்ததாகக் குறிப்பில்லை. மதுரையைப் பற்றி விளக்கமாகப் பேசும் சிலப்பதிகாரம், சங்கம் இருந்ததைப் பற்றி ஒன்றும் குறிக்கவில்லை. சாத்தனார் சங்கப் புலவரே யாயினும் கோவலன் மதுரை புகு முன்பே சங்கம் கலைக்கப் பெற்று அவர் தனிமையில் வாழ்ந்திருக்க வேண்டும் எனக் கொள்ளலாம். கண்ணகியால் மதுரை அழிவுற்ற காலத்துக் கடைச்சங்கம் இருந்ததாகவோ, அதன் புலவர்கள் அரச சபையில் வீற்றிருந்தாகவோ ஒரு தகவலும் இல்லை. செங்குட்டுவன் காலத்தில் பாண்டியன் வெற்றிவேற் செழியன் மதுரையிலன்றிக் கொற்கையில்

1. The Tamils 1800 years ago, p. 45.
2. History of South India, p. 112.

தனியாய் வாழ்ந்து வந்தான்; மதுரை அக்காலத்தில் வளம் பெறவில்லை. எனவே, கடைச்சங்கம் செங்குட்டுவனுக்கு முன்னரே இருந்தது என்றும், அக்காலத்தில் தமிழ்நாடு சிறந்திருந்ததென்றும் கொள்ளல் பொருந்தும். சங்க காலப் புலவர் பலர் செங்குட்டுவன் காலத்தில் வாழ்ந்திருந்ததும், அவருள் சிறந்த பரணர் அவனைப் பாடியிருப்பதும் உண்மையே யாயினும், சங்கம் கலைக்கப் பெற்ற பின் அவர்கள் பல இடங்களில் பரவிச் சென்று வாழ்ந்தார்கள் என்று கொள்ளல் பொருந்தும். எனவே கடைச் சங்க காலம், கயவாகுவின் காலத்துக்கு முற்பட்டதாகிய கி.பி. முதல் நூற்றாண்டும் இரண்டாம் நூற்றாண்டின் முற்பகுதியும் என்று கொள்ளல் தகும்.

### கடைச்சங்க காலத் தமிழ் மக்கள் :

இனி, அந்தக் காலத்தில் தமிழ் நாடு இருந்த நிலையை நோக்குவோம். தமிழ் நாட்டில் மூவேந்தரும் பல குறுநில மன்னர்களும் வாழ்ந்திருந்தார்கள். தமிழ் நாட்டு இலக்கியங்கள் பல அக்காலத்தில் தோன்றின. அக்கால வரலாற்றையும் அரசியல் நெறியையும் மக்கள் வாழ்க்கை முறையையும் அந்த இலக்கியங்களே நமக்கு எடுத்துக் காட்டுகின்றன. திருவாளர்கள் கனகசபைப் பிள்ளை,[1] P. T. சீனிவாச ஐயங்கார்,[2] M. சீனிவாச ஐயங்கார்,[3] நீலகண்ட சாஸ்திரியார்[4] போன்ற பெரியவர்கள் இவற்றை அடிப்படையாக வைத்தே அன்றைய வரலாற்றை எழுதியுள்ளார்கள். இன்று இன்னும் பலர் சங்ககால வரலாற்றையும் வாழ்க்கை வளத்தையும் பலப் பல வகையில் பலப்பல கோணங்களில் ஆராய்ந்து எழுது

1. The Tamils 1800 years ago 2. History of the Tamils. 3. Tamil Studies 4. A History of South India

கின்றனர் ஆகவே, சங்ககாலம் என்பது அனைவருக்கும் நன்கு தெரிந்த ஒரு காலமாகிவிட்டது. அன்றைய இலக்கியங்கள் வழி அன்று வாழ்ந்த அரசர்களையும், சிற்றரசர்களையும் கண்டு, பின்மக்கள் வாழ்க்கை முறையையும் பிற வற்றையும் அறிந்து மேலே செல்லலாம்.

**சோழர் :**

சங்க இலக்கியங்களுள் புறநானூறே வரலாற்றை அதிகம் தருகின்றது. பதிற்றுப்பத்து, சேரர் பரம்பரையில் வாழ்ந்த எட்டுச் சேர அரசர்களைப் பற்றிக் கூறுகின்றது. பத்துப்பாட்டால் மூன்று பேரரசரும் சில சிற்றரசரும் நமக்கு அறிமுகமாகின்றனர். மூவேந்தருள் சோழரே அதிகமாக இலக்கியங்களில் பேசப் பெறுகின்றனர். சோழர் பரம்பரையில் சிறந்தவனாய் வாழ்ந்தவன் கரிகாற் பெருவளத்தானேயாவன். இவன் காலத்தைக் கி.பி. 50–95 என வரையறுப்பர் கனகசபைப் பிள்ளை அவர்கள்.[1] ஆயினும், அதை அப்படியே ஏற்றுக்கொள்ளல் இயலாது. எனினும் பத்துப் பாட்டுள் இரண்டாம் பாட்டால் அவன் நன்கு புகழப்படுகின்றான். அவன் காலத்தில் காவிரிப் பூம்பட்டினம் எனும் புகார், வளமான துறைமுகப் பட்டினமாய்ச் சிறந்திருந்தது. அப்பட்டின இருப்பையும் வளத்தையும் பிற சிறப்பியல்புகளையும் விளக்குவதே பட்டினப்பாலையாகும். அதைத் தலைநகராகக் கொண்டு கரிகாலன் ஆண்டான். அவன் குளந்தொட்டு வளம் பெருக்கியும் காவிரிக்குக் கரையமைத்தும், இன்னும் பல வழிகளிலும் மக்களுக்கு உதவி செய்தான் என்பர். அக்கரிகாலன் மகள் வயிற்றுப் பேரனே செங்குட்டுவன் என்பர் சிலர். அது ஆராய்வதற்குரிய ஒன்றாகும். அக்கரி

1. The Tamils 1800 years ago

காலனைத் தவிர்த்து வேல்பஃறடக்கைப் பெருநற்கிள்ளி, உருவ பஃறேர் இளஞ்சேட் சென்னி ஆகிய இரு முன்னோர் கரிகாலனுக்கு இருந்ததாகக் கூறுவர். இளஞ்சேட் சென்னியே கரிகாலன் தந்தை என்பர் இவர்களன்றி, நலங்கிள்ளி, நெடுங்கிள்ளி, பெருநற்கிள்ளி, கிள்ளி வளவன் என்னும் சோழர்கள் அக்காலத்தில் வாழ்ந்தமையும், அவர்களுள் சிலர் தம்முள் மாறுபடப் புலவர்கள் இடை நின்று சந்து செய்தமையும் புறநானூற்றால் அறியலாகும். அவர்கள் மாறுபட்டுப் போர் விளைத்த நிலைகண்டு அக்காலத்துப் போர் பற்றி அறிய இயலும். இவர்களை யன்றிக் கோப்பெருஞ் சோழன் போன்ற சோழர் பரம் பரையில் தோன்றிய அரசர்களும் காணப்படுகின்றார்கள். இவர்தம் தலைநகரம் உறையூர். புகார், கரிகாலன் காலத் துக்குப் பின் கடலால் கொள்ளப்பட்டது போலும்! மணி மேகலையில் கூறப்பெறும் வரலாற்று வழி சரியோ தவறோ! ஆயினும், பட்டினப்பாலையால் பாராட்டப் பெறுகின்ற அத்துணைப் பழம்பெருநகரம் கரிகாலனுக்குப் பின் இல்லையாய்க் கடலுள் மூழ்கியது எனக் கொள்ளல் பொருந்தும். கடற்கரையில் இருந்த தலை நகரத்தை உள் நாட்டுக்கு மாற்றி விட்டார்கள் போலும்! எனவே, உறையூர் தலைநகராய் அமைந்தது. மதிற் சுவரும், காவற் காடும், பிற அங்கங்களும் பொருந்த உறையூர் சிறந்த தலைநகராய் அக்காலத்திருந்தது. சோழர் அவை யில் கோவூர்கிழார் போன்ற சிறந்த புலவர்களும் அறிஞர் களும் வீற்றிருந்தார்களென்றும், அரசியலில் தவறு நேர்ந்துழி அவர்கள் இடித்துரைத்துத் திருத்தி வந்தார் களென்று அறிகிறோம். இச்சோழ மன்னர்தம் வரலாறு கள் பற்றியும் செயல் பற்றியும் உள்ள புறநானூற்றுப் பாடல்களை இன்று தமிழ்ப் புலவர் பலர் பலப்பல வகை யில் ஆராய்ந்து பல்வேறு நூல்களை வெளியிட்டுக்

கொண்டே யிருக்கின்றனர். எனவே, நாம் இந்த அளவில் நிறுத்தி மேலே செல்வோம்.

**பாண்டியர் :**

இனிப் பாண்டியரைப் பற்றிக் காண்போம்; பாண்டியர் வரிசையில் சிறந்த மன்னனாகக் காணப்பெறுகின்றவன் நெடுஞ்செழியன் ஆவன்; அவன் புலவனுமாவன். இளமையிலேயே சிறந்த வீரனாய் விளங்கியவன். மாங்குடி மருதனார் பாடிய மதுரைக் காஞ்சி அவனைப் பற்றியதே யாகும். அவனைப் பற்றிய பாடல்களும் அவன் பாடிய பாடல்களும் புறநானூற்றில் இடம் பெற்றுள்ளன. கடைச்சங்ககாலப் பாண்டியருள் மிகப்பழையவன் முடத்திருமாறன் எனவும், அவன் காலத்திலேயே கடல் கோள் நிகழ்ந்து, கபாடபுரமும் பாண்டி நாட்டின் பெரும் பகுதியும் அழிந்தன எனவும் காட்டுவர் சதாசிவ பண்டாரத்தார் அவர்கள்[1]. முடத்திருமாறன் முதல் உக்கிரப் பெருவழுதி ஈறாகப் பல்வேறு பாண்டிய மன்னர் கடைச்சங்க காலத்திலும் அதற்கு முன்பும் தமிழகத்தில் ஆட்சி புரிந்தனர் : அவர்கள்தாம் தமிழ்நாட்டுப் பழைய மன்னர்கள் என்பர் சில ஆராய்ச்சியாளர். பண்டையர் என்பதே பாண்டியராயிற்றென்றும், அனைவருக்கும் முன் வாழ்ந்தவராதலின் அவரைப் பண்டையரென்று வழங்கினரெனவும் கூறுவர். அப்பாண்டிய மரபினர் வாழ்ந்த தென் மதுரை, கபாடபுரம் முதலிய பழம்பெரு நகரங்களும் அவற்றைச் சார்ந்த நிலப்பகுதிகளும் நெடுநாளைக்கு முன்பே கடலால் கொள்ளப்படடமையின், அப்பழங் காலந்தொட்டே அவர்கள் வாழ்ந்த காரணத்தால் அவர் தம் கூற்றுப் பொருந்துமோ என எண்ண வேண்டியுள்ளது.

1. பாண்டியர் வரலாறு, பக். 9

பாண்டியன் நெடுஞ்செழியனைப் பற்றிய இலக்கியங்கள் தாம் மிக அதிகமாகக் காணப்பெறுகின்றன. சங்க இலக்கியத்திலேயே நீண்ட பாடலாய் அமைந்த மதுரைக் காஞ்சி அவனைப் பற்றியும் அவன் தலைநகரைப் பற்றியும் நன்கு விளக்குகின்றது. இனி, அவனே பாடிய சில பாடல்கள் புறநானூற்றில் உள்ளன. அவன் சிறந்த வீரனாய் இருந்ததோடு பெரும்புலவனாயும் இருந்தான். அத்துடன் பல புலவர்களையும் ஆதரித்தான்; புலவர் வாய்ச் சொல்லாகிய புகழுக்கும் ஏங்கி நின்றான். அவன் கூறிய ஒரு வஞ்சினப் பாட்டில்,

'மாற்றாரை,—ஒருங்கு அகப் படேஎ னாயின்
மாங்குடி மருதன் தலைவ னாகப்
புலவர் பாடாது வரைகவென் நிலவரை' (புறம். 72)

என்றே வஞ்சினங் கூறிப் புலவர் மாட்டுத் தான் கொண்ட உயர்ந்த எண்ணத்தைப் புலப்படுத்துகின்றான். அவன் பல அரசர்களை இளமையிலே புறங்கண்டு வெற்றி கொண்ட வீரன். பாண்டிய மரபில் கடைச் சங்க காலத்தில் அவனே சிறந்தவனாகக் காணப்படினும் இன்னும் சில பாண்டியரும் வாழ்ந்திருந்தனர். பாண்டியன் உக்கிரப் பெருவழுதி காலத்திலே தான் திருக்குறள் அரங்கேற்றப் பெற்றதென்றும், அவனே கடைச் சங்க காலத்தில் வாழ்ந்த இறுதிப் பாண்டியன் என்றும், அவனுடன் சங்கம் அழிந்தது என்றும் கூறுவர். பின்வரும் சிலப்பதிகார மணிமேகலை காலத்தில் சங்கத்தைப் பற்றிய குறிப்பு ஒன்றும் இன்மையின் அக்கூற்றும் பொருத்தமானதே. சில பாண்டிய மன்னரும் இரண்டொரு பட்டத்தரசியரும் புறநானூற்றால் நமக்கு அறிமுகமாகின்றார்கள். அவர்களைப் பற்றி எல்லாம் அதிகம் அறிய வாய்ப்பின்மையின் மேலே செல்லலாம்.

**சேரர் :**

சேரநாடு அக்காலத்தில் தமிழ் வழங்கும் நாடாய் இருந்தது. இன்று மலையாளம் வழங்கும் பகுதி முழுவதும் அன்று தமிழ் வழங்கும் பகுதியாகவே இருந்தது. நெடு நாளைக்குப் பிறகே-11-ஆம் நூற்றாண்டுக்குப் பின் எனல் பொருந்தும்—வடமொழி மிகுதியாகச் சேர்க்கப்பட்ட தமிழ் திரிந்த மலையாள மொழி தோன்றிற்று எனலாம் இன்று உலகம் போற்றும் சிலப்பதிகாரம் தோன்றிய நாடு சேர நாடேயாகும். அங்குச் சேரர் பரம்பரையில் இரு வகுப்பு இருந்தன ;என அறிகிறோம். ஒன்று, சேரலாதன் பரம்பரை; மற்றொன்று, இரும்பொறை மரபு. திருவாங் கூர் - கொச்சியாகிய தென்பகுதியைச் சேரலாதன் பரம்ப ரையும், இப்போதைய மலபார் தென்கன்னடப் பகுதியை இரும்பொறை மரபினரும் ஆண்டனர் எனலாம். இரு வேறு தனிப்பட்ட மரபினராக அவர்கள் வாழ்ந்த போதிலும் அவர் தம்முள் மாறுபட்டதாக வரலாறு இல்லை. தாயத்தாரெனத் தனித்தனி வாழ்ந்த அவர்களது அரசியல் முறை பெரும்பாலும் அமைதியாகவே அமைந்தது எனலாம். சேரர் பற்றிய பாடல்களும், சேர மன்னரே பாடிய பாடல் சிலவும் சங்க இலக்கியங்களிலே காண்கிறோம். இவர்கள் மரபினுக்கு என்றே ஒரு தனித்த இலக்கியமும் உருவாயிருந்தது சிறக்க வாழ்ந்த சோழ பாண்டிய பரம்பரைகளுக்கு இல்லாத ஒரு தனிப் பெருமை அது. 'பதிற்றுப் பத்து' என்ற நூறு பாடல் களின் தொகுப்பே அந்நூல். பதிற்றுப்பத்தின் முதற் பத்தும் இறுதிப் பத்தும் இன்று கிடைக்கவில்லை. கிடைத்த மற்றவற்றைக் கொண்டு சேரர் தம் வாழ்வை ஒருவாறு ஆராய இயலும். இப்பத்துக்களின் பதிகங் களைக் கொண்டே அவர்தம் பரம்பரை மருமக்கள் வழி வந்தது என ஆராய்ந்து முடிவு கட்டியுள்ளார்

திரு. சோமசுந்தர பாரதியார் அவர்கள்.[1] நேற்றுவரை இருந்த திருவாங்கூர் அரச பரம்பரையும் மருமக்கள் தாயவழி இயங்கி வந்ததென்றமையின். அது ஒருவேளை அன்றே தோன்றியிருக்கலாமோ என ஐயுற வழியுண்டு. இத்துறையில் மேலும் ஆராய்ச்சி தேவை.

இனி, சேர அரசருள் இமயம் வரை சென்ற வேந்தரும் உள்ளனர். ஒருவன், 'இமயவரம்பன் நெடுஞ்சேரலாதன்' என்றே வழங்கப் பெறுகின்றான். அவன் இமயம் வரை படை எடுத்துச் சென்று மாற்றாரை வென்று, இமயத்தில் தம் விற்கொடியை நாட்டி வந்தான் என்பர். தமிழ் வேந்தர் மூவருமே இமயத்தில் தத்தம் கொடியைப் பொறித்தனர் என்ற உண்மையை,

**'கயல் எழுதிய இமய நெற்றியில்**
**அயல் எழுதிய புலியும் வில்லும்'**

(சிலம்பு 17-1&2)

என்ற அடிகள் நினைவூட்டுகின்றன. எனவே, இமயவரம்பன் வடநாடு நோக்கிச் சென்று வெற்றி கண்டான் என்பது பொருந்தும். இனிச் செங்குட்டுவனைச் சங்க காலத்துச் சேரர் பரம்பரையிலேயே சிறந்த மன்னனாய்க் காண்கின்றோம். சிலப்பதிகார வஞ்சிக்காண்டம் முழுதும் அவன் வெற்றி பற்றியதேயாகும். அவனும் முன்னோர் போன்று இமயம் வரை சென்று வெற்றி கண்டவன். அவன் கண்ணகிக்குக் கோயிலெடுத்த காலம் அவனது முதுமைக் காலமேயாகும். அவன் இளமையிலேயே ஒருமுறை இமயத்துக்குப் படை எடுத்துச் சென்றான்; தன் தாயின் விருப்பப்படி அவள் படிமத்தைக் கங்கை நீராட்டச் சென்றான் என்பர் அந்தக் காலத்தில் கடைச் சங்கம் இருந்திருக்கலாம். ஆனால், பின்பு கண்ணகிக்காக இமயம் சென்ற காலை கடைச்

1. சேரர் தாயமுறை—ச. சோ. பாரதியார்.

சங்கம இல்லை. எனவே, அவன் கடைச்சங்க இறுதிக் காலத்தில் வாழ்ந்த பாண்டியன் உக்கிரப் பெருவழுதி காலத்திலும் பின்வந்த நெடுஞ்செழியன் காலத்திலும் வாழ்ந்தவன் ஆவன் அவன் தம்பியாம் இளங்கோவடிகளே சிலப்பதிகாரத்தை எழுதியவர் இவர்களைப் பற்றியும் இளங்கோவின் துறவு பற்றியும் கதைகள் வழங்குகின்றன. அவை அத்தனையும் உண்மை எனக் கொள்ள வேண்டுவ தில்லை. செங்குட்டுவன் சிறந்த வேந்தனாய் மண்ணாண் டான் என்பதும். அவன் தம்பி இளங்கோவடிகள் சிலப்பதிகாரத்தைத் தந்தார் என்பதும் பொருந்தும்.

இனி, அச்செங்குட்டுவனது வடநாட்டுப் படை யெடுப்பில் அவனுக்கு உதவியவர் நூற்றுவர் கன்னர் என்றும், அவனை எதிர்த்தவர் கனக விசயர் என்றும் அறிகின்றோம். நூற்றுவர் கன்னரைச் 'சதகர்னி' என்பர் வரலாற்றாளர். கனக விசயர் கங்கைக் கரையில் வாழ்ந்தவர். செங்குட்டுவன் கோயில் எடுத்த காலை இலங்கையிலிருந்து கயவாகு வேந்தன் வந்திருந்தான் என்பர்.[1] அவனைக் கொண்டே தான் செங்குட்டுவன் காலத்தையும் சங்க காலத்தையும் மகாவமிசத்தின் மூலம் வரையறை செய்தனர். எனவே, செங்குட்டுவன் காலத்தில் இமயம் முதல் ஈழம் வரை நாடு நன்கு கலந்து வாழ்ந்ததென்றும், செங்குட்டுவனுக்கு அனைத்து எல்லையும் அறிமுகமாகி அடங்கியும், நட்புக் கொண்டும், நல்லுறவு கொண்டும் அமைந்திருந்தன என்றும் அறியலாம்.

இரும்பொறை மரபினுள் 'யானைக்கட்சேய்', 'கணைக்கால்' போன்ற சில அரசர் ஆண்டுள்ளனர்.

---

1. சிலம்பு, 30;—அடி 160

பதிற்றுப்பத்தில் இறுதி நான்கு பாடல்களும் அவர்தம் பரம்பரைக்குரியன. அவற்றால் அவர்தம் வாழ்வு, வளன், திறன், செயல்முறை முதலியவற்றை அறியலாம்.

**ஏனைய சிற்றரசர் :**

இம்முடியுடை மூவேந்தரே யன்றி, எத்தனையோ சிற்றரசர்களும் அக்காலத்தில் வாழ்ந்துள்ளார்கள். அவருள் சிலர் பெருங்கொடையாளராய் இருந்து மூவேந் தரைக் காட்டிலும் மேலான புகழைப் பெற்றுள்ளனர். பறம்பு நாட்டுக் குறுநில மன்னனாகிய பாரியின் கொடை வளம் நாடறிந்த ஒன்று. அவன் முல்லைக்குத் தேரீந்து அதனால் நிலைத்த புகழ் பெற, அது கண்ட மூவேந்தரும் அவன்மேல் சினங்கொண்டு படை எடுத்தனர். அவர் களால் பாரி கொல்லப்பட்டான் என்பர். இவைபற்றி எல்லாம் சிறந்த புலவராகிய கபிலர் பாடியுள்ளார் பாரி ஆண்ட நிலப் பரப்பு மிகச் சிறியது—300 ஊர்களைக் கொண்டது. ஆயிரக் கணக்கான ஊர்களைக் கொண்ட அகன்ற நிலப்பரப்பை உடைய மூவேந்தரைக் காட்டிலும் கொடையில் சிறந்த புகழ் பெற்றான் பாரி. அதனால் வெறுப்புற்று வஞ்சகத்தால் அவனைக் கொன்றனர் மூவேந்தரும். எனவே, அக்காலத்தில் நிலப்பரப்பில் குறைந்தவராயினும் கொடைப் புகழால் சிறக்க வாழ்ந்த வள்ளல்களும் சிற்றரசர்களும் வாழ்ந்தார்கள் என்பது தெளிவு. பாரியேயன்றி, அதிகமான், ஓரி, காரி, நள்ளி, பேகன் என்னும் குறுநில மன்னர்களும் கொடைவள்ளல் களாய் வாழ்ந்து புலவர் பாடும் புகழைப் பெற்றனர். இவருள் சிலர் தனியாகவே சிறுசிறு நிலப்பரப்பை வைத்து வாழ்ந்தனர். இரண்டொருவர் சிற்றரசர்களாகவும்

இருந்திருக்கலாம். இவ்வாறு கொடையால் புகழ் பெற்ற குறுநில மன்னரே யன்றி, வேறு சில சிற்றரசரும் வாழ்ந்து வந்தனர். அவர்கள் மூவேந்தருக்குக் கீழ்ப்பட்டவராகவும், சேனைத் தலைவர் முதலிய பதவிகளை வகித்தவர்களாவும், பிற அரசியற் காரியங்களைக் கவனித்தவராகவும் வாழ்ந்து வந்தார்கள் எனலாம். புறநானூறு போன்ற இலக்கியங்களின் வழி எத்தனையோ மன்னர்கள்—சிற்றரசர்கள்—குறுநில மன்னர்கள் பெயரளவில் நம்முன் வந்து நிற்கின்றார்கள். அவர்களைப் பற்றிய முழு வரலாறுகளையும் விளக்கங்களையும் அறியத்தக்க வாய்ப்பு நமக்குக் கிடைக்கவில்லை. கிடைக்கும் சிறுசிறு வாய்ப்புக்கள் இலக்கியச் செய்திகளே. அவற்றைக் கொண்டு கனகசபைப் பிள்ளை, P.T. சீனிவாச ஐயங்கார் போன்ற சில அறிஞர்கள் கடைச்சங்க கால வேந்தர்களை ஒருவாறு காட்டியிருக்கிறார்கள்.

இவர்களையன்றித் தொண்டை நாடு, சோழ நாட்டு எல்லையில் சேர்ந்திருந்த போதிலும் அந்தப் பகுதியைத் தனியாக மன்னர்கள் ஆண்டார்கள் என அறிகின்றோம். காஞ்சியைத் தலைநகராகக் கொண்டு இளந்திரையன் ஆண்டான் என்பது பத்துப்பாட்டின் பெரும்பாணாற்றுப் படை என்னும் நூல் வழியே தெரிகின்றது. அவன் சோழன் மைந்தனேயானாலும் எப்படியோ தனியாகத் தலைநகரமைததுச் சிறக்க ஆண்டான் என அறிகின்றோம். அவனைப் பற்றியும், அவன் தலைநகர் பற்றியும், அதன் சிறப்புப் பற்றியும், மக்கள் வாழ்க்கை பற்றியும் அநதப் பெரும் பாடல் நமக்கு நன்கு விளக்குகின்றது.

மேற்கே சேர நாட்டுக்கும் சோழ பாண்டிய நாடுகளுக்கும் இடையே கொங்கு நாடு அமைந்திருந்தது.

அது இக்காலத்துக் கோவை, சேலம் மாவட்டப் பகுதி களை உள்ளடக்கியது. அதைச் சேரர் தமது 'புற நாடு' என வழங்குகின்றனர். அவர்தம் அகநாடு மலைக்கும் கடலுக்கும் இடைப்பட்ட பகுதியாயமைவதால், இது புற நாடாகின்றது. எனினும், சேரர் ஆணைவழி என்றும் இப் பகுதி இருந்தது என்று கொள்ள முடியாது. இப்பகுதி மூவேந்தர் கையிலும் மாறி மாறி நின்றது என்று கொள்ளுதல் பொருத்தமாகும்,

அக்காலத்தில் தமிழ் நாட்டு எல்லை வடவேங்கடம் வரையில் அமைந்திருந்தது. வேங்கடத்து உம்பர் மொழி பெயர் தேயத்தில் பல மன்னர் ஆண்டனர். மைசூர் நாட்டிலும் (எருமை நாடு), ஆந்திரத்திலும், இன்னும் அதற்கு அப்பாலும் வாழ்ந்த வேந்தர்கள் தமிழ் நாட்டொடு பல வகையில் தொடர்பு கொண்டிருந்தார் கள். எனவே அந்தச் சங்ககாலம், தமிழ் நாட்டு வரலாற் றில் சிறந்த பொற்காலமாய் இருந்ததென்றும் இமயத் தொடு ஈழத்தைப் பிணித்து ஒன்றி வாழ்ந்த காலமாயிற் றென்றும் நன்கு அறிகின்றோம். இனி அரசரை விடுத்து, அக்காலத்தில் தமிழ்நாட்டுள் வாழ்ந்த மக்கள் தம் வாழ்க்கை முறையையும் பிறவற்றையும் கண்டு மேலே செல்வோம்

# VIII. சங்ககாலத்துச் சமூக வாழ்வு

**அறிய உதவுவன:**

தமிழ்நாட்டு மக்கள் எப்படி வாழ்ந்தார்கள் என்பதை அறிய விரும்புபவருக்கு அதை விளக்கமாக காட்டும் கால எல்லை கடைச் சங்க நாட்களேயாம். அதற்குமுன் பன்னெடுங்காலமாகவே மக்கள் தமிழகத்தில் வாழ்ந்தவர்கள் என்றாலும், முற்றும் அறிந்து கொள்ளும் வகையில் அவர் தம் வாழ்க்கையை நன்கு விளக்கச் சான்றுகள் இல்லை. கடைச்சங்க காலத்திலும் வரலாறு நிறைந்த குறிப்புகள் இன்றேனும் அக்காலத்தில் எழுந்த இலக்கியங்கள் அவர்தம் வாழ்வைக் கண்ணாடிகளெனக் காட்டி நிற்கின்றன. எனவே, தமிழர்தம் தெளிந்த வாழ்வை அறிய அவை பெரிதும் உதவுகின்றன எனலாம்.

**நானிலம்:**

தமிழகம் நால்வகைப்பட்ட நிலப்பகுப்புக்களாகத் தொல்காப்பியர் காலத்திலேயே பிரிக்கப்பட்டதென அறிந்தோம். உலகுக்கே நானிலம் என்ற பெயர் அதனால் ஏற்பட்டது. குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல் என்ற நால்வகை நிலத்திலும் அவ்வந் நில அமைப்புக்கு ஏற்ப மக்கள் வாழ்க்கை நடத்திவந்தார்கள். தனிநில மல்லாத இருநிலம் திரிந்த பகுதியாகிய பாலையிலுங்கூட மக்கள் வாழ்வு நடைபெற்று வந்தது எனலாம். எனவே, ஐவகைப் பட்ட மக்கள் வாழ்க்கை முறை தமிழகத்தில் அமைந் திருந்தது. ஒவ்வொரு நிலத்திலும் இயற்கையின் நியதிக்கு ஏற்ப, விலங்குகளும் பறவைகளும் வாழ்ந்தன. மக்களும் குடிசைகளோ மாளிகைகளோ அமைத்துக் கொண்டு

அவ்வந்நிலத்தில் பெறும் பொருள்களுக்கு ஒப்ப உணவு கொண்டு வாழ்க்கை நடத்தினார்கள். நிலத்தில் இவ்வாறு இயல்பாக அமையும் பொருள்களைக் கருப்பொருள்கள் என்று கூறி அவற்றை வேறுபடுத்திக் காட்டியுள்ளனர் இலக்கண நூலோர். ஐவகை நிலத்தில் வாழ்வோர் வாழ்க்கை முறைகள் தனிப்பட்டனவாய் இருந்தாலும், அவர்தம் கூட்டு வாழ்க்கை, ஒன்றிய தமிழ்ச்சமுதாய வாழ் வாகவே அமைந்திருந்து மக்கள் ஒருவரை ஒருவர் நன்கு புரிந்துகொண்டு, 'வாழ்வு என்பது கூடி வாழ்தலே' என்ற அடிப்படையில் நிலைத்து நின்று திருந்திய செம்மை நெறியிலே வாழ்ந்தார்கள் என்பது மிகவும் பொருந்து வதாகும்.

## குறிஞ்சி

குறிஞ்சி என்பது மலையும் மலை சார்ந்த இடமு மாகும். அங்கே வாழும் மக்கள் அந்நிலத்தில் கிடைக்கும் தேன், தினை. கிழங்கு முதலியவற்றை உணவாகக் கொண்டு வாழ்ந்து வந்தார்கள். தினை விளைத்துப் பெருக்கி, மாவாக்கி, தேன் எடுத்துக் கொணர்ந்து தினை மாவுடன் சேர்த்து உண்பதோடு வந்த விருந்தினருக்கும் அதை உணவாகக் கொடுத்து ஆதரித்தார்கள். அந்நிலத்து மக்கள் குறிஞ்சிப் பண்ணைப்பாடுவார்கள் தினைப்புனம் காத்தலும், விருந்தோம்பலும் பெண்டிர்தம் செயல்களாய் அமைந்தன. மலை வாழ் வேடுவர் வேட்டையாடுவதும் மலை வாழ் யானைகளைப் பழக்குவதும், மலையில் விளையும் மணப் பொருள்களைக் கொணர்வதும் செயலாகக் கொண்டனர். குறிஞ்சி மலரைத் தொடுத்து அதன் வழிக் காதல் காட்டியும் சூட்டியும் விளையாடும் அவர்தம் வாழ்வே தனிச் சிறப்புடையது. அருவியாடியும், அகன்சுனை குடைந்தும், குறிஞ்சிப்பண்பாடியும் அவர்கள்

பொழுது போக்கும் காட்சி சிறந்த காட்சியாகும். இவ்வாறு குறிஞ்சி நிலமக்கள் தங்கள் நிலத்தில் படு பொருள்களாலேயே தம் வாழ்வினைச் செம்மையாக்கிக் கொண்டார்கள். அவர்கள் தெய்வம் முருகன்.

**முல்லை:**

முல்லை என்பது காடும் காடு சார்ந்த இடமுமாகும். அதில் ஆயர்குல மக்கள் வாழ்ந்தார்கள்; மாயோனைத் தெய்மாகக் கொண்டார்கள்; காட்டில் நிறையப் புல் விளையுமாதலால், மாட்டினை மேய்த்து அதன் பயன் கொண்டு வாழ்ந்தார்கள். வன விலங்குகளை வேட்டை யாடும் வேடர் கூட்டமும் இருந்தது எனலாம். பசுக் களோடு பெண்கள் விளையாடுவதும், மாலை வேளையில் முல்லை மலர் சூடி, முல்லைப் பண் பாடி, வீடு தேடி வரும் காளைகளையும் கன்றுகளையும் பசுக்களையும் எதிர் நோக்கி, அவற்றின் வழித் தம் வாழ்க்கைத் துணைவரை வழிமேல் விழி வைத்துக் காணும் ஆயர்குலப் பெண்களின் வாழ்வும் சிறந்து நிற்பதாகும். அவர்கள் வந்த விருந் தினருக்குப் பாலும் தயிரும் தந்து நலம் புரக்கும் செயல் சிறந்த ஒன்றாகும். கொல்லேறு தழுவுதல் முதலிய வீரச் செயல் விளைக்கும் காளையரும் அவரைக் கண்டு காமுறும் கன்னியரும் மணம் செய்து வாழும் முல்லை நில வாழ்வு எல்லை இல்லா இன்பம் தருவதாகும்.

**மருதம்:**

மருத நிலத்து மக்கள் மற்றவரினும் சற்று மெய் வருந்தி உழைப்பவர் எனலாம். மலையில் பெய்யும் மழை, காட்டு வழியே வற்றிய சருகுகளையும் வண்டல்

மண்ணையும் கொண்டுவந்து சமநிலத்தில் விட்டுக் கடல் நோக்கிச் செல்லுமன்றோ! அந்தச் சமநிலமாகிய விளை நிலமே மருத நிலமாகியது; விளைவுக்கு ஏற்ற நிலமாகியது. அதில் கை வருந்திப்பாடு படுவோரே மருதநில மக்கள். அவர்கள் இனிய மருதப் பண்ணைப் பாடுவார்கள். மழை பெய்யும் காலமறிந்து நீரைச் சேர்த்து நெல் விளைத்து— காலத்தில் செய்யவேண்டுவன செய்து,விளைத்து-அறுத்து. அதைத் தமக்கென வைத்துக் கொள்ளாது மற்றவருக்கும் வழங்கித் தாமும் உண்ணும் நல்வாழ்வே மருதநில மக்களுடையது. பரந்த வாழை இலையைப் பரப்பி, வெண்ணெல் அரிசிச் சோறு இட்டு, சாறும் மோரும் வார்த்து வந்தவர்களை உண்பிக்கும் விருந்து புரக்கும் மனப்பான்மை அவர்களுடையது. அவர்கள் காலம் கணித்து மழை அறிந்து வயலில் செயல்படுவார்கள். அவர்களுக்கு வீட்டு மிருகங்கள் உதவி செய்யும். மாடு அவர்கள் செல்வம். செந்நெல்லும் வெண்ணெல்லும் அவர்களுடைய விளை பொருள்கள். அவர்களை வேளாளர் என்றும் அவர்கள் செயலை வேளாண்மை என்றும் வழங்கினர்.

**நெய்தல்:**

நெய்தல் நில மக்கள் கடல் வளத்தைக் கண்டவர்கள். வாழ்வைத் துச்சமென எண்ணி, ஆழ்கடலுள் சென்று, மீனும் முத்தும் பிற பொருள்களும் கொண்டு வந்து கரையில் குவித்து, நாட்டுச் செல்வத்தை வளர்த்தவர்கள் அப்பரதவர்கள். பழங்காலத் தமிழகத்துக் கடற்கரைப் பட்டினங்கள் அவர்தம் செல்வ வளத்தாலேயே சிறப்புற்றன எனலாம். உரோமாபுரி வரையில் தமிழகத்தின் பெருமை பரவியதென்றால், அதற்குக் காரணம் அவர்கள் கண்டெடுத்த முத்தும் பவளமுமே யாகும்.

**'முத்துக் குளிப்பதொரு தென்கடலிலே**
**மொய்த்து வணிகர்பல நாட்டினர் வந்தே**
**நத்தி நமக்கினிய பொருள் கொணர்ந்து**
**நம்மருள் வேண்டுவது மேற்கரையிலே'**

என்று இன்றைய பாரதியார், அன்றைய முத்துக்குளியலைப் பாராட்டினார். இன்றும் தென்பாண்டி நாட்டில் முத்துக் குளியல் நடைபெறுகிறது இவ்வாறு முத்தையும் பல வகைப்பட்ட மீன்களையும் கொணர்ந்து, கடல் வளத்தை வாரியளித்த இந்தப் பரதவர், தம் வீட்டுக்கு வருவோரைத் தம் பொருள்கொண்டே உபசரிப்பர். இவர்கள் உணவுக்குத் தேவையான உப்பை விளைப்பவர்கள். கடல்மேற் சென்ற கணவர் வரும் வழியையும் அவ்வழியில் உள்ள அல்லல்களையும் எண்ணி எண்ணிப் பரதவப் பெண்கள் பல நாட்கள் கண் விழிப்பதுண்டு. இத்தனை அல்லலிலும் அவர்கள் வாழ்வு இன்பமாகத்தான் கழிந்தது. நெய்தல் பறை முழக்கி, நெய்தற் பண் பாடி, தாழையும் புன்னை மலரும்சூடி, அவர்கள் ஆடிப்பாடி நிற்கும் காட்சி காணற் கினிய காட்சியாகும். வருணன் அவர்தம் தெய்வமாவன்.

**பாலை:**

பாலை தனி நிலமன்று. எனவே, அதில் வாழும் மக்களுக்கும் தனித்த தொழில் இல்லை அதில் வாழும் மாந்தர் தொழிலற்றவராகவே ஆறலைக் கள்வராயினர். வருவோர் போவாரையெல்லாம் வழி மறித்துப் பொருள் பறிக்கும் வன்கண்ணர்களாய் அவர்கள் காட்டப் பெறுகின்றார்கள். தமக்கெனத் தனி வாழ்க்கை நடத்த, விரிந்த பரப்பாகிய அப்பாலை நில அன்னை அவர்களுக்கு

வாய்ப்புத் தாராமையின், அவர்தம் வாழ்வு வன்கண்மையாதாயிற்று. என்றாலும், அவர்கள் உள்ளத்திலும் ஈரம் உண்டு. பாலைப்பண் பாடிப் பாட்டிசைத்து, துர்க்கையை வாழ்த்தி வழிபட்டு, வருவோர்க்கெல்லாம் வாரி வழங்கித் தாமும் உண்டு வாழ்ந்த வாழ்வே அவர்களுடையது. அஞ்சித் தம்மை அடைக்கலம் புகுந்தோரை 'அஞ்சேல்' என்று ஆதரித்துக் காக்கும் அன்புளம் அவர்களுடையது; கடுங்கோடையில் காக்கும் அன்புளம் அவர்கள் பெற்றது. கடுங்கோடையில் காயும் வெயிலையும் பொருட்படுத்தாது விழாவாற்றித் தம்மை மறந்து வாழும் நல்வாழ்க்கை அவர்கள் மேற்கொண்டது. எனவே, அவர்தம் ஆறலைக்கும் வாழ்விலும் அமைதியும் அன்பும் குடிகொண்டன எனலாம்.

இவ்வாறு ஐவகை நிலத்தினும் தனித்தனியாக வாழ்வு நடத்தும் மக்களை முன்வைத்தே சங்க இலக்கியங்கள் எழுந்துள்ளன எனலாம். சிறப்பாக அகப்பொருள் பாடல்களெல்லாம் இந்த ஐந்திணைகளின் பாற்பட்டனவே. அவற்றில் வாழும் மக்களின ஒழுக்கத்தினை --கை கோளினை-வைத்தே இலக்கியங்கள் உருவாயின. கருத்தொருமித்த காதல் வாழ்வு இந்த ஐந்திணையின் பாற்பட்டதே. எந்த அகப்பொருட்பாடலும் இவற்றிற்கு அப்பாற் செல்லாது. எனவே, தமிழ் இலக்கியங்கள்—சிறப்பாகப் பெரும்பான்மையாய் உள்ள அகப்பொருள் இலக்கியங்கள்—இவ்வைந்திணை இலக்கியங்களேயாம்; ஒவ்வொரு பாடலும் ஒவ்வொரு வகையில் மக்கள் வாழ்வை விளக்கிக் காட்டுவதாகும்.

**மன்னரும் மக்களும்:**

இவ்வாறு ஐவகை நிலத்தில் வாழ்ந்த மக்களும் அரசர் தம் ஆணையின்கீழ் இருந்துதான் வாழ்ந்தார்கள். தமிழ் நாட்டில் சங்க காலத்திலே வாழ்ந்த அரசர்களைப் பற்றி

மேலே கண்டோம். அவர்தம் ஆட்சி முறையைப் பற்றியும், அவர்கள் மக்களோடு கொண்ட தொடர்பு பற்றியும் அறிதல் அவசியம். அவர்கள் வழி வழி வரும் அரச குடும்பத்தைச் சேர்ந்தவராகையால், அவரை யாரும் அரச பதவியிலிருந்து விலக்க இயலாது. இவ்வுண்மையை உணர்ந்தவராயினும் அவர்கள், மக்கள் வழியே தம் அரசியலை அமைத்துக்கொண்டது போற்றத்தக்கதாகும். அவர்தம் கோநகரங்கள் சிறந்துவிளங்கின. புகாரும் மதுரையும், வஞ்சியும் காஞ்சியும் சங்க இலக்கியங்களால் நன்கு போற்றப்பெறும் பெருநகரங்களாகும். அந்நகரங்களின் அமைப்பும், அவற்றில் வாழ்ந்த மக்களின் நாகரிகமும் சிறந்தன. மக்கள்மேற்கொண்ட தொழில்களும். அறம் புரந்த பண்பாடும், பிறவும் அவர்கள் மன்னரோடு, கொண்ட தொடர்பினை நன்கு வெளிப்படுத்தும் எனலாம். கோநகரங்கள் அரசிருக்கைக்கு ஏற்ற வகையிலும், அமைச்சர் முதலியோர் தங்கும் வகையிலும், பல்வேறு வகைப்பட்ட மக்கள் கலந்து வாழும் வாழ்க்கைக்கு ஏற்ற நிலையிலும் அமைந்திருந்தன. நகர், அகநகர் புறநகர் எனவும் பட்டினப்பாக்கம் மருவூர்ப்பாக்கம் எனவும் சில நல்ல வகைப்படுத்தப்பட்ட முறைகளால் பிரிக்கப்பட்டு நின்றதும், அவ்வவற்றில் வாழ்வார் யார் யார் என வரையறை செய்யப்பட்டிருந்ததும் வாழ்வு முறையைக் காட்டுவனவாம். இன்னும் பிறநாட்டு வணிகரும் கலைஞரும் அரசியலாரும் வந்து தங்குதற்கென அமைந்த விடுதிகளும் நிறைய இருந்தன. தனித்தனியாக ஒவ்வொரு வகையில் வாணிபம் புரிவோர் தெருக்களும், நாளங்காடி அல்லங்காடி என்ற பகல் இரவுக் கடைவீதிகளும், கோயில்களும், பிறவும் கோநகரங்களின் சிறப்பை விளக்குவனவாம். புகார் பற்றிச்சிலம்பும் மேகலையும்,பட்டினப்பபாலையும்;

மதுரை பற்றிச் சிலம்பும், மதுரைக் காஞ்சியும், வஞ்சி பற்றிச் சிலம்பும், மேகலையும்; காஞ்சி பற்றிப் பெரும்பாணாற்றுப்படையும், மணிமேகலையும் காட்டும் அடிகள் அறிந்து அறிந்து மகிழற்பாலன. இக் கோநரங்களிலே தான் அரசர் தம் ஐம்பெருங்குழுவோடும் பிற அரண்களோடும் ஆணை செலுத்தி வந்தனர்.

முடியுடை அரசருக்கு உடனிருந்து உற்றன சொல்ல ஐம்பெருங்குழு இருந்தது; எண்பேராயமும் அரசர் பக்கத்திருந்ததாக அறிகிறோம். அக்குழுவின் ஒரு பகுதி மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட தலைவரால் அமைந்தது, எனவே, சங்ககால முடியாட்சியும் ஒரு குடியாட்சியாய் இயங்கிற்று எனலாம். எத்தனையோ மன்னர்கள் தாம் இழைத்த தவறுகளைத் தத்தம் மக்கள் எடுத்துக் காட்டிய போது நாணித் திருந்தி வாழ்ந்ததைச் சங்க இலக்கியங்கள் நமக்குக் காட்டுகின்றன, வெள்ளைக்குடி நாகனாரது வாய்மொழி கேட்டுத் திருந்திய மன்னரும்,[1] கோவூர்கிழார் சொற்கேட்டுப் போரொழித்த மன்னரும்,[2] அக் கோவூர் கிழார் சொற்கேட்டுக் காரி மக்களை விடுத்த வேந்தனும்,[3] வெண்ணிக் குயத்தியார் சொற்கேட்டு வெட்கமுற்று நாணிய கரிகாலனும்[4] அக்காலத்தவர்களே. இவை போன்ற நிகழ்ச்சிகள் சங்க இலக்கியத்தில் பல. எனவே மன்னர்கள் வழி வழியாய் வந்து தனி நிலையில் ஆண்டாலும், அவர்கள் மக்கள் மனமறிந்து ஆண்டார்கள் எனலாம். மன்னர்கள் சிற்சில சமயங்களில் உள்நாட்டிலும், பிறநாடுகளிலும் போரிடுவதும் உண்டு. ஆயினும், அவ்வாறான போர்களுள்ளே சில, நல்ல மக்களாலே இடித்துரைக்கப் பெற்ற மேலான அறிவுரைகளால் நிறுத்தப் பெற்றுள்ளன. சிற்சில போர்களும்குழப்பங்களும்

1. புறம், 35, 2. புறம். 45, 3. புறம், 46, 4. புறம். 69

அரசர்வழி அந்தச் சங்க காலத்தில் தமிழ்நாட்டில் நிகழ்ந்தன என்றாலும், அறிவறிந்த மக்கள் காட்டிய அறநெறி வழி நாடு பெரும்பாலும் அமைதியிலேயே இருந்தது எனலாம்.

**கல்வியும் கலையும்:**

அக்காலத்தில் கல்வி சிறந்த நிலையில் இருந்தது எனலாம். சாதாரணக் கிராம மக்கள்கூடக் கற்றறிந்தவராய்த் தம் அரசர்முன் அஞ்சாது தம் கருத்தை உரைக்கும் வகையில் இருந்தனர் எனக் காண்கின்றோம். சாதாரண உரையாடல்களும் பாடல்களாகத் தோன்றுவதைப் பார்க்கும்போது அவர்தம் கல்வியின் உச்சநிலை நன்கு தெரியும். மக்கள் கல்வியின்மேல் கொண்ட அவாவினைக் கருதி அரசரும் கல்வி நிலையங்களையும் கலைக்கூடங்களையும் தோற்றுவித்து வளர்த்தனர் எனலாம். பிற நாட்டு மக்களும் இங்கு வந்து இந்நாட்டு மக்களோடு கலந்து கலை நலமும் வாணிப வளமும் பெற்றார்கள் என்பதை விளக்கச் சான்றுகள் உள்ளன. கல்வியை அரசர்கள் வளர்த்துப் போற்றி வந்தார்கள் என்பதை அவர்கள் புலவர் வாய்ச் சொற்களுக்குக் கட்டுப்பட்ட ஒன்றே காட்டும். ஒரு காலத்தில் வேந்தர் ஒன்றி வாழவில்லை என்றும், அவர்கள் ஒன்றியிருக்கக்கண்ட ஔவையார் அவர்களைப் போற்றினார் என்றும் புறம் காட்டுகிறது. புறம் 367ம்-பாடல் சேரமான் மாரி வெண்கோவும், பாண்டியன் கானப்போர் தந்த உக்கிரப்பெருவழுதியும், சோழன் இராசசூயம் வேட்ட பெருநற்கிள்ளியும் ஒருங்கு இருந்தாரைப் பாடியது என்றும்,

> ‘முத்தீப் புரையக் காண்டக இருந்தனிர்
> கொற்ற வெண்குடைக் கொடித்தேர் வேந்திர்!
>
> (புறம் 367)

என ஔவையார் அவர்களை விளித்தார் என்றும் காண்கிறோம். உக்கிரப் பெருவழுதி கடைச்சங்கத்து இறுதியில் வாழ்ந்தவன். மற்ற இருவரும் அக்காலத்தில் சேர சோழ நாட்டை ஆண்டவர்களாய் அவனுடன் நண்பினராய் இருந்தனர் போலும்! எனவே, பரந்த தமிழ் உள்ளத்தில் குறுகிய பிரிவு மனப்பான்மையும் மாறுபட்ட எண்ணங்களுங்கூட இருந்தன எனலாம்.

கல்வியோடு கலையும் உடன் வளர்ந்தது. நகரங்களை நம் முன் கொண்டுவந்து நிறுத்தும் புலவர்கள், அந்நகரங்களில் அமைந்த பல்வேறு கலை நலங்களையும் காட்டத் தவறவில்லை. புகாரும் மதுரையும் கலைக்கோயில்களாய் விளங்கின. கட்டடங்களில் சுதை கொண்டு தீட்டிய ஓவியங்களை எண்ணாதிருக்க முடியவில்லை கட்டடக் கலையோடு இயல், இசை, நாடகம் என்ற முத்தமிழ்க் கலைகளும் நன்கு போற்றப்பட்டன. இசை நூல்கள் சில இருந்தன என்றும் அவை மறைந்தன என்றும் காண்கிறோம். ஆற்றுப்படைகள் இசை வாழ்ந்ததைக் காட்டுகின்றன. நாடக அமைப்பிலே சில பாடல்கள் அமைந்துள்ளன. இசைக் கருவிகள் பற்றிய குறிப்புக்களும் உள்ளன. இயற்றமிழ் உச்சநிலையில் இருந்தது. இவைகளையன்றி, வெளிநாட்டார் இங்கு வந்து தத்தம் கலை நலம் காட்டி, நமது கலை நலத்தையும் கொண்டு சென்றார்கள் என்பதும் ஓரளவு புலனாகின்றது; 'மாடமண் கால் அறை மாளிகை இடங்களை' எண்ணும்போது அக்காலக் கட்டட அமைப்பும் புலனாகின்றது. அதைப் போன்ற ஆடை வகையிலும் பல்வேறுவகை ஆடைகளைக் காண்கிறோம். 'பட்டினும் மயிரினும் பருத்தி நூலினும், கட்டு நுண்வினைக் கம்மியர்' தனித்தனியாக வாழ்ந்த தெருக்கள் நகரங்களில் இருந்தன. அதை எண்ணும்போது அவர்கள்

ஆடை வகைகளின் உயர்வும் தோன்றுகின்றது. அதைப் போன்றே, கலங்களும்-உண்கலங்களுமாகிய பாத்திரங் களும்-அணியும் கலன்களாகிய ஆபரணங்களும்-பலப்பல வகையில் அன்று நன்கு செய்யப்பட்டன என்பது கண் கூடு. இரும்புக் கொல்லர், பொற் கொல்லர், கருங்கைக் கொல்லர் போன்றார் தனித்தனியே தத்தமது பணி யாற்றிச் சிறந்தார்கள் எனலாம். அணிகள் பலப்பல இருந்தன என்பதைப் புறநானூறு போன்ற இலக் கியங்கள் காட்டுகின்றன. ஒவ்வோர் உறுப்புக்கும் ஏற்ற வகையில் பல்வேறு அணிகலன்கள் இருந்தன என்றும், அவற்றை அணிய வகையறியா வறிய குடும்பங்களும் நாட்டில் நிரம்ப இருந்தன என்றும் ஒரு புலவர் நன்கு காட்டுகின்றார்.

இத்தகைய அணிகலன்களுடன் அக்காலத்திலேயும் நாணயங்கள் பழக்கத்தில் இருந்தன என்பர் ஆராய்ச்சி யாளர். கி. பி. இரண்டாம் நூற்றாண்டில் வாழ்ந்த உரோமப் பேரரசிலிருந்து பலர் இங்கு வாணிபத்தின் பொருட்டு வந்ததாகவும், வந்தவர் தம்முடன் சில நாணயங்களைக் கொண்டு சென்றதாகவும், அங்கு அவை கண்டெடுக்கப்பட்டனவாகவும்கூறுவர் ஆய்வாளர். தவிர, அதே இரண்டாம் நூற்றாண்டின் உரோமப் பேரரசின் நாணயங்கள் சில இங்குத் தமிழ் மண்ணில் காணப் பெறு கின்றன எனவும் கூறுவர்.

**வாணிபமும் உழவும்:**

இவ்வாறு பல்வேறு வகையில் சிறந்த தமிழ் மக்கள் வாணிபத்திலும் சிறந்தவர்களாகவே விளங்கி னார்கள். தாங்கள் திரைகடலோடி வாணிபத்தை வளர்த்ததோடு, தங்கள் நாட்டிலும் பிற நாட்டு

வாணிபர் வந்து தங்கி, வாணிபம் செய்ய வழி செய்து தந்தார்கள். யவனர்கள் அவ்வாறு வந்து தங்கிப் புகாரிலும் மதுரையிலும் இருந்தார்கள் என்பதும் அவர்கள் வாழிடம் தனியாக 'யவனர் இருக்கை' என வழங்கப்பட்டது என்பதும் அறிகின்றோம். அன்று பல்வகைப்பட்ட வாணிபங்கள் நடைபெற்று வந்தன. சில கடைத் தெருக்கள் இரவில் திறந்திருக்கும்; சில பகலில் திறந்திருக்கும்; அவை அல்லங்காடி, நாளங்காடி என வழங்கப் பெற்றன. இன்றும் சிங்கப்பூர் போன்ற பெருநகரங்களில் அவை போன்ற கடைத் தெருக்களைக் காணலாம், ஏன்? மதுரையிலே இராப் பகலற்ற சிற்சில இடங்களை 'ஆலை' இயங்கும் இந்நாளிலும் காண இய லும் மற்றும் ஒவ்வொரு பொருள் விற்பவரும் தனித்தனி யாகத் தனித்தனித் தெருவில் வாணிகம் செய்து வந்தனர். அவர் தம் வாணிபத்தைக் குறிக்கத் தனித்தனிக் கொடி கள் இருந்ததாக அறிகிறோம். வானுற ஓங்கிய கம்பத்து உச்சியில் ஆடும் கொடிகளைக் கொண்டே அங்கு நடை பெறும் வியாபாரத்தின் தன்மையை அறிந்து கொள்ளலாம். 'கூலம் குவித்த கூல வீதி' என்று நவதானி யங்கள் விற்கும் கடைத் தெருவினைத் தனியாகக் குறிப் பிடுகின்றார் புலவர். இவ்வாறே பிற வாணிபத் தெருக் களும் சிறந்திருந்தன.

மக்கள் உழவையும் வாணிபத்தையும் சிறந்த முறையில் அக்காலத்தில் போற்றினார்கள் என்பது நன்கு புலனாகிறது. அக்காலத்தில் சோம்பலின்றி உழுது பயிரிட்டும், வாணிபம் செய்தும் பொருள் பெருக்கிப் பெற்றது கொண்டு சுற்றம் அருந்தி வாழ்ந்த வகை உலகறிந்த ஒன்று. இனி, இம்மக்கள் இன்றே போலப் பல்வேறு சாதிப் பகுப்பால் பிரிக்கப்

பட்டு வாழ்ந்தவர்களா, அன்றி ஒன்றி வாழ்ந்தார்களா என்பது காணல் வேண்டும். 'பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும்' என்று வள்ளுவர் கூறிய நாட்டில், அன்றே இன வேறுபாடு தோன்றிவிட்டது எனலாம். எனினும் வாழ்வில் மக்கள் அனைவரும் கூடியே வாழ்ந்தார்கள். செய்தொழில் வேற்றுமையான் அவர்கள் பெயர் பிரிக்கப் பட்டதேயன்றி, சாதியால் அன்று. கூலவாணிகள் சீத்தலைச் சாத்தனார், மருத்துவன் தாமோதரனார் கணக்காயனார் மகனார் நக்கீரனார், பொற்கொல்லன் என இவ்வாறு தொழிலால் வேறுபாடு இருந்ததே ஒழியப் பிறப்பால் வேறுபாடு இல்லை. என்றாலும், ஆற்றுப்படை நூலுள் தனியாக மறையவர் வாழிடங் கூறி, அவர் உண்ணும் மரக்கறி உணவினைக் காட்டி விளக்குவதனாலும் தொல்காப்பியத்திலேயே இன மரபுகளின் பெயர்கள் காணப்படுகின்றமையாலும் இந்தச் சாதி வேறுபாடுகள் அக்காலத்தில் தமிழ் நாட்டில் பிறரால் புகுத்தப்பட்டனவாகி வேரூன்றா நிலையில் இருந்திருக்கலாம் எனக் கொள்ளல் பொருந்தும்.

### வடக்கும் தெற்கும்:

சங்க காலத்துக்கு முன்பே வடக்கும் தெற்கும் இணைந்திருந்தன என மேலே கண்டோம். வடவிந்தியாவில் வாழ்ந்த ஆரியர் சங்க காலத்துக்கு முன்பே தமிழ் நாட்டில் வந்தவராதல் வேண்டும். அவர் தம் சாதி வேறுபாடு முதலியவற்றையும் இங்குக் கொண்டு வந்து புகுத்தி இருக்கலாம். எனினும், கடைச்சங்க கால இறுதிவரை தமிழர் பிறர் ஆதிக்கத்தில் கட்டுப் படாது தலை நிமிர்ந்து நின்ற காரணத்தால், ஆரியர் தம் பழக்க வழக்கங்கள் வளர்ந்தோங்க வழி இல்லாது போயிருக்கலா மன்றோ! பின் களப்பிரர் போன்றார்

நாட்டில் நுழைய, தமிழர் நலங்கெட்ட காலத்திலேதான், அவர்தம் பழக்க வழக்கங்களும் வழிபாடுகளும் பிறவும் இங்கு அதிகமாகக் கால்கொள்ள ஆரம்பித்திருக்க வேண்டும். அவைப் பற்றிப் பின்னர்க் காண்போம்.

சங்க காலத்தில் வாழ்ந்த மன்னர்கள் வடநாட்டுத் தொடர்பு கொண்டவர்கள் என்பதற்குப் பல சான்றுகள் உள. ஆரியப்படை கடந்த நெடுஞ்செழியன் என்ற பாண்டியன் வடநாட்டு ஆரியரை வென்றவரலாறும், செங்குட்டுவன், கரிகாலன் ஆகியோர்தம் வடநாட்டுப் படை எடுப்புக்களும் நாடறிந்தனவே. அவர்களையன்றி, பெருஞ் சோற்று உதியன் சேரலாதன் என்ற பெயருடைய சேர மன்னனும் பேசப்படுகின்றான். அவன் பாரதப் போரில் வருந்தியோருக்குச் சோறளித்த சிறந்த வள்ளலாவன். அவனைப் புலவர்,

**ஈரைம் பதின்மரும் பொருதுகளத் தவியப்**
**பெருஞ்சோற்று மிகுபதம் வரையாது கொடுத்தோய்!**

(புறம்.2)

எனப் பாராட்டுகின்றார். எனினும், அவனைப் பற்றி ஆராய வந்த நீலகண்ட சாஸ்திரியார் அவர்கள், இச் செயலை அவன் முன்னோன் ஒருவன்மேல் ஏற்றுகின்றார்[2]. ஆயினும், நேராக அவன் செயல் எனவே இதை ஆசிரியர் குறிப்பிப்பதை மாற்றி வேறு வகையில் பொருள் கொள்ளத் தேவை இல்லை. ஸ்மித்து அவர்கள் காட்டுவது போன்று இராமாயண பாரத காலத்தைக் கி. மு. 400க்கும், கி. பி. 200க்கும் இடையில் கொண்டுவந்தால்[2] இந்த இடப்பாட்டுக்கும் வழியில்லை. கடவுளரின் அவதாரங்களாகக் காட்டும் இந்த வட

1. History of South India, p. 113
2. History of India, p. 33

நாட்டு வரலாறுகளை நமக்கு மிக அண்மையில் கொண்டு வரச் சிலர் விரும்பமாட்டார் என்பது உண்மைதான். எனினும், வரலாற்றுக் கண்கொண்டு காணும்போது உள்ளது சிறக்கத்தானே வேண்டும்! மேலும். பாரத இராமயணங்களைப்பற்றி அவை வெறுங்கதைகளென் றும் அவை வரலாற்றுக்குப் பயன்படா என்றும் ஸ்மித்துக் காட்டுகிறார்.[1] எனவே, இந்த அளவோடு அதுபற்றி ஆராயாது நாமும் நிறுத்திக்கொள்வோம்.

## வேற்றுமை இடம்பெறுகின்றன:

இராமாயண பாரத வரலாறுகள் பல சங்க இலக்கியங் களில் இடம் பெறக் காண்கிறோம். எனவே, அக்கதைகள் நாட்டு வழக்கத்தில் வந்துவிட்டதோடு, அவற்றின் வழி ஆரியர்தம் தமிழ்நாட்டு வாழ்வும் நமக்குப் புலப்படுகிறது எனலாம். தெய்வங்களைக் குறிக்கும் சமய இலக்கியங் களில் பலராமன், கண்ணன் போன்றாரும் பேசப்பெறு கின்றன. வடமொழியிலுள்ள சில இலக்கியக் கருத்துகளும் இங்கு இடம் பெற்றுள்ளன இதே வேளையில் வடக்கே கங்கைக் கரையில் வேத காலத் தெய்வங்கள் வீழ்த்தப் பெற, புதிய தெய்வங்கள்—பௌத்த சமண சமயத் தெய் வங்கள்—தோன்றி வளரலாயின என்பர் ஆய்வாளர். எனவே, வாழ்விழந்த அந்தத் தெய்வங்களை இங்குத் தென்னாட்டில் கொண்டுவந்து நிறுத்த முயன்றார்கள் ஆரியர்கள் எனலாம், அவர்தம் முயற்சி அந்தச் சங்க காலத்திலே முழுப்பயன் தரவில்லை என்றாலும், அடுத்த

1. They are the creatures of imagination. The heroes are like the knights who appear in the Round Table of British Legends.—Histoy of India p. 31.

நூற்றாண்டு களுக்குள்ளேயே நிலைக்கும் வகையில் இடம் பெற்று விட்டதெனலாம். எனினும், அவையும் பின் வந்த சமண, பௌத்த சமயச் சூறாவளியில் சிக்கிப் பின் ஏழாம் நூற்றாண்டில் தமிழ் . நாட்டுக்கு ஏற்ற வகையில் பெற்ற சில மாற்றங்களுடன் தலைநிமிர்ந்து வாழத்தொடங்கி இன்று வரையில் பல்வேறு மாற்றங்களுக்கு உட்பட்டு வாழ்கின்றன் எனலாம். அவற்றின் விரிவுகளையும் வாய்ப்பு நேர்ந்துழி அங்கங்கே காணலாம்.

**தெய்வங்கள்:**

சங்க இலக்கிம்ங்களிலே சிவன், திருமால், முருகன் போன்ற தேவர்கள் பேசப்பெறுகின்றார்கள். முருகன், திருமால், இந்திரன், வருணன், துர்க்கை போன்றார் திணைநிலத் தெய்வங்களாகக் காட்டப்பெறுகின்றனர். அத்தேவர்கள் தோன்றி வளர்ந்த வகையினையும் வரலாற்றினையும் அறிஞர்கள் பல்வேறு வழியில் ஆராய்ந் துள்ளார்கள். முருகன் எப்படிக் குறிஞ்சி நிலத் தெய்வ மானான் என்பதையும், எப்படிச் செவ்வேளாகிச் சிறந் தான் என்பதையும் பிறகு எப்படிச் சுப்பிரமணியனாகவும் கார்த்தி கேயனாகவும் வடமொழி வாணர்வழி மாற்றப் பட்டான் என்பதையும் திரு.வி க.வின் 'முருகன் அல்லது அழகு' என்பது போன்ற பல நூல்கள் நன்கு எடுத்துக் காட்டும். கரிய காட்டினைக் கண்டு கசிந்துருகி, நின்ற நீண்ட மரங்களையும் கரிய நிறத்தையும் பிணிக்க, நீண்ட உருவுடைய திருமால் தோன்றிய விதமும், பின் அவனது எல்லையற்ற காலம் கடந்த நிலையும் பின் அவன் விஷ்ணு வான வரலாறும் பரிபாடல் போன்ற இலக்கியங்களும் பிறவும் கூறுவன, மருநில வேந்தன் மண்ணாள் வேந்தனா கிப் பின் விண்ணாள் வேந்தனாகிய இந்திர நிலை பெற்ற

வரலாறும், கடல் மன்னன் வடமொழி வருணனானதும், துர்க்கையின் தோற்றமும் காலப்போக்கின் மாற்றத்தைக் காட்டுவனவன்றி வேறென்ன? இவ்வாறு தமிழுக்கே உரிய திணை நிலத் தெய்வங்கள் எவ்வெவ்வாறு மாற்றமுற்றும் நிலைகெட்டும் வந்தன என்பதை இன்னும் நன்கு ஆராய்தல் வேண்டும். நிற்க. இப்படித் திணைநிலத் தெய்வங்கள் பெயர் மாற்றமும் பிற மாற்றங்களும் பெறச் சிவன் பெயர் மாற்றம் பெறாமலே பிற மாற்றங்களுடன் வேத வாணர்தம் கடவுளாகக் காண்கின்றான். எனினும், சங்க இலக்கியத்தில் காணப்படும் சிவனும், திருமாலும், கந்தழியும், வள்ளியும் அவர்தம் தமிழ் உள்ளத்தெழுந்த உயர் தெய்வங்களென்றும். அவற்றின் வழித் தமிழர்தம் வாழ்க்கை நெறியையே அன்று காட்டினார்கள் என்றும் கொள்வது பொருத்தமானதாகும். இவர்கள் வேத காலச் சிவ விட்டுணுக்களினும் வேறுபட்டவர்கள் என்பதும் அறிய வேண்டுவதாகும்.

**பிற இயல்புகள்:**

இன்னும் மக்களின் சமுதாய வாழ்வில் எத்தனையோ காணல் தகும். ஒரு சில அடுத்துவரும் காப்பிய கால வாழ்வொடு பின்னிப் பிணைந்துள்ளன. சங்க காலத்தில் மக்கள் கள்ளையும் ஊனையும் வெறுத்து ஒதுக்கவில்லை எனத் தெரிகின்றது. 'நேக்கிலை பெய்த தேக்கள் தேறலை'ச் சிறந்த கபிலர் உண்டதாகக் காண்கின்றோம் இன்னும் ஈசற் சோறும், பிற கறிச் சோறுகளும் புலவரை நன்கு பாடவைத்தன என்பதைக் காண்கிறோம். பாற்சோறும் தயிர்ச்சோறும் சிறந்த உணர்வுகள்தாம். நிறைய மரக்கறி உணவும், மாமிச உணவும் அச்சோற்றுடன் கலந்து பயன்பட்டன எனக் காண்கிறோம். பசுவின் பாலும் நெய்யும் மோரும் தயிரும்

சிறந்த உணவுப் பொருள்களாய் நின்றன. அவர்தம் விருந்து புரந்தோம்பும் வாழ்வு சிறந்த வாழ்வாகும்.

அக்காலத்தில் நாடு முழுவதும் நல்ல சாலைகள் இருந்தன என அறிகிறோம். காட்டு வழியிலுங் கூடக் கரடு முரடான பாதைகளாயினும் அவை தனியாகச் செல்லும் வகையில் அமைந்திருந்தன. ஆற்றுப் படைகளுள் அவர்கள் செல்லும் பாதைகளை எண்ணும் போது சில நன்கு அமைந்துள்ளன என்றும் சில காட்டு வழிகளாக இருப்பினும் மற்றவருக்குக் காட்டினால் புரிந்துகொள்ளும் வகையில்தான் இருந்தன எனவும் காண்கின்றோம். இவ்வாறு அரச பாட்டைகளும் அல்லாச் சிறு பாதைகளும் நன்கு அமைந்து நாட்டை அணி செய்தன எனலாம். அது போன்றே அரசர்கள் நீர்ப்பாசன வசதிகள் செய்தார்கள். காவிரிக்கு முதன்முதல் கரை கட்டிய பெருமை கரிகாலனுக்கு உண்டு என்பர். பல்வேறு ஏரிகள் அமைத்து விளைநில எல்லையைப் பெருக்கினவர். அக்கால மன்னர்கள். இன்றைய பொதுத்துறைப் பகுதிகள் யாவும் (**Public Works Department**) அந்தச்சங்காலத்தில் தோன்றி உருப் பெற்றனவே எனலாம். இவ்வாறு எல்லா வகையிலும், தமிழ்நாடு ஏற்றமுற்றிருந்த நல்ல பொற் காலம் கி.பி. இரண்டாம் நூற்றாண்டின் எல்லையில் முடிவுற்ற சங்க காலமே எனலாம்.

# XI. காப்பிய காலத்தில் தமிழகம்

**சமய சமூக மாறுதல்கள்:**

வடக்கும் தெற்கும் என்று இணைந்தன என்பது திட்டமாகக் கூற முடியாவிட்டாலும், அந்நாள் தொட்டு அங்கே வடக்கே ஏற்படும் மாறுதல்களும் பிறவும் தென்னாட்டை ஓரளவு பாதிக்கச் செய்தன எனலாம். கலை, பண்பாடு, நாகரிகம், வாழ்க்கைமுறை எல்லா வற்றிலும் தமிழ்நாடு வடவிந்தியாவைக் காட்டிலும் வேறுபட்ட நிலையிலே இருந்தாலுங்கூட, அந்த வட நாட்டு அரசியல், சமூக சமய இயல் மாற்றங்கள் ஓரளவு தமிழ் நாட்டையும் தொட்டுவிடுகின்றன என்பதை வரலாறு காட்டுகின்றது. ஏறக்குறைய இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பிருந்தே-புத்தர் பிறந்த நாளிலிருந்தே இந்த மாற்றங்களைக் காண இயலும். வடவிந்தியாவுக்குத் தென் மேற்கு கணவாய் வழியாக வந்த ஆரியர் தம் வேதத்தையும் அதன் வழிக் கடவுளரையும் உண்டாக்கிக் கங்கை சிந்து வெளியில் வழிபட்டு வந்தனர். எனினும், அவர்தம் வாழ்க்கையில் புத்த சமண சமயத் தோற்ற வளர்ச்சி ஒரு பெருமாறுதலைச் செய்துவிட்டது என்பது உண்மையாகும். புத்தர் பெருமான் பிறந்து வாழ்ந்த காலத்திலே பௌத்தம் ஓரளவு பரவியது என்றாலும், சரியாக அவர் பிறந்த ஒரு நூற்றாண்டுக்குப் பின்புதான் அது சிறக்க வளர்ந்தது எனலாம். வைசாலியில் கி.மு 377இல் உண்டான இரண்டாவது புத்த சங்கமே அச்சமயத்தை நாடு முழுவதும் பரப்ப வழிதுறைகளை மேற் கொண்டது என்பர் ஆய்வாளர். அதற்குப்பின் அசோகர் காலத்தில் கி.மு. 240இல் உண்டான மூன்றாவது புத்த

சங்கமே நன்கு தொழிற்பட்டுத் தென்னாடு தாண்டி ஈழம் வரையில் புத்த சமயத்தைப் பரப்பியது எனலாம். அந்த இரண்டு மூன்று நூற்றாண்டுகளிலும் வடவிந்தியாவில் புத்தருக்கும் வைதிக ஆரியருக்கும் அடிக்கடி போரும் பிணக்கும் நடந்து கொண்டேதான் இருந்தன. இந்திய வரலாற்றுத் தெளிவு ஏற்பட்ட அந்தக்காலத்தே இந்தச் சமயப் போராட்டந்தான் நன்கு கண்களுக்குப் புலனாகின்றது புத்த சமயத்தை ஒட்டி வடநாட்டில் சமணமும் கால்கொள்ளத் தொடங்கியது. அசோகர் போன்ற பேரரசர்களும் அந்தச் சமயங்கள் வளரப் பாடுபட்டனர். எனவே, வைதிக சமயம் அவற்றின் முன் ஆற்றா நிலை எய்தியது. அந்தக் காலத்திலேதான் அது தெற்கு நோக்கி வாழ வழி வகுத்திருக்கும், வழியெலாம் கடந்து பின் தென்கோடியில் உள்ள தமிழகத்தும் அது பரவியது. என்றாலும், அன்றைய தமிழர் தம் உயரிய வாழ்வில் அதனால் புகுந்து வாழ்ந்து நிலை பெற முடியவில்லை. கூடியவரையில் தன் கொள்கையைப் பரப்பிக் கொண்டிருந்த அதே வேளையில் அங்கு வடக்கே தோன்றிய பௌத்தம், சமணம் என்ற இரண்டும் அதை வெகுவேகமாகத் துரத்திக்கொண்ட வந்து தமிழகத்திலும் பரவ ஆரம்பித்தன. அந்தக் காலந்தான் தமிழ் நாட்டிலும் கடைச்சங்கம் அழிவுற்று, கரிகாலன், நெடுஞ்செழியன், செங்குட்டுவன் போன்ற சிறந்த மன்னர் வாழ்ந்து மறைந்தபின் தக்க தலைசான்ற மன்னர் இல்லா நிலை ஏற்பட்ட காலமாய் அமைந்தது. தடுத்து நிறுத்தத் தக்கவர் இல்லாத காலமாதலால் வடக்கிலிருந்து வந்த இந்த வைதிக சமயமும், சமணமும், பௌத்தமும் தமிழ் நாட்டில் பரவலாயின. அவை பரவத் தொடங்கிய அந்தக்

காலத்திலேதான் தமிழில் பெருங்காப்பியங்களாகிய சிலப்பதிகாரமும் மணிமேகலையும் தோன்றின எனலாம்.

**காப்பிய கால மாற்றம்:**

சங்க காலத்தை ஒட்டியதுதான் காப்பிய காலம். சங்கத்திருந்த புலவர் பலர் காப்பிய காலத்திலும், வாழ்த்திருக்கக்கூடும். சங்க காலத்தில் தன் முற்பகுதியைக் கழித்த செங்குட்டுவன் பிற்காலத்தில் இக்காப்பியங்கள் எழுந்த போதும் நாட்டில் இருந்த நிலையை நன்கு உணர்ந்திருப்பான். பௌத்தமும் சமணமும் வைதிக சமயமும் நாட்டில் பரவ ஆரம்பித்தன. வைதிக சமயத்தவனாகிய மாடலன் சிலப்பதிகாரத்திலே ஒரு முக்கியமான பாகத்தை வகிக்கின்றான். சிலப்பதிகார ஆசிரியராகிய இளங்கோ அடிகளோ சமணர். அவர் நண்பரும் மணிமேகலைக் காப்பியம் செய்தவருமாகிய சாத்தனார் தீவிர பௌத்த சமயவாதி. இப்படி வெளியிருந்து வந்த மூன்று சமயங்களின் சேர்க்கையும் வளர்ச்சியுமே இரண்டு காப்பியங்களில் காணப்பெறுகின்றன. எனினும், சங்க காலத்தில் தனித்திருந்த தமிழ்ச் சமுதாயத்தின் வாழ்க்கையும் போக்கும் ஓரளவு நிலை பெற்று அடியோடு மறைந்து கெட்டு மாறா வகையில் வாழ்ந்தன எனலாம்.

**மன்னர்கள்:**

சிலப்பதிகாரம், மணிமேகலை என்ற இரண்டும் புகார் நகரில் தொடங்கி வஞ்சியில் முடிவனவேயாம். மணிமேகலை காஞ்சியையும் பிணிக்கிறது. சிலம்பு மதுரையின் வாழ்வைக் காட்டுகிறது. புகாரில் தோன்றிய கோவலன் மதுரையில் கொலையுண்ண, வஞ்சி சேர்ந்த கண்ணகிக்குக் கோயிலெடுப்பித்த

கதையே சிலப்பதிகாரம். கோவலனுக்கு மாதவி வழிப் பிறந்த மணிமேகலையின் வரலாற்றைக் கூறுவதே மற்றொன்று. இப்படி ஒரே குடும்பத்தைப் பற்றி எழுந்த இரண்டு காப்பியங்களே அன்றைய தமிழ் நாட்டு நிலையை ஓரளவு நமக்குக் காட்டுகின்றன எனலாம். சிலப் பதிகாரம் மூவேந்தரையும் பிணிக்கின்றது. 'முடிகெழு வேந்தர் மூவர்க்கு முரியது' எனச் சாத்தனார் கூறியதாக வரும் அடி நோக்கற்பாலது. எனினும், கோவலன் வாழ்ந்த காலத்தில் சோழ நாட்டில் சிறந்த சோழமன்னர் யாரும் இல்லை என்றுதான் கொள்ள வேண்டியுள்ளது. மதுரைக் காண்டத் திறுதியில் நெடுஞ்செழியனையும், வஞ்சிக்காண்டத்திறுதியில் செங்குட்டுவனையும் காட்டிய இளங்கோ அடிகள், புகார்க் காண்டத் திறுதியில் ஒரு சோழனையும் காட்டவில்லை எனினும், சோழ அரசன் இல்லாது சோணாடு இல்லை. எனவே எவனோ சாதாரண மன்னனாய் வாழ்ந்திருந்திருக்கக் கூடும். அவனே பின் மணிமேகலையில் பேசப்பெறும் உதயகுரமன் தந்தையாய் இருக்கலாம். பாண்டி நாட்டிலோ, நெடுஞ் செழியன் வாழ்ந்து வந்தான் நம் சங்க காலத்தில் கண்ட நெடுஞ்செழியனும் இவனும் ஒருவரல்லர். அந்த நெடுஞ் செழியனுக்குப் பின் உக்கிரப்பெருவழுதி சங்கம் கலையும் காலத்திருந்தான் பின் இந் நெடுஞ்செழியன் பட்டத்திற்கு வந்திருக்கலாம். இவனும் அறியாது முதலில் தவறு இழைத்தனாயினும், பிறகு தவறு அறிந்துதன் தவற்றினை யும் திருத்திக் கொண்டு தன் குற்றம் பிற மன்னர் செவிப் படுமுன் அரசு கட்டிலிலிருந்து வீழ்ந்த இறந்த வீரன். செங்குட்டுவனைப்பற்றி முன்னமே கண்டோம். தமிழ் நாட்டில் அன்று சிறக்க வாழ்ந்த மன்னன் செங்குட்டு

வனே. பாண்டியன் நெஞ்செழியனுக்குப் பின் அவன் மகன் வெற்றிவேற்செழியன் பட்டத்துக்கு வந்தான். இப்படிப் பாண்டியரும் சோழரும் வலிகுன்றி வாழ, செங்குட்டுவனோ இமயம் வரைபடை எடுத்து வெற்றி கண்ட வீரனாய் விளங்கினான்.

**புகார் நகரம்:**

சிலப்பதிகாரம் மணிமேகலை இரண்டுமே புகார் நகரைப் பற்றி நன்கு விளக்குகின்றன. இளங்கோவடிகள் அப்புகாரின் வாணிப வளத்தையும் பிற சிறப்பியல்புகளையும், கலைகளையும், விழாக்களையும் நன்கு காட்டுகின்றார். பல்வேறு வகைப் பண்டங்கள் அங்குக் கடற்கரையில் வந்து இறங்கின எனவும், அவற்றைச் சோழர் தம் புலி முத்திரை இட்டு உள்நாட்டிற்கு அனுப்பினர் எனவும், அதே போன்று முத்திரை இட்டுப் பல பண்டங்களை வெளிநாடுகளுக்கு அனுப்பினர் எனவும் கூறியுள்ளனர். இக்காலத்துச் சுங்கச் சாவடிகள் இருந்தன என்பது தேற்றம், அச்சாவடிகளில் வந்து இறங்கிய பொருள்களைக் கூறும் போது,

> 'நீரின் வந்த நிமிர் பரிப் புரவியும்
> காலின் வந்த கருங்கறி மூடையும்
> வடமலைப் பிறந்த மணியும் பொன்னும்
> குடமலைப் பிறந்த ஆரமும் அகிலும்
> தென்கடல் முத்தும் குணகடல் துகிரும்
> கங்கை வாரியும் காவிரிப் பயனும்
> ஈழத் துணவும் காழகத்து ஆக்கமும்'[1]

புகாரக் கடை வீதிகளில் நிறைதிந்ருந்தன என்கின்றார். எனவே, அன்று வாணிபம் சிறந்து நின்றதென்பது ஒருதலை. மேலும், அப்புகார் நகரப் பிரிவுகளையும், அங்குள்ள கோயில்களையும் காட்டும்போது அது இன்றைய நகரங்களிலும் மேம்பட்ட ஒன்று என

1. பட்டினப்பாலை, அடி: 185-91

அறிகின்றோம். அங்கு நடந்த இந்திர விழாவையும், அதன் வழி தமிழ் மக்கள் எவ்வாறு விழாக்கள் கொண்டா டினார்கள் என்பதையும் காணும்போது தமிழ் நாட்டில் ஒரு புதிய மாற்றம் தோன்றியதை உணர்கின்றோம், ஆண்டுக்கு ஒருமுறை ஓரிடத்தில் அனைவரும் கூடி, ஆடிப் பாடி,

**'பசியும் பிணியும் பகையும் நீங்கி**
**வசியும் வளனும் சுரக்கென வாழ்த்தி'**

விழாக்கொண்டாடும்முறை ஏற்பட்டதை அறிகின்றோம். இவ்விழாவைப் பற்றி மணிமேகலை இன்னும் சற்று விளக்கமாகவே காட்டுகின்றது. மேலும், நகர் அகநகர் என்றும் புறநகர் என்று இருபிரிவாகப் பிரிக்கப்பட்டு அவ்வவற்றுள் வாழ்ந்த மக்கள நிலையினைப் புகாரிலும் மதுரையிலும் நம்மை நிறுத்தி இளங்கோவடிகள் காட்டு கின்றார்;அது போன்றே நாடும் அகநாடு என்றும் புறநாடு என்றும் அமைந்தது என்பதைச் செங்குட்டுவனை முன்னிறுத்திக் காட்டுகின்றார். சேர நாட்டுக்கு அக நாடாவது, மலைக்கும் கடலுக்கும் உட்பட்ட இக்கால மலையாளப் பகுதியேயாகும்; புறநாடு என்பது, இன்றைய கொங்கு நாட்டுப்பகுதிகளில் சில சேர்ந்ததாய் இருந்திருக்கும், கண்ணகி மதுரையை விட்டுப் பாண்டிய நாடு தாண்டி, சேரர் தம் புறநாட்டு எல்லையெல்லாம் கடந்து, அவர்தம் மலைதாண்டி அகநாட்டு எல்லையில் புகுந்தாள் என்பதை வானவன் மாதேவி வாயிலாக, **'நம் அகநாடு அடைந்த இப் பத்தினிக் கடவுளைப் பரசல் வேண்டும்'** என்று இளங்கோவடிகள் காட்டுவதால் அறிய லாம், இப்படி நாடும் நகரும் காப்பிய காலத்திலே நன்கு சிறத்திருந்தமை இரண்டு காப்பியங்களாலும் அறியலாம். காஞ்சியின் அகன்ற தெருக்களையும் பிற சிறப்புக்களையும் சாந்தனார் எடுத்துக் காட்டுகின்றார். எனவே சங்க காலத்தில் சிறந்திருந்த தமிழ்நாட்டுப் பேரூர்

கள் அனைத்தும் காப்பிய காலத்தும் நலங்குன்றாமல் சிறந்திருந்தன என்பது தெளிவு. எனினும், மணிமேகலையின் பிற்காலத்தில் புகார் என்னும் தமிழர்தம் பழம் பெருமையை விளக்கும் காவிரிப்பூப்பட்டினம் அழிவுற்றதை அறியும்போது நம்மை அறியாமலேயே வருத்தம் நம்மை வந்து மூடுகின்றது.

**வாழ்க்கை முறை—அரசியல்:**

இனி, அக்காலத்தியதமிழ் நாட்டின் மக்கள் வாழ்க்கை முறையினைக் காண்போம். அரசியலில் அதிகமாக மாற்றங்கள் காணப்பெறவில்லை அதே அரச பரம்பரைகளும் அவர்களுக்கு அமைந்த உறுப்புக்களும், அறங்கூறு அவையமும், பிறவும் மாறா வகையில் இருந்தன என்றாலும், அரசியரும் அவர் தம் அவைச் செயலில் பங்கு கொண்டனர் என நன்கு அறிகின்றோம். பாண்டிமாதேவி பக்கத்தில் அரசு கட்டிலில் இருந்ததும், வானவன் மாதேவி அருகிருந்து அறமுறைத்ததும் நோக்கற்பாலன். இந்தக் காப்பியங்கள் இரண்டும் பல நிகழ்ச்சிகளோடு புனையவும் பெற்ற கதைகள் ஆன்மையால் ஒரு சில உயர்வு நவிற்சியாகச் சேர்க்கப் பெற்றிருக்கலாம். எனினும், சில வரலாற்றுக்குரிய குறிப்புக்களும் இல்லாமல் போகவில்லை. இளங்கோவடிகள், வஞ்சிக்காண்டத்தின் வழி, தமிழர் தம் போர் முறை எவ்வெவ்வாறு அமைந்திருந்ததென்பதையும் படை எடுப்பு இலக்கண அமைதிக்கு ஏற்ப வரையறை செய்யப்பட்ட ஒன்று என்பதையும் நன்கு விளக்குகின்றார் போர்க்குச் செல்லும் மன்னவன், யார்யாரை உடன் அழைத்துச் செல்ல வேண்டும் என்பதையும், படையின் அமைப்பும் செயலும் எவ்வெவ்வாறு இயங்க வேண்டுமென்பதையும்

அதில் காணலாம். மேலும், விழா முதலிய நல்ல நாட்களில் சிறைக் கதவும் திறந்து கைதிகளை விடுவிக்கும் வழக்கமும் இருந்ததாகத் தெரிகின்றது. அரசன் நீதி கூறவேண்டிய நெறி இத்தகைய தென்பதும், மன்னவன் தவறின் தன்னை மாயத்துக்கொள்வதன்றி வேறு வழி இல்லை என்பதும் தெளிவாகின்றன. உதயகுமரன் தந்தை தன் மனைவி சொற்கேட்டு மணிமேகலையைப் பலவகையில் துன்புறுத்திய பின், உண்மை உணர்ந்து மன்னிப்புக் கேட்டுக் கொண்டதும் இரண்டாவது அறமே. மேலும், அவன் மகன் இறந்தமைக்கு வருந்தாது, தான் தர வேண்டிய தண்டனையை மணிமேகலையே செய்வித்தமைதான் அவனை வருந்திற்றென்று கூறுவது நோக்கற்பாலது. வானவன் மாதேவியார் அரசனோடு ஒருங்கிருந்து அனைவரும் அறிந்து கூறாத உண்மையைத் தாம் ஆய்ந்துணர்ந்து கண்ணகிக்குக் கோயில் எடுக்க வேண்டுமென்று கூறியது மகளிர் அரசியலில் பங்கு கொண்ட உண்மையைத் தெளிவுபடுத்துகின்றது. இப்படிப் பல்வேறு வகையில் அரசர் வாழ்வையும், அரசியல் முறையையும் இருபெருங் காப்பியங்களும் நன்கு காட்டுகின்றன.

**வாழ்க்கை முறை—மக்கள்:**

இனி, மக்கள் வாழ்வில் சில பகுதிகளைக் காணலாம். நகர அமைப்புக்களும் வாணிபமும் பிற இயல்புகளும் பெருமாற்றம் உறாமையின் மக்கள் சங்ககாலம் போன்றே நன்றாக வாழ்ந்தார்கள். என்றாலும், அவர்களிடையில் தமிழரல்லாதாரது பழக்க வழக்கங்களும் சமயநெறிகளும் பிறவும் கால்கொள்ள ஆரம்பித்தன. சங்க இலக்கியங்களில் பரத்தமை வாழ்வு பேசப்படினும் அந்தப் பரத்தை அரங்கேறி ஆடி மற்றவரை மயக்கி, 'மாலை வாங்குநர் சாலும் நம் கொடிக்கு' எனத் தெருவில் நின்று விலை பேசியதாக நாம் காணவில்லை. ஆயினும் சிலப்பதிகாரத் தொடக்கத்திலே அக்காட்சி உருவாகின்றது.

மாதவியை எவ்வளவுதான் கற்பு நலம் போற்றும் காரிகை யாக நாம் எண்ண முயன்றாலும் இந் நிகழ்ச்சி மனதில் மாசு உண்டாகச் செய்கிறது. அன்பால் அன்றி மாலை வாங்கும் பொருள் அளவால் கணவனைத் தேர்ந்தெடுக்கும் நிலையை நினைக்க வேண்டியுள்ளது. பின் மணிமேக லையை உதயகுமரன் அவள் விரும்பாவிடினும் தான் அடைய முயலும் நிகழ்ச்சியும் சங்க இலக்கியத்திற் காண முடியாத வாழ்க்கைக் காட்சியாகும். இரண்டு காப்பியங் களிலுமே பெண்கள் முக்கிய அங்கம் வகிக்கின்றார்கள். கண்ணகி, மாதவி, கவுந்தி அடிகள், மாதிரி, பாண்டியன் மாதேவி, மதுராபுரித் தெய்வம், வானவன் மாதேவி ஆகியோர்தம் சொல்லும் செயலுமே சிலப்பதிகாரக் காப்பியத்தின் பல திறப்பட்ட திருப்பு மையங்களாக அமைகின்றன. அவர் போன்றே மணிமேகலை, மாதவி, தீவதிலகை, காயசண்டிகை, சோழன் மாதேவி முதலிய மங்கை நல்லார் மணிமேகலைக் காப்பியத்தில் முக்கிய பங்குகள் கொள்ளுகின்றனர். இவை பெண்களுக்கு ஏற்றம் கொடுப்பதைக் காட்டுவதா அன்றிப் பெண் வழி மக்கள் ஒழுகினார்கள் என்பதைக் காட்டுவதா என்பதை ஆழ்ந்து காணல் வேண்டும்.

### சமய நெறி:

சமய நெறியும் வழிபாட்டு முறையும் மிகக் குறுகிய காலத்தில் தமிழ் நாட்டில் மாற்றம் பெற்றன எனலாம். மாடலமறையோன் சிலப்பதிகாரத்தில் முக்கிய அங்கம் வகிப்பவன் என்பதைக் கண்டோம். அவன் கோவல கண்ணகியரை மதுரைக்குப் போகும் வழியில் காண் கின்றான். பின் பாவம்தீரப் புண்ணிய நதியாடக் கங்கைக் குச் சென்று அங்குச் செங்குட்டுவனைக் கண்டு சீக்கிரம் ஊர் திரும்பக் குறிப்பிடுகின்றான். பின் கண்ணகி விழா வுக்கு முன் செங்குட்டுவன் கொண்ட சீற்றத்தை அவன் வயது காட்டி அறமுரைத்து ஆற்றுகின்றான். இப்படி

மறையவன் ஆதிக்கத்தில் தமிழ் நாட்டின் தலைசிறந்த மன்னன் செங்குட்டுவன் இருந்தான் என்பது தெரிகிறது. மேலும் கோவலன் மணநாளில் 'மாமுது பார்ப்பான் மறை, வழி காட்டிட,' அவன் மணந்தான் என்பதால், மணமுறையின் மாற்றமும் தெரிகின்றது. இவ்வாறு சில நிகழ்ச்சிகளும், மணிமேகலையில் ஆபுத்திரன் வரலாறு வழிக் காணும் நிகழ்ச்சிகளும் தமிழ் நாட்டில் வைதிக சமயத்தவர்தம் செல்வாக்கு அதிகமாகும் காலமாய் அது அமைந்தது என்பதை எடுத்துக் காட்டுகின்றன.

ஆனால், அதே வேளையில் அடுத்து வந்த சமணமும் பௌத்தமுங்கூட அக்காலத்திலேயே இங்கு ஆதிக்கம் செலுத்தத் தொடங்கின எனலாம். இளங்கோவடிகள் சமணர். அவர்தம் கொள்கையை அதிகமாகத் தம் நூலினுள் புகுத்தாவிடினும், கவுந்தி அடிகள் மூலம் சில கொள்கைகளை வலியுறுத்துகின்றார். குளங்களில் மூழ்க வேண்டும் என்ற வைதிக சமயத்தவர் கொள்கையை மறுத்து, மூழ்கித்தான் முற்பிறப்பு உண்மை அறிய வேண்டும் என்பது இல்லை என்ற கொள்கையை

'பிறந்த பிறப்பில் எய்திய எல்லாம்
பிறந்த பிறப்பில் காணாயோ நீ?

எனக் காட்டியும், இன்னும் பலவாறும் மறுத்துத் தம் சமயக் கொள்கை இன்ன வழியது என்று நன்கு விளக்குகிறார். இளங்கோ வடிகள் சமணராயினும், இவர் அண்ணன் செங்குட்டுவன் சைவனாயினும், இருவரும் ஒன்றியே வாழ்கின்றனர். தம் அண்ணனை இவர்,

11

'செஞ்சடை வானவன் அருளின் தோன்றி
வஞ்சி விளங்கிய வானவன் '

என்றும்,

'ஆனேறு உயர்த்தோன் அருளினில் தோன்றி
மாநிலம் காத்த மன்னவன்,'

என்றும் கூறி அவன் சைவனாதலை மெய்ப்பிக்கின்றார் இவர் புத்த சமயத்தவராகிய சாத்தனாருடன் நெருங்கிய நட்பாளராய் இருக்கின்றார் எனவே, வைதிக சமய மாடலனும், சைவ சமயச் செங்குட்டுவனும், சமண சமய இளங்கோவும், புத்த சமயச் சாத்தனாரும் ஒரு சேரக் கண்ணகி விழாவில் கலந்துகொண்டனர் என்பது தேற்றம். இந்நிகழ்ச்சிகளின் வழி ஆராயின், சமயங்கள் பல இருந்த போதிலும் அவை தம்முள்ளே மாறுபடாது ஒன்றிக்கலந்து வாழ்ந்தன என்பது நன்கு விளக்கமாகிறது.

**சமயக் காழ்ப்பு:**

என்றாலும் சாத்தனாரது மணிமேகலையை ஆராய்ந்து பார்க்குங்கால், அவர் சமய மாறுபாட்டி னுக்கு வித்திட்டாரோ என்று எண்ணத் தோன்றும். தம் சமயமே சிறந்தது என்றும் பிற சமயங்கள் தாழ்ந்தன வென்றும் காட்டும் அவர் காதை ஒன்று அவ் வேறுபாட்டு எண்ணத்தை வளர்ப்பதன்றோ! எனவே, இந்த மணிமேகலையின் தோற்றக் காலமே தமிழ் நாட்டில் சமய மாறுபட்டு விதையை ஊன்றிய காலம் எனத் திட்ட மாகக் கூறலாம். வேறுபாடற்று ஒன்றிய சமய நெறியில் ஒரே சமுதாயமாய் வாழ்ந்த தமிழர், இக்காப்பிய காலத் திலேதான் சமயத்தாலும், பிற வழக்கங்களாலும் வேறு பட்டனர் எனலாம்.

முடிவுரை:

மணிமேகலையில் பல கதைகள் வருகின்றன. அவற்றுள் கற்பனையே அதிகம் உள்ளது என நினைக்க வேண்டியுள்ளது. மணிமேகலா தெய்வத்தின் கதையும், காயசண்டிகையின் கதையும், ஆபுத்திரன் கதையும், சாதுவன் கதையும் சிந்திக்கற்பாலன. எனவே, மணிமேகலையின் பெரும் பகுதி வரலாற்றுக்கு அப்பாற்பட்டதேயாகும். என்றாலும், புகாரும், வஞ்சியும், காஞ்சியும் வரலாற்றுக்குத் துணை செய்கின்றன. மணிமேகலையில் புகாரிலே பல்வேறு வகைக் கோயில்கள் உள்ளன என்பது குறிப்பிடப் பெற்றுள்ளது. சங்க காலத்தே காணாத அத்துணைக் கோயில்கள் தமிழ் நாட்டுத் தலைநகரில் அவ்வளவு விரைவில் எப்படி இடம் பெற்றன என்று எண்ணத் தோன்றும். எனினும், கரிகாலன் காலத்துக்குப் பின் அரை நூற்றாண்டுக்கு மேல்யாரும் தக்க அரசர் ஆண்டு இல்லாமையானும், அதே வேளையில் பிற நாட்டார் சாரிசாரியாய்த் தமிழ் நாட்டில் புகுந்தமையானும் இந்தப் பெருமாறுதலுக்கு இடமுண்டு என நினைக்க வேண்டியுள்ளது இந்த மாறுதலே பின்வரும் இருண்ட கால எல்லைக்கு வித்து ஊன்றிற்று எனலாம்.

சாதுவன் கதை மூலம் சாத்தனார் தம் பௌத்தக் கொள்கையை வற்புறுத்துகின்றார். புலால் உணவும் கள்ளும் சிலரால் விரும்பப்படாத பொருள்களெனினும் அவை சங்க இலக்கியங்களால் மறுக்கப்படவில்லை. அதற்கு மாறாக அவை புலவர்களால் போற்றிப் பேசப் படுகின்றன எனல் பொருந்தும். சங்க காலத்தில் இறுதியாக அரங்கேற்றிய திருக்குறளில் அவை மறுக்கப் பெறுகின்றன. சமணமும் பௌத்தமும் இரண்டையும் அடியோடு வெறுப்பன. எனவே, அவை தம் கொள்கையை அதிகமாகப் பரப்பின எனலாம் சாதுவன் முதுமகனுக்கு அறிவுரை கூறும் முகத்தான்,

'மயக்கும் கள்ளும் மன்னுயிர் கோறலும்
கயக்கறு மாக்கள் கடிந்தனர் கேளாய்'

என்று காட்டும் சமயநெறி பாராட்டத் தக்கது. மேலும், பௌத்த உண்மைகளை மிக அதிகமாக நூலின் பிற்பகுதியிற் கூறியிருக்கின்றார்; அறவணடிகள் வாயிலாகவும் மணிமேகலை வாயிலாகவும் பலப்பல வாதப் பிரதிவாதங்கள் எழுப்பப் பெறுகின்றன. இறுதியில் பௌத்தமே அனைத்திற்கும் மேம்பட்டது என்ற முடிவும் காட்டப் பெறுகின்றது. இந்த வகையான மாறுபாடு தமிழ் நாட்டு வரலாற்றில் ஒரு திருப்புமையமேயாகும். அன்று வளர்ந்த சமயப் போர்தான் பின்பு பௌத்த சமணப் போராகி, பின்னும் சைவ சமணப் போராகிப் பல்வேறு வழியில் வளர்ந்து நின்றது. எனினும் இவ்வாறு தமிழ் நாட்டில் சங்க கால இறுதியில், புகுந்த சமண பௌத்தம் இரண்டும் கி. பி. ஏழாம் நூற்றாண்டின் தொடக்கத்தில் சைவ வைணவ சமயங்களால் அடியோடு அழிக்கப்பட்டன எனலாம். பிறகு அவை தலை தூக்கவே இல்லை.

இவ்வாறு தமிழ் நாட்டின் உச்ச நிலைக்கும் அடுத்து வரும் இருண்ட நிலைக்கும் இடையில் இக்காப்பிய காலம் ஓர் இடை வெளியாகி நின்று அந்த இருண்ட காலத்துக்கு இடம் உண்டாக்கித் தந்தது என்னுமாறு அமைந்தது என்பர் ஆய்வாளர்.

காப்பிய காலத்து மக்கள் வாழ்க்கை முறை பலவகையில் விரிந்துள்ளது. பெரு நகரங்களாகிய புகார், மதுரை, வஞ்சி, காஞ்சி என்ற நான்கு நகரங்களையும் இவ்விரு காப்பியங்களும் பிணைக்கின்றன. அந்தப் பெருநகரங்களில் மக்கள் வாழும் வாழ்க்கை முறைகள் பலப்பலவாகும். கிராம மக்கள் வாழ்க்கையினை மதுரைப் பெரு வழியிலும், வேடுவர் வாழ்வினையும் குறவர் வாழ்வினையும் காட்டகத்தும், பேராற்றடைகரை யிடத்தும் பல வகை

யில் காண்கின்றோம். நாகரிக மிக்க நகரங்களில் பிற நாட்டு மக்கள் உடன் வந்து கலந்து வாழ்ந்த நிலை ஒரு புறமிருக்க, உள்நாட்டு மாறுபாடுகளைக் காட்டும் பலப் புதுப்புது வேற்றுமைகளும் தோன்றுகின்றன எனலாம். கோயில்கள் புகார் நகரில் பலவாகப் பெருகியுள்ளன. பரிபாடல் போன்ற சங்க இலக்கியங்களில் திருமால், முருகன் போன்ற தெய்வங்கள் குறிக்கப் பெறினும், இக் காப்பிய காலத்தில் காணும் அத்துணைக் கோயில்கள் குறிக்கப்பெறவில்லை.[1]

வழிபாட்டுத் தெய்வங்களைக் காட்டும் கோயில் களைத் தவிர்த்து, பூதங்கள் தங்கும் பூத சதுக்கங்களும் நகரங்களில் இருந்தன போலும்! இப்பூதங்களும் இவற்றின் சதுக்கங்களும் சங்க காலத்தில் தமிழ் நாட்டில் காணப் பெறாதன, மேலே கண்டபடி பிறநாட்டார் தம் புதுப் புதுக் கொள்கைகளின் நுழைவால் இவையெல்லாம் மிகக் குறுகிய காலத்தில் தமிழ் நாட்டில் புகுந்தன போலும்! இப் பூதங்களைப் பற்றியும், இவை வாழ் இடங்களைப்பற்றி யும், இவற்றின் செயல்களைப் பற்றியும் காப்பியங்கள் பலவாறு புகழ்கின்றன. இவைகளைத் தவிர்த்துக் காஞ்சி யில் இருந்த பௌத்த சமணக் கோயில்களின் பெருக்கை எண்ணின் தமிழ் நாட்டு வடகோடியில் இருந்த இப்பெரு நகரில் வடநாட்டு வைதிக சமயத்தைத் தொடர்ந்தே, உடனாகப் பௌத்தமும் அதை ஒட்டிச் சமணமும் புகுந்து நிலைபெற்று விட்டன என அறிகிறோம் புகார், மதுரை, வஞ்சியில் இல்லாத அளவில் காஞ்சியில் பௌத்த விகாரங் கள் மிக்கிருந்ததை மணிமேகலை நன்கு காட்டுகிறது.

இக்காலத்தில் 'விதி' பற்றிய கொள்கை நன்கு வலி யுறுத்தப்பட்டு விட்டது. சங்க காலத்திலேயும் அக் கொள்கை இருந்தது என்றாலும், ஊழையும் உப்பக்கம்

1. சிலம்பு: 5: 169-72

காணமுடியும் என்ற ஓர் எண்ணம் இருந்தது, எனினும், சிலப்பதிகார காலத்தில் அந்நிலையில் அன்றி ஊழே அனைத்துக்கும் அடிப்படை என்ற உண்மை வலியுறுத்தப் பெற்றது. சிலம்பே அதே உண்மையை விளக்க எழுந்த நூல் என்பது அதன் பதிகத்தால் அறியப்பெறும் உண்மை யாகும்.

'ஊழ்வினை உருத்துவந்து ஊட்டும் என்பதூஉம்
சூழ்வினைச் சிலம்பு காரண மாகச்
சிலப்பதி காரம் என்னும் பெயரால்
நாட்டுதும் யாமோர் பாட்டுடைச் செய்யுள்'

என்று இளங்கோவடிகள் கூறினார் என்பது பதிகம். இவ்வாறு கடவுள் உணர்வோடு ஊழையும் பின்னிக் கலந்து, கடவுளரையும் கடந்து ஊழ் வந்து உறுத்தும் என்ற கொள்கை இக்காலத்திலேதான் நாட்டிலும் நுழைந்தது போலும்! இதுவே காலம் செல்லச்செல்ல நவக்கிரக வணக்கங்களையும், பிற 'செத்துச் செத்துப் பிறப்பதைத் தே'வெனப் போற்றும் வழக்கங்களையும் கொண்டுவந்துவிட்டது எனலாம் இவ்வாறு சமயத் தில் ஏற்பட்ட மாறுதல்களன்றிச் சமூகத்திலும் சிற்சில மாறுபாடுகள் ஏற்பட்டன என்பது கண்கூடு.

மக்களுள் வாணிபஞ் செய்வோரைச் சிறந்தவர்களாக இருக்கச் செய்து போற்றியதோடு, பிற தொழிலாளரை யும் ஏற்றம் காட்டிப் போற்றினார்கள் எனக் காண்கி றோம். ஆயர் குலப் பெண்ணாகிய மாதரியிடம் 'இடைக் குலமாதர்க்கு அடைக்கலம் தந்தேன்' என்று பெருமை யாகக் கூறிக் கவுந்தி அடிகள் கோவலனையும் கண்ணகி யையும் அடைக்கலப் பொருளாகத் தந்ததும், அவ்வடைக் கலப் பொருளுக்கு அழிவு வந்தகாலை-கோவலன் கொலை யுண்ட காலை-மாதரி வருந்தி உயிர்நீத்து நின்றதும் அக்

குல மகளிர் அடைக்கலப் பொருளை ஓம்பும் சிறப்பினை விளக்கிக் காட்டுகின்றனவன்றோ! சங்ககாலத்தில் முல்லைப்பாட்டிலும் பிற முல்லைத்திணைப் பாடல்களி லும் அவர்தம் காதல் வாழ்வையும், களிமகிழ் சிறப்பு களையும் கண்ட நமக்கு, இவ்வடைக்கலப் பொருளை ஓம்பும் பண்பாடு ஈண்டுப் புதிதாக விளக்க முறுகின்றது மேலும், கண்ணகியின் துயர்கண்டு மதுரைமாநகர மக்கள் பெற்ற நிலையும் பிறவும் பொதுவாக இன்றும் ஏதிலார் துன்பங்கண்டு மக்கள் இரங்கும் நிலையினை ஒத்துள்ளமை அறியலாம். காட்டில் வேட்டுவ மக்கள் ஆடிய வேனில் விளையாட்டும், மலைவாழ் மக்கள் ஆடிய குன்றக் குரவையும் தமிழ் இலக்கியத்தில் புதுப்புதுப் பாடல்களை உருவாக்கும் நிலையில் அமைந்துள்ளன. இன்னும் விருந்தினரை ஓம்பும் சிறப்பும், பிச்சை இடுத லின் பெருமையும், பிற நல் இயல்புகளும் மணிமேகலை யில் சிறப்பிக்கப் பெறுகின்றன. இக்காப்பிய காலத்தில் சமயத்தாலும், பிற பழக்க வழக்கங்களாலும் தமிழ் நாட்டு மக்கள் சிற்சில வழிகளில் மாறுபட்டு நின்றார்கள். என்றாலும், பொதுவில் அவர்கள் ஒன்றிய உணர்வின ராகவே வாழ்ந்துவந்தார்கள் எனலாம். வயதான பிறகும் ஆண்டவனை வழிபட்டு அறத்துறையில் நில்லாது அரச போகத்திலிருந்து மாற்றாரை வெல்ல நினைப்பது தகாது என்பதை மாடலன் செங்குட்டுவனுக்கு அறிவுறுத்தும் வகையினை நாம் காண்கிறோம் நாளும் கோளும் நல்லனவும் அல்லனவும் செய்யும் என்பதைக் காட்டும் நிகழ்ச்சிகளும் மக்கள் வாழ்வில் இடம் பெற்று உள்ளன. இவ்வாறு காப்பிய காலத்தில் மக்கள் சமுதாய வாழ்வு சங்ககாலச் சமுதாய வாழ்வினைக் காட்டிலும் சற்று மாறுபட்டே நின்றதென்பது தெளிவாகின்றது.

# X. தமிழக வரலாற்றில் இருண்ட காலம்

## ஏது இருண்ட காலம்?

தனி மனித வாழ்வில் மேடு பள்ளங்கள் இருப்பதைக் காண்கிறோம். சில காலம் வாழ்வில் உயர்ந்தும் சில காலம் வாழ்வில் தாழ்ந்தும் நாட்கள் கடந்து செல்கின்றன. புகழ் ஏணியின் உச்சியில் ஏறி நின்று ஒளி வீசித் திகழ்வதும், பின் ஒருகால் படுபாதாளத்தில் தள்ளப்பட்டு ஆழ்ந்து நிற்பதும் மனித வாழ்வின் மாறா உண்மைகள். இந்த உண்மைகள் வரலாற்று வாழ்வுக்கும் பொருந்தும் போலும்! ஒரு நாட்டின் வரலாற்றை ஆராயும்போது அந்நாடு சில காலம் தன் தலைநிமிர்ந்து ஓங்கி நிற்பதையும், சில காலம் தன்வலி குன்றி அயலாருக்கு அடங்கி இருப்பதையும் காண்கின்றோம். சில நாட்டு வரலாறுகள் தொடர்ந்து அறிய முடியாத வகையில் இடையிடையே அறுபட்டு நிலைகெட்டுப்போவதையும் காண்கிறோம். இந்த நிலை நம் நாட்டு வரலாற்றுக்கும் உண்டு என அறிகின்றோம். தலைநிமிர்ந்து தனிப் புகழுற்றுச் சங்க காலத்தே சிறந்து நின்ற தமிழ்நாடு, அடுத்த இரண்டு மூன்று நூற்றாண்டுகளில் எந்த நிலையில் இருந்தது என்றுகூட அறிய முடியா வகையில் இருட்டில் இருந்தது என எண்ணும்போது தமிழர் வருந்தாதிருக்க முடியாதே! கி.பி. இரண்டாம் நூற்றாண்டின் தொடக்கம் வரை முடியுடை மூவேந்தரால் ஆளப்பட்டுத் தலை நிமிர்ந்து நின்ற தமிழகம் நினைக்கவும் இடைவெளியில்லாச் சிறு காலத்தில் எப்படியோ நிலை கெட்டுவிட்டது.

## காரணம் என்ன?

சேரன் செங்குட்டுவன் மேல் பகுதியை ஆண்ட காலத்தில் சோழரும் பாண்டியரும் வலியற்றிருந்தனர்

என மேலே கண்டோம். செங்குட்டுவனுக்குப் பின் சேர நாட்டிலும் சிறந்த மன்னர் இல்லை. எனவே, தமிழ் நாட்டுத் தலை சிறந்த மூவேந்தர் பரம்பரையில் தக்க மன்னர்கள் இல்லாமையின், யாரும் உள் நுழைய வழி ஏற்பட்டது. அதே வேளையில் வடக்கிலிருந்து சமயம், பண்பாடு ஆகியவற்றைப் பரப்பும் நோக்கோடு பலப்பல வகையினர் இங்குத் தடுப்பாரின்றி நுழைய ஆரம்பித்தனர். மேலும், கலைவளர்க்கும் அந்நோக்கோடு வந்த அந்த வடவரை விருந்தோம்பும் பண்பாடு கொண்ட தமிழர்கள் வரவேற்றார்கள். இவ்வாறு கலையும் சமயமும் ஒருபுறம் தம்வழியே பிறர் ஆதிக்கத்தைத் தமிழ்நாட்டில் செலுத்தத் தொடங்கிய அந்த வேளையில்—தமிழ்நாட்டில் மூவேந்தரும் வலிகுன்று நிலையிழந்து நின்ற அதே நேரத்தில்—தமிழ்நாட்டை அடுத்த ஆந்திர மைசூர்ப் பகுதியிலும் அதற்குச் சற்று வடக்கிலும் புதுப்புது அரச பரம்பரைகள் புத்துணர்ச்சியோடு மேலோங்கி வரலாயின. அவற்றின் அரசியல் ஆதிக்கமும் தமிழ்நாட்டு வரலாற்றை இருட்டடிப்புச் செய்யும் வகையில் அமைந்தன எனலாம். இப்படிப் பிற நாட்டு அரசியல், வாழ்வியல், சமய இயல், சமூக இயல் அனைத்தும், தட்டிக் கேட்க ஆளற்ற அந்த இரண்டாம் மூன்றாம் நூற்றாண்டுகளில், தமிழகத்தில் இடம் பெற்றுத் தமிழர் தம் வாழ்வினை ஒளி மங்கச் செய்தன என்பது கண்கூடு.

**வட விந்தியா:**

வடவிந்தியாவில் இந்த இரண்டு மூன்று நூற்றாண்டுகளே சிறந்த பொற்காலமாய் விளங்கின எனலாம். அசோகரது ஆட்சிக்குப் பிறகு சில காலம் வடநாட்டு வரலாறு மங்கிவிட்டது எனலாம். எனினும், மூன்றாம் நூற்றாண்டுக்குப் பின் மறுபடியும் குப்தர் பரம்பரையின

ரும் ஹர்ஷரது முன்னோர்களும் ஆளத் தொடங்கியபின் வடநாடு ஒளி பெற்று விளங்கிற்று. அந்தச் சமயத்தில் பௌத்த சமண சமயங்கள் வட நாட்டில் நிலை குலைந்து விட்டன எனலாம். அசோகரால் சீர் தூக்கி வளர்க்கப் பெற்ற புத்த சமயம் வெகு சீக்கிரத்திலேயே நிலை கெட, அதனை ஒட்டிச் சமணமும் தன் நிலை தளர்ந்தது எல லாம். அதற்குப் பதில் பழைய வேத சமயம் 'இந்து சமயம்' என்ற புதுப் பெயருடன் காலத்துக்கு ஏற்ற மாற்றங்கள் கொண்டு அங்குத் தலைநிமிர்ந்து வளரலா யிற்று. தம் இடமிழந்த பௌத்தமும் சமணமும் தெற்கே தமிழ்நாட்டில் அந்த நூற்றாண்டுகளில் ஆதிக்கம் செலுத் தித் தமிழர்தம் உண்மை வாழ்வை மறைத்து விட்டன எனலாம். அவை வெறுஞ் சமயங்கள் என்றாலும், அவற் றுடன் வந்த வடவர் சமயத்தோடு தத்தம் கொள்கை களையும் பிற இயல்புகளையும் இங்குப் புகுத்தி விட்ட தனாலேயே தமிழ் நாடு பெரும்பாலும் நிலை கெட்டது என்பர் ஆய்வாளர்.

கி.பி.320ல் குப்த வமிசத்தவர் தமக்கு முன் ஆண்ட குஷான் வமிசத்தவரைத் துரத்தி வடவிந்தியாவைத்தாமே அரசாளத் தொடங்கினர். அந்தக் குப்த பரம்பரையில் முதலாம் சந்திரகுப்தனும் இரண்டாம் சந்திரகுப்தனும் முக்கியமானவர்கள். இவர்களுக்கும் அசோகன் முன் னோனனான அந்தச் சந்திரகுப்தனுக்கும் யாதொரு தொடர்பும் இல்லை இந்தக் குப்தவமிசத்தில் சந்திரகுப் தரும் சமுத்திர குப்தரும் தோன்றி வாழ்ந்தனர். சமுத்திர குப்தன் மகனான இரண்டாம் சந்திரகுப்தன் காலத்து நாணயங்கள் (கி.பி 380) கிடைக்கின்றன. அவற்றில் பொறிக்கப்பட்ட உருவங்களைக் கொண்டு அவன் பரம் பரையினர் இந்து சமயத்தைப் போற்றியவர் என்பது

தெரிகின்றது. பௌத்த சமணத்தால் தன் நிலை இழந்த இந்து சமயத்தை இவர்கள் மறுபடியும் வளர்த்து முன்னேறச் செய்தார்கள். ஏறக்குறைய இந்தக் காலத்திலேதான் சீன யாத்திரிகனாக பாஹியான் இந்தியா வந்தான். அவன் கி.பி.401லிருந்து 410வரை இங்குத் தங்கிச் சீனம் திரும்பினன். அவன், வடவிந்தியாவில் இந்து சமயம் சமணசமயத்தைத் தாழ்த்தித்தான் மேலோங்கிய காலமே அக்காலம் என்று குறித்தான். ஐந்து ஆறாம் நூற்றாண்டுகளில் மேலை நாடுகளுடன் வடநாடு வாணிபம் செய்து வந்தது. மேலைப் பகுதியிலிருந்து வந்த ஹூணர்கள் வடவிந்தியாவில் தொல்லை தந்து வந்தார்கள். அவர்கள் இறுதியில், ஆறாம் நூற்றாண்டின் இறுதியிலும் ஏழாம் நூற்றாண்டின் தொடக்கத்திலும், ஹர்ஷராலும் அவர் முன்னோராலும் அழிக்கப்பெற்றார்கள். ஹர்ஷர் சமண சமயத்தவராயினும் பிற சமயத்தைப் பேணி வளர்த்தவர். இவ்வாறு வடநாட்டு வரலாறு திட்டமாக வரையறுத்துச் சொல்லப் பெறும் இந்த நாளிலேதான் தமிழ் நாட்டு வரலாறு இன்னதென அறியா வகையில் நிலை குலைந்து, எல்லா வகையிலும் நாடு மாற்றாரது ஆதிக்கத்துக்கு உட்பட்டு இருந்தது: இதை இருண்ட காலம் என்னாது வேறு என்னென்று சொல்வது?

**விபரீத மாற்றங்கள்:**

தமிழ் நாட்டில் இருண்ட காலத்தில் ஆண்டவர்கள் யார் யார் என்பது திட்டமாகத் தெரியவில்லை. மக்கள் வாழ்க்கை எப்படி இருந்தது என்பது பற்றியும் ஒன்றும் வரையறுத்துக் கூற முடியவில்லை. எனினும், கி.பி. ஏழாம் நூற்றாண்டின் தொடக்கத்தில் நாம் மறுபடியும் தெளிந்த தமிழ் நாட்டைக் காணும்போது அதில் இருக்கும்

மாற்றங்களும். வாழ்க்கை முறையும், சமய நெறிகளும், பிறவும் அந்த இருண்ட காலத்தில் தமிழ்நாடு எத்தனையோ வகையான மாறுதல்களைப் பெற்று விட்டது என்பதைக் காட்டுகின்றன. இந்த இடைக்காலத்தில் பல்லவர் என்பவர் தமிழ் நாட்டில் வந்து வேறு சில வேற்றரசரோடு மாறுபட்டுக் கலாம் விளைத்துப் பின் வெற்றி கண்டு, காஞ்சியைத் தலைநகராக்கிக்கொண்டு, சில நூற்றாண்டுகள் செழிக்க வாழ்ந்தார்கள், அவர்கள் தெளிந்த அரசியல் வாழ்க்கை ஏழாம் நூற்றாண்டின் தொடக்கத்திலேதான் நன்கு புலனாகின்றது அதற்கு முன் இரண்டு மூன்று நூற்றாண்டுகளாகவே அவர்தம் வாழ்வு தமிழ் நாட்டில் இருந்ததாயினும், அவ்வளவு சிறக்க வில்லை. களப்பிரர், கடம்பர் போன்ற வேற்று நில வேந்தரோடு புதியராய் வந்தஇந்தப்பல்லவரும் மாறுபட்டு நின்று வெற்றி காண வேண்டி இருந்தது அதற்கிடையில் அவர் தம் இருண்டகால வாழ்க்கையைப்பற்றித் திட்டமாகக் கூற இயலாது

**பல்லவர் யார்?**

இந்தப் பல்லவர் தமிழ் நாட்டில் இருண்ட காலத்தில் புகுந்தாரேனும், என்று வந்தவர் என்பது திட்டமாகச் சொல்ல இயலாது. சிலர் இளந்திரையன் வரலாற்றை இவர்களோடு இணைத்து, அவன் பரம்பரையினரே பல்லவர் என்பர். இளந்திரையன் நாக கன்னிகையால் கொடிகளாலே சுற்றி அனுப்பப் பெற்றவன் என்பது கதை. கொடிகள் 'பல்லவம்' என்னும் பெயரைப் பெறுவதால் பல்லவத்தால் கட்டுண்டு வந்த இளந்திரையன் பரம்பரையினரே பல்லவர் என்பர் சிலர். அவர் கூற்றுப் பொருந்துவதாக இல்லை.இளந்திரையன் தமிழ் மன்னன்;

சோழமரபினன்; சிறந்த வீரன்; காஞ்சியிலிருந்து ஆண்டவன். இவர்கள் அவன் பரம்பரையினர் என்று கொண்டால், இவர்கள் காலத்தில் தமிழ் நாட்டு வரலாறு இவ்வாறு இருண்டிருக்குமா? முதற் பல்லவர்தம் மொழியும், கல்வெட்டுக்களும், நூல்களும் தமிழ் மொழியினும் வேறாய் இருப்பனகொண்டே, அவர் தமிழரினும் வேறுபட்டவர் எனக்கொள்ளல் பொருந்தும். கி.பி. ஏழாம் நூற்றாண்டுக்குப்பின் தமிழ் நாட்டு நிலையை உணர்ந்து அவர்களும் தமிழ் மன்னராகித் தமிழ்த் தொண்டு செய்தார்களேனும், முதற்பல்லவர்கள் வட மொழி. பிராகிருதம் போன்ற மொழிகளையே போற்றி வளர்த்தார்கள் என்பது கண்கூடு. திரு S கிருஷ்ணசாமி ஐயங்கார் அவர்கள் குறித்தபடி[1] பல்லவர்கள் சிந்துநதி முகத்துவாரத்தில் இருந்த பார்தியன் மரபினர் (Parthion) என்று கொள்ளல் தகும். பாரத இராமாயணத்தில் பல்லவர் எல்லைப்புற மக்களாகக்குறிக்கப்பெறுகின்றனர். மகாவமிசம் என்னும் இலங்கை வரலாற்று நூலும் பல்லவரைத் தமிழர் அல்லர் என்றும் அவர்கள் 'பல்லவ போக' நாட்டிலிருந்து தமிழ் நாட்டுக்கு வந்தவர்கள் என்றும் குறிக்கின்றது. எனவே வடநாட்டிலிருந்து பல்வேறு வகை மக்களும் கொள்கைகளும் தமிழ் நாட்டில் தடுப்பாரில்லாத அந்த இருண்ட காலத்தில் குடியேறினது போன்று, பல்லவரும் வடக்கே இருந்து வந்து குடியேறிச் சிறுகச் சிறுகத் தம் ஆதிக்கத்தை வளர்த்து, பின் காலப்போக்கில் நாட்டின் நிலை அறிந்து தம்மையே தமிழராக்கிக் கொண்ட ஒரு மரபினர் என்பது தெளிவு.

**வேப்பிரர் யாவர்?**

இந்த இருண்ட காலத்தில் பல்லவரைத் தவிர வேறு சில மன்னர்களும் வடக்கே தலை தூக்க ஆரம்பித்

1 Some Contributions of South India to Indian Culture, P. 20

தனர். இந்த இருண்ட காலத்தை வரலாற்று ஆசிரியர்கள் 'களப்பிரர் இடையீட்டுக் காலம்' என்றே கூறுவர். 'களப்பிரர் யார்? அவர்கள் எப்படித் தமிழகத்துக்கு வந்தார்கள்?' என்பன இன்னும் திட்டமாகப் புரியாத புதிராகவே உள்ளன. டாக்டர் இராசமாணிக்கம் அவர்கள் தம் பல்லவர் வரலாற்றில்[1] களப்பிரர், காளத்தி முதலிய தமிழ் நாட்டு வடஎல்லை மலைத்தொடர்களில் வாழ்ந்த ஒரு கள்ளர் கூட்டத்தினரே என்றும், அவர்கள் அரச பரம்பரையினர் அல்லர் என்றும், அவர்கள் தமிழ் நாட்டில் நுழைந்து மூவேந்தரையும் வென்று பாண்டிய நாடு வரையில் ஆண்டார்கள் என்றும், அவர்களுக்கும் பல்லவர்க்கும் இடையறாது போர்கள் நடந்துகொண்டே இருந்தன என்றும் குறிக்கின்றார். களப்பிரர் அரசர் பரம்பரையினர் அல்லரேனும், சந்தர்ப்பமும் சமயமும், தமிழ் நாட்டுக்கு அண்மையில் அவர்கள் இருந்த நிலையும் அவர்களைத் தமிழ் நாட்டு அரசர் வரிசையில் சேர்க்கும் நிலையில் வைத்துவிட்டன. வாணிபத்தின் பொருட்டுக் கடல்கடந்து வந்த ஒரு சிறு மேலை நாட்டுக்குழுவினர் பின் பரந்த பாரத நாட்டையே ஆண்ட வரலாறறிந்த நமக்கு இது வியப்பன்று. வேள்விக்குடி, சின்னமானூர்ச் சாசனங்கள் இக்களப்பிரர் தம் ஆட்சியைக் குறிப்பதோடு, அந்த இடைக் காலத்தில் எண்ணிறந்த அரச பரம்பரையினர் தமிழ் நாட்டை ஆண்டு மறைந்தனர் என்பதையும் குறிக்கின்றன.[2] எனவே, அந்த இருண்ட இடைக்காலத்தில் களப்பிரரும் பல்லவருமன்றி எத்தனையோ புதுப்புது அரசுகள் தமிழ் நாட்டில் வந்து ஆண்டு சென்றிருக்கின்றன என அறிகின்றோம். சோழர் நாடு சிதறுண்டு அவர் சிற்றரசராய் இருந்த வேளையிலேதான் களப்

1. பல்லவர் வரலாறு, br Dr. இராசமாணிக்கம், p. 37.

2. Ibid.,

பிரரும் பல்லவரும் வடக்கிலிருந்து தமிழகத்தில் புகுந் தனர். முன்னர் வந்த களப்பிரரை விரட்டிப் பல்லவர் மேன்மேல் எழஎழ, களப்பிரர் தெற்குநோக்கிச் சென்று கொண்டே இருந்தனர். அங்குத் தடுப்பவர் இன்மையின், அவர்தம் ஆட்சி தென்பாண்டி நாடுவரை சென்றுவிட்டது எனலாம். தம்நிலை இழந்த களப்பிரர், பல்லவரையும் விட்டு விடவில்லை. அவர்கள் மறுபடியும் பல்லவரை எதிர்த்து அவர்களைக் காஞ்சியிலிருந்து துரத்தியவர் ஆதல்வேண்டும். இப்படிக்காஞ்சி, பல்லவருக்கும் களப் பிரருக்கும் இடையில் மாறி மாறி நிலைகெட்டு நின்றது— எனலாம். இவ்வாறு தமிழ் நாட்டை வெளியிலிருந்து வந்து இருவரும் போர்க்களமாக்கி நிலைகுலையச் செய்தனர். இறுதியில் பல்லவர் வெற்றிபெறவே, தெற்கே சென்ற களப்பிரர் தமிழரோடு கலந்து தமிழராகவே மாறி விட்டனர். அவர்களே பின்னர் முத்தரையச்சிற்றரசர் களாகவும் பிறகு குறுநில மன்னராகவும் இருந்தனர் என்பர். அவர்களே இபபோது தென் தமிழ் நாட்டில் உள்ள கள்ளர் மரபினர் என்பர் சில வரலாற்றாளர்கள்.

வடக்கிலிருந்து இந்த இரண்டு பேரரசுகள் வந்த தோடு வேறு சில புதிய அரசுகளும் அக்காலத்தில் தோன்றலாயின. அவர்களுள் ஒரு பரம்பரையினரே சாதவாகனர். ஒரு சிலர் பல்லவர் சாதவாகனப் பரம்பரை யிலிருந்து வந்தவரே என்பர். ஆந்திர நாட்டை ஒட்டிய பகுதியில் தோன்றி வாழ்ந்த இந்தச் சாதவாகனப் பரம்பரை நான்காம் நூற்றாண்டின் இடைக்காலத்தில் அழிந்துவிட்டது. இப்பரம்பரை தமிழ்நாட்டில் ஆதிக்கம் செலுத்தவில்லை. என்றாலும், வடநாட்டு

மக்களைத் தமிழகத்துள் நுழையவிட்டதில் இவர்களுக்கும் பங்கு இல்லை என்று சொல்ல முடியுமா?

ஆந்திர நாட்டிலும் இரண்டொரு பேரரசுகள் கிளைத்தன எனலாம் ஆந்திரநாட்டு வரலாறு அதற்கு முன் திட்டமாக அறிய முடியாதது; என்றாலும் அது தமிழ் நாட்டு எல்லையில் முடியுடைத் தமிழ் வேந்தர் தம் ஆணையுடன் இணைந்தோ தனித்தோ அமைதியாக வாழ்ந்தது என்று கொள்ளலாம் எனினும், தமிழ்நாடே நிலைகெட்டபோது ஆந்திரத்திலும் பலப்பல அரசுகள் தோன்றலாயின. அவற்றுள் ஒன்றின் தலைவனே புலுமாயி என்பவன் இப்பெயரோடு சிலர் வாழ்ந்தனர் போலும்! அவருள் சிறந்தவன் இரண்டாம் புலுமாயி. இவன் காஞ்சியைக் கைப்பற்றியிருந்தான். காஞ்சி இவனிடமிருந்து சாதவாகனருக்குக் கைமாறிப் பின் பல்லவரிடம் சேர்ந்தது. அதன் பிறகே பல்லவர் களப்பிரர் போர்கள் நடைபெற்றிருக்க வேண்டும் இந்தப் புலுமாயியின் பரம்பரை கி. பி. மூன்றாம் நூற்றாண்டின் இறுதியில் அழிவுற்றதென்றும், அதன் பிறகே இரண்டாம் முறையாகப் பல்லவன் இத்தமிழகத்தில் குடியேறி நிலைத்து விட்டனர் என்றும் கூறுவர். இவர்களைத் தவிர, கங்கப் பல்லவர் என்ற சிற்றரசர்களும் அக்காலத்தில் ஆண்ட ஒரு சிறு பரம்பயினர் போலும்!

இவர்களன்றிக் கடம்பர் குல அரசர், மேலைக் கங்கர் போன்றவர் மைசூர் நாட்டிலும் அதன் அருகிலும் அக்காலத்தில் இருந்து அரசாண்டார்கள். என அறிகின்றோம். வேங்கடத்தின் எல்லையில் புல்லி என்ற ஒரு மன்னன் ஆண்டதாக அகநானூறும் புறமும் குறிக்கின்றன.

இவன் மாற்றாரை வெற்றி கண்ட வீரனாகக் காண்கின் றான்.[1] இவ்வாறு எத்தனையோ அரசர் பரம்பரைகள் தமிழ் நாட்டில் மூன்று நான்கு நூற்றாண்டுகள்வரை வந்து வந்து சென்று கொண்டே இருந்தன என அறிகின் றோம். அந்தப் புதியவர்கள் வந்து வந்து மறைந்தாலும் அவரவர்கள் விட்டுச் சென்ற கலை பண்பாடு முதலியன தமிழர்தம் இயல்பான கலை பண்பாடு முதலினவற் றோடு ஒன்றி விட்டன எனலாம். இரண்டாம் நூற் றாண்டின் இறுதியில் தொடங்கிய இந்த இருண்ட காலத் தின் எல்லை கி. பி. 600 வரையில் நீடித்தது. முதலில் பல்லவர், பின்னர் களப்பிரர், மறுபடியும் பல்லவர், இவர்களுக்கிடையில் வேறு பல சிற்றரசர்கள் வந்து வந்து செல்ல, கி. பி. 600இல் பாண்டிய நாட்டில் கடுங்கோன் பாண்டியன் சிறந்த வீறனாய் அரியணை ஏறினான். அவன் தென்னாட்டில் இருந்த மாற்றாரை எல்லாம் அடக்கி ஒடுக்கி மீண்டும் தமிழ் நெறி தழைக்க வழி வகுத்தான் தமிழ் நாட்டு வட எல்லையில், காஞ்சியைத் தலைவராகக் கொண்ட பல்லவர் பரம்பரை யில், அதே காலத்தில், மகேந்திரன் பட்டமெய்தினான். அவனும் நாட்டு மக்கள் மனமறிந்து தன்னைத் தமிழ் வேந்தனாகவே மாற்றிக்கொண்டமையின் வட எல்லை யிலிருந்து, வேற்று வேந்தரைக் தோற்கடித்துத் தமிழ் நெறியை மீண்டும் ஒளிபெறச் செய்தான். இப்படி இரண்டாம் நூற்றாண்டின் இறுதியில் தன்னிலைகெட் டுத் தாழ்ச்சியுற்ற தமிழகம் மீண்டும் ஏழாம் நூற் றாண்டின் தொடக்கத்தில் நிமிர்ந்து ஓங்கலாயிற்று.

1. 'மழபுலம் வணக்கிய மாவண் புல்லி
விழவுடை விழுச்சீர் வேங்கடப்' —அகம் 61

'புல்லிய, வேங்கட விறல்வரைப் பட்ட
ஓங்கல் வானத்து உரையினும் பலவே'
—புறம் 385

ஆயினும் அந்த இடைக்காலத்தில் தமிழ் நாட்டில் எத்தனையோ ஆயிரமாயிரம் ஆண்டுகளில் நடை பெறாத பல மாற்றங்கள் நடந்துவிட்டன. தமிழ் நாடு இரண்டாம் நூற்றாண்டின் நிலையையும் ஏழாம் நூற்றாண்டின் நிலையையும் ஒத்து நோக்கின் இவ்வுண்மை புலனாகும்.

## மேலை நாட்டு வாணிபம்:

இந்த இருண்ட காலத்திலும் தமிழ் நாட்டில் நடை பெற்றுக்கொண்டிருந்த மேலை நாட்டு வாணிபம் தொடர்ந்து நடைபெற்றதாக அறிகிறோம். தாலமி, பெரிபுளூஸ் போன்றவர்கள் தமிழ் நாட்டைப்பற்றிக் கூறியுள்ளவை அக்காலத்தில் உரோம நாடு முதலியவற்றிக்கும் தமிழ் நாட்டுக்கும் இடையில் நடை பெற்ற வாணிபத்தைக் காட்டுகின்றன. சங்க இலக்கியத்தில் காணும் யவனரும் பிறரும் இந்த இருண்ட காலத்திலும் இங்கிருந்து வாணிபம் செய்து வந்தனர் போலும்! இந்த இருண்ட காலத்திலேதான் பிற தலை நகரங்களோர்டு காஞ்சிபுரம் தலை சிறந்து விளங்கிற்று. எனினும், பழம்பெரு நகரங்களை நினைத்தால், அவை கெட்ட நிலை அறிந்து தமிழர் உளம் நடுங்குவர்.

## பெருநகர்: காஞ்சி

சங்க இலக்கியத்தில் கண்ட புகார் என்னும் காவிரிப்பூம்பட்டினமும் வஞ்சி மாநகரும், இருண்ட காலத்திலோ, அன்றி அதற்குச் சற்று முன்னே நிலை கெட்டன எனலாம். புகார்அழிவைப்பற்றி மணிமேகலை விளக்கமாக உரைக்கின்றது. சோழன் இந்திர விழாவை நிறுத்திய காரணத்தால் புகாரைக் கடல் கொண்டது என்பர். அக்காலந்தான் இளந்திரையன் நாககன்னிகையால் அனுப்பப்பட்ட காலம். அவ்விளந்திரையன்

வந்து கப்பல் அழிய, அது கேட்டு தன் மகன் அழிவு ஆற்றாது சோழன் விழா மறந்ததே புகார் அழிவுக்குக் காரணமாயிற்று. எனவே, இளந்திரையன் கடல் அலையால் தள்ளப்பெற்றுக் காஞ்சியை அடைந்து, அதைத் தலைநகராக்கி ஆண்டான் என்பர். காஞ்சியும் சங்க காலத் தலைநகரங்களைப் போன்று பழைமை பெற்ற நகரமே. கி. மு. 200 லேயே பதஞ்சலி காஞ்சியைப்பற்றிக் குறித்திருக்கின்றார். எனவே, பழங்காலத்திலேயே காஞ்சி பழம்பெருநகரமாய் விளங்கிற்று. இளந்திரையனுக்குமுன் கரிகாலன் அதைச் செப்பம் செய்தான் எனக் காண்கின்றோம். இளந்திரையன் அதை இன்னும் விரிவாக்கி, அங்கே அரசிருக்கை அமைத்துக் கொண்டான் என்பது பொருந்தும். அதே காஞ்சி, பிறகு பல்லவர் தலைநகரமாய் விளங்கிற்று.

**புகாரும் வஞ்சியும்.**

புகார் கடாலால் கொள்ளப்பட்டமை தமிழகத்துக்கு ஒரு பெரிய இழப்பாகும், வடக்கே இருந்து வந்த வேற்று மக்கள் தமிழர் பண்பாட்டைச் சிதைத்தும் மாற்றியும் அழித்த அதே வேளையில். இப்படி இயற்கையும் கிழக்கே புகாரை அடியோடு அழித்தும், மேற்கே வஞ்சியை நிலைகுலையச் செய்தும் பேரிழப்பை உண்டாக்கிவிட்டது. வஞ்சியைச் சிலர் இக்காலக் கரூர் (திருச்சி மாவட்டம்) எனக்கருதுவர். இதுவே பழங்காலச் சேரர்தம் தலைநகராகிய கரூர் என்பர். ஆனால், அது பொருந்தாது என்பதைக் கிருஷ்ணசாமி ஐயங்கார் அவர்கள் தமது சேரர் வஞ்சியில் திட்டமாக விளக்கிவிட்டார்கள்.[1] எனவே, சேரர்தம் பழந்தலைநகராகிய வஞ்சி இக்காலத்துக் கொச்சி நாட்டில் உள்ள திருவஞ்சைக்களந்தான் என்று கொள்ளல்

1. சேரர் வஞ்சி: டாக்டர் கிருஷ்ணசாமி ஐயங்கார்

பொருந்தும். அங்குள்ள 'திருக்கணாமதிலகமே' இளங்கோ அடிகள் துறவு பூண்டிருந்த குணவாயிற் கோட்டம் என்பர். மேலும், அண்மையில் திருவாங்கூர் தனி அரசாய் இருந்த வரை நாட்டுப் பாடலாக 'வஞ்சி பத்யம்' பாடப்பட்டதை யாவரும் அறிவர். எனவே, சேரர் வஞ்சி இன்றைய சிறைந்த அஞ்சைக்களமேயாகும். இன்று அது தமிழ் நாட்டு எல்லைக்கு அப்பால் இருக்கின்றதாயினும். அதுவே செங்குட்டுவன் அரசிருக்கையாயிருந்ததோடு, சிறந்த காப்பியமாகிய சிலப்பதிகாரத்தைத் தந்த இடம் என்னும்போது தமிழர் ஒவ்வொருவருக்கும் அந்த இடத்தைக் காண வேண்டும் என்றுதான் தோன்றும். அத்தகைய சேரர்தம் தலைநகராகிய வஞ்சி இந்த இருண்ட காலத்திலேதான் நிலை குலைந்தது. அதற்குப் பிறகு சேரநாட்டு எல்லை தனியாகவே பிரிந்து விட்டது எனலாம். இந்த இருண்ட காலத்துக்குப் பிறகும் சேர மன்னரும் மக்களும் தமிழ் நாட்டுடன் ஒரு சில நூற்றாண்டுகள் இணைந்து வாழ்ந்தார்கள் என்றாலும் சங்ககாலத்தில் இருந்ததுபோன்று அத்துணைப் பிணைப்பு இல்லை எனலாம் சேரர்தம் அகநாடாகிய இன்றைய மலையாள நாட்டில் 12-ஆம் நூற்றாண்டுவரை தமிழ் மொழியே பேசப்பட்டு வந்ததோடு சிற்சில தமிழ்ப் புலவரும் தோன்றி வந்திருந்தனர் என்பது உண்மையே யாயினும், இந்த இருண்ட காலத்தில் உண்டான அந்தப் பிளவு பின்னர்த் தூர்க்க முடியாததாகி, அச் சேரநாடு தனி நாடாகவும் தனி மொழி வழங்கும் பகுதியாகவும் மாறிவிட்டதென்பதை யாரே அறியாதார்! சோழ பாண்டியப் பகுதிகளில் பின்னர்க் கடுங்கோன் பாண்டியனும் அவன் பரம்பரையும், மகேந்திரனும் அவன் பரம்பரையும், பின்னர் விசயாலயனும் அவன்

பரம்பரையும் தோன்றி, இழந்த தமிழர் பண்பை நிலை நாட்டி வெற்றி கண்டமை போன்று, சேர நாட்டில் இருண்ட காலத்துக்குப்பின் தமிழ்நலம் புரக்கச் சிறந்த சேரப் பேரசு தோன்றாமையே இந்தப் பிரிவுக்குக் காரணமாயிற்று எனலாம். இவ்வாறு இந்த இருண்ட காலம் தமிழர்தம் பண்பாடு முதலியவற்றை ஓரளவு மாற்றியோடு நில்லாது, தலைநகரங்களை அழித்ததோடு அமையாது, ஒரு பகுதியாகிய சேர நாட்டையும் இழக்கும் நிலைககு அடிகோலியாகவும் அமைந்துவிட்டது எனலாம்.

**மக்கள் வாழ்க்கை:**

இனி, இந்த இருண்டகாலத்தில் தமிழ் நாட்டு மக்கள் எந்த நிலையில் வாழ்ந்தார்கள் என்பதைக் காணலாம். இரண்டாம் நூற்றாண்டினையும் ஏழாம் நூற்றாண்டினையும் ஒத்து நோக்கும்போது தமிழ்நாட்டில் எத்தனையோ மாறுதல்கள் தோன்றியிருக்க வேண்டும் என்று கண்டோம். அவற்றுள் மொழி மாற்றம் ஒன்று, தமிழில் சங்க காலத்தில் வடமொழிச் சொற்கள் அதிகமாகக் கலக்கவில்லை என்பது கண்கூடு. ஆனால், ஏழாம் நூற்றாண்டில் தமிழ் நூல்களில் வடமொழிச் சொற்கலப்பு அதிகமாகிவிட்டது; அதற்குக்காரணம் தமிழ் நாட்டில் உண்டான சமய மாறுபாடேயாகும். பௌத்தம் தமிழ் நாட்டில் சாத்தனார் காலத்தில்— இரண்டாம் நூற்றாண்டில்—உயர்ந்திருந்தது என்று கண்டோம். எனினும். ஐந்து, ஆறாம் நூற்றாண்டுகளில் பௌத்தம் அடியோடு அழிந்து, சமண சமயமே தமிழ் நாட்டில் மேலோங்கி இருந்தது. சமணம் பௌத்தம் இரண்டும் வடநாட்டில் இருந்து வந்தமையின்,

அவற்றின் கொள்கைகளை விளக்கப் பல வடமொழிச் சொற்களைத் தமிழில் புகுத்தி இருக்க வேண்டுமன்றோ! இவ்வாறு வடமொழி மிகுந்தது. அதற்கு முன் சங்கத்தில் வந்த வைதிக சமயத்தவர் வடமொழிவழித் தம் சமயம் பரப்ப விழைந்தும், அது இயலாததாயிற்று. இந்த இருண்ட காலத்தில் அதுவும் எளிதாய் முடிந்தது.

**சமய மாறுபாடுகள்:**

பௌத்தமும் சமணமும் தம்முள் மாறுபட்டு நாட்டில் ஒன்றை ஒன்று விஞ்சி வளர்ந்துகொண்டிருக்கும் அதேவேளையில், தமிழ்நாட்டிலே பழைமையாய் நின்ற சைவமும் வைணவமும் அவற்றோடு கலக்க முயன்ற வைதிக சமயமும் வாளா உறங்கிக்கிடக்கவில்லை எனலாம். இந்த இருண்ட காலத்திலிருந்த ஒரு சிற்றரசன் கோச்செங்கட் சோழன். இவன் சிவனுக்கும் விஷ்ணுவுக்கும் பலப்பல கோயில்கள் கட்டினவன் என அறிகின்றோம். காப்பிய காலத்திலேயே தலைநகரங்களில் பலப்பல தெய்வங்களும், அவற்றின் கோயில்களும் அவற்றை வழிபடும் முறைகளும் பெருகிவிட்டன என்பதையும் முன்பு அறிந்தோம். எனினும், சங்ககாலத்தில் அவை போன்ற கோயில்களைக் காண இயலாது அன்றோ! காப்பிய காலத்தில் தோன்றி வளர்ந்த அந்தச் சமயக் கோயில்கள் ஒன்றொடொன்று போட்டியிட்ட மூன்று சமயங்கள் வாயிலாக இருண்ட காலத்தில் பெருகிப் பலவாயின. எனினும், ஏழாம் நூற்றாண்டில் பௌத்தம் சமணம் இரண்டும் நிலைகெட, மேலோங்கிய சைவ வைணவக் கோயில்களே நாடெங்கும் நிரம்பி நின்றன. அவற்றைப் பின் வந்த நாயன்மார்களும்

ஆழ்வார்களும் பாடிய பாடல்களே தேவாரம், நலாயிரப் பிரபந்தம் என்ற இலக்கியங்களாகி இன்றளவும். வாழ்கின்றன.

செங்கணான்:

கோச்செங்கணான் சமயத்தொண்டு செய்து சைவம் வைணவம் என்ற இரண்டு சமயங்களையும் வளர்த்தவன். அத்துடன் 'களவழி நாற்பது' என்ற ஒரு நூலையும் பொய்கையாரைக் கொண்டு பாடச் செய்தவன். இந்தப் பொய்கையாரே முதல் ஆழ்வார் மூவருள் ஒருவராகிய பொய்கையார் என்று கிருஷ்ணசாமி ஐங்காரைக் காட்டிக் கூறுவர் டாக்டர். இராசமாணிக்கம் அவர்கள்.[1] திரு. P T. சீனிவாச ஐயங்கார் அவர்கள் முதல் மூன்று ஆழ்வாரையும் மகேந்திரன் காலத்துக்கு (கி. பி. ஏழாம் நூற்றாண்டு) உரியவ ராக்குவர்.[2] ஆழ்ந்து நோக்கினால் பின்னதுதான் சரியென்பது தோன்றும். எனவே. களவழிப் பொய்கையாரும் பிரபந்தப் பொய்கையாரும் வேறு வேறு காலத்து வாழ்ந்த இருவராவர். ஆழ்வார் பாசுரங்களும் நாயன்மார் பதிகங்களும் ஏறக் குறைய ஒரே காலத்தில் ஏழாம் நூற்றாண்டில் தோன்றியன வாகக் கொள்ளுதலே பொருத்தமானதாகும். இது நிற்க.

இக்கோச்செங்கணான் காலம் கி. பி. 200 முதல் 225 வரை என்பர். இவன் சிறந்த சிவ பக்தன்; தில்லையைச் செப்பனிட்டுப் பெருங்கோயிலாக்கினவன். சிதம்பரம் என்னும் தில்லையே இவனால்தான் தோற்ற முற்று ஏற்ற மடைந்தது எனலாம். சங்க இலக்கியங்களிலோ அன்றிக்

1. பல்லவர் வரலாறு, பக். 10

2. பல்லவர் வரலாறு, P.T .S. பக் 9

காப்பியங்களிலோ தில்லையைப் பற்றிய குறிப்பு ஒன்று கூட இல்லை. ஆனால், இருண்ட காலத்தை அடுத்த ஏழாம் நூற்றாண்டின் தொடக்கத்திலே தில்லையே 'கோயில்' என்னும் சிறப்புப் பெயர் பெற்று, சைவத் திருத்தலங்களுள்ளே முதன்மை பெற்றதாகிவிட்டது. இது போன்று பல கோயில்களைக் கட்டியவன் இவன். எனவே, பின்னர் வந்த பல்லாயிரம் பத்திப் பாடல் களுக்கு வித்திட்டவன் இக்கோச்செங்கணானே எனலாம். தமிழ் நாட்டில் சங்க காலத்தில் இல்லாத ஒரு புது நெறியை—பத்தி மார்க்கத்தை—இருண்ட கால எல்லையில் தோற்றி வளர்த்து, ஏழாம் நூற்றாண்டில் தேவார பிரபந்த வாயிலாகத் தமிழ் நாட்டுக்கு அளித்தவன் செங்கணானே. அந்நெறி இன்றளவும் அதே நிலையில் போற்றப் பெறுகின்றது.

இவன் கோயில்கள் அமைத்ததோடு, ஒவ்வொரு கோயிலுக்கும் இயற்கையொடு கலந்த ஒவ்வொரு மரத் தையும் உரிமையாக்கிவிட்டான். தில்லைக்குத் தில்லை மரம், மதுரைக்குக் கடம்ப மரம், காஞ்சிக்கு மாமரம், குற்றாலத்துக்குக் குறும்பலா, இப்படி ஒவ்வொரு திருக் கோயிலுக்கும் ஒவ்வொரு தல விருட்சத்தை அமைத்து அதை ஒட்டிச் சிறு சிறு கோயில்கள் அமைத்தான் இவன். அக்கோயில்களை எழில் மாடங்கள் என்கின்றார் திருமங்கை ஆழ்வார்.[1] இவன் கட்டிய அச்சிறு கோயில் களே பின் பதிகங்களால் சிறப்பிக்கப் பெற்றுப் பிற்காலச் சோழர்களால் பெருங் கோயில்களாகப் பெற்றன. புகழ்ச்சோழ நாயனார் என்று சேக்கிழாரால் பாராட் டப்பெற்ற சோழ மன்னரும்[2] இந்த இருண்ட காலத்தவ

1. எண்தோள் ஈசற்கு எழில் மாடம் எழுபது செய்தோன் (திருமங்கை ஆழ்வார்)

2. பெரிய புராணம்

ராகவே இருக்க வேண்டும். இக்காலமே மணிவாசகரால் போற்றப்பெற்ற கண்ணப்பரும் திருமந்திரம் தந்த திருமூலரும், காரைக்கால் அம்மையார் போன்ற சமயத் தலைவர்களும் வாழ்ந்த காலமாகும்.

## நீறு பூத்த நெருப்பு:

இவ்வாறு காணும் இரண்டொரு சோழ மன்னரைத் தவிர்த்து இந்த இருண்ட காலத்தில் வாழ்ந்த வேறு தமிழ் மன்னரைப் பற்றிய வரலாறு நமக்குக் கிடைக்க வில்லை. மேலும், பாண்டிய சேர மரபுகள் அடியோடு அழிந்துவிட்டன என்றும் யாரும் கூற முடியாது. பின் தலை நிமிர்ந்த கடுங்கோன் பாண்டியனது பரம்பரை யினர் பாண்டி நாட்டின் சிற்றரசர்களாய், மாற்றாருக்கு அடங்கியும், சிற்சில சமயங்களில் மாறுபட்டும் வாழ்ந்து வந்திருக்கக் கூடும். அதே போன்று சேர பரம்பரையினரும் அவருள் ஒரு பகுதியினராகிய இரும்பொறை மரபினரும் சிற்றரசர்களாகி அடங்கி ஆண்டவராதல் வேண்டும். எனவே, தமிழ் நாட்டு மூவேந்தரும் இந்த இருண்ட காலத்தில் மாசு படிந்த ஓவியம் போன்றும் குடத்துள் விளக்குப் போன்றும், நீறு பூத்த நெருப்பே போன்றும் தம் நிலை மங்கி ஒடுங்கி, மாற்றாருக்கு இடங்கொடுத்து வாழ்ந்து வந்தவராதல் வேண்டும். ஆறாம் நூற்றாண் டின் இறுதியில் தெற்கே பாண்டியரும் வடக்கே பல்லவரும் தலை தூக்க, கடுங்கோனும், மகேந்திரனும் ஒளி இழந்த தமிழ் நாட்டை ஒளிபெறச் செய்தனர். அவருள்ளும் பல்லவரே பல வகையில் சிறந்தனர். எனவே, அவர் வழி அடுத்து வரும் காலத்துத் தமிழகத்தைக் காண் போம்.

# XI. காஞ்சியில் பல்லவர்

**பல்லவர் காலம்:**

தமிழக வரலாற்றின் இருண்ட காலத்திலே தமிழ் நாட்டில் இன்னார் எங்கிருந்து வந்தவர் என்று அறிந்துகொள்ளக் கூடாவகையில் குடியேறிய பல் வேறு அரச பரம்பரையினரோடு இரண்டு நூற்றாண்டு களுக்கு மேல் போராடி இறுதியில் வெற்றிபெற்று, காஞ்சியைத் தலைநகராகக் கொண்டு ஆண்ட பல்லவர் தமிழக வரலாற்றையே செப்பம் செய்துவிட்டார்கள் எனலாம். பல்லவர்கள் சிறக்க வாழ்ந்த காலமாகிய கி பி. 600 முதல் சுமார் 900 வரை, தமிழ்நாடு பல வகையில் சிறந்தோங்கி நின்றது எனலாம். வரலாற்றைத் திட்ட மாக வரையறுக்கச் சிறந்த கருவிகளாய் உள்ள கல் வெட்டுக்கள், செப்பேடுகள். சாசனங்கள். கலை நிலையங்கள், இலக்கியங்கள் போன்ற பல சாதனங்கள் இக்காலத்தில் உருவாயின. இக்காலத்து இலக்கியங்கள் சங்க காலத்து இலக்கியங்களைக் காட்டிலும் வேறு பட்டனவேயாம். அவை நாட்டை வரலாற்றின் வழியும் வாழ்க்கை நெறி வழியும் எடுத்துக் காட்டுபவைகளாய் அமைந்து விட்டன. அவற்றைப் போன்றே கற்கோயில் களும், குகைக்கோயில்களும், அவற்றில் தீட்டப்பெற்ற ஓவியங்களும் சிற்பங்களும் என்றென்றும் தமிழ் நாட்டில் நிலைத்த சின்னங்களாய் நின்றுவிட்டன அக்காலத்தில் வளர்க்கப்பெற்ற பல்வேறு கலைகளும்—இசையும் பிறவும்-காவியங்களும், சமய நெறிகளும் தமிழர்தம் வாழ்வில் ஒன்றி, அன்று மட்டுமன்றி இன்றளவும் அவர் களைப் பின்னிப் பிணைத்தே வாழ்கின்றன. எனவே

பல்லவர் காலம் தமிழ் நாட்டு வரலாற்றில் ஒரு சிறந்த காலமெனக் கொள்ளல் வேண்டும்.

**மூன்று மரபுகள்:**

பல்லவர் யாவர் என்றும் அவர்கள் எவ்வாறு தமிழகத்தில் வந்தார்களென்றும் மேலே கண்டோம். அவருள் மரபு முறையாக இங்கு வந்தவர்களைக் காணல் ஏற்புடையதாகும் பல்லவர்களைப் பற்றியும் அவர் காலத் தமிழ்நாட்டைப் பற்றியும் பல வரலாற்று நூல்கள் இன்று நாட்டில் உள்ளன. அவற்றின் வழி கால எல்லையில் நின்று தொடர்ந்து ஆண்ட பல்லவ மரபினை அறிய இயலும். பல்லவரை மூன்று வகையாகப் பிரிப்பர்; பிராகிருத மொழிப் பல்லவரை முற்காலப் பல்லவர் என்றும் (கி.பி. 250—340) வடமொழிப் பட்டயப் பல்லவரை இடைக்காலப் பல்லவர் என்றும் (கி.பி. 340—575) கிரந்த—தமிழ் மொழிப் பட்டயப் பல்லவரை மூன்றாம் காலப் பல்லவர் என்றும் (கி.பி.575—900) மூவகையாகப் பிரிப்பர். பல்லவர் வரலாற்றை ஆராய்கின்றவர்கள், வடநாட்டிலே சமுத்திரகுப்தர் ஆணை செலுத்தியபோது. அவர் ஆணை கிருஷ்ணை ஆற்றங்கரை வரையில் பரவி இருந்ததென்றும் அக்காலத்தில் காஞ்சியில் விஷ்ணு கோபன் என்ற பல்லவன் ஆண்டான் என்றும் அலகாபாத்துத் தூண் கல்வெட்டுக் குறிக்கின்றது.[1] அக்கல்வெட்டின் காலம் கி.பி. நான்காம் நூற்றாண்டின் இடைக்காலமாகும். எனவே, விஷ்ணு கோபன் கி.பி. 340–350இல் ஆண்டவன் ஆதல் வேண்டும். எனவே, அதற்கு முன்பே பல்லவர் ஆட்சி காஞ்சியில் நிலை பெற்றிருக்க வேண்டும் என்பது உறுதி. அப்பல்லவரை வரையறுத்துக் கண்டதில் முதன்முதல் தமிழகத்தை

1. History of the Pallavas of Kanchi By Gopalan, p. 32.

ஆண்ட பல்லவன் பப்பதேவன் என்பது முடிவாக்கப் பட்டது. பப்பதேவன் முதல் விஷ்ணுகோபன் ஈறாக நான்கைந்து பல்லவர்கள் பிராகிருதப் பல்லவரெனக் குறிக்கப்படுகிறார்கள். அவர்களுள் சிவஸ்கந்தவர்மன் முக்கியமானவனாகக் காண்கின்றான். இவர்களைப் பற்றி மயிதவோலு சாசனம், ஹிரஹதகல்லி சாசனம், பிரிட்டிஷ் மியூசியம் சாசனம் என்ற மூன்றுமே விளக்கமாகக் குறித் துள்ளன. இவ்வாறு தமிழக வரலாற்றைக் குறிக்கும் முதற்சாசனங்கள் இவைகளே. இவற்றின் வழி பப்பதேவன், சிவஸ் கந்தவர்மன், புத்தி தேவன், வீரவர் மன், விஷ்ணு கோபன் (கி.பி. 340) என்பவர்கள் முறையே ஆண்டதாக கோபாலன் அவர்கள் வரையறுத்துள்ளார் கள்.[1]

இடைக்காலப் பல்லவர் வடமொழிப் பல்லவராவர். இக்காலப் பல்லவரை அறிய அவர் காலத்தில் வட மொழியில் ஏற்படுத்தப்பட்ட பல செப்பேடுகளும் கல்வெட்டுமே துணைசெய்கின்றன. அச்செப்பேடுகள் பல பல்லவரால் வெளியிடப்பட்டவேனும், அவை காஞ்சியிலிருந்து வெளியிடப்பட்டதாகக் காணப்பெற வில்லை. அவை தவிர இரண்டொரு வடமொழி நூல் களும், பிற மன்னர் வெட்டுவித்த கல்வெட்டுக்களும்கூட இவர் வரலாற்றை அறியத் துணை புரிகின்றன. முறைப் படி இடைக்காலப் பல்லவருள் யார் யார் தொடர்ந்து ஆண்டார்கள் என்பதைத் திட்டமாகக் கூற இயலாது. எனினும், கோபலன், அவர்களை—அவர்தம் அரசியலை— ஒருவாறு முறைப்படுத்திக் காட்டியுள்ளார். முதல் பல்லவர் மரபின் இறுதி மன்னனான விஷ்ணுகோபனுக் குப் பின்பும் (அதாவது கி.பி. 350) ஏழாம் நூற்றாண்டின் தொடக்கத்தில் ஆண்ட மகேந்திரன் தந்தையாகிய

1. History of the Pallavas of Kanchi P. 33.

சிம்மவிஷ்ணுவுக்கும் முன்பும் பல பல்லவ அரசர்கள் ஆண்டு மறைந்துள்ளனர். குமார விஷ்ணு, கந்தவர்மன், வீரகூர்ச்சரவர்மன், கந்தசிஷ்யன் (கந்தவர்மன் II), சிம்ம வர்மன், குமாரவிஷ்ணு II, கந்தவர்மன் III, சிம்மவர் மன் II, குமாரவிஷ்ணு III, விஷ்ணுகோபவர்மன், சிம்மவர்மன் III, சிம்மவிஷ்ணு ஆகியோர் ஆண்டார்கள் என்று முறைப்படுத்திக் காட்டுகின்றார் இவர்கள் காலமெல்லாம் தமிழர் முறைக்கு மாறுபட்ட நிலையிலே ஆட்சியும் அமைப்பும் பொருந்திய காரணத்தாலும், இவர் களுள் பெரும்பாலோர் ஆட்சி காஞ்சிக்கு அப்பாலே நின்ற காரணத்தாலும் தமிழக வரலாற்றுக்கும் இவர்களுக்கும் பெரும்பாலும் தொடர்பு இல்லை எனலாம். இவர்கள் காலத்தில் நாம் இருண்ட காலத்தில் கண்ட பல அந்நியர் படை எடுப்புக்களும் குழப்பங்களும் நாட்டில் நிகழ்ந் துள்ளன. இக்காலத்திலேதான் வடக்கில் சாளுக்கியர் தோன்றினர். இச் சாளுக்கியருக்கும் பின் வந்த பல்ல வருக்கும் தீராப்போர் நடைபெற்றதைப்பின் காண்போம். இவ்வாறு பிராகிருத, வடமொழிப் பல்லவர்தம் காலங் களெல்லாம் கழிய, சிம்மவிஷ்ணுவின் மகன் மகேந்திரன் ஏழாம் நூற்றாண்டின் தொடக்கத்தில் காஞ்சியில் அரியணை ஏறினான். அவனும் அவன் பரம்பரையினருமே தமிழக வரலாற்றைச் சிறக்கச் செய்தவர்களாவார்கள். இவன் தந்தையாகிய சிம்மவிஷ்ணுவே முதல் முதல் பேர்பெற்ற பல்லவன். எனினும் அவன் தமிழ்மொழிக்கும் தமிழ்க்கலைக்கும் அத்துணைச் சிறந்த தொண்டு செய்த வன் என்று கொள்ளத் தக்கவன் அல்லன். அவன் மாற்றரசர்களோடு போரிட்டுத் தன் நாட்டு எல்லையைப் பெருக்கித் தன் மகனிடம் அளித்தான். அவன் அறிவாளி

யாய் இருந்து கல்வித் தொண்டு செய்தான் என்றாலும், அவன், செய்த தொண்டுகள் எத்தகையன என்று திட்டமாகக் கூற இயலாது. அச் சிம்மவிஷ்ணுவின் உருவமும் அவன் மகன் மகேந்திரன் உருவமும் மாமல்லபுரம் ஆதி வராக சுவாமி கோயிலில் பொறிக்கப்பட்டுள்ளன. அதில் 'சிம்மவிஷ்ணு போதாதிராஜன்' என்றும் 'மகேந்திர போதாதிராஜன்' என்றும் அவர் தம் பெயர்கள் காணப்படுகின்றன. அவன் கலைவல்லவனாய் இருந்தான். அவன் தொடங்கிய குகைக் கோயில்களே அவன் மகன் மகேந்திரன் காலத்தில் உருப்பெற்று உயர்ந்தன எனலாம்.

**மாற்றங்கள்**

சங்ககாலத்தில் இல்லாத கோயில்கள் இருண்ட காலத்தில் கோச்செங்கணான் போன்ற அரசர்களால் பத்தியை வளர்ப்பதற்காகத் தமிழ்நாட்டில் உண்டாக்கப் பட்டன என மேலே கண்டோம். அக்கோயில்களெல்லாம் 'சுடுமண்' என்னும் செங்கற் கோயில்களேயாகும். மகேந்திரன் காலத்திலேதான் கருங்கற் கோயில்கள் தொடங்கப்பெற்றன. அவையும் மலையையே குடையப் பெற்ற குகைக் கோயில்களாய் அமைந்தன. பின் நரசிம்மன் முதலியோர் முயற்சியால் வளர்ந்து, அப்பல்லவர் ஆட்சிக்காலத்துக்குள்ளேயே கருங்கற்களை அடுக்கிக் கட்டிய கோயில்கள் உருவாக்கப் பெற்றன எனலாம். இந்தக் கோயில்களே பிற்காலச் சோழர்தம் பெரும் பணிக்கு வழி காட்டிகளாய் அமைந்தன.

**மகேந்திரன்:**

மகேந்திரவர்மன் பதினைந்து ஆண்டுகளே (கி.பி.615-630) அரசாண்டான் எனினும், அதற்குள் அவன்

பல சிறந்த செயல்களைச் செய்து அழியாப் புகழ் பெற்றான். அவன் காலத்திலேயே இரண்டாம் புலிகேசி காஞ்சியை நோக்கிச் சில முறை படை எடுத்து வந்தான். புலிகேசியைக் காஞ்சிக்கருகில் உள்ள புள்ளலூர் வரையில் வரவிட்டுக் காஞ்சியில் இருந்து பின் வளைத்து வெற்றி பெற்றான் மகேந்திரன். புலிகேசியை யன்றிக் கங்க வேந்தரும் அவனுடன் போரிட்டனர். அவன் காலம் போரிடைக் கழிந்தபோதிலும், அவன் கலை வளர்ப் பதிலும் கருத்துடையவனாய் இருந்தான். அவன் முதலில் சமணனாய் இருந்து, பின் அப்பர் என்னும் திருநாவுக்கரச ரால் சைவனாக்கப் பெற்றவன். அவன் 'மத்தவிலாசப் பிரகசனம்' எனும் நூலை எழுதி வடமொழியை வளர்த்த வன் எனினும், திருநாவுக்கரசர் சைவ சமயத்தைப் பரப்பத் தொடங்கிய பின் அவனும் சைவனாகிச் சைவ சமயத்தையும் தமிழையும் ஒருங்கே வளர்க்க முற்பட்டான். முதன் முதல் தேவாரப்பதிகம் தொடங்கிய காலம் அம் மகேந்திரன் காலமே

மகேந்திரன் சிறந்த கலை வல்லவன்; இசை நலம் பெற்றவன். அவன் குடைந்த குகைக் கோயில்கள் பல்ல வபுரம், வல்லம், மாமண்டூர், மகேந்திரவாடி, தளவானூர் மண்டபப்பட்டு, சீயமங்கலம், திருச்சி, நாமக்கல் முதலிய இடங்களில் காணப்பெறுகின்றன. மாமல்லபுரத்தில் உள்ளவற்றுள் இரண்டொரு கோயில்களும் அவன் காலத் தவை என்பர் ஆய்வாளர்.[1] இத்தகைய குகைக்கோயில்கள்

1. Studies in Pallava History, by Fr. Heras—p. 77

வாகடகர் தம் அஜந்தாக் குகைக் கோயில்களையும், விஷ்ணுகுண்டர்தம் ஆந்திரக் குகைக் கோயில்களையும் அடிப்படையாகக் கொண்டு அமைக்கப்பெற்றன என்பர் டாக்டர் இராசமாணிக்கனார் அவர்கள்.[1] அக்கூற்று மெய்யெனத் தோன்றினும், நன்கு ஆராய்தற் குரியது.

மகேந்திரன் கல்வெட்டுக்களையும் வெட்டுவித்தான். அவற்றின் மூலமே அம்மன்னனது பட்டப் பெயர்களும், பிறசிறப்புக்களும் நன்கு தெரிகின்றன. மகேந்திரன் இசை, நடனம், சிற்பம், ஓவியம், நாடகம் ஆகிய கலைகளை வளர்த்தவன் அவை அனைத்தும் பழந்தமிழ் முறைப்படியே வளர்ந்தன எனலாம். எனவே இருண்ட காலக்ருக்குப்பின் வீழ்ச்சியுற்ற தமிழகத்தைப் பல வகையில் எழுச்சியுறச் செய்த பெருமை மகேந்திரனையே சாரும்

நரசிம்மன்:

மகேந்திரன் மைந்தனே நரசிம்மன். அவன் கலை வளர்ப்பதில் தந்தையையும விஞ்சியவனாகிவிட்டான். அவனும் கோயில்களைக் குகைகளில் செதுக்கினான். என்றாலும், அக்கோயில்களில் பல சித்திர வேலைப்பாடுகளையும் அமைத்தான் தூண்களில் பல சிங்கங்களின் சிற்பங்கள் இடம் பெற்றன.

அவன் காலத்தில் சாளுக்கிய வேந்தனாகிய புலிகேசி மீண்டும் காஞ்சியை நோக்கிப் படையெடுத்தான். வட நாட்டுப் பெருவேந்தனாகிய ஹர்ஷனை வென்ற புலிகேசி, அவ்வெற்றியைப் பெரிதாக எண்ணித் தென்னாட்டின் மேலும் பலமுறை படையெடுத்தான் போலும்! எனினும், இறுதியாக அந்த நரசிங்கப் போத்தரையனிடம் தோல்வி

1 பல்லவர் வரலாறு, பக். 105

யுற்றதோடு வீழ்ச்சியும் அடைந்தான். நரசிங்கன் சேனைத்தலைவராய் இருந்த பரஞ்சோதியார் புலிகேசியை அவன் தலை நகராகிய வாதாபிவரை துரத்திச் சென்று வாதாபியையும் கைக் கொண்டு வெற்றி பெற்றார். அப்பரஞ்சோதியாரே பெரிய புராணத்தால் 'சிறுத்தொண்ட நாயனார்' எனச் சிறப்பிக்கப்பட்ட பெரியாராவர்.

நரசிம்மவர்மன் கி. பி. 630 முதல் 668 வரை நீண்ட காலம் அரசாண்ட பெருமன்னன். அவன் காலத்திலும் பல போர்கள் நிகழ்ந்துள்ளன. சாளுக்கியருடனும், பாண்டியருடனும், கங்கருடனும், இலங்கை வேந்தனுடனும் அவன் பெரும்போர்கள் ஆற்றியுள்ளான். அவன் காலத்தில் தமிழ் நாட்டில் சேரரும் சோழரும் சிற்றரசர்களாய் இருந்திருப்பர். அவர்களைப்பற்றிய குறிப்புக்களே வரலாற்றில் இல்லை. எனினும், கடுங்கோன் பாண்டியனால் புதுப்பிக்கப்பெற்ற பாண்டிய மரபு தொடர்ந்து வந்து கொண்டிருந்தது. நரசிம்மன் காலத்தில் ஆண்ட பாண்டிய மன்னன் அரிகேசி பராங்குசன் என்பான். அவனே திருஞானசம்பந்தரால் கூன் நிமிர்த்தப் பெற்று 'நின்ற சீர் நெடுமாறன்' என்ற சிறப்புப் பெயர்பெற்றவன். அவன் மனைவி மங்கையர்க்கரசி சோழன் மகள் எனக் காண்கின்றமையின், சோழர் சிற்றரசர்களாய் வாழ்ந்து பாண்டியனுக்கு மகள் கொடுத்து, உறவு கொண்டாடி இருந்தனர் என அறியலாம். முன்னைய களப்பிரரில் ஒருவகையார் கொடும்பாளூரிலிருந்து ஆண்டு அப்பாண்டியனுக்கு அடங்கியிருந்தனர். அப்பாண்டியன் சமண சமயத்தைத் தழுவியவன். மனைவி மங்கையர்க்கரசியோ சைவசமயத்தைச் சார்ந்தவர். பின் திருஞானசம்பந்தரால் பாண்டிய நாடு முழுவதும் சைவமானபோது பாண்டியனும் சைவனானான். வடக்கே பல்லவரும்

தெற்கே பாண்டியரும் ஒரு சேரச் சைவத்தை நிலை நாட்டிச் சமணத்தை அழித்து வெற்றி கண்டனர். அதன் பின் சமணம் தமிழ்நாட்டில் தலைதூக்கவே இல்லை. சைவம் நிலைத்து வாழ்கின்றது.

பாண்டியன் நெடுமாறனுக்கும் நரசிங்கனுக்கும் போர்கள் நடைபெற்றன. நரசிம்மன் செயல்களைப் பற்றியெல்லாம் கூரம் சாசனம் நன்கு எடுத்துக் காட்டு கின்றது. பரஞ்சோதியார் புலிகேசியை வெல்ல வாதாபி நோக்கி வடக்கே சென்ற அதே வேளையில், நரசிம்மன் தெற்கே பாண்டியருடன் போரிட்டான் போலும்! இலங் கையில் அரசு முறைபற்றி வந்த குழப்பம் காரணமாகத் தன்னை நாடி வந்த மானவர்மனுக்கு உதவி செய்யவே ஈழநாட்டின் மேல் இருமுறை போர் தொடுத்து வெற்றி கண்டான் அவன். அவனுடைய வெற்றியைக் கல்வெட் டுக்கள் இராமனது இலங்கை வெற்றியோடு ஒப்பிட்டுக் காட்டுகின்றன.[1]

அவன் காலத்தில்தான் சிறந்த சீன யாத்திரிகனான யுவான்சுவாங் காஞ்சிக்கு வந்தான். அவன் ஹர்ஷனிடம் சிலகாலம் தங்கி, 'நாலந்தா' முதலிய பல்கலைக் கழகங்களைக் கண்டவன். நாலந்தாவில் இருந்த சிறந்த பேராசிரியராகிய தர்மபாலர் காஞ்சியைச் சேர்ந்தவர். காஞ்சியின் புகழ் அன்று சீனம்வரையில் பரவி இருந்தது. எனவே, வடநாடு கண்ட யுவான் சுவாங் 'திராவிட' நாடாகிய தென்னாட்டையும் காண வந்தான்; காஞ்சியில் தங்கி அதன் வளம் கண்டு புகழ்ந்து எழுதியுள்ளான். சீனமொழியில் காஞ்சி

1. S. I. I. Vol. II, p. 343

யைப் பற்றியும் திராவிட நாட்டைப்பற்றியும் அன்று எழுதிய குறிப்பால் இந்நாட்டு நிலம் செழிப்பாய் இருந்த தென்றும், மக்கள் அஞ்சாநெஞ்சுடன் அறம் வளர்த் தவர் என்றும், பல பௌத்த மடங்களும் சமண சைவ வைணவக் கோயில்களும் காஞ்சியில் இருந்தன வென்றும் அறிகின்றோம். அவன் பாண்டிநாட்டையும் கண்டதாகக் குறிக்கின்றான். அக்காலத்திற்கு முன் சிறந்திருந்து அழிந்த பல பௌத்த மடங்களின் சிதைவுகளை அவன் கண்டு தன் குறிப்பில் தீட்டியுள்ளான். காஞ்சி கடற் கரையை நோக்கி இருபது கல் விரிந்துள்ள நகரம் எனக் குறிக்கின்றான். இப்படி நெடுந்தொலைவிலிருந்து வந்து எழுதிய சீனயாத்திரிகன் குறிப்பினால் நாம் பழந்தமிழ் நாட்டுச் சிறப்பை அறிய வாய்ப்பு உண்டாவது கண்டு மகிழ்ச்சியுற வேண்டுமன்றோ!

இனி, நரசிம்மன் குகைக்கோயில்களைப்பற்றிக் காண்போம். அவனும் தந்தையைப் போன்றே பல இடங்களில் குகைக்கோயில்களைக் குடைந்தவனாவன். அவன் கோயில்களில் ஓவிய வேலைப்பாடுகள் மிக்கிருந்தன. தூண்கள் பல வகை அழகுகள் பொலியச் செதுக்கப் பெற்றன. தூண்களின் அடியில் சிங்கங்கள் தூண்களைத் தாங்குவது போன்று செதுக்கப்பெற்றுள்ளன அவன் நாமக்கல் மலையடிவாரத்தில் நரசிங்கப்பெருமாள் கோயிலைக் குடைந்தான் திருவெள்ளறையில் முடியாமல் நிற்கும் கோயில் அவன் காலத்தது என்பர். இன்னும், சில ஊர்களிலும் அவன் கோயில்கள் உள்ளன எனினும், மாமல்லபுரத்துக் கோயில்களின் வழி அவன் என்றும் வாழ்பவனாகி விட்டான் ஊரே அவனது பட்டப் பெயர்களுள் ஒன்றாகிய 'மாமல்லன்' என்பதனாலன்றோ வழங்கப்

பெற்றது. அவன் சிற்பங்கள்வாதாபிச் சிற்பங்களை ஒத்துள்ளன என்பர். புலிகேசியை வென்று வாதாபியைக் கொண்டபின் அங்குள்ள சிற்பங்களைக் கண்டு அவ்வழியே தன்னாட்டிலும் இச்சிற்பங்களைச் செய்தான் என்பது பொருந்தும். மாமல்லபுரத்தில் உள்ள அவன் குடைவித்த கற்கோயில்கள் 'இரதங்கள்' என்ற பெயர்களோடு இன்றளவும் உலக மக்கள் காணும் கலைப் பெட்டகமாக விளங்கிவருகின்றன. இம்மாதிரிக் கோயில்களைத் தவிர, அவன் பாறைகளில் கதைகளைக் குறிக்கும் பல சிற்பங்களையும் பொறித்துள்ளான். அவற்றுள் இரண்டு மாமல்லபுரத்தில் பாதுகாக்கப்பெறுகின்றன. கோயிலும் சிற்பமும் தவிர்த்துக் கோட்டையும் கட்டினான் நரசிம்மன்.[1]

அக்காலத்தில் தமிழ் நாட்டில் சேரரும் சோழரும் சிற்றரசர்களாய் இருந்தனர் எனக்கண்டோம். பாண்டியர் மரபே தலை தூக்கி நின்றது. கடுங்கோன் (கி.பி. 575-600), சேந்தன் சயந்தவர்மன் (625-650), பின் நெடுமாறன் (கி.பி 640 680) என்ற மூவரும் அக்காலப் பாண்டியராவார்கள். அக்காலத்தில்தான் சீர்காழியில் தோன்றிய ஞானசம்பந்தர் தமிழ்நாடு முழுவதும் சுற்றிச் சைவம் வளர்த்தார்; பாண்டியனைச் சமண சமயத்திலிருந்து சைவ சமயத்துக்கு மாற்றினார். ஆகவே, மகேந்திரன் காலத்தைப் போலவே அவன் காலத்திலும் திருநாவுக்கரசரும் திருஞான சம்பந்தரும் சைவப் பதிகங்களைப் பாடித் தேவாரத்தைத் தோற்றுவித்தனர். பிரபந்தம் பாடிய ஆழ்வாருள் முதன் மூன்று ஆழ்வாரும் அவன் காலத்தில் இருந்தவரே என்பர் P.T.

1. பல்லவர் வரலாறு, டாக்டர் இராசமாணிக்கம். பக் 131

சீனிவாச ஐயங்கார் அவர்கள்.[1] எனவே, கலையையும் சமயத்தையும் ஒருங்கே வளர்த்தவன் நரசிம்மவர்மன்.

### பரமேச்சுரன்

நரசிம்மனுக்குப்பின் பட்டத்துக்கு வந்தவன் இரண்டாம் மகேந்திரன். அவன் நெடுங்காலம் ஆள வில்லை. பின் வந்த பரமேச்சுர வர்மன் கி.பி. 670 முதல் 685வரை ஆண்டான். இவன் காலத்திலும் சாளுக்கிய ரோடு போர்கள் நடைபெற்றன. இவன் காலத்தில் சாளுக்கிய வேந்தனாய் விக்கிரமாதித்தன் இருந்தான். அவனும் அவன் மகன் விநயாதித்தனும் பரமேச்சுரனுடன் போரிட்டனர் என்பர். இருசாராரும் தாம் தாம் வெற்றி கொண்டதாகவே கூறுகின்றனர். அவர்கள் இட்ட பெரு வளநல்லூர்ப் போர் பல்லவர் வரலாற்றிலேயே சிறந்த இடம் பெறுகின்றது எனலாம். அப்போரைப் பற்றிக் கூரம் பட்டயம் நன்கு வர்ணிக்கிறது. நூறாயிரம் வீரருடன் வந்த விக்கிரமாதித்தன் ஒண்டியாய்க் கந்தையைப் போர்த் துக்கொண்டு ஓடிப்போனான் என்கிறது கூரம் சாசனம்.

தெற்கே பாண்டி நாட்டில் நெடுமாறனுக்குப் பின் வந்த கோச்சடையன் அரசாண்டான். அவனும் சாளுக் கியருடன் போரிட்டதாக அறிகிறோம். இப்போரில் நெடுமாறன் மகனான கோச்சடையன் பங்கு கொள்ள நெய்வேலியில் போர் நடைபெற்றதாக வேண்டும் நெடுமாறன் அது காலை வாழ்ந்தவனாக வேண்டும். இப் போரைத்தான் சுந்தரர்,

> 'நிறைகொண்ட சிந்தையால் நெய்வேலி வென்ற
> நின்ற சீர் நெடுமாறன்'[2]

---

1. பல்லவர் வரலாறு--P.T. சீனிவாச ஐயங்கார்
2. சுந்தரர் தேவராம், திருத்தொண்டத் தொகை

எனக் காட்டுகின்றார். இப்போர் பற்றிப் பல்வேறு வகையில் ஆராய்ச்சியாளர் ஆய்கின்றனர். எவ்வாறாயினும், இது பரமேச்சுரன் ஆட்சித் தொடக்கத்தில் நடந்த போர் என்று கொண்டு மேலே செல்வோம்.

பல்லவர் செய்த குகைக் கோயில்கள் சிறந்தவை எனக்கண்டோம். இப்பரமேச்சுரன் அம்முறையை மாற்றிக் கருங்கற்களை அடுக்கி முதல் முதல் கோயில் கட்டுவித்தவனாவன். இது காஞ்சிக்கு அருகில் உள்ள கூரம் என்னும் கிராமத்தில் எழுப்பப்பெற்றது. இக்கோயிலாலும் இதில் எழுந்த பட்டயச் சாசனத்தாலும் தமிழ் நாட்டுக் கோயில் வழிபாட்டு முறைகளை நன்கு அறியலாம். இவன் மாமல்லபுரத்திலும் கணேசர் கோயில், இராமானுசர் மண்டபம் ஆகியவற்றை அமைத்தான்.

**இராசசிம்மன்:**

இவனுக்குப்பின் வந்த இராச சிம்மன் காலத்திலும் (666-705) போர்கள் ஒழிந்தபாடில்லை. சளுக்கிய விசயாதித்தனும், கங்கரும், பிறரும் பல்லவருக்குத் தொல்லை தந்தனர். இவ்வாறு பல்லவர், தம் ஆட்சித் தொடக்கம் முதல் வடக்கிலிருந்து வந்த தாக்குதல்களை ஏற்று, முழுதும் வெற்றி கண்டே வந்தனர். ஆனால் இவன் காலத்தில் போருடன் கொடிய பஞ்சம் ஒன்றும் தலை காட்டிற்று. மக்கள் மிக வருந்தினர். எனினும், இவன் சிறந்த வகையில் மக்களை நடத்திச் சென்றான். இவன் சிவனே மனிதனாகப் பிறந்தவன் என்னுமாறு போற்றப்பட்டான். இவன் சிறந்த சிவ பக்தன்; பல கல்லூரிகளைக் கட்டினான்; கலை வளர்த்தான், இவற்றுடன் இவன் பல கோயில்களைக் கட்டினான். இவன் கட்டிய முக்கியமான கோயில்கள் காஞ்சிக் கயிலாசநாதர் கோயிலும் மாமல்லபுரத் தலசயனப் பெருமாள் கோயிலும் ஆகும். காஞ்சிக் கயிலாசநாதர்

கோயில் இன்றளவும் தமிழ்நாட்டு வரலாறு எல்லைக் கல்லாய் இந்திய அரசாங்கத்தாரால் நன்கு பாதுகாப் பட்டுவருகிறது. அக்கோயிலை நேரில் சென்று காண்பார் அதன் கலைத்திறனை நன்கு உணர்வர். இமயத்து எல்லையில் உள்ள கயிலைமலைக்கு யாத்திரை சென்று வருபவர்கள். இக்கோயிலைக் கண்டு, இமயக் கயிலையை ஒத்தே இக்கயிலாயநாதர் கோயிலும் அமைந்துள்ளது என்பர். இக்கோயிலில் உள்ள சிற்ப வேலைப்பாடுகள் இம்மன்னன் இசை, நடனம் போன்ற கலைகளிலும் பிற கலைகளிலும் கொண்டிருந்த ஆர்வத்தை நன்கு எடுத்துக் காட்டுவன. இக்கோயிலில் நிறையக் கல்வெட்டுக்களும் உள்ளன. பெரிய புராணத்தில் திருநின்றவூரில் பூசலார் கட்டிய மனக் கோயில் பற்றிய நிகழ்ச்சியில் காடவர் கோன் கட்டிய இக்கோயில் பற்றிய குறிப்பு வருகின்றது. மன்னன் இறைவனைக் கோயில் கொள்ளச்செய்த நாளும் பூசலார் மனக்கோயில் நாளும் ஒன்றாக அமைய இறைவன் மன்னனுக்கு வானொலிவழி நாளையே மாற்றச் சொன்னதாகப் பெரிய புராணம் கூறும். அம்மன்னன் இந்த இராசசிம்மனேயாவன். எனவே, இவன் சிறந்த சிவபக்தனாவான். இவன் வடமொழி, தமிழ் இரண்டிலும் வல்லவன். இவன் நாடகத்திலும் திறம் பெற்றவன். தண்டி என்னும் வடமொழிப் புலவரை இவன் ஆதரித்தான் எனவே, வடமொழி, தமிழ் இரண்டு மொழிகளையும், இசை, நடனம், நாடகம், சிற்பம் முதலிய கலைகளையும் வளர்த்துச் சிறந்த சிவப்க்தனாய் விளங்கியவன் இராசசிம்மப் பல்லவனாவன்.

**புதிய மரபு:**

இராசசிம்மனுக்குப் பின் அவன் மகன் இரண்டாம் பரமேசுவரன் பட்டத்துக்கு வந்தான். அவன் சில

காலமே ஆண்டான். அவனுக்குப் பின் மக்கள் இல்லை. எனவே, இத்துடன் சிம்மவிஷ்ணுவின் பரம்பரை முடிகின்றது. எனினும், அப்பல்லவ மரபினைச் சேர்ந்த சிறந்த இரண்டாம் நந்திவர்மன் பட்டத்துக்கு வந்தான். இவனும் மகேந்திரன் நரசிங்கனைப் போன்று சிறந்த வகையில் அரசாண்டான். இவன் 'பல்லவ மல்லன்' என்ற சிறப்புப் பெயரைப் பெற்றுச் சிறந்த வீரனாகவும் விளங்கினான். இவன் பட்டத்துக்கு வந்ததைப் பற்றிய மரபுக் கதைகளும் சிற்பங்களும் உள்ளன. இவன் பன்னிரண்டு வயதிலேயே பட்டத்துக்கு வந்தான் என்பர். இவன் அறுபது ஆண்டு (கி.பி. 710—770) ஆண்டவன்.

**நந்திவர்மப் பல்லவ மல்லன்:**

இந்த நந்திவர்மப் பல்லவமல்லன் காலத்திலும் போர்கள் ஒழிந்தபாடில்லை. இவன் காலத்தில் பாண்டி நாட்டில் அரிகேசரி பராங்குச மாறவர்மன் (கி.பி. 710-766) ஆண்டான். அவனுக்கும் பல்லவ மல்லனுக்கும் போர்கள் நடைபெற்றன. ஒரு சில இடங்களில் பல்லவரும் வெற்றி பெற்றனர். நந்திவர்மன் பரி வேள்வி யும் செய்தான் போலும்!

'தொடர்ந்து வந்த பல்லவ சாளுக்கியப் போரும் இவன் காலத்திலும் நடைபெற்றது. இவன் காலத்தில் வாழ்ந்த மன்னன் இரண்டாம் விக்கிரமாதித்தன் (735-746). இவர்களுடைய போர்கள் பற்றியும் இருவேறு கருத்துக்கள் உலவுகின்றன சிலவற்றில் பல்லவர் வென்றிருப்பர்: சிலவற்றில் சாளுக்கியர் வெற்றி பெற்றிருக்கக் கூடும். எப்படியாயினும், கலை வளர்த்த பல்லவர் பல்வேறு போர்களுக்கும் இன்னல்களுக்கும் இடையில்தான் தம் பணிபுரிந்தனர் என்பது கண்கூடு.

இம்மன்னன் சிறந்த வைணவன். காஞ்சியில் மற்றொரு வரலாற்று விளக்கமாக உள்ள வைகுண்டப் பெருமாள் கோயிலை அமைத்தவன் இவனே. இவன் பல கோயில்களைக் கட்டினான்; சைவ வைணவக் கோயில்களன்றி, சமணர்தம் படிமங்களும் செய்தான் என்பர். கல்வியிலேயும் இவன் சிறந்தவன். வடமொழி தமிழ் இரண்டையும் வளர்த்தான். பல மறையவர் இவனால் போற்றி வளர்க்கப்பட்டவராவர் பப்பதேவனால் தோற்றுவிக்கப்பட்டு, சிம்மவிஷ்ணு, மகேந்திரன் போன்றோரால் வளர்க்கப்பெற்ற பல்லவப் பேரரசு இவன் காலம் வரையிலேதான் உச்ச நிலையில் இருந்தது எனலாம். இவனுக்குப்பின் தந்திவர்மன், மூன்றாம் நந்திவர்மன் ஆகிய அரசர்கள் சிறந்துவிளங்கினார்கள் என்றாலும், பல்லவர் ஆட்சியின் நிலப்பரப்பு இவன் காலத்துக்குப்பின் குறுகிற்று என்றே கொள்ளல் வேண்டும்.

**தந்தியும் நந்தியும்:**

பல்லவ மல்லனுக்குப் பின் பட்டத்துக்கு வந்தவன் தந்திவர்மன் (774—825). இவன் இரட்டர்களுடன் பல முறை போரிட்டான். தெற்கே வரகுண பாண்டியன் இவன் காலத்திருந்தான்; அவனுடனும் போரிட்டான். இவன் காலத்திலும் தமிழ் நாட்டின் பல பகுதிகளிலும் கோயில்கள் கட்டப்பெற்றன. இவனுக்குப்பின் பட்டத்துக்கு வந்தவன் மூன்றாம் நந்திவர்மன். (825—850). இவன் தெள்ளாறெறிந்த நந்தி என்று சிறப்பிக்கப் பெற்றவன். ‘நந்திக் கலம்பகத்தால் மாண்ட கதை நாடறியும்’ என்ற உலகறிந்த நந்திக் கலம்பகத்தால் பாராட்டப் பெற்றவன் இவனே. இவன் மூவேந்தரிடமும்

வடபுலத்தாரிடமும் திறை பெற்றவன் எனப்போற்றப்படு கின்றான். ஒரு வேளை பாண்டியன் சில காலம் இவன் கீழ்ச் சிற்றரசனாய் இருந்திருப்பான் போலும்! நந்திக் கலம்பகத்தில் இவன் 'கழல் நந்தி' எனச் சிறப்பிக்கப்பெறு வதால் இவனைக் கழற்சிங்கநாயனார் என்பர் சிலர். அது ஆராய்தற்குரியதாகும் இவன் காலத்தில் பாண்டி நாட்டை ஆண்ட வரகுணன், சோழநாடு, நடுநாட்டுப் பகுதிகளைத் தன் கைக்கொண்டு வந்தவாசி வரையிலே வந்துவிட்டான், அவனைத் தெள்ளாற்றில் வெற்றி கண்டே நந்திவர்மன் 'தொள்ளா றெறிந்த நந்தி' யானான். எனினும், கைவிட்டுச் சென்ற சோழ நாடும் பிற பகுதிகளும் இவன் வசம் திரும்பிவந்தன என்பதற்குச் சான்றுகள் இல்லை. பல்லவர் பரம்பரையின் கடைசிக் கால எல்லையில் இவன் பேரரசனாய் விளங்கியவன் என்பதை நந்திக்கலம்பகத்தால் அறிகின்றோம்.[1] எனினும் பலர் இவனுக்குத் திறை செலுத்தவில்லை எனவும், அதன் கொடுமை கருதி இவன் இறைவனிடம் முறை யிட்டான் எனவும் இவன் காலத்தில் வாழ்ந்த சுந்தரர் தம் தேவாரத்தில் குறிக்கின்றார்.[2] மற்றும் இம்மன்னன் தம்பியே இவனுக்கு உட்பகையாய் அமைந்தான் என்பது நந்திக் கலம்பக வரலாற்றால் அறியக்கூடியது. பல்லவர் தமிழுக்காக உயிர்விட்ட பரம்பரையினர் என்ற புகழை உலகம் உள்ளளவும் தேடித் தந்து, நந்திவர்மன் தன் வாழ்நாள் எல்லையைக் கடந்தான்.

1. நந்திக்கலம்பகம், செய், 13, 28.

2. 'பல்லவர்க்குத்திறைகொடா மன்னவரை மறுக்கம் செய்யும், பெருமையால் புலியூர்ச் சிற்றம்பலத் தெம்பெருமானைப் பெற்றாம் அன்றே?'' (சுந்தரர் தேவாரம்)

## இறுதிப் பல்லவர்

மூன்றாம் நந்திவர்மனுக்கும் பின் சிறந்த பல்லவ மன்னரே இல்லை ' எனலாம். கி. பி. 900 வரையில் அம் மரபினர் ஆண்டார்கள் என்றாலும், அவர்கள் வலி ஒடுங்கிச் சிற்றரசர் போலவே வாழ்ந்தார்கள் என்று கொள்வது பொருந்தும். நந்திவர்மன் மகனான நிருப துங்கன் ஆளும்போது பகைவர் பலம் பெற்றனர் பல இடங்களில் இவன் பாண்டியருடன் போரிட்டான். அக் காலத்தில் சீமாறன் சீவல்லபன் (830-835) என்ற பாண்டியன் அரசாண்டான். நிருபதுங்கன் ஈழநாட்டுக் குப் படையெடுத்துச்சென்றான் என அறிகிறோம். இவனுக் குப்பின் அபராஜிதன் சில காலம் அரசாண்டான், இவ் விருவர் காலத்திலும் பல கோயில்கள் கட்டப்பெற்றன. அவற்றுள் ஒன்று திருத்தணிகைக் கோயிலாகும். கோயில் திருப்பணிகளுக்கும் பல்லவ மன்னர் இருவரும் நிறையத் தானம் செய்துள்ளனர். இவ்வாறு பப்பதேவன் காலந் தொடங்கி, சிம்மவிஷ்ணு வரையில் தமிழ்நாட்டு நிலை அறியாமலும் மகேந்திரன் தொடங்கி அபராஜிதன் வரை தமிழ்நாட்டு நிலை அறிந்தும் நலம் புரந்த பல்லவர் மரபு ஒன்பதாம் நூற்றாண்டின் இறுதியில் தன் நிலைகெட்டது எனலாம். தமிழ்நாட்டைப் பொறுத்த வரையில் இவர் களை அடுத்துத் தஞ்சையைத் தலைநகராக்கிக்கொண்டு விசயாலயன் என்ற மன்னன் வழிச் சோழர் பரம்பரை தலைதூக்கி நின்றது. அக்காலத்தில் உலகே தமிழ் மன்னரைப் போற்றிற்று எனலாம் அவர்களைக் காண்ப தன் முன் பல்லவர் கால மக்கள் வாழ்வையும் பிற இயல்பு களையும் காணல் பொருத்தமானதாகும்.

# XII. பல்லவர் காலத்துத் தமிழகம்

**முன்னுரை:**

பல்லவர் காலம் தமிழ் நாட்டு வரலாற்றில் ஒரு சிறந்த பொற்கால மெனக் குறிப்பிட்டோம். அக்காலத்தில் ஆண்ட மன்னர்களைப் பற்றியும் அவர்தம் பண்பு, கலை வளர்த்த சிறப்பு முதலியவற்றையும் கண்டோம். அக் காலத்தில் தமிழ்நாட்டு மக்கட் சமுதாயம் எந்த நிலையில் இருந்தது என்பது பற்றியும் அச்சமுதாயம் பல்லவர்தம் பணிகளால் எவ்வெவ்வாறு பலன் பெற்று ஏற்றமுற்றது என்பது பற்றியும் இங்கே காண்போம் பல்லவர்கள் பல்வேறு போர்களுக்கு இடையில் நாட்டைப் பண்படுத்தியவர்கள் என அறிந்தோம். அந்தப் போர்கள் ஓரளவு நாட்டின் அமைதியைக் குலைத்தன என்றாலும் அப்போர்களின் இடையிலேயும் பல கலையும், தொழிலும், பிறவும் வளர்ந்து சமுதாயத்துக்கு உறுதுணையாயின என்று கொள்ள வேண்டும்.

சங்க காலத்துக்குப்பின் பிற்காலப் பல்லவர் காலத்திலேயே தெளிந்த தமிழ்நாட்டை நம்மால் காண முடிகின்றது. இரண்டு காலங்களுக்கும் பலப்பல வேறுபாடுகளும் தெரிகின்றன. தொழிலால் வேறுபாடு கண்ட சங்க காலத்தினும் பிறப்பால் வேறுபாடு காணும் பல்லவர் காலம் சமுதாயத்தையே மாற்றி அமைத்துவிட்டது. திருநாவுக்கரசர், திருஞானசம்பந்தர் போன்ற சைவ அடியவர் தம் பிறப்பைப்பற்றி விளக்கிக் கூறவந்த சேக்கிழார், ஒருவரை அந்தணர் குலத்தவர் என்றும் மற்றவரை வேளாண் குலத்தவர் என்றும் குறிக்கின்றார். அந்தணர் குலத்தவராய்ப் பிறந்த அப்பூதி அடிகளார் வேளாண் குலத்தவராகிய நாவுக்கரசரை வீட்டுக்கு

அழைத்து வந்து ஒருசேர இருந்து உணவுண்டார். என்றும், அப்பரை அப்பூதியார் தெய்வமாகவே போற்றினார் என்றும் காட்டுகின்றார். திருநீலகண்ட யாழ்ப்பாணர் ஞானசம்பந்தரோடு பல இடங்களுக்குச் சென்று யாழ்வாசித்து ஒன்றி இருந்தமையையும் காண்கின்றோம். எனவே இக்காலத்தில் பிறப்பால் சாதி வேறுபாடுகள் தோன்றிவந்தன என்றாலுங் கூட, அவை சமுதாயத்தில் அத்துணை ஆழமாகப் பதியாமல் அனைவரும் கலந்து வாழும் வகையிலே அமைந்திருந்தன எனக் காண்கிறோம். எனவே, சமுதாய அடிப்படை, சாதியால் பிரிக்கும் வகையில் கொடுமையின் உச்சியை அடையவில்லை எனச் சொல்லலாம்.

## ஆட்சி முறை

பல்லவர் காலத்தில் நாடு ஆட்சிமுறை கருதிப் பல பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டிருந்தது. கோட்டங்கள். கூற்றங்கள். இராட்டிரங்கள் போன்ற பல பகுதிகள் இருந்தன. அவ்வப்பகுதிகளைக் கவனித்துக் கொள்ளும் பொறுப்பு மக்களிடம் இருந்தது எனலாம். சங்க காலத்தில் இருந்த அரச நெறிக்கும் இக்கால அரச நெறிக்கும் பெரு வேறுபாடு இல்லை. எனினும், நாட்டைப் பகுத்தாளும் முறையில் பலப்பல புதுப்பெயர்கள் இடம்பெறக் காண்கிறோம். அரசர்கள் அரச காரியங்களைத் தாமே நேரில் கவனித்தலும், பிறரை அதிகாரியாக நியமித்துக் கவனித்தலும் உண்டு. நாட்டு மக்களிடம் அரசர்கள் எளிமையாகப் பழகினார்கள் என அறியலாம். மக்கள் வாழ்க்கை முறைகளை நேரில்கண்டு அவ்வாழ்க்கைகளைச் சித்தரிக்கும் 'மத்தவிலாசப் பிரகசனம்' என்ற நூலை மகேந்திரன் எழுதினான் என அறிகிறோம். அந்நூல் வெறுஞ் சமய மாறுபாட்டுக் கருத்தால் எழுந்தது.

என்றாலும் அதில் அந்நாட்டு மக்களின் சமுதாய வாழ்வு நன்கு தெரிவதைக் காணலாம். பல்லவ மன்னர்கள் ஊர் தோறும் சென்று நல்லிடத்தை ஆய்ந்து கலைக்கோயில் கள் அமைத்தமையின் அவர்கள் மக்களுடன் நெருங்கிப் பழகியிருப்பார்கள் என்று எண்ண இடமுண்டு. கலை வல்ல நல்ல அறிஞர்களை நாடு முழுதும் தேடி அறிந்து கொண்டு வந்து, சிறந்த இடங்களில் கலைகளை வளர்த் தார்கள் என்பதை அறியும்போது அவர்கள் அக்கலைஞர் களோடு நன்கு பழகியிருக்க வேண்டும் எனக் கொள்ளல் வேண்டும். எனவே, மன்னன் மக்களோடு சாதாரண மாகக் கலந்து பழகி வாழ்ந்து நாட்டு நலம் புரந்து இன்பம் கண்டான் என அறியலாம்.

**கலை மலிந்த காலம்;**

அக்காலம் கலை மலிந்த காலம் எனக் கண்டோம். என்னென்ன கலைகள் அக்காலத்தில் வளர்ந்து சிறப் புற்றன? தேவாரம் போன்ற அக்கால இலக்கியங்களும் கோயில்களில் காணும் சிற்ப ஓவியங்களும், பிற அமைப்புக்களும் அந்தக் காலக் கலை நலத்தை நமக்கு விளக்கும். ‘கல்வியே கரை இலாத காஞ்சிமா நகர்’ என்று அப்பர் காஞ்சி நகரைக் குறிக்கின்றார் கற்றார் வாழ் காஞ்சியாக அது அந்தக் காலத்தில் விளங்கியது என்பது உண்மையன்றோ! அக்காலத்தே சீன நாட்டிலிருந்து வந்து காஞ்சியின் நலம் கண்ட சீன யாத்திரிகன் யுவான் சுவாங் அதன் கல்வியின் சிறப்பைப் பற்றிப் பாராட்டியுள்ளான். காஞ்சியில் உள்ள கைலாசநாதர் கோயிலும், வைகுண்டப் பெருமாள் கோயிலும், அவற்றில் உள்ள கலைச் சிற்பங் களும் பல்லவர்தம் பெருமையைப் பலபடப் பாடிக் கொண்டே இருக்கின்றன. காஞ்சியில் மட்டுமன்றிப் பல பேரூர்களிலும் சிற்றூர்களிலும் கல்வி நிலையங்கள் இருந்

திருக்க வேண்டும் என்பது நாட்டு நிலையால் நமக்கு நன்கு விளங்குகின்றது. கல்வியேயன்றி, இசை, நாடகம் போன்ற கலைகள் நாட்டில் வளர்ச்சி பெற்றுள்ளன என்பதையும், சித்திரங்களும், பிற இசை நூல்களும் நன்கு காட்டுகின்றன. தேவாரத்தில் பலப்பல இசைக் கருவிகள் பேசப்படுகின்றன. சங்க காலத்தில் இருந்த குழலும் யாழும் தவிர்த்து வேறு எத்தனையோ வகையான இசைக் கருவிகள் இக்காலத்தில் வழக்கத்தில் உள்ளன,[1] நடன நிலையில் சிற்சில கல் உருவங்கள் செதுக்கி இருப்பதும், வண்ணங்கள் கொண்டு ஓவியங்கள் தீட்டி இருப்பதும் நடனக்கலை சிறந்திருந்தமைக்குச் சிறந்த சான்றுகளா கும் சில கோயில்களில் நடனமாடுவது போன்று பெருஞ் சிலைகள் காட்சியளிப்பதைக் கண்டு வியக்கத் தோன்றும். இயலும், இசையும், நாடகமும் கலந்த கல்வி முறை பல்லவர் காலத்தில் சிறந்து விளங்கியது என்பதை டாக்டர் மீனாட்சி அவர்கள் தம் நூலில் தெள்ளத் தெளியக் காட்டுகின்றார்.[2] பல்லவர்காலத்தில் கற்கள் கதை பேசின, இசை பாடின; தோகை விரித்தாடின, சுதி கூட்டின. இன்னும் இவ்வாறு எத்தனையோ வகையில் பாறைகளும் அவற்றில் குடைந்தெடுக்கப்பட்ட கற்களும் பல வகையில் பல்லவர் காலத்தில் கலைஞர்தம் செவ்விய கைவண்ணத் திறனால்—சிற்பியின் செய வாற்றும் முறையால்—சிறந்து விளங்கின என்பதைத் தமிழ்நாட்டு வரலாற்றை எண்ணும் ஒவ்வொரு

1. சல்லரி யாழ் முழவ மொந்தை குழல் தாளம இயம்ப
—சம்பந்தர், தோணிபுரம்-2

கத்திரிகை துத்திரி கறங்குதுடி தக்கையொ டிடக்கை படகம் —சம்பந்தர், திருவேதவனம்-5

2. Administration & Social Life under Pallavas, by Dr. Meenakshi.

வரும் அறியாதிரார். மறைந்த பல்லவரை வாழ வைத்த அந்தக் கற்கள் — பாறைகள் — அவற்றின் சிற்பங்கள் 'நீடு வாழ்க' என வாழ்த்தி மேலே செல்லலாம்.

**பல்லவர் காலத்துத் தமிழகம்**

பல்லவர் காலத்தில் நாடு பல்வேறு வகைகளாக ஆட்சி முறைக்காகப் பிரிக்கப்பட்டிருந்தது. பெரு நாடுகள் இராட்டிரங்களாகவும் (மண்டிலம்), ஒவ்வொரு இராட்டிரமும் பல விடயங்களாகவும் (கோட்டங்கள்) விடயங்கள் இன்னும் சிறு பிரிவுகளாகவும் பிரிக்கப் பெற்றிருந்தன. அவர்கள் காலத்தில் கோட்டம், நாடு, ஊர் முதலிய பெயர்களும் வழக்கத்தில் இருந்தன என அறிகின்றோம். எனவே, பல்லவ மன்னர் ஆளும் நலத்திற்கு ஏற்ப நாட்டைப் பல்வேறு வகையில் பிரித்து நல்ல வகையில் அரசாண்டார்கள் எனக் கொள்ளல் வேண்டும். சங்க காலத்தில் இருந்தது போன்றே அரச முறையிலும் தந்தைக்குப்பின் மகன் என்ற முறையே பெரும்பாலும் கையாளப்பெற்று வந்தது. சங்க காலத்தில் தமிழ் மன்னர்கள் கொண்டிருந்தமை போன்றே பல்லவரும் கொடியும் இலச்சினையும் பிற சிறப்பியல்புகளும் பெற்றிருந்தனர். பல்லவர் கொடி 'நந்திக் கொடி'. இலச்சினையும் அதுவேயாகும். நந்தி யிலச்சினையைக் கொண்டே பல்லவருள் பெரும்பாலோர் சைவராய் இருந்தனர் எனக் கொள்ளலாம். வைணவ சமயத்தைச் சார்ந்த சிலரும் அதே கொடியும் இலச்சினையும் கொண்டிருந்தார்கள் என்பதையும் அறிய வேண்டும். சங்க காலத்தில் இருந்தமைபோன்றே பல்லவர்தம் அரசியல் காரியங்களைக் கவனிக்கப் பல உட்படுகருமத் தலைவரும் இருந்தார்கள் எனக் காண்கின்றோம். அரண்மனையில் அரசரையும் அவர்தம் உரிமைச் சுற்றத்தாரையும் ஓம்பும் பணியாளரும், நாட்டு மக்களிடம் கடமையைச் செய்யும் பணியாளரும், பற்பல வகையில் பற்பல விதமாகப் பல்லவர் ஆட்சியில் பணி புரிந்து நின்றனர் என்பது கல்வெட்டுக்களாலும் சாசனச்

செப்பேடுகளாலும் பிறவற்றாலும் நன்கு தெளிவாகின்றன.

**ஊராட்சி:**

பல்லவர் காலத்தில் மக்கள் தெளிந்த அறிவுடையவராய் நலம் பெற்றிருந்தனர் எனலாம். சங்க காலத்துக்குப்பின் பல்வேறு வேற்று மன்னர்தம் ஆட்சிக்குட்பட்டு அல்லலும் அவதியும் உற்ற தமிழ் மக்கள், பிற்காலப் பல்லவர் ஆட்சியில் நலம் பல பெற்று நன்கு வாழ்ந்தனர் எனலாம். நாட்டை மாற்றாரிடமிருந்து காக்க நல்ல படை வலிமை பெற்று விளங்கியவர் பல்லவர் என்பதை மேலே அவர்தம் வரலாற்றில் வந்த போர் முறைகளால் அறிந்தோம். இடையிடையே போர் பல நிகழினும் மக்கள் அப்போர்களால் அல்லல் அடையாதபடி பல்லவர் ஒல்லும் வகையில் பாதுகாத்து வந்தனர். மன்னர் ஆட்சியாயினும் ஊர்ச் சபைகள் மக்கள் தேவைகளை நிறைவு செய்தன. ஊராட்சி மன்றங்களும் அவற்றின் உட்கழகங்களும் தத்தம் ஊர்களில் ஆட்சிப் பொறுப்பை ஏற்றுத் திறம்படச் செயல் புரிந்தன என்பதைக் கோபாலன் அவர்கள் தம் நூலில் நன்கு விளக்குகின்றார்[1] சிற்றூர்கள் இவ்வாறு ஆளப்பெற, அந்த அடிப்படையிலேயே பேரூர்களும் அரசும் நிருவகிக்கப் பெற்றன எனலாம்.

**மக்கள் பணி:**

நிலம் நன்கு பகுக்கப்பட்டு மக்களுக்கு வழங்கப்பட்டது எனலாம். மக்கள் பயிரிடத்தக்க வகையில் பல ஏரிகள் வெட்டப்பெற்று நீர்ப்பாசனத்துக்கு வழித்துறைகள் காணப்பெற்றன. பெரும்பிடுகு வாய்க்கால், வைரமேகன் வாய்க்கால், திரையன் ஏரி எனும் தென்னேரி, பரமேச்சுர தாடகம். மாற்பிடுகு ஏரி போன்றவை அவற்றிற்குச்

1. Pallavas of Kanchi, pp. 154-156

சான்று பகர்கின்றன. நிலமும் ஒழுங்காக அளக்கப் பெற்றுத் தரத்திற்கு ஏற்ப வரி விதிக்கப் பெற்றிருந்தது சில ஊர்கள் தானமாகக் கொடுக்கப்பெற்று வரிவிலக்கு அளிக்கப் பெற்றன. நிலவரியே யன்றிப் பல்லவர் காலத்தில் பல்வேறு வரிகள் நாட்டில் இருந்தன. நீர்ப்பாசன வசதிகள் கெடாது நிலைத்த வகையில் உதவப் பல ஏற்பாடுகள் செய்யப் பெற்றன. நீட்டல், முகத்தல், நிறுத்தல் போன்ற அளவை வகைகளும் செப்பம் செய்யப்பெற்று இருந்தன. பல்லவர் காலத்தில் நாணயங்கள் நன்கு புழக்கத்தில் வந்துள்ளன. அவை 'நந்தி' முத்திரையிட்ட காசுகளாய் இருந்தன. அத்துடன் அரசர்தம் சிறப்புப் பெயர்களையும் அவை தாங்கி நின்றன போலும்! இவ்வாறு பல்லவர், மக்களுக்குப் பல்வேறு வகையில் பொருளாதாரம் வளர்ச்சிபெறும் வகையில் உதவி வாழ்ந்தார்கள்.

**நிலைப்பிய வளர்ச்சி:**

பல்லவர் காலத்தில் கல்வியும் கலைகளுங்கூட வளர்ச்சியுற்றன. பல்வேறு இடங்களில் பல்லவர் தீட்டியுள்ள ஓவியமும் செதுக்கியுள்ள சிற்பமும் அவை அக்காலத்தில் இருந்த ஏற்றத்தையே எடுத்துக் காட்டுகின்றன. இன்றும் அவை அழியா வகையில் நம்முன் நின்று பல்லவரை வாழ்த்துகின்றன. காஞ்சியிலும் பாகூரிலும் பல்லவர் வடமொழிக் கல்லூரிகளை அமைத்திருந்ததையும் காண்கின்றோம். பிராமணர்களுக்கு ஊர்களைத் தானம் செய்து வடமொழியை நன்கு வளர்த்தனர் ஆதி பல்லவர். எனினும் பிற்காலப் பல்லவர் தமிழ்மொழியையும் நன்கு வளர்த்தனர் எனலாம். அவர்கள் காலத்திலே தான் தேவாரம், பிரபந்தம் போன்ற இலக்கியங்களும், யாப்பிலக்கண அணி இலக்கண நூல்களும், பாரத வெண்பா, நந்திக் கலம்பம் போன்ற இலக்கிய நூல்களும், சிவத்தளி வெண்பா முதலிய சமய நூல்களும், பிற தமிழ் இலக்கியங்களும் தோன்றின.

இன்னும் இசை, நடனம், நாடகம் பற்றிய சிறு சிறு நூல்கள் தோன்றிய காலமும் அதுவே. இசையையும், நட

னத்தையும் பேணிப் பாதுகாத்து வளர்த்த பெருமை பல்லவருக்கே உண்டு. நடன நிலைகளைச் சிற்றுளியால் கல்லில் செதுக்குவித்து அவை நிலைகெடாத ஆசிரியர்களைப் போன்று பின் வருவோர்க்கெல்லாம் பாடம் கற்பிக்கும் வழியில் உதவிய பல்லவர் தொண்டைப் போற்றத்தானே வேண்டும்! தேவாரத்தில் வரும் எத்தனையோ இசைக் கருவிகளைப் பற்றி இன்று நம்மால் நினைத்துப் பார்க்கக்கூட முடியவில்லை. அதே போன்று தேவாரப் பண்களைப் பற்றித் திட்டமாக அறியவும் முடியவில்லையே! இவையெல்லாம் அக்காலத்தில் இசை சிறந்த நிலையில் விளங்கி இருந்தது என்பதையன்றோ காட்டுகின்றன! கோயில்களிலே அமைக்கப் பெற்ற நடன உருவங்கள்தாம் எத்தனை!

**சமய நிலை:**

இவ்வாறு கலைகளையும் கல்வியையும் போற்றி வளர்த்த பல்லவர்கள் சமயத்தையும் வளர்த்தவர்கள் என்பதை ஒவ்வொருவர் தனித்த வரலாற்றிலும் கண்டோம். சைவம், வைணவம் என்ற இரு சமயங்களையும் தூக்கி நிறுத்திய பெருமை அவர்களுடையதே. அத்துடன் ஓரிருவர் தவிர மற்றவர்களெல்லாம் பௌத்த சமணத்தையும் வெறுக்காது அவைகளுக்கும் ஆக்கம் அளித்து வந்தார்கள் என்பதும் புலனாகின்றது. கோயில்களின் அமைப்பை உருவாக்கிய பெருமை பல்லவர்களுடையதே. கருங்கற்பாறைகளைக் குடைந்தும் அகழ்ந்தும் கோயிலாக்கியும், பின் அக்கருங்கற்களைப் பிளந்தெடுத்துக் கோயில் கட்டியும் சமயத்தோடு கலையையும் பிறவற்றையும் வளர்த்தவர். பல்லவர் முதல் முதல் கல்வெட்டுக்களையும் செப்புப் பட்டயங்களையும் உருவாக்கி, அவற்றை வரலாற்றில் வாழ வைக்கும் துணைக் கருவிகளாக்கிய பெருமையும் அவர்களுடையது. இவ்வாறு எல்லா வகையிலும் தமிழ் நாகரிகம் முதலியவற்றையும் பேணிப் பாதுகாத்துத் தந்த பல்லவர் வரலாறு தமிழ்நாட்டு வரலாற்று ஏடுகளில் முக்கிய இடம் பெறுவது திண்ணம்!

# XIII. பிற்காலச் சோழர் எழுச்சி

## I

## இராசராசனுக்கு முன்

அறிய உறவுவன:

இலக்கியங்களைக் கொண்டு ஆராய்ந்த வகையில் சங்க காலம் தமிழ்நாட்டு வரலாற்றில் சிறந்த காலம் என அறிந்தோம். சங்க காலத்துக்குப் பின் பல்லவர் ஆட்சியில் தமிழ்நாடு ஏற்றம் பெற்றது என்பதும் வரலாற்று உண்மையாகும் எனினும், அவற்றிற்கெல்லாம் மேலாக, தமிழ்நாட்டு வரலாற்றிலேயே எல்லா வரலாற்று மூலங்களும் நன்கு எடுத்துக் காட்டிய ஒரு சிறந்த காலம் இப் பிற்காலச் சோழர் காலமேயாகும். இக்காலத்தில் எழுந்த கல்வெட்டுக்கள் கணக்கில. நினைக்க முடியாத அளவில் பெரும் பெருங்கோயில்கள் எழுந்த இக்காலத்தில், கோயில் மதிற் சுவர்களெல்லாம் வரலாற்றைக் கூறும் ஏடுகளாக மாறிவிட்டன. பல்லவர் காலத்தில் மன்னவர்களே பட்டயங்கள் ஏற்படுத்திக் கொண்டது போல அன்றிப் பாமரரும் பிறருங்கூட இக்காலத்தில் கல்வெட்டுக்கள் வெட்டி வைத்துள்ளனர். ஒரு சிறு தானத்துக்குங் கூடத் தானம் சாசனம் உண்டு. அந்தத் தானத்தைக் கொடுத்தவன் கோயில் மதிற்சுவரில் அத்தானத்தைப் பற்றியும், அதைச் செயலாற்ற வேண்டிய முறை பற்றியும், அத்தானத்தைச் செய்யத் தவறினால் வரும் தீங்கு பற்றியும் குறித்திருப்பான். அவற்றிற்கெல்லாம் முன்னாக அத் தானம் செய்யப்பட்ட ஆண்டைக்

குறிக்க வேண்டுமன்றோ? அந்த ஆண்டுக் குறிப்பில் தான் பல வரலாற்று உண்மைகள் பொதிந்து கிடக்கும் இன்ன வேந்தர் தம் ஆட்சிக் காலத்தில் இத்தனையாவது ஆண்டில் செய்யப்பட்ட தானம் அது என மேலே தீட்டப் பெற்றிருக்கும். இன்ன பெயருடைய வேந்தன் என்னும் போது அவ்வேந்தனது வெறும் பெயரை மட்டும் குறிக்காது, அவன் பட்டம் பெற்று அதுவரை ஆற்றிய செயல் களையெல்லாம் ஒன்றன்பின் ஒன்றாக அழகுபடத் தொகுத்து, பாமாலை போன்று உருவாக்கிப் பின் அத்தகைய வீரமும் நலமும் செறிந்த வெற்றி வேந்தனது ஆட்சி ஆண்டு இத்தனையாவதில் இன்னான் இன்ன வகைக்குச் செய்த அறம் எனக் குறித்திருக்கும். அவ்வாறு அரசர்தம் சிறப்புக்களையெல்லாம் கூறும் பகுதியை வரலாற்றாளர் 'மெய்க்கீர்த்தி' என்பர். அந்த மெய்க் கீர்த்திகளே இந்தப் பிற்காலச்சோழர்தம் பெருமையை யும், ஆற்றலையும்,வீரத்தையும்,பிற சிறப்பியல்புகளையும் எடுத்துக் காட்டிக் கொண்டே இன்னும் அழியாவகையில் கோவில்களில் இடம்பெற்றுள்ளன.

**எது மெய்க்கீர்த்தி?**

இம் மெய்க்கீர்த்திகள் ஒவ்வோர் அரசனுக்கும் ஒவ் வொரு வகையில் அமைந்திருக்கும். பெரும்பாலும் ஒரு அரசனுடைய மெய்க்கீர்த்தி ஒரே வகையில் தொடங்கப் பெற்றிருக்கும். சிலருக்கு ஒன்றுக்கு மேற்பட்ட தொடக்கத் தொடர்கள் இருப்பதும் உண்டு. உதாரணமாக முதலாம் இராசராசன் மெய்க்கீர்த்திகள் 'திருமகள் போல' எனத் தொடங்கும். இராசேந்திரன் மெய்க்கீர்த்திகள் 'திருமன்னி வளர' என்றும், இராசாதிராசன் மெய்க் கீர்த்திகள் 'திங்களேர் தரு' என்றும் தொடங்குவன. இந்த மெய்க்கீர்த்திகளின் வரிகள் ஒரே அளவில் முடிவுற்றன

வாக இருக்கமாட்டா. ஆட்சி ஆண்டைக் குறித்தே கல்வெட்டுக்கள் பொறிக்கப் பெறுகின்றமையின், ஒரு வேந்தனது ஆட்சித் தொடக்கத்தில் இருக்கும் மெய்க்கீர்த்தியைக் காட்டிலும் பிற்காலத்தில் உள்ள மெய்க்கீர்த்திகள் நீண்டே இருக்கும். அந்தந்த ஆட்சி ஆண்டிற்குள் அவனவன் செய்துள்ள செயல்கள் அனைத்தையும் அம் மெய்க்கீர்த்திகள் தாங்கி நிற்கும். இவ்வாறு சிறந்துள்ள மெய்க்கீர்த்திகளுக்குப் பன்னிரு பாட்டியலில் ஓர் இலக்கணமும் கற்பித்து விட்டனர்.

> 'சீர்நான் காகி ரெண்டடிற் றொடையாய்
> வேந்தன் மெய்ப்புகழ் எல்லாம் சொல்லியும்
> அற்றத்து அவன் வரலாறு சொல்லியும்
> அவனுடன் வாழ்கெனச் சொல்லியும் மற்றவன்
> இயற்பெயர்ப் பின்னர்ச் சிறக்க யாண்டொடுந்
> திறப்பட உரைப்பது சீர்மெய்க் கீர்த்தி'

என்பது இலக்கணம். இதிலே இம்மெய்க்கீர்த்தியின் மூலம் அரசனது புகழையும் வரலாற்றையும் பட்டத்து அரசியையும், பின் அவன் இயற்பெயரையும் அறிய வழியுண்டு என அறிகிறோம். எனவே, தமிழ் நாட்டு இடைக்கால வரலாற்றை அறிய இம்மெய்க்கீர்த்தியே சிறந்த வழிகாட்டியாய் அமைந்தது எனலாம்.

**கல்வெட்டுக்கள் வெளி வர வேண்டும்:**

ஆங்கிலேயர் ஆட்சிக் காலத்தில் தொல்பொருள் ஆய்வுச்சாலை ஒன்றை அமைத்தனர். நிலத்துள் மறைந்து கிடக்கும் பல பழைய பொருள்களைத் தோண்டி எடுத்து அவற்றின் தொன்மையையும் அதனால் துலங்கப் பெறும் வரலாற்று உண்மையையும் உலகுக்கு எடுத்துக்காட்டினர். அதைப்போன்றே கோயில்களிலும் பிற இடங்களிலும் தீட்டப்பெற்ற அந்தக் கல்வெட்டுக்களை ஆராய்ந்து படி

எடுத்து உருவாக்கி அவற்றில் உள்ளதை அறிய முயன்று அதில் வெற்றியும் பெற்றனர். பல ஆயிரக்கணக்கான கல்வெட்டுக்கள் எடுக்கப்பெற்றன. ஒவ்வோர் ஆண்டிலும் சிற்சில பகுதிகளை அரசாங்கத்தார் வெளியிட்டு வந்தனர். அவற்றால் அறியப்பெற்ற உண்மைகள் அளப்பில. எனினும், அந்த வெளியீட்டு முறை கடந்த சில ஆண்டுகளாக நிறுத்தப் பெற்றது எனலாம். போர் காரணமாகப் படி எடுப்பதும், கல்வெட்டுக்களைத் தொகுத்து வெளியிடுவதும், அவற்றின் குறிப்புக்களை ஆய்ந்து காண்பதும் ஒரு வேளை நிறுத்தப் பெற்றிருக்கலாம். ஆயினும், உரிமை பெற்ற நம் நாட்டிலே அதற்காக ஒன்றுமே செய்யவில்லை. *கடந்த பதினோர் ஆண்டுகளாகப் படி எடுத்த தகல்வெட்டுக்கள் எத்தனை? எடுத்த கல்வெட்டுக்கள் ஏன் தொடர்ந்து வெளியிடப் பெறவில்லை? இப்பகுதி இந்தியா அரசாங்கத்திடம் இருக்கின்றமையின், அது நன்கு இப் பகுதி தொழிற்பட ஆவன செய்ய வேண்டும். தமிழ்நாட்டுக் கல்வெட்டுக்கள் அனைத்தும் வெளியிடப் பெறின், இந்நாட்டைப் பற்றியும், பிற இயல்புகள் பற்றியும் எண்ணற்ற பல உண்மைகள் வெளியாகக்கூடும். வரலாற்று மாணவர்கள் அவற்றின் வழி நிலைத்த பயன் பெறுவார்கள். அத்துறையில் இந்திய அரசாங்கம் கருத் திருத்த வேண்டும் என்று கூறி மேலே செல்லலாம்.

பஞ்சம் வேந்தர்:

சங்க காலத்தில் தலைசிறக்க வாழ்ந்த சோழர்குலம் சுமார் ஐந்தாறு நூற்றாண்டுகளுக்கு மேல் தலை தூக்காது இருக்குமிடம் தெரியாது காலம் கழித்தது எனலாம். கி.பி. ஆறாம் நூற்றாண்டிற்குப்பின் தெற்கே பாண்டிய

* முதற்பதிப்பு வந்த ஆண்டு

ரும் வடக்கே பல்லவரும் தலை தூக்கித் தமிழ் நாட்டை ஆண்ட காலத்தே, சோழர் வலிகுன்றிச் சிற்றரசராய் இருந்தனர். எனினும், நந்திவர்மனுக்குப் பின் சிறந்த பல்லவ வேந்தர் இல்லை என்பது கண்டோம். தெற்கே பாண்டிய நாட்டிலும் சீமாறன் சீவல்லபன் இறக்க, இரண்டாம் வரகுணன் பட்டத்துக்கு வந்தான். அக் காலத்திலேதான் சோழன் விசயாலயன் தஞ்சையைத் தலைநகர் ஆக்கிக்கொண்டு தலைநிமிர ஆரம்பித்தான். புகார் என்னும் காவிரிப்பூம்பட்டினம் கடலால் கொள்ளப் பட்ட பின் சோழர் திருச்சியை அடுத்து உரையூர், பழை யாறை, திருவாரூர் முதலிய இடங்களை அரசிருக்கை யாக்கிக்கொண்டு வாழ்ந்தனர் என்றும், ஒன்பதாம் நூற்றாண்டின் இடைக்காலத்திலேதான் விசயாலயன் தஞ்சையைத் தலைநகராக்கிக்கொண்டு தலைநிமிர்ந்தான் என்றும் வரலாற்று ஆசிரியர்கள் கண்டுள்ளனர். விசயால யனால் புதுப்பிக்கப்பட்ட இப்பரம்பரை, தமிழ் நாட்டுக்கு நிலைத்த புகழைத் தேடித்தந்த பெரும் பரம்பரையாய்த் திகழ்கின்றது

**விசயாலயன்:**

விசயாலயன் கி.பி.846ல் பட்டத்துக்கு வந்தான். அவன் பல்லவருக்கு உற்ற நண்பனாயிருந்தான். அப்போது காஞ்சியில் நிருபதுங்கப் பல்லவன் அரசாண் டிருந்தான் என்பர். இருவரும் தத்தம் வலி குன்றியிருந்த காரணத்தால் ஒருவரை ஒருவர் நண்பராகக் கொண்டு உதவி பெற்றிருக்கலாம். அதுகாலை பாண்டிய நாட்டில் மாறவர்மன் அரசனாயிருந்தான் அவன் சோழர்மேற் படை எடுத்தான் போலும்! விசயாலயனும் நிருபதுங் கனும் சேர்ந்து கி.பி. 1854இல் பாண்டியன் மேல் போர் தொடுத்து வெற்றியும் பெற்றனர். இவ்வெற்றி சோழர் எழுச்சிக்கு வித்தாய் அமைந்தது.

பின்பு கி.பி. 862இல் பாண்டியன்மாறவர்மனும் பல்லவன் நிருபதுங்கனும் வாழவில்லை. இரண்டாம் வரகுணன் பாண்டி நாட்டு மன்னனாகி அரியணை ஏறினான். நிருபதுங்கனுக்குப்பின் காஞ்சியில் அபராஜித் தன் அரசனாயினான். சோழன் விசயாலயன் வயதாகி வலி குன்றியிருந்தான். அவன் மகன் ஆதித்தன் கி.பி. 871இல் பட்டம் எய்தினான். தந்தை வயதானவரானமையின், அவன் இருக்கும் போதே அரியணை ஏறி, மாற்றாரை ஒடுக்க முயன்றான் கி.பி. 880ல் பாண்டியன் வரகுணன் சோழநாட்டின்மேல் படை எடுத்து, 'இடவை' -யைத் தாக்கினான். ஆதித்தன் எதிர்த்துப் போரிட்ட போதிலும் அவன் நாடு பலவகையில் இன்னலுற்றது எனலாம். பின்னர் ஆதித்தன் பல்லவன் அபராஜிதனையும் முதலாம் பிருதிவிபதியாகிய கங்க வேந்தனையும் துணையாகக் கொண்டு பாண்டியனை எதிர்த்துத் திருப்புறம் பயத்தில் போர் தொடுத்தான். இத்திரும்புறம்பயப் போரே இடைக்கால வரலாற்றில் முக்கிய இடம் பெற்றது. முதலாம் பிருதிவிபதி போர்க்களத்தில் இறந்தான். எனினும், பாண்டியன் வெற்றி பெறவில்லை. சோழ பல்லவர் முன் நிற்கமாட்டாது பாண்டியன் வரகுணன் தோற்று ஓடினான் அவ்வெற்றியே சோழர் வளர்ச்சியின் தொடக்கமாயமைந்தது. பின்பு வரகுணன் சிலகாலம் வெளிவரவில்லை எனலாம். அபராஜிதன் சோழநாட்டை ஆதித்தனுக்கு அளித்துக் காஞ்சிபுரம் சென்றான். பின், ஆதித்தன் தன் நாட்டு எல்லையைச் சிறிதுசிறிதாகப் பெருக்கிக்கொண்டான். பாண்டியரும் பல்லவரும் தாழச்சோழப் பேரரசு தஞ்சையில் தலை தூக்கிற்று இவ்வாறு சோழப் பேரரசு வளர, திருப்புறம்பயப் போர் தமிழ்நாட்டு வரலாற்றில் ஒரு திருப்பு மையமாய் அமைதது எனலாம்

### ஆதித்தன்:

ஆதித்தன் கி.பி 872முதல் முதல் 907வரை அரசாண்டான். இவன் காலத்தில் தொண்டை நாடு முழுவதும் இவன்கீழ்வந்தது எனலாம். 'தொண்டை நாடு பரவின சோழன்' எனவே இவன் வழங்கப்பெற்றிருக்கின்றான். தொண்டை நாட்டில் திருக்கழுக் குன்றம் முதலியவூர்களில் இவன் கல்வெட்டுக்கள் உள்ளன. அபராஜிதனுக்குப் பின் பல்லவர் பரம்பரையில் யாரும் இன்மையின் தொண்டை நாடு முழுதும் இவன்கீழ் உற்றது இயல்பேயாகும். இவனுக்குச் சேர மன்னன் தாணுரவி உற்ற நண்பனாய் இருந்தான். மேற்கே உள்ள கொங்கு நாட்டையும் ஆதித்தன் தன் கீழ்ப்படுத்திக் கொண்டான். எனவே சோழ நாட்டு எல்லை விரிந்தது. தன் விரிந்த நாட்டில் ஆதித்தன் பல கோயில்கள் கட்டினான். இச்சோழர் பரம்பரையினர் அனைவரும் சைவரே யாவர்; எனினும், பிற சமயங்களில் மாறுபாடு கொண்டவரல்லர். சோழருள் சிலர் வைணவத்தை வெறுத்திருக்கலாம். இவர்கள் காலத்தில் பௌத்தம் சமணம் இரண்டும் நிலைபெற்று இல்லாமையின், சைவம் வைணவம் என்ற இரு சமயங்களே நாட்டில் எங்கும் பரவி நிறைந்திருந்தன. ஆதித்தன் பல சிவன் கோயில்களைக் கட்டினான். இவனது பட்டத்தரசி பல்லவகுலத்தில் பிறந்த திரிபுவனமாதேவி என்பாள். அக்குலத்தில் பெண் கொண்டமையே அபராஜிதனை இவனோடு நண்பனாய் இருக்கச் செய்தது; பின்பு தொண்டை நாட்டையும் கொள்ள வைத்தது. அவ்வரசி கோயில்களுக்குப் பலவகையில் தானம் செய்தாள் அவர்களுக்குப் பராந்தகன், கன்னரதேவன் எனும் இருவரும் புதல்வர்; அவர்களுள் பராந்தகனே அடுத்துப் பட்ட மெய்தினான். தமிழ் நாட்டு வடஎல்லை வரையில்

ஆதித்தன் ஆட்சி பரவி இருந்தது. காளத்திக்கு அருகில் உள்ள தொண்டைமான் பேராற்றில் கி. பி. 907 இல் ஆதித்தன் இறக்கப் பராந்தகன் பட்டமெய்தினான்.

**பராந்தகன்:**

பராந்தகன் நெடுங்காலம் (கி. பி. 907.943) அரசாண்டான். இவன் சோழ நாட்டு எல்லையை மேலும் பெருக்கினான். சோழ நாடு, தொண்டை நாடு, கொங்கு நாடு மூன்றும் இவன் ஆணையின் கீழ் இருந்தன. இவன் பாண்டி நாட்டின்மேல் படையெடுத்தான் இவன் 'மதுரை கொண்ட கோப்பரகேசரி' என்ற சிறப்புப் பெயர் பெற்றமையின், கி. பி 910இல் மதுரையைக் கைக் கொண்டவன் எனலாம், அப்போது மதுரையில் மூன்றாம் இராச சிம்மன் அரசாண்டான். பராந்தகன் அவனை வென்றான். எனினும், பாண்டியன் ஈழமன்னன் ஐந்தாம் காசியபன் துணையை நாட, அவனும் பெரும் படை அனுப்பினான். பாண்டியன் படையும் சோழர் படையும் வெள்ளூரில் எதிர்ந்தன எனினும், பராந்தகனே மீண்டும் வெற்றி பெற்று மதுரை கொண்டான். இச்செய்திகளை ஈழநாட்டு வரலாறுகளும், மகாவமிசமும், இரண்டாம் பிருதிவிபதியின் செப்பேடுகளும் குறிக்கின்றன. மேலும் இராசசிம்மனது சின்னமனூர்ச் செப்பேடுகள் அப்பாண்டியன் வெற்றியைப் பாராட்டுகின்றன. இவற்றால் பாண்டிய சோழருக்குள் பல போர்கள் நடந்திருக்க வேண்டுமெனவும், ஒன்றில் பாண்டியன் வெற்றி பெற்றிருக்கக்கூடும் எனவும் அறிய வேண்டியுள்ளது. இறுதியாகிய வெள்ளூர்ப் போர் 919இல் நடைபெற்றதாக வேண்டும் என்பர் ஆய்வாளர் [1]

1. பாண்டியர் வரலாறு—சதாசிவபண்டாரத்தார், பக். 36

தமிழ் நாடு முழுவதும் தன்கீழ்க் கொணர்ந்தான் பராந்தகன். தோற்ற இராசசிம்மன் ஈழநாடு சென்று மறுபடியும் படை வேண்டினான். ஆண்டிருந்த ஈழநாட்டு மன்னன் நான்காம் தப்புலன் மறுக்கவே தன் முடியையும் பிற சின்னங்களையும் அவனிடம் ஒப்படைத்து, தாய் வானவன் மாதேவியோடு சேர நாடு சென்று தங்கி விட்டான். பராந்தகன் மதுரை சென்று விஜயா பிடேகம் செய்துகொள்ள முயன்ற காலை முடியும் பிறவும் காணாமையின், உற்றது அறிந்து, ஈழமன்னனை அவற்றைத் தரவேண்டினான். ஈழமன்னன் தரமறுக்கவே. சோழர் படை ஈழம் சென்று, உள்நாட்டில் புகுந்து தென்கிழக்குப் பகுதிவரையில் தன்கைக் கொண்டது. அதற்கு மேல் ஈழமன்னன் இருந்த பகுதிக்குச் செல்ல முடியாது திரும்பிற்று. எனினும், பராந்தகன் 'மதுரையும் ஈழமும் கொண்ட கோப்பரகேசரி' யானான். இந்தச் சோழர்கள் தம்மைப் பரகேசரி என்றும் இராசகேசரி என்றும் வழங்கிக்கொள்வர் தந்தை பரகேசரியாயின் மகன் இராச கேசரி என்ற முறையில் அவை செல்லும்.

வடக்கே நெல்லூர், இட்டி முதலிய பகுதிகளையும் பராந்தகன் 34-ஆம் ஆட்சி ஆண்டில் (கி. பி. 941) வென்று கொண்டான். வடக்கே வலுவுற்றிருந்த இராட்டிரகூட மன்னனாகிய இரண்டாம் கிருஷ்ணன் தன் மகள் இளங்கோப் பிச்சியைப் பராந்தகனுக்கு மணம் செய்து கொடுத்தான். பின்பு பராந்தகன் தன் மகளை இராட்டிரகூடக் கோவிந்தனுக்குக் கொடுத்தான். இப்படி வலுவுற்ற இரண்டு குலமும் மகட்கொடையால் ஒன்றாகி, நாட்டில் பெரும்போர்கள் நிகழாமல் காத்தன எனலாம். பராந்தகன் வடபகுதியில் உள்ள வாணபர், வைதும்பர்

முதலியோரையும் வென்றான். இப்படித் தெற்கே ஈழ முதல் வடக்கே நெல்லூருக்கும் அப்பால் வரை பராந்த கனின் நாடு பரவி நின்றது. இப்பராந்தகன் மகட் கொண்டும் மகட் கொடுத்தும் இராட்டிரகூட மன்ன ருடன் கலந்தமையின், அவர்களுக்குள் நடந்த அரசியல் போரில் இவனும் தலையிட நேர்ந்தது. பராந்தகன் தன் மருகன் கோவிந்தன் நாடிழந்து தஞ்சைக்கு வர, அதை மீட்டுத் தருவதற்காக இராட்டிரகூட நாட்டின் கிருஷ்ணன் மீது பகை கொண்டான். வடக்கே இருந்த வேற்று வேந் தர்களும் இந்நிலையில் பராந்தகனுக்குப் பகைவராயினர். பராந்தகனும் தன் மகனுடன் படையனுப்பி வட எல்லை யைப் பாதுகாத்தான். இராட்டிரகூட கிருஷ்ணன் 949ல் சோணாட்டின் மேல் படை எடுக்க, தொண்டை நாடும் திருமுனைப்பாடி நாடும் அவன் வசமாயின. கி. பி. 955க் குப் பின் சோழர் கல்வெட்டுக்கள் அப்பகுதிகளில் இல்லை. நடுநாடு தனியாக உரிமை எய்தியது. மூன்றாம் கிருஷ் ணன் தஞ்சையைக் கைப்பற்றி இராமேச்சுவரத்தில் கல் நாட்டியவன் என்று கூறப்பட்டாலும், அதற்குச் சான்று கள் இல்லை. மூன்றாம் கிருஷ்ணனோடு தக்கோலத்தில் நடந்த போரில் பராந்தகனுடைய மூத்த மகன் இராசா தித்தன் இறந்தான். எனவே, பராந்தகனுக்குப் பின் அவன் இரண்டாம் மகன் கண்டராதித்தன் (950) பட்டத் துக்கு வந்தான்.

பராந்தகன் சிறந்த சிவபக்தனாய் இருந்தான். திரு விசைப்பா அவனைப் பாராட்டுகின்றபடி திருவாவடு துறை, செந்துறை முதலிய இடங்களில் கோயில்கள் அமைத்தான்; வீரநாராயண ஏரி, சதுர்வேதிமங்கல ஏரி, சோழ வாரிதி, சோழசிங்கபுரத்தேரி முதலிய பேரேரிகளை வெட்டு வித்து, நாட்டில் நீர்ப்பாசன வசதிகள் செய்தான்;

பல தானங்கள் செய்தான். ஏம கர்ப்பம்,[1] துலா பாரம்[2] முதலியவகையில் தானம் புரிந்தான். இவை அக்கால அரசரும் அரசியரும் சாதாரணமாகச் செய்த தருமங்களாகும். இவன் புலவர்களை ஆதரித்தமையின் 'பண்டித வற்சலன்' என்ற பட்டம் பெற்றான். நான்கு புதல்வரும் இரு மகளிரும் இவனுக்கு இருந்தனர். இரண்டாம் மகன் கண்டராதித்தனே இவனுக்குப் பிறகு பட்டத்துக்கு வந்தான்.

## கண்டராதித்தன்:

பராந்தகன் பரகேசரி யானமையின், கண்டராதித்தன் இராசகேசரியானான். இவன் காலத்தில் வீரபாண்டியன் இழந்த நாட்டை மீட்டுக்கொண்டான். இவன் ஆட்சி ஏழு ஆண்டுகளே (950-56). அதிலும், தந்தைக்குப் பின் மூன்றாண்டுகளே இருந்தான். எனவே, இவன் செயல் பற்றி அதிகம் அறிய வழியில்லை. இவன் சிறந்த சைவன்; எனினும் சமணப் பள்ளியையும் அமைத்தான் என்பர். இவன் பாடிய பாடற்றொகுதி திருவிசைப்பாவில் இடம் பெற்றுள்ளது. இவன் 'மும்முடிச் சோழன்' எனவும் 'சிவஞான கண்டராதித்தர்' எனவும் வழங்கப் பெறுகின்றான். இவனுக்குப் பின் இவன் தம்பியும் பராந்தகனுடைய மூன்றாவது மகனுமாகிய அரிஞ்சயன் ஓராண்டே ஆட்சி செய்துள்ளான் (கி.பி. 956-57). இவன் பரகேசரி. இவன் வடக்கே இரண்டொரு போர்கள் செய்தான் என்றாலும்,

---

1. பொன்னால் பசுவினைச் செய்து அதன் வாய்வழி நுழைந்து பின் வழி வெளி வந்து அப்பொற்பசுவை அந்தணருக்குத் தானம் செய்வது.

2. துலையில் தான் ஏறி நின்று, தன் எடைக்குச் சரியாகப் பொன்னை நிறுத்து, அப்பொன்னை அந்தணருக்குத் தானம் தருவது.

அவற்றைப்பற்றிய குறிப்பு ஒன்றும் இல்லை. இவனுக்கு மனைவியர் மூவர். கீழைச்சளுக்கியர் மகள், வைதும்பர் மகள், கொடும்பாளூர்ச் சிற்றரசர் மகள் மூவரும் மனைவியர். தாய் பழுவேட்டரையன் மகள் போலும்! தந்தை காலத்தில் அண்ணனுக்குப் பின் (இராசாதித்தன்) சோழ நாட்டு வட எல்லையைக் காத்திருந்தான். இவன் ஆத்தூரில் துஞ்சியவன் இவன் பேர் இட்டு, இவனுடைய பேரன், வடஆர்க்காட்டு மாவட்டம் திருவல்லத்தில் ஒரு கோயிலை 'அரிஞ்சயேச்சுரம்' என்றே அமைத்தான். அது இப்போது சோழேச்சுரம் என்ற பெயரில் உள்ளது. இவனுக்குப் பின் பராந்தகன் அல்லது சுதந்தரசோழன் பட்டத்துக்கு வந்தான். இவன் அரிஞ்சயனுக்கு வைத்தும்பராயன் மகள் வயிற்றுப்பிள்ளை போலும்! இவன் சிறந்த வீரனாய் இழந்த சில பகுதிகளைக் கைக்கொண்டான் போலும்!

**சுந்தர சோழன்:**

பராந்தகன் என்னும் சுந்தர சோழன் பதின்மூன்று ஆண்டுகள் (957-970) அரசாண்டவன். இவன் மதுரையைக் கொண்டமையின், 'மதுராந்தகச் சுந்தரசோழன்' என வழங்கப் பெற்றான். இவன் காலத்தில் பாண்டியன் இராசசிம்மன் மகனாகிய வீரசிம்மன் ஆண்டிருக்க வேண்டும் அப்பாண்டியன் சோழன் தலை கொண்ட 'கோ வீர பாண்டியன்' எனப் பாராட்டப் பெற்றமையின்,சோழருள் ஒருவர் தலையைப் போரிலோ அன்றி வேறு வகையிலோ கொய்து கொண்டவன் ஆதல் வேண்டும். அவ்வாறு சோழர் தலை கொண்டதறிந்தே பராந்தகன் அவன் மேல் படை எடுத்திருக்கக் கூடும். சேவூரில் இருவருக்கும் 962இல் போர் நடந்தது. சோழன் வென்று மதுரை கொண்டு கோராசகேசரியானான். அப்போரில் பாண்டியனுக்கு

உதவியாக ஈழ மன்னன் நான்காம் மகிந்தன் தன் படையை அனுப்பினான். எனவே, சீற்றமுற்ற சுந்தர சோழன், தன்படைத் தலைவனின் மகன் பாரந்தகன் சிறிய வேளான் என்பானுடன் பெருஞ் சேனையை ஈழத்துக்கு அனுப்பினான். ஆயினும், படைத்தலைவன் அங்கு உயிர் துறந்தான். மகாவமிசத்தின் வழி, பின்பு சோழரும் ஈழ மன்னரும் நட்பாயினர் எனக் காண்கின்றோம். பாண்டியன் மறுபடியும் தலைதூக்கிச் சோழரோடு போரிட்டான். சுந்தர சோழன் மகன் ஆதித்த கரிகாலன் அவனை எதிர்த்து வென்றான். எனினும் மதுரையைக் கைக்கொள்ளவில்லை.

சுந்தரசோழன் வடக்கேயும் படையெடுத்து இழந்த தொண்டை நாட்டையும் நடு நாட்டையும் மீட்டான். அவற்றை ஆளப் பார்த்திவேந்திரவர்மனை நியமித்தான். இச் சுந்தரசோழன் மனைவியர் இருவர். ஒருத்தி சேரன் மகள்; மற்றொருத்தி திருக்கோவலூர் மன்னன் மகள். இவன் தன் மூத்த மகன் ஆதித்த கரிகாலனுக்குக் கி. பி. 966இல் இளவரசு பட்டம் கட்டினான். இவனுடைய இரண்டாம் மகனே சிறக்கவாழ்ந்த முதலாம் இராசராசன். இவன் மகள் குந்தவ்வை. அவள் கீழைச்சாளுக்கிய மன்னன் வல்லவரையன் வந்தியத்தேவனுக்கு மனைவியானாள். வல்லவரையன் மனைவியோடு சோழ நாட்டிலே தங்கிவிட்டான்.

அமைச்சராகச் சுந்தர சோழனுக்கு உதவியவர் அன்பில் அநிருத்திரப் பிரமாதிராயர். அவருக்குக் கருணாகர மங்கலத்தை (திருவழுந்தூர் நாடு) இறையிலியாகக் கொடுத்தான் மன்னன். இதை விளக்குவதே அன்பிற்செப்பேடு. இதுவே சோழர் சேப்பேடுகளில் மிகப் பழமையானது.

சுந்தரசோழன் மூத்த மகன் ஆதித்த கரிகாலன் என்று கண்டோம். அவனை அரசியல் காரணமாகச் சிலர் வஞ்சித்துக் கொன்றனர் என்பர். அவனை இரண்டாம் மகன் இராசராசனே கொன்றான என்பர் சிலர். அது பொருந்தாது. ஏனெனில், இராசராசன் பட்டத்துக்கு வந்த ஆட்சி ஆண்டு இரண்டில் அவனே தன் அண்ணனைக் கொன்றவரைக் கண்டு பிடித்துத் தண்டனை கொடுத்துள்ளான். அண்ணன் இறந்ததும் தானே பட்டதுக்கு வரவேண்டுமெனவும் இராசராசன் விரும்பவில்லை; தன் சிற்றப்பன் உத்தமசோழன் ஆளும்வரை தான் ஒதுங்கி இருந்தே, பிறகு சோழ நாட்டு அரியணை ஏறினான். ஆதித்த கரிகாலனை உத்தம சோழன் கொன்றான் என்பார் கூற்றும் சற்றும் பொருந்தாது. அவனும் கொலை செய்தாரைக் காண்பதில் பெரு முயற்சி செய்து ஓரளவு வெற்றியும் பெற்றான் எனலாம்.

மகன் பிரிவால் சுந்தரசோழன் வாடினான்; அதே வருத்தத்தில் காஞ்சியில் பொன் மாளிகையில் துஞ்சினான். அவன் மனைவியாம் வானவன்மாதேவி உடன் கட்டை ஏறினாள். இராசராசன் பின் அமைத்த பெரிய கோயிலில் அவன் தமக்கை குந்தவ்வை தம் தாய் தந்தையர் உருவத்தைப் படிமம் செய்து வணங்கி வந்தாள்; தந்தை பேரால் தஞ்சையில் மருத்துவசாலை அமைத்தாள். சுந்தரப்பள்ளி, சுந்தரப் பேரேரி, சுந்தர புரம் அனைத்தும் அவன் நினைவுக்காக எழுந்தனவே சுந்தர சோழன் சிறந்த சிவ பக்தன்.

இச் சுந்தரசோழன் தமிழ்ப் புலவர்களை ஆதரித்தவன் வீரசோழியத்தில் இவனைப்பற்றி இரு பாடல்கள் உள்ளன. இவனை இப்பாடல்கள் 'பழையாறைச்

சுந்தரசோழன்' என்று குறிப்பதால், இவன் பழையாறையில் இருந்து ஆண்டான் போலும்!

**உத்தம சோழன்:**

சுந்தரசோழனுக்குப் பின் கண்டராதித்தன் மகன் உத்தம சோழன் ஆண்டனன் (970–995). இவன் பரகேசரி யானான். சுந்தர சோழனுக்குப் பின் இராசராசனே பட்டத்துக்கு வர மக்கள் விரும்பினாலும், இராசராசனே கண்டராதித்தன் மகனாகிய உத்தமசோழன்தான் முறையாக ஆளவேண்டும் என்றான். இவன் கல்வெட்டுக்கள் பல செங்கற்பட்டு, வடார்க்காட்டு மாவட்டங்களில் உள்ளமையின், தொண்டை நாடு இவன் கீழ் இருந்தது எனலாம். சோழ நாட்டிலும் இவன் கல்வெட்டுக்கள் மிகுதி. இவன் குடும்பமே பல அறச்செயல்கள் புரிந்தது. இவன் கல்வெட்டுக்களும் செப்பேடுகளும் அக்கால நாட்டின் நிலையை நன்கு காட்டுகின்றன.

இவனுக்கு மனையியர் பலர். பட்டத்தரசி திரிபுவன மாதேவி. இராசராசன் காலத்து ஆலயங்களைப் பாதுகாத்த கண்டராதித்தன் இவன் மகனாவன். இவன் காலத்தில் பொற்காசு இருந்தது. அதில் புலி உருவம் பொறித்திருந்தது. எழுத்து வட்டெழுத்து என்பர். இவன் நாட்டை அமைதியாய் ஆண்டான். இவன் அன்னை நல்ல சமயத் தொண்டு செய்து, இராசராசன் காலத்திலும் பல பணி புரிந்து கி.பி. 1001 வரை வாழ்ந்தவள். கங்கை கொண்ட சோழனாகிய இராசேந்திரன், செம்பியன் மாதேவியாகிய இவளது படிமத்தைச் செய்து வழிபட்டான்.

இவ்வாறு அமைதியோடு ஆண்ட உத்தம சோழனுக்குப் பிறகு நாட்டு மக்கள் எதிர்பார்த்தபடி இராசராசன் கி. பி. 985இல் சோழநாட்டுப் பெரு மன்னனானான்.

# II

# தந்தையும் தனயனும்

**இராசராசன் இளமை:**

தமிழ் நாட்டு வரலாற்றிலேயே சிறந்த மன்னராகப் போற்றப்பெறும் இராசராசனும் இராசேந்திரனுமே தந்தையும் தனையனுமாவார்கள். இராசராசன் பராந்தகனுக்கு வானவன் மாதேவி வழியாகப் பிறந்தவன். இவன் ஐப்பசிச் சதய நட்சத்திரத்தில் பிறந்தவன். திருவெண்காட்டில் அந்நாளில் இவன் இறைவனுக்கு விழாச் செய்து வந்தான். இவன் ஆட்சி பற்றிப் பலரும் பலவாறு புகழ்ந்துள்ளனர். உலகத்தைத் தான் தாங்கிக் கொண்டு ஆதிசேடனுக்கு உண்டான பளுவைக் குறைத்தவன் என்று இவனைப் புகழ்ந்தனர். இவன் கையில் சங்குச் சக்கரக் குறிகள் இருந்தமையின், இவன் காத்தற் கடவுளாகிய திருமாலின் அவதாரமே என்றனர். இவனது இயற்பெயர் அருண்மொழித்தேவன் என்பது. இவனது ஆட்சி ஆண்டு நான்கில் மதுராந்தகக் கல்வெட்டு இவனை மும்முடிச் சோழன் எனப் புகழ்வதால், இவன் ஆட்சி ஆண்டு மூன்றிற்குள் மற்ற இருபெரு வேந்தரையும் வென்றவனாதல் வேண்டும். எனவே, மேலைக் கடற்கரையில் காந்தளூர்ச்சாலையில் கலமறுத்த போர் அதற்கு முந்தியதாக வேண்டும் அந்த வெற்றி ஆண்டிலிருந்து இவன் இராசராசன் எனவே சிறக்க வழங்கப் பெற்றான். இவனது தில்லைப் பணிகளைப் பாராட்டி கி.பி. 1004ல் இவனுக்குத் தில்லைவாழ் அந்தணர் இராசராசன் எனப் பெயரிட்டனர் என்பது பொருந்தாது. 1004க்கு முன்பே இவனுக்கு இராசராசன் என்ற பெயர் நிலைத்து விட்டது. இவன் தன்

தந்தை உத்தம சோழனுக்குப்பின் 985இல் பட்டத்துக்கு வந்தான்; இராசகேசரி என்ற பட்டம் புனைந்தான். இவன் செய்துவைத்த பல பணிகளும், வெற்றிகளும் இவன் மகன் இராசேந்திரனை மிக உயர்ந்தவனாக்க வழி கோலி நின்றன. இளமையில் பெற்றோரை இழந்த இராச ராசனைக் கண்டராதித்தரும் தமக்கை குந்தவ்வையும் வளர்த்தனர் எனலாம்.

**போர்ச் செயல்கள்:**

இவன் காலத்திலேதான் கல்வெட்டுக்கள் மேல் கண்ட இலக்கணப்படி அகவற்பாவில் உருவாக்கப் பெற்றன. இவனது மெய்க்கீர்த்திகளில் இவன் காந்தளூர்ச்சாலையில் கலமறுத்த வரலாறே சிறக்கப் புகழ்ப்பெற்றுள்ளது. காந்தளூர்ச்சாலை திருவனந்தபுரத்தின் ஒரு பகுதி என்பர். அக்காலத்தில் சேரநாட்டை ஆண்ட மன்னன் பாஸ்கர இரவிவர்மன் (978—1036) ஆவன். அவன் சோழர் தூதனைச் சிறைப் பிடித்து உதகையில் வைத்திருந்தான். உதகை என்பது இக்கால உதகமண்டல மன்று; நாகர் கோயில் பக்கத்திலுள்ள ஒரு சிற்றூர். அதை அடுத்து இருந்ததே காந்தளூர்ச்சாலை. இராசராசன் படை எடுத்துச் சென்று காந்தளூர்க் கலமறுத்து வெற்றிகொண்டு தன் தூதனையும் மீட்டு வந்தான். உதகையில் கடல் நடுவே கலங்களில் தூதுவன் வைக்கப்பட்டான் போலும்! எனவே, அவற்றை அழித்துத் தூதுவனை மீட்டுவந்தான் இராசராசன் என்பது பொருந்தும்.

சேர நாட்டுக் காந்தளூருக்குச் சோழன் செல்ல வேண்டுமாயின், அவன் பாண்டி நாட்டு எல்லையைக் கடந்தே செல்ல வேண்டும். அக்காலத்தில் பாண்டி

நாட்டை அமரபுயங்கப் பாண்டியன் ஆண்டு வந்தான். எனவே, அப்பாண்டியனுடன் போர்செய்து வெற்றி கண்ட பிறகே இராசராசன் காந்தளூர் சென்றான் எனக் கொள்ளல் வேண்டும். எனவே, தன் ஆட்சி ஆண்டு மூன்றில் பாண்டியரையும் சேரரையும் வென்று மும்முடிச் சோழன் ஆனான். அங்கிருந்து திரும்பியபின் அவன் தன் பிறந்த நாளாகிய ஐப்பசிச் சதய நாளில் சோழ நாட்டில் பெருவிழாச் செய்தான்.

இராசராசன் போர்களைப்பற்றித் திருவாலங்காட்டுச் செப்பேடுகள் ஒரு வகையில் விளக்கிக் காட்டுகின்றன. முதலில் அமரபுயங்கப் பாண்டியனை வெற்றி கொண்ட இராசராசன் பின்பு சேரனைக் கொல்லம் கொடுங்கோளூர் முதலிய இடங்களில் தோற்றோடச் செய்தான். பின்பு குடமலை நாட்டில் பனசோகை என்ற இடத்தில் போர் நடைபெற்றது. அப்போரில் உதவிய 'பனிஜா' மன்னனுக்கே தான்வென்ற நாட்டை அளித்துத் திரும்பினான். பின்பு மைசூர் சேலம் பகுதிகளிலுள்ள குட நாட்டுக் கங்கபாடி, நுளம்பபாடி நாடுகளையும் வெற்றி கொண்டான் இராசராசன். பின்பு மைசூர்ப் பகுதியிலுள்ள தடிகைப்பாடியை வென்றான். 991இல் அங்கு இராசராசனது சிறப்புப் பெயராகிய சோழ நாராயணன் என்னும் பெயரால் ஒரு கல்வெட்டு உண்டு. இப்போர்களி லெல்லாம் படைத் தலைமை பூண்டு, படையைச் செலுத்தினவன் இவன் மகன் இராசேந்திரனேயாவன். எனவே, இப்போர்களை எல்லாம் இராசேந்திரன் மேல் ஏற்றிக் கூறுவதும் உண்டு.

**ஈழப்படை எடுப்பு:**

இராசராசன் காலத்தில் ஈழநாட்டில் ஐந்தாம் மகிந்தன் ஆட்சி செய்துவந்தான். அவன் இராசராச

னோடு மாறுபட்ட பாண்டியனுக்கும் சேரனுக்கும் உதவியவன். எனவே, இராசராசன் அந்நாட்டின் மேல் படை எடுத்துச் சென்றான். இவன் படை வருவதறிந்து மகிந்தன் அஞ்சித் தென்கிழக்கு இலங்கையில் ஓடி (இப்போதைய கதிர்காமப் பகுதி) ஒளிந்துகொண்டான். மகன் இராசேந்திரனே படையைச் செலுத்திச் சென்றான். அவன் படையால் அனுராதபுரம் நிலை குலைக்கப்பெற்றது. 'பொலனருவா' வைக் கைப்பற்றி அதைச்சோழர் தலைநகராக்கினான் இராசேந்திரன் ஈழ நாடு 'மும்முடிச் சோழமண்டலம்' என்று சிறந்த வகையில் இராசராசன் பட்டப்பெயரால் வழங்கப்பெற்றது. தமிழ் நாட்டு முறையில் அங்கேயும் பல கோயில்கள் கட்டப் பெற்றன. அவற்றிற்கெனப் பல தானங்களும் வழங்கப் பெற்றன. இவ்வாறு தமிழ் நாடு முழுவதையும் தெற்கே உள்ள ஈழநாட்டையும் தன் கீழ்ப்படுத்தி எதிரிகளே இல்லை என்னுமாறு சிறக்க வாழ்ந்தான் இராசராசன். பொலனருவா தலைநகரான சிறப்பையும் அனுராதபுரம் அழிவுண்டதையும் கொழும்புக் காட்சிச் சாலையிலுள்ள கல்வெட்டுக்கள் பல மெய்ப்பிக்கின்றன. பொலனருவா இன்னும், அன்றைய சோழர் ஆக்கப்பணிகள் சிலவற்றைத் தாங்கி, தான் சோழர் தலைநகராய் இருந்ததை மெய்ப் பித்துக்கொண்டிருக்கிறது.

**வடநாட்டுப் போர்கள்:**

தென்னாட்டைத் தன்னாட்சிக்குட்படுத்திய இராச ராசன் வடக்கு நோக்கித் திரும்பினான். மேலைச் சாளுக்கிய மன்னனாகிய சத்தியாசிரயனை வென்றான் எனத் திருவாலங்காட்டுச் செப்பேடுகள் குறிக்கின்றன. இவ்வெற்றியைப் புகழாவிடினும், இவன் சளுக்கிய நாட்டைச் சூறையாடிய செய்தியைத் தார்வார் மாவட்

டம் ஹொட்டூர் கல்வெட்டு (1007) ஒன்று குறிக்கின்றது. இவன் ஆட்சி எல்லை வடமேற்கே துங்கப்த்திரை ஆறு வரை பரவியிருந்தது எனலாம்.

அடுத்து வடக்கே கோதாவரி கிருஷ்ணை ஆறுகளுக்கு இடையிலுள்ள வேங்கை நாட்டின்மேல் இராசராசன் போர் தொடுத்தான். அங்கு ஆண்ட கீழைச் சாளுக்கிய மன்னனாகிய சத்திவர்மன் சோழனிடம் அடைக்கலம் புகுந்தான். சத்திவர்மன் மகனாகிய விமலாதித்தனே, பின் இராசராசன் மகளாகிய குந்தவ்வையை மணம் புரிந்து கொண்டவன். எனவே, கீழைச்சாளுக்கியர் சோழருடன் நட்பினராகவே இருந்து வந்தனர்.

பின்னர் இராசராசன் நெல்லூர் மாவட்டத்தின் வட பகுதிகளாகிய சீட்புலி நாடு, பாகி நாடு முதலிய வற்றின்மேல் படை எடுத்து வெற்றி கண்டான். அவற்றுடன் மகாநதிக் கரையிலுள்ள கலிங்கநாட்டிற்கும் (தற்போதைய ஒரிசா) அவன் படையெடுத்து வெற்றி கண்டான். அங்கும் இராசராசன் கல்வெட்டுக்கள் உள்ளனவாம்.

**கடல் கடந்தும் போர்**

இறுதியாக முன்னீர்ப் பழந்தீவு பன்னீ ராயிரத்தை இவன் வென்றுகொண்டான் என்று கல்வெட்டுக்கள் குறிக்கின்றன. இது அரபிக்கடலிலுள்ள லட்சத் தீவுகள்—மால்டாத் தீவுகள் என்பர் ஆய்வாளர். சேர நாட்டுக்குத் தென் மேற்கே உள்ள அத்தீவுகளில் வாழ் வோரால் சேர நாட்டுக் கடல் எல்லையில் அடிக்கடித் தொல்லை நேர்ந்திருக்கக்கூடும் ஒரு வேளை சேர பாண்டி நாடுகளில் தோற்ற பகைவர் சிலர் அங்குச்சென்று

மறைந்திருந்து பின்னர்த் தொல்லை தந்துமிருக்கலாம். எனவே, அவர்களை அடக்க அத்தீவுகளையும் கொள்ள வேண்டியதாயிற்று. அதனால் அத்தீவுகளின் மேல் இறுதியாகப் படை எடுத்துச் சென்று அவற்றையும் தன் அடிக்கீழ்க் கொணர்ந்தான். இவ்வாறு காந்தளூர்ச் சாலையில் தொடங்கிய இராசராசன் போர், அக் காந்தளூர்ச்சாலையை அடுத்த பழந்தீவு பன்னீராயிரத் தில் முடிவுற்றது. யாண்டும் அவன் மகனாகிய இராசேந் திரன் சேனைத் தலைவனாய் நின்று வெற்றி வீரனாகவே திரும்பி வந்தான்.

**போர்ப்பிடையில் அமைதி:**

இவ்வாறு ஆட்சித் தொடக்கநாள் முதல் போரே புரிந்து நின்ற இராசராசன் நாட்டுக்கு என்ன நல்லது செய்தான் என நினைக்கக்கூடும். போரே வாழ்நாளில் சிறந்திருந்தால் நாட்டில் அமைதி எங்கே நிலைக்கும் எனவும் எண்ணலாம் என்றாலும், இராசராசன் காலத் தில் தமிழ்நாடு நல்ல அமைதியிலே பல நலன்கள் பெற்றுச் சிறக்க வாழ்ந்தது. மேலே கண்டபடி வலிய வந்த போர்களிலும் பிறவற்றிலும் வெற்றி கண்ட இராச ராசன், நாட்டை அமைதி முறையில் ஆளவும் வழி வகுத் தான். தன் மகன் இராசேந்திரனுக்கு 1012இல் இளவரசுப் பட்டம் கட்டினான். அவனது ஆட்சி ஆண்டு 29க்குப் பிறகு கல்வெட்டுக்கள் இல்லை. இளவரசுப் பட்டம்கட்டி இரண்டாண்டுகள் கழித்து 1014இல் அவன் மறைந்தான் போலும்! அவன் பரம்பரையினர் செய்தமை போன்று அவனும் துலாபாரம் ஏறினான். அவன் மனைவியாகிய உலகமாதேவி இரணிய கருப்பம் புகுந்தாள். அவனது ஆட்சி இறுதியில் நாட்டுக்கு அவன் செய்த நலன்கள் பலப்பல.

**தஞ்சைப் பெரிய கோயில்:**

இன்றளவும் தன் பெருமை குன்றாது, இராசராசன் பெயரை உலகுக்கு உணர்த்திக்கொண்டிருக்கும் தஞ்சைப் பெரிய கோயிலைக் கட்டியவன் இராசராசனே. அக் கோயிலைக் காண்பார் அவனை வியவாதிரார். பல்லவர் ஆட்சிக்குக் கயிலாச நாதர் கோயில் எவ்வாறு மைல் கல்லாய் அமைந்ததோ, அவ்வாறே இந்தப் பிற்காலச் சோழர் ஆட்சிக்கு இத்தஞ்சைப் பெரிய கோயிலே மைல் கல்லாய் அமைந்தது. இக்கோயில் 793 அடி நீளமும் 397 அடி அகலமும் உள்ளது. விமானம் 216 அடி உயரம் உள்ளது. இராசராசன் ஆட்சி ஆண்டு 19இல் தொடங்கி 24இல் முடிக்கப் பெற்ற கோயில் இது. கருங்கல்லே காண இயலாத அந்தக் காவிரிக் கரையில் எங்கிருந்தோ கற்களைக் கொண்டு வந்து இத்துணைப் பெரிய கோயிலை நான்கே ஆண்டுகளில் கட்டி அமைத்த அந்த இராசராசனை வியவாதிருக்க முடியுமோ! கி. பி. 1010இல்— தன் ஆட்சி ஆண்டு 25இல் விழா எடுத்துக் கோயிலைச் சிறப்பித்தான் இராசராசன். இதன் வாயில் களுக்கு அவன் பெயர்களே இடப்பெற்றுள்ளன. கேரளாந்தகன் வாயில், இராசராசன் வாயில் என்பன அப்பெயர்கள். இக்கோயிலுக்குக் கருவூர்த்தேவர் திரு விசைப்பாப் பதிகமும் உண்டு. இக்கோயிலும் தேவாரத் தில் வரும் தஞ்சைத் தளிக்குளமும் ஒன்று என்பர் திரு. பண்டாரத்தார் அவர்கள்[1] எனினும், சிலர் அது வேறு என்றும், திருவாரூர்ப் பக்கத்தில் இருந்த ஒரு சிற்றூர்க் கோயிலே அது என்றும் கூறுவர். தேவார காலத்தில் தஞ்சாவூர் இன்மையின், அவர் கூற்று மெய்யெனவே

1. பிற்காலச் சோழர்—பக்கம் 122.

கொள்ளத் தகும். ஆய்வாளர் இதுபற்றி மேலும் ஆய்ந்து முடிவு காண வேண்டும். இவ்வாறு கோயில் அமைத்து அழியாப் புகழ் பெற்ற இராசராசன், சிவபாத சேகரன் எனப் போற்றப்பட்டான் 'சிவனுடைய பாதங்களைத் தலையில் தாங்கியவன்' என்பது இதன் பொருள். இவன் சிறந்த சைவனேயாயினும், பிற சமயங்களை வெறுத்தானல்லன் இவன் காலத்தில் கடாரத் தரசன் சூளாமணி வர்மன் நாகப்பட்டினத்தில் சைனர்களுக்காகக் கட்டிய கோயிலை 'இராசராசப் பள்ளி' என்றே வணங்கியமை இவன் பரந்த நோக்கை நமக்குக் காட்டுமன்றோ! இவன் திருமாலுக்குச் 'சயங்கொண்ட சோழ விண்ணகரம்' எனப் பங்களூர் மாவட்ட மணலூரில் ஒரு கோயிலும், தலைக்காட்டுக்கு அருகில் மற்றொரு கோயிலும் அமைத்தான் என்றும் கூறுவர்.[1] எனவே, இவன் சமயக் காழ்ப்பு அற்ற சிறந்த மன்னனாய் விளங்கியவன் என்பது பெறப்படும்.

**நில அளவை:**

இவன் காலத்தில் தமிழ்நாடு பல நன்மைகளைப் பெற்றது என்றோம். அவற்றுள் ஒன்று நில அளவை. சோழ இராச்சியத்தில் உள்ள நிலங்கள் அனைத்தும் இவன் காலத்தில் (கி பி. 1000இல்) அளக்கப்பெற்றன. அதனால், இவன் 'உலகளந்தான்' என்ற சிறப்புப் பெயரையும் பெற்றான். அந்த அளவுகோல் 16 சாண் நீளம் இருந்ததாம். 'மாராயன்' என்ற பெயர் அதற்கு உண்டு என்பர். இவ்வாறு நிலத்தை அளந்து பிரித்துப் பல்வேறு வகையில் நிலத்தின் தரம் கண்டதோடு, நீர்ப்பாசன வசதிகளும் செய்தமைத்து நல்ல விளையுளைப் பெருக்கினான் இராசராசன்.

---

1 பிற்காலச் சோழர்-சதாசிவபண்டாரத்தார், பக்கம் 138

**நாட்டுப் பிரிவுகள்:**

நாடு, ஆட்சி முறையின் எளிமைக்காகப் பல பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டது. ஒவ்வொரு பிரிவும் தக்கவர் தலைமையின் கீழ்ப் பாதுகாக்கப்பட்டது. நாட்டிலுள்ள ஊர்கள் பெரும்பாலும் சுதந்திரம் பெற்ற வகையில் தத்தம் தேவைகளை நிறைவு செய்து கொண்டன. ஊர்ச் சபைகளே ஊர்களின் நிருவாகத்துக்கும் பொறுப்பாய் இருந்தன. இராசராசனுக்கு உதவியாகப் பல சிற்றரசர்களும், பல அரசியல் அதிகாரிகளும் இருந்தனர். பல குறுநில மன்னன் திறை செலுத்தினர். பழுவேட்டரையன் (திருச்சி), கொல்லி மழவன், சங்கர தேவன் (திருவல்லம்), வேளாண்சுந்தர சோழன் (கொடும்பாளூர்), நன்னமரையன் (கடப்பை), இலாடப்பேரையன், வாணகோவரையன் முதலியோர் அவருள் முக்கியமானவர். 'அவர் போன்ற பல நல்ல அரசியல் அதிகாரிகள் இராசராசனுக்கு அரச காரியங்கள் செவ்வையாக நடைபெற உதவினர். இவன் வரலாற்றைக் கூறும் 'இராஜராஜ விஜயம்' என்னும் நூல் இருந்ததாகக் கல்வெட்டால் அறிகிறோம் இவனும் இவன் குடும்பத்தாரும் இவன் காலத்தில் செய்த அறங்கள் பலப்பல. இவன் காலத்துத் தமிழகம் பெற்ற நன்மைகளைப் பின் 'சோழர் காலத்தில் தமிழ்நாடு' என்னும் பகுதியில் காணலாம்.

**இராஜேந்திரன் (1012—1041)**

இராசராசனுக்குப் பின் இவன் மகன் முதலாம் இராசேந்திரன் பட்டத்துக்கு வந்தான் இவன் தந்தை காலத்திலேயே அரச காரியங்களில் பங்கு கொண்டு படைத் தலைமையேற்றுப் பல போர்களில் வெற்றி கொண்டவன் என்பதைக் கண்டோம். இராசராசன்

தன் ஆட்சிக் காலத்திலேயே (கி. பி. 1012) இவனை இளவரசாக்கினான். இராசேந்திரன் 1044 வரை சோழ நாட்டைச் சிறக்க ஆண்டான். தந்தையின் வழியைப் பின்பற்றிக் கங்கைக்கரை வரையில் சென்று 'கங்கை கொண்ட சோழன்' என்ற சிறப்புப் பெயரையும் பெற்றான். இவன் காலத்தில் சோழநாடு உச்சநிலையில் விளங்கிற்று.

இராசராசனுக்கு வானவன் மாதேவியினிடம் பிறந்தவன் இராசேந்திரன். மார்கழித் திருவாதிரையில் இவன் பிறந்தான். திருஒற்றியூர்க் கல்வெட்டின் மூலம் அம்மார்கழி ஆதிரை நாளில் இவன் திருமுதுகுன்றத்தே (விருத்தாசலம்) ஆண்டு தோறும் விழாச் செய்து வந்தான் என அறிகிறோம். இவனுக்குத் தந்தை இட்ட பெயர் மதுராந்தகன் என்பது. இவன் அழகன்; திருவாலங்காட்டுச் செப்பேடு இம்மன்னனை 'நெற்றிக்கண் காணாத காமவேள்' எனப் புகழ்கின்றது. இவன் பரகேசரியானான். 1012இல் இளவரசாகித் தந்தைக்குப் பின் 1014இல் சோழப் பேரரசின் தலைவனானான். தன் மகன் இராசாதிராசனுக்கு 1018 லேயே இளவரசு பட்டமும் கட்டிவிட்டான். தாம் இருக்கும்போதே தம் மக்களையும் அரசு காரியங்களில் நன்கு பழகவேண்டும் என்ற ஏற்பாட்டில் தந்தையும் மகனும் இவ்வாறு இளவரசு பட்டங்களைத் தத்தம் மக்களுக் களித்து, ஆட்சிப் பொறுப்பிலும் பங்கு கொடுத்தனர் போலும்! இவனது மெய்க்கீர்த்திகள் 3-ஆம் ஆண்டு முதல் வளர்ந்து 13ஆம் ஆண்டில் நிலை பெற்றன. எனவே, இவனது வெற்றிகளும் பிறவும் அதற்குள் அமையப்பெறப் பிற்காலத்தில் அமைதியாக நாட்டை ஆண்டவன் இவன் என்பது புலனாகின்றது.

இவனது மூன்றாவது ஆண்டுக்கு முன் கல்வெட்டில்லை. ஒரு வேளை இளவரசுப் பட்டம் கட்டிய நாள் முதல் ஆட்சி ஆண்டைக் கணக்கிட்டு இராசராசனுக்குப் பின் மூன்றாம் ஆண்டினை ஆட்சி ஆண்டாகக் கொண்டனர் போலும்! தன் தந்தைக் காலத்தில் அவனது படையைச் செலுத்திப் பல நாடுகளை இவன் வெற்றி கொண்டதை மேலே கண்டோம். இராசேந்திரன் தன் ஆட்சிக் காலத்தில் இடைதுறை நாடு, வனவாசி, கொள்ளிப் பாகை, மண்ணைக் கடகம் முதலிய நாடுகளையும் வென்று தன் அடிப்படுத்தினதாக இவன் மெய்க்கீர்த்திகள் குறிக்கின்றன.

**போர்கள்:**

இவனது ஐந்தாம் ஆண்டுக் கல்வெட்டு இவனது ஈழநாட்டுப் படையெடுப்பைப் பற்றிக் குறிக்கின்றது. மகாவமிசமும் 1017இல் அப்போர் நடைபெற்றதாகக் காட்டுகிறது. எனவே, இவன் ஆட்சியாண்டு இவன் இளவரசாகி நின்ற 1012-ஆம் ஆண்டிலிருந்தே கணக்கிடப் பெறுகிறது என்பது தெளிவு. இராசராசன் காலத்தில் தென்கிழக்கு ஈழத்தில் மறைந்த ஐந்தாம் மகிந்தன் மீண்டும் தளிர்த்து ஈழநாட்டுச் சோழர்தம் பகுதியைக் கொள்ளப் படையெடுத்தான். ஆயினும் இராசேந்திரன் படைக்கு முன்நிற்க ஆற்றாதவனாய்த் தோற்று அடிபணிந்தான். ஈழநாடு முழுவதும் சோழர் வசமாயிற்று. ஈழவேந்தனுடைய முடியையும், பிறவற்றையும், தேவியரையும் இராசேந்திரன் சோழநாட்டுக்குக் கொண்டு வந்தான்; அவற்றுடன் முன் பராந்தகன் காலத்தில் ஈழநாட்டுக்குப் பாண்டியனால் அனுப்பப்பெற்ற பாண்டியர் முடியையும் இலச்சினை முதலியவற்றையும் கொண்டு வந்தான். இவனுடன் மகிந்தனும் சோழ நாடு வந்து வாழ்ந்திருந்து பி. பி.

1029இல் சோழநாட்டிலேயே இறந்தான் என்று மகாவமிசம் கூறுகிறது. எனினும், இராசேந்திரன் கல்வெட்டு ஒன்றும் அவ்வாறு குறிக்கவில்லை. கோனேரி இராசபுரக் கல்வெட்டு ஒன்று மட்டும் மகிந்தன் சோழநாடு கொண்டு வரப்பட்ட பின்னே பணிந்தான் எனக் குறிக்கின்றது. பின்பு ஈழ நாட்டில் மறைந்திருந்த இந்த மகிந்தன் மகன் காசியபன் 1029இல் வெளிப்பட்டு, உரோகண நாட்டைக் கைப்பற்றி 1014 வரை அரசாண்டான் என்பதும் தெரிகிறது.

**சோழ பாண்டியனான்:**

சேர பாண்டிய நாடுகள் தந்தை காலத்திலேயே சோழர் ஆணையின் கீழ் வந்துவிட்டமையின், இராசேந்திரன் மதுரையிலிருந்து கொண்டே, ஈழத்தில் மீட்ட பாண்டியன் முடிகொண்டு பட்டாபிஷேகம் செய்து கொண்டான். அது முதல் 'சோழ பாண்டியன்' என்ற பட்டத்தையும் பெற்றான். வடக்கே சாளுக்கியரோடு இரு தலைமுறையாக மகட்கொடை காரணமாக நட்பு ஏற்பட்டிருந்தது அறிவோம். விமலாதித்தன் இராசேந்திரன் தங்கை குந்தவ்வையை மணந்துகொண்டபின், கோட்டாற்றில் சாளுக்கியன் 'நந்தாவிளக்கு' இருந்ததைக் கல்வெட்டுக் காட்டுகிறது.

கீழைச் சாளுக்கியர் நட்பினராய் இருந்தபோதிலும் மேலைச் சாளுக்கியர் விரோதிகளாகவே இருந்தனர். ஐந்தாம் விக்கிரமாதித்தன் தம்பி சயசிங்கன் அப்போது ஆண்டு வந்தான். அவன் சோழ நாட்டு வடமேற்கு எல்லைப்பகுதியைக் கைப்பற்றிக் கொண்டு ஆளத் தொடங்கினான். அதை அறிந்த இராசேந்திரன் தன் படையொடு சென்று பல்லாரி ஜில்லாவில் உள்ள முயங்கி என்ற இடத்தில் அவனுடன் போர் செய்து வெற்றி பெற்று மீண்டான்.

**கங்கைக் கரை நோக்கி:**

தென்னாடு முழுவதும் வெற்றி கொண்டபின் இராசேந்திரன் வடநாடு நோக்கிப் படை எடுக்க நினைத்தான். கங்கைநீரைக் காவிரிக்கரைக்குக் கொணர்ந்து நாட்டைத் தூய்மைப்படுத்த நினைத்தான் எனத் திருவாலங்காட்டுச் செப்பேடு குறிக்கின்றது. எனவே, இவனது ஆட்சி ஆண்டு பதினொன்றில் வடநாட்டுப் படையெடுப்பு தொடங்கியது. தான் நினைத்தபடியே வழியில் உள்ள அனைவரையும் வென்று கங்கையைக் கொணர்ந்து, அதன் நினைவாகக் கங்கைகொண்ட சோழபுரம் என்ற தலைநகரையும் அமைத்து, அதில் சிறக்க ஆண்டான் இவன்.

வடநாட்டுப் படையெடுப்பின்போது வழியில் உள்ள எத்தனையோ நாடுகளை வென்றாக வேண்டுமன்றோ! அதற்குத்தக்க வகையில் ஒரு சிறந்த படைத்தலைவனைத் தக்க சேனையுடன் வடநாடு நோக்கி அனுப்பினான். அதே வேளையில் காவிரிக்கு வடகரையில் ஒரு புதுத் தலைநகரை அமைக்கத் திட்டமிட்டு, அதற்கான வேலைகளில் முனைந்து நகரை உருவாக்கிக் கொண்டிருந்தான் இராசேந்திரன். வடக்கு நோக்கிச் சென்ற சேனை வேங்கி நாடுவரை யாதொரு மாறுபாடும் இன்றிச் சென்றது எனலாம். வேங்கி நாட்டுக்கு வடக்கிலிருந்த, இக்கால விசாகப்பட்டின மாவட்டத்தில் அக்காலத்தில் நாகர் ஆண்டிருந்தனர். எனவே அந்நாடு "மாசுண தேசம்" என வழங்கப்பெற்றது. அதற்குச் சக்கரக் கோட்டம் என்ற மறு பெயரும் உள்ளது போலும். அந்த நாட்டை வென்று, பின் மகாகோசல நாட்டில் புகுந்து அதையும் சோழர் படை வென்றது. அதற்குப் பிறகு தம்மபாலனுடைய தண்டபுத்தி நாடும், இரணசூரனது தக்கணலாடமும் கோவிந்த சந்தனுடைய வங்காளதேசமும்,

மகிபாலனது உத்திரலாடமும் சோழரால் கைகொள்ளப் பெற்றன. இவ்வாறு கீழ்க்கரை வழியாகவே சென்று வங்காள எல்லையைக் கடந்து, இராசேந்திரன் சேனை கங்கைக் கரையை அடைந்தது. எனவே, இக்கால ஆந்திரம், ஒரிசா, வங்காளம், பீகார், மாகாணங்களுள் பெரும்பகுதியை இராசேந்திரன் வெற்றி கொண்டே கங்கைக் கரை சேர்ந்தான் என்பது பொருந்தும். இவ்வாறு பல அரசர்களை வென்று கங்கையையும் கடந்து சென்றான் என்று திருவாலங்காட்டுச் செப்பேடு குறிப்பிடுகின்றது [1]

## கங்கை கொண்ட சோழபுரம்:

இவ்வாறு கங்கை வரை வெற்றி பெற்ற சோழர் படைகள் அங்கங்கே தம் ஆணையை நிலைநிறுத்திய தோடு, தம் பண்பாடு நாகரிகம் முதலியவற்றையும் தங்க வைத்தன போலும்! அக்காலத் தொடர்பால் உண்டான பல இயல்புகள் இன்றும் வங்காள மக்கள் வாழ்வில் இடம் பெற்றுள்ளன என்பர் வரலாற் றாளர்கள். இவ்வாறு கங்கை கொண்ட சோழபுரத்தை நிறுவி, அதிலிருந்து வீராபிடேகமும் விஜயாபிடேகமும் செய்து கொண்டு இராசேந்திரன் ஆட்சி செலுத்தினான். அங்குக் கங்கை கொண்ட சோழேச்சுரம் என்ற கோயிலை யும் அமைத்தான். அதற்குக் கருவூர்த் தேவர் திருவிசைப்பாவும் உண்டு. அக்கோயில் சற்று அளவில்

1. கங்கைப் பேராற்றில் யானைகளை வரிசையாக நிறுத்திப் பாலங்கள் அமைத்து, அவற்றின்மீது தன் படை களைச் செலுத்தி, அ வாற்றை எளிதாகக் கடந்து சென் றான் என்று திருவாலங்காட்டுச் செப்பேடு குறிப்பிடு கின்றது.

சிறியதாயினும் தஞ்சைப் பெரிய கோயிலை ஒத்தே விளங்கிற்று. அவ்வூரின் அருகில் இராசேந்திரன் 'சோழ கங்கம்' என்ற ஏரியையும் வெட்டி, அப்பகுதியில் வாழ்ந்த மக்களுக்கு நீர்ப்பாசன வசதியையும் செய்து கொடுத்தான். அதைக் கல்வெட்டுக்கள் 'நீர்மயமான வெற்றித் தூண்' எனப் புகழ்கின்றன. அதன் வடிகாலே, இன்று தென்னார்க்காட்டில் வீராணத்தேரி என வழங்கும் பெரிய வீரநாராயண ஏரியாகும். இவ்வாறு பலவகையில் தன் நினைவுச் சின்னமாக எழுப்பிய கங்கை கொண்ட சோழபுரம், பெரிய கோயிலைக் கொண்ட தஞ்சைக்கு மாற்றாக அமைந்தது. இதை மக்கள் விரும்பவில்லை போலும்! தனது பெருமையாக வெற்றியை விளக்க இராசேந்திரன் அந்நகரை அமைத்தானேனும், மக்கள் அதைப் போற்றாது உண்மைத் தொண்டே சிறந்த பெரிய கோயிலையும் அதைச் சூழ்ந்த தஞ்சையையுமே மதித்தனர். எனவே, அவன் காலத்திற்குப்பின் அவன் பரம்பரையினர் தொடர்ந்து ஆள சிறிது நாட்களுக்குப்பின் கங்கை கொண்ட சோழபுரம் சிற்றூராகிவிட்டது. இன்று அது சிதைந்த கோலத்தில் கோயிலை மட்டும் கொண்டு, காவிரியின் வடகரையில் சிற்றூராய்க் காட்சி அளிக்கின்றது.

**பிறநாடுகளின் மேல் படையெடுப்பு:**

இது நிற்க. இவ்வேந்தன் போர் கங்கைகொண்டதோடு முடிவு பெறவில்லை இவன் சிறந்த கடற்படையையும் வைத்திருந்தான் எனவே, அதன் துணைகொண்டு கடாரத்தின் மேல் படையெடுத்தான் அந்நாட்டு மன்னன் சங்கராம விஜயோத்துங்கனை வென்று, பட்டத்து யானை, தோரணம், பெரும் பொருள் ஆகியவற்றைக் கொண்டு வந்தான். பின்பு இக்காலச் சுமத்திரா. ஜாவா எனப்படும்

ஸ்ரீவிஜய் நாட்டையும் கொண்டான். இவையன்றிப் பண்ணை, மலையூர், மாயிருடிங்கம், இளங்காசோகம், பப்பாளம், இலிம்பங்கம், வளைப்பந்தூர், தக்கோலம், தமாலிங்கம், இலாமுரிதேசம், நக்கவாரம் முதலிய நாடுகளையும் கடற்படையின் உதவியால் கொண்டான் என்று கல்வெட்டுக்கள் குறிக்கின்றன. இவையெல்லாம் இக்காலப் பர்மாத் தொடங்கி ஜாவா வரையிலுள்ள தேசங்களின் அக்காலப் பெயர்கள் என ஆய்ந்து எழுதியுள்ளனர் ஆய்வாளர். அந்தமான், நிக்கோபார்த் தீவுகளும் அவற்றுள் அடங்கியுள்ளன. நக்கவாரமே 'நிக்கோபார்' ஆயிற்றென்பர். இவ்வாறு பிற நாடுகளிலெல்லாம் வெற்றிகண்ட பெருவேந்தனாய் விளங்கினான் இராசேந்திரன். தமிழ் நாட்டு வரலாற்றிலேயே இவனுக்கு முன்னும் பின்னும் இவனைப் போன்று சிறந்து வெற்றி கண்ட வீர வேந்தர் யாரும் இல்லை என்பது துணிவு. இவன் இவ்வாறு வெளியில் கருத்திருத்திய காலத்தில் முன் வென்ற ஈழம், சேர்நாடு, மேலைச்சாளுக்கிய நாடு முதலியவற்றால் சிறுசிறு குழப்பங்கள் தோன்றின. எனினும், எல்லாவற்றையும் அடக்கி, பரந்த நிலப்பரப்பையும் விரிந்த கடல் எல்லையையும் தன் ஆணையுள் கொண்டு வந்து சிறக்க வாழ்ந்தான் இராசேந்திரன். இவனது பிற்காலப் போர்களுள் சிலவற்றிற்கு இவன் மகன் இராசாதிராசன் உதவி புரிந்தான்.

**அமைதி:**

போர் நடைபெற்றாலும் நாட்டில் அமைதி குலையா வகையில் தன்னாட்டைக் காத்த நற்பெருவேந்தன் இம்மன்னனாவன். இவன் சிவநெறி போற்றி வளர்த்தவன். இவன் குடும்பப் பெண்களும் பலவகையில் கோயில் பணி புரிந்தனர். இவனுக்கும் இராசராசனுக்கும் இருந்தமை

போன்றே பல அரசியல் அதிகாரிகளும் உடன் கூட்டத்து அதிகாரிகளும் இருந்தனர். இவனுக்கு மக்கள் பலர். இவனுக்குப்பின் இவன் மக்கள் இராசாதிராசன், இராசேந்திரன், வீரராசேந்திரன் என்ற மூவரும் முறையே ஆண்டனர். பெண் மக்களும் இருந்தார்கள். தமிழர் பெருமையை உலகறியச் செய்தவன் இராசேந்திரன் ஆவன்.

# III

# இராசேந்திரனுக்குப் பின்

**இராசாதிராசன்:**

இராசேந்திரனுப்பின் அவன் மைந்தர் மூவரும் ஒருவர்பின் ஒருவராய்ப் பட்டதுக்கு வந்தனர் என்று கண்டோம். அவருள் மூத்த மகன் **இராசாதிராசன்** தந்தை இருக்கும்போதே 1018லேயே (சகம் 940) இளவசன் ஆனவன். எனவே, இவன் ஆட்சி ஆண்டு அதிலிருந்தே தொடங்கியிருக்கும். இவன் தந்தைக்குப் பின் பத்து ஆண்டுகளே கி.பி. 1054வரை அரசாண்டான். இவன் பூர நாளில் பிறந்தவன். இராசகேசரி பட்டம் பூண்டவன். இவனது மெய்க்கீர்த்திகள் மூன்று வகைப்பட்டன. 25-ஆம் ஆட்சி ஆண்டு வரை 'திங்கள் ஏர்பெற வளர்' என்ற தொடக்கமும், 30 ஆண்டுவரை 'திங்களேர் தரு' என்ற தொடக்கமும், பின் இறுதிவரை 'திருக்கொடியொடு தியாகக் கொடி' என்ற தொடக்கமும் பெற்றனவாகி அவை அமைகின்றன. இவன் இளவரசனாயிருந்தபோதே தந்தையின் வெளிநாட்டுப் போர்களில் நன்கு உதவினவன். தந்தைக்குப்பின் இரண்டாம் முறையாக ஆட்சியாண்டு 29இல் ஈழத்தின் மேல் படையெடுத்தான்.

எனவே, 1046இல் விக்கிரம பாண்டியன் என்ற இலங்கை அரசனை வென்றான். இவன் பாண்டியனுக்கு இலங்கையரசன் மகள் வயிற்றுப் பேரன் போலும். இந்த இரண்டு நூற்றாண்டுகளிலும் (10, 11-ம் நூற்றாண்டுகள்) ஈழ மன்னரும், பாண்டியரும், சேரரும் தம்முள் மணவினை கொண்டு சோழருக்கு எதிராகவே இருந்தனர் போலும்!

**சாளுக்கியப் போர்:**

வடக்கே மேலைச்சாளுக்கியருடனும் இராசாதிராசன் போரிட்டான். சாளுக்கியர் அதுகாலைப் பல வகையினராகப் பிரிந்து நின்றனர். ஹொஸ்பெட்டுத் தாலுக்காவிலிருந்த சாளுக்கியர் தம் 'கம்பளி' மாளிகை தகர்த்தெறியப் பட்டது. இவன் தனது ஆட்சியில் மேலைச் சாளுக்கியருடன் மும்முறை போர் செய்தான்; பல சாளுக்கியரை வென்று தன் யானைகளைத் துங்கபத்திரைப் பேராற்றில் நீராட்டினான். 1054இல் இவன் ஆட்சி ஆண்டின் இறுதியில் மீண்டும் சாளுக்கியருடன் கொப்பத்தில் போர் நடைபெற்றது. சாளுக்கிய ஆகவமல்லன் இராசாதிராசனை அதில் கொன்றான். உடனே தம்பி இராசேந்திரன் படைத்தலைமை ஏற்றுப் பகைவரைக் கொப்பத்தில் முறியடித்தான். 1070க்குப் பின் வந்த சாளுக்கியர் கல்வெட்டுக்களிலும் இக்குறிப்புக்கள் இடம் பெற்று உள்ளன.

**இரண்டாம் இராசேந்திரன். (1051-1063)**

கொப்பத்துப் போரினால் அரச பதவி ஏற்ற இரண்டாம் இராசேந்திரன் 1051 முதல் 1054வரை இளவரசனாயிருந்தான்; தமையன் இறக்கத் தான் அரசனானான். இவனுடைய மெய்க்கீர்த்திகள் மூவகைப்பட்டன. அனைத்

தும் இவன் திறமையையும் இவன் பகைவர் இவனிடம் பட்டு ஓடிய சிறுமையையும் நன்கு பாராட்டிக் கூறுகின்றன. இவன் காலத்தில் ஈழப்போர் முக்கியமானது. ஈழநாட்டுப் பெரும் பகுதி சோழர் வசமே இருந்தது. கொப்பத்தில் தோற்றோடிய ஆகவமல்லன் மீண்டும் படையெடுத்து வந்து கிருஷ்ணைக் கரையில் (முடக்காற்றில்) இவனுடன் போரிட்டு அனைவரையும் இழந்து தோற்றோடினான். இவனும், இவன் அண்ணனும் தந்தை திறுவிய கங்கை கொண்ட சோழபுரத்தையே தலை நகராகக் கொண்டு ஆண்டு வந்தனர்.

**வீர ராசேந்திரன்:**

இரண்டாம் இராசேந்திரனுக்குப் பின் அவன் தம்பி வீர ராசேந்திரன் பட்டத்துக்கு வந்தான். இவன் ஏழு ஆண்டுகளே (கி.பி. 1063-70) ஆண்டுள்ளான். இவன் ஆவணி ஆயிலியத்தில் பிறந்தவன். தமையன் இறக்கு முன்பே இளவரசனாய் இருந்தவன். இராசகேசரி பட்டம் தரித்தவன். இவன் மெய்க்கீர்த்திகள் இரண்டு வகையாக அமைந்தன. அவற்றுள் 'திருவளர் திருப்புயத்து' என்பது மிக நீண்டதாகும். இது ஏழாம் ஆட்சியாண்டுடன் முடிகின்றது. இவன் ஆட்சி முழுவதும் பெரும்பாலும் போரிலேயே கழிந்தது. இவன் மேலைச் சாளுக்கிய மன்னனை ஐந்துமுறை தோற்கடித்தான்; பொத்தப்பி வேந்தனையும் சேர பாண்டியரையும் போர்களில் வெற்றி கொண்டான். தன் மகனைப் பாண்டிநாட்டரசனாக்கி, 'சோழ பாண்டியன்' எனச் சிறப்பித்தான். 1066இல் நடந்த கேரளநாட்டு உதகைப் போரில் பகைவர் தோற்றோடினர். சாளுக்கியப் போரில் முக்கியமானது இவன் ஆகவமல்லனோடு கூடல் சங்கமத்தில் செய்த போரேயாகும். ஒரு போரில் (நான்காம் போர்) ஆகவமல்லன் வருவதாகக் காட்டி, பின் வாராது நின்றுவிட்டான். அதை அறிந்து சீற்றங்

கொண்ட வீரராசேந்திரன் மேலைச்சாளுக்கிய நாட்டை அழித்துத் துங்கபத்திரையில் வெற்றித்தூண் நாட்டினான்; ஈழ நாட்டு மன்னன் விசயபாகுவுடன் போர்செய்து வென்றான்: 1068இல் கடாரம் சென்றுள்ளான்; அடைக்கல மடைந்த கடார வேந்தனுக்கு உதவினான். சாளுக்கிய மன்னன் சோமேசுவரன் II (ஆகவல்லன் மகன்) குத்தியில் நடைபெற்ற போரில் இவனால் தோற்கடிக்கப்பட்டான்.

இவனது ஆட்சி முழுவதிலும் போரேயாயினும், உள் நாட்டில் குழப்பமின்மையின், நாட்டில் அமைதி நிலவிற்று எனலாம். இவன் பிராமணருக்கு நிறையத் தானங்கள் வழங்கினான். இவனும் கங்கை கொண்ட சோழ புரத்தையே தலைநகராகக் கொண்டு வாழ்ந்தான். திரு முக்கூடல் கல்வெட்டால் இவன்கீழ்ப் பல அதிகாரிகள் இருந்தமையும் அவர் வழி இவன் நாடாண்ட சிறப்பும் விளங்கும்.

**அதிராசேந்திரன்.**

இவன் மகன் அதிராசேந்திரன் இவனுக்குப்பின் பரகேசரியாகப் பட்டத்துக்கு வந்தான். ஆயினும், உடனே கி.பி. 1070இல், பட்டத்துக்கு வந்த சில தினங்களிலேயே இறந்தான். இவன் கொல்லப்பட்டான் என்பர். சாளுக்கிய விக்கிரமாதித்தன் வரலாறு எழுதிய பில்கணர் இவன் உள்நாட்டுக் கலகத்தால் கொல்லப்பட்டான் என்கிறார். எப்படியாயினும், சிறந்த இராசராசன், இராசேந்திரன் என்பவர்கள் பரம்பரை இவனோடு முடிவுற்றது எனலாம். இவனுக்குப்பின் சோழநாட்டை ஆளத்தக்க நல்ல வேந்தர் சோழர் பரம்பரையில் இல்லை. எனவே, இராசேந்திரன் மகளாகிய அம்மங்கைக்கும் கீழைச்சாளுக்கிய இராசரா

சேந்திரனுக்கும் மகனாகிய குலோத்துங்கன் தாய்வழி உரிமை கொண்டாடிச் சோழ நாட்டுக்கு வந்து அரசனானான். தன் பாட்டன், மாமன் முதலியோரால் சிறந்த முறையில் ஆளப்பெற்ற சோழ நாட்டுக்கு உண்டான குறையை நீக்கும் வகையில் குலோத்துங்கன் சிறக்க அரசாண்டான் எனல் பொருந்தும்.

**குலோத்துங்கன்:**

புதிய பரம்பரையிலிருந்து வந்தவனேயானாலும் **குலோத்துங்கன்** சிறந்த சோழ வேந்தனாகவே விளங்கினான். இவன் கி.பி. 1070முதல் 1120வரை ஐம்பது ஆண்டுகள் அரசாண்டான். இவன் இளமையில் சாளுக்கிய நாட்டில் இல்லாது சோழ நாட்டில் தாய் வழிப் பாட்டன் வீட்டிலேயே வளர்ந்தவன். பூச நாளில் பிறந்தவன், இவன் இளமையில் 'இராசேந்திரன்' என்று பாட்டன் பெயரையே சூடிக் கொண்டிருந்தான். தந்தைக்குப்பின் வேங்கி நாட்டு அரசினைச் சிறிய விசயாதித்தன் ஏற்றான். இவன் இளமையில் விஷ்ணு வர்த்தனன் என்ற சிறப்புப் பெயரோடு இளவரசனாய் இருந்த போதிலும் வேங்கி நாட்டு அரசு சிறிய தந்தை கைப்பட்டது. இவன் முதலில் வேறுபட்டு நின்றானேனும், இறுதியில் சிறிய தந்தையோடு கலந்தே இருந்தான்.

தன் மைத்துனன் அதிராசேந்திரன் மகப்பேறற்று 1070ல் இறக்க, நாட்டில் குழப்பம் உண்டாகவே, இவன் கங்கை கொண்ட சோழபுரத்துக்கு விரைந்து, அனைவரும் வரவேற்க, 9-6-1070ல் சோழர்தம் அரியணை ஏறினான் அன்று முதல் இராசகேசரி குலோத்துங்கன் ஆனான். இவன் அரசு ஏற்றதும் நாட்டில் அமைதி உண்டாயிற்று. இவன் வழி வேங்கி நாடும் சோழப் பேரரசில் இணையவே

சோழ நாட்டு எல்லை விரிந்தது. அது வரையில் சோழ ரோடு போரிட்டுக் கொண்டிருந்த மேலைச் சாளுக்கியர் சில காலம் போர் தொடுக்க நினைத்தாரில்லை; வடக்கி லிருந்து பல ஆண்டுகளாக விளைத்த தொல்லை இல்லை. குலோத்துங்கனும் தானாகப் படை எடுத்து நாட்டைப் பரப்புவதினும், தன் நாட்டை அமைதியோடு காக்கவே விருப்பம் கொண்டான். அந்நிலையிலே சோழ நாடு இவன் காலத்தும் இவன் பின் இவனது பரம்பரையார் ஆண்ட காலத்தும் சுமார் நூறு ஆண்டுகள் அமைதி யாகவே வாழ்ந்தது எனலாம்,

போர்கள்:

எனினும், இவன் சோழநாட்டு அரசு ஏற்றதைக் கண்டு சிலர் பெறாமையுற்றனர். அவருள் மேலைச் சாளுக் கிய ஆறாம் விக்கிரமாதித்தன் முக்கியமானவன். அவன் ஐந்து முறை படை எடுத்தான் போலும்! அவன் அண் ணன் சோமேச்சுவரன் சோழனோடு சேர்ந்து கொண் டான். கொந்தள வரசரோடும் மைசூர் நாட்டினரோடும் இவன் இளமைப் பருவத்திலேயே போர்மூண்டது. எல்லாப் போர்களும் இவன் பட்டத்துக்கு வந்த சில ஆண்டுகளில் முடிந்தன எனலாம். விக்கிரமாதித்தன் வரலாறு கூறும் பில்கணர் இப்போர்கள் குலோத்துங்கன் பட்டத்துக்கு வந்த சில ஆண்டுகளுள் நடந்தன என்று குறிக்கின்றார்.

தெற்கே இராசராசன் காலத்தில் அடிமைப்பட்ட பாண்டியர் இக்காலத்தில் தலை எடுக்கலாயினர். ஐவர் பாண்டியர் ஒன்று கூடிச் சோழர் ஆட்சியைக் குலைத்து உரிமை எய்தினர். கி.பி. 1081இல் குலோத்துங்கன் அவர்கள் மேல் படையெடுத்து வெற்றி கொண்டு அவர் களையே ஆளப்பணித்துத் திறை பெற்று வந்தான்.

அதே ஆண்டில் சேரர்களை எதிர்த்துக் கோட்டாறு, விழிஞம், காந்தளூர்ச்சாலை முதலிய இடங்களில் போர் செய்து வென்று, அங்கெல்லாம் நல்ல தலைவர்களை இருத்தி, ஆளப் பணித்தான். இவன் கல்வெட்டுக்கள் கோதாவரி, விசாகப்பட்டினம் மாவட்டங்களில் இருக்கின்றன. இவன் தென் கலிங்கத்தையும் வட கலிங்கத்தையும் வெற்றி கொண்டான். தென் கலிங்கப்போரில் இவன் மகன் விக்கிரமன் பங்கு கொண்டான். வடகலிங்கப் போர் கி.பி. 1096ல் நடைபெற்றது. தென்கலிங்கப் போர் கி.பி 1112ல் நடைபெற்றது.

**கலிங்கத்துப் பரணி:**

வட கலிங்க நாட்டு வேந்தன் அனந்தவர்மன். அவனுடன் குலோத்துங்கன் நடத்திய கலிங்கப்போரே சயங்கொண்டார் கலிங்கத்துப்பரணியால் பாடப் பெற்றுச் சிறப்புற்றது. கருணாகரத் தொண்டைமான் அப்போரின் படைத் தலைவனானான். குலோத்துங்கன் காஞ்சியில் வீற்றிருந்தபோது வட கலிங்கநாட்டு வேந்தன் திறை செலுத்தவில்லை என்ற செய்தி வந்தது. அனந்தவர்மன், தன் அமைச்சன் கலிங்கராயன் போர் வேண்டாவெனத்தடுத்தும் கேளாமல் போர்தொடுத்து அனைத்தையும் இழந்தான்.

இவன் காலத்தில் ஈழநாடு உரிமை பெற்றது போலும். 1073ல் பொலனருவா, அனுராதபுரம் ஆகிய இடங்களில் ஈழப்படை சோழர் படையை முறியடிக்க, அதற்குப் பின் ஈழநாட்டில் தமிழர் ஆட்சியே இல்லையாயிற்று. இவ்வாறே கங்க நாடும் 1115க்குப் பின் உரிமை பெற்றதெனத்தெரிகின்றது. வேங்கி நாட்டில் இருந்த தன் மகன் விக்கிரமனை 1118ல் சோழநாட்டுக்கு அழைக்க, கலிங்க வேந்தன் துணைகொண்டு மேலைச்சாளுக்கியர் வேங்கி

நாட்டைக் கைப்பற்றிக் கொண்டனர். குலோத்துங்கன் பரம்பரை தொடர்ந்து சோழநாட்டை அமைதியோடு ஆண்டு அதை வளப் படுத்திற்று. நடைபெற்ற போர்களெல்லாம் அவரவர் செய்த குழப்பம் காரணமாக அமைந்தனவே ஒழியக் குலோத்துங்கன் பிற நாடுகளின் மேல் தானாகப் படை எடுக்கவில்லை என்பது தெரிகிறது.

## வெளிநாட்டுத் தொடர்புகள்.

குலோத்துங்கன் காலத்தில் தமிழ் நாட்டிற்குச் சீனாவுடன் நெருங்கிய தொடர்பு இருந்தது என அறிகின்றோம். கி.பி.1077ல் குலோத்துங்கன் எழுவர் கொண்ட தூதுக்குழு ஒன்றைச் சீன நாட்டிற்கு அனுப்பினான். 1088ல் நடந்த கடாரப் போரில் அந்த நாட்டு மன்னனுக்குத் தானே சென்று உதவிபுரிந்தான். மேலும் கடாரத்தரசன் வேண்டுகோளின்படி நாகைப்பட்டினத்தில் இராசராசப் பெரும்பள்ளி, இராசேந்திர சோழப் பெரும்பள்ளி என்ற சமணக் கோயில்களுக்கு இறையிலியாக நிலங்களை வழங்கினான் இந்நிகழ்ச்சி கி.பி. 1087இல் எழுதப்பெற்ற 'சுமத்திரா' நாட்டுக் கல்வெட்டால் அறியப்படுகின்றது 'சயாம்' என்னும் காம்போஜ நாட்டு மன்னனாகிய ஹர்ஷவர்மன் இவனுக்கு நட்பினனாய் இருந்தான். அவன் அளித்த சிறந்த கல் ஒன்றை இவன் சிதம்பரத்துக்கு அளித்தான். அந்நாடுகளையெல்லாம் நல்ல தூதுவர் மூலமும், வாணிப மூலமுமே குலோத்துங்கன் பிணைத்து வைத்திருந்தான்.

இவன் ஆட்சி ஆண்டு 41ல் (கி.பி. 1111) காசிக்கு வடக்கே இருந்தகன்னோசி நாட்டு மன்னனது வடமொழிக் கல்வெட்டு ஒன்று கங்கைகொண்ட சோழபுரத்தில் உள்ளது. இது இலட்சுமணபுரிக் காட்சி சாலையில் உள்ள கல்வெட்டை ஒத்திருக்கின்றது. இவன் தன் மக்களுள்

ஒருவனைப் புத்தனாக்கிப் பர்மாவிற்கு அனுப்ப, அவன் பர்மா மன்னன் மகளையே மணந்து கொண்டான் என்பர். அவன் யார் என்பதும் பிறவும் நன்கு அறிந்து கொள்ள இயலவில்லை.

**நல்ல செயல்கள்:**

குலோத்துங்கன் இவ்வாறு வலியப் போருக்குச் செல்லாமலும், வந்த பேரை விடாமலும் நாட்டை ஆண்டதோடு, வெளிநாடுகளுடனெல்லாம் தொடர்பு கொண்டு நாட்டில் நல்ல அமைதி கண்டவன். இவனைக் கல்வெட்டுக்களும் இலக்கியங்களும் 'சுங்கம் தவிர்த்த சோழன்' எனப் புகழ்கின்றன. தவிர்த்த சுங்கம் எத்தகையது என்பது தெரியவில்லை. இவன் காலத்தில் மறுபடியும் சோழநாடு முழுவதும் அளக்கப்பெற்றது. அவ் வளத்தல் செயலை மேற்கொண்ட அதிகாரியின் பெயர் 'உலகளந்தானாகிய திருவரங்கத் தேவன்' என்பதாகும். குலோத்துங்கன் சிறந்த சைவனேயாயினும், பிற சமயங்களையும் போற்றி வளர்த்தவனேயாவன். மன்னார்குடி இராசகோபாலசுவாமி கோயில் கட்டினவன் இவன்; பௌத்த சமணக் கோயில்களுக்கும் நிலங்கள் அளித்துள்ளான்.

இவன் நல்ல கலைஞன்; இயல் இசை நாடகம் எனும் முத்தமிழையும் போற்றி வளர்த்தவன். இவன் மனைவியருள் 'ஏழிசை வல்லபி' என்பவள் ஒருத்தி இருந்தாள். பரணி இவன் கலை உள்ளத்தை நன்கு பாராட்டுகிறது. இவன் கவிஞரோடும் கலைஞரோடும் பொழுது போக்கினவன்; சிறப்புப் பெயர்கள் பலவும் சிறந்த பட்டங்கள் பலவும் பெற்றவன். அபயன், செயதரன், சயதுங்கன், விருதராசபயங்கரன், கரிகாலன், இசை நாராயணன், உலகுய்யவந்தான், திருநீற்றுச் சோழன், மனுகுல தீபன், உபய குலோத்தமன் முதலியன இவன் சிறப்புப் பெயர்

களாம். கவி குமுத சந்திரன் என்ற சிறப்புப் பெயர் பெற்ற திருநாராயண பட்டர் என்பவர் இவன் புகழைக் 'குலோத்துங்கசோழ சரிதை' என்ற நூலாகப் பாடியுள்ளார்.[1]

இவன் தலைநகர் கங்கைகொண்ட சோழபுரமேயாகும். காஞ்சிபுரமும் பழையாறையும் சில காலம் தலைநகர்களாய் இருந்தன போலும்! இவன் பட்டத்தரசி மதுராந்தகி. இவள், இவன் ஆட்சியாண்டு 28இல் மறைந்திருக்க வேண்டும். பின்பு தியாகவல்லி பட்டத்தரசியாயினள். மூன்றாம் மனைவி ஏழிசை வல்லபி. இம் மூவரன்றி வேறு நான்கு மனைவியரும் இருந்தனர். இவருக்கு மைந்தர் எழுவர்; மகளிர் இருவர். அனைவரும் முதல் மனைவியின் மக்களே என்பர். அவருள் விக்கிரம சோழனே அடுத்துப் பட்டத்துக்கு வந்தவன். குலோத்துங்கன் சகோதரிகளாகிய குந்தவ்வை, மதுராந்தகி இருவரும் தில்லையில் பற்றுக் கொண்டவராகப் பல பணி புரிந்தனர். இவனுக்கு அமைச்சரும் வீரரும் பலராவர். பல சிற்றரசர் இவன் கீழ் இருந்தனர். அரசியல் அதிகாரிகளும் பலர். அவருள் கருணாகரத் தொண்டைமான் படைத்தலைவன். அப்படைத்தலைவன் புகழ் கலிங்கத்துப் பரணியில் சிறக்க நின்றுள்ளது. இப்பரணியில் கருணாகரன், குலோத்துங்கன் ஆகியோர் புகழ் மட்டுமன்றிச் சோழர் பரம்பரையின் புகழும் நன்கு பேசப்பட்டுள்ளது. சோழர் பரம்பரையிலே மிகச் சிறந்த அரசராகப் போற்றப்பட்டவருள் கடைசி அரசன் குலோத்துங்கனேயாவன். இவனுக்குப் பின்னும் இவன் பரம்பரையைச் சேர்ந்த சிலர் அடுத்த

1. பிற்கால சோழர் சரித்திரம், பண்டாரத்தார், பக்.50

ஒரு நூற்றாண்டுக்குமேல் ஆண்டுவந்தார் என்றாலும் இவனை விஞ்சி நின்றவர் யாருமிலர்.

**விக்கிரமன்:**

குலோத்துங்கனுக்குப்பின் பட்டத்துக்கு வந்தவன் அவன் மகன் **விக்கிரமன்**. இவன் பரகேசரி எனப் பட்டான்; இவன் 1118 முதல் 1135 வரை ஆண்டவன்; இளமையில் வேங்கிநாட்டு அரசப் பிரதிநிதியாய் இருந்து, 1119இல் சோழநாட்டு இளவரசுப் பட்டம் எய்தித் தந்தை இறந்த பிறகு 1120இல் அரசனானவன். இவன் மூத்தோர் முன்னரே போர்களில் இறந்தனர். இவன் ஆனி மாத உத்திரட்டாதியில் பிறந்தவன். இவனுக்கு இருவகை மெய்க்கீர்த்திகள் உள்ளன. இளமையில் தென்கலிங்கப் போர் நிகழ்த்தியவன் இவன் என்று கண்டோம். 1126இல் மேலைச் சாளுக்கிய விக்கிரமாதித்தன் இறக்க, பின்பு வேங்கிநாடு விக்கிரமனிடம் வந்தது. இவன் சிற்றப்பன் மகா மண்டலேசுவரன் நப்பையன் அதை ஆண்டான். மைசூர்க் கல்வெட்டின் மூலம், தந்தை இழந்த கங்கபாடியின் ஒரு பகுதியையாவது இவன் கைப்பற்றியிருக்க வேண்டும் என்பது தெரிகின்றது. இவன் காலத்தில் 1125இல் தொண்டை நாட்டிலும் 1128இல் சோழநாட்டிலும் வெள்ளத்தால் பஞ்சங்கள் உண்டாயின.

இவன் சிறந்த சிவபக்தன்; தில்லைக்குப் பல பணிகள் செய்துள்ளான்; பொன் வேய்ந்தான். தில்லைத் தேருக்குப் பொன் வேய்ந்து முத்துவடம் அளித்தான். பொன்கலனும் பொன் கற்பகத்தருவும் செய்தளித்தான். சிதம்பரத்தில் 'விக்கிரமசோழன் திருவீதி' என்று ஒன்று உண்டு. இதைக் குலோத்துங்கன் பிள்ளைத் தமிழில் ஒட்டக்கூத்தர் குறிக்கின்றார். கிள்ளையில் உள்ள மாசிக்

கடலாட்டு மண்டபமும் இவன் பெயரில் அமைத்ததாக வேண்டும் என்பர்.

இவன் தலைநகர் கங்கைகொண்ட சோழபுரமே; பழையாறை தங்குமிடமாய் இருந்தது. தில்லை, காட்டு மன்னார்கோயில் ஆகிய இடங்களில் அரசமாளிகைகள் இருந்தன. இவன் காலத்தில் போர் அதிகம் இன்மை யின், நாட்டை இவன் அமைதியாக ஆண்டான். ஒட்டக் கூத்தர் இவன் அவைக்களப் புலவராய் இருந்து மூவர் உலாவைப் பாடினார்; தக்கயாகப்பரணி என்ற நூலும் பாடினார். இவன் பல தானங்கள் செய்தமையின் 'தியாக சமுத்திரம்' என்ற சிறப்புப் பெயர் பெற்றான். இவனுக்கு முக்கோக்கிழான் அடிகள், தியாக பதாகை, நேரியன் மாதேவி என மூன்று மனைவியர் இருந்தனர். இவன் மகன் இரண்டாம் குலோத்துங்கன் இவனுக்குப் பின் பட்டத்துக்கு வந்தான். 1133இல் இளவரசுப் படடம் கட்டி, விக்கிரமசோழன் 1135இல் மறைந்தான் இவனும் தந்தை குலோத்துங்கனைப் போலவே பல அரசியல் அதி காரிகளையும் வைத்திருந்தான். ஆந்திர மன்னர் உட் படப் பலர் இவனுக்குக் கப்பம் கட்டினர்.

## குலோத்துங்கன்—II:

விக்கிரமன் மகன் இராசகேசரி **குலோத்துங்கன்—II** கி. பி. 1133 முதல் 1150 வரை அரசாண்டான். இவன் கல்வெட்டுக்களில் அதுவரை காணாத வகையில் அரிய தமிழ் மணம் கமழ்கின்றது. இவன் காலத்தில் நாட் டில் போர் இல்லையாதலால், நல்ல அமைதி குடிகொண் டிருந்தது. இவன் முன்னோரைப்போலத் தில்லையைச் சிறப்புறச் செய்தான். தில்லையில் இவன் பெருந்தெருக் களை அமைத்தான்; பேரம்பலத்தைப் பொன்வேய்ந் தான்; எழுநிலைக் கோபுரம் எடுப்பித்தான்; சிவகாமிக்

கோட்டம் அமைத்தான்; தேர் செய்தான்; குளம் வெட்டினான்; பசு, எருது, யானை முதலியவற்றைக் கோயிலுக்கு வழங்கினான். எனினும், இவன் தில்லையில் செய்த ஒரு செயல் அவனுக்கு இழுக்குத் தேடித்தந்தது. பிற சமயங்களில் வெறுப்புக் கொள்ளாதவனாயினும், தில்லை நடராசர் மேலிருந்த பற்றின் காரணமாக, அக்கோயிலில் நந்திவர்மப் பல்லவமன்னனால் எட்டாம் நூற்றாண்டில் அமைக்கப்பெற்ற திருமால் படிமத்தைக் கடலில் எறிந்தான். இதனால் வைணவர் நொந்தனர். மேலே காட்டிய பணிகளுள் சில இவன் தந்தையால் தொடங்கப் பெற்று இவனால் முடிக்கப் பெற்றன என்பர்.

நாட்டில் போரில்லை எனினும் எல்லை சுருங்காமலே இருந்தது. இவன் நல்ல கலைப்புலமை உடையவன். எனவே, ஒட்டக்கூத்தரிடம் பெருமதிப்பு வைத்திருந்தான். இவனை அவர் பலவாறு பாராட்டுகிறார். நாட்டு அமைதி இவனைக் கலை விநோதனாக்கியது. இவன்மேல் பிள்ளைத் தமிழ் பாடினார் கூத்தர். தமிழில் தண்டியலங்காரம் செய்த தண்டியாசிரியர் இவன் அவைக்களப் புலவருள் ஒருவர். (மேலே பல்லவர் காலத்தில் வடமொழித் தண்டி ஆசிரியரைக் கண்டோம்.) கம்பர், சேக்கிழார் இருவரும் இவன் காலத்தவர் என்பர். அக்கூற்று ஆராய்தற்குரியதாகும். இருவரும் ஒரே காலத்தவர் அல்லர் என்பது பலருடைய கருத்தாகும்; அதுதான் உண்மையுங்கூட.

இவன் தலைநகரும் கங்கை கொண்ட சோழபுரமே. ஆயினும், இவன் தில்லையிலும் நெடுங் காலம் தங்கினான். இவனுக்கு அநபாயன், அபயன் எதிரிலிப் பெருமாள், கலி கடிந்தான், திருநீற்றுச் சோழன், பெரிய பெருமாள் எனப் பல பட்டங்கள் இருந்தன. இவற்றின்

வழி இவன் பணியும் செயலும் நன்கு தெரிகின்றன. இவன் பட்டத்தரசி தியாகவல்லி. முக்கோக்கிழான் அடிகள் என்று மற்றொரு மனைவியும் இருந்தாள். இவனுக்குப் பின் இவன் மகன் **இராசராசன்** பட்டத்துக்கு வந்தான்.

## இராசராசன்—II.

பரகேசரி **இராசராசன்—II** பதினேழ் ஆண்டுகள் **(1146—1163)** அரசாண்டான். இவன் காலத்தும் நாட்டில் போரில்லை எனினும் இவன் தந்தையைப் போன்றே பரந்த நிலப்பரப்பைப் பெற்றிருந்தான்; நாட்டில் அமைதி நிலவிற்று. இவன் தமிழ், வடமொழி இருமொழிகளிலும் வல்லவனாகிப் பற்றுக்கொண்டு அவற்றை வளர்த்தான்; தில்லைக்குப் பல திருப்பணிகள் செய்தான்; தந்தை கடலுள் ஆழ்த்திய தில்லைத் திருமால் படிமத்தைத் தேடிக் கொணர்ந்து தில்லையிலேயே அமைத்துச் சிறப்புச் செய்து, தன் குடிக்கு உண்டான பழியை நீக்கிக் கொண்டான்.

இவன் போர்கள் செய்ததில்லை என்றாலும், தக்கயாகப்பரணி இவனை வஞ்சியும் மதுரையும் கொண்டான் எனக் குறிக்கிறது. ஒரு வேளை திறை செலுத்த மறுத்தமையால் அவர்களை ஒறுத்துத் தண்டம் செய்திருப்பான் எனக் கொள்ளல் பொருந்தும். காவிரிக்கு மலயமலைப் பக்கத்தில் வழி கண்டு நாட்டில் நீர் வளம் பெருகச் செய்தவன் இவன் என்பர். இவன் ஆட்சியின் முற்பகுதியில் கங்கைகொண்ட சோழபுரமும் பிற்பகுதியில் பழையாறையும் தலைநகர்களாய் இருந்தன. கும்பகோணத்துக்கு அருகில் உள்ள தாராசுரத்தில் இவன் 'இராசராசேச்சரம்' என்ற பெருங் கோயிலை எடுப்பித்தான். அக்கோவிலின் பெயரே பின்பு 'தாராசுரம்' என மருவி வழங்கப்பெற்றுள்ளது.

ஒட்டக்கூத்தரே இவன் அவைக்களப் புலவர். இவன் காவிரிக் கரையில் இருந்த கேசவசாமி என்ற வடமொழிப் புலவரையும் ஆதரித்தான். அவர் அரசியல் அதிகாரிகளுள் ஒருவராய் இருந்ததுமன்றி, இவனுக்கு வடமொழி பயிற்றிய ஆசிரியராயும் இருந்தார். இவன் விருப்பப்படி வடமொழி அகராதி ஒன்றும் எழுதினார். தன் முன்னோரைப் போன்று இவனும் பல சிறப்புப் பெயர்களைப் பெற்றிருந்தான். இவனுக்கு மனைவியர் நால்வர் இருந்தனர். திருக்கோவலூர்ச் சிற்றரசன் மகள் அவனிமுழுதுடையாளே பட்டத்தரசி. ஆந்திர நாட்டிலும் தமிழ்நாட்டிலும் இவன் கீழ் அடங்கிய பல சிற்றரசர் இருந்தனர்.

இம்மன்னன் பழையாறை மாளிகையில் நோயுற்று இறக்கும் தருவாயில் இருக்கும்போது, இவன் மைந்தர் இருவரும் ஈராண்டும் ஓராண்டும் நிரம்பிய குழந்தைகளாய் இருந்தனர். எனவே, தாயத்தாருள் ஒருவராகிய நெறியுடைய பெருமாள் புதல்வன் எதிரிலிப் பெருமாளைக் கங்கைகொண்ட சோழபுரத்திலிருந்து வரவழைத்து, இளவரசுப் பட்டம் கட்டி, இவன் இறந்தான். அமைச்சர் தலைவனாகிய திருச்சிற்றம்பலமுடையான் பெருநம்பி, குழந்தைகளையும் நாட்டையும் காத்தான். பின்பு நான்கு ஆண்டுகள் கழித்து இவ்வெதிரிலிப் பெருமாள் இராசாதிராசன் என்ற பெயருடன் முறைப்படி சோழப் பேரரசின் மன்னனானான்.

## இராசாதிராசன்—II: (1164-1178)

இராசகேசரி இராசாதிராசன் II விக்கிரமனின் பேரன். இவன் காலத்தில் பாண்டியநாட்டில் தாயத்தார் போர்கள் நடைபெற்றன குலசேகரன், பராக்கிரம பாண்டியன் இருவரும் பட்டம் கருதிப் போரிட்டனர்.

குலசேகரனுக்கு இராசாதிராசனும், பராக்கிரமனுக்கு ஈழ வேந்தன் பராக்கிரமபாகுவும் உதவினர் ஈழ வேந்தன் வருமுன் குலசேகரன் முறைப்படி ஆண்ட பராக்கிரமனைக் கொன்று அவன் நாட்டைக் கைப் பற்றினான். பின் வந்த ஈழ வேந்தன் குலசேகரனை வென்றான். பல முறை தோற்ற குலசேகரன், கடைசியில் 1167ல் சோழனிடம் வந்து அடைக்கலம் புகுந்து உதவி வேண்டினான். பாசிப்பட்டினப் போரில் ஈழத்தார் வெற்றி பெற்றாலும் இறுதியில் சோழர் படை பாண்டி நாட்டைக் கைப்பற்றியது. குலசேகரனே பாண்டி நாட்டை ஆண்டான். ஈழ வேந்தன் பராக்கிரமபாகு தன் தோல்வி கருதி மீண்டும் சோழ நாட்டின் மேல் படையெடுக்க முயன்றான். எனினும் இராசாதிராசன் தன்னிடம் வந்திருந்த ஈழ நாட்டுச் சீவல்லபனுடன் பெரும்படை கூட்டிப் போருக்கு அனுப்பினான். சீவல்லபன் ஈழம் சென்று பராக்கிரமபாகுவைத் தோற்கடித்துத் திரும்பினான். இந்நிலையில் தோற்ற பராக்கிரமபாகு தன் விரோதி குலசேகரனை நண்பனாக்கிக் கொண்டு மகளையும் கொடுத்தான் பாண்டியனும் சோழன் உதவியை மறந்து விரோதியானான். சோழர் படை குலசேகரனை அழித்துப் பாண்டிய நாட்டிற்கு வீரபாண்டியனை மன்னனாக்கிற்று இப்போர்கள் கி. பி. 1167க்கும்—1175க்கும் இடையில் நடைபெற்றன என்பர். இவ்வாறு வெற்றி கொண்ட இராசாதிராசன் மதுரையும் ஈழமும் கொண்ட சோழ இராசகேசரி வர்மன் எனச் சிறப்பிக்கப் பெற்றான்.

இவன் பட்டத்தரசி முக்கோக்கிழான் அடிகள். புவனமுடையாள் என்ற பெயரும் அவளுக்கு உண்டு. இவன் ஆட்சிக் காலத்திலும் எல்லை குன்றா நிலையில் நாட்டில் பல சிற்றரசர்களும் (ஆந்திரர் உட்பட) கப்பம் கட்டி வாழ்ந்தனர்.

குலோத்துங்கன்-III:

இராசாதிராசனுக்குப்பின் **பரகேசரி குலோத்துங்கன்** (1178—1218) பட்டத்துக்கு வந்தான். இவன் யார் என்பது தெரியவில்லை. இவனை இரண்டாம் இராசராசன் தம்பி என்றும், கொங்கு சோழர் பரம்பரையினன் என்றும் கூறுவார் கூற்றுப் பொருந்தாது இவன் இரண்டாம் இராசராசன் பழையாறையில் இறக்கும் போது விடப் பட்ட இரண்டாண்டுக் குழந்தையே எனக்கொள்ளல் பொருத்தமாகும். இவன் இரண்டாம் இராசராசன் கட்டிய இராசராசேச்சுரத்தைத் (தாராசுரம்) தன் தந்தை கட்டியதாகக் கூறிக்கொள்வதே இதற்குச் சான்றாகும். இவன் கி.பி. 1178 முதல் 1218 வரை ஆண்டான். இவன் ஆட்சித் தொடக்கத்தில் கல்வெட்டுக்கள் பல உள்ளன. முன் இராசாதிராசனால் முறியடிக்கப்பட்ட குலசேகரன் மகன் விக்கிரமன் இவனை அடுத்தான் இராசாதிராச னால் அரசனாக்கப்பட்ட வீரபாண்டியனும் சோழர் உதவியை மறந்து ஈழத்தாருடன் நட்பினனாயினன். எனவே, குலோத்துங்கன் வீரபாண்டியனை வென்று விக்கிரமனைப் பாண்டி நாட்டு மன்னனாக்கினான். மீண்டும் வீரபாண்டியன் சேரன் துணைக்கொண்டு சோழரை எதிர்த்தான் இம்முறை சோழன் அவனை அடியோடு முறியடித்தான் பிறகு வேறு வகையன்றி வீரபாண்டியன் சேரன் வீரகேரளனை அடைக்கலம்புக, இருவரும் சோழனை வந்து அடுத்தனர். சோழன் அவர்களுக்குச் சிறப்புச் செய்து வீரபாண்டியனுக்குப் பாண்டி நாட்டின் ஒரு பகுதியையும் அளித்தான். இவை அனைத்தும் 1188—1193-ஆம் ஆண்டுகளுக்கு இடையில் நடை பெற்றன.[1]

1. பிற்காலச் சோழர் வரலாறு II-பண்டாரத்தார், பக்கம் 146-151

பழமையாகத் திறை செலுத்திவந்த கொங்கு வேந்தரும் இவனை எதிர்த்துத் திறைகட்ட மறுத்திருப் பார்போலும். எனவே, அவர்கள் மேலும் படை எடுத்துச் சென்று வென்று, கருவூரில் 'சோழ கேரளனா'க முடி சூட்டிக் கொண்டான். கருவூரும் 'முடிவழங்கு சோழபுர' மாயிற்று. வடக்கிலும் சிலர் அடங்கி இருந்தனரேனும், சில ஆந்திரமன்னர், பாண்டி நாட்டில் சோழன் கருத் திருத்திய போது கிளர்ச்சி செய்தனர். கி.பி. 1194—97ல் அவர்களை ஒடுக்க வடக்கிலும் படையெடுத்துச் சென்று வெற்றிகண்டான். எனினும் நெல்லூருக்குக் அப்பால் இவன் கல்வெட்டு இல்லையாதலால், அப்பகுதிகளை இவன் கைவிட்டிருக்க வேண்டும் எனத் தெரிகின்றது.

பாண்டி நாட்டில் 1190ல் வீரபாண்டியனுக்குப் பின் வந்த அவன் மகன் குலசேகரனுடன் இவன் மாறுபட்டான் போலும்! அவனை மட்டியூர், கழிக்கோட்டை ஆகிய ஊர்களில் போரிட்டுத் துரத்திவிட்டான். பின்பு சோழன் மதுரை புகுந்து, 'சோழ பாண்டியன்' என்ற பெயரோடு முடிசூட்டிக் கொண்டான். மூன்று மண்டலம் கொண்ட மையால், 'திரிபுவன வீர தேவன்' என இவன் விளங் கினான். மதுரையில் இருந்தகாலை அங்குத் திருக்கோயி லுக்கு விழாச் செய்து, கோபுரங்களுக்கும் பொன் வேய்ந் தான். பின் சிலநாட் கழித்து அடைக்கலம் புகுந்த குலசே கரனுக்குப் பாண்டிநாட்டை வழங்கினான் இவ்வாறு இவனுக்கு மூன் நாட்டில் போரின்றி அமைதியாய் இருப் பினும் இவன் காலத்தில் போர்கள் நிகழ்ந்தன. எனினும் இவன் போரோடு பல நல்ல பணிகளும் புரிந்து நாட்டைக் காத்ததோடு பல புலவரையும் ஆதரித்தான்.

இவன் காலத்தில் நாடு குமரி முதல் வேங்கி வரை இருந்தது. இவனும் முன்னோர்போலச் சிறந்த சிவ

பத்தன். இவன் இறைவனால் 'நம் தோழன்' என வழங்கப் பெற்றான் என்பதைத் திருவாரூர்க் கல்வெட்டு ஒன்றால் அறியலாம். இவன் பல கோயில்கள் கட்டினான். இவன் திரிபுவனன் ஆனமையின், திருவிடைமருதூர்ப் பக்கத்தில் 'திரிபுவன வீரேச்சுரம்' என்ற கோயிலைக் கட்டினான்; தில்லையில் பொன் வேய்ந்தான். இவன் சைவனாயினும், பிற சமயங்களையும் வெறுக்காமல் வளர்த்தான்; சைனப் பள்ளிகளுக்கும் இறையிலியாக நிலங்களை விட்டான்.

இவன் தலைநகரும் கங்கைகொண்ட சோழபுரமே. பழையாறை இரண்டாந் தலைநகராகவும், விக்கிரம சோழபுரம் சில காலம் தங்குமிடமாகவும் இருந்தன. இவன் பட்டத்தரசி புவனமுழுதுடையாள். வேறொரு மனைவியும் இருந்தனர். இவனை அடுத்து இவன் மகன் இராசராசனே பட்டத்துக்கு வந்தான்.

இவன் பல புலவர்களை ஆதரித்த வள்ளல். நேமிநாதம் இயற்றிய குணவீர பண்டிதர், வச்சணந்தி மாலை இயற்றிய வச்சணந்தி முனிவர், நன்னூல் இயற்றிய பவணந்தியார் போன்ற இலக்கணப் புலவரும் வேறு பல புலவரும் இவன் காலத்தவர் என்பர். இவன் அவைக்களப் புலவராகிய வீராந்தகப் பல்லவராயர் பல பிரபந்தங்கள் பாடினார். இவன் காலத்தில் பாரதம் தமிழில் பெயர்த்தெழுதப்பட்டது.

சேக்கிழார் இவன் காலத்தில் பெரிய புராணம் பாடினர் என்பர் சிலர்;[1] இரண்டாங் குலோத்துங்கன் காலத்தில் இருந்தவர் என்பர் சிலர்; கம்பருக்கு முற்பட்டவர் என்பது பலர் கருத்து. இவன் முன்னோரைப் போலவே இவனுக்கும் பல சிறப்புப் பெயர்கள் இருந்தன. வீரராசேந்திரன், முடிவழங்கு சோழன், சோழ கேரளன்,

1. பிற்காலச் சோழர், பண்டாரத்தார். பக்கம் 166

திரிபுவன வீரதேவன், முடித்தலைக் கொண்டான், உலகுடையான், இராசாக்கள் தம்பிரான், உலகுய்ய வந்தான், தனி நாயகன் என்பன போன்ற பெயர்கள் இவனுடையன.

இவன் காலத்தில் ஆட்சியாண்டு 12, 13ல் தொண்டை நாட்டில் மழையால் பஞ்சமும், 23, 24ல் நடுநாட்டில் மழை இன்மையால் பஞ்சமும் உண்டாயின. பஞ்சகாலத்தில் நாட்டில் வாழ்ந்த செல்வர்கள் உதவிய சிறப்புக்களையெல்லாம் கல்வெட்டுக்கள் நன்கு குறிக்கின்றன. இவன் காலத்தில் சைவத் துறவியரின் குகைகளையும் மடங்களையும் வடநாட்டுப் பிராமணர்கள் அழித்தார்களாம். அவற்றை இவன் மகன் மூன்றாம் இராசராசன் செப்பம் செய்தான்.

**ஆட்சியில் உள்ள சிற்றரசரும் அதிகாரிகளும்:**

இவன் ஆட்சி ஆண்டு 38ல் நாடு மறுபடியும் அளக்கப் பெற்றது. இப்படி ஒரு நூற்றாண்டுக்கு ஒரு முறை சோழர் காலத்தில் நாட்டு நிலம் அளக்கப் பெற்றது போலும்! இவன் ஆட்சியில் இருக்கும் போதே தன் மகன் இராசராசனுக்கு இளவரசுப் பட்டம் கட்டினான். இவன் காலத்தில் சில சிற்றரசர் ஆண்டு வந்தனர். இவன் காலத்துக்குப் பின் சோழப் பேரரசு சிதறலாயிற்று எனலாம் சிற்றரசர் இறுதியாக இவனுக்குத்தான் திறை செலுத்தினர் போலும்! எனவே, சோழர் வரலாற்றின் உச்சநிலை இவனோடு முடிவடைகின்றது. அதனால் இவன் காலத்திருந்த சில அரசியல் அதிகாரிகளையும் அவர்தம் அலுவல்களையும் காணல் பொருத்தமானதாகும் ஒவ்வொரு பேரரசன் கீழும் நல்ல அரசியல் அதிகாரிகள் இருந்தார்கள் எனக் கண்டு கொண்டே வந்தோம். இங்கு நம் குலோத்துங்கன் கீழ் இருந்த அரசியல் அதிகாரிகளையும்

காணலாம்; அவர்தம் இயற்பெயர்களோடு அவரவர் பெற்ற விருதுப்பெயர்கள் முதலியனவும் இடம்பெற்றுள்ளமையைக் காணலாம். இவ்வாறு பல சிற்றரசர்களையும் அரசியல் அதிகாரிகளையும் உடன் வைத்து ஆண்ட இறுதிச் சோழ மன்னன்—ஏன்—தமிழ் மன்னன் இக் குலோத்துங்கனே என்பது பின்வரும் வரலாற்றால் நன்கு விளங்கும்.

## இவன் கீழிருந்த அதிகாரிகளும் பிறரும்[1]

1. கிளியூர் மலையமான் இறையூரன் இராசராசச் சேதிராயன் (குறுநில மன்னன்)
2. மலையமான் நரசிம்மவர்மன் ஆகிய கரிகாலச் சோழ ஆடையூர் நாடாள்வான் (குறுநில மன்னன்)
3. அதிகமான் இராசராச தேவன்.
4. விடுகா தழகிய பெருமான் (அதிகமான் மகன்)
5. அமராபரண சீயகங்கன் (சிற்றரசன்; நன்னூல் எழுது வித்தவன்)
6. அம்மையப்பன் பாண்டி நாடு கொண்டானாகிய கண்டர் சூரியன் சம்புவராயன் (படைத் தலைவன்)
7. ஏகவாசகன் குலோத்துங்க சோழ வாணகோவரையன் (அரசியல் தலைவன்)
8. பொன் பரப்பினான் மகதைப் பெருமாளான இராசராச வாணகோவரையன் (சிற்றரசன்; சில போர்களில் படைத்தலைவன்)
9. கூடலூர் அரச நாராயணன் ஆளப்பிறந்தான் வீர சேகரக் காடவராயன் (பாடி காவல் அதிகாரி)
10. கூடல் ஏழிசை மோகன் மணவாளப் பெருமாள் வாணிலை கண்ட பெருமாளாகிய இராசராசக் காடவராயன் (பல்லவ மரபினன்)

---

1. பிற்காலச் சோழர் சரித்திரம் II பண்டாரத்தார் (பக். 173—180)

இராசராசன் III: (1218-1256)

மூன்றாங் குலோத்துங்கனுக்குப் பின் இராசகேசரி மூன்றாம் இராசராச சோழன் பட்டத்துக்கு வந்தான். இவன் தந்தை காலத்திலேயே இளவரசுப் பட்டம் பெற்றவன்; இவன் திறமற்றவன். எனவே, இவன் காலத்தில் சோழ நாட்டு எல்லை குறுகிவிட்டது. வடக்கே ஹொய்சளரும் தெற்கே பாண்டியரும் தலைதூக்கினர், எனினும் அவர்கள் இருவரும் தமக்குள் மாறிமாறிப் போரிட்டுக் கொண்டமையே இவன் இடையில் சிறிதளவாவது தன் நாட்டைக்காத்துக் கொள்ள உதவிற்று எனலாம். விசயாலயன் காலத்தில் தொடங்கிய சோழப் பேரரசு இவன் காலத்தில் வீழ்ச்சியுற்றது எனலாம். காடவராயன் போன்ற பல சிற்றரசர் உரிமை பெற்றனர்.

1201ல் மதுரையில் மாறவர்ம சுந்தரபாண்டியன் பட்டமெய்தினன். அவன் சிறந்த வீரன். தன் முன்னோர் உற்ற அல்லல்களையெல்லாம் உணர்ந்த அவன், குலோத்துங்கன் இறந்ததும் (1218ல்) சோழ நாட்டின் மேல் படையெடுத்தான். அவன் கல்வெட்டுக்கள் பல சோழ நாட்டில் உள்ளன. அவன் தஞ்சையையும் உறையூரையும் தகர்த்தான். சோழ மக்கள் துன்பமுற்றனர். இராசராசன் சுற்றத்துடன் மறைந்து வாழ்ந்து வந்தான். படை எடுத்து வந்த பாண்டியன் பழையாறையில் தங்கி, சிதம்பரத்தையும் தரிசித்துக் கொண்டு தன் நாடு திரும்பினான். அது காலை இராசராசன் பாண்டியனுடன் சமாதானம் செய்து கொண்டு இழந்த சோழ நாட்டைப் பெற்று, மீண்டும் பழையாறையில் இருந்து கொண்டு அரசாளத் தொடங்கினான். அவ்வாறு பாண்டியன், இராசராசனுக்குச் சமாதானத்தில் நாட்டைத்தந்தமைக்குக் காரணம் வடக்கிலிருந்த போசளர் சோழருக்கு உதவ வந்தமையேயாம்.

போசள மன்னன் வல்லாள தேவன் சோழன் ஒருவனின் மகளை மணந்திருந்தான்.

இராசராசனது ஐந்தாம் ஆண்டில் உள்நாட்டுக் குழப்பம் உண்டாயிற்று. மகதநாட்டு வாணகோவரையன் படையெடுப்பே அக்கலகத்துக்குக் காரணம் என வேள்விக்குடிக் கல்வெட்டுக் குறிக்கிறது. சமாதானத்தி்) நாட்டைப் பெற்ற இவ்வரசன் வழியறியாது மீண்டும் பாண்டியனைப் போருக்கு இழுத்தான். சுந்தர பாண்டியன் 1231இல் மீண்டும் படையெடுத்தான் சோழன் தோற்கப் பாண்டியன் பழையாறை வந்து முடி சூட்டிக் கொண்டான். தோற்ற இராசராசன் வடக்கே குந்தள அரசர்தம் உதவியைப் பெற வடக்கு நோக்கிச் செல்ல, வழியில் காடவமன்னன் அவனைச் சிறை பிடித்துச் சேந்த மங்கலத்தில் சிறை வைத்தான். அஃது அறிந்த போசள மன்னன் வீர நரசிம்மன் படை எடுத்து வந்து காடவனை வென்று இராசராசனை மீட்டதோடு, சுந்தர பாண்டியனைத் தோற்கடித்துச் சோழ நாட்டையும் மீட்டு இராச ராசனிடம் ஒப்படைத்தான். அது முதல் இறுதி வரை இராசராசன் III அமைதியோடு நாட்டை ஆண்டு வந்தான். உள்நாட்டுக் குழப்பமும், சிற்றரசர் உரிமை எழுச்சியும், பாண்டியர் படையெடுப்பும் வளம் பெற்று வாழ்ந்த சோழநாட்டை நிலைகுலையச் செய்தன. எனவே போசள மன்னனது பெரும்படை ஒன்று என்றைக்கும் சோழனுக்கு உதவுமாறு காஞ்சியில் நிலையாக வைக்கப் பெற்றிருந்தது.

இவன் காலத்தில் சைவம் ஓங்கி இருந்தது. சந்தானக் குரவராகிய மெய்கண்டார் இவன் காலத்தில் வாழ்ந்தவர் என்பர். இவன் பட்டத்தரசி வா[illegible]நல விளக்கு புவன முழுதுடையாள். போசள மன்னன் வீர நரசிம்மன்

மகளையும் மணந்திருந்தான் இவன் இறக்கப் பத்து ஆண்டுகளுக்கு முன்பே 1246-ல் மகன் இராசேந்திரனுக்கு இளவரசுப் பட்டம் கட்டிவிட்டான். பலர் உரிமை பெற்ற போதிலும் ஒரு சில குறுநில மன்னர் இவன் கீழ் இருந்தனர் போலும்.

## இராசேந்திரன் III

மூன்றாம் இராசேந்திரன்(1246-1279) பரகேசரி என்ற பட்டப் பெயருடன் பிறகு பட்டத்துக்கு வந்தான். இவன் பாண்டியரால் சோழருக்கு நேர்ந்த அவமானத்தை நீக்க நினைத்தான்; பாண்டியரோடு போரிட்டான். இவன் இருவர் முடித்தலை கொண்டவன் எனப்படுகிறான். சுந்தரபாண்டியன் 1238ல் இறக்க, இரண்டாம் மாறவர்மன் பாண்டியநாட்டு அரசுகட்டில் ஏறினான். இராசேந்திரன் பாண்டிய நாட்டில் படையெடுத்துச் சென்று அவனைச் சிற்றரசனாக்கினான். இவன் வென்ற மற்றொரு பாண்டியன் குலசேகரன் எனலாம். ஆயினும் முன் சோழருக்கு உதவின போசள வேந்தன் வீர நரசிம்மன் மகன் வீர சோமேஸ்வரன் பாண்டியனுடன் சேர்ந்து சோழனை எதிர்த்தான். சோழர் தம் அகநாட்டிலேயே பலவிடங்களில் அவன் கல்வெட்டுக்கள் காணக்கிடக்கின்றன. தெலுங்குச் சோழர் உட்பட தெலுங்குநாட்டுச் சிற்றரசர் அனைவரும் உரிமை பெற்றனர். காஞ்சிபுரமும் அதன் சுற்றுப்புறங்களும் சோழர் கைவிட்டுச் சென்றன. கண்டகோபாலன் என்ற சிற்றரசன் காஞ்சி முதல் நெல்லூர்வரை அரசாண்டான்.

விராட்சதர் வாழும் வட இலங்கையை இவன் வென்றான் என ஒரு கல்வெட்டுக் கூறுகிறது. இவன் இலங்கைக்குச் சென்றிருக்க முடியாது. எனவே, ஓய்மா நாட்டு நல்லியக்கோடன் 'மாவிலங்கை' நாட்டை ஒரு

வேளை இவன் வென்றிருக்கக் கூடும். அங்கு வாழ்ந்த சம்புவராயர் தம்மை விராட்சதர் என்றே கூறிக்கொள்ளுகின்றனர்.[1]

பாண்டிய நாட்டில் பெருவீரனான இரண்டாம் சுந்தர பாண்டியன் 1251ல் பட்டத்துக்கு வந்தான். 1257ல் இவன் சோழ நாட்டின்மேல் படையெடுத்து வென்று இராசேந்திரனைச் சிற்றரசனாக்கினான். பல நாட்டு மன்னரை வென்று பாண்டிய நாட்டு எல்லையைப் பெருக்கினான் இவன் சோழர் ஆட்சியுப் பாண்டியருக்கு இடம் விட்டு அமைதியுற்றது எனலாம். இராசேந்திரன் கல்வெட்டு ஒன்று 33-ஆம் ஆட்சி ஆண்டில் உள்ளது. எனவே, இவன் 1276 வரை ஆண்டான் எனலாம். இவன் தலை நகரும் கங்கை கொண்ட சோழபுரமேயாகும் பட்டத்தரசி இயற்பெயர் தெரியவில்லை. அவள் சோழ குலமா தேவி என்றுவழங்கப்பெற்றாள். இவன் மக்களைப் பற்றிய குறிப்பு ஒன்றும் விளங்கவில்லை. இவன் காலத்துக்குப் பின் சோழ நாடு பாண்டிய நாட்டோடு இணைந்துவிட, பாண்டியர் ஆட்சி ஓங்கிற்று.

**சோழர் வீழ்ச்சி:**

இவ்வாறு விசயாலயன் ஆட்சிக் கால முதல் சிறந்தோங்கி நாட்டின் நலம்புரந்த சோழர் ஆட்சி இத்துடன் முடிவுற்றது. அதற்குப் பிறகு அது தலை எடுக்கவில்லை என்பது கண்கூடு. இவ்வாறு சோழர் பரம்பரை அழிந்து விட்டாலும், அவர்கள் செய்த பணிகளும் விட்டுச்சென்ற சின்னங்களும் இன்றும் நம்முன்னின்று அவர்களை நினைவூட்டிக்கொண்டே இருக்கின்றன. அவர்கள் காலத்தில் தமிழ்நாட்டு நிலையைக் காணின், அவர்கள் செய்த தொண்டின் சிறப்பு நன்கு விளங்கும் எனவே, அவர்கள் காலச் சோழ நாட்டைக் காணலாம்.

1. சோழர் வரலாறு II பண்டாரத்தார்..பக். 209

# XIV. சோழர் காலத்துத் தமிழகம்

## கி. பி. (850-1270)

**பாகுபாடு:**

தமிழ்நாட்டு வரலாறே இப் பிற்காலச் சோழர் காலத்திலேதான் திருந்திய முறையில் அமைக்கப்பட்டது எனலாம். திரு. நீலகண்ட சாஸ்திரியார் அவர்கள் சோழர் பரம்பரையை நன்கு ஆராய்ந்து, அவர்களைப் பற்றிய குறிப்புக்களை எல்லாம் விளக்கி, இறுதியில் சோழர் காலத்தில் தமிழ்நாடு பெற்ற நன்மைகளைப் பலப்பல பகுதிகளில் விளக்கியுள்ளார். சோழர் அரசியல் முறை, நாட்டு ஆட்சி, வரியும் பொருள் வருவாயும், சமுதாய வாழ்வும் வாழ்க்கை முறையும், விவசாயம், கைத்தொழிலும் வாணிபமும், நாணயம் முதலியன, கல்வி, சமயம், இலக்கிய வளர்ச்சி எனப் பலவகையில் தனித்தனியாகப் பகுத்துக் கொண்டு சோழர் காலத்தை ஆராய்கின்றார் சாஸ்திரியார் அவர்கள் தம் பெருநூலில்[1] அவர் ஒவ்வொன்றையும் தனித்தனியாக ஆராய்ந்து நன்கு தெளிவு படக் காட்டியுள்ளார்.

தென்னிந்தியா முழுவதும், தெலுங்கு நாடு உட்பட, இக்காலத்தில் சோழர்கள் ஆட்சியின் கீழ் இருந்தது எனலாம். கீழைச் சளுக்கியர் உறவின்வழி சோழருடன் கலந்து அவர் நாட்டைப் பிணைத்துக்கொண்டனர். மேற்குக் கடற்கரையில் மங்களூரிலிருந்து கிழக்கே வந்து பின் துங்கபத்திரையை எல்லையாகக் கொள்ளின், அதைப் பெரும்பாலும் சோழநாட்டு எல்லையாகக் கொள்ளலாம். சோழர்கள் அதற்கு முன்

---

1. The Cholas Vol. II Part I.

தமிழரசர்கள் அடையாத சிறந்த பட்டங்களைப் பெற்று ஆண்டார்கள். அரசர் சக்கரவர்த்திகள் என்றும் அரசியர் திரைலோக்கிய மாதேவி, அவனி முழுதுடையாள் என்றும் பட்டங்களைப் பெற்றிருந்தமையே சோழர் மிகப்பரந்த நிலப்பரப்பை ஆண்டவர் என்பதையும் அவர்களின் கீழ்ப் பல சிற்றரசர்கள் இருக்கச் சக்கரவர்த்திகளாய் விளங்கி னர் என்பதையும் விளக்கும். அவர்கள் தலைநகர்களாகத் தஞ்சையையும் கங்கைகொண்ட சோழபுரத்தையும் கொண்டிருந்தனர் எனினும், துணைத் தலைநகர்களாகக் காஞ்சிபுரமும் பழையாறையும் உடன் விளங்கின. அவர் கள் காலத்தில் நாகைப்பட்டினம் வாணிபத்தை வளர்த்த துறைமுகப் பட்டினமாய் இருந்திருக்க வேண்டும்.

**அரசர் தனி வாழ்க்கை:**

அரசர் தனி வாழ்வில் நாம் காண்பன ஒரு சில. அரச மாளிகையில் தனித்தனி சிறப்புப் பணியாளர் பலரும் இருந்தனர். சோழர்கள் விருந்து புரந்தோம்பும் பண்பில் அடிக்கடி விருந்தளித்து வந்தனர். இக்காலத்தில் பிற நாட்டுத் தூதுவர்கள்—அரசினர் விருந்தினராகத் தங்கி இருப்பது போன்று அக்காலத்தும் பல தூதுவர் வந்து விருந்தினராய்த் தங்கியிருந்திருப்பர். இந்நாட்டிலிருந்து பிற நாடுகளுக்குத் தூதுவர் சென்றனர் என மேலே கண் டோம். அதே நிலையில் பல நாட்டுத் தூதுவர் இங்கே வந்த தங்கியிருந்திருப்பர். அவர்களுக்கெல்லாம் அரச மாளிகையில் விருந்து நடைபெற்றிருக்கும். அக்காலத் தில் பல வெளிநாடுகளுடன் தமிழ்நாடு அரசியல் உறவு, வாணிபம், கலை முதலிய பல வகையில் தொடர்பு வைத்துக்கொண்டிருந்தமையின், வெளிநாட்டு மக்கள் அடிக்கடி வந்திருப்பார்கள். அந்த விருந்துகளிலெல்லாம்

குடி இல்லை. ஆனால், மாமிச உணவு படைக்கப்பட்டது போலும்! சோழர்கள் யாகத்திலும் தானமே சிறந்தது என்ற நம்பிக்கை உடையவர்கள். எனவேதான் அவர்கள் வரலாற்றில் ஒரு யாகத்தைக்கூடக் காணமுடிய வில்லை. ஆனால், அவர்கள் எத்தனை எத்தனையோ தானங்களைக் கோயில்களுக்கும் தனிப்பட்டவர்களுக்கும் செய்துள்ளமையை நாம் அறிகிறோம். அரசர்கள் மட்டு மின்றி, அவர்கள் குடும்பத்தாரும் அரசியல் அதிகாரிகளுங் கூடப் பலப்பல தானங்கள் செய்துள்ளார்கள். அக்கால மன்னருக்கு 'இராச குரு' என்ற அரச குரு ஒருவர் இருந் தார் எனலாம். அவர் அரசருக்கு அரச காரியங்களில் உதவினார் போலும்! அரச அவைக்களப் புலவர்களும் இருந்தனர்.

**கோயில்கள்:**

அக்காலத்துக் கோயில்கள் சமுதாயக் குடியிருப்புக் களாய் விளங்கின. கோயில்களே மக்கள் வாழ்க்கை முறைகளை விளக்கும் நிலைக்களன்களாய் அமைந்து விட்டன. அக்கோயில்களில் உள்ள கல்வெட்டுக்களே அக்கால வரலாற்றை இவ்வளவு விளக்கமாக அறிய நமக்குப் பயன்படுகின்றன. மற்றும் கோயில்கள் கலை வளர்த்தன. இசையும் நாடகமும் மட்டுமின்றி இயலும் கோயில்களில் வளர்ந்தது. இசை பாடுவோரும் நடன மாடுவோருமாகக் கலை வளர்ப்பவர் பலர் இக்காலத் தில் கோயில்களில் இருந்தனர். அவருடன் தேவாரம் முதலிய நல்ல சமய இலக்கியங்களைப் பயின்று அவற்றை முறைப்படி ஓதுவதற்காக ஓதுவார்கள் என்பாரும் இருந்து வந்தனர். அவர்களுக்கும் மற்றவர்களுக்கும் இறையிலி நிலங்கள் அளித்தனர். அவை பல இடங்

களில் இன்றளவும் அதே பெயர்களுடன் விளங்குவதைக் காணலாம். இப்படி முத்தமிழ் வளர்த்ததோடு, கோயில் களில் சிற்பங்கள், ஓவியங்கள் முதலியன அமைத்து அக் கலைகளையும் வளர்த்தனர். அக்காலத்தில் கோயில்களின் அமைப்பை நோக்கினால், கட்டடக் கலையில் சோழர் காட்டிய ஆர்வம் நன்கு விளங்கும் கடவுளர் உருவங்க ளோடு சிறந்த மன்னரும் மக்களும் தத்தம் முன்னோர் விக்கிரகங்களையும் கோயில்களில் அமைத்ததைக் காண்கி றோம்.

கோயில் கர்ப்பக்கிருக இலிங்கத்தின் அடியில் சில இடங்களில் எலும்புகள் இருக்கக்காண்கிறோம். இக்காலத் தில் திருப்பணி செய்யப் பலர் முன் வந்து சோழர் கோயில் கள் பல பழுதுற்றிருப்பதைச் சீர் திருத்தியுள்ளனர். அவர் கள் அவ்வாறு செப்பம் செய்யுங்கால் கருவறைகளை அகழ்ந்து இலிங்கங்களை அப்புறப்படுத்தும் போது எலும் புகள் சிலவிடங்களில் கிடைக்கின்றன. இவை எதற்காக இருக்கின்றன என்பது திட்டமாகத் தெரியவில்லை. எனி னும், புத்தர் வழிபாட்டில் இலங்கை நாட்டுக் கண்டி நகரில் எலும்பாகிய பல்லே முக்கியமாகப் போற்றப் படு வது போன்று அன்று தமிழ் நாட்டில் எலும்பினை ஏற்றம் தந்து போற்றினார்களா என்பதும் தெரியவில்லை. (கண்டி என்பதற்குச் சிங்கள மொழியில் பல் என்பது பொருள்.) அன்றிச் சிறந்த அடியவர்களை அடக்கம் செய்த இடங்கள் பிற்காலத்தில் பெருங்கோயில்கள் ஆயின என்று கொள்ளவும் வழி உண்டு. பிற்காலத்தில் மறைந்த பல பெரியவர்களைச் சமாதி செய்து அதன் மேல் கோயில் எழுப்பும் வழக்கத்தைக் காண்கின்றோம். எனினும், இந்த

இருவகை வழக்குப் பற்றியும் நமக்கு யாதோர் ஆதாரமும் இல்லையாகையால் எதையும் திட்டமாகக் கொள்ள முடியாது.

படைகள்:

அரசர்களுக்குப் பெருஞ்சேனை இன்றேல் இத்துணைப் போர்கள் செய்திருக்க முடியாது; கடற்படை, தரைப்படை இரண்டும் இருந்தன. தரைப்படையில் தேர்ப்படை தவிர, யானை, குதிரை, காலாட்படைகளும் இருந்தன எனலாம். சேனைக்கு உதவி செய்யப் பணியாளர்களும் (தற்காலச் செஞ்சிலுவைச் சங்கத்தார் போன்று) பலர் இருந்தார்கள் - என்று காண்கின்றோம். அரச சபையிலும் பிற முக்கியமான இடங்களிலும் பிராமணர்கள் இடம் பெற்றிருந்தார்கள். அவர்களுக்குச் சோழர்கள் வரியிலா நிலங்களையும் பொன்னையும் மணியையும் வாரி வழங்கினார்கள். இரணியகர்ப்பமும் துலாபாரமும் இவர்கள் காலத்தில் சாதாரண நிகழ்ச்சிகளாக இருந்தன போர்க் காலங்களில் சேனையில் உள்ளவர் மட்டுமேயன்றி, பொது மக்களும் போர்களில் கலந்து கொள்வார்களாம். போரில் வெற்றி காண்கையில் ஊரை அழிப்பதோடு சமூக நிலைக்களன்களாய் இருந்த கோயில்களையும் அழிப்பார்கள் போலும்! படைகள் இருக்குமிடத்தைக் கடகம் (மண்ணைக் கடகம்) என வழங்கினர். கடகம் என்பதற்குப் படை என்ற பொருள் உள்ளமை பிற்கால இலக்கியங்களால் அறியலாம்.

அரசன் நாட்டை ஆள்பவனாய் இருந்தபோதிலும் அவன் தன் விருப்பம் போல நாட்டு வாழ்வைத் திருத்தவில்லை எனலாம். மக்களைக் கலந்தே—அவர்கள் தேவை அறிந்தே—மன்னன் மக்களுக்கு உதவி வந்தான் தனி மனிதன் எண்ணத்துக்குச் சிறப்புத் தாராது பொதுமக்கள்

கருத்தறிந்தே பிற்காலச் சோழர் பணி புரிந்தனர். அரசன் சட்டம் இயற்றுபவனாய் இல்லை; சட்டத்தையும் அமைதியையும் காப்பவனாகவே இருந்தான். அமைச்சர்களும் மிக எளிமையாகவே அரசனது ஆணையை நிறைவேற்றி வந்தனர். ஏனாதி, மாராயன் போன்ற அரசியல் அதிகாரிகளும் அரசகாரியங்களைக் கவனித்து வந்தனர்.

## ஆட்சி அதிகாரிகள்:

கோயில் மக்கள் வாழ்வில் முக்கிய இடம் பெற்ற காரணத்தால் கோயிலுக்கு ஊறுசெய்பவர்களையும், கோயில் வருவாயை அழிப்பவர்களையும் அரசன் தானே நன்கு அறிந்து ஒறுத்து வந்தான் எனலாம். அமைச்சரும் பிறஅதிகாரிகளும் தவிர்த்து அரசருக்குத் திருமுகம் எழுதுவோரும் இருந்தனர். அவர்கள் மந்திர ஓலை, மந்திர ஓலை நாயகம், விடையில் அதிகாரி எனச் சிறப்பாக வழங்கப் பெற்றனர். நிலங்களின் தரமறிந்து அவற்றிற்கு வரி விதிப்பதற்காகப் புரவு வரித் திணைக்களம் (Dept. of Land Revenue) என்ற பகுதி ஒன்று இருந்தது. நாட்டில் நடைபெறும் அரசியல் தொழில்களை (Public Works) மேற்பார்வை செய்யக் கங்காணிகள் (Supervisors) இருந்தனர். கோயில் வரவு செலவு கணக்குகளைக் காணும் அதிகாரிகளும் (Commissioner of Endowments) கிராமச் சபைகளின் பணிகளை ஆராய்ந்து முத்திரை இடுவோரும் (Panchayat officers) இருந்தனர். இவர்களை யன்றி, மாமண்டலேச்சுரர் என்ற மண்டலங்களைக் காப்போரும், உடன்கூட்டத்து அதிகாரிகளும் அரசன் ஆணையினை மக்களுக்கு இடை நின்று அறிவித்து மக்

களுக்கு உதவி புரிந்து, மக்கள் எண்ணங்களை அரசனுக்கு உணர்த்துபவராவர் என ஆய்ந்து விளக்குகின்றனர்.[1]

வழக்கு முறை:

நீதியைப் பற்றிய கல்வெட்டு ஒன்றும் திட்டமாக இல்லையாயினும், சில தானக் கல்வெட்டுக்களை நோக்கின், பாவஞ்செய்வார் மிகக் கடுமையாகத் தண்டிக் கத்தக்கவர் என்பது தோன்றும். மற்றும் அக்காலத்தில் பெரிய புராணம் போன்ற இலக்கியங்களின் வழி நாட்டில் மக்கள் எப்படி நீதி பெற்றார்கள் என அறியலாம். நாட்டில் பல்வேறு பகுதிகளில் உள்ள மக்களின் ஊர்ச் சபைகளே அவ்வவ்வூரின் பழக்க வழக்கங்களுக்கும் நியதிக் கும் முறைக்கும் ஏற்ப நீதி வழங்கின. ஆகையால், அப்பொறுப்பை அரசன் ஏற்றுக் கொள்ளவில்லை. ஆட்சி, நீதி வழங்கும் நெறி இரண்டையும் ஒருவரே ஏற்றல் சிறக் காது என்ற உண்மையை இன்றைய அரசாங்கத்தாரும் உணர்ந்து வருகின்றார்களே!

அக்காலத்தில் உரிமை, குற்றம்[2] என்ற வேறுபாடு நீதியில் காணப்படவில்லை. தவறு செய்பவரைத் தண்டிக் கும் முறை ஊர்ச்சபையினிட மிருந்தது. தவறுகளைக் காணப் பல வழித்துறைகள் இருந்தன. பெரியபுராணத் தில் சுந்தரருக்கும் முதியவருக்கும் நடந்த வழக்கினை வெண்ணெய்நல்லூர் வேதியர் தீர்த்து வைத்தமுறை ஒரு சிறந்த சான்றாகும். அது இக்காலத்து உரிமை வழக்குப் போன்றதே அதை எண்ணி உண்மை உணரும்வழியில் 'ஆட்சியில் ஆவணத்தில் அன்றி மற்று அயலார் தங்கள்

1. The Cholas—Vol.II p. 254
2. Civil and Criminal

காட்சியில் மூன்றில் ஒன்று' காட்டுமாறு ஊர்ச்சபையார் கிழவரைக் கேட்டனர். அவர் ஆவணம் காட்டி வெற்றி பெற்றார். இன்றும் உரிமை வழக்கை அறிந்து உண்மை காண ஏறக்குறைய இதுபோன்ற முறை கையாளப் படுவதை நாம் அறிவோம். மற்றைய குற்றம் பற்றிய வழக்குகளையும் இவ்வூர்ச் சபையாரே ஆராய்ந்து தீர்ப்புக் கூறினர். திருடு, பொய்க்கையொப்பம், ஒழுக்கக் குறை முதலியன பெருங்குற்றங்களாக கருதப்பட்டன. இக் குற்றங்களை அரசகுடும்பத்தவர் செய்யின், அரசனே விசாரித்துத் தண்டிப்பான். மற்றவரை ஊர்ச்சபையார் தண்டிப்பர். இப்படி அரசியலுடன் ஆட்சி முறையையும் நிருவாகத்தையும் நீதியையும் சோழ மன்னர் ஒழுங்கு படுத்தி நாட்டை ஆண்டு வந்தனர்.

**கிராம ஆட்சி:**

சோழர் காலத்தில் கிராம ஆட்சியே சிறந்ததாய் விளங்கிற்று. கிராமச் சபைகளே மக்கள் ஆட்சியில் பெரும் பங்கு கொண்டன. ஒவ்வொரு கிராமத்துக்கும் ஒரு பெருஞ்சபையும், தனித்தனி பணிகளைக் கவனிப்பதற் காகச் சிறு உட்சபைகளும் (Committees) இயங்கி வந்தன. ஊரில் விளையும் பொருள்களைப் பொதுவாக வாங்கவும் விற்கவும் சிலரை இச்சபையார் ஏற்பாடு செய்திருந்தனர் கூட்டுறவு முறையில் பண்டக சாலைகள் இன்றேனும், பொருள்கள் முட்டுப்படாதிருக்கவும் பொருள்களின் விலைகள் ஏறியும் சரிந்தும் மக்களுக்கு ஊறுபடுத்தாதிருக் கவும் இத்தகைய ஒரு நல்ல முறையை ஏற்பாடு செய்திருந் தனர். இந்தச் சபையினர் தேர்வு மூலமே மக்களால் தேர்ந் தெடுக்கப்படுவர். உத்திரன்மேரூர் கல்வெட்டு ஒன்று,

குடவோலைவழித் தேர்தல் நடக்கும் வகையினை விளக்கிக் காட்டுகிறது. இவ்வூர்ச் சபைகளைத் தவிர்த்து, கோயில் நிருவாகத்திற்கெனவும், அறங்களைக் காப்பதற் காகவும் ஊர்தொறும் தனித்தனிச் சபைகளிருந்தன.

இச்சபைகளில் உள்ளோர் யாவரும் யாதொரு வருவா யினையும் எதிர்நோக்காது தொண்டு செய்யும் நிலையி லேயே தேர்ந்தெடுக்கப்பட்டனர். ஊர்ச் சபைக்குத் தலைவர் உளர். வியாபார சம்பந்தமான செயல்களைக் கவனிக்கும் அதிகாரி 'நாயகம்' எனப்படுவர். இச்சபை கள், கோயில்கள், அற நிலையங்கள், மன்றங்கள் ஆகியவற்றின் வருவாயை அரசியல் அதிகாரிகள் பார்வை யிடும் உரிமை பெற்றிருந்தனர். பெரிய ஊர்களில் பெருஞ் சபை, சிறு சபை எனப் பல பிரிவுகள் இருந்தன போலும்! பெரிய சபைகள் ஏரி முதலியவற்றைக் கவனிக்க இருந்தன. இச்சபைகளின் கீழ் வரிகளை வசூலிப்பவராகப் பல பணியாளர் இருந்தனர். கடமை, குடிமை முதலிய வரிகளும் வசூலித்தனர் எனத் தெரிகிறது. சிறு ஊர்கள் போக, நகரங்களுக்கும் பெரு நகரங்களுக்கும் இக்காலத் தைப் போல் நகராண்மைச் சபைகள் (Municipality & Corporation) இருந்தன. அவற்றின் பணிகளும் பலப்பல. நாடு முழுதுக்கும் ஆளும் சட்ட சபைகளும் (Territorial Assembly) சிறந்து அமைந்திருந்தன. சபைகளில் பல பொருள்கள் ஆராயப்பெறும். பெரும்பான்மை என்ற பொருளற்ற வாக்குரிமை முறை அக்காலத்தில் இல்லை. ஒன்றைப் பற்றி இருவேறு கருத்துக்கள் தோன்றின், அவற்றைச் சபைகளில் நன்கு ஆராய்வர். பின்பு அத்துறை யில் வல்ல அறிஞர்களைக் கொண்டு வந்து ஆராய்ச்சி செய்து நல்ல முடிவினை 'வாக்குரிமை' இன்றி

அனைவரும் ஏற்றுக் கொள்வர். அறிஞர் காய்தல் உவத்தல் இன்றி ஒவ்வொரு பொருளையும் நன்கு ஆராய்ந்து விளக்குவர்.

ஊர்ச் சபைகளே அனைத்தையும் நடத்துவதால் வரி வசூலிக்கும் பொறுப்பையும் அச்சபைகளிடமே ஒப் படைத்திருந்தனர். அச்சபைகள் சில மாற்றங்கள் வரி விதிப்பில் வேண்டுமாயினும் மேற்கொள்ளலாம். பொது வாக வழக்கத்தில் வரும் வரிகளைத் தவிர்த்துப் புதுவரி களை விதித்தால், அவ்வரியால் பாதிக்கப் படுபவரை அழைத்து விசாரித்தே நன்மை தீமை அறிந்து வரி விதிப்பர். செலவு வகையில் படைச் செலவே அதிகம். அரசனுடைய தனிச் செலவும் அதிகம். வரிகளுக்குச் சில நல்ல பெயர்களைத் தேர்ந்து அமைத்துள்ளனர். ஆயம் (Revenue), குடிமை (Tenancy dues) இறை (Minor dues) சித்தாயம் (Income Tax) போன்ற வரிகளைக் காலம் கருதிப் பயன் கருதிக் கழிப்பதும் உண்டு. வரியற்ற இனாம் நிலங்களும் இருந்தன.

**நில அளவுகள்:**

பிற்காலச் சோழர் காலத்தில் மூன்று முறை நிலங்கள் அளக்கப் பெற்றன. ஒரு நூற்றாண்டுக்கு ஒரு முறையாயி னும் நிலத்தை அளந்து (Survey) ஒழுங்கு படுத்தும் நிலை போற்றக்கூடியதன்றோ! அளந்து, நீர்ப்பாசனம், விளைவு, பிறவகைப் பாகுபாடுகளை ஒட்டி அவற்றிற்கு வரி இடுவார்கள் பயிரிடும் நிலம் போக, பொதுப்பயனுக்காக ஊர் நத்தம், அரசாங்கத்துக்குரிய புறம்போக்கு, பறைச் சேரி, கம்மாளச்சேரி முதலிய இடங்களை வரியிலிருந்து விலக்கியிருந்தனர். விதித்த வரியை வசூலிப்பதற்குக் குடிகளைக் கொடுமைப் படுத்துவது இல்லை. ஒரு கல் வெட்டு, வரி வசூலிக்கக் கொடுமைப் படுத்திய ஓர் அதிகாரி

அதற்குக் கழுவாயாகக் கோயிலுக்கு விளக்கிட்டான் எனக் கூறுகின்றது. எனினும், வரிகொடா நிலைமை எல்லை கடப்பின் உரிய நிலத்தை ஏலமிடுவதும் உண்டு. விளையாவிட்டால் வரி கழிப்பும் இருந்தது. விளையும் பொருள்களை மக்கள் அளவுக்கு மீறிச் சேர்த்து வைத்தார்கள் என்று சொல்லவும் இயலாது. பொதுப் பணிகளுக்கு மக்கள் தாராளமாக உதவினார்கள் எனலாம்.

**சமுதாய மாறுதல்கள்:**

சமுதாயத்தில் பல புதுப்புது வகையான மாறுதல்கள் புகுந்துவிட்டன. 'ஒன்றே குலம்' என்று சங்க காலத்தில் கண்ட தமிழ் நாட்டில், இருண்ட காலத்தில் புகுந்த சாதி சமய வேறுபாடுகள் இக்காலத்தில் நன்கு வளர்ந்து விட்டன எனலாம். பரம்பரையாகக் குலத்தொழில் செய்யும் முறையும் வந்து விட்டது. என்றாலும், இரண்டொரு விதி விலக்குகளும் இருந்தன. சங்க காலத்தைக் காட்டிலும் இக்காலத்தில் சமுதாயப் பொருளாதார ஏற்றத்தாழ்வுகள் வளர்ந்து விட்டன. எனினும், அனைவரும் கூடியே வாழ்ந்தனர். வேளாளர் அனைவரினும் சிறப்புற்று விளங்கினர். அந்தணர் தானம் பெற்றனர். கலப்புச் சாதிகளும் இக்காலத்தில் உருவாயின. எனினும், வடவரை ஒட்டிய நால்வகை வருணத்தின் வழியே மக்கள் வாழ்ந்தார்கள் என்று கொள்ள இயலாது. பெண்டிரும் சொத்துக்கு உரிமை உடையவராயிருந்தனர் அரசியர் தத்தம் சொத்துக்களால் பலப்பல தானங்கள் செய்ததைக் கண்டோம். வறிய பெண்கள் பணிப்பெண்களாய் இருந்தார்கள். இரண்டொருவர் கணவரோடு உடன்கட்டையேறினும், அது நாட்டு வழக்கமாய் இருந்ததில்லை. தேவதாசி முறையும் அடிமை வாழ்வு முறையும் நாட்டில் இருந்தன. கூலிகளும் அடிமைகளும் நாட்டில் நிரம்ப இருந்தார்கள்.

வியாபாரம் பண்டமாற்று முறையில் நடைபெற்றது. காசு, கழஞ்சு போன்ற சில நாணயங்களும் புழக்கத்தில் இருந்தன. மக்கள் நலம் கருதி இலவச உணவு விடுதிகள் பல இருந்தன. பஞ்சங்களும் இல்லாமலில்லை.

**விவசாயம்:**

நாட்டில் பெரும்பான்மை மக்கள் விவசாயிகளே. சில தனி நிலப்பகுதிகள் தனி உடைமை பெற்றவரிடம் இருந்தன சில பொது நிலங்களாக (**Community ownership**) இருந்தன. விவசாயத் தொழிலாளர் பலர் இருந்தனர். பரம்பரைக் கிராமத் தொழிலாளர் இருந்தனர். குத்தகைக்குப் பயிரிடுவோர் சாதாரணமாய் இருந்தனர் ஏழைகள் விவசாயத் தொழிலை நம்பியே வாழ்ந்தார்கள். போர் புரிவோருக்கு அளித்த இனாம் நிலங்களும் இருந்தன. தானம் வழங்கிய நிலங்கள் பலப்பல. பெரும்பாலும் பிராமணரில் ஒருவருக்கே வழங்கிய ஏகபோகக் கிராமங்களும் இருந்தன. இவைகளே பின் சுரோத்திரியக் கிராமங்களாயின என்பர். கோயில்களுக்கு விட்ட மேல்வாரக் குடிவார நிலங்களாம் தேவதான நிலங்களும் இருந்தன. இவற்றிற்கெல்லாம் அடிக்கடி பாசன வசதிகள் செப்பம் செய்து தரப் பெற்றன. காடு கொன்று நாடாக்கியும் நிலம் திருத்தி வளம் பெருக்கியும் விளைவைப் பெருக்கினர். விவசாயத்துக்கு முக்கியமான கால் நடைகளும் நன்கு போற்றிப் பாதுகாக்கப் பெற்றன.

**மற்றொழிலும் வாணிபமும்:**

நாட்டின் பல ஊர்களுக்கும் வாணிகத் தொடர்பு இருந்து வந்தது. மலபாரிலிருந்து செங்கற்பட்டிற்குப் பக்கத்திலுள்ள திருவிடந்தைக்கு வந்து வாணி

கம் செய்ததாகவும், மயிலாப்பூரிலிருந்து தஞ்சைக்குச் சென்று வியாபாரம் சேய்ததாகவும் ஈழநாட்டிலிருந்து சுசீந்திரம் வந்து வியாபாரம் செய்ததாகவும் குறிப்புக்கள் உள்ளன. பல்வேறு பொருள்கள் வாணிகப் பொருள் களாய் இருந்தன. உப்பெடுத்து வாணிகம் செய்தனர். அரசருக்கும் மற்றவருக்கும் உதவும் ஆடை வாணிகமும் இருந்தது. வாணிகத்தை நேரிய முறையில் நடத்திவந் தனர். தவறின், கோயிலுக்குத் தீர்வை கட்டவேண்டும் என்ற நியதி இருந்தது.

வாணிகம் சிறந்திருந்தமையின், நல்ல போக்கு வரவுச் சாலைகளும் இருந்தன. அவற்றின் வழி, வாணிகம் புரிவோர் கூட்டு வாணிக முறையிலும் தனி முறையிலும் தங்கள் தொழிலைப் பெருக்கிக்கொண்டனர் எனலாம் சில வாணிக முறைகள் முழு உரிமையோடு நடை பெற்றன. சிலர் உரிமையற்றிருந்தனர். இன்றும் வாணி கம் செய்ய உரிமை பெற அரசியலார் வரி விதிப்பது போன்று அன்றும் சில வாணிகத்துக்கு வரி விதிப்பு இருந் தது எனலாம். இன்றைய வணிகர் போன்று அன்று பொரு ளாதார உயர்வு ஒன்றையே அரசாங்கமோ தனிப்பட்ட வரோ கருதவில்லை எனலாம். வாணிகக் குழுக்கள் (chamber of commerce) இக்காலத்தில் உள்ளன போன்று பல இருந்தன. சுங்கமும் உண்டு. கடனுக்காகப் 'பாண்டு' எழுதும் வழக்கமும் இருந்தது. நூற்றுக்கு 12½ வீதம் வட்டி வாங்கினார்கள் நினைக்க முடியாத பெரிய அளவுக்கு நூற்றுக்கு ஐம்பது வீதம் வட்டி முறையும் இருந்தது. வட்டி பொருளாகவும் தானியமாகவும் வாங்கப் பெற்றது. சொத்துக்களை விற்பதும்

மாற்றுவதும் உண்டு. ஆவணக் களரியும் விற்பனைப் பத்திரமும் இருந்தன. விற்கும் நிலத்திற்கு நான்கு எல்லைகளையும் குறிக்க வேண்டும்.

உள்நாட்டு வாணிகமேயன்றிக் கடல் வாணிகமும் இருந்தது. சீவிசய நாடு (Java), சீனா, பாரசீகம் முதலிய நாடுகளுடன் பல பொருள்களுக்காக வாணிகத் தொடர்பு கொண்டிருந்தனர் அக்காலத் தமிழ்மக்கள்.

**நாணயம், எடை, அளவு:**

வாணிகம் பெருகவே, அதன் துணைக்காக நாணயம், அளவு முதலியன இன்றியமையாதனவாயின. கழஞ்சு மஞ்சாடி போன்ற நாணயங்கள் வழக்கத்திலிருந்தன. கச்சாணம் என்பது ஒரு நாணயம். பொன் என்றே ஒரு நாணயத்துக்குப் பெயர் இருந்தது. காசு என்பதும் நாணயமே. கிராம வட்டங்களில் அவ்வவ்விடத்துக்கு ஏற்ப வழங்கும் சிறுசிறு நாணயங்களும் இருந்தன. ஈழம், சீனம் முதலிய நாடுகளிலிருந்து வந்த காசுகளும் புழக்கத்தில் இருந்திருக்கலாம். பொன்னல்லாத உலோகங்களாலான கருங்காசுகளும் இருந்தன. இவை போன்றே நிறுத்தல், முகத்தல் அளவைகளும் இருந்தன. பொன் நிறைக்கு ஆடவல்லான் என்ற தராசு இருந்ததோடு, ஆடவல்லான் என்ற முகத்தல் அளவை ஒன்றும் இருந்தது. தட்ட மேருவிடங்கன் என்ற நகை நிறுக்கும் கருவியும் ஒன்று உண்டு போலும்! நிறுத்தல் அளவுக்குச் சாதாரணக் கற்கள் உபயோகப்படுத்தப்பட்டன.

**கல்வி:**

இத்துணை முன்னேற்றம் கண்ட நாட்டில் கல்வி வளரவில்லை என்று சொல்ல முடியுமா? அவரவர்

தகுதிக்கு ஏற்பக் கற்றிருந்தனர் எனலாம். ஆராய்ச்சியாளர், இருபதாம் நூற்றாண்டைக் காட்டிலும் அன்று தமிழ்நாட்டில் கற்றவராக அதிகம் இருந்திருப்பர் என்பர். புராணங்கள் பயிலும் வழக்கம் அதிகமாக உண்டு. மதப் பள்ளிகளும் மடங்களும் அதிகமாய் வளர்ந்த காலம் அது. எனவே, சமயக் கல்வியைப் பலர் கற்றனர். மொழிக் கல்லூரிகள் பல இருந்தன. ஆசிரிய மாணவர் தொடர்பு நன்கு பொருந்தி இருந்தது போலும்! ஒரு வடமொழிக் கல்லூரியில் 14 ஆசிரியர்களும் 290 (220 உயர் வகுப்பு 70, தொடக்க வகுப்பு) மாணவர்களும் இருந்தனர் என்பர்.[1] தென்னார்க்காட்டு எண்ணாயிரத்திலும் செங்கற்பட்டுத் திருமுக்கூடலிலும் கோயில் வருமானத்தில் கல்லூரியும் மருந்தகமும் அமைக்கப்பட்டிருந்தனவாம். திருவாவடுதுறையில் மருத்துவக் கல்லூரியும், திருவொற்றியூரில் இலக்கணக் கல்லூரியும் இருந்தன. எனினும், தமிழ் வளர்க்கும் கல்வி நிலையங்கள் அதிகமாய் இல்லை என்பது உண்மை.

**சமயம்:**

பிற்காலச் சோழர் காலத்தில் கோயில்களே சமுதாயப் பின்னணி என்று கண்டோம். அவற்றுள் சைவ வைணவக் கோயில்களே அதிகம். வேதம் ஓதல், புராணம் பயிற்றல், திருமுறை ஓதல் முதலியன கோவிலில் வழக்கமாகக் கொள்ளப்பட்டன. சித்தாந்த சாத்திரங்கள் தொடங்கப்பெற்ற காலமும் அது. வடநாட்டுக் கங்கைக் கரையிலிருந்தும் அக்காலத்தில் சைவர்கள் இங்கே வந்து குடிஏறினர். சமய மாறுபாடு இருப்பினும், மக்களிடத்தில் குறுகிய மனப்பான்மை

1. The Cholas, by K A N.

இல்லை என்றல் பொருந்தும். நோன்றல் (Tolerance) அவர்களிடம் குடி கொண்டிருந்தது. சில சமயத்தில் அரசர் உட்படச் சமய வெறியராய்க் காணப்பட்டாலும் நாட்டில் சமயக் காழ்ப்பு இல்லை என்பது கண்கூடு. பல மாறுபட்ட சமயத்தவர்களும் அன்று இன்றேபோலக் கலந்துதான் வாழ்ந்தார்கள். பெளத்தமும் சமணமும் ஓரளவு வாழ்ந்தன; கோயில்கள் சமுதாயப் பணிபுரிந்தன.

**நிலைப்பிய இலக்கணங்கள்.**

பல்வேறு இலக்கியங்கள் இக்காலத்தில் வளர்ந்தன வேனும், சிறந்த இலக்கியங்கள் கல்வெட்டுக்களேயாகும். அவற்றின் அமைப்பு முறையும், அகவல் போன்று அமைந்து ஆற்றொழுக்காகச் செல்லும் சிறப்பும் இலக்கிய வளனை நன்கு காட்டுகின்றன எனலாம். அக்கல்வெட்டுக் கள் பல மறைந்தன. அரசாங்கத்தார் எடுத்த கல்வெட்டுக் கள் அனைத்தையும் வெளியிடுவார்களாயின், இன்னும் வரலாற்றில் பல உண்மைகள் தெரிவதோடு கல்வெட்டு இலக்கியமும் வளம்பெறும் எனலாம். இராசராசேசுவர நாடகம், இராசராச விஜயம் முதலிய நாடகங்கள் செய்யுள் முறையில் இயற்றப்பட்டன போலும்! குலோத்துங்க சோழன் சரிதையும், சயங்கொண்டார் பரணியும், ஒட்டக் கூத்தர் உலாக்களும் சோழ அரச பரம்பரைக்காகப் பாடப் பட்டனவேனும் அவை வரலாறுகள் பொதிந்த சிறந்த இலக்கியங்களாய் விளங்குகின்றன. இக்காலத் தொடக் கத்தில் கொங்குவேளிரால் எழுதப்பெற்ற உதயணன் கதையும், பின்னர்ப் பத்தாம் நூற்றாண்டில் திருத்தக்க தேவர்தம் சீவக சிந்தாமணியும், மற்றும் வளையாபதியும் குண்டலகேசியும் எழுந்தன. கல்லாடர் இயற்றிய கல்லாட நூலும் இக்காலத்ததே. சிறந்த ஒட்டக்கூத்தர்

சோழ அவைக்களப் புலவர். இவர் உலா, பிள்ளைத் தமிழ், தக்கயாகப் பரணி போன்ற பல பிரபந்தங்களைப் பாடியுள்ளார். இவர் காலத்தவரெனப்படும் கம்பர் எழுதிய இராமாயணம் இக்காலத்ததன்றோ? சேக்கிழார் பெரிய புராணமும் இக்காலத்து இலக்கியமே. கம்பரது ஏரெழுபது போன்ற சிறு நூல்களும் உண்டாயின. ஒட்டக் கூத்தர் காலத்தவர் என்னும் புகழேந்தியார் தம் நளவெண் பாவை இக்காலத்திலே பாடினார். குலோத்துங்கன் கோவை, தஞ்சை வாணன் கோவை, தில்லை நம்பி திருவிளையாடல் போன்ற இலக்கியங்கள் இக்காலத்து எழுந்தவையே. இவற்றையன்றி இக்காலத்தனவாகச் சொல்லப்பெறும் எத்தனையோ தனிப் பாடல்கள், தனிப் பாடல் திரட்டில் இடம் பெற்றுள்ளன. கம்பர், புகழேந்தி யார், ஒட்டக்கூத்தர், ஔவையார் போன்றாரது பாடல்கள் பல தனிப்பாடல்களாய் உள்ளன. கூத்தர் காலத்தில் ஓர் ஔவையார் வாழ்ந்தார் என்பதைத் தனிப் பாடலும் புலவர் புராணமும் எடுத்துக் காட்டுகின்றன. ஆத்தி சூடி முதலியன செய்த ஔவையார் இக்காலத்த ராக வேண்டும். எனவே, அவர் எழுதிய ஆத்திசூடி, கொன்றைவேந்தன், மூதுரை, நல்வழி ஆகியனவும் இக் காலத்தனவேயாம். சமய இலக்கியங்களும் இக்காலத்தில் உண்டாயின. திருவிசைப்பா, திருப்பல்லாண்டு, பெரிய புராணம் போன்றவையும் இக்காலத்தனவே. முந்திய திருமுறைகளை உலகுக்கு அளித்த காலமும் இக்காலமே. அவற்றைக் கல்வெட்டில் எழுதியும், கோயில்தொறும் பாடவைத்தும் சிறப்புச் செய்த காலமும் இக்காலமே. மெய்கண்டார், உமாபதி சிவம் போன்றார் வாழ்ந்து சித்தாந்த சாத்திரஞ்செய்த காலமும் இதுவே. இக்காலத் தின் இறுதியில் அவர்கள் வாழ்ந்தார்கள் எனலாம் இக்காலத்தில் பல வைணவ இலக்கியங்களும் வளர்ந்தன. சைவ இலக்கியங்களைக் காட்டிலும் வைணவ இலக்கியங் கள் வடமொழித்தொடர்பை அதிகம் பெற்றன. இராமா

நுசர், பெரிய வாச்சான்பிள்ளை போன்றார் வாழ்ந்த காலமும் இதுவே. பிரபந்த உரை எழுந்த காலமும் இதுவே என்பர். இராமாநுச நூற்றந்தாதி, கலித்துறை, பிரசன்னகாயத்திரி முதலிய வைணவ நூல்கள் இக்காலத்தனவே.

இலக்கியங்கள் இக்காலத்திலே வளர்ந்தன போன்றே இலக்கணங்களும் வளர்ந்தன. அமிதசாகரர் யாப்பருங்கலமும் யாப்பருங்கலக்காரிகையும், புத்தமித்திரர் வீரசோழியமும், தண்டியாசிரியரின் தமிழ்த் தண்டி அலங்காரமும், குணவீரர் நேமிநாதமும், பவணந்தியார் நன்னூலும், நம்பி அகப்பொருளும், உரைகள் பலவும் இக்காலத்தனவேயாம்.

இளம்பூரணர், சேனாவரையர், பேராசிரியர், நச்சினார்க்கினியர், மயிலைநாதர், தெய்வச்சிலையார், பரிமேலழகர் போன்ற உரையாசிரியர்களும் இக்காலத்தவர் என்பர். அனைவரும் வாழ்ந்திராவிட்டாலும், இவருள் பெரும்பாலோர் இக்காலத்தவர் எனத் திட்டமாகக் கூறலாம்.

இவ்வாறு வளர்ச்சியடைந்த தமிழ் இலக்கிய இலக்கணத்தோடு சமயத் தொடர்புடைய வடமொழி இலக்கியங்களும் அவற்றின் மொழிபெயர்ப்புக்களும் இக்காலத்தில் வளர்ந்தன எனலாம்.

மேற்கண்டவற்றால் பிற்காலச் சோழர்காலமே தமிழ்நாட்டு வரலாற்றில் பொன் எழுத்துக்களால் பொறிக்கப்படவேண்டிய காலம் எனலாம். சங்க காலமும் பல்லவர் காலமும் பல வகையில் சிறந்தனவேயாயினும், அவற்றிற்கெல்லாம் மேலாக உலகெலாம் தமிழர் நலன், வீரம், பண்பாடு, அனைத்தையும் காட்டிச் சிறந்து விளங்கிய காலம் பிற்காலச் சோழர் காலமே என்பது தெளிவு.

# XV. பிற்காலப் பாண்டியர்

**நாட்டு நிலை—மேலைப் பகுதி பிரிந்தது:**

சோழர் தம் இறுதிக் காலத்தில் வாழ்ந்த பாண்டியர் சிலரை முன்னமே கண்டோம் பண்டையர் என்னுமாறு முதன்முதல் தமிழகத்தில் தோன்றிய பாண்டியர் குடி—தமிழ் வளர்த்த பேரரசர் குடி—சங்கம் புரந்த தொல் குடி—கடல்கோளுக்குமுன் மிகப்பரந்த நிலப்பரப்பாகிய நாற்பத்தொன்பது நாடுகளை ஆண்ட பாண்டியன் மாகீர்த்தி முதலாகப் பன்னெடுங்காலமாக வாழ்ந்த குடி—இடை இடையே அல்லற்பட்டு ஆற்றாது சிற்றரசாகியும் அழிந்தும் கெட்டொழிந்தது எனினும், இறுதியாகப் பதின்மூன்றாம் நூற்றாண்டின் இடையில் வீறு பெற்று எழுந்து தமிழகத்தை ஆண்டது. முதன்முதல் தோன்றிய குடியாகிய பாண்டியர்தம் தமிழ்க்குடியே இறுதியாகத் தமிழ்நாட்டை ஆண்ட குடியாகவும் முடிந்தது. இக்காலத்தில் பெரும்பாலும் சேர நாடு பிரிந்துவிட்டது என்றே சொல்லலாம். மேலைக்கடற்கரை வழியாக மலைநாட்டில் புகுந்த ஆரியரும், கடல் வழியாக வந்த பிறரும், அவர்தம் மொழியையும் பழக்க வழக்கங்களையும் மாற்றி, அச்சேர நாட்டு மக்களைத் தம்மைத் தமிழரினும் வேறு பட்டவர் என எண்ணுமாறு செய்துவிட்டனர் எனலாம். பரசுராமன் சேரநாட்டில் வந்து தங்கிப் பின் அங்கேயே நிலைத்து மக்களைத் தன்வழித் திருப்பியதாகப் புராண வரலாறு உண்டு. பரசுராமனும் வந்திருக்கலாம்; அன்றி அவனை ஒத்த அறிவந்த ஆரியர்கள் மலை நாட்டிற்கு வந்து மக்களைத் தமிழரினின்றும் பிரித்துவிட்டனர் எனலாம். எனவே, பிற்காலப் பாண்டியர் காலத்தில்

தமிழகம் சோழ பாண்டிய நாடுகளோடு அமைந்து விட்டது எனல் பொருந்தும்.

தமிழரைப் பழித்துரைத்தமை பொறாது இமயம் வரை படை எடுத்து வெற்றி கண்ட செங்குட்டுவனும், இலக்கியமாகிய சிலப்பதிகாரத்தைச் செய்தளித்த இளங் கோவடிகளும் பதிற்றுப்பத்தினைப் பெற்ற சேரர் பரம் பரையும் அவர்களைப் பாடிய பரணர் போன்ற பெரும் புலவர்களும் சங்க காலத்தில் வாழ்ந்த சேர நாடு பன்னி ரண்டாம் நூற்றாண்டிற்குப் பிறகு வேறாயது இடையில் சேரமான் பெருமாள் போன்ற மன்னர்களும், ஐயன் ஆரிதனார், குலசேகர ஆழ்வார் போன்ற புலவர்களும் அங்கே வாழ்ந்தார்கள். எனினும், பதின்மூன்றாம் நூற் றாண்டிற்குப் பின் அங்குத் தமிழர் என்று தம்மைச் சொல்லிக்கொள்ளக் கூடிய மன்னரோ புலவரோ வாழ வில்லை. மக்களும் தம்மைத் தமிழ் மக்கள் பரம்பரையினர் என்றுகூடக் கூறிக்கொள்ள மாட்டாத நிலையில் வட மொழியாலும் பிற பழக்க வழக்கத்தாலும் மாறு பட்டனர். எனவே, பிற்காலப் பாண்டியர் தம் தமிழகம் பாண்டிய சோழ நாட்டு எல்லை அளவே நின்றுவிட்டது

**சுந்தர பாண்டியன்:**

சோழநாட்டில் வாழ்ந்த மூன்றாம் இராசேந்திரன் காலத்தும் அவனுக்கு முன்னும் பாண்டியர் தலை தூக்கினர் என்று கண்டோம். சுந்தரபாண்டியன் மூன்றாம் இராசராசன் காலத்தில் கிளர்ந்தெழுந்து சோழநாடு முழுவதையும் தனதாக்கிக்கொண்டு, பழை யாறையில் தங்கி, பின் சிதம்பரம் சென்று, இறைவனை யும் தரிசித்து வந்தான் என்று கண்டோம். அடுத்து வந்த மூன்றாம் இராசேந்திர சோழனே சோழப்

பேரரசின் இறுதி மன்னனாய் வாழ்ந்தான். பாண்டியருக்குச் சோழர் பகையேயன்றி வடக்கே இருந்து மற்றொரு பெரும்பகையும் இருந்து. ஹொய்சள நாட்டு மன்னரும் பாண்டியனுக்கு இடைவிடாது தொல்லை கொடுத்து வந்தனர். எனினும் பாண்டியன் அவற்றையெல்லாம் பொருட்படுத்தாது முன்னேறிக்கொண்டே இருந்தான். இக்காலத்தில் பாண்டியர்களும் சோழர்களைப் போன்றே பலப்பல கல்வெட்டுக்களை வெட்டிவைத்து உள்ளார்கள். எனவே, அவர்களது வரலாற்றை அறிவது எளிமையாயிற்று.

தன் முன்னோர் இருவர், சோழமன்னர் மீதும் மற்றுள்ள அரசர்கள் மீதும், படை எடுத்துத் தம் நாட்டைப் பரப்பும் வகையில் பணியாற்றிச் செல்ல, மாறமர்மன் சுந்தரபாண்டியன் 1238-ல் பாண்டிய நாட்டு அரியணை ஏறினான். இவன் காலத்திலேயும் சோழரோடும் பிறரோடும் பாண்டியர் போரிடவேண்டி இருந்தது. கொங்கு நாடும் பிற பகுதிகளும் பாண்டியர் வசமாயின. ஹொய்சளர் மைசூர் நாட்டோடு அடங்கிவிட்டனர். காஞ்சிபுரம் பாண்டியர் துணைத் தலை நகரமாயிற்று. ஈழ நாடும் பாண்டியரின்கீழ் அடிமையுற்று இருந்தது. சேர நாடு பாண்டியரின் கீழே கப்பம் கட்டிக்கொண்டு தாழ்ந்து வந்தது. எனவே, இப்பாண்டியன் காலத்தில் அவர்தம் நிலப்பரப்பு விரிவடைந்து தமிழ்நாட்டு முழுமையும் பாண்டிய அரசின் கீழ் இருந்த தென்னுமாறு அமைந்தது இந்த மாறவர்மனுக்குப்பின் **சடையவர்மன் சுந்தர பாண்டியன்** 1251-ல் பட்டதுக்கு வந்தான். இவன் பெருவீரனாய் வாழ்ந்தான். வடக்கே காஞ்சிபுரத்தைத் தாண்டித் திருபுட்குழி வரையில் இவன் எல்லை அமைந்திருந்தது. இவனே இறுதியாகச் சோழப்பேரரசை

இல்லையாகச் செல்தவன். இவன் காலத்திலே தான் மூன்றாம் இராசேந்திரன் என்ற சோழ மன்னன் இறுதியாக வாழ்ந்தான். இவனுடைய கல்வெட்டுக்கள் நாட்டின் பல பாகங்களிலும் பரவி இருக்கின்றன. இவன் காலத்திய வடமொழிக் கல்வெட்டுகளும் இருக்கின்றன எனினும், அவை வரலாற்றுக்குப் பயன்படாபோலும்! தமிழ்க்கல்வெட்டுக்களிலும் பெறும்பாலும் தனிப் பட்டோர் தானங்களைப்பற்றிக் கூறினும் அரசனது ஆட்சிப்பான்மையையும், அவன் செயலையும் குறிக்கின்றமையால், அவை வரலாற்றுக்குப் பயன் படுவனவாகவே உள்ளன எனலாம் இவன் சேரரையும், ஹொய்சளரையும் படையெடுத்து வென்றான் எனக் குறிக்கின்றன. இவனது ஹொய்சள நாட்டுப் போரைப் பற்றிக் கல்வெட்டுக்கள் சில நன்கு குறிக்கின்றன. காவிரி பாயும் கர்நாடகத் தேசத்துச் சோமனை வென்றான் என்று ஒரு கல்வெட்டுக் குறிக்கின்றது. அப்போர் கண்ணனூர் கொப்பத்தில் நடைபெற்றதாகவும் அதில் சோமன் கொசல்லப்பட்டதாகவும் பாண்டியன் வெற்றிமுரசு கொட்டிதாகவும் கூறுவர். இவன் இலங்கை நாட்டிற்கும் படை எடுத்துச் சென்று அந்நாட்டையும் தன் அடிப்படுத்திக்கொண்டான். சோழ மன்னனைச் சிறைபிடித்து வைத்திருந்த பல்லவன் கோப் பெருஞ்சிங்கனை இவன் வெற்றிகொண்டு, நடுநாட்டிலும் தொண்டை நாட்டிலும், தொல்லை உண்டாகாதவாறு பாதுகாத்தான். வாணர் தம் மகதநாடு வரை இவன் படை சென்றதாகக் கூறுவர். இந்த நாடு இக்காலத்துச் சேலம், தென்னார்க்காட்டு வட ஆர்க்காட்டுப் பகுதிகளில் சிலவற்றை உள்ளடக்கியது என்பர்[1] நீலகண்ட சாஸ்திரியார் அவர்கள். இறுதியாகச் சுந்தர பாண்டியன் விசய

1. The Pandian Kingdom, p. 167.

கண்ட கோபாலனைக் கொன்று காஞ்சியைக் கைப்பற்றினான். பின் காகதீய மன்னன் கணபதியை வென்று நெல்லூரில் விஜயாபிஷேகம் செய்து கொண்டான் என்பர்.

இவன் போர்களே தமிழ் நாட்டில் பெரு மாற்றத்தை உண்டாக்கிவிட்டன எனலாம். சோழர்தம் தளர்ச்சி நோக்கித் தமிழ்நாட்டு புகநினைந்த பல வடநாட்டு மன்னருக்குச் சுந்தர பாண்டியனுடைய வீரச் செயல் இடியென விளங்கிற்று. தங்கள் எண்ணங்கள் பாழான தோடு தங்கள் நாடுகளையே இழக்கும் வகையில் அவர்கள் தம் நிலைகெட்டனர் எனலாம். சுந்தர பாண்டியன் 'மகாராசாதிராச ஸ்ரீ பரமேச்சுரன்' என்றும் 'எம் மண்டலமும் கொண்டருளியவன்' என்றும் புகழப் பட்டான்.

இவன் சைவ வைணவ வேறுபாடற்று இரண்டையும் ஒத்து நோக்கியவன். தில்லையில் இருந்து இறைவனைத் தரிசித்ததோடு அங்குத் துலாபாரம் புக்குப் பிராமணர் களுக்குப் பொன்னைத் தானம் செல்தான். இவன் திரு வரங்கத்துக் கோயிலில் பொன் வேய்ந்த சிறப்பைப் பல கல்வெட்டுக்கள் புகழ்கின்றன. இவனைப் புலவர் பலரும் பாடியுள்ளனர் என்பர். இவன் வடமொழி, தமிழ் இரண் டையும் போற்றிப் புரந்தான் என்பது கல்வெட்டுக்கள் காட்டும் உண்மையாகும்

**சடையவர்மன் வீரபாண்டியன்:**

இவன் தன் காலத்திலேயே தன் மகன் சடையவர்மன் வீரபாண்டியனைத் தொண்டைநாட்டுப் பிரதிநிதியாக்கி ஆளவைத்தான். எனவே, இவன் ஆட்சிக்குப் பிறகு சடையவர்மன் வீரபாண்டியனே பட்டத்துக்கு வந்தான்

(1243—1268). இவனுடைய கல்வெட்டுக்கள் மூன்று வகை யான தொடக்கத்தன என்பர். தந்தையின் காலத்திலேயும் இவன் ஆண்ட காலத்திலேயும் இவன் புகழ் சிறக்கப் பரவி இருந்தது. கி.பி. 1267ல் வீராபிஷேகமும் செய்துகொண்ட வன். இவன் வெற்றிகள் பலவற்றைச் சுந்தரபாண்டியன் கல்வெட்டுக்களே குறித்துள்ளன. இவனுடைய கல் வெட்டுக்கள் கோவை மாவட்டத்தில் கிடைக்கின்றமை யின், இவன் அந்நாட்டை வெற்றி கொண்டமை நன்கு புலனாகின்றது. இவனுடைய கல்வெட்டுக்கள் அந்நாட்டு மக்களுடைய அக்கால வாழ்க்கை முறையைக் காண நன்கு பயன்படும் என்பர். புதுக்கோட்டையிலுள்ள ஒரு கல்வெட்டு அக்காலத்தில் நீதி வழங்கிய வகையைக் காட்டுகிறது.[1] நிலங்களை ஆண்டுக் குத்தகைக்கு விடும் வழக்கமும், கடமை வரி வசூலிக்கும் வழக்கமும் மக்கள் சபை கூடிப் பொருளாராயும் நிலையும், கோயில்களுக்கு நன்கொடை வழங்கும் வகையும், கோயில்பணி போன்ற பொதுப்பணிக்கு நன்கொடை வசூலிக்கும் விதமும், வியாபாரிகளது கூட்டுச்சபை அமைக்கும் முறையும் பிறவும் கல்வெட்டுக்களால் நன்கு எடுத்துக் காட்டப் பெறுகின்றன.

**மாறவர்மன் குலசேகரன்:**

இவனை அடுத்து மாறவர்மன் குலசேகரன் பட்டத் துக்கு வந்தான். இவன் 1268ல் அரசு கட்டில் ஏறினான் என்பர். இவன் காலத்தில் பாண்டிய நாடு வந்திருந்த இத்தாலி நாட்டு மார்க்கபோலோ என்பவன், தான் வந்தபோது பாண்டிய நாட்டில் ஐந்து பாண்டியர் அரசாண்டனர் எனக் குறித்துள்ளான். அது

1. The Pandian Kingdom by K. A. N. p. 178.

எப்படி நடைபெற்றது என்பது திட்டமாகத் தெரியவில்லை. எனினும் அக்காலத்தில் ஒருவருக்கு மேற்பட்ட மன்னர் ஆண்டதற்குச் சான்றுகள் உள்ளன. இவன் காலத்தில் மாறவர்மன் விக்கிரம பாண்டியன், சடையவர்மன் சுந்தர பாண்டியன் என்ற பெயர்கொண்ட இருவரும், சடையவர்மன் வீரபாண்டியனும் இருந்ததாகக் கூறுவர். மார்க்கபோலோ கூறுவது போன்றே ஒரு சீனக் குறிப்பு பாண்டிய நாட்டில் ஐந்து சுல்தான்கள் ஆண்டனர் என்கின்றது. இசுலாமிய வரலாற்று யாத்திரிகனான 'வாசப்'[1] என்பவன் இன்னும் சற்று விளக்கமாக குறித்துள்ளான். சுந்தரபாண்டியனுடைய மூன்று சகோதரர்கள் உரிமை பெற்று அரசாண்டார்கள் என்பதே அக் குறிப்பு. இப்படிப் பலவகையில் பாண்டியன் உரிமை பெற்று வாழ்ந்தார்கள் எனக் கூறுவது ஓரளவில் பொருந்துமேனும், மாறவர்மன் குலசேகரனே அனைவருக்கும் மேலாகச் சிறந்த பாண்டிய மன்னனாய் வாழ்ந்தவன் மற்றவர்கள் அவனால் நியமிக்கப்பட்ட பிரதிநிதிகளாகவோ அன்றிச் சிற்றரசர்கள் போன்றோ வாழ்ந்திருந்தார்கள் என்று கொள்வதுதான் பொருத்தமுடையது. இக் குலசேகரன் ஈழநாட்டின் மேலும் படை எடுத்தான் என அறிகின்றோம். ஈழமன்னனைத் தோற்கடித்து, புத்தர்தம் பல்லுடன் இவன் மீண்டான். அக்காலத்தில் ஈழநாட்டில் மூன்றாம் பராக்கிரமபாகு ஆண்டிருந்தான். அவனை வென்று வந்த படைத்தலைவன் பெயர் ஆரியச் சக்கரவர்த்தி என்பதாகும்.

**அரசியல் திரிபும் அயலார் நுழைவும்:**

இம்மன்னன் காலத்தில் நாடு நன்கு செழிப்புற்றிருந்தது. அயலார் யாரும் இந்நாட்டில் படை எடுக்கவில்லை.

---

1. Wassaf.

இவனும் பெரும்போர் ஒன்றும் செய்யவில்லை. எனவே, போரற்று மக்கள் அமைதியில் வாழ்ந்தார்கள். ஆயினும், தஞ்சைக் கல்வெட்டுக் ஒன்று (34 ஆம் ஆட்சி யாண்டு) அக்கல்வெட்டுக் காலத்தில் குழப்பம் இருந்ததெனக் குறிக்கிறதாம். அது ஒரு வேளை அப்பகுதி குலசேகரனால் அவன் தம்பிக்குப் பிரித்துக் கொடுத்த காலத்தில் நடை பெற்றதாக இருக்கவேண்டும். இவன் ஆட்சி ஆண்டு எல்லையிலே நின்று ஆண்டவன் சடையவர்மன் சுந்தர பாண்டியன் என்பான் எனக் கண்டோம். இவனுக்குப் பின் அச்சுந்தரபாண்டியனே பாண்டிநாட்டை ஆண்டான் என்பர். அவன் கி. பி. 1276 முதல் 1293 வரை கொங்கு நாட்டின் பிரதிநிதியாயும் இருந்தான் என்பர். சடிலவர் மன் மற்றொரு மன்னனாய் வாழ்ந்திருக்கிறான். இவர் இருவரும் குலசேகரன் மக்களாவர். இவ்விருவரையும் பற்றி இசுலாமிய வரலாற்றாசிரியன் நன்கு விளக்குகி றான். இவர்களுடைய ஆட்சி யாவும் கி,பி 1310க்குப் பின் சிறக்கவில்லை எனலாம். சிறு சிறு எல்லைகளோடு பாண் டியர்கள் அதற்குப் பின்னும் பதினாறாம் நூற்றாண்டு வரை வாழ்ந்தாரேனும் அவர்களெல்லாரும் சிறக்க வாழ்ந்தாரில்லை

**மற்றோர் இருண்ட காலம்:**

தமிழ் நாட்டில் இதுவரை கேள்விப்படாத வகையில் புதுப் படை எடுப்புக்கள் நடைபெற்றன. அடுத்தரோர் இருண்டகாலமோ என்னுமாறு ஒரு நூற்றாண்டுக்கு மேல் வரையறுக்க முடியாத வகையில் புதுப்படை எடுப்புக்கள் நடைபெற்றன; குழப்பமான நிலைமை நாட்டில் இருந்து வந்தது எனலாம். மாறவர்மன் குலசேகரன் II கி.பி. 1314 லிலும் அதற்குப் பின் சடையவர்மன் பராக்கிரமன் (1315-1347)என்பானும் இருந்திருக்கிரார்கள் மாறவர்மன்

குலசேகரன் காலத்து ஐந்து பாண்டியர் எனப் பிரிக்கப் பட்ட பிரிவு மறுபடியும் ஒன்று சேரவில்லை போலும்! அவர்கள் தங்களுள் மாறுபட்ட காரணத்தால் போர் நிகழ்ந்தது போலும்; தோற்றவர் வெல்வதற்கு வெளியில் உள்ளவரை வலியச் சென்றுத் தம் நாட்டுக்கு அழைத்து வந்தனர். போரில் தோற்ற சுந்தர பாண்டியன் என்ப வனே வலியச்சென்று முதன்முதல் அல்லாவுதீன் கில்ஜியின் படைத்தலைவனான மாலிக் காபூரைத் தமிழ்நாட்டுக்கு அழைந்து வந்தான். சுத்தரபாண்டியன் பகைவன் வீர பாண்டியனே. தன் உடன்பிறந்தவனோடு மாறுபட்டு அதற்காக எங்கோ இருந்த அல்லாவுதீனை அடைக்கலம் புகுந்து, அவன் படைத்தலைவனான மாலிக்கபூரை அன்று சுந்தரபாண்டியன் அழைத்து வந்தான். அது முதல் தமிழ்நாடு தமிழ் மன்னரின் கீழ் வாழும் நிலை இழந்தது எனலாம். சுந்தரபாண்டியன் தில்லி அல்லாவுதீனை நாடியதும் அவன் மாலிக்கபூரை அனுப்பியதும் 'வாசப்' குறிப்பிலிருந்தும் கர்னல் 'யூல்' குறிப்பிலிருந்தும் நன்கு புலனாகின்றன. மாலிக்கபூர் பாண்டிநாடு வந்து நாட்டைக் கொள்ளையிட்டான்; குழப்பத்தை உண்டாக் கினான். எனினும் வாசப், மாலிக்கபூரின் படை எடுப்பைச் சுந்தரபாண்டியனுடைய தில்லி அடைகலத்தோடு ஒன்று படுத்திக் கூறவில்லை. எப்படியோ பாண்டியநாட்டின்-தமிழ்நாட்டின்-அமைதி குலைந்துவிட்டது. பதினான்காம் நூற்றாண்டு முழுவதும் தமிழ்நாட்டில் என்ன நடந்தது என்றே புரிந்துகொள்ள முடியாத வகையில் நாட்டில் பலப் பல அயலவர் படை எடுப்புக்களும் குழப்பங்களும் தொல்லைகளும் நிகழ்ந்து கொண்டே இருந்தனபோலும். மாலிக்கபூரின் தலைமையில் வந்த படைகள் இருவரையுமே துன்புறுத்தின எனலாம். நாடு சூறையாடப்பெற்று

மக்களும் வாழ்விழந்து வலு விழந்து நாட்டைவிட்டு ஓடின பிறகு நாட வந்தவருக்கு வேலை என்ன? இக் காலத்தில் நடந்த இக்கொடுமைகளை எல்லாம் தமிழ் நாட்டுக் கல்வெட்டுக்களோ அல்லது இலக்கியங்களோ குறிக்கவில்லை. இலக்கியம் பாடிக்கொண்டிருக்க எந்தப் புலவன் எந்த அரசவையில் அமைதியாக இருந்து ஆராய்ச்சி செய்துகொண்டிருந்தான்? எந்த அரசன் தன் வீரப்பிரதாபங்களைக் கல்வெட்டில் பொறிக்க ஆணை யிட்டிருக்கக்கூடும்? பாவம்! தமிழ்நாடு இப்படித் தன்னிலை இழந்து இருட்டடிப்புச் செய்யப்பட்ட தாயிற்று. முன்னைய இருண்ட காலத்தில் பிறநாட்டுச் சமயங்களும், அவற்றை வளர்ப்பவர்களும், கொள்கை யைப் புகுத்தினவர்களுமாக வந்து அமைதியாகப் புரட்சி செய்து மக்கள் நிலையை மாற்றிவிட்டார்கள். ஆனால். இந்தப் பதினான்காம் நூற்றாண்டில் மாலிக்கபூரின் படை எடுப்பும் இசுலாமியர் மாறுபாடுகளும் நாட்டை உருக்குலையவைத்தன எனலாம். தனக்கு ஆட்சி வேண்டிய தற்காக மாற்றானை வலிய அழைத்து வந்த சுந்தர பாண்டியனே, தன்னாடு இவ்வாறு அழிக்கப் பெற்று நிலை குலைந்து கெட்டு இருந்ததைக் கண்டு வந்திருப்பான் என்பது திண்ணம்.

**இசுலாமியர் நுழைவு:**

மாலிக்கபூருக்குப்பின் பல இசுலாமியர் தமிழ்நாட்டி னுள் நுழையலாயினர் அல்லாவுதீன் உடான்ஜி, குத்புதீன் சியாகதீன், அடில்ஷா பக்ருதீன், முபாரக்ஷா, அல்லா வுதீன், சிக்கந்தர்ஷா போன்ற பலர் தமிழ்நாட்டில் நுழைந்தனர். அக்காலத்தில் அரசர் என்று சொல்லக் கூடியவகையில் பாண்டியர் இருந்தாரேனும் அவரும் நிலைத்து ஓரிடத்தில் வாழவில்லை எனலாம். சிலர் ஓடி ஒளிந்து வாழ்ந்தனர். சிலர் திருவாங்கூர்

கொல்லம் பகுதிகளில் சென்று பேருக்கு அரசராய் வாழ்ந்து வந்தனர். வீரபாண்டியன் ஆட்சியில் வடக்கிருந்து வந்த ஜலாலுதீன் அசன்ஷா மதுரையைக் கைப் பற்றி இசுலாமியர் ஆட்சியைத் தொடங்கி விட்டான். இவ்வாறு பாண்டி நாட்டில் இசுலாமியர் ஆட்சி கி.பி. 1330-முதல் 1378வரை சுமார் அரை நூற்றாண்டு நடை பெற்றது எனலாம். இவ்வாறு நாட்டின் மேல் படை எடுத்து வந்த இசுலாமியர் மற்ற மன்னர்கள் செய்தமை போன்று வெற்றி கொண்ட நாட்டை அமைதி யாக ஆளவில்லை. அவர்கள் பல கோயில் களைக் கொள்ளை இட்டார்கள். பிற சமயத்தவரைத் தொல்லைக் குள்ளாக்கினர் இந்த இடைக்கால இசுலாமியர்கள் தங்கள் ஆட்சிக்குள் சில கல்வெட்டுக்களை வெட்டி வைத் தனர்; நாணயங்களையும் உண்டாக்கினர். இக்காலத்தில் பொதுவாக நாட்டின் சமயநிலை அழிந்ததோடு அமைதி யும் நிலைகுலைந்தது எனலாம்.

இவ்வாறான அவல நிலையைக் கண்டு கொண்டே சில பாண்டியகர்ள் ஆண்டார்கள் என்றாலும் அவர் களால் இசுலாமியரை ஒன்றும் செய்ய இயலவில்லை. அவர்கள் மதுரையிலேயே இல்லை; சிதறி ஓடினர். சிலர் திருநெல்வேலியிலும் சிலர் திருவாங்கூரிலுமாக மூலை முடுக்குகளில் இருந்து வாழ்ந்து வந்தனர். இவ்வாறு பாரெலாம் போற்ற ஆண்ட தமிழரசர் பரம்பரை, பல் வேறுவகையில் சிதறுண்டு, கடையில் அழிந்தது.

**புதிய பரம்பரைகள்:**

எனினும், இசுலாமியரை எதிர்த்து மத்திய இந்தியா வில் ஓர் இந்து அரச பரம்பரை புதிதாகத் தலைஎடுத்தது. அதுவே விசயநகர வேந்தர் பரம்பரையாகும்.

பரந்த இந்தியநாடு முழுவதும் இசுலாமியர் செய்துவந்த செயல்களைக் கண்டு வருந்திய பரம்பரைகள் இரண்டு. இரண்டும் மத்திய இந்தியாவில் தோன்றின. அவற்றுள் ஒன்று மத்திய இந்தியாவின் மேற்குப் பகுதியில் வளர்ந்த மாரட்டின வமிசம்; மற்றது, விசயநகரப் பரம்பரை இவை இரண்டிற்கும் தமிழ நாட்டின்மேல் பற்றில்லை யேனும், அந்நாட்டில் இசுலாமியர் செய்யும் கொடுமை களை ஒழித்து, இந்து சமயத்தை நிலைநாட்ட வேண்டும் என்று எண்ணின; எண்ணி, ஒன்றபின் ஒன்றாகத் தமிழ் நாட்டில் புகுந்தன. விசயநகர வேந்தனான குமாரகம் பண்ணன் 1363ல் தமிழ் நாட்டின்மேல் படை எடுத்து வந்தான்; அவன் படைஎடுப்பு இசுலாமிய ஆட்சியைக் குலைத்தது. விசய நகரப் படையெடுப்பால் தமிழ்நாட்டில் மறுபடியும மக்கள் கிளர்ந்தெழுந்தனர். பின்னர் ஒரு நூற்றாண்டுக்குப் பிறகு மறுபடியும் இசுலாமியர்களும் அவர்களை ஓட்டி மேலை நாட்டினரும் தமிழ் நாட்டில் படை எடுத்து வந்தாரேனும். விசயநகர வேந்தரும், மராட்டிய மன்னரும் அதன் இடையில் தமிழ் நாட்டுக்குச் செய்த தொண்டுகள் பல. அவற்றை அடுத்துக் காண் போம்.

**திரும்பவும் சிறிது அமைதி:**

இசுலாமியராட்சி முறியடிக்கப்பட்ட பின் திரும்பவும் பாண்டியர்கள் சிற்றரசர்களாகச் சாதாரண வகையில் வாழ்ந்தார்கள். இவருள் சிலர் விசயநகர வேந்தர் ஆட்சியின் கீழும் இருந்திருக்கலாம் அவர்களைப் பற்றி ஒன்றும் அதிகம் தெரிய வழியில்லை. எனவே, அவர்கள் பெயரை மட்டும் கண்டு மேலே செல்லலாம். அவர்கள் பெரும்பாலும் திருநெல்வேலியிருந்து தென்பாண்டி நாட்டினை மட்டும் ஆண்ட காரணத்தால் அவர்கள் நெல்லைப் பாண்டியர் எனவே வழங்கப் பெற்றனர்.

**இறுதி பாண்டியர்:**

சடையவர்மன் பராக்கிரம பாண்டியன் கி.பி. 1422 வரை ஆண்டான். அடுத்து அழகன் பராக்கிரமன் கி.பி.

1473 முதல் 1506 வரையில் ஆண்டான். பின் வந்த சடைய வர்மன் சீவல்லப்பன் கி.பி. 1534 முதல் 1542 வரையில் ஆண்டான். இவர்களுக்கு இடையிலே உள்ள காலங்களில் யார் ஆண்டார் என்பதும் அக்காலம் என்னாயிற்று என்பதும் விளங்க வில்லை இவர்களுக்குப் பின் கீழ்க்காணும் வகையில் ஒரு சிலர் பெயரளவில் பாண்டியராய் வாழ்ந்து சென்றுள்ளனர்.[1]

சடையவர்மன் பாரக்கிரம குலசேகரன் 1543—1552. நெல்வேலி மாறன் 1552—1564: சடையவர்மன் அதிவீர ராமன் 1564—1604. இவன் வெற்றிவேற்கை எழுதிய வேந்தனாக வேண்டும். வரதுங்கராமன் கி.பி. 1588ல் இருந்தவன்.

**பிற்காலப் பாண்டியர்:**

வரகுணராம் குலசேகரன் 1613ல் இருந்தான் மற்றொரு வரகுணராம் குலசேகரன் என்ற பாண்டியன் 1748ல் ஆண்டதாகத் தெரிகின்றது. இவ்வாறு 18-ஆம் நூற்றாண்டின் இடைக்காலம் வரையில் பெயளரவில் பாண்டியர்கள் ஆண்டார்கள் என்றாலும் அவர்கள் குறுநில மன்னர்போன்று (ஜமீந்தார்) எங்கோ மூலைமுடுக்குகளில் வாழ்ந்திருப்பர். எனவே, பாண்டியன் மாகீர்த்தியால் தொடங்கப் பெற்ற பாண்டிய அரசர் பரம்பரை-தமிழ் அரசர் பரம்பரை — பதினாறு, பதினெழாம் நூற்றாண்டுகளில் பெயர்குறிக்கவும் முடியாத வகையில் மறைந்துவிட்டது. பின்பு, அடுத்து வரும் மூன்று நூாண்டுகளில் விசய நகரத்தரசர், மராட்டிய மன்னர் பின்பு இசுலாமியர், மேலை நாட்டார் ஆகியோர்தம் படையெடுப்புக்களுக்கும் ஆட்சிகளுக்கும் உட்பட்ட தமிழகம், இன்று மக்களாட்சி முறையில், அன்று தொடங்கப் பெற்ற தில்லி ஆட்சிக்கு உட்பட்டு, ஒன்றிய இந்தியா என்ற அமைப்பில் உறுப்பு நாடாக் வாழ்ந்து வருகின்றது.

1. பாண்டியர் வரலாறு—சதாசிவ பண்டாரத்தார்.

# XVI. விசயநகர வேந்தரும் மராட்டியரும்

## ஆண்டவர் யாவர்?

கி பி. பதினான்காம் நூற்றாண்டும் அதற்கடுத்த இரண்டொரு நூற்றாண்டுகளும் தமிழ் நாட்டில் இருண்டகாலம் என்றே சொல்லலாம். சோழப் பேரரசு வீழ்ந்து பாண்டியர் தலைதூக்கிய காலத்தில் தமிழ் நாட்டுப் பண்பாடும் கலாசாரமும் பிற நல்லியல்புகளும் கெடா வகையில் பாண்டியர்கள் பாதுகாப்பார்கள் என்ற துணிவு கொள்ள வழி இருந்தது. ஆனால், இறுதியாகப் பாண்டியப் பேரரசு கவிழ்ந்த பிறகு தமிழ்நாட்டு நிலையை என்னென்பது? வடக்கிலிருந்து இசுலாமியரும் அவருக்கெதிராக விசயநகரத்தாரும் மராட்டியரும் வந்து வந்து நாட்டைப் போர்க்கள மாக்கினார்கள். இந்த இரண்டு மூன்று நூற்றாண்டுகளிலும் பலப்பல மரபினர் —பலப்பல வேற்று மன்னர்கள்—வாழ்ந்து சென்றார்கள். பாண்டிரால் வலிய அழைத்துவரப்பட்ட இசுலாமியர் நாட்டையும் நகரையும் பாழாக்கி, கோயிலையும் குளத்தையும் நிலை கெடுத்து, கிடைத்தவற்றைக் கொண்டு சென்றார்கள் எனக் கண்டோம். அவர்களைத் தடுப்பதற்காக விசயநகர வேந்தரும் மராட்டியரும் முயன்று ஓரளவு வெற்றி பெற்றார்கள் எனலாம். இந்த நூற்றாண்டுகளில் விசயநகரத்தாரும் மராட்டியரும் தமிழ்நாட்டை ஆண்டார்கள் எனலாம். வடக்கே இசுலாமியர்தம் பலம் ஓங்க ஓங்க, மராட்டியரால் மத்திய இந்தியாவில் நிலை பெற்றிருக்க முடியவில்லை. எனவே, அவர்களனைவரும் தெற்கு நோக்கி வந்தனர். தமிழ் நாட்டில் செஞ்சிக் கோட்டை, தஞ்சாவூர், மதுரை ஆகிய மூன்று

இடங்களையும் கைப்பற்றிக்கொண்டு கோட்டை கொத்தளங்கள் அமைத்துக்கொண்டு தமிழ்நாட்டில் இசுலாமிய ராட்சி பரவாத வகையில் முயன்றார்கள். அதைப் போன்றே புக்கர், ஹரிஹரர் என்பவரால் தோற்றுவிக்கப் பெற்ற விசநகரத்தாரும் தெற்கே தம் ஆதிக்கத்தைச் செலுத்தி, கன்னியகுமாரி வரையில் ஆண்டார்கள். மராட்டியர்கள் பெரும்பாலும் விசயநகர வேந்தருக்கு அடங்கியே இருந்தார்கள் எனலாம். தஞ்சையிலும் செஞ்சியிலும் வாழ்ந்த மராட்டியர் சிறிது உரிமை பெற்றிருந்தபோதிலும், தஞ்சை மராட்டியர் விசயநகர வேந்தர் பிரதிநிதிகளாய் இருந்த நாயக்கருக்குப் மற்ற வருக்கும் உட்பட்டே இருந்தார்கள் என்பர். இவ்விரு பரம்பரையினரும் தமிழ் நாட்டை ஆண்டதால் இசுலாமியர்தம் படை எடுப்புக்கள் ஓரளவு குறைந்தன வென்றாலும், தமிழ்ப் பண்பாடு வளரவில்லை எனலாம். இரு பரம்பரையினரும் வடமொழி, தெலுங்கு ஆகியவற்றை வளர்த்தார்களே யன்றி, தமிழ் இலக்கிய வளர்ச்சியில் கருத்திருத்தினார்கள் இல்லை. இவர்கள் காலத்தில் தமிழ்நாட்டிலும் பாளையங்கள் போன்ற சிற்சில சிற்றரசுகள் தோன்றலாயின இக்காலத்தில் தமிழ்நாட்டை ஆண்டார்கள் பலராயினமையின், ஒவ்வொருவரைப் பற்றியும் தனித்தனியே காணுதல் என்பது இயலாது. மராட்டியருள்ளும் விசநகரத்தாருள்ளும் சிற்சிலரைப் பெயளவில் கண்டு, மேல் அவர்கள் காலத்தில் தமிழ் நாடு இருந்த நிலையினைக் காணலாம்.

**விசயநகர வேந்தரும் மராட்டியரும்:**

மத்திய இந்தியாவில் பாமினிச் சுல்தான்களுடைய ஆட்சியின் தொல்லையே விசயநகரப் பேரரசை வளர்த்

தது எனலாம் புக்கர்தம் ஆட்சியின்போதுதான் கி.பி.1347ல் பாமினிப் பேரரசு தோன்றிற்று. அது வளர வளர இந்துக்களுக்குத் தொல்லை மிகுந்தது விசயநகர மன்னரும் ஒருவர் ஒருவராக நாடாண்டனர். எனினும், 1510ல் பட்டமேற்ற கிருட்டிணதேவராயர் காலத்திலேதான் அதன் எல்லை விரிவடைந்தது. அதன் எல்லை கன்னியகுமாரி வரை பரவிற்று எனலாம். புக்கர் மகன் குமாரகம்பண்ணன் காலத்திலேயே அவன் மாலிக்கர்பூரை வீழ்த்த மதுரைவரை வந்தான் என்று மேலே கண்டோம். எனவே, கிருஷ்ணதேவராயர் காலத்தே அவர்தம் ஆட்சி சிறந்தது நின்ற தென்பதும். அதற்கு ஒரு நூற்றாண்டுக்கு முன்பே விசயநகர வேந்தர் ஆட்சி மதுரை வரையில் பரவியிருந்தது என்பதும் கண்கூடு. இந்த ஆட்சி மறுபடியும் பதினாறாம் நூற்றாண்டின் இறுதியில் இசுலாமியர் கைக்கு மாறி இறுதியாக ஆங்கிலேயர் கைக்கு வந்தது எனலாம். அக்காலத்தில் விசநகர வேந்தரின் கீழ் இருந்த தஞ்சை, மதுரை, செஞ்சி நாட்டு மராட்டிய மன்னரும், மைசூர் மன்னரும் உரிமை பெற்றவராய் நின்றனர். இறுதியில் அனைவரும் இசுலாமியர் வழி ஆங்கிலேயரின் அடிமைகளென்று மாறி, அழிந்தும் திரிந்தும் நிலைகெட்டும் நின்றனர். பீசப்பூர்ச் சுல்தான்கள் படையெடுப்பும் உள்நாட்டுச் சிற்றரசர் உரிமையும் விசயநகர வேந்தர் ஆட்சியை அழித்தன. இறுதியாக 1786ல் திப்புச்சுல்தான் படையெடுப்பின் மூலமே விசயநகர வேந்தர் ஆட்சியும் அடியோடு அழிந்து ஒழிந்து விட்டது எனலாம்,

இக்காலத்தில் சிவாஜியும் அவன் குடும்பத்தாரும் தமிழ்நாட்டு மராட்டியர் வாழ்வு வளர உதவினர். கி.பி.1639இல் அவர்கள் உதவியாலேயே மைசூர்

வேலூர், செஞ்சி முதலிய இடங்களில் வாழ்ந்த சிற்றரசர் உரிமை பெற்றனர் எனலாம். மதுரை திருமலை நாயக்கரும் வேலூர், மைசூர் முதலிய இடங்களில் வெற்றி பெற உதவினர். விசயநகர வேந்தரால் ஒன்றும் செய்ய இயவில்லை. எனவே மதுரை நாயக்க வேந்நர் மராட்டிய மன்னர் ஆகியோர் பீஜப்பூருக்குப் பணிந்து நின்றனர். எனினும், இறுதியில் தென்னாட்டில் சிற்றரசர்கள் ஓரளவு உரிமைபெற்று வாழ்ந்தனர். வடக்கே ஔரங்கசீபு ஆணை தென்னாடுவரை பரவிருயித்தபோதிலும், அவன் இறந்த பிறகு கர்நாடக நவாபுகளே ஆணை செலுத்தினர். இதற்கு முன்பே விசயநகர வேந்தர் ஆட்சி முடிவுற்றமையின், நாம் இங்குப் பதினேழாம் நூற்றாண்டு வரையில் இருந்த தமிழகத்தையே காண்போம். இக்காலத்தில் பல மேலை நாட்டவரும் பிறரும் வந்து வரலாற்றுக் குறிப்புக்களை எழுதிவைத்துச் சென்றுள்ளனர்.[2] அக்குறிப்புக்கள் வரலாற்றுக்குப் பெரிதும் பயன்படுகின்றன.

தமிழ் நாடு அதற்குமுன் காணாதபடி பலவகையில் மாறுபட்டுவிட்டது எனலாம். தெலுங்கு நாட்டிவிருந்து பல்வேறு மக்கள் இங்குக் குடியேறினர். அவ்வாறே மாற்றாகப் பல தமிழ்மக்கள் அந்நாட்டிலும் குறியேறிவிட்டனர் எனலாம் நாட்டில் எத்தனையோ வகையான சாதிகள் வளர்ந்துவிட்டன. ஒவ்வொரு சாதியிலும் எத்தனை எத்தனையோ பிரிவுகள் பெருகிவிட்டன வலங்கை இடங்கைச் சாதிகள் என்று பலப்பல சாதிகள் உருவாகிவிட்டன. பதினான்காம், பதினைந்தாம் நூற்றாண்டுகளின் இசுலாமியர் படை எடுப்பால் தென்னிந்தியச் சமயநெறி சீரழிந்தது,

1. Foreign Notices of South India,
by K.A. Neelakanda Sastri

என்றாலும், விசயநகர மராட்டியர் ஆட்சிக் காலத்தில் சமூகநெறி சீரழிந்தமை பலப்பல சாதிகள் தோன்ற ஏது வாயிற்று. வருணாச்சிரம தருமத்தை வளர்த்தவர்கள் விசயநகர வேந்தர்கள். மகமதியருக்கு எதிராக இந்துப் பேரரசை நிலை நிறுத்தவேண்டி, அந்த இந்து சமயத்தின் வருணாச்சிரமக் கொள்கைகளை அப்படியே மேற்கொண்டு பல்வேறுவகைச் சாதிகளை வளர்த்து விட்டனர் எனலாம். அது போன்றே, பக்தி மார்க்கம் அதிகமாக வளரத்தக்க வழிகாணப் பல்வேறு வகைப்பட்ட தெய்வங்களும் வழிபாடுகளும் நாட்டில் பெருகிவிட்டன எனலாம். கி.பி. இரண்டாம் நூற்றாண்டிற்கும் ஆறாம் நூற்றாண்டிற்கும் இடையில் உண்டான மாறுதல்களைக் காட்டிலும் பதினான்காம் நூற்றடுக்கும் பதினெட்டாம் நூற்றாண்டுக்கும் இடையில் அதிகமான மாறுதல்கள் நாட்டில் உண்டாயின எனலாம். இவற்றிற்கு இடையிலே தமிழர் பண்பாடு கெடாவகையில் இலக்கியங்களும் பிறவும் வளர்ந்துகொண்டே வந்தன என்பது காணல் வேண்டும்.

**விசயநகர வேந்தர்**:

விசயநகர வேந்தர்தம் ஆட்சிக் காலத்தில் அரசர்கள் உயர்ந்த நிலையில் வைத்துப் போற்றப்பட்டார்கள். தமிழகத்தில் சேர சோழ பாண்டிய மன்னர்களுக்கு இருந்த அதேசிறப்பு விசயநகர வேந்தருக்கும் இருந்தது எனலாம். மன்னன் ஆணைவழி குடிகள் இயங்கி வந்தனர் எனலாம். மன்னர் பரம்பரை பெரும்பாலும் தந்தைக்குப் பின் மகன் எனவே வந்தது. வயது முதிர்ந்த மன்னர்கள், மக்களை ஆளவிட்டு ஒதுங்கி, ஆண்டவன் பணியில் ஈடுபட்டிருந்ததும் உண்டு என்பதும் தெரிகிறது. தென்

னார்க்காட்டு மாவட்டக் கல்வெட்டுக்கள் இரண்டு[1] ஓர் உண்மையைக் காட்டுகின்றன. புது மன்னர் பட்டத்துக்கு வரும்போது அமைச்சர்கள் மக்களிடத்திலிருந்து வற்புறுத்திப் பல பொருள்களைப் பறித்ததாகவும், மக்கள் தாங்காது வெளி இடங்களுக்குச் செல்ல, அரசன் அறிந்து தக்க நடவடிக்கை எடுத்து மக்களைக் காத்ததாகவும் கூறுகின்றன. விசயநகர வேந்தர்கள் மக்கள் பொருளாதார நலங்கருதிக் காடுதிருத்தியும் குளம் வெட்டியும் பிற வகையிலும் உழவுத்தொழிலை வளர்த்து வந்தனர். இவர்கள் நாட்டில் இருந்த சட்டங்களைக் கெடா வகையில் பாதுகாத்து நீதியும் நேர்மையும் நிலவச்செய்தனர். ஒவ்வொரு சாதியும் தத்தமக்கெனச் சட்டங்களை வரையறுத்துக்கொள்ள அவற்றைச் செயல்படுத்துவது அரசனுடைய கடமையாயிற்று.[2]

அரசனுக்கு உடன் துணையாக உயரிய சபை ஒன்றும் இருந்தது. அது அரச காரியங்களை நன்கு கவனித்துக் கொண்டு சிறந்த துறையில் அரசனுக்கு உதவி வந்தது எனலாம். அமைச்சர்களும் உடன் கூட்டத்து அதிகாரிகளும் அதில் அங்கம் வகித்தனர் அமைச்சராவதற்குப் பல தகுதிகள் இருந்தனவாம் வயதும் குறித்திருந்தார்கள் போலும்! அமைச்சராவோர் சிறந்த அறிஞராக, அரச நெறி அறிந்தவராக, அதர்மத்துக்கு அஞ்சுபவராக, ஐம்பதுக்கு மேல் எழுபதுக்குள் வயதுடையவராக, நல்ல உடல் உரப் பெற்றவராக, வழிவழி அரசியல் தெரிந்த

1. Administration & Social Life under the Vijayanagar Empire by Dr. Mahalingam, p 19
2. Ibid. p. 22 & 23; வடஆற்காடு மாவட்ட விரிஞ்சிபுரக் கல்வெட்டு.

குடியினராக இருத்தல் வேண்டும்.[1] சோழர் பாண்டியர் காலத்தில் இருந்தமை போன்று இவர்கள் காலத்திலும் பல அரசியல் அதிகாரிகள் இருந்தார்கள். திருமந்திர ஓலை நாயகம் போன்று பல அலுவலர்கள் அரசியல் காரியங்களைக் கவனித்து வந்தார்கள். மதுரையில் வாழ்ந்த நாயக்க மன்னர்கள் தங்களைப் பாண்டியர் பரம்பரையினர் எனக் கருதி வாழ்ந்தமையின், பாண்டியர் தம் அரசாட்சி முறையினையே கையாண்டார் எனலாம்.

**வரிகள்:**

விசயநகர வேந்தர் காலத்து வரிகள் மிக அதிகமாக இருந்தன என்பர். கல்வெட்டுக்களும் பிறநாட்டார் குறிப்புக்களும் இக்காலத்தில் இருந்த வரியின் வகைகளையும் விளைபொருளில் பாதி அளவுக்கு வரி பெற்றமையையும் குறிக்கின்றன.

நிலவரி, சொத்துவரி, வாணிபவரி, உத்தியோகவரி, கைத்தொழில்வரி, சேனைப் பாதுகாப்புவரி, பொதுநலவரி போன்ற வரிகளும் அபராதத் தொகைகளும், பிற வருமானங்களும் அரசனுடைய பண்டாரத்தை நிரப்பின எனலாம்.[2] நிலவரி பலவகைப்பட்டிருந்தது நன்செய், புன்செய் நிலங்களுக்குத் தனித்தனி வரிகள் இருந்தன. கி. பி 1673—74ல் உண்டான பட்டயத்தின் வழி ஒரு கலத்துக்கு ஒரு நாழி பெற்றதாக அறிகிறோம். நிலத்தைப் பல்வேறு வகையாக அளந்து தரத்துக்கு ஏற்ப வரி விதித்தார்கள். தென் ஆர்க்காடு மாவட்டம் ஸ்ரீ முஷ்ணம் என்ற ஊரில் 1504—05ல் 34 அடி கொண்ட ஓர் அளவுகோல்

1. Administration & Social Life under Vijayanagar Empire, p. 30
2. வடஆர்க்காடு மாவட்ட விரிஞ்சிபுரக் கல்வெட்டு

இருந்ததாக அறிகிறோம்.[1] திருநெல்வேலி மாவட்டச் சேரன்மாதேவிக் கல்வெட்டால் (1550–51) விசுவநாத நாயக்கர் காலத்தில் மக்களால் இயலாத காரணத்தால், பல வரிகள் தள்ளப்பட்டன என அறிகிறோம்[2] சொத்து வரியை நகரங்களில் அதிகமாயும் பிற இடங்களில் தகுதிக்கு ஏற்பவும் வசூலித்ததாக அறிகின்றோம். இவர்கள் காலத்தில் திருமணத்துக்கென வரி இருந்ததாம். அது சோழர் காலத்திலும் இருந்ததெனத் திரு. மகாலிங்கம் அவர்கள் குறிக்கின்றார்கள்.[3] மண ஊர்வலம், பந்தல் முதலியவற்றிற்கும் வரி இருந்ததாம். எனினும், விசயநகர ஆட்சியிலும் சரி, சோழர் ஆட்சியிலும் சரி இம் மண வரியை மக்கள் விரும்பியிருக்க மாட்டார்கள் என்பது திண்ணம்.

வரியினைப் பெரும்பாலும் கிராம எல்லையிலேயே வசூலித்தார்கள். தனி மனிதனிடம் வரிவசூலிக்கும் வழக்கம் அக்காலத்தில் இல்லை எனலாம். பொதுவாகக் கிராமத்துக்கு இவ்வளவு என்று கண்டு மொத்தமாக வரி வாங்குவார்கள். செங்கற்பட்டு, வடஆர்க்காடு மாவட்டங்களில்அக்காலத்திய கல்வெட்டுக்கள் வரிகள் பொன்னாகவும் பொருளாகவும் வாங்கப்பட்டதைக் குறிக்கின்றன. புதியனவாக நீர்ப்பாசன வசதிகள் செய்தால், அவற்றிற்காகத் தனி வரி இட்டு வசூல் செய்து அதைப் பொதுநலத்துக்குப் பயன்படுத்துவார்கள் போலும்! இக்குறிப்பை ஸ்ரீபெரும்பூதூர்க் கல்வெட்டு ஒன்று காட்டுகிறது.[4] அக்காலத்துக் கிராமச்சபைகளே பெரும்பாலும் வரி வசூலிக்

1. Administration & Social Life under Vijanagar Empire ,, ,, p. 47
2. ,, ,, p. 55
3. ,, ,, p. 69
4. ,, ,, p. 73

கும் பொறுப்பை ஏற்று, வசூலித்த தொகையை அரசாங்கத்துக்கு அனுப்ப ஏற்பாடு செய்திருந்தன. அக்காலத்தை ஒட்டிய மராட்டியர் ஆட்சிக் காலத்தில் ஏற்படுத்தப்பட்ட கிராம முனிசீபு, கர்ணம் அமைப்பு முறையே பெரும்பாலும் மாறாமல் இன்றளவும் வழக்கத்தில் இருந்துவருகின்றது எனலாம்.

வெள்ளத்தால் அழிவு நேரினும், வேறுவகையால் விளைவு குன்றினும் வரி கழிப்பு உண்டு என்பது தெளிவு. தஞ்சை மாவட்ட வழுவூரில் 1402—03ன் குறிப்பு ஒன்று இவ்வுண்மையை வலியுறுத்துகின்றது.[1] வரியைச் சிலவிடங்களில் வற்புறுத்தி வாங்குவதும் உண்டுபோலும். திருச்சி மாவட்ட ஆடுதுறை கல்வெட்டு ஒன்று, மக்கள் வரி கொடுக்கலாற்றாது நின்ற நிலையையும், பின் அதை வாங்கச் செய்த வகையையும் காட்டுகின்றது. சிலர் வரியினைக்கட்டவகையற்றுத் தம் நிலங்களையே விற்பார்கள் எனவும் காண்கின்றோம். பொதுவாகக் கல்வெட்டுக்களாலும், வெளி நாட்டார் குறிப்புக்களாலும் விசயநகர வேந்தர் காலத்தில் தமிழ் நாட்டில் வரிவிதிப்பு அதிகமாகவே இருந்ததென்பதை நிச்சயமாக உறுதி செய்யலாம்.

**நீதிப் பாதுகாப்பு:**

அரசர்கள் நாட்டில் குற்றம் வராமல் பாதுகாத்தார்கள்; வந்தாலும் தடுத்துத் தண்டம் செய்து நீக்கவும் வகை கண்டார்கள். உரிமை, குற்றம் என்ற வேறுபாடு இக்காலத்திலும் வழக்கில் உள்ளது எனலாம். அவற்றின் விரிவுகளும், ஆய்வு முறைகளும், தீர்வுகளும் காணின் பெருகும். திருக்கழுக்குன்றக் கல்வெட்டு ஒன்று பொன் திருடிய ஒருவனுடைய

1. Administration & Social Life under Vijayanagar Empire p. 83

குற்றத்தை விசாரித்து நீதி வழங்கியதைக் குறிக்கின்றது. கோயில் அறங் காப்பாளருங்கூட இது போன்ற குற்றங்களை விசாரிக்க உரிமை பெற்றிருந்தார் எனத் தெரிகிறது. குற்றத்திற்கு ஏற்பத் தண்டனையும் அமைந்திருக்கும். அபராதம் மட்டும் விதிப்பதும் உண்டு. அக்காலத்தில் நாட்டு அமைதியைக் காக்க நல்ல காவல் துறை (Police) அலுவலர்கள் இருந்திருக்கின்றனர். உள்நாட்டு அமைதியைக் காக்கும் காவல்துறையாளரோடு, நாட்டைப் பிறரிடமிருந்து காப்பாற்றும் போர்த்துறையாளரும் (Military) இருந்திருக்கின்றனர்.[1] பல்வேறுவகைப் படையாளரும் இருந்தனர் எனலாம். இக்காலத்தில் நாற்புறமும் மாற்றார் சூழ்ந்திருந்தமையின் (வடக்கில் இசுலாமியர், கடற்கரை ஓரங்களில் மேலை நாட்டினர்) வெளிநாட்டுத் தொடர்பு தமிழ்நாட்டுக்குப் பெரும்பாலும் இல்லை எனலாம்.

**நாட்டு ஆட்சி:**

விசயநகரப் பேரரசின் அளவு முற்காலத் தமிழ்ப் பேரரசுகளைக் காட்டிலும் பெரியதாய் அமைந்தமையின், மாகாண அரசாட்சி நன்கு நிலை பெற வேண்டுவதாயிற்று. தென்னிந்தியாவில் மதுரையைத் தலைநகராகக் கொண்டு ஒரு மாகாண ஆட்சி அமைந்தது. பிரிவுகள், கோட்டம், வளநாடு போன்று பலவகையில் பெயர்பெற்றன. மாநில அரசுகள் சிலபோது மக்கள் விருப்பத்துக்கு மாறாக நடப்பதும் உண்டு போலும்! அப்போதெல்லாம் விசயநகரப் பேரரசு, மக்கள் உளமறிந்து, அவர்தம் நலம்புரக்க நாட்டு ஆட்சியில் தலையிட்டு வந்தது எனலாம். மாநில நிருவாகிகள்

1. Administration & Social Life under Vijayanagar Empire p. 125

(Governors) அவ்வப் பகுதியின் அமைதிக்குப் பொறுப்பாளிகளாவார்கள். மற்ற மாகாணத்தவர்களைக் காட்டிலும் மதுரை நாயக்கர்கள் சில தனி உரிமைகள் பெற்றுச் சிறக்க வாழ்ந்தார்கள் எனலாம்.[1]

நாட்டு ஆட்சி சோழர் காலத்தில் மேலே கண்டமை போன்றே கிராம ஆட்சியாய் அமைந்தது. கிராமந்தோறும் சபைகளும் உட்சபைகளும் இருந்தன. நிலவரி வசூலித்தல், அமைதி நிலை நாட்டல், தவறு நேர்ந்துழித் திருத்தல் போன்ற பலவகையில் அவை பணி புரிந்தன. விசயநகரப் பேரரசு அமைதியாக நிலைபெற்றதற்குக் காரணம் இக்கிராமச் சபைகளே எனலாம். இவையே ஒவ்வொரு பகுதியிலும் தொல்லை நேராவண்ணம் காத்து, மக்களைத் தூய வழியில் செலுத்தின எனலாம். பொதுநலத்தையும், பொதுப் பணிகளுக்காகத் தரும் பொருளையும், பாதுகாத்து அறம் ஓம்பும் நல்ல சபைகளாகவும் அவை அமைந்திருந்தன. இத்துணைக் கிராம ஆட்சியும் விசயநகர ஆட்சியின் பிற்பகுதியில் சிறுகச் சிறுகக் குறைந்து வேறு வகையில் கிராம ஆட்சி அமைந்துவிட்டது. ஆயக்காரர் என்பார் வசம் தனித்தனி ஒவ்வோர் ஊரும் ஒப்படைக்கப்பட்டது. அவர்கள் மக்களால் தேர்ந்தெடுக்கப்படுவதற்குப்பதில் அரசாங்கத்தாராலேயே நியமிக்கப்பெறுவர். அவர்களுக்கு அரசாங்கத்தால் மானியம் வழங்கப்பெற்றது. அவர்கள் அந்த ஊர் எல்லையின் அதிகாரிகளாயினர். அவர்கள் தங்கள் அதிகார உரிமையை விற்கவும் அடமானம் வைக்கவும்கூடிய அந்த அளவுக்கு உரிமை பெற்றுவிட்டனர். எனவே, விசயநகரத்தார் ஆட்சியின் பிற்காலத்தில் பழஞ் சோழர் காலத்தில் ஏற்படுத்தப்பட்ட அந்த மக்களாட்சி வாழ்க்கை

1. Administration & Social Life under Vijayanagar, Empire P. 197

மறைந்து விட்டது எனலாம். இவ்விசய நகர ஆட்சிக் காலத்தில் ஏற்பட்ட கிராம அதிகாரிகள் நியமிப்பு முறையே இன்றளவும் சில மாறுதல்களோடு நிலை பெற்று வருகின்றது என்பது பொருந்தும்.

**கோயில்கள்:**

விசயநகர ஆட்சியில் கோயில்கள் பலவாக வளர்ச்சியுற்றன. விசயநகர வேந்தர்கள் வைணவர்களே. எனினும், பிற சமயங்களிடத்தில் அவர்களுக்கு வேறுபாடு இல்லை. சைவ சமயம் நாட்டின் சிறந்த சமயமாக இருந்தது. சங்க காலத்திலிருந்து வந்த பௌத்தமும் சமணமும் ஒரு சிறு அளவில் எங்கெங்கோ அமைந்து நின்றன. இசுலாமியர் படையெடுப்பால் 'இசுலாம்' என்னும் இசுலாமிய சமயமும், மேலை நாட்டார் வருகையால் கிறித்தவ சமயமும் மெதுவாகக் கால் கொள்ள ஆரம்பித்தன. எனினும், விசயநகர வேந்தர் காலத்தில் சைவமும் வைணவமும் மேலோங்கின. இசுலாமிய மதமாகிய மாற்று மதத்தைப் புகவொட்டாமல் தடுப்பதற்கென்றே இப்பேரரசு தோன்றியதாதலால், கோயில் வளர்ச்சியில் இந்தப் பரம்பரையினர் மிக்க அக்கறை காட்டினர். இவர்களை ஒட்டி நாயக்க மரபினரும், மராட்டியருங்கூட இந்துக் கோயில்களை வளர்ப்பதில் கண்ணும் கருத்துமாயிருந்தனர், சோழர் காலத்தில் கட்டப்பெற்றுப் பழுதுற்ற பல கோயில்களை இவர்கள் செப்பமுறச் செய்தனர். கோயில்களுக்கு நிறைய நிலங்கள் அளித்தனர். கோயில்களைப் பராமரிக்க நல்ல அறக் குழுவினரை ஏற்படுத்தினர். கோயிற் பொருளை மக்களுக்குப் பயன்படும் வகையில் கடனாகவும் உதவினர்.[1] கோயில் நிலங்களையும் பிறவற்றையும் கோயில் நலம்கருதி, விற்கவும் வாங்கவும் அந்த அறங்

1. Administration & Social Life under Vijayanagar, Empire B. 227.

காவலருக்கு உரிமை அளித்தனர், கோயில்கள் மருந்தகங்களை வைத்து நடத்தினதாகவும் அறிகிறோம். கிராம மக்கள் சிறுதொழில் பயிலவும் கோயிற்பொருள் பயன்பட்டது செங்கற்பட்டு மாவட்டம் பெருநகர், மானாமதி கிராமங்களில் அவற்றுக்குச் சான்றுகள் உள்ளன.[1] இவ்வாறு கோயில்கள் தொழும் இடமாக மட்டும் இல்லாது, மக்கள் பொதுவாழ்வு மலரத்தக்க வகையில் உதவிபுரியும் நல்லதொரு நடு இடமாகவும் இருந்தது போற்றத்தக்கது.

**சாதி வேறுபாட்டு உணர்ச்சி:**

இக்காலத்தில் சாதிகள் வளர்ந்துவிட்டன எனக் கண்டோம். அச்சாதிகளின் பெயராலேயே மக்களை வழங்கும் பழக்கம் வந்துவிட்டது. முதலியார், நாயுடு, செட்டியார், ரெட்டியார் என்பன போன்றே சாதிப் பெயர்களைத் தம் பெயர்களின் கடைசியில் சேர்த்து வழங்குவதே பெருமை என்னும் நிலை ஏற்பட்டது. நால் வகை வருணங்களைக் காப்பதாகச் சொல்லிக்கொண்டு ஆயிரக்கணக்கான சாதிகளை வளர்த்தனர் விசயநகரப் பரம்பரையினர். அந்தச் சாதிகளில் பிராமணர்களே அனைவரினும் மேலானவர்களாகச் சிறந்து விளங்கினர். அரசர்கள் பிராமணர்தம் வாட்டங்கண்டு சகியாது பலப் பல தான தருமங்களைச் செய்தனர்; பல கிராமங்களை வரிஇலா நிலங்களாக்கி அவர்களுக்கு அளித்தனர்; தம் அரச அவையில் அவர்களை முக்கிய அங்கம் வகிக்கச்செய்தனர். இப்படிப் பலவகையிலும் சமுதாயத்துறையில் பிராமணர்களே ஏற்றம் பெற்று நின்றனர் எனலாம். இக்காலத்தில் மேற்கண்ட முதலியார், ரெட்டியார் முதலிய சாதிகளைத் தவிர்த்து, அம்பட்டர், கைக்கோளர் போன்ற தொழில் பற்றிய சாதிகளும் வளர்ந்து விட்டன. இவைகளைத்

1. Administration & Social Life under Vijayanagar Empire p. 228

தவிர்த்து வலங்கை இடங்கைச் சாதிகள் பெருகின. அவருள் வலங்கையார் விவசாயத் துறையில் உள்ளவராகி விவசாயிகளுக்கு உதவுபவராயும், மற்றவர் வாணிபம் கைத்தொழில் துறையில் உதவுபவராயும் அமைந்து விட்டனர் எனலாம்.[1]

**பழக்க வழக்கங்கள்:**

திருமணத்தில் சீதனம் கொடுக்கும் வழக்கமும் கன்னிகாதான முறையும் பெருகிவிட்டன. தமிழ்நாட்டுக் காதல் முறை போய், கன்னிகாதான முறை குடி புகுந்தது. சீதனமாகப் பொன்னையும் பொருளையும் தவிர்த்து நிலங்களையும் அளித்து வந்தனர். அவ்வாறு நிலம் அளிப்பதால் நிலம் சிதறுண்டு போவதைத் தடுக்க, செங்கற்பட்டு மாவட்டம் மாங்காட்டுக் கிராமத்தில் மக்கள் தமக்குள் ஒருமுடிவு செய்து கொண்டார்கள் எனத் தெரிகிறது.[2] கணவனோடு ஒருங்கே உயிர் துறக்கும் சதியை மக்கள் பொது விதியாகக் கொள்ளவில்லை என மேலே கண்டோம். பெண்கள், வாழும் சமுதாயத்தில் முக்கிய இடம் பெற்றிருந்தனர். பிராமணர் அழகிய மனைவியரை மணந்து கொண்டு வாழ்ந்தனர் என வெளி நாட்டார் குறித்துள்ளனர். பொதுவாகவே தமிழ்நாட்டுப் பெண்கள் அழகாய் இருந்தனர். அரசர்கள் பல மகளிரை மணந்து கொண்டனர். பலதார மணம் அன்று மற்ற மக்களிடமும் சாதாரணமாய் இருந்தது. பல மனைவியர் அரண்மனையில் பணியாற்றினர் எனலாம். பெண்கள்

1. Administration & Social Life under Vijayanagar, Empire p. 251
2. ,, ,, p. 258
3. ,, ,, p. 263

அரச காரியங்களில் துணைபோவதோடு, அரசருடன் போர்க்களத்திற்கும் சென்றனர் எனலாம். பரத்தையர் குலமும் அக்காலத்திருந்தது. ஆயினும், அவர்கள் வரி கட்ட வேண்டியவராயிருந்தனர். அவ்வாறு ஓராண்டு 12,000 பணம் அஃவரியால் வந்ததென்றும், அதைக் காவல் பகுதிக்குச் (Police) செலவிட்டனரென்றும் தெரிகிறது.[1] இப்பரத்தையர் தம் பரத்தமைத் தொழிலோடு கோயிலில் நாள்தோறும் ஆண்டவர் முன் ஆடியும் பாடியும் வாழ்ந்து வந்தனர்.

**உணவு:**

மக்கள் உணவுமுறை சாதாரணமாகவே அமைந்திருந்தது எனலாம். அரிசி, பருப்பு, காய்கறி வகைகள் பால். பழம் முதலியன உணவுப் பொருள்களாக அமைந்தன. வெளிநாட்டாராகிய அப்துல் ரசாக்கு என்பவருக்கு நாள்தோறும் விசயநகர வேந்தன் இரண்டு ஆடுகளையும், எட்டுப் பறவைகளையும், ஐந்து அளவை அரிசியையும், ஒரு அளவை வெண்ணெயையும், ஒரு அளவை சர்க்கரையையும் கொடுத்ததாக அறிகிறோம்.[2] மாமிச உணவு ஒரு சிலரால் உண்ணப்பட்டு வந்தது. பல்வேறு இலைகள் உண்கலன்களாகப் பயன்பட்டன. பொதுவாக மக்கள் ஒருவர் உண்ணும்போது மற்றவர் காணக்கூடாது போலும்! சாதிகள் பல்கிவிட்டதனால் அரச விருந்துகள் தவிர்த்துக் கலந்துண்ணும் பெருவிருந்துகள் இல்லை எனலாம்.

அரசர்கள் ஆடை வகையில் பெரும் பணம் செலவு செய்திருக்கவேண்டும். மன்னவரும், மற்ற உயர்நிலை

1. Administration & Social Life under Vijayanagar Empire p. 266
2, ,, ,, p. 287

யில் உள்ளவர்களும் ஆடைகளுக்காகப் பெரும் பொருள் செலவு செய்தார்கள் எனலாம். சாதாரண மக்கள் அணிந்த உடைகள் அவரவர் தகுதிக்கும் பொருட் செலவுக்கும் ஏற்ற வகையில் அமைந்தன எனலாம். மக்கள் மிதியடி அணிந்தார்கள். குடைகளும் வழக்கத்தில் இருந்தன. அரசவை செல்லும் அதிகாரிகளும் அவர் தம் பெண்டிரும் இக்காலத்தைப் போன்று உயரிய உடை அணிந்தே அரச விருந்துகள் முதலியவற்றிற்குச் செல்வர் போலும்! சில சமயங்களில் பெண்கள் தலைக்கும் ஆடை அணிவார்களாம். பெண்களும் மிதியடி அணிந்திருந் தனர். சாதாரணப் பெண்கள் உயர்ந்த ஆடை அணி இன்றி, எளிய உடை அணிந்து எளிய வாழ்வினையே மேற்கொண்டார்கள் எனலாம் எனினும், உயர்ந்த பெண்டிராயினும் மிக எளியவராயினும் ஏதேனும் ஒரு நகை அணிந்து கொண்டுதான் இருந்தார்கள் என்று அப்துல் ரசாக்கு கூறுகின்றார்.[1] தாம்பூலம் போட்டுக் கொள்ளும் வழக்கமும் இருந்துவந்தது பொழுது போக்குக்காகப் பல்வேறு விளையாட்டுக்களும் பந்தயங் களும் இக்காலத்திருந்தன எனலாம். பொழுது போக்குக் கெனவே பரத்தையர் நடனமாடலும் உண்டு. கோயிலில் இறைவன்முன் ஆடும் வழக்கம் உண்டு என் பதை முன்னரே பார்த்தோம். இசையும் சிறந்திருந்தது. தஞ்சை இரகுநாத நாயக்கர் இசையில் வல்லவராய் இருந்தார். பொதுவாகப் பெண்கள் பண்ணொன்றப் பாடுவதிலும் வீணை முதலிய இசைக் கருவிகளை வாசிப்ப திலும் வல்லவர்களாய் இருந்தார்கள்.

**சமயம்:**

விசயநகர வேந்தர் காலத்தில் சைவம் வைணவம் இரண்டும் மேலோங்கி இருந்தன எனக் கண்டோம்.

1. Administration & Social Life under Vijyanagar, Empire p. 21

திருமாலைப் போற்றும் வைணவப் பரம்பரையில் விசய நகர வேந்தர்கள் வந்தவர்கள்; எனவே, எங்கும் திருமால் வழிபாடு மிக்கிருந்தது எனலாம். தமிழ்நாட்டில் பிரபந்தம் ஓதுவார், சிறக்க ஓதி இறைவனை வழிபட்டனர். அது போன்றே சைவர்களும் திருமுறைகளை ஓதி உணர்ந்து சிவனை வழி பட்டனர்.

வடநாட்டு இசுலாமியர்தம் படையெடுப்புக்களால் தென்னாட்டுச் சைவ வைணவ சமயங்கள் சீர்குலைந்தன என்றும், அவற்றைச் செப்பம் செய்து இந்து சமயத்தை நிலைநாட்டவே விசயநகர வேந்தர்கள் முயன்றார்கள் என்றும் மேலே கண்டோம் அந்தப் பதினான்காம் நூற்றாண்டில் தேவகிரி யாதவரும், வாரங்கல் காகேதீயரும், தேவசமுத்திர ஹொய்சளரும், தெற்கே பாண்டியரும் தம்முள் மாறுபட்டுக் கலவரம் விளைத்து நின்றமையே வடக்கிருந்து வந்த இசுலாமியர் வரவை எளிதாக்கிற்று. எனினும், விசயநகர வேந்தர் ஓரளவு அவர்தம் இசுலாமிய ஆளுகையைக் குறைத்து சைவ வைணவ சமயங்களை வளர்த்தார்கள். இவ்வாறு மாற்றானுக்கு இடங்கொடாது தம் சமய நெறியைப் பரப்பி நின்ற காரணத்தால், தம் சமயம் பற்றிய புதுப்புது நூல்களும், பழைய நூல்களுக்கு விளக்கங்களும்—வியாக்கியானங் களும்—தேவைப்பட்டன. வேதாந்த தேசிகர் போன்ற சமய விளக்க ஆச்சாரியர்கள் இக்காலத்தில் வாழ்ந்து சமயத்தை வளர்த்தார்கள். விசயநகரவேந்தர்கள் வைண வராயினும் இன்றே போல் அன்றும் நாட்டில் சைவர்கள் பெரும்பாலராய் இருந்தனர். சங்கரரைப் பின்பற்றி வழி பாடாற்றும் அத்வைதிகளும், ஆகமங்களைப் போற்றும் பாசுபதர்களும் வீர சைவர்களும் இருந்தார்களாயினும், அவர்கள் சிறக்கவில்லை எனலாம். பெரும்பாலும் பரந்த நோக்குள்ள சைவ சித்தாந்த முறையினைப் பின்பற்றும்

1. Administration & Social Life under Vijayanagar, Empire p.297

சைவ சமயமே நாட்டில் கதழைத்தோங்கி நின்றது. வைணவ சமயமும் இராமாநுசருக்குப் பின் பல சாதியாராலும் நன்கு போற்றப்பட்டு வந்தது. வடகலை தென்கலை என்ற வேறுபாடு இக்காலத்தில் நாட்டில் வளர்ந்தது. வேதம் போற்றும் வடகலையாரும் தமிழ்ப் பிரபந்தம் போற்றும் தென்கலையாரும் தம்முள் மாறுபட்டு நின்றனரேனும், சமயம் அதனால் தாழாது வளர்ச்சியுற்றதென்றே சொல்லலாம். இராமாநுசரால் தமிழ்ப் பிரபந்தங்கள் நன்கு போற்றப்பட்டமையே பல சாதியாரிடம் வைணவம் வளர ஏதுவாயிற்று. இரு வகைச் சமயங்களும் தமக்கு அடிப்படைக் கொள்கையை ஒன்றெனக் கொள்ளினும், இறைவனை அடையும் வழித் துறைகளை வெவ்வேறாக வகுத்துக் கொண்டன.

இப்பெருஞ் சமயங்களைத் தவிர்த்துச் சமண சமயமும் இவர்களால் போற்றி வளர்க்கப்பட்டது எனலாம். வேந்தர்தம் அமைச்சர்களில் சமணர்களும் இருந்திருக்கின்றனர். எனவே, அவர்வழிச் சமணம் வளர்ந்திருக்கலாம் கிறித்தவ சமயம் விசய நகரத்தார் ஆட்சிக் காலத்துக்கு முன்பே நாட்டில் வாழ்ந்தது என்று கொண்டாலும், அது இவர்கள் காலத்தில் தான் வளர்ச்சியுற்றதெனலாம். மேலை நாட்டிலிருந்து பல சமயத் தலைவர் இங்குவந்து, சிறப்பாகத் தென்பாண்டிநாட்டுச் சீமையில் தாழ்ந்த சாதிமக்களுள் பலரைக் கிறித்தவராக்கினார்கள் மதுரை நாயக்க மன்னர் அவையிலிருந்த ராபர்ட் டி நோபிலி[1] என்பவர் பல இந்துக்களைத் தொடர்ந்து கிறித்தவராக்கிக் கொண்டே இருந்தார். விசயநகர வேந்தருள் சிலர் இக்கிறித்தவப்பாதிரிமார்களை ஆதரித்தார்கள் எனினும், இப்பாதிரிமார்களால் தாம்

1. **Robert de Nobili**

நினைத்தபடி அத்துணை விரைவில் பெருமளவில் மக்களைக் கிறித்தவராக்க முடியவில்லை எனலாம்.

இசுலாமியர் நுழைவுடன் அவர் தம் சமயமாகிய இசுலாமும் வந்திருக்கும் என்று சொல்லத் தேவை இல்லை. இசுலாமிய மன்னருக்கு எதிராக விசயநகர வேந்தர் எழுந்தாரேனும், அவருள் சிலர் இசுலாமிய மதம் வளர்வதற்குத் தம் நாட்டிலே இடங்கொடுத்தார்கள் என்றே தெரிகிறது. இரண்டாம் தேவராயர் அவருள் ஒருவர். சில அரசியல் அதிகாரிகளும் இசுலாமியராய் இருந்தனர் என அறிகிறோம் எனவே இசுலாமிய மதமும் தமிழ் நாட்டில் பரவி வளர்ந்தது என்பது தேற்றம். விசயநகர வேந்தர் பரம்பரையினர் முதலில் சைவராய் இருந்து, பின் வைணவராயினர் ஆயினும் பெரும்பாலோர் வைணவராகவே இருந்ததால் அவர் காலத்தில் தமிழகத்தில் வைணவம் சிறந்து பரவும் வசதிபெற்றது எனலாம். இத்தகைய பெருந்தெய்வங்களைத் தவிர்த்து, கிராமங்களில் இப்போது காணப்பெறும் கிராம தேவதைகளும் வேறு பல சிறு தெய்வங்களும் போற்றப்பட்டு வந்தன. அரசமரத்தையும் வேம்பினையும் பிணைத்து, கீழ் நாகப்பிரதிட்டை செய்து வழிபடும் வழக்கம் இக்காலத்தில் அதிகமாக வளர்ந்து வந்தது எனலாம். இக்காலத்திலேயே சமயம் வளர்க்கும் பல மடங்களும் தோன்றி வளர்ந்தன.

### கல்வியும் இலக்கியமும்:

சமயத்துறை இவ்வாறாக, இக்காலத்தில் கல்வியும் இலக்கியமும்கூட நன்கு வளர்ந்தன எனலாம். பதினேழாம் நூற்றாண்டின் தொடக்கத்தில் மதுரையில் கல்வித் துறை அனைத்தும் துனியார் வசமே ஒப்படைக்கப்பட்டு

இருந்தன.[1] பண்டைத் தமிழ் வளர்த்த சங்கம் இருந்த இடமாகிய மதுரை, நாயக்கர் காலத்தும் தமிழ் வளர்த்துக் கலை போற்றும் இடமாகவே இருந்தது. நொபிலி என்பவர். கி. பி. 1610ல் மதுரையில் பத்தாயிரத்துக்கு மேற்பட்ட மாணவர் பல பேராசிரியர்களிடம் பயின்று வந்தனர் எனக் குறிக்கின்றார்.[2] கோயில்களிலும் சமயக் கல்வி நன்கு கற்றுத்தரப்பட்டது.

தமிழ் இலக்கியம் இக்காலத்தில் வடமொழி, தெலுங்கு, கன்னட இலக்கியங்களோடு சிறக்க வளர்ந்தது எனலாம். தமிழ்நாடு விசயநகர வேந்தர் காலத்தில் அமைதியாய் இருந்தமையின் இக்காலத்தில் கலையும் இலக்கியமும் நன்கு வளர வாய்ப்புக்கள் இருந்தன. கி. பி. பதினைந்தாம் நூற்றாண்டில் சிற்றம்பலநாடிகள் என்ற புலவர் வாழ்ந்திருந்தார். இரட்டையர் எனப்படும் முதுசூரியர், இளஞ்சூரியர் என்பவரும் காளமேகப் புலவரும் இக்காலத்தில் வாழ்ந்தவர்களே. பதினாறாம் நூற்றாண்டில் பல்வேறு புலவர்கள் வாழ்ந்து இலக்கியத்தை வளம் பெறச் செய்துள்ளனர். சிறப்பாகக் கிருஷ்ணதேவராயர் காலத்தில் புலமை நன்கு போற்றப்பட்டது. சிதம்பரத்தில் திருமலைநாதர் என்ற புலவர் வாழ்ந்திருந்தார். அவர் சிதம்பர புராணம், மதுரைச் சொக்கநாதர் உலா என்ற நூல்களை இயற்றினார். அவர் மகனார் பரஞ்சோதியார் சிதம்பரப் பாட்டியல் என்ற நூலை இயற்றினார். இக்காலத்தில் தல புராணங்கள் அளவுக்கு மீறிப் பெருகின எனல் பொருந்தும். பாகவதம் பாடிய செல்வைச்சூடு வாரும் இக்காலத்தவரேயாவர். சிறந்த புலவராகிய தத்துவராய சுவாமிகள் திருவாரூரில் வாழ்ந்திருந்தனர்

1 & 2, Administration & Social Life under Vijayanagar Empire p. 350

சைவப்பிரகாசம் என்ற தத்துவநூலை இயற்றியவர் இவரே. இரு சமய விளக்கம் என்னும் நூலை எழுதிய வைணவ ஹரிதாசர் இக்காலத்தில் அரசியல் அதிகாரிகளுள் ஒருவராய் இருந்தார். கச்சிக் கலம்பகம் பாடிய ஞானப்பிரகாசர் இக்காலத்தில் காஞ்சியில் வாழ்ந்தவர் என்பர். சூடாமணி நிகண்டின் ஆசிரியராகிய மண்டல புருடர் இக்காலத்தில் வாழ்ந்தவர் என்பர். தீர்த்தங்கரர்களைப் பற்றிய நூலும் இவர் எழுதியுள்ளார். சித்தாந்தம் போற்றிய சிதம்பரம் மறைஞான சம்பந்தரும் இக்காலத்தில் வாழ்ந்தவரே. சூரியனார் கோயில் சிவாக்கிர யோகியரும், கமலை ஞானப்பிரகாசரும், குரு ஞான சம்பந்தரும், நிரம்ப அழகிய தேசிகரும் இக்காலத்தவர்களே நைடதம் பாடிய அதிவீரராம பாண்டியர் விசயநகர வேந்தரின் கீழ்ச் சிற்றரசராய் இருந்ததை முன்பே கண்டோம்.

பதினேழாம் நூற்றாண்டிலும் பல புலவர் தமிழ் நாட்டில் வாழ்ந்தனர். சிதம்பரத்தில் வாழ்ந்த இரேவண சித்தர் அவருள் ஒருவர். சிதம்பரம் குருநமசிவாய மூர்த்தியின் சீடர் ஆனந்த நமசிவாயப் பண்டாரம் இக்காலத்தவர். தாயுமானவரை இக்காலத்தவர் எனக் கூறுவர். ஒரு கல்வெட்டின் வழி இவர் கி. பி. 1662ல் மறைந்தனர் என்பர்.[1] இவ்வாறு விசயநகர ஆட்சியில் சமயம் பற்றிய இலக்கியங்கள் தமிழில் அதிகமாய் வளர்ந்தன எனலாம்.

**கலைகள்—கட்டடங்கள்:**

கோயில் சித்திர வேலைப் பாடுகளைப் பற்றியும் கோயில் விமான அமைப்புக்களைப் பற்றியும் அவற்றின் வழி கலையும் பிறவும் வளர்ந்த வழிபற்றியும் கண்டு இக்காலத்

1. Administration & Social Life under Vijayanagar, Empire p, 387

தமிழ்நாட்டு நிலைபற்றிய இப்பகுதியை முடிப்போம். பேராசிரியர் துப்பராயில் என்பவர் தமிழ் நாட்டுக் கோயில்களின் கலைவளர்ச்சியைக் கூறும்போது, பல்லவர் காலத்தில் (600—850) குடைந்த குகைக் கோயில்களும், முதற்சோழர் காலத்திய (950—1100) விமானங்களும், பிற்சோழர் காலத்து (1100-1250) அழகிய கோபுரங்களும், விசயநகர வேந்தர் காலத்து (1350—1600) மண்டபங்களும், பிற்காலத்து (1600க்கு பின்) அழகிய நாற்புறச் சுற்றுத் தாழ்வாரங்களும் சிறந்தன எனக் காட்டுகின்றன.[1] எனவே பல்லவ சோழரைப் போன்று விசயநகர வேந்தரும் தமிழ் நாட்டில் பலப்பல கோயில்களுக்கு மண்டபங்களும் பிற கலை நலம் தோய்ந்த கட்டடங்களும் கட்டியிருக்கிறார்கள் என்பது தெளிவு. வேலூர்க் கோட்டைக் கோயிலின் மண்டபம் இக்காலத்தில் கட்டப்பெற்றது. காஞ்சி ஏகாம்பரநாதருடைய 188 அடி உயரமுடைய கோபுரம் கிருஷ்ண தேவராயரால் கட்டப்பெற்றது. வரதராசர் கோயிலின் கலியாணமண்டபம் (540 கால்கள்) இக்காலத்ததே. சிதம்பரம் கோயிலில் பல புதிய திருப்பணிகள் இக்காலத்தில் செய்யப்பெற்றன. வடக்குக் கோபுரப் பெரும்பணி கிருஷ்ணதேவராயராலே கட்டிமுடிக்கப் பெற்றது. அதில் அவருடைய உருவமும் பொறிக்கப் பெற்றுள்ளதாம். அதன் ஆயிரங்கால் மண்டபம் இக்காலத்தில் கட்டப்பெற்றதே. சிதம்பரம் கோயிலில் இருக்கும் சிவகாமி கோயிலுக்கு வடபுறத்து அமைந்த அழகிய சண்முகர் கோயிலும் இக்காலத்தில் கட்டப்பெற்றதே எனக்கொள்ள இடமுண்டு.

1. Dravidian Architecture p. 83.

மதுரையில் வசந்த மண்டபமும், கோபுரங்களும், மதுரைக் கோயிலின் பல பணிகளும் இக்காலத்தில் அமைக்கப்பெற்றனவே. இவற்றைப்பற்றி வரலாற்று ஆசிரியர்கள் பலப்பலவாறு எழுதியுள்ளனர். புது மண்டபத்தில் பத்து நாயக்கர் மன்னர் உருவங்கள் உள்ளன. அவை உயிருள்ளன போன்றே காட்சியளிப்பது வியப்புக்குரியதாகும். தென்னாட்டுக் கலைக்கூடமே என அப்புது மண்டபம் பொலிகின்றது.

சமணருக்கும் விசயநகர வேந்தர் பலவகையில் உதவினர் எனக் கண்டோம். அவற்றுள் ஒன்று அவர்கள் காஞ்சிக் கருகில் சைனகாஞ்சியில் கட்டிய சைனக் கோயிலாகும். அது திருப்பருத்திக்குன்றம் என்ற சிற்றூரில் இடம் பெற்றுள்ளது. வர்த்தமானரின் முன் இசை முழங்கும் சங்கீத மண்டபம் அழகாக அமைக்கப் பெற்றுள்ளது. அம்மண்டபத்தில் மூன்று தீர்த்தங்கரர் களைப்பற்றி அழகாகத் தீட்டப்பட்ட வண்ண ஓவியங்கள் இன்றும் தன்மை கெடாவகையில் சிறக்கக் காட்சியளிக்கின்றன.

**மாற்று ஆட்சி:**

இவ்வாறு பல துறைகளிலும் தமிழ்நாட்டை வளர விட்டு அதன் நலம் குன்றாவகையில் பாதுகாத்த விசயநகர வேந்தர்களும், பின் வந்த கர்நாடக நவாபுகளுக்கும் அவரைத் தொடர்ந்து வந்த மேலைநாட்டினருக்கும் இடம் விட்டு விலகவேண்டியதாயிற்று. இவருடன் ஒருங்கு சிற்றரசர்களாய் இருந்த தஞ்சை, செஞ்சி, மதுரை மராட்டியரும் நாயக்கருங்கூடப் பதினேழாம் நூற்றாண்டுடன் தம் நிலைகெட மறைந்தனர் எனலாம். எனவே, கர்நாடக நவாபு ஆட்சியும் அடுத்த ஆங்கில ஆட்சித் தொடக்கமும் தமிழ்நாட்டில் எவ்வாறு இயங்கின என்பதை இனிக் காண்போம்

# XVII. விசயநகர ஆட்சிக்குப் பின் தமிழகம்

**இணைந்த இந்தியா:**

தமிழ் நாட்டைப் பொறுத்த வரையில் விசயநகர ஆட்சிக்குப் பின் தமிழராட்சி இல்லை. இசுலாமியர்களும், மராட்டியர்களும். நாயக்க மன்னர்களும் தம்முள் மாறுபட்ட நிலையில் ஆள இறுதியில் மேலை நாட்டிலிருந்து வாணிபத்தின் பொருட்டு வந்த போர்ச்சுச்கீசியரும் பிரெஞ்சுக்காரரும் டச்சுக்காரரும், ஆங்கிலேயரும் போரிட்டு நாட்டில் பல்வேறு கிளர்ச்சிகளை உண்டாக்கி நிற்க, இறுதியாக இந்தியாவை இணைத்து ஆங்கிலேயரே ஆளத் தொடங்கினர். தமிழ்நாடு பரந்த இந்திய நாட்டுடன் முழுதும் இணைந்த நாடாக்கப்பட்டது முதன் முதல் ஆங்கிலேயர் காலததிலேதான் எனலாம். அது மட்டுமின்றி, மேலைநாட்டு ஆதிக்கமும், பழக்கவழக்கங்களும். பிறவும் தமிழ்நாட்டை விரிந்த இந்தியாவுடன் இணைத்ததோடன்றி, உலக நாடுகளோடு ப்லவகையில் தொடர்பு கொள்ளவும் வைத்தன எனலாம். இந்த ஆங்கிலேயர் ஆட்சிக் காலத்திலேதான் மேலைநாட்டிலே இருந்து ஆட்சிக்காகவும், சமயம் வளர்ப்பதன் பொருட்டும். கலை நலம் காண்பதன் பொருட்டும் வந்த பலர் இங்குத் தமிழரோடு ஒன்றியதோடு, பல புத்தம்புதிய கலைகள் தமிழில் வளர்வதற்கு உதவி, பல தமிழ் நூல்களை மேலைநாட்டு ஆங்கிலம் முதலிய மொழிகளிலும் மொழி பெயர்த்தார்கள் எனலாம்.

**கடலாதிக்கம்:**

மேலைநாட்டு மக்கள் தமிழ்நாட்டுக்கும் இந்தியாவுக்கும் வருகையில் இந்நாட்டுக் கடலாதிக்கம் இந்த

நாட்டுக் கடற்கரையை மட்டும் ஒட்டியதாய் இருந்தது. சோழர் காலத்தில் விரிந்து சீவிசயநாடு வரையில் கடலாதிக்கம் இருந்ததை அறிந்தோம். மேல்நாட்டு மக்கள் வந்த பிறகோ, கடலாதிக்கம் நம் கையில் இல்லை. என்றாலும், கடல் வழி மக்கள் வருகையும் வாணிபமும் பெருகின எனலாம். கி. பி. பதின்மூன்றாம் நூற்றாண்டில் தமிழர் கையிலிருந்த கடலாதிக்கத்தை ஈழ நாட்டினர் கைப்பற்ற, பின் பதினைந்தாம் நூற்றாண்டில் அதை அரபியர் கைப்பற்றினர்.[1] அதே கடலாதிக்கம், காலம் செல்லச்செல்ல மேலைநாட்டினர் கையில் சென்று சேர்ந்து விட்டது.

**பதினெட்டாம் நூற்றாண்டின் தொடக்கம்:**

மேலைநாட்டு மக்கள் வருகைக்கு முன் விசயநகர ஆட்சி வீழ, இசுலாமியர்கள் போட்டியிட்டு நாட்டை ஆளத் தொடங்கினர். விசயநகர ஆட்சியிலிருந்து விடுபட்ட நாயக்கர் பரம்பரை மதுரையில் ஆட்சி செலுத்தியது. தஞ்சையிலும் செஞ்சியிலும் மராட்டியப் பரம்பரையினர் வாழ்வுக்கு ஊசலாடிக்கொண்டு எப்படியோ வாழ்க்கையை நடத்தி வந்தார்கள் எனலாம்.

கி. பி. 1724ல் டில்லியில் ஔரங்கசீபு மறைந்து பதினெட்டு ஆண்டுகள் கழித்து, ஐதராபாத்துச் சுல்தான் தென்னாடு முழுமைக்கும் தானே உரியவன் என உரிமை கொண்டாடினான். ஏறக்குறைய அதே சமயத்திலேதான் மேலை நாட்டிலே இருந்து வாணிபம் செய்ய வந்தவர்களும் இங்கு இடம் தேடி நிலைத்து வாழவேண்டும் என்ற எண்ணத்தில் பல செயல்களைச் செய்ய முயன்றனர் கி. பி. 1723ல் ஆங்கிலேயர் சென்னையி

1. A Survey of Indian Historyby K.M. Panickar P. 180-186.

லும், பிரெஞ்சுக்காரர் புதுச்சேரியிலும், டச்சுக்காரர் தரங்கம்பாடி, நாகைப்பட்டினம் முதலிய இடங்களிலும் வேரூன்ற வழித் துறைகளை ஆராய்ந்து முன்னேற்றமும் கண்டிருந்தனர். சென்னை செயின்ட்ஜார்ஜ் கோட்டை அக்காலத்திலேயே அமைக்கப்பெற்றது. முன் வந்த போர்ச்சுக்கீசியர் மேலைக் கடற்கரைப் பக்கத்திலேயே தங்கள் ஆதிக்கத்தை வளர்த்துக் கொண்டிருந்தார்கள் போலும்! இந்தக் காலத்திலேதான் தமிழ் நாட்டிலே மகமது அலிக்கும் சந்தாசாகிப்புக்கும் நாட்டாட்சி காரணமாகப் பல போர்கள் நடைபெற்றன. அதே சமயத்தில் மேலை நாட்டிலே ஆங்கிலேயருக்கும் பிரெஞ்சுக்காரருக்கும் போராட்டங்கள் நடைபெற்றன. அதை முன்னிறுத்தி இங்கு வாணிபத்தின் பொருட்டு வந்த ஆங்கிலேயரும் பிரெஞ்சுக்காரரும் சமயம் பார்த்து உள் நாட்டுக் குழப்பங்களிலும் போர்களிலும் எதிரிகள் பக்கங்களில் சேர்ந்து நாட்டில் தத்தம் ஆதிக்கத்தை வளர்த்துக் கொள்ள முயன்றனர். ஆங்கிலேயர் பக்கம் 'கிளைவு'ம், பிரெஞ்சுக்காரர் பக்கம் 'டூப்ளே'வும் தலைமைதாங்கினர். சாந்தா சாகிபுவுக்குப் பிரெஞ்சுக்காரரும், முகமது அலிக்கு ஆங்கிலேயரும் உதவினர். இவர்கள் தத்தம் வழி உதவி அவரவர் ஆதிக்கத்தையே வளர்க்க முயன்றனர்.

**மராட்டியரும் நாயக்கரும்;**

இந்த மாறாட்டங்களுக்கு முன்னும் விசயநகர ஆட்சிக்குப் பின்னுந்தான் தஞ்சை மராட்டியரும் மதுரை நாயக்கரும் நாட்டைப் பல வகையில் திருத்தத்துக்குக் கொண்டுவர வேண்டுமென்ற எண்ணத்தோடு ஆண்டனர். தஞ்சையில் வெங்கோஜி எனும் ஏகோஜி கி. பி. 1676 முதல் 1688 வரையிலும், ஷாஜி 1684 முதல் 1712 வரையிலும், சரபோஜி I கி. பி. 1712 முதல் 1728

வரையிலும், துக்கோஜி 1728 முதல் 1736 வரையிலும் ஆண்டார்கள். அதற்குப்பிறகு நாட்டில் அரசு இல்லாத கொடுமையில் (Anarchy) பல இன்னல்கள் உண்டாயின. பின் பிரதாபசிங் 1739 முதல் 1763 வரையிலும், துல்ஜாஜி 1763 முதல் 1787 வரையிலும், அமார் சிங் 1787 முதல் 1798 வரையிலும், சரபோஜி II, 1798 முதல் 1833 வரையிலும் அரசாண்டார்கள். இவர்களும் ஆங்கிலேய பிரெஞ்சுக்காரர்தம் வேறுபாடுகளுக்கு இடையிலும் போர்களுக்கு இடையிலும் சிக்கிப் பல இன்னல்கள் உற்றுக் கடைசியில் அரசிழந்து, ஆங்கிலேயர் வசம் அனைத்தையும் விட்டு ஒடுங்கிவிட்டனர். இவர்கள் மராட்டிய மன்னராதலானும், சிவாஜி பரம்பரையில் வந்தவராதலானும் இசுலாமிய மதத்திற்கு மாறுபட்ட நிலையில் இந்து சமயத்தைப் பரப்ப முயன்றமையானும் இந்து சமய வளர்ச்சிக்குப் பல வகையில் பாடுபட்டனர். ஏறக்குறைய இதே காலத்திலேதான் இவர்கள் பரம்பரையின் ஒரு சாரார் செஞ்சியில் சிறக்க ஆண்டு, பின்பு, ஆர்க்காட்டு நவாப் முற்றுகைக்கு ஆற்றாது அழிந்தனர். அவருள் ஒருவனே கதைகளால் போற்றப்படும் இராசா தேசிங்கு.

மதுரையில் நாயக்கர் பரம்பரை இக்காலத்தில் வாழ்ந்து வந்தது. ஒரு பெரும் பேரரசாகப் பாண்டியர் போன்று மதுரையில் இருந்து ஆளாவிடினும் மதுரையில் இருந்து இறுதியாகத் தமிழ் வளர்த்த மன்னர் பரம்பரை என்று இதைச்சொல்லுவது பொருந்தும். மதுரையில் சிறக்க ஆண்ட திருமலை நாயக்கருக்குப் பின் அவர் மகனார் முத்துவீரப்பர் சில மாதங்களே ஆண்டார். பின்பு சொக்கநாத நாயக்கர் கி. பி. 1659 முதல் 1682 வரை அரசாண்டார். அக்காலத்திலேதான் பீஜப்பூர் சுல்தான்களுடைய கொடுமை தென்னாட்டில் பரவியது. எனவே, இவர் 1665ல் திருச்சிராப்

பள்ளியைத் தலைநகராக்கிக் கொண்டு, அவர்கள் தெற்கு நோக்கி வருவதைத் தடுக்க முயன்றார். இவர் அக்காலத்தில் தஞ்சையை ஆண்ட விசயராகவரை வென்று, தம் தம்பியைத் (அழகிரி நாயக்கர்) தஞ்சைக்குத் தலைவராக்கினார். எனினும், அவ்வழகிரிநாயக்கர் தம் தமையனாரோடு மாறுபட்டுத் தஞ்சையைக் கி பி. 1675ல் ஏகோஜி என்ற மராட்டிய மன்னரிடம் விட்டு ஓடினார். அதன் பிறகே மேலே கண்டபடி மராட்டியப் பரம்பரை தஞ்சையை ஆண்டது இக்காலத்திலேதான். சிவாஜியின் படைஎடுப்புக் காரணமாக, பீஜபூர் சுல்தான்களின் தென்னாட்டு ஆதிக்கம் ஒடுங்கியது. இதே காலத்திலேதான் மைசூர் கர்நாடகப் போர்களும் நடைபெற்றன. அவற்றில் மதுரை நாயக்கர் பரம்பரை கொண்ட பங்கு பெரிது. இதே வேளையிலேதான் இராமநாதபுர சேதுபதி மன்னர்களும், புதுக்கோட்டை அரசும் தலை தூக்க ஆரம்பித்தன எனலாம். புதுக் கோட்டை அரசு கி.பி. 1686ல் இரகுநாத ராசத் தொண்டைமான் என்பவரால் தோற்றுவிக்கப்பட்டது.[1] சேதுபதி மன்னர் பரம்பரை சற்று முந்தியது எனலாம்.

மதுரையில் நான்காம் முத்து வீரப்பர் இறக்க, சொக்கநாதர் மனைவியாகிய மங்கம்மாள் நாட்டை 'ரீசண்டாக' ஆள முன்வந்தாள். வீரப்பர் இறந்த பிறகே அவர் மகன் பிறந்தான். மங்கம்மாள் சிறந்த வீர உளம் கொண்டவளாய் இருந்தும், வடநாட்டு ஔரங்கசீபு ஆணையை மீற முடியாதவளாய், தஞ்சை மராட்டியர் போன்று தானும் கி. பி. 1693ல் தில்லிக்குக் கப்பம் கட்டினாள். அவள் ஆட்சி 1706ல் முடிவுற்றது. சேதுபதி ஆட்சியும் இதே வேளையில் இராமநாதபுரம் சிவகங்கை எனும் இரண்டு பிரிவுகளாகப் பிரிக்கப்பட, அதன் போராட்டத்தில் தென்னாட்டின் மறவர் ஆட்சி

1. History of India, by K. A. N. p. 308

சிறிது ஆட்டங்கண்டது எனலாம். சொக்கநாதர் மறைவுக்குப் பிறகு ஆர்க்காட்டு நவாபுவின் போரிடையில் மதுரை, தஞ்சை நாயக்கர் ஆட்சிகள் சின்னபின்னமாக்கப்பட்டன எனலாம்.

**மராட்டியர் ஆட்சிமுறை:**

தஞ்சையில் மராட்டிய மன்னர் ஆண்ட காலத்தில் தமிழ் நாட்டில் மக்கள் நன்கு வாழ்ந்தனர் எனலாம். அரசருக்கு அறிவுறுத்தும் சிறு சபை இருந்தது. அறிவறிந்த மக்களையே அச்சபைக்குத் தேர்ந்தெடுத்தனர். தளவாய் என்பவரே மந்திரி போன்று அரசியலில் சிறந்த முதலிடம் பெற்றிருந்தனர். அவரே சில சமயங்களில் சேனைத் தலைவராகவும் இருப்பர் போலும்! தளவாய்க்கு அடுத்துப் பிரதானி அல்லது திவான் முக்கியமானவராய் இருந்தனர். பிறகு பல பணியாளர்கள் தனித்தனி அரசியல் காரியங்களைக் கவனிப்பதற்காக ஒருவர்பின் ஒருவராக இருந்தனர் எனலாம். இவர்கள் காலத்தில் அறநிலையங்களைப் பாதுகாப்பதற்கென ஓர் அமைச்சர் இருந்தார் போலும்! அறிவுறுத்தும் தலைவரும் (advisers), எழுத்தாளரும், புரோகிதரும் அறங்கூறுவோரும், ஒற்றரும் தூதுவரும், பிறரும் அரசியல் பணியாளராய் இருந்து வந்தனர். நாடு சோழர் காலத்தைப் போலவே மண்டலங்களாகவும் நாடுகளாகவும் வளநாடுகளாகவும் பிரிக்கப்பட்டது எனலாம். ஆட்சி முறைக்காக 'சுபேதார்'கள் ஏற்படுத்தப்பட்டு, ஒவ்வொரு சுபேதாரிடமும் ஒவ்வொரு பகுதி ஒப்படைக்கப்பட்டு இருந்தது. 'சீமை' என்ற சொல் சிறு பகுதிக்குப் பயன் பட்டது. சாய்க்காட்டுச்

---

1. The Maratta Rajas of Tanjore by, K. R Subramanian. P. 78.

சீமையில் காவேரிப்பட்டணம் மங்கலம் இருந்ததாகக் கல்வெட்டுக் குறிக்கிறது.[1]

கிராமங்கள் தனித்தனியே பாதுகாக்கப் பெற்றன. அலுவலர் பணிகளுக்காக வரியிலா நிலங்கள் விடப் பெற்றிருந்தன (கிராம மானியங்கள்). இக்காலத்தில் இருக்கும் பல கிராமப் பணியாளர் நிலங்களும், அவர்களுக்கு அக்காலத்தில் விடப்பெற்ற நிலங்களே. கிராமத்தில் நாட்டாண்மைகள், கர்ணம், காவற்காரன், தண்ணீர் அட்டுவான் (நீர்கட்டி), தட்டான், கருமான், தச்சன், அம்பட்டன், வண்ணான் போன்ற பணியாளர்களுக்கு நிலங்கள் விடப்பெற்றிருந்ததோடு, மக்களால் பயிரிடப்பெறும் பயிரிலும் ஓரளவு இனாமாகப் பெற உரிமையும் தரப்பெற்றிருந்தது. இக்காலக் கிராம முனிசீபு அக்காலத்தில் இல்லை. அவ் வரி வசூலிக்கும் பதவி 1836ல் வந்தது. 1816லிருந்து காவல் வகை அதிகாரம் அவரிடம் இருந்தது.[2] இக்காலத்திலிருந்த அறங்கூறும் அவையங்களைப்பற்றி ஒன்றும் திட்டமாகச் சொல்ல முடியவில்லை. கிராம மாறுபாடுகள் பொதுமன்றத்தால் தீர்க்கப்பட்டன எனலாம். சம்பந்தப்பட்டவர்கள் அதற்கு ஒப்பவில்லையாயின் சுபேதார் ஒருவரைத் தீர்ப்புக்கூற நியமிப்பது வழக்கம். இக்காலத்தில் காய்ச்சிய நெய்யில் கைதோய்த்துத் தன் உண்மையைக் காட்டும் கொடுவழக்கம் இருந்தது போலும்.[3]

இக்காலத்தில் தானங்கள் பலவாகப் பல்கிப் பெருகின. கோயில்களுக்கும் சத்திரங்களுக்கும் அந்தணர்களுக்கும் பலப்பல தானங்களை அரசர்களும் மற்றவரும் செய்தனர். கிராமம் கிராமமாகப் பிராமணர்களுக்குத்

1. The Maratta Rajas of Tanjore, p. 80
2. Ibid p. 81.
3. Ibid p. 82.

தானம் தந்துள்ளார்கள். இம்மராட்டிய மன்னர்கள் இந்துக் கோயில்களுக்கும் பிராமணர்களுக்கும் தானம் வழங்கிய தோடன்றி, இக்காலத்தில் நம் நாட்டிற்குப் புதிதாக வந்த கிறித்துவப் பாதிரிமார்களுக்குங்கூடப் பலப்பல தானங்கள் செய்தனர் எனலாம். ஜெர்மனி நாட்டிலிருந்து வந்த சமய போதகர் திரு. சுவாட்ஸ் **(Schwartz)** என்பவர் **(1726—1798)** பல நன்மைகளைப் பெற்று வந்தவர். அவர் துல்ஜாஜியின் உற்ற துணைவரா யிருந்தனர். அவர் இவர்கள் செய்த நன்மைகளைக் குறித் துள்ளனர்.

**தஞ்சை நாடு:**

வெளிநாட்டு வியாபாரம் இக்காலத்தில் வெளிநாட்டு மக்களிடமே சென்றுகொண்டு இருந்தமையாலும், இக் காலத்தில் ஆண்டவர்களும் சிறுசிறு குறுநில மன்னர் களாக நின்றமையாலும் கடல் வாணிபமும் பிற வாணிபங் களும் அத்துணைச் சிறந்திருந்தன என்று கூற இயலாது. நாகை, கரைக்கால், தரங்கப்பாடி இவை துறைமுகங்கள். இதன் வழி உள்நாட்டு இறக்குமதி வரி தஞ்சை அரசர் களுக்கு ஓரளவு வருவாய் தந்தது போலும்! அரசாங்க வரி செலுத்துவோருக்கு நிலம் உடைமையாய் இருந்தது. நில வரி ஊர் முழுதுக்கும் மொத்தமாக இருந்ததே அன்றித் தனித்தனியாக ஒவ்வொருவருக்கும் பிரித்து இடப்பெறவில்லை. ஜில்லா நிலவரியை ஏலம் கூறி அதிக மாகக் கேட்பவருக்கு விட்டு வசூலித்தார்கள் போலும்! இது இக்காலத்தில் அங்காடி முதலியவற்றிற்கு நகராண் கழகத்தார் வரி வசூலிக்கும் முறை போன்றது எனலாம். மன்னர், மக்கள் உழவுக்கு வேண்டிய பொருள்கள் வாங்கப் பணம் கடன் தந்தனர். தலைநகரங்கள் தாம் படை எடுப்புக்களால் துன்புற்றன. எனினும், தொலைவில் உள்ள கிராமங்கள் அமைதியாகவே வாழ்ந்தன எனலாம்.

இக்காலத்தில் இருப்பது போன்று ஒவ்வொரு துறைக்கும் பல்வேறு எழுத்தாளர்களும், பிற அலுவலாளர்களும் அக்காலத்தில் இல்லை போலும்![1] எனினும், அரசியல் ஒழுங்காக முறை தவறாது நடைபெற்று வந்தது என்பது நன்கு தெரிகின்றது. தஞ்சை மாவட்டத்தையும் தஞ்சையை யும் பெருமையாகப் பேச விரும்பும் K.R. சுப்பிரமணியம் அவர்கள் அழகாக அதன் சிறப்பை எடுத்துக் காட்டு கின்றார். கர்நடாக நவாபுவின் படை எடுப்பால் தொல்லையுற்ற கி பி.1773க்கும் 1775க்கும் இடைப்பட்ட இரண்டு ஆண்டுகள் தவிர்த்து, தென்னாட்டு நெற்களஞ் சியமும் அறிவுடை மக்களை ஈன்றதாயகமும், கலைமலிந்து நின்றதுமாகிய தஞ்சைநாடு கரிகாற்சோழன் காலம் தொடங்கி, ஆங்கிலேயர் ஆட்சிக் காலம் வரையில் தன் நிலைகெடாமல், பெரிதும் துன்புறுத்தப் பெறாமல் தமிழர்தம் பழம்பெருங்கலைகளையும் கலாசாரத்தையும் குலைத்துவிடாமல். இந்து சமயச் சின்னங்களாகிய பெருங் கோயில்களைக் கொண்டதாய்ச் சென்ற நூற்றாண்டு வரையிலுங்கூடக் கிறித்தவ இசுலாமிய மதங்களைக் கால் கொள்ள வழிதாராததாய்த் தன் நிலையில் சிறந்து நிற்கின்றது என்கின்றார்[2]. இவ்வாறு தமிழ்நாட்டின் தலை

---

1. The Maratta Rajas of Tanjore, p 95

2. From the Palmy days of Chola Karikala down to the entry of British Raj, except for about a couple of years 1773—1775, the Tanjore Country, the granery of the South, the abode of learning, the home of music, the mother of intellectual and intelligent sons and daughters, had been uninterruptedly a Hindu Kingdom preserving the ancient culture and its symbols, the temples, uninfluenced by Muslims and Christian contact down of the last century.

(The Maratta Rajas of Tanjore p. 223)

சிறந்த காவிரிபாயும் சோழ நாடானது மேலைநாட்டு மக்கள் தம் அரசியல் வழிக்கு மெள்ளச் சென்றுகொண்டே இருந்தது என அறிகிறோம்.

**மேலை நாட்டார் ஆட்சி:**

இந்நிலையில் மதுரையிலும் தஞ்சையிலும் பிற இடங்களிலும் மெள்ளமெள்ள இந்து சமய மராட்டியர் ஆட்சி நீங்க, முகலாய, மேலைநாட்டு மக்கள் ஆட்சி கால் கொள்ளத் தொடங்கும் காலம் வந்து கொண்டிருந்தது எனலாம்.

கி.பி. பதினேழாம் நூற்றாண்டின் தொடக்கத்திலேயே (கி.பி 1600 தொடங்கி) மேலைநாட்டு வாணிப மக்களாகிய நான்கு நாட்டு மக்களும்[1] தத்தம் ஆதிக்கத்தை நாட்டில் ஊன்றிக்கொள்ள முயன்றனர். உள் நாட்டில் நிலைத்த தமிழராட்சி இல்லாமையும் அவர்களுக்கு உடன் துணையாய் அமைந்தது எனலாம். தமிழ் நாட்டில் மட்டுமன்றி மேலைக் கடற்கரைப் பகுதியிலும் வங்காள நாட்டிலுங்கூட அவர்கள் கடலாதிக்கத்தைக் கைப்பற்றிப் பின் நில ஆதிக்கத்தையும், தொடர்ந்து ஆட்சிப் பொறுப்பையும் கைக்கொள்ள முனைந்தார்கள். அவர்களுள் போர்த்துகீசியரும் டச்சுக்காரரும் முன் வந்தவராயினும், அவர்களுக்குப் பின்னர் வந்த ஆங்கிலேயரே மெள்ளமெள்ள ஆதிக்கம் செலுத்தும் வாய்ப்பினைப் பெற்றனர். அவர் பின் வந்த பிரெஞ்சுக்காரர் சிறிது ஏறி இறங்கலுற்றனர். ஆங்கிலேயர் கிழக்கிந்தியக் கம்பெனி என்ற பேரோடு இங்கிலாந்தில் பதிவு செய்து கொண்டு வெறும் வாணிபம் கருதியே இங்கு வந்தனர். அவர்களைப் போன்றே மற்ற போர்த்துகீசிய டச்சு பிரெஞ்சு மக்களும் வாணிபத்துக்காகவே இங்கு வந்தனர். என்றாலும், நம் நாட்டின் சூழலும், நிலையிலா

1. Portuguese, Dutch, French and English

அரசியலும், இசுலாமியராட்சியும்,' பிறவும் அவர்களை இந்நாட்டு ஆட்சிப் பீடத்தில் அமர்த்திவிட்டன எனலாம்.

இந்த நிலையில்தான் நாம் முதலில் கண்டபடி மேலை நாட்டார் நம் நாட்டுச் சூழ்நிலையைப் பயன்படுத்தி விரோதிகள் இருவருக்கும் எதிர்த்து நின்று உதவி, தத்தம் ஆணையைப் பெருக்கிக்கொண்டனர். இவர்கள் நிலைக்கேற்ப அங்கு ஐரோப்பாவிலும் அவர்தம் நாடுகளுக்கிடையே போரும் பிணக்கும் மிக்கு நின்றன. அந்த வேகம் இங்குத் தமிழ்நாட்டில் மட்டுமன்றிப் பரந்த பாரத நாடு முழுமையும் பரவியது எனலாம்.

**போர்த்துக்கீசியர்:**

முதல் முதல் போர்த்துக்கீசியரே இந்தியக் கடலாதிக்கத்தைக் கைக்கொண்டார்கள். அவர் உத்தரவின்றிக் கடலில் எந்த நாட்டுக் கப்பலும் செல்ல இயலாது. வாஸ் கோடகாமாவின் வருகை இந்திய வரலாற்றையே மாற்றி அமைத்துவிட்டது எனலாம். அவர்கள் வாணிப வளம் பெருக்குவதோடு சமயத்தையும் வளர்க்க வேண்டும் என்ற நோக்கோடு வந்தவர்களே. அத்துடன் அவர்தம் நாகரிகத்தையும் பழக்க வழக்கத்தையும் மெள்ள இந்நாட்டில் குடியேறச் செய்தார்கள் எனலாம். போர்த்துக்கீசியரே இந்தியாவில் முதல் முதல் அச்சுக்கூடம் நிறுவியவர் எனலாம். மேலைக் கரை கோவாவிலும் பிற இடங்களிலும் அவர்தம் கத்தோலிக்க மதம் வளர அவர்கள் செய்த தொண்டு சிறந்தது. அதுபோன்றே விசயநகர ஆட்சியிலிருந்த அவர்தம் வாணிபமும் சிறந்திருந்தது. விசயநகர வேந்தர்களுக்கு அவர் தம் பாரசீகத்திலிருந்து குதிரைகள் வாங்கி வந்து தந்தார்களாம்[1]

---

1. A Survey of Indian History; by Panickar, p. 183.

**கடலாதிக்கம் கை மாறியது:**

இவர்களை அடுத்து மேலை நாட்டிலிருந்து டச்சுக்காரர் வந்தனர் அவர்கள் 1695இல் போர்த்துக்கல் எதிர்ப்பையும் பொருட்படுத்தாது இந்தியக் கடற்கரை வரையில் வந்து அத்துடன் நில்லாது தென்னிந்தியத் தீவுகளாகிய ஜாவா முதலிய இடங்களுக்குச் சென்றார்கள். இலங்கைப் பகுதிகளையும் கைக்கொண்டார்கள். எனவே பதினேழாம் நூற்றாண்டின் தொடக்கத்தில் போர்த்துக்கீசியர் தம் கடலாதிக்கம் குன்றியது எனலாம். கிழக்கு இந்தியக் கம்பெனி கி.பி. 1603இல்[1] தோன்றியது. டச்சுக்காரருக்குப்பின் அக் கம்பெனியின் உரிமையாளராகிய ஆங்கிலேயரே இந்தியக் கடலுள் புகுந்தனர். போர்த்துக்கீசியரும் பின் சென்றதால் கடலாதிக்கம் பொறுத்தவரை, ஆங்கிலேயரும் டச்சுக்காரருமே அடிக்கடி போர் செய்தனர். இவர்களை அடுத்துப் பிரஞ்சுக்காரரும் இக் கடலாதிக்கத்தில் புகுந்து போர் செய்ய நேரிட்டது. பின்னர் இந்தியக் கடலாதிக்கத்தைப் பொறுத்தவரை பிரெஞ்சியரும் ஆங்கிலேயருமே போரிட்டனர். அவருள் ஆங்கிலேயரே முன்னின்று வெற்றி பெற்று 1784இல் முழு உரிமையும் பெற்றனர். முழு உரிமை 1784 ல் வந்த போதிலும் அதற்கு நெடுங்காலத்துக்கு முன்பே தமிழக எல்லையாகிய கடல் ஆங்கிலேயரின் கீழ்ப்பட்டுவிட்டது. சோழர்தம் கப்பல்கள் அணிவகுத்து நின்ற அந்தக் கடல் எல்லையில் ஆங்கிலேயர்தம் கப்பல்கள் ஆதிக்கம் செலுத்தி அதன்வழி நிலைத்த ஆதிக்கததையும் பெருக்குதற்கு முயற்சி செய்து, வெற்றியும் பெற்றன. வடக்கே தில்லியிலும், தெற்கே தமிழ் நாட்டிலும் சரியான- நிலைத்த- நாட்டைப் பண்பட்ட முறையில் பேணிக்காக்க வேண்டும் என்ற எண்ணத்தில் நிலைத்த நம்பிக்கை கொண்டு

1. A Survey of Indian History, P. 207.

அரசர்கள் இல்லையாதலானும், மேலைநாட்டவர் தம் புதுப்புதுப்போர் முறைகளாலும், ஆயுதங்களாலும் அவர் தம் வாணிபப் பொருள்களாலும், பிரித்தாளும் தந்திர முறைகளாலும் தமிழகம் மட்டுமன்றிப் பரந்த பாரத தேசமே அவர்களுக்கு அடிமையாகி அவர்கள் ஆட்சிக்கு உட்பட்டது.

**ஆங்கிலேயர் ஆதிக்கம்:**

தமிழ்நாட்டு வட எல்லையில் உள்ள பழவேற்காடு **(Pulicut)** தொடங்கி நாகைப்பட்டினம் வரையில் மேலை நாட்டு வல்லரசுகள் தங்கள் ஆதிக்கத்தைச் செலுத்தும் வகையில் கடற்கரைத்துறைமுகங்கள் அமைக்கவிரும்பின. போர்த்துக்கீசியர் முதன்முதன் சென்னையில் உள்ள மயிலையில் தங்கி ஆதிக்கம் செலுத்தியபோதிலும் பின் பிரெஞ்சு ஆங்கிலர்தம் போராட்டத்தில் அது நிலைமாறி இறுதியில் ஆங்கிலேயரிடமே நின்றது. வடக்கே பழவேற் காட்டில் டச்சுக்காரர் ஒரு கோட்டையையும் அமைத் தனர். அதன் சிதைந்த நிலையினை இன்றும் காணலாம். போர்த்துக்கீசியர் தம் மயிலை **(Santhome)** அருகிலே ஆங்கிலேயர் 1639ல் இப்போதைய சென்னை நகர் உள்ள இடத்தைச் சந்திரகிரி அரசரிடமிருந்து பெற்றனர். சந்திரகிரி மன்னருக்குப் பின் கோல்கொண்டாவின் தளபதி யாய் வந்த மீர் ஜும்லா **(Mir Jumla)**வும் வாணிப நோக்குடையனாதலால் கோல் கொண்டா உத்தரவு பெற்று, ஆங்கிலேயருக்கு மேலும் வேண்டிய சலுகைகளை அளித்து, அவர் தம் கடலாதிக்கத்தையும் வாணிப வளனை யும் பெருக்க வழி செய்தான். அதற்குப்பின் அங்கு இங்கிலாந்தில் நடைபெற்ற உள்நாட்டுக் கலகங்களாலும் பிறவற்றாலும் ஆங்கிலேயக் கம்பெனியார் கோட்டைகள் கட்டித் தம் வாழ்வை இங்குப் பெருக்கிக் கொள்ள இயல

வில்லை. எனினும், பதினேழாம் நூற்றாண்டின் பிற்பகுதியில் அவர்கள் முயற்சி பயன் அளிக்கத்தொடங்கிவிட்டது. பதினெட்டாம் நூற்றாண்டின் தொடக்கத்தில் பெரும்பாலும் போர்த்துக்கீசியரும் டச்சுக்காரரும் நிலைகெட, தமிழ்நாட்டில் ஆங்கிலேய பிரெஞ்சு ஆதிக்கங்களும் போர்களுமே நிலைபெற்றன. தமிழ்நாட்டில் மட்டுமன்றி வடக்கே பம்பாய், கல்கத்தா போன்ற இடங்களிலும் ஏறக்குறைய இதே சூழ்நிலை இருந்தது எனலாம்.

பதினெட்டாம் நூற்றாண்டே ஆங்கிலேயரை இங்கு ஊன்ற வைத்த நூற்றாண்டு எனலாம். அக்காலமே நாம் முன் கண்டபடி ஆர்க்காட்டு முற்றுகை முதலியன நடைபெற்ற காலம். பிரெஞ்சுக்காரருக்காக 'டியூப்ளே' (1742ல் கவர்னராக வந்தவர்) புதுச்சேரியில் இருந்து கொண்டும், ஆங்கிலேயருக்காக (கிளைவ்) சென்னையில் இருந்து கொண்டும் உள்நாட்டுப் போர்களில் கலந்து நின்றனர். இதே நிலையில் மேலையிலும் இரு நாடுகளுக்கும் போர் தொடங்க, மௌரிஷியசிலிருந்து பிரெஞ்சுத் தளபதி இந்தியக்கடலுக்கு வந்து ஆங்கிலேயரைத்துரத்த நினைத்து ஓரளவு வெற்றியும் கண்டார். சென்னையையும் கைப்பற்றினார் எனினும், அங்கு மேலை நாட்டில் நடந்த ஒப்பந்தப்படி பெரும்பணம் பெற்றுச் சென்னை ஆங்கிலேயருக்குத் திருப்பித் தரப்பட்டது. இதற்குப்பிறகு சந்தா சாகிபுவுக்கும் மகமதலிக்கும் போர் நடைபெற்றது. கிளைவ் மகமதலிக்காகப் படையெடுத்துச் சென்று போரின்றியே ஆர்க்காட்டில் வெற்றிகொண்டார். இதற்காக டியூப்ளே ஆங்கிலேயரை எதிர்க்கச் சென்னை சென்றாரேனும், வெற்றி கண்டாரில்லை. ஆங்கிலேயர் ஆதிக்கமே மேலோங்கக் கர்நாடகத்தின் நவாபுபும் அவர்

தம் பொம்மை ஆகிவிட்டார் எனலாம். தமிழ்நாட்டில் மட்டுமன்றிப் பிற இடங்களிலும் பிரெஞ்சு தன் ஆதிக்கம் இழக்க, கிளைவின் ஆங்கில ஆதிக்கமே நாள்தொறும் ஓங்கி வந்தது. ஆங்கிலேயர் தம் பிற்கால நிலைத்த ஆட்சிக்கு ஆர்க்காடே வித்திட்டது என்று சொல்வது மிகவும் பொருத்தமானதாகும். அதுமுதற்கொண்டே தமிழில் வழங்கும் 'கும்பினி அரசாங்கம்' என்னும் கிழக்கிந்தியக் கம்பெனியின் ஆதிக்கம் வளர்ந்து கொண்டே வந்தது. வடக்கே தில்லி, கல்கத்தா, பம்பாய் ஆகிய இடங்களிலே நடந்த உள்நாட்டுக் கலகங்களிலும் பிறவற்றிலும் ஆங்கிலக் கம்பெனியார் பங்கு கொண்டு சிறுகச் சிறுகத் தம் ஆதிக்கத்தை நாடு முழுவதும் பரப்பி வந்தனர். டில்லியில் ஆண்ட முகலாய மன்னர்களும், நாட்டின் பிறபகுதிகளில் அவர்தம் ஆணையின் கீழ் ஆண்ட பிற சிற்றரசர்களும் ஒருவர் பின் ஒருவராய் ஆங்கிலேயர்தம் ஆட்சி எல்லைக்கு உட்பட்டு அடிமை ஆயினர் எனலாம். ஆங்கிலேயரும், தாம் கொண்ட இடங்களிலெல்லாம் ஆணையோடு, வாணிபம், கைத்தொழில், கல்வி முதலியவற்றையும் வளர்த்து, மக்களை அச்சத்தாலும் அன்பு வழியாலும் தம் வழிக் கொண்டு, நிலைத்த ஆட்சி நடைபெற வழிகோலினர் எனலாம் கிளைவ், தென்னாட்டில் செய்தது போன்றே வடநாட்டிலும் பலபல சூழ்ச்சிகள் செய்து ஆங்கிலேயர் தம் ஆட்சி வளர வழி கண்டான். தெற்கே மைசூரில் ஹைதர் அலியும், ஐதராபாத்து நிசாம் மன்னரும் தலைநிமிர்ந்து ஆங்கிலேயரை எதிர்க்கும் அளவுக்கும் வந்தனர் எனலாம். ஆயினும், அதற்குள் வடநாட்டிலும் பிற இடங்களிலும் ஆங்கிலேயர் ஆட்சி வளர, அனைத்தையும் தாங்கும் பொறுப்பை 'வாரன் ஹேஸ்டிங்ஸ்' என்பவர் வசம் ஒப்புவித்து அவரைக் (கவர்னர்

ஜெனரல்' ஆக்கினர் கிழக்கிந்தியக் கம்பெனியார். அவர் கிளைவைப் போலச் சூழ்ச்சித் திறனும் ஆட்சிப் பொறுப்பும் அறிந்தவர். அவர் நியமனமே கிளைவால் தொடங்கப் பெற்ற ஆங்கில ஆட்சியை இந்தியாவில் நிலைநிறுத்தியது எனலாம் வங்காளத்தில் ஹேஸ்டிங்ஸ் கை மேலோங்குவதைக் கண்ட தென்னாட்டு ஹைதரும் பிறரும் தலை சாய்ந்தனர். ஹேஸ்டிங்ஸுக்குப் பிறகு கம்பெனியார் ஆட்சி நாள் தோறும் வளர, விரைவில் பரந்த பாரதநாடு முழுவதும் ஆங்கிலேயர் வசமாயிற்று. அதுவரை பிற பாரத நாட்டு எல்லையொடு கலக்காது தனியாய் இருந்த நம் தமிழகமும் அவர் ஆட்சியில் ஒன்றாகிப் பாரதத்தோடு இணைந்ததாகிவிட்டது. வடநாட்டவரையும் வென்று தன்னடிப்படுத்தி நின்ற தமிழகம், இக்காலத்திலேதான் வெளி நாட்டவருக்கு அடிமையாகி, அவர் ஆட்சியும் தன் எல்லையில் இல்லாதிருக்க, வடக்கே 1300 கல்லுக்கு அப்பாலுள்ள தலைநகரைத் தன் தலைவிதியை உறுதி செய்யும் எல்லைக்கல்லாக முதன் முதலாக ஏற்றுக்கொண்டது.

# XVIII. ஆங்கிலேயர் ஆட்சி

**ஓரினக் கொள்கை**

தம்மொடு வந்த பிற மேலைநாட்டு மக்களையெல்லாம் மெள்ள மெள்ள வெற்றிகொண்டு, கல்கத்தாவில் 'கவர்னர் ஜெனரலை' ஏற்படுத்தி ஆளத்தொடங்கிய ஆங்கிலேயர். தலை நிமிர்ந்து வளர ஆரம்பித்தனர். வெறும் வாணிபத்தின் பொருட்டுக் கடல் கடந்து வந்த ஆங்கிலேயர், அக்கடலாதிக்கத்தைத் தமக்கே உரியதாகிக் கிக் கொண்டதோடு, இந்திய நாடு முழுமையும் ஆளும் உரிமையும் பெற்றுவிட்டனர். வாரன் ஹேஸ்டிங்ஸ் கவர்னர் ஜெனரல் ஆனபின் கிழக்கிந்தியக் கம்பெனி தனது வாணிபத்துறையைக் காட்டிலும் நாட்டைக் கட்டி ஆள்வதிலேயே கருத்தைச் செலுத்தியது. முதலில் இமயம் முதல குமரிவரை விரிந்து கிடக்கும் பாரதநாட்டை ஒன்றாக்கும் பணியில் தலைப்பட்டார்கள். வெவ்வேறு வகை நாகரிகம், கலை, பண்பாடு, கலாசாரம் முதலியன கொண்ட பல்வேறு மக்களினத்தை இந்திய இனம் என்று ஒன்று ஆக்கி, அதன் வழி 'ஓர் இனக்கொள்கையை' (One nation theory) நிறுவிவிட்டனர். வேங்கடம் குமரிக்கு இடைப்பட்டு, யாரோடும் கலவாது தனியாகச் சிறப்புற்றிருந்த தமிழகமும் காலவெள்ளததால் சுழற்சிபெற்று. ஆங்கிலேயர் வழி அடங்கிவிட்டது. ஐயாயிரம் கல் தாண்டி வந்து ஆணை செலுத்தினாலும் அவர்தம் ஆணை தமிழ் மண்ணிலிருந்து பிறக்கவில்லை. கல்கத்தாவிலும் தில்லியிலுமிருந்து பிறந்தது அவர்தம் ஆணை எப்படியோ ஒன்றிய பாரதத்தை ஒரு நூறு ஆண்டுகளுக்கு மேல் கட்டியாண்ட ஆங்கிலேயர், தாம் விட்டுச் செல்லும் போது நாட்டை இரண்டாக்கி விட்டுச் சென்றனர்.

எனினும், பரந்த பாரதத்தோடு தமிழ்நாடு ஒரு சிறு உறுப்பு நாடாக அமையும் வழியிலே அவர்கள் தமிழ் நாட்டை விட்டுச் சென்றார்கள். இன்று தமிழ்நாடு அகில இந்தியாவின் ஒரு சிறு அங்க நாடாகவே இருக்கிறது. ஆங்கிலேயர் ஆட்சியில் பல தீமைகளுடன் பரந்த பல நன்மைகளும் விரவியே இருந்தன. தமிழ்நாடு பரந்த பாரதத்தோடு ஒன்றிவிட்டதாயினும், தமிழ் நாட்டில் பல புதுவகையான உணர்ச்சிகளும் பிற சில நல்ல இயல்புகளும் தோன்ற வழிசெய்த காலம் ஆங்கிலேயர் ஆட்சிக் காலமே எனலாம்.

**தமிழ் நாட்டின் நிலை:**

வாரன் ஹேஸ்டிங்ஸும் அவருக்குப்பின் வந்த கவர்னர் ஜெனரல்களும் பல்வேறு வகையில் சிறந்தவர்களாய் நின்ற காரணத்தால் ஆங்கிலக் கம்பெனி ஆட்சி வளர்ந்து கொண்டே வந்தது. அவர்களுக்கு ஏற்றாற் போன்று, இங்கிலாந்தின் பாராளுமன்றமும் அவர்தம் வேண்டுகோளுக்கு ஏற்பப் பலவகையில் உதவியது. கவர்னர் ஜெனரலாக வருபவர்கள் பலரும் அங்குப் பாராளுமன்ற மேல் சபையில் (House of Lords) அங்கம் வகிப்பவர்களாய் இருந்துவிட்டார்கள். எனவே, கம்பெனிக்கு அங்கில அரசின் உதவி கிடைப்பது எளிதாகி விட்டது. கி.பி. 1812ல் கம்பெனியின் வாணிபத் துறை நிறுத்தப் பெற்றுக் கிழக்கிந்தியக் கம்பெனி இந்தியாவை ஆளும் உரிமை பெற்ற கம்பெனியாக ஆங்கிலேயப் பாராளுமன்றத்தால் முடிவுசெய்யப்பெற்றது. எனவே, அதுமுதல் இங்குள்ள ஆங்கிலேயர் பொறுப்பு பெற்று ஆளுகைக்கெனவே அமைந்து நின்றனர். இந்தத் தொடக்க நாளிலிருந்து, அவர்கள் 1947ல் இறுதியாக விட்டுச் செல்லும் வரையில் நாட்டை அமைதியாக ஆண்டுகொண்டிருந்தார்கள் என்று

சொல்ல இயலாது. நாட்டில் பல்வேறு குழப்பங்களும் சிறு சிறு போர்களும் இருந்தன எனலாம். இக்காலத்தி லெல்லாம் தமிழ்நாடு தனித்து இயங்காத காரணத்தால் வட நாட்டில் சிறு மாறுதல் வந்தாலும், அது தமிழ்நாட் டையும் பாதிக்கும் வகையில் அமைந்து விட்டது மெள்ள மெள்ள மக்கள் மனத்தில் ஒரே இனக் கொள்கை உருப்பெறலாயிற்று, தெற்கே தமிழ் நாட்டை மட்டும் தனித்த உறுப்பு நாடாகவும் செய்யவில்லை ஆங்கி லேயர்கள். தாம் புதிதாகக் கட்டிய கோட்டை உள் ளிட்ட சென்னை நகரைத் தலைநகராகக் கொண்டு சென்னை மாகாணத்தை நிறுவினார்கள். மதுரையும் வஞ்சியும், உறந்தையும், தஞ்சையும், பழையாறையும் கங்கைகொண்ட சோழபுரமும், காஞ்சிபுரமும் பிறவும் வறிதே செல்லப் புதிதாகத் தோன்றிய சென்னை மாந கரம் தலைநகராயிற்று. ஆங்கிலேயர் வாணிபக் குறிக்கோ ளுடன் வந்தவர்களானமையின், கடற்கரைப் பட்டினங் களையே வளர்க்க முற்பட்டனர். வாணிபப் பொருள் மட்டுமின்றி, தங்களுக்கு வேண்டிய போர்க்கருவி முதலி யனவும் தம் நாட்டிலிருந்தும், பிற நேசநாடுகளிலிருந்தும் கடல் வழியாக வரவேண்டி இருந்தமையின் கடற்கரைப் பட்டினங்களாகிய சென்னை, பம்பாய், கல்கத்தா போன்ற பெரு நகரங்களை வளர்த்தனர். அவர்கள் ஆட்சி இல்லையானால் நம் நாட்டுக்கு--சிறப்பாகத் தமிழ் நாட் டிற்குப் பல நன்மைகள் இல்லையாகச் சென்றிருக்கும் அவர்கள் செய்த நன்மைகளுள் ஒன்று சென்னையை வளர்த்ததோடு, துறைமுகத்துக்கு வழியற்றிருந்த போதி லும், அதைச் செயற்கை வகையில் சிறந்த துறைமுக மாக்கியதாகும். அன்று முதல் இன்று வரையிலும் சென்னை சிறந்த துறைமுகமாய்ச் செயலாற்றுகின்றது.

சென்னை தமிழ்நாட்டின் தலைநகரமாய் மட்டும் இல்லை. ஆந்திரம், மலையாளம், கன்னடம், ஒரியா ஆகிய நான்கு மொழி பேசும் மக்களையும் பிரித்து அவருள் ஒவ்வொரு பகுதியினரைச் சென்னை மாநிலத்தோடு சேர்த்துவிட்டனர் ஆங்கில ஆட்சியாளர். அதைப் போன்றே தமிழ் நாட்டின் தென்கோடியாகிய குமரி முனையையும், அதைச்சார்ந்த நாட்டையும், செங்கோட்டையையும் மலையாளம் பெரும்பான்மையாய் வழங்கும் நாட்டொடு சேர்த்துவிட்டார்கள் இப்படித் தமிழ்நாடே துண்டாக்கப்பட்டது எனலாம். இத்துடன் தமிழ்நாட்டின் பகுதிகளாகிய புதுச்சேரியும் காரைக்காலும் அவர்களுக்குள் செய்து கொண்ட உடன்படிக்கையின்படி பிரஞ்சுக்காரர் வசமாகித் தமிழ் நாட்டிலிருந்து பிரிக்கப்பட்டு விட்டன. இன்றும் பிரெஞ்சுக்காரர்கள் பொறுப்பை இந்திய அரசாங்கத்திடம் ஒப்படைத்துச் சென்ற போதிலும், இன்னும் அவை தமிழ்நாட்டொடு இணையாமல் ஆட்சி வகையில் தனித்தே இயங்குகின்றன. தென்கோடியில் இருந்த குமரியும் பிறவும் அண்மையில் செய்த மொழி வழி மாநில முறைப்படி தமிழ்நாட்டொடு இணைந்து விட்டன. வடக்கில் எல்லையாய் இருந்த வேங்கடம் ஆந்திரர் வசம் சென்றுவிட்டது. சென்னையைத் தலைநகராகக்கொண்டு 'சென்னை மாநிலம்' என்ற பெயரில் இன்று தமிழ்நாடு வாழ்கிறது. அண்மையில் 'தமிழ் நாடு' என்றே பெயர் பெற்றமை மகிழ்ச்சிக்குரியது

## நேரடி ஆட்சி:

ஆங்கிலேயர் சில காலம் கல்கத்தாவைத் தலைநகராகக் கொண்டு வாழ்ந்த பிறகு தில்லிக்குத் தம் தலைநகரை மாற்றிக்கொண்டனர். அப்போதும் சென்னையின் நிலை ஒன்றும் மாறவில்லை. சென்னை ஐந்து மொழிகள் வழங்கும் நாட்டின் தலைநகராகவே இருந்தது. எனவே

இங்கு தமிழை வளர்க்கவும் தனிமுறையில் தமிழ்ப் பண்பாட்டினை ஓம்பவும் வழி இல்லாதுபோயிற்று. பரந்த பாரதத்தை ஒன்றாக்கிய வகையில் ஆங்கிலேயருக்குச் சில சிக்கல்கள் உண்டாயின. சிலவற்றை நேரடியாகத் தமது பொறுப்பிலும் சிலவற்றைத் தம்கீழ் அடங்கிய அரசர்கள் பொறுப்பிலும் விட்டு வைத்தார்கள். அவ்வழியில் நம் தமிழ் நாட்டில் புதுக்கோட்டை அரசர் பகுதி ஒன்றும் தனியாகவே நின்றுவிட்டது. புதுக்கோட்டை அரசு அளவில் மிகச்சிறியதாய் இருந்தமையின் தமிழ்நாட்டின் பெரும்பகுதி ஆங்கிலேயரின் நேர் பார்வையிலேயே இருந்தது எனலாம்.

வடஇந்தியாவில் நடந்த சிப்பாய் கலகம் போன்ற பெரும்போர்களிலும் குழப்பங்களிலும் பலபல மாறுதல்கள் நடைபெற்றன எனலாம். மக்கள் உணர்ச்சி பெற்று வெள்ளையரை விரும்பா வகையில் வெளியேற்ற முயன்றனர் என்றாலும், அவர்தம் செயல்களும் கலகங்களும் முழு வெற்றியைத் தரவில்லை. எனினும், இத்தகைய சூழ்நிலைகள் இந்திய நாட்டு ஆட்சிப் பொறுப்பைக் கம்பெனியினிடமிருந்து ஆங்கில அரசாங்கத்திடமே மாறும்படி செய்துவிட்டது. 1848ல் இந்தியா ஒன்றாக இணைந்துவிட்டது. இங்கிலாந்தின் பாராளுமன்றம், கி.பி. 1858ல், இன்றைக்குச் சரியாக ஒரு நூறு ஆண்டுகளுக்கு முன்[1] கிழக்கிந்தியக் கம்பெனியிடமிருந்த ஆட்சிப் பொறுப்பைத் தானே ஏற்று நடத்தத் தொடங்கியது. அது முதல் அந்தக் கம்பெனியே நாட்டில் இல்லையாயிற்று எனவே, கம்பெனியாட்சி மறைய, ஆங்கிலப் பாராளுமன்றத்தின் நேரடியான ஆட்சி நாட்டில் தொடங்கிவிட்டது.

---

1. இதன் முதல் பதிப்பு 1958-ல் வெளிவந்தது.

**ஐரோப்பியர் செயல்கள்:**

ஆங்கில மக்கள் இந்திய நாட்டை ஆண்ட வரலாற்றைப் பற்றியும் அவர்கள் இந்திய மக்களை நடத்திய விதங்கள் பற்றியும் இன்று நாட்டில் எத்தனையோ வகையான வரலாற்று நூல்கள் உள்ளன. அவற்றின் வழியெல்லாம் அவர்கள் மக்களைக் கொடுமைகளுக் குள்ளாக்கிய நிலைகள் ஒரு பக்கமும், செய்த நலன்களின் நிலைகள் ஒரு பக்கமும் தோன்றா நிற்கும். பொதுவாக ஆங்கிலேயர்கள் இந்நாட்டு மக்களை வருத்தித் தம் வாழ்வைப் பெருக்கும் வழி கண்டார்கள். என்றாலும் ஆங்கிலேயருள் சிலர் இங்கு மக்களுக்கு இழைக்கப்படும் அநீதியைக் கண்டு கருத்தழிந்து பேசியுள்ளனர். அதே போன்று ஆளவந்த நிலையில் அமைந்துவிடாது ஒரு சிலர் இந்நாட்டுக் கலைகளையும். நூல்களையும், பிற இயல்புகளையும் கண்டு, தம்மை மறந்து அவற்றுள் ஆழ்ந்து, அவற்றைத் தம் மொழியில் பெயர்த்தமைத்து இந்திய இலக்கியங்களையும் பிறவற்றையும் உலகறியச் செய்தனர். மேலும், இந்திய நாட்டில் உள்ள பல்வேறு பிரிவுகளையும், மக்களினத்தில் உள்ள உயர்வு தாழ்வுகளையும் கண்டு வருந்தி அத்தகைய வாட்டம்போக்கவும் வழி செய்தனர் இவ்வாறு செய்தவர் பலர். அவர்களுள் திரு. பணிக்கர் அவர்கள் மூவரை முக்கியமாகக் குறிக்கின்றார்.[1] அவர்கள் எட்மண்டு பர்க்கு, வில்லியம் ஜோன்ஸ், மெக்காலே என்பவர்கள் பர்க்கு இந்திய மண்ணை மிதியாதவராயினும், இங்கு ஆங்கிலேயர் செய்யும் கொடுமைகளை அறிந்து, மக்கள் உரிமையுடன் வாழ வேண்டுமென்று இங்கிலாந்திலே அறிவுறுத்தியும் பாராளுமன்றத்து உறுப்பினரை அறிய வைத்தும் மக்களை மக்களாகவே வாழ வழி வகுத்தவர். ஜோன்ஸ் இங்கு

1. Survey of Indian History. p. 207.

ஆளவந்தவர். அவர் இலக்கியக் கலை உளம் கொண்டு சாகுந்தலம் போன்ற வடமொழி இலக்கியங்களை மொழி பெயர்த்துக் கீழ்நாட்டுக் கலை நலத்தை மேல்நாட்டு மக்கள் அறியுமாறு செய்தவர். மெக்காலே புதிய மனு என்கின்றார் பணிக்கர் ஆம்! சாதியே கண்டறியாத தமிழ்நாட்டில் உயர்ந்தவன் தாழ்ந்தவன் என்று பிறப்பால் வேறுபாடு கற்பித்துக் கொண்டு தாழ்ந்த மக்களை நசுக்கித் தமக்கு வேண்டியவற்றைப் பெற்று வாழும் வேறு பாட்டினைக் கண்ட மெக்காலே, மக்களினத்தில் வேறு பாடு காணலாகாது; மக்களாகப் பிறந்தவர் அனைவரும் சமமே' என்பதைச் சட்டத்தால் நிலைநிறுத்தி அதன் வழி மக்களுக்குள் இருந்த ஏற்றத் தாழ்வைத் துடைத்து நின்றார். இவ்வாறு பல ஆங்கிலேயர்கள் நாட்டுக்கு நல்ல பணி செய்துள்ளார்கள். ஆங்கிலேயர் ஆட்சிமுறை பற்றிப் பலப்பல நூல்கள் வெளி வந்துள்ளன. எனவே, அது பற்றி நாம் இங்கு அதிகம் காண வேண்டா. அவர்களால் பெற்ற தீமைகளையுங்கூட இங்கே எடுத்துக் காட்டிக்கொண்டிருக்க வேண்டா. அவர்களால் நம் இந்தியநாடு—சிறப்பாகத் தமிழ்நாடு—பெற்ற நன்மைகளை மட்டும் காண்போம்.

**நற்செயல்கள்:**

இக்காலத்தில் ஆட்சியின் எல்லை விரிந்துவிட்டது. வடக்கே இமயம் முதல் தெற்கே குமரி வரையிலும், மேற்கே ஆப்கானிஸ்தானம் முதல் தெற்கே இந்தோசீனா வரையிலும் பரந்துள்ள ஒரு நிலப்பரப்பை ஆளும் பொறுப்பை ஆங்கிலேயர் மேற்கொண்டனர். எனவே அதற்கேற்ற வகையில் தம் பொறுப்பினை உணர்ந்து பல வகையில் ஆட்சியைப் பலப்படுத்தினர் சிறப்பாகக் காவல் வகையில் 'மிலிட்டரி' பாதுகாப்பினைப் பெருக்கினர்.

அலுவலாளர்களை அதிகப்படுத்தினர் ஆங்கில நாட்டிலேயே அத்துறையில் பயிற்சி பெற்ற சிறந்த ஆங்கிலேயர்களை உயர்ந்த பதவிகளில் அமர்த்தி, அவர்கள் வழி நாட்டில் நல்ல முறையில் அமைதி நிலவப் பாடுபட்டனர். நாட்டின் பல பகுதிகளில் வாழும் இந்திய மக்களுக்குப் பயிற்சி அளிக்கும் வகையில் பல போர்ப்பயிற்சிக் கல்லூரிகள் ஏற்படுத்தினர். அவற்றுள் ஒன்று பெங்களூரில் இன்றும் நிலவுகிறது. இதைத் தவிர்த்து, போலீஸ் பயிற்சிக்கென்று தமிழ் நாட்டில் வேலூரில் ஒரு கல்லூரி நிறுவினர். அரவங்காட்டிலும் ஒரு பயிற்சிக் கல்லூரி உள்ளது. இப்படி முதலில் நாட்டின் அகப்புற அமைதிகளைக் காக்கும் காவற் படை, போர்ப் படை இரண்டையும் சீராக்கினர். இவை அவர்கள் ஆட்சியைக் குலையாமல் பாதுகாக்கத்தான் பெரும்பாலும் பயன் பட்டன என்றாலும், இவற்றின் இருப்பு இன்று உரிமைபெற்ற இந்தியாவையும் தலை நிமிர்ந்து நிற்கச் செய்கிறது. தங்களிடம் சிறந்த போர்ப் படையும் போலீஸ் படையும் உள்ளன என்று விடுதலை நாட்டு வேந்தர்களை வீறு பேசச் செய்கிறது. திருவள்ளுவர் கண்ட நாட்டு அரண் வழியே ஆங்கிலேயர் அகப்புற அரண்களை நன்கு அமைத்துப் பாதுகாத்தனர்.

**நாட்டு ஆட்சி:**

நாட்டைப் பல மாவட்டங்களாகப் பிரித்தனர். எல்லா மொழிகளும் கூடிய சென்னை மாநிலத்தில் 25 மாவட்டங்கள் இருந்தன தமிழ் நாட்டில் மட்டும் பதினொரு மாவட்டங்கள் இருந்தன. ஒவ்வொரு மாவட்டத்திற்கும் ஒரு தண்டல் நாயகம் (Collector) தலைவராய் இருந்து அந்தந்த மாவட்டத்தின் நலன்களைக் கவனித்துக்

கொள்வார். இவர்களும் பெரும்பாலும் ஆங்கிலேய ராகவே இருந்தனர். மாவட்டங்கள் பல வட்டங்களாவும் (Taluk), வட்டங்கள் சிறுசிறு நாடுகளாகவும் (Firka) பிரிக்கப்பட்டிருந்தன. அவ்வவற்றின் அலுவலாளர்கள் தத்தம் பணியைச் சரிவரச்செய்து, ஆண்டுக்கொரு முறை தண்டல் நாயகத்திடம் வேலை பற்றிய அறிக்கையை ஒப்படைக்க வேண்டும் அதைச் 'சமாபந்தி' என்பார்கள் அந்தச் சமாபந்தியையும், அதில் தம் கீழ் உள்ளார் செய்யும் பல அட்டகாசங்களையும் அவற்றால் உண்மையில் பயனடைய வேண்டிய ஊர் மக்கள் அவ்வாறு பயனடையா நிலையினையும் தமிழ்நாட்டில் பலகாலம் தண்டல் நாயகமாய் இருந்த J. சார்ட்டர்ஸ் மொலொனி என்பார் தம் நூலில் நன்கு எடுத்துக் காட்டியுள்ளார்.[1] அம் மாவட்ட முதல்வரிடம் நிலவரி பற்றியும் நிலம் பற்றியும் கொண்ட வேலைகளோடு, நாட்டு அமைதி காக்கும் பணியும் ஒப்படைக்கப்பட்டிருந்தது இப்போது உரிமை பெற்ற பிறகுதான் அதன் ஒரு கூறு பிரிக்கப் பெற்றிருக்கிறது. ஆளவந்த ஆங்கிலேயருள் பலர் மக்களை நேரில் கண்டு, அவர்களுடன் அளவளாவித் தத்தம் கருத்தை அவர்களுக்கு உணர்த்தி. அவர்களையும் நன்கு அறிந்து கொள்ள விரும்பினர் எனினும், ஆட்சியில் உள்ள இடைப்பட்ட அதிகாரிகளும். பிற ஆட்சி முறைச் செயலாளரும் அவர்களை அவ்வாறு செய்ய ஒட்டாமல் தடை செய்தனர் எனலாம் எனினும், ஒரு சிலர் சாதாரண மக்களோடு நெருங்கிப் பழகித் தம் கருத்துகளை வெளியிட்டுள்ளனர்.

ஆங்கில அரசாங்க எல்லை விரிவடையவே, அதற்கேற்ற ஆட்சி முறைக்கு வேண்டிய அனைவரையும்

1. A Book of South India- by J. Charters Molony

இங்கிலாந்திலிருந்து கொண்டு வரமுடியவில்லை. எனவே, அறிவறிந்த இந்திய நாட்டு மக்களையும் தம் ஆட்சிக் குழுவில் சேர்த்துக்கொள்ள முயன்றனர். நாளாக ஆகத் தம் ஆட்சிச் சபைகளிலுங்கூட இந்திய மக்களை உறுப்பினராகச் சேர்த்துக் கொண்டனர். 1860ல் தொடங்கப் பெற்ற இம்முறையின் நிலையே சிறிது சிறிதாக வளர்ந்து, 1935ல் மக்களின் நேரடித்தேர்வு முறையில் மாநில ஆட்சிச் சபைகளுக்கும், மத்திய ஆட்சிச் சபைக்கும் உறுப்பினரை அனுப்பும் வகையில்—வளர்ச்சி அடைந்தது. அதற்கு இடையில் ஆட்சிமுறை எத்தனையோ மாறுதல்களைப் பெற்றது எனலாம்.

தமிழ்நாட்டுச் சென்னை அரசாங்கமும் தன் ஆட்சிக்கு அறிவறிந்த சிலரை வேண்டிற்று. அக்காலத்தில் சிறந்திருந்த V. கிருஷ்ணசாமி ஐயர், P. சிவசாமி ஐயர், P ராசகோபாலாசாரியார், K. சீனிவாச ஐயங்கார், C.P. இராமசாமி ஐயர் போன்றவர்களைச் சென்னை அரசாங்கம் தன் ஆட்சிப் பொறுப்பில் சேர்த்துக் கொண்டது. இவர்கள் அனைவரும் பிராமணர்களாக இருந்த நிலைதான் நாட்டில் பிராமணர் பிராமணரல்லாதார் வேறுபாட்டை உண்டாக்கியிருக்குமோ என்ற குறிப்போடு திரு J. சார்ட்டர்ஸ் மொலோனி அவர்கள் எழுதுகிறார்கள்.[1] பணிக்கரும் தம் நூலில் சில பிராமணர்களையும் பிற அறிவறிந்தவர்களையும் தம் ஆட்சிப் பொறுப்பில் ஆங்கிலேயர் சேர்த்துக்கொண்டனர் எனக்குறிக்கின்றார்[2] எப்படியோ ஆங்கிலேயர் தம் ஆட்சியைத் தாமே வைத்துக்கொண்டிருந்த நிலை மாறி, ஆட்சிப் பொறுப்பில் இந்தியருக்கும் பங்கு உண்டு என்பதை நிலைநாட்ட நம்மவரையும் சேர்த்துக்கொண்ட காலம் தொடங்கி

1 A Book of South India, P. 63

2. A Survey of Indian History pp, 211—213

விட்டது எனலாம். இவ்வாறு மக்களில் சிலரை முன்னரே ஆட்சிப் பொறுப்பில் 1861ல் சேர்த்துக்கொண்டனர் பின் ரிப்பன் காலத்துச் சீர்த்திருத்தவழி நகராண்கழகங்களின் ஆட்சியும் அதை அடுத்து நாட்டாண்மைக்கழக ஊராண்மைக் கழக ஆட்சிகளும் ஒன்றன்பின் ஒன்றாக உருப் பெற்றன எனலாம். இவர்கள் காலத்தில் உருவாகிய ஊராண்மைக் கழகங்கள் சோழர் காலத்து ஊராண்மைக் கழகங்களை ஒத்து, அந்த நாளை நமக்கு நினைவூட்டு கின்றன எனலாம். பின், மிண்டோ—மார்லி சீர்திருத்த மும், அதன் பின் மாண்டேகு-செம்ஸ் போர்டு சீர்திருத்த மும் வளர வளர மாகாண மத்திய ஆட்சிப் பொறுப்புக் கள் அனைத்தும் இந்தியர் வசமே ஒப்படைக்கப்பட்டு விட்டன.

**கலை வளர்ச்சி**:

ஆங்கிலேயர் காலத்தில் பல நன்மைகள் பெற்றோம் எனக் கண்டோம். அவற்றுள் ஒன்று ஆளும் முறை. தமிழ் நாட்டில் சோழர் காலத்திலும் அதற்கு முன்பும் ஆளும் நெறி நன்கு போற்றப்பட்டு இருந்ததாயினும், இடைக் காலத்தில் பிற நாட்டார் கலப்பால் நிலைகெட்டதென்றே சொல்லலாம் ஆங்கிலேயர் ஆளும் நெறி,பின்னர் மக்களை ஆட்சிப்பொறுப்புள்ளவர்கள் ஆக்கிற்று என்பதுண்மை அதற்கு முக்கிய காரணம் ஆங்கிலேயர் மக்களைக் கல்வித் துறையில் முன்னேறச் செய்தமையேயாம். ஆங்கில அரசாங்கத்தார் முதலில் கல்வித்துறையில் அவ்வளவாகக் கருத்திருத்தவில்லை என நேரு அவர்கள் தம் நூலில் குறித்துள்ளார்.[1] பணிக்கரும் அக்கருத்தை ஒட்டி ஆங்கிலே யர் தம் கல்விமுறை விரைந்து மக்களை உயர்த்தவில்லை என்றார்,[2] எனினும் காலப் போக்கில் அவர்தம் கல்வி

1. Discovery of India, P. 317
2. A Survey of Indian History, P. 212.

வளர்த்த நெறியே நாட்டை ஒன்றாக்கியது எனலாம். நமக்காக இன்றேனும் அவர்தம் ஒன்றிய ஆட்சி நடை பெற ஒருவரோ டொருவர் கலக்க—ஒரு மொழி தேவையாய் இருந்தது. அதற்காக அவர்கள் ஆங்கிலத்தை மக்களிடைப் பரப்ப விரும்பினர். அதற்கேற்ப மேலை நாடுகளிலிருந்து சமயத்தொண்டாற்ற வந்த பலர் இங்குப் பற்பல இடங்களில் கல்வி நிலையங்கள் அமைத்தனர். சென்னை, பம்பாய், கல்கத்தா போன்ற தலைநகரங்களில் பல்கலைக் கழகங்கள் உருவாயின. 1857ல் சென்னைப் பல்கலைக் கழகம் உருவாக்கப் பெற்றது. பல்கலைக் கழகங்களில் ஆங்கிலம் நன்கு பயிற்றப்பெற்றது. அவற்றில் பயின்றவர்களுள்ளே பலர் ஆளும் பொறுப்பை ஏற்றுக் கொண்டு சிறந்தனர். அவ்வாறு அவர்கள் வேற்றுமை பாராட்டாது அனைவரையும் ஆங்கிலம் கற்கச்செய்தனர். அவர்தம் ஆங்கிலக் கல்வியே குமரி முதல் இமயம் வரை வாழும் மக்களை ஒன்றாக்கிற்று எனலாம் இந்தியநாட்டில் எம்மொழி பேசுவோரும் ஆங்கிலம் என்ற பொது மொழியால் ஒன்றிக் கலந்தனர். அவர்கள் கலப்பே பின் காங்கிரஸ் உருவாவதற்கும், உரிமை பெறுவதற்கும் வழி காட்டியாக நின்று, விடுதலை வேட்கையை வளர்த்துப் பின் அவ் விடுதலையையும் வாங்கித் தந்தது என்பது கண் கூடு. இன்றும் மேலைநாட்டுச் சமய நெறியாளர்தம் கல்விக்கூடங்கள் தமிழ்நாட்டில் பல்வேறு இடங்களில் இருப்பதைக் காணலாம்.

**சமூகச் சீர்திருத்தம்:**

கல்வித் துறையில் தமிழ்ப் பெண்கள் இடைக் காலத்தில் முன்னேறவில்லை எனலாம். சங்க காலத்தில்

பல பெண்கள் பயின்றும் முன்னேறியும் அரசரோடு நேருக்கு நேர் பேசும் திறம் பெற்றிருந்தார்கள். எனினும், இடைக்காலத்தில் அவர்கள் நிலை தாழ்ந்தது. பின்னர் ஆங்கிலேயர் காலத்தில் பெண்கள் நிலை வளர்ந்து விட்டது எனலாம். பெண்களுக்கெனத் தனிப் பள்ளிகளும், கல்லூரிகளும் நிறுவிப் பெண் கல்வியை வளர்த்தவர் ஆங்கிலேயர்களே. அதைப் போன்றே தாழ்த்தி ஒதுக்கப் பட்ட மக்கள் என்பாருக்குக் கல்வி வசதிகளையும் பிற நல்ல வசதிகளையும் தந்தவர்கள் ஆங்கிலேயர்களே. தாழ்த்தப்பட்டவர் யார் யார் என்று தேடி, அறிந்து ஊர் தோறும் சென்று அவர்கள் நிலை உணர்ந்து, அவர்களுக்கு இலவசக் கல்வியும், குறைந்த சம்பளத்தில் கல்வியும் அளித்துப் பிற வசதிகளையும் செய்து வந்தனர். மக்களுக் குள் இருக்கும் சாதி வேறுபாடுகளையும், உயர்ந்தோர் தாழ்ந்தோரைத் தாழ்த்தி வைத்திருக்கும் கொடுமையை யும் தாழ்ந்த சாதியார் விலங்கினும் கேடாக வாழ்வதை யும் பல ஆங்கிலேயர் கண்டு கண்ணீர் வடித்து, வேண்டிய வகையில் ஆட்சி முறையிலேயே உதவவும் முன்வந்தனர். அவ்வாறு தென்னிந்திய சாதிகளைக் கண்டு அவர் பற்றிய விளக்கங்களை 'தர்ஸ்டன்' என்பார் தம் நூலுள் விளக்கு கிறார்[1] இவ்வாறு ஆண் பெண் வேறுபாட்டில் உண்டா கும் கேடுகளையும் பிறப்பால் உயர்வு தாழ்வு கற்பித்துக் கொண்டு நிற்பார்தம் கொடுமைகளையும் நீக்க ஆங்கில அரசாங்கத்தார் பெரும்பாடு பட்டனர். தாழ்ந்த சாதி யார் எனப்படும் வகையிலே உள்ள பலர் தென் தமிழகத் தில் அதிகமாக உயர்ந்தோரால் கொடுமை செய்யப் பெற்ற காரணமே அபபகுதியில் இந்து சமயத்துக்கு மாறுபட்ட இசுலாமிய, கிறித்துவ சமயங்கள் வளர வாய்ப்பை உண்டாக்கித் தந்தது எனலாம் இவ்வாறு

1. The Castes and Tribes of South India-By Thurston

சாதிபேதமற்ற ஒரு பண்டைய தமிழ்ச் சமுதாய நெறியை வளர்த்தவர்கள் ஆங்கிலேயர் என்பது உண்மையன்றோ!

கல்வித் துறையில் மட்டுமின்றிப் பல்வேறுவகைத் துறைகளிலும் ஆங்கிலேயர் மக்களை ஒன்றாக்கினர் எனலாம். இரயில்வேக்களும் தபால் தந்திப் பகுதிகளும் நெடுந்தொலைவில் உள்ள மக்களை ஒன்று சேர்த்தன. இரயிலில் சாதி வேறுபாட்டுக்கு இடமில்லை எச்சாதியாராயினும் ஒன்றாக உட்கார வேண்டிய நிலை உண்டாயிற்று. மேலும் குமரி முதல் இமயம் வரையில் விரைந்து சென்று அரசியற்பணி புரியவும், பிற வகையில் கலந்து நிற்கவும் அப்போக்குவரத்துக்கள் நன்கு பயன்பட்டன. அவை போன்றே நெடுந்தொலைவிலிருந்து செய்திகளை அனுப்ப அஞ்சல் நிலையங்களும், விரைவில் தந்திகள் அனுப்பத் தந்தி நிலையங்களும் பெரிதும் உதவின. இவ்வாறு பரந்த நிலப்பரப்பை இணைத்து ஆண்டதோடு, அவ்விணைப்பு பலப்படும் வகையில் பலப்பல புதுச் சாதனங்களை உதவி, அவற்றின் வழி ஆங்கிலேயர் மக்கள் ஒற்றுமையை வளர்த்தார்கள்.

ஆங்கிலேயர் காலத்தில் இன்னும் பல்வேறு சீர்திருத்தங்களும் நடைபெற்றன. மிக அதிகமாக இல்லையேனும், சங்ககாலம் தொடங்கி, ஓரளவில் கணவனோடு எரிமூழ்கும் வழக்கம் நாட்டில் இருந்து வந்தது. ஆதிரை தீப்பாய்ந்ததும், பூதப் பாண்டியன் தேவியார் கூற்றும், பிற்காலச் சோழ அரசியார் ஒருவர் கணவனோடு எரிமூழ்கியதும் தமிழ்நாட்டில் பழங்காலமாகச் 'சதி' இருந்து வந்தது என்பதைக் காட்டுகின்றன. இந்த வழக்கம் வடநாட்டில் சற்று அதிகமாய் இருந்திருக்கும்; வற்புறுத்தலாலும் நடைபெற்றிருக்கும். ஆனால் அக்

கொடிய வழக்கத்தைச் சட்ட அடிப்படையில் நிறுத்தியவர் ஆங்கிலேயர்களே. அவர்களுக்குத் துணையாய் நின்று பெரிதும் உதவியவர் ராஜாராம் மோகன்ராய் என்ற வட நாட்டவராவர்.

**கலை வளர்ச்சி:**

கலைகளையும் பழம்பொருள்களையும் போற்றிப் புரப்பதில் ஆங்கிலேயர் அதிகக் கவனம் செலுத்தினர். இசுலாமியர் படை எடுப்பின்போது மதுரையிலும் பிற விடங்களிலும் சில கோயில்கள் அழிவுற்றன எனக் கண்டோம். ஆனால் ஆங்கிலேயர் காலத்தில் எல்லாக் கோயில்களும் நன்கு பாதுகாக்கப் பெற்றன. விக்டோரியா மகாராணியாரின் சாசனப்படி மக்களுடைய அனைத்து உரிமைகளும் பாதுகாக்கப்பட்டன. அத்துடன் தமிழ் நாட்டுக் கல்வெட்டுக்களும் சாசனங்களும் பிற அனைத்தும் வெளிவர உதவியவர்கள் ஆங்கில அரசாங்கத்தவரே. கி.பி. 1834இல் ஜேம்ஸ் பிரின்சிப் என்பவர் அசோகர் கல்வெட்டைப் பற்றி அறிந்து நாட்டிலுள்ள கல்வெட்டுக்களையெல்லாம் ஆராய முனைந்தார். பழம் பொருள் ஆய்வுக் கழகம் ஒன்று நிறுவப் பெற்றது. 1836ல் அலெக்சாந்தர் கன்னிங்காம் என்பவர் அதன் தலைவராய் இருந்து பணியாற்றினார். பல பழம் பெருங் கல்வெட்டுக்களும், புதை பொருள்களும், அழிந்த சின்னங்களும், பிறவும் ஆராயப்பெற்றன. திராவிடரின் நீண்டகால வாழ்வையும், அவர்கள் சிந்து வெளியில் சிறக்க நின்ற நிலையையும் வெளி உலகம் இன்று உணர்ந்து போற்றுமாறு செய்த பணி, இந்தப் பழம் பொருள் ஆராய்ச்சியின் பயனே என்பதை யாரே மறுக்க வல்லார்! இந்தியாவிலேயே தமிழ்நாட்டிலேதான் கல்வெட்டுக்கள் அதிகம். கல்வெட்டுக்களைப் படி எடுப்பது அவ்வளவு எளிதன்று. அவற்றை எடுப்பித்து, அவற்றைத்

தொகுத்து நூல் வழியில் வெளியிட்டு, அவற்றைக் குறிப்பெடுத்து அவற்றால் அறியப்பெறும் பல பழம்பெரு வரலாறுகளை உலகுக்குக் காட்டிய பெருமை ஆங்கில ஆட்சியையே சாரும். நாம் இதுவரையில் பயின்ற தமிழ் நாட்டு வரலாறு அனைத்துமே இவ்வரிய கல்வெட்டு ஆராய்ச்சி இன்றேல் எப்படி எழுதப்பெற்றிருக்கும்? தமிழ்நாட்டுக் கல்வெட்டுக்களும், செப்பேடுகளும், மாமல்லபுரம், தஞ்சை போன்ற கலைநிலையங்களுமன்றோ தமிழ் நாட்டு வரலாற்றை உலகுக்கு எடுத்துக் காட்டுகின்றன! அவை அழிக்கப் பெற்றோ, கட்டப் பெறாமலோ இருந்தால் தமிழ்நாட்டு வரலாறே இல்லை எனலாம். கல்வெட்டுக்கள் ஆயிரக்கணக்கில் படி எடுக்கப் பெற்றன. அவ்வாறு எடுக்கப் பெற்றவற்றை ஆராய்ந்து ஆண்டுதோறும் தொகுத்து அவற்றை ஆங்கில அரசாங்கத்தார் வெளியிட்டு வந்தனர் இன்று—இந்நாளில், நாம் உரிமை பெற்று எத்தனையோ ஆண்டுகளாயினும்—இன்னும் அந்த முறையில் பல நூல்கள் வரவில்லை என்பதைத் தமிழர் வருத்தத்தோடு உணர வேண்டியவராகின்றார்கள். பலவிடங்களில் இன்று பழம்பெருங்கோயில்களை அரசாங்கத்தார் பாதுகாக்கின்றனர். இப் பாதுகாப்பை இந்து சமய அறநிலையப் பாதுகாப்பாளர் மேற்கொள்ளல் நன்று. முந்நாளில் ஆங்கிலேயர் காலத்திருந்த அத்துணை உணர்வில் இன்று தமிழ்நாட்டில் கல்வெட்டுக்களும் பழம் பொருள்களும் ஆராயப் பெறவில்லை. அவற்றின் வழியே புது ஆராய்ச்சிகளும் வளரவில்லை எனலாம். எனவே இத்துறையில் இன்று உரிமை பெற்ற நாளைக் காட்டிலும் ஆங்கிலேயர் காலத்தில் சிறக்க அவர்கள் தொண்டாற்றினார்கள் என்பதுண்மை.

சுருங்கக்கூறின் ஆங்கிலேயர் ஆட்சி இல்லாதிருந்திருப்பின் தமிழ் நாட்டு வரலாறே இல்லை என்று சொல்லலாம்.

**இலக்கிய சமய வளர்ச்சி:**

தமிழ்நாட்டுச் சமயநிலை இவர்களுடைய காலத்தில் பெரிதும் மாறுதல் அடையவில்லை. பண்டைய சைவமும் வைணமும் தம் நிலையில் வளர்ந்து வந்தன. வடக்கே குஜராத்தில் தயானந்த சரசுவதி தோன்றி, 'ஆரிய சமாசம்' என்ற புதுப்பெயருடன் வேத இந்து சமயத்தை வளர்க்க முன் நின்றார்.[1] அது இந்திய நாடு முழுவதும் பரவிய காலத்தில் தமிழ் நாட்டிலும் கால் கொண்டது. அது போன்றே வங்காளத்தில் தோன்றிய விவேகானந்தரால் நிறுவப்பெற்ற இராமகிஷ்ணர் திருச்சபையும் தமிழ் நாட்டில் இடம் பெற்றது. இதே காலத்தில் மேலை நாட்டுக் கிறித்துவ சமயமும் வளர்ச்சி பெற்றது எனலாம். இவ்வாறு இக்காலத்தில் சைவ வைணவ சமய நெறிகளோடு பிற கோட்பாடுகளும், கிறித்தவ சமயமும், இசுலாமிய சமயமும் வளர்ந்தன.

சமயங்களோடு அவ்வவற்றின் சமய இலக்கியங்களும் வளர்ந்தன. சைவ வைணவ சமயங்களில் புது முறையான பல இலக்கியங்கள் வளர்ந்தன. 'தல புராணம்' என்ற ஒரு வகை இலக்கியம் தோன்றிற்றேனும் அவ்விலக்கியம் மக்கள் உள்ளத்தைத் தொடாமல், தோன்றிய காலத்தே மறைந்துவிட்டது எனலாம். பலப்பல சிறுவகைப் பிரபந்தங்கள் இக் காலத்தில் வளர்ச்சியுற்றன. சிவப்பிரகாசர், குமரகுருபரர் போன்ற சைவநெறி போற்றிய பல தலைவர்கள் இவர்கள் வருகைக் காலத்துக்குச் சற்று முன் பின்னாக வாழ்ந்து பலப்பல இலக்கியங்களை எழுதினர். அவர்

1. A Survey of Indian History. p. 218.

கள்தம் அடி ஒற்றி இன்னும் பலர் பலப்பல சிற்றிலக்கியங்களை எழுதினர். இவர்கள் காலத்தில் அச்சும் உடன் வந்தமையின் நூல்களை அச்சிட வாய்ப்பும் உண்டாயிற்று. அந்த வாய்ப்பின் வழியே கல்வியும் இலக்கியமும் வளரலாயின. இவர்கள் காலத்தில் தமிழ் இலக்கியத்தில் மற்றொரு புதுத்தோற்றம் அதன் உரை நடை நூல்களாகும். சிலப்பதிகாரம் தொடங்கி உரை, பாட்டுடன் விரவியதோடு, உரையாசிரியர்கள் உரை நடைகளும் நாட்டில் இருந்தன. எனினும் உரைநடையில் தனி நூல் இல்லை. முதன்முதல் இத்தாலிய நாட்டுப் பெஸ்கி என்ற வீரமாமுனிவரே தமிழில் உரைநடை நூல் எழுதினாரென்றும், அது சிறுகச் சிறுக வளர்ந்து இருபதாம் நூற்றாண்டின் இடையில் மிக உயர்ந்து வளர்ச்சியுற்றுச் செய்யுள் நடையை மறக்கும் வகையில் மேன்மையுற்றது என்றும் காண்கின்றோம். பல்வேறு செய்யுள் நூல்களும் உரைநடை நூல்களும் அச்சேறி ஆயிரக்கணக்கான மக்கள் ஒரே சமயத்தில் ஒரு நூலைப் பயில வழி உண்டாயிற்று. இசுலாமிய சமயத்தில் சீறாப் புராணம் போன்ற இலக்கியங்களும், கிறித்து சமயத்தில் தேம்பாவணி, சித்தேரி அம்மானை, திருக்காவலூர்க் கலம்பகம், இரட்சணிய யாத்திரிகம் போன்ற செய்யுள் நூல்களும் இக்காலத்தில் உண்டாயின. இன்னும் கிறித்தவ சமயத்தவரும் அச்சமயத்தைச் சார்ந்த மேலை நாட்டினரும் தமிழுக்குச் செய்த சிறந்த தொண்டுகள் பலப்பல. எனவே, இக்காலத்தில் பிற வளர்ச்சிகளோடு தமிழ் இலக்கியமும் வளர்ச்சியுற்றது.

**தமிழ் வளர்ச்சி:**

இலக்கிய வளர்ச்சியோடு தமிழ்மொழியை விரிந்த உலக அரங்கு ஏற்றிய பெருமையும் இவ்வாட்சிக்

காலத்துக்கே உரியதாகும். வடக்கே வேதத்தையும் சாகுந்தலம் போன்ற பிற வடமொழிக் காவியங்களை யும் ஆங்கிலத்தில் மொழி பெயர்த்தமை போன்று தமிழில் உள்ள சிறந்த இலக்கியங்கள் ஆங்கிலத்தில் மொழிபெயர்க்கப் பெற்றன. தமிழில் உள்ள திருக் குறளை உலகில் பலப்பல மொழிகளில் மொழிபெயர்த் தனர். திருவாசகத்தையும், திருக்குறளையும் டாக்டர் போப்பு' நன்கு உலகம் அறிந்து போற்றுமாறு மொழி பெயர்த்து, அவ்வுலக மக்கள் அனைவரும் தமிழ் இலக்கிய மாண்பினையும், தமிழர் பெருமையையும் நன்றிகறியச் செய்தார். சமயத்தொண்டு புரிய வந்த 'டாக்டர் 'கால்டுவெல்' அது வரை உலகம் கண்டிராத வகையில் மொழி நூல் இயற்றித் திராவிட மொழிகளின் தொன்மையையும், அவற்றுள் தமிழ்மொழியின் தனிச் சிறப்பு இயல்பையும், அது வடமொழித் தொடர் பில்லாது இயங்கும் ஆற்றல் பெற்றுள்ள நிலையையும் கண்டு உணர்ந்து உலகுக்குக் காட்டியுள்ளார். இப் படிப் பலப்பல வகையில் தமிழ் இலக்கியமும் பிறவும் தமிழ்நாட்டில் நன்கு வளர்ந்து, உலகம் அவற்றை அறிந்துகொண்ட ஓர் ஒப்பற்ற காலமாய் விளங்கியது ஆங்கில ஆட்சியின் காலமாகும். நாட்டில் ஆங்கில மொழி வளர்வதன் முன் இந்தியாவில் தமிழும் இந்தி யுமே இலக்கிய வளத்துடன் சிறத்திருந்தனவெனப் பணிக்கர் கூறியாங்கு[1] தமிழ் அவர்கள் வருகைக்கு முன்னரே வளம் பெற்றிருந்தது. ஆங்கிலேயரும் அவர்வழி வந்த சமய வளர்ச்சியாளரும் அம்மொழியை வளம்பெறச் செய்து சிறந்த இலக்கியங்களை மொழி பெயர்த்து உலகறியச் செய்ததோடு, இத்தமிழ் கலந்த திராவிடமொழிக் குடும்பமே உலகில் தொன்மை வாய்ந்ததென்றும் உயர்ந்ததென்றும் உலகம் அறிந்து கொள்ளுமாறு செய்தார்கள்

1. A Survey of Indian History, p. 235

## உரிமை வேட்கையும் விடுதலையும்

எனினும், அத்தகைய ஆங்கிலப் பேரரசும் 1947 ஆகஸ்டு 15ல் இம்மண்ணிலிருந்து விடை பெற்றுக் கொண்டது. ஏன்? அது அந்நிய ஆட்சியாய் இருந்த காரணத்தாலும் அது சேர்த்துவைத்த பாரத சமுதாயத்தின் கூட்டு வளர்ச்சியாலும், அவ்வளர்ச்சி வழிக் கண்ட 'காங்கிரஸ்' தாபனத்தின் உழைப்பாலும், இரண்டு பெரும் போர்கள் உலக அரங்கில் உண்டாக்கிய பல்வேறு மாறுதல்களின் காரணங்களாலும், பல நன்மைகளுக்கிடையே ஆட்சியைப் பற்றிக்கொண்டிருக்க வேண்டுமென்ற காரணத்தால் அவ்வப்போது செய்த சில கொடுமைகளாலும், உலகெங்கணும் உண்டான உரிமை வேட்கை உணர்ச்சியினாலும் ஆங்கில ஆட்சி இந்திய மண்ணில் மட்டுமின்றி பர்மா, மலேயா, இலங்கை முதலிய பல இடங்களிலிருந்தும் விலகி, அந்நாடுகளுக் கெல்லாம் உரிமை வழங்கிற்று. இந்தியநாடு விடுதலை பெறக் காரணமாயிருந்தது காங்கிரஸ். இது முதல் முதல் 1885ல் தோன்றியது. அக்காலத்தில் இதைத் தோற்றி வளர்த்த பெருமையில் ஆங்கிலேயர்க்கும் பங்கு உண்டு. இது சிறந்த நாட்டுச் சேவைசெய்யும் தாபனமாய் வளர்ந்ததாயினும், காந்தியடிகள் இதில் பங்குகொள்ள ஆரம்பித்த பிறகே இது நன்கு வளர்ந்து நாட்டுணர்ச்சியை உலகுக்குக் காட்டிற்று எனலாம். இந்தக் காங்கிரஸ் பணியிலும் இதன் வழி இந்தியா உரிமைபெறச் செய்த எல்லாப் பணிகளிலும்கூடத் தமிழ்நாட்டின் பங்கு தலைசிறந்ததாகும். காங்கிரஸ் தோன்றிய அந்த நாள் தொட்டு இன்றுவரை தமிழர் அதில் பங்கு கொண்டு உழைத்து, கவி பாடி உயிர் இழந்து, ஊக்கத்தோடு முன்னேறும் வழியில் நின்று ஆவன புரிந்துள்ளார்கள். அடுத்து உரிமைப் போராட்டங்கள் பற்றியும் அவற்றுள் தமிழ்நாடு கொண்ட பங்கைப் பற்றியும், உரிமைபெற்றபின் தமிழ்நாடு இன்றுள்ள நிலைபற்றியும் காண்போம்.

# XIX. விடுதலைக்கு முன்னும் பின்னும்

**தன் வரலாறு அற்ற தமிழகம்:**

தென்னாட்டில் மைசூர்ச்சுல்தானை 1799ல் அடியோடு முறியடித்து, வடக்கே மராட்டியரை 1818ல் முற்றும் தோற்கடித்தபின் ஆங்கிலேயக் கம்பெனியார் இந்தியாவில் எதிர்ப்பார் யாருமின்றியே ஆணை செலுத்தத் தொடங்கினர். எனினும், அவ்வப்போது நேர்ந்த உள்நாட்டுக் கலகங்களும் வேறு சில குழப்பங்களும் அவர்களை நிலை கொள்ளா வகையில் துன்புறுத்தி வந்தன எனலாம். ஆங்கிலேயர் ஆட்சிக்கு வந்த பின் தமிழ் நாட்டுக்கென்று தனி வரலாறு இல்லையாயிற்று. ஆங்கிலேயர்கள் நேரடியாகவும் பல சிற்றரசர்களின் வழியும் குமரி முதல் இமயம் வரையில் ஒரே நாடு என்ற உணர்வில் ஆட்சியைத் தொடங்கி விட்டனர். பல்வேறு மொழி, கலாசாரம், நாகரிகம், பண்பாடு ஆகியவற்றில் வேறுபட்டு நின்ற பரந்த இந்திய நாட்டை இசுலாமியர் தம் ஆணைவழி ஒன்றுபடுத்த முயன்றனர். எனினும், தமிழக எல்லையுள் அவர்கள் நினைத்ததை ஆங்கிலேயர் நிறைவேற்றி விட்டார்கள். எனவே, அவர்தம் ஆட்சித் தொடக்கம் முதல் இந்தியா ஒன்றாக, தமிழ் நாட்டு வரலாறு எனத் தனியாகும் நிலை இல்லையாகிவிட்டது. பதினெட்டாம் நூற்றாண்டுத் தொடக்க முதல் கம்பெனி ஆட்சி இருந்தது. பிறகு 1858ல் ஆங்கில அரசாங்கமே இந்நாட்டு ஆட்சியை ஏற்று ஆள, அதன் ஆட்சியும் தொடர்ந்து 1947 வரை நடைபெற்றது. 1947ல் இந்தியா விடுதலை அடைந்தது. எனவே, அத்துடன் தமிழ்நாடும் விடுதலை அடைந்தது

எனலாம். ஆங்கில ஆட்சியின் கீழும் விடுதலை அடைந்த பின்னும் தமிழ் நாட்டு அரசாங்கம்—சென்னை அரசாங்கம்—தில்லியின் ஆணைக்கு உட்பட்டே தொழில் பட வேண்டிய நிலையும் ஏற்பட்டது. எனவே தில்லியில் உண்டாகும் மாறுதல்கள் அனைத்தும் தமிழ்நாட்டையும் பாதித்தன எனலாம். 1947ல் இந்தியா விடுதலையாகு முன்பு எத்தனையோ போராட்டங்களும் புரட்சிகளும் இந்தியா நடத்த வேண்டி இருந்தது. அனைத்திலும் தமிழ் நாடு முன்னின்று பணியாற்றி விடுதலைக்கு ஒல்லும் வகையெல்லாம் உதவிற்று எனலாம்.

**எதிர்ப்புச் சக்தி:**

ஆங்கிலேயர் ஆட்சித் தொடக்கத்திலேயே தமிழ்நாடு வீறு பெற்று எளிதில் அவர்களை ஏற்றுக்கொள்ளவில்லை. இன்று தமிழ்நாட்டில் சிறக்கப் பேசப்பெறும் கட்டபொம் மன், மருதுசகோதரர்கள் பூலித்தேவன் போன்ற வீரர்கள் பலரும் இவர்களுக்கு உடன் துணையாய் நின்றவரும் அக் காலத்தில் ஆங்கில ஆட்சியை நாட்டில் தலை எடுக்க ஒட்டாமல் செய்தவர்களே. 'வானம் பொழியுது, வையம் விளையுது, வெள்ளையனுக்கு ஏதுக்கு வரி?' என்று பாளை யக்காரர் கூறி, கடைசி மூச்சு இருக்கும் வரை தம் கொள் கையை விடாது போற்றி வாழ்ந்து வீழ்ந்த வீரராகவே திகழ்ந்தார் என்பது இன்று நாடறிந்த கதையாகிவிட்டது. அக்காலத்தில் பாளையக்காரர்களும் பிற மறவர்களும் ஆங்கில ஆதிக்கத்தைத் தமிழ்மண்ணில் வேரூன்றச் செய்யா வகையில் செயலாற்றிச் சிறந்தவர்களே. சிறந்த தமிழ் வேந்தர்கள் ஒருவரும் இலரேனும், தெலுங்கு நாட்டிலிருந்து வந்து இங்கே அரசாண்ட விசயநகர

வேந்தர் பரம்பரையினருடன் வந்த சிலரும், இங்கேயே மறக்குடிகளாய் வாழ்ந்த பாளையக்காரரும் மற்றவர்களும் அங்கங்கே தனித்தனியாய் இருந்து, ஆங்கிலேயருக்கு அடிமையாகா வகையில் நாட்டைக் காக்க முயன்றனர். கிராமங்களில் வாழ்ந்த மக்களுங்கூட உணர்வுடையவராய், அந்நியருக்கு இடங்கொடா வகையில் இப்புரட்சி வீரர்களுக்கு உதவியே வந்தார்கள். இந்தச் செயல்களெல்லாம் ஆங்கில ஆட்சிக் காலத்தில் மறைந்து கிடந்தன; இன்று வெளிவருகின்றன. இன்னும் நாட்டு வீரர்களை வஞ்சகத்தால் ஆங்கிலேயர் தேடிப்பிடித்ததையும், அகப்பட்டவரைக் குண்டுக்குப் பணிய வைக்க முயன்றதையும், பணியாதவரை குண்டுக்கு இரையாக்கியதையும் இன்று வரலாற்றில் விளக்கிக் காட்டுகின்றனர் அறிஞர். உரிமைப் போரில் பங்கு கொண்ட, சென்ற நூற்றாண்டில் வாழ்ந்த காஜுலு இலட்சுமி நரசிம்மலு செட்டியார், சேலம் இராமசாமி முதலியார் போன்ற நாடு மறந்தவர்களைக்கூட இன்று அறிஞர் நாட்டுக்கு அறிமுகப்படுத்துகின்றனர்.[1] எனவே, ஆங்கிலேயர் கால் வைத்த அந்த நாளிலேயே விடுதலை வேட்கையால் இயன்ற வரையில் எதிர்த்து நின்று போராடிய பெருமை தமிழகத்துக்கு உண்டு எனலாம்.

**விடுதலை வேட்கையின் சூழ்நிலை:**

இந்திய நாட்டில் வாழும் மக்கள் நலனுக்காகப் பாடுபடுவதற்கென 1852லே "பிரிட்டிஷ் இந்தியக் கழகம்[2]" என்ற ஒரு சபை தொடங்கப் பெற்றது. அதில் ஆங்கிலே

1. இரு பெருந்தலைவர் — ந. சஞ்சீவி
2. British Indian Association

யர்கள் பெரும்பங்கு கொண்டு உழைத்தனர். இந்தியர்களும் அதில் கலந்திருந்தனர். அந்தக் கழகமே பின் 'இந்தியன் நேஷனல் காங்கிரஸ்' என்ற பெயரில் உருமாறி 1947இல் வெள்ளைய ராட்சியை விரட்டி விடும் என்று அன்று யாருமே நினைந்திருக்க முடியாது. 'இந்தியன் நேஷனல் காங்கிரஸ்' என்ற பெயரில் அது மாறின போதும் அதில் பல ஆங்கிலேயர்கள் பங்கு கொண்டே இருந்தனர். 28-12-1885இல்தான் 'இந்திய நேஷனல் காங்கிரஸ்' மகாசபை அமைக்கப் பெற்றது எனலாம். அப்போது அதில் 72 உறுப்பினர் இருந்தனர். அவர்கள் இந்தியாவின் பல பாகங்களிலிருந்தும் வந்தவர்கள். அன்று தோன்றிய காங்கிரஸ் சிறுகச்சிறுக வளர்ச்சி யடைந்து வெள்ளையனை நாட்டை விட்டே துரத்தும் என எண்ணி இருக்கமுடியாது. அதனுடைய வளர்ச்சியும் அவ்வளவு விரைவாக இருந்தது என்று சொல்லமுடியாது. முதல் உலகப்போர் காங்கிரஸ் சக்தியை வளர்த்தது எனலாம். அத்துடன் ஆப்பிரிக்காவில் நடைபெற்ற உள் நாட்டுக் கலகம் இந்தியக் கைத்தொழிலை—சிறப்பாக நெய்தற்றொழிலை—வளர்த்தது எனலாம். அதற்குமுன் இங்கிலாந்தில் பெரிய ஆலைகளை ஏற்படுத்தி அவற்றின் உற்பத்திகளை இந்தியாவிற்கே இறக்குமதி செய்து வந்தார்கள். எனினும், முதல் உலகப் போருக்குப் பின்னும் ஆப்பிரிக்க உள் நாட்டுக் கலகத்துக்குப் பின்னும் இந்தியாவிலும் வடக்கே பம்பாய்,ஆமதாபாது முதலிய இடங்களில் ஆலைகள் வளரத்தொடங்கின. அக்காலத்திலெல்லாம் தமிழ்நாட்டில் எண்ணத்தக்க அளவுக்குப் பெரு ஆலைகள் வளர்ச்சி பெறவில்லை. சற்றுப் பின்னரே கோவை, மதுரை முதலிய இடங்களிலே ஆலைகள் வளர்ச்சியுற்றன.

சென்னையில் ஆங்கிலேயரால் நடத்தப்பெற்ற இரண்டோர் ஆலைகள் சிறிது வளர்ச்சி அடைந்திருந்தன. மற்றும் முதல் உலகப்போருக்குப் பிறகு இந்தியக் கீழ்க்கரை வாணிபம் வளர்ச்சி அடைந்தது எனலாம். பர்மா, மலேயா, கிழக்கிந்தியத் தீவுகள், சையாம் போன்ற இடங்களில் இந்திய வாணிபம் வளரலாயிற்று. அவ்வாணிப வளர்ச்சியில் பங்கு கொண்டவர்கள் பெரும்பாலும் தமிழர்களே. நாட்டுக்கோட்டை நகரத்தார் என்னும் நம் தமிழ் நாட்டுத் தனவணிக மக்கள், இந்தக் கீழை நாடுகளெல்லாம் சென்று, தமது வாணிப வளனைப் பெருக்கினார்கள் அவர்கள் வழி ஓரளவு தமிழ்நாட்டில் செல்வம் செழித்தது எனலாம். அதைப்போன்றே தென்னாப்பிரிக்காவிலும், மௌரிஷியஸ் முதலிய அரபிக் கடலின் மேலைத்தீவுகளிலும் தமிழர் பெரும்பாலராகச் சென்று வாணிபத்தைப் பெருக்கினார்கள். பல நூற்றாண்டுகளுக்கு முன்பே கடலாதிக்கமும், கடல் வாணிப வருவாயும் நன்கு வரப் பெற்றிருந்த தமிழ் மக்கள் இந்த நூற்றாண்டின் தொடக்கத்திலும் தம் வாணிபத்தைப் பல நாடுகளிலும் பரப்பினர். இன்றும் இந்தியாவிலிருந்து அதிகமாக வெளிநாடுகளில் சென்று வாழ்கின்ற மக்கள் தமிழர்களே எனலாம்.

**வெளி நாடுகளில் தமிழர்கள்:**

ஆங்கில ஆட்சியின் கீழ்ப்பட்ட இலங்கை, பர்மா, மலேயா முதலியநாடுகளில் காடு கொன்று நாடாக்கி ரப்பர், ஈயம், டீ முதலியவற்றின் உற்பத்தியைப் பெருக்க மக்கள் பலம் தேவை இருந்தது. அதற்காக ஆங்கிலேயத் தோட்ட முதலாளிகள், இங்குள்ள ஆங்கில ஆட்சியின் துணைபற்றிப் பல மக்களைக் கூலிகளாக அழைத்துச் சென்றனர். தமிழ்நாட்டில் போர் காரணமாக உண்டான வறுமையால் மக்கள் வாழ வசதியின்றி வாடி இருக்கும் காலத்தில் இந்த அழைப்பு ஒரு 'வரப்பிரசாதமாக'

அமைந்தது. இத்துடன் ஆங்கிலேயரின் கையாட்கள் பலப் பல வகையான ஆசை வார்த்தைகள் சொல்லவே, தமிழ் மக்கள் ஏமாற்றமுற்றனர். ஆகவே, இலட்சக் கணக்கில் இலங்கை, மலேயா, பர்மா முதலிய நாடுகளுக்குச் சென்றனர். இப்படி வாணிபம் பொருட்டும், அடிமை வாழ்வில் வளம்பெருக்க நினைத்தும் பல தமிழர்கள் சென்ற நூண்றாண்டின் இறுதியிலும் இந்நூற்றாண்டின் தொடக்கத்திலும் தாய் நாட்டை விட்டுச் சென்றனர். இன்று எல்லா நாடுகளும் உரிமை பெற, அங்கங்கே வாழும் தமிழர்கள்-நாடுகளின் வளம் பெருக்கிய தமிழர்கள்-வாழ வகையின்றி வாட்ட முறுகின்றதைக் கண்ணால் காண்கிறோம். இன்று உரிமை இந்தியா தன் மக்களுள் யாரையும் கூலிகளாக வெளியே அனுப்பவில்லை யாதலால், நம் தமிழர்களும் கூலிகளாக வெளியில் செல்லுவதில்லை.

**காங்கிரஸ்:**

காங்கிரஸ் சிறுகச் சிறுக வளர்ச்சியடைந்து வந்தது. எனினும், காந்தியடிகள் அதில் கலந்துகொண்ட பிறகுதான் அந்தத் தாபனம் நன்கு வளர்ச்சி அடைந்தது எனலாம். சோர்ந்த உள்ளத்துக்கு உணர்வூட்டும் வகையில் காந்தி அடிகளாரின் வருகை காங்கிரஸ் அமைப்புக்கு உணர்வூட்டிற்று. தென்னாப்பிரிக்காதான் இந்திய காந்தியை உலகுக்குக் காட்டிற்று. இந்திய நாட்டு மண்ணில்— குஜராத்தில் பிறந்து, இலண்டனில் பயின்று, பாரிஸ்தராகித் தென்னாப்பிரிக்கா சென்ற காந்தி அடிகள் அங்கு இந்திய மக்கள் கறுப்பர் என்ற பெயரினால் படும் அவதியைக்கண்டு தம் வாழ்வை உதறி, மக்களுக்குத் தொண்டாற்ற முன் வந்தார். அந்தத்தொண்டு வாழ்வே அவரை உலகுக்கு உணர்த்தியது; அங்கு ஓரளவு வெற்றி கண்ட காந்தி அடிகளார். இங்கு இந்திய மண்ணில் கால் வைத்து, காங்கிரசில் சேர்ந்தார். அவர் வருகை

காங்கிரசுக்குச் சிறந்த சஞ்சீவியாய் இருந்தது என்கிறார் நேரு அவர்கள்.[1]

காந்தி அடிகள் காங்கிரஸ் அமைப்பில் சேர்ந்த பிறகு அதன் அமைப்பே மாறிவிட்டது எனலாம். அவர் ஆங்கில அரசாங்கத்தை நாட்டை விட்டு அகற்றவேண்டிய பணிகள் எவை எவை என ஆராய்ந்து, அமைதியான முறையிலே வெற்றி பெற வழி உண்டா எனக் கண்டு கொண்டே இருந்தார். வடவிந்தியாவில் காந்தி அடிகள் அகிம்சை வழியில் வெற்றி காண முயற்சி செய்து கொண்டிருந்த அதே வேளையில் மற்றோர் இயக்கம், வேறு வழியில் செயலாற்றிக்கொண்டே இருந்தது. அது தான் முஸ்லீம் லீகு என்ற வகுப்புவாதத் தாபனமாகும். அது முஸ்லீம் மக்கள் நலனுக்கெனவே பாடுபட்டதோடு, மற்றவரை வேறுபடுத்திப் பிரிக்கும் வகையிலும் இருந்தது எனலாம். அதனுடைய முயற்சியே 1947ல் இந்தியா ஒன்று என்று இராமல், இரண்டாக்கப் பெற்று 'பாகிஸ்தான்' என்ற புது நாடு உருவாவதற்கு முக்கிய காரணமாயிருந்தது. எனினும் தமிழ்நாட்டில் அத்தகை வேறுபாட்டு உணர்ச்சி அதிகமாகத் தலைஎடுக்கவில்லை. சில இடங்களில் முஸ்லீம் இந்துக்கள் வேறுபாடு முளைத்ததென்றாலும், அவ் வேறுபட்ட நிலை நெடுநாள் நீடிக்காத வகை

1. "And then Gandhi came. He was, like a powerful current of fresh air that made us stretch ourselves and take deep breaths, like a beam of light that pierced the darkness and removed the scales from our eyes, like a whirlwind that upset many things but most of all the working of people's mind. He did not desend from the top; he seemed to emerge from the millions of India, speaking their language and incessantly drawing attention to them and their appalling condiition"

– The Discovery of India, p. 361

யில் அவ்வப்போது அழிக்கப் பெற்றது என்பது அறிந்த தொன்று. வடக்கே பாகிஸ்தான் உருவான பின்பு தமிழ் நாட்டிலே உள்ள இசுலாமியர்கள் எந்த வேறுபாடும் இன்றி, இங்குள்ள மக்களோடு இணைந்து வாழும் வகை யில் நன்கு பழகிவிட்டனர். அதற்கேற்றாற்போன்று மாநில, பாராளுமன்றத்தேர்தல்களிலும் அவர்களுக்கென ஒதுக்கப்பட்ட தனி நிலைமாறி, அவர்களை மற்றவரோடு அணைத்துச் செல்லும் நிலையும் உண்டாகிவிட்டது. எனவே, தமிழ்நாட்டில் மதத்தால் வடநாட்டில் நடை பெற்ற 'நவகாளி'க் கொடுமைகள் போன்ற ஒன்றும் தலை விரித்தாடவில்லை.

தமிழர் பங்கு.

இந்திய விடுதலைப் போராட்டத்திலெல்லாம் தமிழர் பங்கு மற்றவர்களுடையதைக் காட்டிலும் குறைந்தது என்று சொல்ல இயலாது. தோன்றிய அந்த நாள் தொட்டு, வ.வே.சு. ஐயர், சுப்பிரமணிய சிவா, சீனிவாச ஐயங்கார், இராசகோபாலச்சாரியார், சத்தியமூர்த்தி, திரு வி. கலியாணசுந்தரனார், ஈ. வே. இராமசாமி நாயகர், முத்துரங்க முதலியார் போன்ற தமிழ்த் தலைவர் அந்த இயக்கம் வளர்வதற்கும் விடு தலைக்கு வழி காண்பதற்கும் வேண்டிய ஏற்பாடுகளை யெல்லாம் செய்தனர். இவர்கள் அனைவரும் காந்திய வழியில் பங்கு கொண்டு பாடுபட்டனர். விடுதலைக் கவிஞராகிய சுப்பிரமணிய பாரதியார் அவர்களுடைய இலக்கியத் தொண்டினை நாடு மறக்க முடியாது. இந்திய வரலாற்றிலேயே வெள்ளைக்காரனுக்கு எதிராகக் கப்பல் கம்பெனியைத் தோற்றுவித்து வீரத்தோடு முன் னின்று நடத்திய வ. உ. சிதம்பரனார் அவர்களைத் தமிழ் நாடு மறக்க முடியுமா? 'கொன்றாலும் கொண்ட கொடியை விடேன்!' என்று கூறி, அப்படியே அடிபட்டு இறந்த திருப்பூர்க் குமரன் பெயர் தமிழ்நாட்டில் மறை யாது.

தமிழ்நாட்டில் புதுச்சேரி, காரைக்கால் என்ற இரு பகுதிகளும் ஆங்கிலேயர் வசம் செல்லாது, அந்தக் காலத்திலேயே பிரெஞ்சுக்காரர் வசத்தில் தங்கிவிட்டன. அந்த இருநாடுகளுக்கும் ஏற்பட்ட உடன் படிக்கையின் படி நேற்றுவரை அவை இரண்டும் பிரெஞ்சு ஆளுகைக்கு உட்பட்டே இருந்தன அந்த நிலை தமிழ் நாட்டில் ஒரு மாறுதலை உண்டாக்கிற்று எனலாம். தமிழ்நாட்டில் சில தலைவர்களை அடாத நிலையில் ஆங்கில அரசாங்கம் ஒறுக்க நினைத்த வேளைகளிலெல்லாம் அத்தலைவர்கள் கரந்துறையும் நிலை ஏற்பட்டது. அந்த நிலைக்குப் புதுவை சிறந்த இடமாய் அமைந்தது. அங்கு, சுப்பிரமணிய பாரதியார் இருந்து இயற்றிய விடுதலைப் பண்கள் பல. அந்த நாளில் வடக்கே (வங்கம்) இருந்து இந்தப் புதுவைக்கு வந்துதான் அரவிந்தர் இன்று பெரிதாகக் காணும் ஆச்சிரமத்தை அமைத்தார். இப்படித் தமிழ் நாட்டின் ஒரு பகுதியாகிய புதுவை அரசியல் தலைவருக்குப் புகலிடமாய் அன்று அமைந்தது. இன்றும் பிரெஞ்சுக்காரர் விட்டு நீங்கியும் கூட அந்த இரு பகுதிகளும் பிற தமிழ்ப் பகுதிகளோடு இணைந்து வாழ முடியாமல் தனித்துத் தமக்கென ஓர் ஆட்சியை நிறுவிக்கொண்டு வாழ்கின்றன. அவை இரண்டும் இணையும் நாளே தமிழகம் ஒன்றும் நன்னாளாகும். அதைப்பல தலைவர்கள் இன்றும் வற்புறுத்தி வருகின்றனர்.

**வளர்ந்த காங்கிரஸ்:**

காந்தி அடிகளின் தொண்டு காங்கிரஸ் வழி ஏழை எளியவர்களுக்குப் பயன்படும் வகையில் சிறக்க அமைந்த காரணத்தால் அதன் கொள்கை ஏழைகளைத் தன் பக்கம் இழுத்தது. பல ஏழைகள் காந்தி அடிகள் சொற்படி நடக்கலாயினர் தமிழ்நாட்டிலும் பலப்பல மக்கள் அத்துறையில் பணியாற்ற முன் வரலாயினர். எனினும், அக்காலத்தில் தமிழ் நாட்டில் எதிர்பாராத மாறுதல்

களும் தோன்றலாயின. ஆங்கிலேயர் ஒருவர் கூறியபடி[1] நம் தமிழ் நாட்டில் சாதியின் பேரால் வேறுபாட்டுக் கொள்கைகள் வளரலாயின. வெளி நாட்டிலிருந்து வந்த ஆங்கிலேயரோடு பெரும்பாலும் நெருங்கிப் பழகி அவர்களுடைய ஆட்சிச் சபைகளிலும் இடம்பெற்றவர்கள் பிராமணர்கள். எனவே, அவர்கள்வழி மாகாண ஆட்சியிலும் மத்திய ஆட்சியிலும் பல பிராமணர்கள் செயலாற்றி யிருப்பர். அது கண்டு பெரும்பாலான மக்கள் வெறுப்புக் கொண்டு அந்த ஆட்சியை வெறுக்கவும் நினைத்திருப்பர். காங்கிரசிலும் அந்த வேறுபாடு புகுந்து கொண்டது. எனினும் அதை வற்புறுத்திய சில தலைவர்கள் அதை விட்டு வெளியேற முடிந்ததே தவிர, அது காங்கிரசை ஒன்றும் செய்ய இயலவில்லை. 1926ல் காஞ்சியில் நடந்த தமிழ்நாடு காங்கிரஸ் மாநாட்டில் இவ் வகுப்புவாதப் பிரதிநிதித்துவத்துக்காகப் போராடி, அதனுள் இருந்து வெற்றி காண முடியாது என்ற காரணத்தால் ஈரோடு இராமசாமி நாயக்கர் அவர்கள் காங்கிரசை விட்டு வெளியேறினார். அதே காலத்திலும் அதனை ஒட்டிச் சில ஆண்டுகளிலும் தமிழ் நாட்டில் நீதிக் கட்சி[2] அமைத்த பிராமணரல்லாத மந்திரிசபை ஆங்கிலேயர் ஆணைகளுக்குக்கட்டுப்பட்டு அடங்கிச் செயலாற்றி இருந்தது. அது பிராமணரல்லாதாருக் கெல்லாம் உதவ வேண்டுமென வகுப்புவாதப் பிரதிநிதித்துவ முறையில் அரசாங்க உத்தியோகங்களைப் பகிர்ந் தளித்ததன்றி, பயிலுவதற்கெனத் தாழ்ந்த வகுப்பார் பலருக்கும் வசதி செய்து இலவசக் கல்வி பெற வழியும் செய்தது இம்முறைகள் இன்று முற்றும் இல்லையேனும், ஓரளவு தொழிற்பட்டு வருகின்றன என்று கூறல் தவறாகாது.

1 A Book of South India, pp. 15 to 19; 115 & 116

2. Justice Party

இந்த ஆண்டுகளிலெல்லாம் தமிழ்நாட்டில் காங்கிரஸ் வீணே காலம் கழிக்கவில்லை. 1927ல் சென்னையில் அகில இந்தியக் காங்கிரஸ் நடைபெற்றது. அக்காலத்தில் தமிழ் நாடு தன் முழுப் பொறுப்பில் எல்லாப் பணிகளையும் ஏற்று, வருங்காலத்தை உருவாக்கத் திட்டமிட்டது. அதற்கு முன்பிருந்தே S சீனிவா ஐயங்கார், S. சத்தியமூர்த்தி, C. இராசகோபாலாசாரியார் ஆகியோர் நாட்டில் காங்கிரஸ் நன்கு வளரப் பாடுபட்டு வந்தனர்.

**புதிய ஆட்சி முறைகள்:**

1930இல் காந்தி அடிகள் வடநாட்டில் உப்புச் சத்தியாக்கிரகம் தொடங்கினார் தண்டி யாத்திரை என்பது வரலாற்றில் சிறந்த இடம் பெற்ற ஒன்று; அதே வேளையில் இங்குத் தமிழ் நாட்டிலும் வேதாரணியத்தில் தலைவர்கள் உப்புக் காய்ச்சும் திட்டத்தில் ஈடுபட்டனர் அதனால் பலர் சிறை சென்றனர். காங்கிரஸ் உழைப்பினாலே நாட்டில் உண் ாகிய மாற்றத்தைக் கண்ட ஆங்கிலேயர்கள் இந்திய நாட்டிற்கு அவ்வப்போது மாறுபட்ட அரசியல் முறைகளைப் புகுத்த நினைத்துப் பல ஏற்பாடுகளைச் செய்தனர். அவற்றுள் ஒன்று 1935ல் கொண்டு வந்த மாகாண சுய ஆட்சித் திட்டமாகும். அதன் மூலமாக மாகாணங்களில் சட்ட சபைக்கு உறுப்பினர்கள் மக்களால் தேர்ந்தெடுக்கப்பெற வேண்டும். அச்சபைகள் கவர்னர்களுக்கு உட்பட்டே பணியாற்ற வேண்டும். இந்த முறையைக் காங்கிரஸ்காரர்கள் தீவிரமாக எதிர்த்தனர் தமிழ்நாட்டில் தலைவராய் இருந்த சத்தியமூர்த்தியவர்கள் காங்கிரசு மகாசபைக் கூட்டத்தில் அந்தப் புதிய முறையை ஏற்றுக்கொண்டு ஆட்சிக்குள் புகுந்து போராட வேண்டும் என்று வற்புறுத்தினார். நேரு உட்படப்

பல தலைவர்கள் அக்கொள்கையை மறுத்தபோதிலும் கடைசியாகத் தேர்தலில் தலையிட்டு ஆட்சியைக் கைப்பற்ற வேண்டும் என்ற முடிவே ஏற்கப்பட்டது. அதன்படி அடுத்து 1936ல் நடைபெற்ற தேர்தல்களில் காங்கிரஸ் போட்டியிட்டது. சிந்து, வங்காளம், பஞ்சாபு ஆகிய மூன்று மாகாணங்களைத் தவிர பிறவற்றில் காங்கிரசே பெரும்பாலான இடங்களைக் கைப்பற்றியது. சென்னையிலும் காங்கிரஸ் ஆட்சி தொடங்க ஏதுவாயிற்று. அதன்படியே முதன்முதல் காங்கிரஸ் ஆட்சியில் C. இராசகோபாலாசாரியார் தலைமையேற்றுத் தமிழ்நாட்டை ஆளும் பொறுப்பை மேற்கொண்டார்.

எதிர்பாராத வகையில் இரண்டாம் உலகப்போர் மூண்டது. இது உலக நிலையையே மாற்றிவிட்டது. இருபதாம் நூற்றாண்டின் இடையில் நடைபெறும் நாட்டுப் போர்கள் விரைவில் உலகப் போர்களாக மாறிவிடுதல் தவிர்க்க முடியாததாகும். அந்த நிலையில் மேலைநாட்டில் உண்டாகிய சிறுபோர் உலகநாடுகளையெல்லாம் பற்றியது. சில நேர்முகமாக ஈடுபட்டன. சில மறைமுகமாக உதவும் வகையில் ஈடுபட்டன. இந்தியா இந்தப் பெரும் போரில் கலந்து கொள்வதா வேண்டாவா என்ற நிலை உண்டாயிற்று. காங்கிரஸ் வேண்டா என்ற கொள்கையை வற்புறுத்தியது. ஆங்கில ஆட்சி, இங்கிலாந்து, தானே நேரில் போரில் கலந்து கொண்ட காரணத்தால், இந்தியாவும் கலக்க வேண்டும் என விரும்பிற்று. அதனால், வேறுபாடுற்று மத்திய, மாகாண காங்கிரஸ் மந்திரி சபைகள் 1942-ல் ராஜிநாமா செய்தன. அத்துடன் போருக்கு உழைக்க வேண்டாத நிலையில் பெரும் புரட்சி இயக்கம் தொடங்கிற்று. 1942 ஆகஸ்டு போராட்டத்தில் பலப்பல காங்கிரஸ்காரர் சிறைப்பட்டனர். அவருள தமிழர் பலர். தமிழ்நாட்டிலும் எத்தனையோ இடங்களில் ஆகஸ்டு

போராட்டம் நடைபெற்றது இதனால் பெருந் தலைவர்களெல்லாம் சிறைக்குச் செல்ல அமைந்தது எனலாம். போர் அலை ஓய்ந்த பின் 1945 மார்ச்சு ஏப்பிரலில் அனைவரும் விடுதலை பெற்றனர்.

**உரிமை பெற்ற இந்தியா:**

உலக நிலைக்கு ஏற்ப ஆங்கில அரசாங்கம் நடந்து கொள்ள வேண்டிய நிலை ஏற்பட்டது. போருக்குப்பின் உலக அரங்கு (U.N.O.) கூட வேண்டிய நிலை உண்டாக, அந்த நிலையில் அடிமை நாடுகள் விடுதலை பெற வேண்டிய நிலையும் ஏற்பட்டது. ஆங்கிலேயரும் தம் கீழிருந்த இந்தியா, பர்மா, இலங்கை முதலிய நாடுகளுக்கு உரிமை வழங்கினர். இந்தியா மட்டும் இரண்டாக்கப்பட்டது. எனினும் அதனால் தமிழ்நாட்டில் ஒரு மாறுதலும் ஏற்படவில்லை. 1947 ஆகஸ்டு 15ல் ஆங்கிலேயர் இந்தியாவை இந்தியரிடம் ஒப்படைத்து விலகிவிட்டனர். உரிமை பெற்ற காலத்து இருந்த வைசிராய் மவுண்டு பேட்டன் நீங்கிய பிறகு முதன் முதல் கவர்னர் ஜெனரலாக—இந்தியா முழுதுக்கும் தலைவராக—ஒரு தமிழர்—C. இராசகோபாலாசாரியார் தேர்ந்தெடுக்கப்பட்டு நிர்வாகம் நடத்தி வந்தார்.

**இன்றைய தமிழ்நாடு:**

தமிழ்நாட்டு அரசியலிலே விடுதலைக்கு முன்னும் பின்னும் பெரும் மாறாட்டங்கள் நடைபெறவில்லை எனலாம். 1947லும் 1952லும் இருமுறை சட்டசபைகளுக்குத் தேர்தல்கள் நடைபெற்றன. அவற்றுள் 47ல் காங்கிரஸ் பெரும்பான்மை வாக்குகளால் வெற்றி பெற்றது. எனினும், 52ல் அந்த நிலை இல்லை. தமிழ்நாட்டுடன் இணைந்த மலையாளம் ஆந்திரப் பகுதிகளில் பொதுவுடைமைக் கட்சியாகிய 'கம்யூனிஸ்டு கட்சி' ஆதிக்கம் பெற்றிருந்தமையால் அக்கட்சியாளர் பலர் தேர்ந்தெடுக்

கப்பெற, காங்கிரஸ் மந்திரிசபை அமைக்கும் நிலையில் இல்லை. பின்னர்த் தமிழ் நாட்டு காங்கிரஸ், கவர்னர் ஜெனரலாய் இருந்து விலகி ஓய்வுற்ற C. இராசகோபாலாசாரியாரை அழைத்து வந்து சில தனி உறுப்பினரை உடன் சேர்த்துக்கொண்டு காங்கிரஸ் ஆட்சியை நிறுவிற்று. அடுத்து ஆந்திர நாடு தனியாகப் பிரிந்த பின் காங்கிரஸ் பெரும்பான்மை ஆளும் கட்சியாகி விட, அன்று தொடங்கி காமராசர் முதல் அமைச்சராய் இருந்து வருகிறார். (1958ல்)*

1926ல் காங்கிரசை விட்டு வந்த ஈ. வே. ரா. என்னும் இராமசாமி நாயக்கர் அவர்கள், அன்று தொட்டு, பிராமணர், பிராமணரல்லாதார் என்ற வேறுபாட்டுக்காகவே பிரிந்து நின்று பாடுபட்டார். ஆனால், அக்கட்சி பின்னால் வேறு வகையில் உருப்பெற்று வளரத் தொடங்கியது. 'வடக்கு, தெற்கு' என்ற வேறுபாடுகாட்டி, வடநாட்டவர் தென்னாட்டவரைப் பலவகையில் தாழ்த்துவதாலும், வடநாட்டு ஆட்சியாளர் வழியே தமிழ் வாழவேண்டியிருப்பதனாலும், தென்னாடு—சிறப்பாகத் தமிழகம்—வடநாடு ஆட்சியிலிருந்து விடுபடவேண்டும் என்ற கொள்கையை நாட்டில் ஈ. வே. ரா. வளர்த்து விட்டார். வடநாடு, தென்னாடு என்ற இந்த வேறுபாட்டைத் தவிர்த்து, திராவிடர் ஆரியர் என்ற கொள்கையை விளக்கி அதன் வழியே தமிழ்நாட்டில் வாழும் பிராமணரல்லாதார் அனைவரும் திராவிடர் என்ற கொள்கையில் தம் கட்சியை உருவாக்கினார். இவர் தம் கட்சிக்கு முதலில் சுயமரியாதை இயக்கம்' எனப் பெயரிட்டார். பின்னர் அது 'திராவிடக் கழகம்' என்ற பெயரைத் தாங்கி, 'திராவிட நாடு திராவிடருக்கே' என்ற அடிப்படையில் பணியாற்றிற்று. அதில் இருந்து சிற் சில வேறுபாட்டுக் கொள்கைகளுக்காகப் பிரிந்ததே 'திராவிட முன்னேற்றக் கழகம்' வடக்குத்

* முதல் பதிப்பு 1958-ல் வெளி வந்தது.

தெற்கு வேறுபாட்டிலும், 'திராவிட நாடு திராவிடருக்கே' என்ற கொள்கையிலும் இரண்டுக்கும் தொடக்கத்தில் வேறுபாடு இல்லை. எனினும், முன்னேற்றக் கழகம் அரசியலில் முதன் முதலாக 1957ல் பங்கு கொண்டு சென்னைச் சட்ட சபையிலும் தில்லிப் பாராளுமன்றத்திலும் இடம் பெற்றது. 1962ல் நடைபெற்ற தேர்தலில் 50 இடங்களைப் பற்றிக் கொண்டு முன்னேற்றக் கழகம் எதிர்க்கட்சியாகப் பணியாற்றிக் கொண்டு வருகின்றது. இவ்வாறு தமிழ் நாட்டு அரசியலில் பல்வேறு சூழல்களுக்கு ஏற்பவும் மாறுபாட்டுக்கிடையிலும் நாடு அமைதியாகச் சென்று கொண்டிருக்கிறது. சிற்சில மாறுபட்ட நிலைகள் தோன்றினாலும், பொதுவாகப் பிற நாடுகளையும், இந்தியாவின் பிற பகுதிகளையும் நோக்கத் தமிழ்நாடு அமைதியாகவே வாழ்கிறது. (இன்று திராவிட முன்னேற்றக் கழகமே ஆட்சியில் உள்ளது)*

**சமூகமும் கலை இயக்கமும்:**

அரசியல் நிலைபோக, சமூக இலக்கியக் கலை வளர்ச்சியில் இன்றைய தமிழ்நாட்டைக் கண்டு முடிப்போம். சமூகநெறியில் நாடு பலவகையில் முன்னேற்றம் கண்டுள்ளது எனலாம். ஆங்கிலக் கல்வி நாட்டுச் சமுதாய வாழ்வில் பெரு மாறுதல்களைச் செய்துவிட்டது என்று கண்டோம். சாதி சமய வேறுபாடுகளால் நடக்கும் பல்வேறு மாறாட்டங்களை அழிக்க ஒருவாறு ஆங்கில அரசாங்கம் உதவியது. இன்னும் சாதிப் பெயர்கள் அரசாங்க எழுத்துக்களிலிருந்து அடியோடு நீங்கவில்லை என்றாலும், சாதிகள் இல்லையாகும் வழிக்கு நாடு முன்னேறிச் செல்லும் குறிகள் காண்கின்றன. உரிமைப் பாடலைப் பாடிய சுப்பிரமணிய பாரதியும், பிற இக்காலக் கவிஞர்களும் இச்சாதிப் பூசலால் விளையும் பல்வேறு கொடுமைகளை விளக்கி எழுதியுள்ளனர்-

* மூன்றாம் பதிப்பு (1971 இல்) வெளிவந்த ஆண்டு.

எழுதுகின்றனர். அதற்கேற்ப நாட்டிலும் வேற்றுமைகள் குறைந்துவருகின்றன எனலாம். சாதி சமயத்தால் நம் தமிழ்நாட்டில் போர்களும் பூசல்களும் இலவேனும் அவற்றின் வேறுபாட்டு நிலை நன்கு வேரூன்றி இருந்தது. உண்ணும் உணவுச் சாலையிலும், படிக்கும் பள்ளியிலும் தொழும் கோயில்களிலும் சிற்சில சாதியார் புகத் தகுதியற்றவர் என்றே இருந்த நிலை மாறி, இன்று யாரும் எங்கும் செல்லலாம் என்ற கொள்கை செயலளவில் நிறைவேறி வருகின்றது. திருமண முறைகளில் ஓரளவு இச்சாதிக்கொள்கை தளர்த்தப்படுகிறது எனலாம். தாழ்ந்த சாதிகளுக்கு அதிக உபகாரச் சம்பளங்களை அரசாங்கம் உதவுவதன் மூலம் கல்வியில் அனைவரும் முன்னேற வழி ஏற்படுகிறது. அது போன்றே அரசியல் அலுவல்களிலும் தாழ்ந்த சாதிகளுக்குச் சலுகை தருவதால், அவர்கள் முன்னேற வழியுண்டாகிறது. எனினும், இவையாவும் இந்திய அரசியல் சட்டத்தின்படி ஒரு குறிப்பிட்ட கால எல்லையில் நின்றுவிடும். அதற்குப் பின் அனைவரும் விழித்தெழுந்து 'எல்லோரும் ஓர்குலம்' என்ற கொள்கைவழி நாட்டில் ஒன்றிப் பழகி முன்னேற்றப் பாதையில் சென்று நாட்டை நாடாக்க வழி காணவேண்டும்.

**கிராம வளர்ச்சி:**

கிராமங்களை வளர்க்கும் வகையில் இந்திய அரசாங்கம் பலப்பல ஏற்பாடுகளைச் செய்து வருகின்றது. சமுதாய வளர்ச்சித் திட்டம், தேசிய வித்தரிப்புத் திட்டம் போன்ற பலவற்றைக் கிராமங்களில் தொழில்பட ஏற்பாடு செய்து வருகின்றது. இவற்றைத் தமிழ்நாட்டு அரசாங்கம் மட்டும் செய்யவில்லை எனலாம் இந்திய அரசாங்கமே முன்னின்று பொருள் தந்து உதவி ஊக்கு

கிறது. இதன்வழிக் கிராமத்தில் வாழும் மக்கள் அனைவரும் ஒன்றி, உருவாகும் பணியில் தங்கள் உழைப்பால் நான்கில் ஒருபங்கை அளித்து ஒற்றுமைப்படுகின்றனர். இன்னும் பல வழித்துறைகளில் கிராமங்கள் முன்னேற வழி காண்கின்றனர். இவற்றால் கிராம மக்களுக்குச் சாலைகள், பள்ளிகள், மருத்துவ விடுதிகள் போன்ற பல நன்மைகள் உண்டாகின்றன.

**மொழிவழி நாடு:**

1957 அக்டோபரில், நாடெங்குமே ஒரு மாற்றம் ஏற்பட்டது. காங்கிரஸ் அமைப்பு மொழி வழி இயங்குவது. அதன் தலைவர்கள் அக்காலத்திலிருந்து நாடு, மொழி வழி பிரிக்கப்படவேண்டும் என்று வற்புறுத்தியவர்கள். எனவே அவர்கள் ஆட்சிக்கு வந்ததும் நாட்டை மொழிவழியில் பிரிக்க வற்புறுத்தினர். என்றாலும், அவருள் மேலே ஆணை செலுத்தி இருந்தவர்களில் சிலர் ஆட்சி வசதி கருதியும், மக்கள் மனப் போக்குக் கருதியும், விரைவில் நாட்டை மொழிவழி பிரிக்க இசையவில்லை. என்றாலும் நாடெங்கும் கிளர்ச்சிகள் வலுத்தன. மக்கள் மொழிவழி நாடு பிரிய அவாக் கொண்டனர் ஆந்திர மக்கள் வேகம் வெகு கொடுமையாகி உண்ணாவிரதம், இறப்பு முதலிய வற்றில் கொண்டுவிடவே, ஆந்திர மாகாணம் முதலில் உருவாயிற்று. பிறகு 1957ம் ஆண்டு அக்டோபர் 2ல் மொழிவழி மாகாணம் ஏற்பட்டது. அதனால், தமிழ்நாடு சில நூற்றாண்டுகளாக விட்டிருந்த குமரிமுனை அதனோடு இணைந்தது. எனினும், தொல்காப்பியர் காலம் முதல் வடஎல்லையாய் இருந்த திருப்பதி என்னும் வேங்கடம் ஆந்திர எல்லைக்கு உட்பட்டு விட்டது. தமிழக எல்லை அதற்குச் சுமார் இருபது கல்லுக்குத் தெற்கிலேயே அமைந்து விட்டது. ஓரளவு தனித் தமிழகம் உருவாகிய காரணத்தால் சென்னை

அரசாங்கத்தாரும் அரசாங்க நடவடிக்கைகளைத் தமிழில் நடத்த முன்வந்துள்ளனர். இந்நிலையில் இன்று 'சென்னை மாநிலம்' என்ற பெயரில் தமிழ்நாடு காங்கிரஸ் அமைச்சர்களால் ஆளப்பெறுகின்றது. (இன்று தமிழ்நாடு என்ற பெயருடன் திராவிட முன்னேற்றக் கழகத்தாரால் ஆளப்பெறுகின்றது.) (1971)

## இக்கால இலக்கிய வளர்ச்சி:

இக்காலத்திய இலக்கியமும் கலையும் வளர்ந்த நிலை காண்போம். ஆங்கிலேயர் காலத்தில் உரை நடையும், மொழி பெயர்ப்புகளும், சமயச் சார்பான புது இலக்கியங்களும் தோன்றின. உரைநடை முறை நாளாக ஆகப்பெருகிற்று எனலாம். இக்காலத்தில் நாளிதழ்களும், கிழமை, திங்கள் இதழ்களும் தோன்றலாயின. பத்திரிகை படிக்க வேண்டும் என்ற எண்ணம் மக்கள் மனத்தில் தோன்றியது. மேலை நாடுகளில் பத்திரிகை வளர்ச்சியுற்றது போன்று ஈண்டு அத்துணை வளர்ச்சி பெறாவிடினும், ஆங்கிலத்திலும் தமிழிலும் சில நாளிதழ்களும், சில வார, திங்கள் இதழ்களும் தோன்றின. தமிழில் உரைநடையை வளர்த்ததில் அவற்றிற்குப் பெரும்பங்கு உண்டு எனலாம். மற்றும் சிலர், உரைநடை நூல்களைத் தனியே எழுதவும தொடங்கினர். ஆகவே, இருபதாம் நூற்றாண்டில் உரைநடை நன்கு வளர்ந்தது எனலாம். அத்துடன் உரிமைபற்றிய முழக்கங்களும் பாட்டாகவும் உரைநடையாகவும் வந்தன. பக்திப்பாடல்களை இறுதியாகத் தமிழ் நாட்டில் பாடி விட்டுச் சென்றவர் இராமலிங்க அடிகளாராவர். சாதி சமய வேறுபாடற்ற சமுதாயமும், அதன் வழியே பரந்த ஒளி வழிபாடும் மாந்தரை உய்விக்கும் வழிகள் என்ற உண்மை உணர்ந்து, எளிமை வாழ்வில் வாழ வேண்டிய

வகையினைக் கொண்டு, மக்களுக்கு வழி காட்டி நின்றார் அவர். இந்த நூற்றாண்டின் தொடக்கத்தில் உரிமை வேட்கை நாட்டில் முகிழ்த்து நின்ற காலத்தில் சுப்பிர மணிய பாரதியார் எழுதிய பாடல்கள் நாட்டு மக்களைத் தட்டி எழுப்பின எனலாம். சாதி வேறுபாடுதான் அடிமை வாழ்வுக்குக்காரணம் என்பதையும், ஆங்கிலேயர் இந்தி யரை எப்படி விலங்கினும் கேடாக மதிக்கின்றனர் என்ப தையும், தமிழ் மக்கள் வெளிநாடுகளில் தேயிலைத் தோட் டங்களில் படுகின்ற அவதியையும், விடுதலை வேட்கை யில் மக்களுக்கு உள்ள விருப்பினையும் அவர் எழுதியுள் ளார். அப்பாடல்களை, விடுதலை வேட்கையினை நாட்டில் பரப்பிய காங்கிரஸ்காரர்கள், தெருவெல்லாம் முழக்கினர். விடுதலைப் பாடல்களோடு தமிழ் மொழியின் சிறப்பைப் பற்றிய பாடல்களும் கண்ணன், கண்ணம்மா போன்ற காதல் கலந்த பக்திப் பாடல்களும் அவர் பாடி யுள்ளார்; அவற்றுடன் சில உரைநடை நூல்களையும் எழுதியுள்ளார். அவர் பாடல்களைப் பலரும் பாடத் தொடங்கினர். ஆங்கில அரசாங்கம் அப்பாடல்கள் பாடு வதற்கும் தடை விதித்தது எனலாம். அவரும் சிறிது காலம் புதுவையில் மறைந்து வாழவேண்டிய நிலை உண் டாயிற்று. அவர் பாடல்கள் இலக்கியத்தில் 'பாரதியுகம் இது' என்று மக்கள் கூறும் அளவுக்கு உணர்ச்சியை உண் டாக்கி விட்டன. எனினும் விடுதலை பெற்ற பிறகு அவர் தம் விடுதலைப் பாடல்கள் காலத்துக்கு ஏற்ற பாடல்கள் ஆகாமல் நின்றுவிட்டன எனலாம். பிற பாடல்கள் இலக் கியமாகி நன்கு போற்றப்படுகின்றன.

பாரதியாரை ஒட்டிச் சிலர் நன்கு பாட்டிசைத்தனர். அவருள் புதுவையில் அவரோடு கூடவே இருந்த பாரதி

தாசன் என்ற கனக சுப்புரத்தினமும் நாமக்கல் கவிஞர் இராமலிங்கம் பிள்ளையும், தேசிக விநாயகம் பிள்ளையும் முக்கியமானவர்கள். அவர்களுடைய பாடல்கள் இன்றும் நாட்டில் நன்கு பழக்கத்தில் உள்ளன அவர்களை யன்றிப் பலர் பலவகையில் பாட்டிசைக்கின்றார்கள். எனினும் அவை வளரவில்லை எனலாம். விடுதலைப் பெற்ற அரசாங்கம் குழந்தைக் கவிகளை ஊக்குவித்துப் பரிசளிக்கின்றது. இளங்குழந்தைகளின் உள்ளங்களைத்தொடும் வகையில் எளிய பாடல்கள் பாடும் புலவர்களுக்கு அரசாங்கம் பரிசளிக்கின்றது. எனவே, அத்தகைய குழந்தைப் பாடல்களும் வளர்ந்து கொண்டே வருகின்றன. அரசாங்கம் நூல் நிலைய இயக்கத்தை நன்கு வளர்க்கிறது.

உடைநடையும் விடுதலைக்கு முன்னும் பின்னும் விரைந்து வளர்ந்துள்ளது எனலாம். மறைமலை அடிகள், திரு வி. கலியாணசுந்தரனார் போன்ற பெரியவர்கள் பல உரைநடை நூல்களை எழுதிவிட்டுச் சென்றிருக்கிறார்கள். இன்று பல அறிஞர்கள் பலப்பல உரைநடை நூல்களை எழுதி இலக்கியத்தை வளர்த்து வருகிறார்கள். இன்று நாட்டில் எழுத்தாளர் பல்கிப் பெருகியுள்ளார்கள். பத்திரிகைகளும் பலவாக வளர்ந்துள்ளன. இந்திய அரசாங்கமும் சிறந்த நூல்களுக்கு ஐயாயிரரூபாய் வரை பரிசுகள் வழங்குகின்றது. சென்னை அரசாங்கமும் தமிழ் வளர்ச்சிக் கழகத்தின் மூலமாக ஆண்டுதோறும் சிறந்தநூல்களுக்கு ஆயிரம் ரூபாய் வரை பரிசுகள் வழங்குகிறது. மற்றும் தனிப்பட்ட பல நிலையங்களும் தமிழ் இலக்கிய நூல்களைக் குறைந்த விலைக்கு வழங்குகின்றன. இவ்வாறு தமிழ் இலக்கியம் வளரும் நிலை இன்று இருக்கிறது.

**இசையும் நாடகமும்:**

எனினும், இசையும் நாடகமும் நன்கு வளர்ச்சி அடையவில்லை எனலாம். வானொலி மூலம் நாடகங்களை வளர்க்கின்றார்கள். என்றாலும் அது போதிய வளர்ச்சி யாகாது. நாட்டில் நாடக நூல்கள் வளரவில்லை எனலாம். சம்பந்த முதலியார் அவர்கள் பல நாடகங்களை எழுதினார் என்றாலும், அவை கால வெள்ளத்தைக் கடந்து வாழவில்லை என்பது கண்கூடு. இசையும் அத்துணை வளர்ச்சி பெறவில்லை. அண்ணாமலைப் பல்கலைக்கழகம் முயன்று வெளியிட்ட சில இசை நூல் களைத் தவிர்த்து வேறு நூல்கள் இசையில் வெளிவர வில்லை எனலாம். தமிழ் இசைச் சங்கம், தமிழில் இசை பாடும் பண்பினை வளர்த்து வருகின்றது. தமிழ் நாட்டில் தமிழில் இசை பாடுதல் இழுக்கு என்று இருந்த நிலை மாறி, தமிழிலேயே இசைபாடும் நிலை ஓரளவு நாட்டில் உண்டாகியதற்குக் காரணம் தமிழிசைச் சங்கம் எனலாம். என்றாலும். போதிய வளர்ச்சி இல்லை. வானொலி வழியே இன்னும் தமிழ் இசையையும். நாடகத் தமிழையும் வளர்க்க வழி உண்டு.

**இன்றைய நிலை:**

இவ்வாறு முத்தமிழும் இன்று வளர்ந்து வருகின்றன. மக்களும் ஓரளவுக்கு உரிமை வாழ்வை நினைக்கின்றனர். எனினும் மக்களது பொருளாதார ஏற்றத் தாழ்வுகளும் பிற வேறுபாடுகளும் நீங்கவில்லை எனலாம். சாதிசமயப் பூசல்கள் தமிழ்நாட்டில் இல்லை என்றாலும், சங்க காலத் தைப் போன்று அவை அடியோடு நாட்டில் இல்லை என்று சொல்ல முடியாது. சிலர் மேடைமேல் பேசும் அளவுக்கு வாழ்வில் வாழ்ந்து வழி காட்டுவது இல்லை மக்களுக்குப்

போதிய கல்வி அறிவு இல்லை.' ஆதலால், தலைவர்கள் அவர்களைச் சுலபமாக ஏமாற்றி விட முடிகிறது. இந்த நிலை நாட்டில் மெள்ள மெள்ள மாறிவருகிறது எனலாம். தாழ்ந்தோரை உயர்த்த வேண்டிய பணிமனைகளும், தொழிலாளர் இயக்கங்களும், பிற கழகங்களும் எல்லா வேறுபாடுகளும் நீங்கவும், பொருளாதாரம், சமூகம் இவற்றில் உள்ள ஏற்றத்தாழ்வுகள் அகலவும் பாடுபடு கின்றன. இந்திய அரசாங்கமும் அதன் வழித் தமிழ்நாட்டு அரசாங்கமாகிய நம்நாட்டு அரசாங்கமும், 'சோஷியலிச சமுதாயம்' அமைத்துப் பொருளாதார ஏற்றத் தாழ்வை நீக்க வழி கோலுகின்றன. அதனால், நாட்டில் இது வரை இல்லாத அளவுக்கு வரி விதிப்பு அதிகமாகியுள்ளது. பலர் வரிச்சுமை தாளாது வாடுகின்றனர். என்றாலும் சமதர்மக் கொள்கை வழிச் செயலாற்ற அரசாங்கம் கருதுவதால் வரிச்சுமை நாளுக்கு நாள் வளர்ந்துகொண்டேதான் போகின்றது.

இன்று (இரண்டாம் பதிப்பு வெளிவரும் போது) இந்தியநாடு சீனப் படை எடுப்பால் நலிந்துள்ளமையின் நாட்டு மக்கள் அனைவர் உள்ளமும் செயலும், ஒருங்கு திரண்டு, நாட்டை அரண்பெற்றதாக்க-உரமுற்றதாக்க-வேண்டிய ஆக்கப் பணியில் ஈடுபட்டுள்ளன.

**இறுதி வேண்டுகோள்:**

தமிழ் நாட்டு மக்கள் இன்று விழிப்படைந்துள்ளார் கள் எனலாம். கல் தோன்றி மண் தோன்றாக் காலத் திலிருந்து வந்த மூத்த தமிழ்மொழி, தலைநிமிர்ந்து வாழ வழி காணவேண்டும் என்ற உணர்ச்சி உண்டாகி யுள்ளது. அதைச் செயலாற்றும் முறையிலேதான் தலை வர்கள் மாறுபடுகின்றார்கள். ஒவ்வொரு கட்சித் தலை வரும் தத்தம் வழியே சிறந்தது என வாதாடுகின்றனர். அறியாத் தமிழ் மக்கள் அவர்களைப் பின்பற்றுவது எவ்வாறு என எண்ணி அலமந்து நிற்கின்றனர். இந்நிலையில் நாட்டு நிலை இன்று அமைகின்றது எனலாம்?

இந்த நான்காம் பதிப்பு வெளி வரும்போது (1979) தமிழக அரசிலும் பிறவற்றிலும் மாறுபாடுகள் நடந்துள் ளன. திராவிடமுன்னேற்றக் கழகத்திலிருந்து பிரிந்த அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம்

ஆட்சிப் பொறுப்பினை ஏற்றுள்ளது. திராவிட முன்னேற்றக் கழகம் எதிர்க்கட்சியாக இயங்குகிறது. நாட்டுக்கு விடுதலை தேடித் தந்த காங்கிரஸ் பெரும் பாலும் நாட்டிலும் தமிழகத்திலும் பதவியில் இல்லை என்றே சொல்லலாம். பாரத நாட்டிலும் டில்லி அரசாங் கப் பாராளுமன்றம் கலைக்கப் பெற, இடைத்தேர்தலுக்கு ஏற்பாடுகள் நடைபெறுகின்றன. வருங்காலத்தைப் பற்றி மக்கள் சிந்திக்கத் தொடங்கியுள்ளார்கள்.

இந்நூல் எழுதிச் சுமார் நாற்பது ஆண்டுகள் ஆகின்றன. இதன் முதல் பதிப்பு 1958ல் வெளிவந்தது. பின் 1979 வரை மொத்தம் நான்கு பதிப்புக்கள் வெளி வந்தன. எனினும் அவற்றுள் அந்த இருபது ஆண்டுகளில் உண்டான மாற்றங்கள் பற்றி ஒன்றும் காட்டவில்லை. இன்றும் அதே நிலையில்தான் இந்தப் பதிப்பும் வெளி வருகிறது. இதற்கிடையில் பரந்த பாரதத்திலும் தமிழ் நாட்டிலும் பலப்பல மாற்றங்கள் நிகழ்ந்திருக்கின்றன. அத்தனையும் இங்கே வடித்துக் காட்டல் இயலாது.

மத்தியிலே காங்கிரஸ் ஆட்சி இடையே மாறி ஒரு சில கால அளவிலே வேற்று ஆட்சிகள் நடைபெற்றன. எனினும் இன்று காங்கிரஸ் ஆட்சியே நடைபெறுகின்றது. ஆயினும் தமிழ்நாட்டில் 1967ல் இழந்த தனது ஆட்சியை காங்கிரஸ் இன்னும் கைப்பற்றவில்லை. அன்று தொடங்கிய திராவிட கழக மரபே சிற்சில பெயர் மாற்றங்களுடனும் வேறு சில மாற்றங்களுடனும் தமிழகத்தில் ஆட்சி புரிந்து வரு கின்றது. தந்தையாகிய பெரியாரும் தாயாகிய திரு.வி.க. வும் ஆய்ந்து, ஆழ்ந்து கண்ட பெயர் இந்தத் 'திராவிட நாடு' 'திராவிட இயக்கம்' என்ற பெயர்கள். இந்தப் பெயரையே நாட்டுக்கு உணர்த்தியவர் நாம் மேலே கண்ட மேலைநாட்டுக் 'கால்டு வெல்' என்ற அறிஞன் தான். அந்தப் பெயருடன் பெரியார் தொடங்கிய கட்சி அறிஞர் அண்ணாவினால் திராவிட முன்னேற்றக் கழக மாகிப் பின் அண்ணா திமுக ஆகி, தொடர்ந்து அனைத்திந்திய அதிமுக ஆகி ஆட்சியைத் தொடர்ந்து திராவிட கழகத் துளிர்களே தமிழகத்தை ஆண்டு வருவதைக் காண்கிறோம். அவற்றுள்ளும் பலப்பல புதுத் துளிர்க் கழகங்கள் சிறு சிறு பெயர் மாற்றத் துடன் அண்மையில் கிளைத்துள்ளன. தவிர்த்து பொது உடைமைக் கட்சிகளும் உள்ளன. 'கட்சி' என்ற பெயரில்

இன்றேனும் பல சாதிகளின் பெயரால் புதுப்புதுக் கழகங்கள் தோன்றி, அரசியலில் பங்கு கொள்ளும் வகையில் ஒட்டியும் ஒட்டாமலும் வாழ்கின்றன சாதி, சமய மாறுபாடுகள் மறையத் தொடங்கியுள்ளன என முன்னே குறித்துள்ளேன். எனினும் இப்போது சாதி, சமயங்களின் பெயரால் பல கழகங்கள் தோன்றி ஒன்றற்கொன்று மாறுபட்டு நிற்கின்றன. இணைந்த தமிழ்ச் சமுதாயம் மறுபடியும் நிலைகுலைந்து தடுமாறுமோ என அஞ்ச வேண்டியுள்ளது.

சமுதாய நிலை இதுவாக, கல்வியும் தமிழும் வளர்ச்சி யுறவில்லை. கடந்து நாற்பது ஆண்டுகளாக வகுப்பு எண்கள் மாற்றும் பாடமுறை, தேர்வுமுறை, பிறவற்றில் வெள்ளையன் விட்டுச் சென்ற கல்வி முறையினையே தமிழ்நாடு பின்பற்றுகிறது. அண்டை மாநிலங் களிலெல்லாம் அவ்வம்மொழி பயிலாமல் பள்ளிப் படிப்பை முடிக்க முடியாது என்ற நிலை இருக்கத் தமிழ்நாட்டில் தமிழைப் பயிலாமலே மிக உயரிய கல்விப் பட்டங்கள் வரை பயிலலாம் பிரஞ்சுஜர்மன் முதலிய வெளிநாட்டு மொழிகள், பிற உள்நாட்டு மொழிகளுடன் பதினான்கில் ஒன்றாகவே தமிழ், தமிழ்நாட்டில் உள்ளது. 'வீதிதோறும் இரண்டொரு பள்ளி' என்று பாரதி கூறியபடி பள்ளிகள் வளரினும் அவை அவன் வேண்டாம் என்ற ஆங்கிலக் கல்விக்கே முதல் இடம் தருகின்றன.

> ''சேரன் தம்பி சிலம்பை இசைத்ததும்
> தெய்வ வள்ளுவன் வான்மறை செய்ததும்
> பாரில் நல்லிசைப் பாண்டிய சோழர்கள்
> பார் அளித்ததும் த்ர்மம் வளர்த்ததும்
> ........................... ... ..........................
> அன்னயாவும் அறிந்திலர் பாரதத்து
> ஆங்கிலம் பயில் பள்ளியுட் போகுநர்''

என்று அவன் கனன்று, தவித்து, கவலையுற்றுக் கூறிய ஒன்றே இன்று நாட்டில் நடைபெறுகின்றது ஆனால் அவன் விழாவை மட்டும் தவறாது ஆண்டுதோறும் கொண்டாடுகிறோம்.

இவ்வாறு சமுதாயமும் கல்வியும் கலைகளும் தம் நிலை தடுமாறும் நிலையில் இன்று வாழ்கின்றன. வரலாற்றை நன்கு உணர்த்தும் கல்வெட்டுத்துறை நன்கு

செயல்படவில்லை. பல கல்வெட்டுகள் எடுக்கப்பெற வேண்டும். எடுத்தவை பல அச்சில் வரவேண்டும். அவற்றின் வழி வரலாறு ஒளி பெற வேண்டும். தமிழ் மக்கள் நின்று, நினைத்து, தம் பழம் பெறும் பண்பாட்டையும் 'சாதி இரண்டொழிய வேறில்லை' என்ற ஔவை வாக்கினை எண்ணி நல்லன இயற்றி உள்ளதைப் பங்கிட்டுக் கொண்டு ஒன்றிய ஒரே உயர் சாதியாய்—தமிழ்ச் சாதியாய் வரப் பாடுபட வேண்டும். தமிழக அரசும் தமிழ்ச் சமுதாயமும் 'தொன்று நிகழ்ந்தது அனைத்தும் உணர்ந்திடு' தன்மையில் செயலாற்றி, பாரதத்தொடு இணைந்த பழம் பெருந் தமிழ்நாட்டையும் தமிழ்ச் சமுதாயத்தையும் தமிழையும் பண்பாட்டினையும் தமிழ்க்கலையினையும் ஓம்பி வளர்த்து உலகில் சிறக்க வாழ வழி காண வேண்டும் என்று தாழ்ந்து வேண்டி அமைகின்றேன்.

# XX. எலும்புக் காலம் பற்றிய வரலாற்று ஆராய்ச்சி

வரலாற்று எல்லை பழைய கற்காலத்தில் தொடங்கப் பெற்றதெனக் கண்டோம். வரலாறு பற்றி எழுதிய எல்லா ஆசிரியர்களும் அந்த முடிவினையே கொண்டிருந் தார்கள். எனினும், அண்மையில் பழைய கற்காலத்துக்கு முன் எலும்புக் காலம் ஒன்று இருந்ததாக அறிஞர் ஆய்ந்தனர். அந்த ஆய்வு சரியெனவே முடிவாயிற்று. அண்மையில் ஜோஹன்ஸ்பர்கில்[1] இருந்துவந்த செய்தி, பேராசிரியர் டேர் (Dare) அவர்கள் ஆய்ந்து அகழ்ந் தெடுத்த நிலையில் கண்ட உண்மையினைக் காட்டி, பல், எலும்பு, கொம்புகளை உபயோகித்த எலும்புக் காலம் ஒன்று உண்டு என்பதை நிலை நாட்டுகிறது. எனவே, கற்காலங்களுக்கு முன் எலும்புக் காலத்தில் மனிதன்—திருந்திய நிலையில் இல்லை என்றாலும்—வாழ்ந்து வந்தான் என்பது புலனாகிறது. ஆனால், அக்காலம் பல நூறாயிரம் ஆண்டுகளுக்கு முற்பட்ட தாகும். அதற்கு முன் தோன்றி, சூழலுக்கும் கால நிலைக்கும் ஏற்ப மாறிய மனிதன் இன்று இந்த நிலையில் வாழ்கின்றான். இனி என்னாவானோ? யார் அறி..ார்!

1. Johannesburg—(1958 Nov. 9. Indian Express)

# எடுத்தாண்ட நூல்கள்


தொல்காப்பியம்;
புறநானூறு
அகநானூறு;
பட்டினப்பாலை
சிலப்பதிகாரம்:
தேவாரம்
நாலாயிரம்
நந்திக் கலம்பகம்:
பெரிய புராணம்
குமரிக் கண்டம் —கா. அப்பாதுரை
இலக்கிய தீபம் —S வையாபுரிப் பிள்ளை
பாண்டியர் வரலாறு —சதாசிவ பண்டாரத்தார்
சேரர் தாயமுறை —சோமசுந்தர பாரதியார்
சேரர் வஞ்சி —டாக்டர் கிருஷ்ணசாமி ஐயங்கார்
பல்லவர் வரலாறு —டாக்டர் இராசமாணிக்கம்
,, —P.T. சீனிவாச ஐயங்கார்
பிற்காலச்சோழர்சரித்திரம் —சதாசிவ பண்டாரத்தார்
இருபெருந் தலைவர் —ந. சஞ்சீவி


## Books Referred


Charters Molony, J —A Book of South India
Charles Lamb —A Dissertation upon roast Pig
Dnbrail, Prof. —Dravidian Architecture
Heras, Father —Studies in Pallava History
Garden Childe —Man makes himself
George Gomow —The Biography of Earth
Gopalan —History of the pallavas of Kanchi

**Books Referred**

---


Jawaharlal Nehru —The Discovery of India

Kanakasabai Pillai —The Tamils 1800 years ago

Krishnasamy Iyyangar, S —Some Contributions of South India to Indian Culture

Mahalingam, Dr. V. —Administration & Social Life under Vijayanagar Empire

Meenakshi, Dr. —Administration & Social Life under Pallavas

Neelakanda Sastri, Prof. K. A.

1. History of South India
2. Foreign notices of South India
3. The Cholas (Two Vols)
4. The Pandian Kingdom
5. History of India

Panikkar, K.M. —A Survey of Indian History

Scott Elliot —Lost Lemuria

Smith, V. —Early History of India

" V.A. —Oxford History of India

Srinivasa Iyyangar, M —Tamil Studies

" P.T —History the of Tamils

Sen, Dr. —The Pageant of Indian History

Subramanian, K.R. —The Maratha Rajas of Tanjore

South Indian Inscriptions

Thurston —The Castes & Tribes of South India

Wells, H.G —A Short History of the World

## ஆசிரியர் அ. மு. ப. அவர்கள் எழுதிய
## நூல்கள்—85 க்கு மேல்

### தற்போது உள்ளவை

| | | |
|---|---|---|
| இளமையின் நினைவுகள் | 2 | 50 |
| கொய்த மலர்கள் | 4 | 50 |
| துன்பச் சூழல் (நாவல்) | 2 | 00 |
| மக்கட் செல்வம் | 2 | 00 |
| பெண் | 1 | 50 |
| மனிதன் எங்கே செல்கிறான்? | 1 | 50 |
| தாயின் மணி வயிற்றில் | 1 | 00 |
| தொழில் வளம் | 5 | 00 |
| வெள்ளிவிழாச் சொற்பொழிவுகள் | 3 | 00 |
| மலைவாழ் மக்கள் | 5 | 00 |
| சிறுவர்களுக்கு | 2 | 00 |
| வானொலி வழியே | 3 | 00 |
| நாலும் இரண்டும் | 2 | 00 |
| 19ம் நூற்றாண்டு உரைநடை. | 8 | 00 |
| புதிய கல்விமுறை | 3 | 00 |
| பல்கலைக் கழகச் சொற்பொழிவுகள் | 20 | 00 |
| சாத்தனார் | 6 | 00 |
| கவிதை உள்ளம் | 5 | 00 |
| மு. வ. தமிழ்த் தொண்டு | 5 | 00 |
| வையைத் தமிழ் | 3 | 00 |
| கங்கைக் கரையில் காவிரித் தமிழ் | 5 | 00 |
| தமிழ்நாட்டு விழாக்கள் | 4 | 00 |
| காந்தி வாழ்க்கை | 5 | 00 |
| கவிதையும் வாழ்க்கையும் | 20 | 00 |
| வழுவிலா மணிவாசகர் | 7 | 00 |

### புதிய நூல்கள்

| | | |
|---|---|---|
| ஏழு நாடுகளில் எழுபது நாட்கள் | 36 | 00 |
| திரும்பிப் பார்க்கிறேன் திகைத்து நிற்கிறேன் | 16 | 00 |
| வரலாற்றுக்குமுன் வடக்கும் தெற்கும் (புதிய பதிப்பு) | 16 | 00 |
| தமிழர் வாழ்வு | 16 | 00 |
| ஓங்குக உலகம் | 16 | 00 |
| தாய்மை | 20 | 00 |
| கல்வி எனும் கண் | 12 | 00 |
| ஆனந்த முதல் ஆனந்தம் வரை | 40 | 00 |
| சான்றோர் வாக்கு (குறள் வழி) | 17 | 00 |
| நல்லவை ஆற்றுமின் (வானொலிப் பேச்சு) | 20 | 00 |
| அருந்திறலாளர் அ. மு. ப. (மாணவர் தொகுத்தவை-1992) | 20 | 00 |
| அம்மையும் அப்பனும் | 20 | 00 |